
# கலாதரம்



கலாசாரப் பேரவை,
வலி. தென்மேற்கு பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்.
2014

# கலாதரம்




வலி. தென்மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.

2014

| | | |
|---|---|---|
| மலர் | - | கலாதரம் |
| வெளியீடு | - | வலி. தென்மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவை<br>பிரதேச செயலகம்,<br>சண்டிலிப்பாய். |
| மலராசிரியர் | - | திரு.ஈ.குமரன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>யாழ்.பல்கலைக்கழகம். |
| பதிப்பு | - | 2014 |
| பக்கஅளவு | - | B5 |
| பக்கம் | | |
| எண்ணிக்கை | | |
| கடதாசி | - | 70gsm |
| அச்சுப்பதிப்பு | - | முத்து பிறின்டேர்ஸ்,<br>இல. 122, கே.கே.எஸ் வீதி,<br>சுன்னாகம்.<br>தொ.பே.:077-8038629 |

| | | |
|---|---|---|
| Name | - | Kalatharam |
| Published by | - | Vali.South West Cultural Council<br>Divisional Secretariat<br>Sandilipay. |
| Editor | - | Mr.E.Cumaran<br>Senior Lecturer<br>University of Jaffna. |
| Size | - | B5 |
| Pages | - | |
| Number of Copies | - | |
| Printers | - | Muthu Printers,<br>122, K.K.S Road,<br>Chunnakam.<br>Tel: 077-8038629 |

## ஆலோசனையும் வழிகாட்டலும்

**திரு. சு.முரளிதரன்** (பிரதேச செயலர்)

**திருமதி நே.செல்வகுமாரி** (உதவிப் பிரதேச செயலர்)

## மலர்க்குழு

**திரு. ஈ.குமரன்** ( மலராசிரியர் – விரிவுரையாளர்)

**திருமதி கி.மாலினி** (கலாசார உத்தியோகத்தர்)

**திரு. வே.சிவராஜா** (சமூகசேவை உத்தியோகத்தர்)

**திரு. ந.சத்தியவேந்தன்** (ஆசிரியர் )

**திரு. ந.தனுசஜன்** (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**திரு. வே.தர்மபாலன்** (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**செல்வி யோ.யாழினி** (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

# வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய்
# பிரதேச கீதம்

பல்லவி

பல்புகழோடு எங்கள் நெஞ்சிலே வாழ்கின்ற
பண்பு வலி.தென்மேற்கு பிரதேச அன்னையே
(பல்புகழோடு)

அனுபல்லவி

சொல்லும் சரித்திரத்தை ச் சேர்ந்த திருக்கோவில்கள்
சூழ்ந்த நன்னீர் நிலைகள் செம்மையெழில் பூத்தவளே
(பல்புகழோடு)

சரணம்

செந்தமிழ்ப்புலவோனாம் மயில்வாகனனும் நல்ல
சோமசுந்தரன் என்னும் தங்கப் புலவனுமே
தந்தை கலையரசர் சான்றோர் அறிவரசர்
தேர்ந்த திறனாலே சீர்புகழ் உற்றவளே
(பல்புகழோடு)

திகழும் கமத்தொழிலும் சிறந்த கடல் உழைப்பும்
சேர்ந்த தொழில் பலவும் சமய சமரசமும்
புகழும் பெருமையும் பொலிந்த கல்லூரிகளும்
நிறைந்த தொன்மையும் நிலையாகப் பெற்றவளே
(பல்புகழோடு)

"கலாபூஷணம்" - **நவாலியூர் நடேசன் -**

# மருதடி விநாயகர் ஆலய
# பிரதம குருவின் ஆசிச் செய்தி

வலி.தென்மேற்குப் பிரதேச கலாசார பேரவையினால் பிரதேச பண்பாட்டு மலர் வெளியீடு செய்வதையிட்டு பெரு மகிழ்வு கொள்கின்றோம்.

எமது தமிழ் பாரம்பரியம், பண்பாடு , சமயங்களின் தொன்மை இவைகள் உருத் தெரியாமல் அழிந்து புதைந்து போய்க் கிடக்கின்றன. இதனால் எம் பிரதேச மக்கள் பாரம்பரியங்களை அறியாது தமது மனம் போன போக்கில் வாழ்கின்றனர். எமது முன்னோர்கள், பெரியவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை அறியாது நடந்து கொள்கின்றனர். இவைகள் எல்லாம் திரும்பவும் மேலோங்க வேண்டும் என்ற பேரவாவினால் இக்கலாசார பேரவையினரால் பண்பாட்டு மலர் வெளியீடு செய்யப்படுகின்றது. இம்மலர் மூலம் எமது பிரதேசத்தின் தொன்மையான ஆலயங்கள், தேவாலயங்கள் இவைகளின் பெருமை களையும், சிறப்பையும் தேடி வெளிக் கொணரச் செய்யும் பணி பாராட்டுதலுக்குரியது. இது மட்டுமல்ல எமது பிரதேசத்தின் மூதறிஞர்கள் , புலவர்கள், பெரியோர்கள் இவர்களது வரலாற்றையும் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இம்மலரைத் தயார் செய்கிறார்கள்.

இவர்கள் பணி பாராட்டுக்குரியது மட்டுமல்ல ஒரு வரலாற்றுப் பொக்கிஷமாகவும் மிளிரும் என்பதில் ஐயமில்லை. இப்பணி சிறக்க ஆசி கூறுவதோடு எமது சமயம், பாரம்பரியம், பண்பாடு இவைகளைப் பின்பற்றி எமது பிரதேச மக்கள் சிறப்பாக வாழ வாழ்த்துகிறோம்.

**சிவஸ்ரீ பரமேஸ்வர ஜெயகுமாரக்குருக்கள்**

பிரதம குரு,

மருதடி விநாயகர் ஆலயம் - மானிப்பாய்

# பங்குத்தந்தையின் ஆசிச் செய்தி

வடமாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் வலிகாமம் தென்மேற்கில் அமைந்துள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் இன்று ஆற்றல் மிக்க பிரதேச செயலரின் தலைமையில் ஆற்றிவரும் சேவை மிகப் பெரியது. இதன் ஒரு அடையாளமாக இச்செயலகத்திலுள்ள கலாசார பகுதியினர் தமது எல்லைக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளையும் களமாகக் கொண்டு அங்குள்ள கலை, கலாசார விழுமியங்களை எழுத்தில் வடித்து நூலாக்கும் ஓர் அரிய பணியில் ஈடுபட்டுள்ளமை ஊரெல்லாம் ஒருமித்து கரவோசை செய்தற்குரிய காலத்தின் பணி. இப்பாரிய கலாசாரப் பணிக்கு எனதாசிகள் வழங்குவதற்கு ஏற்பட்ட கிருபைக்காக கலாசாரப் பேரவைக்கு மகிழ்வோடு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது கலை, கலாசாரம், பண்பாடு முதலான விடயங்கள் எம்மோடு மட்டும் நின்று விடாது எமக்கு அடுத்து வரும் சந்ததியினருக்கு எடுத்துச் சொல்லும் ஓர் எளிய வடிவமாக இம்மலர் ஓர் வரலாற்று ஆவணமாகத் திகழும். இப்பிரதேச பரப்புக்குள் பிறந்து அல்லது வசித்து இப்பிரதேச மண்ணுக்குப் பல வகைகளிலும் பணியாற்றி புகழீட்டி மகிமை சேர்த்தவர்களின் தடங்களை வரலாறு மறந்து விடுவது தவறாகும் என்பதைத் தவிர்த்து இது போன்ற ஆவண நூல்கள் வெளிவருவது நாம் நமது பிறப்பில் செய்யும் நன்றிக்குரிய நற்பணி.

நமது பிரதேச பண்பாடுகளோடு இம்மண்ணுக்கு மணம் சேர்த்தவர்களை இதயத்தில் மட்டுமன்றி இவ்வாறான இதழ்களிலும் சேமித்துப் பாதுகாப்பது என்பது அரச அலுவலர்களின் பொன்னான பணிகளில் ஒன்று. இச்செயற்பாட்டிற்கு வழி செய்யும் பிரதேச செயலரதும், கலாசாரத்துறையினரதும் சமூகப் பணிக்கு ஆண்டவரது ஆசி எப்போதும் குறைவின்றி நிறைவாக இருக்கும். எமது பிரதேசத்தின் பெருமைகளை சுமந்து வரும் இம்மலரும் பிரதேசத்துக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று இந்நாளில் என் ஆசிகளை அன்போடு வழங்குகிறேன்.

**வண.பிதா. யூஜின் பிரான்சிஸ்**

பங்குத்தந்தை பண்டத்தரிப்பு

நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்
முதலமைச்சர் - வட மாகாணம்
විනිසුරු සී. වී. විග්නේශ්වරන්
ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත
Justice C.V.Wigneswaran
Chief Minister - Northern Province

தொலைபேசி / දුරකථන / Telephone: 021 320 2465, 021 221 7313, 021 221 7311
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 221 7227

26, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
26, සෝමසුන්දරම් මාවත, චුන්ඩිකුලි, යාපනය.
26, Somasundaram Avenue, Chundikkuli, Jaffna.
மின்னஞ்சல் / විද්‍යුත් තැපැල / email: cmofficenorthernpc@gmail.com

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, வீதி அபிவிருத்தி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், நீர் வழங்கல், கூட்டுறவு அபிவிருத்தி, சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம், தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், உணவு வழங்கலும் விநியோகமும் அமைச்சர்

උතුරු පළාත් මුදල් හා ක්‍රමසම්පාදන, නීතිය හා සාමය, ඉඩම්, මාර්ග සංවර්ධන, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, ජල සම්පාදන, සමුපකාර සංවර්ධන, සමාජ සේවා හා පුනරුත්ථාපන, කාන්තා කටයුතු, කර්මාන්ත හා ව්‍යවසාය ප්‍රවර්ධන, සංචාරක, පළාත් පාලන හා පළාත් පරිපාලනය සහ ආහාර සැපයුම් හා බෙදාහැරීම් අමාත්‍යවරයා

Minister of Finance & Planning, Law & Order, Lands, Road Development & Electricity, Housing & Construction, Water supply, Co-operative Development, Social Service & Rehabilitation, Women's Affairs, Industries and Enterprise promotion, Tourism, Local Government and Provincial Administration, Food supply and Distribution.

எனது இல / මගේ අංකය / My No: NP/CM/01/ Gree/2015

திகதி / දිනය / Date: 20.03.2015

# வலி தென்மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை பண்பாட்டு மலர் வெளியீடு

ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள வலிகாமம் பிரதேசத்தின் பிரதேச செயலர் பிரிவுகளில் ஒன்றாக விளங்குகின்ற வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகமானது இப்பிரதேசத்தின் கலை, கலாசார பாரம்பரியங்களைப் பேணுவதற்கும், அவற்றை விருத்தி செய்வதற்கும், கலைஞர்களை ஊக்குவிப்பதற்குமான முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக கலாசாரப் பேரவை ஒன்றையமைத்து ஆண்டுதோறும் கலாசார விழாக்களை நடாத்துவது பெருமைக்குரியது. இவ்வருடம் இப்பிரதேச வளங்களை உள்ளடக்கிய நூல் ஒன்றினை இவ்விழாவின் போது வெளியீடு செய்வதற்கு இப்பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவை முன்வந்தமை பாராட்டிற்குரியது.

இப்பண்பாட்டு மலரானது வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்து, கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான தகவல்கள் இப்பிரதேசத்தின் முத்துக்கள் என வர்ணிக்கக் கூடிய மயில்வாகனப் புலவர், சோமசுந்தரப்புலவர் போன்ற தமிழ்ப்புலமையாளர்களின் வரலாறு, பிரதேச பாடசாலைகள் சிலவற்றின் வரலாறுகள் அத்துடன் இப்பிரதேச பாரம்பரிய சுதேச மருத்துவமுறை, ஆயுள்வேத மருத்துவம் மற்றும் பிரதேச கலை, கலாசாரம், பண்பாடு, வரலாற்று விழுமியங்களுடன் இப்பகுதியின் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் போன்ற பல விடயங்களையும் உள்ளடக்கிய ஒரு கலாசார ஆவணப்படுத்தலாக அமைந்திருப்பது இன்னோர் சிறப்பம்சமாகும்.

இவ்வாறான மலர் வெளியீடுகள் எமது பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்களை விருத்தி செய்வதற்கும், இளங் கலைஞர்களை ஊக்குவிப்பதற்குமான எதிர்கால சந்ததிக்கான ஒரு ஆவணமாக அமைகின்றன. இவ்வகையில் "**கலாதரம்**" என்னும் இப்பண்பாட்டு மலர் வெளியீட்டாளர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இவர்களின் பணி மேலும் சிறக்க இறைவனை வேண்டுகிறேன்.

நன்றி

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்
வடமாகாணசபை
யாழ்ப்பாணம்

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

வலிகாமம் தென்மேற்கு – சண்டிலிப்பாய் பிரதேசம் ஈழத்துத் தமிழ்ப் புலமையின் சிகரங்களான மாதகல் மயில்வாகனப்புலவர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் போன்ற மிகப் பெரும் தமிழறிஞர்களையும், உலகம் முழுவதும் அறியப்பட்ட இயல், இசை, நாடகக் கலைஞர்களையும் தந்து புகழ் கொண்ட பிரதேசம். பல வானொலி, தொலைக்காட்சிக் கலைஞர்கள், கவிஞர்கள், நடிகர்கள், கலைவல்லாரின் பாதம் பதிந்த பூமியிது. பல புனிதர்களின் சமய, சமூகப் பணிகளினால் மனிதத்துவமும், உயர் சமூக விழுமியங்களும் இன்றும் நின்று நிலைத்திருக்கும் மண்.

பிரதேசத்திற்கென தனித்துவமான பண்பாட்டுச் சிறப்புக்களையும், தமிழரின் பண்பாட்டு பொதுமைகளையும் பேணிவரும் இப்பிரதேசத்தின் கலை, இலக்கிய, சமூக, வரலாற்று வாழ்வியல் அம்சங்களினையும், அவற்றின் சிறப்பினையும் எனது சேவைக்காலத்தில் தரிசித்த திருப்தியும் எனக்கு உண்டு. இப்பிரதேசத்தின் வரலாற்று ஆவணமாக்கல் பதிவாக பிரதேச பண்பாட்டுப் பேரவையின் வெளியீடாக "**கலாதரம்**" எனும் இந்நூல் வெளிவருவதைக் கண்டு மனமிக மகிழ்கின்றேன்.

வரலாற்றில் ஆழமாகப் பொதிந்துள்ள நம் முன்னோரின் சமூக நன்நோக்குச் சிந்தனைகளின் போக்கினையும் , பல பெரியோரின் வாழ்வின் தடங்களையும் அழகுறப் பதிந்துள்ள இவ்வரலாற்றுப் பதிவிற்காக உழைத்த அனைவரும் சமூகத்தின் நன்றிக்குரியவர்கள். இப்பணியினை முன்னின்று வழி நடாத்திய பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், மற்றும் கலாசார உத்தியோகத்தர் உள்ளிட்ட அனைவரையும் மனமார வாழ்த்துகின்றேன். அவர்களோடிணைந்து நூலுருவாக்கத்திற்காக அர்ப்பணிப்போடு பங்காற்றிய மலர்க்குழுவினருக்கு எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன். இந்நற்பணியில் கரம் கோர்த்த அனைவரையும் பாராட்டுவதுடன் இம்மலர் சிறப்புற வெளிவரவும், எதிர்காலத்திலும் இவ்வாறான நற்பணிகள் மேலும் செழிப்புறவும் வாழ்த்தி அமைகின்றேன்.

நன்றி

**நாகலிங்கம் வேதநாயகன்**
மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

# முன்னாள் அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசம் வயல்நிலங்களிலும், தென்னஞ்சோலை களிலும் அமையப்பெற்ற பிரதேசமாகும். இப்பிரதேச பண்பாட்டு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அப்பிரதேசமானது கல்வி, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைச் சிறப்பாகக் கொண்டுள்ள பிரதேசமாகும். அப்பிரதேச செயலாளர் பிரிவிலே முதன்முதல் யாழ்.மாவட்ட மக்களுக்கு வைத்தியசேவை வழங்குவதற்காக கிறீன் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டமை பெருமைக்குரியதாகும். மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக ஆலயங்கள், தேவாலயங்கள் சிறப்புடன் விளங்குகின்றன. குறிப்பாக மருதடி விநாயகர் ஆலயம், சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

மேலும் இப்பிரதேசம் வரலாற்றுச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மகாவம்ச காவியத்தில் சங்கமித்தை இலங்கைக்கு வெள்ளரசு மரத்தினை எடுத்து வந்து இப்பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாதகல் சம்பில்துறை என்னும் பிரதேசத்தில் தான் இறங்கியதாக வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கலை, கலாசாரத்தைப் பேணுவதில் இப்பிரதேசம் சிறப்புடன் மிளிர்கின்றது. அவ்வகையில் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் இப்பிரதேசத்தில் வாழ்ந்து மாணவச் செல்வங்களுக்காக பிரபல்யமான பாடல்களை இயற்றி மக்கள் மனதில் இடம்பிடித்து வாழ்ந்து வந்த பெருமைக்குரியதும் இப் பிரதேசமாகும்.

இவ்வாறு கலைகள் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள், பிரபல்யமான விளை யாட்டுக்கள் எனப் பல விடயங்களை உள்ளடக்கி வெளிவருவது போற்றுதற்குரியதாகும். அத்துடன் இந்நூல் வெளிவர அயராது உழைத்த பிரதேச செயலாளர் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள், பிரதேச கலாசார பேரவையினருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்** 23.03.2015

அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்.
யாழ்ப்பாண மாவட்டம்.

# மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

வலி. தென்மேற்குப் பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் பிரதேச மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.ஒவ்வொரு பிரதேசமும் தனக்கெனத் தனித்துவமான பண்பாட்டம்சங்களைக் கொண்டு விளங்குகின்றது. அந்தவகையில் வலி. தென்மேற்கு பிரதேசமானது வயலும் வயல் சார்ந்த மருதநிலச் சிறப்பினைக் கொண்டு விளங்குகின்றது. இப் பிரதேச செயலகமானது இருபத்தெட்டு கிராம அலுவலர் பிரிவுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு வாழ்கின்ற மக்கள் விவசாயத்தையும், மீன்பிடியையும் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள அதேவேளை தமது பண்பாட்டு விழுமியங்களில் இருந்து சற்றேனும் விலகாத பண்புடையவர்களாக அன்று தொட்டு இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர்.

இப்பிரதேச மக்கள் தமக்கெனத் தனித்துவமான பண்பாட்டு அம்சங்களான மொழி, நடை, உடை, பாவனை என்பவற்றினைத் தங்கள் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்து வருவதுடன், ஆன்மீகத்திலும் அதிக நம்பிக்கை கொண்டுள்ள இப்பிரதேச மக்கள் ஆங்காங்கே வானளாவிய கோபுரங்களைக் கொண்ட வரலாற்றுப் புகழ் மிக்க பல ஆலயங்களையும் அமைத்து வழிபட்டு வருகின்றமை இதற்குச் சான்றாகும். இவ்வாலயங்களை அடிப் படையாகக் கொண்டு கலைகளும் வளர்ச்சி பெற்றன. இக்கலைகள் வெறுமனே பொழுது போக்காக அமையாது ஆன்மீக ஈடேற்றத்துக்கு அடித்தளம் இட்டுச் செல்வதுடன் மக்களின் உள்ளத்து உணர்வுகளையும் வெளிப்படுத்தும் சாதனமாகவும் அமைந்துள்ளன எனலாம்.

எனவே இப்பிரதேசமானது ஒருங்கே பல்துறைக்கலைஞர்களையும், கல்விமான்களையும் கொண்டு விளங்குகின்றது என்பதற்குச் சான்றாக "ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை" என்ற மழலைப்பாடலைத் தந்த நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவதரித்த பிரதேசமும் இப் பிரதேசமாகும். இவ்வாறு பல வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டுள்ள இப்பிரதேசத்தின் சிறப்புக்களை ஆவணப்படுத்தி எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைப்பது இக்காலத்தவரின் பணியாக அமைந்துள்ளது. எனவே இவ்வரிய பணியில் ஈடுபட்டுள்ள பிரதேசசெயலர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள், கலையார்வலர், மலர்க் குழுவினருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ரூபினி வரதலிங்கம்**
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்

# கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வலி.தென்மேற்கு கலாசார பேரவையினால் வெளியிடப்படும் வரலாற்று ஆவண சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

எமது பிரதேசத்தின் பண்பாடுகளையும், பாரம்பரியங்களையும் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் இம்மலர் வெளியீடு அமைவதுடன் அப்பிரதேசம் சார்ந்த பல்வேறு விடயங்களை உள்ளடக்கிக் கலை, இலக்கிய ஆர்வலர்களது படைப்பாற்றல்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்கு இம்மலர் களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

பிரதேசத்தின் வரலாற்றுச் சுருக்கம், கலை, கலாசாரம், கல்வி, பாரம்பரியம், சமயம் சார்ந்த தொன்மையும் அவை சார்ந்த அடையாளங்களும், சுதேச மருத்துவம், சோதிடம், நம்பிக்கைகள், வட்டாரச்சொற்கள், பிரதேசத்தின் பெருமைக்குரிய அறிஞர்களின் வரலாற்றுச் சுருக்கம், பிரதேச பாரம்பரிய கைத்தொழில் வளர்ச்சியும் அதன் போக்கும், பாரம்பரிய விளையாட்டுக்கள், பிரதேசம் சார்ந்து வெளிவந்த கலை இலக்கிய சஞ்சிகைகள் ஆகியவற்றின் சாதனைகளை ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்குரிய ஆவணமாக இப்பிரதேச மலர் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காலத்தின் தேவையறிந்து இம்முயற்சியினை முன்னெடுத்த பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் கலாசாரப்பேரவையினருக்கு எனது வாழ்த்துக் களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்வதுடன் நூல் வெளியீடு சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சி.சத்தியசீலன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

# பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

ஓர் இனம் குறித்த காலகட்டத்தில் வாழ்ந்தமைக்கும், அவ்வினம் எத்தகைய அரசியல், பொருளாதார, சமய, சமூக, கலை, இலக்கியப் பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது என்பதற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகக் காலத்தால் அழியாது நிலைத்து நிற்க வழிசமைத்தது இலக்கியமே எனில் அது மிகையாகாது.

தமிழர் என்ற ஒரு இனம் தனக்கென தனித்துவமான பண்பாட்டுக் கோலங்களுடனும், கொள்கைகளுடனும் செம்மையுற்று வாழ்ந்த இனமாகும். நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட அவ்வினத்தின் வரலாற்றை இன்னும் நாம் அறிந்து கொள்ள முடிகின்றதெனில் காலத்துக்குக் காலம் எம்முன்னோர்களால் அவர்களது முயற்சிகளை ஆவணப்படுத்தி வைத்தமையே அடிப்படையாகின்றது.

அவ்வாறு மக்கள் வாழ்ந்த, தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழ்க்கை முறைகளையும், கலைபண்பாட்டு மரபுகளையும் பேணிப்பாதுகாத்து ஆவணப்படுத்தி எதிர்கால சமூகத்திற்குக் கையளிக்க வேண்டிய தேவையும், பொறும்பும் எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அதன் பொருட்டு வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச கலாசார பேரவையால் அப்பிரதேசம் சார் அம்சங்களை ஆவணப்படுத்தும் நோக்குடன் "**கலாதரம்**" என்ற பிரதேச மலர் வெளிவருவதனையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**உஷா சுபலிங்கம்**
பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.
வடமாகாணம்.

# பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

ஈழவளத்திரு நாட்டின் வடபாலமைந்த யாழ்.நகரின் பிரதேச செயலர் பிரிவுகளுள் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசெயலர் பிரிவும் ஒன்றாகும். இப் பிரதேச செயலர் பிரிவானது பல வளங்களையும் கலாசாரப் பாரம்பரியங்களையும் தன்னகத்தே கொண்ட ஓர் பிரிவாக விளங்குகின்றது. இப்பிரதேசத்தின் கலை, கலாசாரப் பாரம்பரியங்களைப் பேணுவதற்கும் அவற்றை விருத்தி செய்வதற்கும், கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால் ஆண்டுதோறும் கலாசார விழா நடாத்தப்படுவது வழமையாகும். இவ்வருடம் பிரதேச வளங்களை உள்ளடக்கிய நூல் ஒன்றினை வெளியீடு செய்வதற்கு இப்பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவை முன்வந்தமை பாராட்டிற்குரியது.

இப்பண்பாட்டு மலரானது வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு, வரலாற்று முக்கியத்துவங்கள், கலைஞர்கள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியிருப்பதுடன் இப்பிரதேச செயலகத்தின் கலாசார ஆவணப்படுத்தலுக்கும் பெரிதும் ஆதாரமாக அமைகின்றது.

மேலும் இவ்வாறான மலர்களை வெளியிடுவதன் ஊடாக இளங்கலைஞர்களை ஊக்குவிப்பதுடன் பிரதேசத்தின் கலை, கலாசாரப் பாரம்பரியங்களை மேலும் விருத்தி செய்வதற்கும் உறுதுணையாக அமைவதுடன் எதிர்கால சந்ததியினரும் குறித்த பிரதேசம் தொடர்பாக அறிவதற்கும் பெரிதும் உதவுகின்றன. இவ்வகையில் "**கலாதரம்**" என்னும் இப் பண்பாட்டு மலர் வெளியீட்டில் ஈடுபட்ட பிரதேச செயலகத்தின் கலாசார பேரவை யினருக்கும், மலர்க்குழுவினருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இவர்களின் பணி மேலும் சிறக்க இறைவனை வேண்டி எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவ தையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

**சு.முரளிதரன்**

பிரதேச செயலர்/ கலாசாரப் பேரவைத்தலைவர்,

பிரதேச செயலகம்,

வலி.தென்மேற்கு - சண்டிலிப்பாய்.

# மலர்க்குழுவின் அகத்திலிருந்து....

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்தினூடாக "**கலாதரம்**" என்னும் இப்பண்பாட்டு மலரினை வெளிக் கொணர்வதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். எமது பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பண்பாட்டம்சங்களைப் பதிவு செய்தல், பாதுகாத்தல், எதிர்காலச் சந்ததிக்குக் கையளிப்புச் செய்தல் என்னும் நோக்கங்களை முன்னிறுத்தியதாக இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ற வகையிலான ஆக்கங்கள் எமது பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்பட்ட எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களால் இம்மலரிலே எழுதப் பட்டுள்ளன.

"**பண்பாடு**" என்பது ஒரு சமூகத்தின் அடையாளத்தினை, தனித்துவத்தினை, இருப்பினை நிலைநாட்டுவதாகும். "**தமிழ்ப்பண்பாடு**" மிக நீண்ட வரலாற்றையும், பாரம்பரியத்தினையும், பகைப்புலத்தினையும் கொண்டது. தமிழ்நாட்டில் சங்ககாலம் முதற் கொண்டு இப்பண்பாட்டின் விகசிப்பினையும் வளர்ச்சியினையும் உறுதியான ஆதாரங்களின் வழி மிகத் தெளிவாக அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன. ஈழத்திலும் இப்பண்பாட்டின் வேர்களையும், விழுதுகளையும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. இப் பெரும் பண்பாட்டின் வழி வந்தவர்கள், அப் பண்பாட்டினைப் பின்பற்றுகின்றவர்கள் என்ற வகையில் நாம் நிச்சயம் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்.

பண்பாடு என்பது எமது பரம்பரையலகுகளுக்கூடாகக் கடத்தப்பட்டு வருவதல்ல. அது முறையாகக் கற்றும் கையளிக்கப்பட்டும் வரவேண்டியது. எமது முன்னோரிடமிருந்து பண்பாட்டம்சங்களைக் உள்வாங்கி, வளர்த்தெடுத்து அவற்றினை எதிர்காலச் சந்ததிக்கு உரிய வகையில் கையளிக்க வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலமாகவே பண்பாட்டினைக் கட்டிக்காக்கும் பாரிய பணியினைப், பொறுப்பினைச் செய்து முடிக்கக் கூடியதாக அமையும். இப்பெருங் கைங்கரியத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் இம்மலர் எமது பிரதேச செயலகத்தினூடாக வெளிக் கொணரப்படுகிறது.

வலி.தென்மேற்குப் பிரதேசம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிற பிரதேசங்கள் போலவே வரலாற்றுப் பின்புலமும் பண்பாட்டுப் பாரம்பரியமும் கொண்டதாகும். வரலாற்றுச் சிறப்பும் பண்பாட்டுப் பெருமையும் கொண்ட புகழ்பெற்ற கிராமங்கள், துறைமுகங்கள், திருத்தலங்கள், நினைவுச் சின்னங்கள் முதலானவை இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. இப்பிரதேசத்திற்கே தனித்துவமான கலை, இலக்கிய, அறிவியல் மற்றும் வாய்மொழிப் பாரம்பரியங்களும், தொழில் முயற்சிகளும் காணப்படுகின்றன. இவற்றின் சிறப்பினை வெளிக் கொணர்வதும், ஆவணப்படுத்துவதும் காலத்தின் தேவையாகவுள்ளது.

காலமாற்றத்தாலும், அலட்சிய மனப்பாங்காலும், அக்கறையின்மையாலும் மறக்கப்பட்டும் மறைந்தும் போய்க் கொண்டிருக்கும் பண்பாட்டுப் பாரம்பரியங்களை அடையாளப் படுத்தும் பாரிய பொறுப்பின் பின்புலத்தில் இம்மலர் வெளி வருகின்றது.

இம்மலரில் உள்ள ஆக்கங்கள் முழுமையாக இப்பிரதேசப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பதிவு செய்துள்ளன எனக் கூறமுடியாது. எனினும் எம் முன்னுள்ள பாரிய பொறுப்பின் ஒரு சிறு பகுதியையேனும் நிறைவு செய்த மனநிறைவு மலர்க்குழுவினருக்கு இருக்கிறது.

இம்மலருக்கான ஆக்கங்கள் பத்திரிகை வாயிலாகவும், சமூக இணையத்தளங்கள் வாயிலாகவும் கோரப்பட்டன. எனினும் குறிப்பிட்ட எண்ணிக்கையான ஆர்வலர்களே தமது ஆக்கங்களைத் தந்துதவினர். கிடைக்கப் பெற்ற ஆக்கங்களையும் மலர்க்குழுவினரின் முயற்சியால் சேகரிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் புகைப்படங்கள் முதலானவற்றையும் கொண்டு இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வெளிவரும் இம்மலரின் அடுத்த வெளியீடுகளில் விடுபட்ட விடயங்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கலாம். எழுத்தாற்றலும், ஆர்வமும், பொறுப்புணர்வும் கொண்ட ஆர்வலர்கள் இதற்குத் துணை நிற்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இம்மலர் வெளிவருவதில் எம்முடன் தோள் கொடுத்த பிரதேசசெயலர், உதவிப் பிரதேச செயலர், எழுத்தாளர்கள், அச்சகத்தினர், நண்பர்கள் முதலானோருக்கு எமது நன்றி களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

**- மலர்க்குழு**

# மனமார்ந்த நன்றிகளுடன்..........

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச கலாசாரப் பேரவையின் "**கலாதரம்**" என்னும் பண்பாட்டு மலர் இன்று எங்கள் கரங்களில் கிடைத்திருப்பதையிட்டு பெருமகிழ்வடைகிறோம். இதுவரை காலமும் எம்மத்தியில் ஏற்பட்ட பல்வேறு பட்ட இடர்பாடுகள் காரணமாக இவ்வாறான ஆவணப்படுத்தும் செயற்றிட்டங்கள் இடம் பெறவில்லை. இந்நிலையில் எமக்குத் தற்போது கிடைக்கப் பெற்ற பிரதேச வளங்கள் தொடர்பான ஆக்கங்களினை மையப்படுத்தி இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வடமாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி அனுசரணையுடனும் இப் பிரிவு வாழ் மக்களின் பங்களிப்புடனும் இப்பிரதேச மலரினை நாங்கள் பெருமையுடன் சமர்ப்பிக்கின்றோம்.

"**கலாதரம்**" என்னும் இப்பண்பாட்டு மலர் ஆக்கத்துக்கு எல்லா வகையிலும் ஊக்கமும் ஆக்கமும் போதியளவு வழங்கிய அனைவருக்கும் எம் மனம் நிறைந்த நன்றிகள்.

**மாலினி கிருஸ்ணானந்தன்**
கலாசார உத்தியோகத்தர்
செயலாளர், பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்.

# மலரின் அகத்தில்...


01) வலி.தென்மேற்குப் பிரதேச செயலகம் ; தோற்றமும் வளர்ச்சியும் 01 - 04

02) அழியும் அழகிய வாழ்க்கைக் கோலங்கள் 05 - 15

03) சமயமும் பண்பாடும்

1. இந்துப்பண்பாடு 17 - 31
2. இந்துஆலயங்கள் வரலாறும் பெருமையும் 32 - 46
3. 17ம்நூற்றாண்டில் யாழ். கத்தோலிக்கத் திருச்சபையின் எழுச்சி 47 - 50
4. மானிப்பாய் திருச்சபை 51 - 53
5. பண்டத்தரிப்பில் அமெரிக்க இலங்கை மிஷனரிமாரின் சேவையும் பயன்பாடும் 54 - 59
6. இலங்கையில் அமெரிக்க மிஷனரிமாரின் பணிகள் ஒரு சுருக்கமான உசாவல் 60 - 66
7. தேவாலயங்களும் தெய்வீகமும் 67 - 75

04) கலை, இலக்கிய எழுச்சி

01. சண்டிலிப்பாய் பிரதேசத்தின் இலக்கியப் பதிவுகளை முன்னிறுத்திய ஒரு வரலாற்றுப் பார்வை 77 - 89
02. நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் 90 - 94
03. யாழ்ப்பாணத் தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தில் சோமசுந்தரப் புலவர் 95 - 100
04. "தான்தோன்றிக் கவிராயர்" – சில்லையூர்செல்வராசன் 101 - 102
05. மக்கி மண்ணும் குறுணிக் கற்களும் – என் நினைவின் பதிவுகள் 103 - 107
06. "ஈழத்துக்கலை முகவரி" – முகத்தார் யேசுரட்ணம் 108 - 110
07. இசைநாடகக் கலைஞர் – ரி.என். செல்வராஜா 111 - 113
08. "தமிழ்ப்பண்டித மரபின் கடைசிக் கொழுந்து" பண்டிதர் க.ஈஸ்வரநாதபிள்ளை 114 - 115
09. கலைவாணியின் கலைச் செயற்பாடுகள் ஒரு பார்வை 116 - 117
10. "கலைத்தூது" மரிய சேவியர் அடிகளார் 118 - 120
11. "மறக்கமுடியா மகத்தான ஆளுமை" மாதகல் மயில்வாகனப்புலவர் 121 - 124

05) மருத்துவம்

01. ஆயுள்வேதம் ஒரு நோக்கு............. 125 - 130

02. சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களிடையே மூலிகைப் பயன்பாடும் அவற்றின் மருத்துவகுணங்களும் – ஓர் ஆய்வு 131 – 144
03. சுதுமலை வாழ் சுதேச வைத்தியர்கள் 145 – 147
04. நல்லெண்ணெய் உற்பத்தியும் பயன்பாடும் மருத்துவநோக்கில் 148 – 151


06) **கிராமங்கள்: வரலாறும் பழமையும்**

01. சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களின் வரலாற்றுத் தொன்மையும் இடப்பெயராய்வும் 153 – 167
02. கிராமங்கள்; பதிவும் பார்வையும் 168 – 191

07) **கல்விப்பாரம்பரியம்**

01. ஈழத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் மரபும் நவீனமும் 193 – 198
02. பாடசாலைகள்; வரலாறும் சாதனையும் 199 – 204

பிரதேச செயலர் பிரிவு நில வரைபடம்



# வலி.தென்மேற்குப் பிரதேச செயலகம்; தோற்றமும் வளர்ச்சியும்

**தி.நித்தியானந்தன்,**
சிரேஷ்ட கிராம உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.

இந்து சமுத்திரத்தின் நித்திலமான இலங்கைத்திருநாட்டின் 9 மாகாணங்களில் தலையாகத் திகழ்வது வடமாகாணம் ஆகும். இம் மாகாணமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கியது ஆகும். வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் வடமேற்கே உள்ளது வலிகாமம் பகுதியாகும். இலங்கைத் தீவிலே ஆங்கிலேயருடைய சிவில் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் இயங்கிய யாழ் மாவட்டமானது 1947ம் ஆண்டளவில் டி.ஆர்.ஓ (D.R.O) என்றழைக்கப்படும் காரிய அதிகாரி முறை கொண்டு வரப்பட்டு, தீவகம் வலிகாமம், யாழ்.நகர், வடமராட்சி, தென்மராட்சி என 5 நிர்வாகப் பிரிவுகளாக மணியகாரன் கந்தோர் என்ற பெயருடன் இயங்கி வந்தன. பின்பு வலிகாமம் பகுதி, வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. 1969ஆம் ஆண்டு காரிய அதிகாரி காரியாலயம் என்ற பெயர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை என மாற்றம் அடைந்தது.

இக்காரியாலயமானது வலி.மேற்கு (சங்கானை) பிரதேசத்துடன் இயங்கிய காலம் நிர்வாகக் கட்டமைப்பில் மக்களுக்கு இலகுவாகச் சேவைகள் வழங்க வேண்டும் என்ற அரசாங்க கொள்கைக்கு இணங்க 1973 ம் ஆண்டு மானிப்பாய்க் கோயில் பற்று, பண்டத்தரிப்பு கோயில்பற்று ஆகிய பகுதிகளில் உள்ள சுதுமலை, ஆனைக் கோட்டை, நவாலி, மானிப்பாய், சண்டிலிப்பாய், வடலி யடைப்பு, பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், பெரிய விளான், இளவாலை ஆகிய கிராமங்களை உள்ளடக்கி 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்டதாகத் தனியார் கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது. இப்பிரதேசத்தின் முதலாவது உதவி அரசாங்க அதிபராக வடலியடைப்பைச் சேர்ந்த திருவாளர் மாணிக்கம் நடராசா நியமிக்கப் பட்டார்.

இவ்வாறு இக்காரியாலயம் இயங்கி வரும் காலத்தில் நிரந்தர கட்டிடம் இன்மையால் இங்கு கடமையாற்றும் அலுவலர்களும் சேவையைப் பெறவரும் பொதுமக்களும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. இவற்றை அவதானித்த

சண்டிலிப்பாயைச் சேர்ந்தவரும் 1970-1977 காலப்பகுதியில் மானிப்பாய்த் தொகுதி ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமான காலஞ்சென்ற திருவாளர் குமாரசாமி வினோதன் அவர்கள் இன்று காரியாலயம் இயங்கும் நிலத்தைப் பொதுமக்களின் உதவியுடன் பெற்றுக் கட்டிடத்தை அமைக்க உதவினார். ஆரம்பத்தில் உதவி அரசாங்க அதிபர், நிர்வாக அலுவலர், ஆளணி உதவியாளர், பிரதம லிகிதர், 9 கிராம உத்தி யோகத்தர், காரியாலய உதவியாளர்கள் உட்பட 30 அலுவலர்களே கடமையாற்றினார் கள்.

வலி.தென்மேற்குப் பிரதேசமானது தேர்தல் தொகுதி ரீதியில் மானிப்பாய்க் கோவில் பற்று மானிப்பாய்த் தொகுதியுடனும், பண்டத்தரிப்புக் கோயில்பற்றின் ஒரு பகுதி வட்டுக்கோட்டைத் தொகுதியுடனும் இன்னொரு பகுதி காங்கேசன்துறைத் தொகுதி யுடனும் இணைக்கப்பட்டுள்ளது. நீதித்துறை சார்பில் மல்லாகம் நீதிமன்றின் ஆளுகையின் கீழும் கல்வித்துறையைப் பொறுத்தவரை சண்டிலிப்பாய்க் கோட்டத்தின் கீழ் வலிகாமம் கல்வி வலயத்துடனும், மீன்பிடித்துறையைப் பொறுத்தவரையில் சுழிபுரம் கடற்தொழில் பரிசோதகர் அலுவலகத்தின் கீழும் விவசாயம் சார் செயற்பாடுகள் 2010ல் தனியாக ஆரம்பிக்கப்பட்ட நவாலி கமநல சேவை நிலையத்தின் கீழும் இயங்கி வருகின்றன. மானிப்பாய் கோவில்பற்று மானிப்பாய் பொலிஸ் பிரிவின் கீழும் பண்டத்தரிப்புக் கோயில் பற்று இளவாலை பொலிஸ்பிரிவின் கீழும் இணைக்கப்பட்டுச் செயற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. உள்ளூராட்சி நிறுவனம் வலி.தென்மேற்குப் பிரதேச சபையாக இயங்கி வருகின்றது.

காலப்போக்கில் நிதித் திட்டமிடல் அமைச்சினால் 1982ம் ஆண்டு விசேட சேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டவர் கள் 1987ஆம் ஆண்டு கிராம உத்தியோகத் தராக உள்வாங்கப்பட்ட போது யாழ்.மாவட் டத்தில் இருந்த 149 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 227ஆக மாற்றமடைந்தன. அப்போது வலி.தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இருந்த 9 கிராம உத்தி யோகத்தர் பிரிவுகள் 13 ஆக மாற்றமடைந் தன.

1978ஆம் ஆண்டு விவசாய அமைச் சால் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் களாக நியமிக்கப்பட்டவர்களும் விவசாய விரிவாக்க உத்தியோகத்தராக நியமிக்கப் பட்டவர்களும் 1989ம் ஆண்டு கிராம உத்தியோகத்தராக உள்வாங்கப்பட்ட போது யாழ்.மாவட்டத்தில் 227ஆக இருந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 435ஆக மாற்றமடைந்தன. அப்போது வலி.தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழிருந்த 13 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கீழுள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளாக மாற்றம் பெற்றன. அவையாவன ; J/129 -சுதுமலை வடக்கு,
J/130 -சுதுமலை தெற்கு, J/131 - சாவற்கட்டு, J/132- உயரப்புலம், J/133- ஆனைக் கோட்டை, J/134- நவாலி வடக்கு, J/135- நவாலி கிழக்கு, J/136- நவாலி தெற்கு,
J/137- மானிப்பாய் வடக்கு, J/138- மானிப்பாய் கிழக்கு, J/139- மானிப்பாய் தெற்கு, J/140- மானிப்பாய் மேற்கு, J/141 - சண்டிலிப்பாய் வடக்கு, J/142 - சண்டிலிப்பாய் மத்தி, J/143- சண்டிலிப்பாய் மேற்கு, J/144 - மாகியப்பிட்டி, J/145 - வடலியடைப்பு,
J/146 - பண்டத் தரிப்பு, J/147 - பிரான்பற்று, J/148 - சில்லாலை வடக்கு, J/149 -

## பிரதேச செயலக முகப்புத் தோற்றம்










சில்லாலை தெற்கு, J/150 - மாதகல் கிழக்கு, J/151 - மாதகல் தெற்கு, J/152 - மாதகல் மேற்கு, J/153 - பெரியவிளான், J/154 - மாரீசன் கூடல், J/155 - இளவாலை, J/156 - முள்ளானை என்பனவாகும்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை 1993ஆம் ஆண்டு பிரதேசச் செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டு மாவட்டக் கச்சேரியில் இருந்த பல பிரிவுகள் பிரதேச செயலகங்க ளுக்குப் படிப்படியாக மாற்றப்பட்டன. அவை யாவன கணக்குப்பிரிவு, திட்டமிடற் பிரிவு, சமூகசேவைப்பிரிவு, பதிவாளர் பிரிவு, தேசிய அ.அ.பிரிவு, மோட்டார் போக்குவரத் துப் பிரிவு, காணிப்பிரிவு இவை தவிர ஏனைய பிற பிரிவுகளுக்குப் பிரதேச செயலக ரீதியாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டார்கள் . அவையாவன, புள்ளி விபரப்பிரிவு, கலாசாரப் பிரிவு, மகளிர் அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி, சிறுவர் நன்னடத்தை, விளையாட்டுப்பிரிவு, விஞ்ஞான தொழில் நுட்பம், அனர்த்த முகா மைத்துவம், சிறுகைத்தொழிற் பிரிவு, விவசாய விரிவாக்கம், தொழிற்பயிற்சி என்பனவாகும்.

1994ஆம் ஆண்டின் அரசாங்கக் கொள்கைக்கு அமைவாகச் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபை உருவாக்கப்பட்டு அதனூடாக ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு ஒரு சமுர்த்தி உத்தியோகத்தரும் அவர்களை ஒருங்கிணைப்பதற்காக முகா மையாளர்களும் மக்கள் தொகைக் கிராம உத்தியோகத்தர் பிரிவு என்பவற்றை அடிப் படையாகக் கொண்டு சமுர்த்தி வங்கிகளும் ஆரம்பிக்கப்பட்டன. இவர்களும் பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டார்கள்.

2012ஆம் ஆண்டு பட்டதாரிப் பயிலுநர்கள் நியமிக்கப்பட்டு பயிற்சியின் பின்னர் அவர்கள் அபிவிருத்தி உத்தியோகத் தர்களாகக் கடமையில் இணைக்கப்பட்டார் கள்.

இன்று இப்பிரதேச செயலகம் ஏறத்தாழ 15400 குடும்பங்களையும் 52750 மக்கள் தொகையையும் கொண்டு விளங்கு கின்றது. இவர்களுக்குச் சேவையாற்றுவதற் காகப் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், உதவித்திட்டமிடல் அதிகாரி, நிர்வாக அலுவலர், சமூக சேவை அலுவலர் ஆகியோரையும் சேர்த்து 230க்கும் மேற்பட்ட ஆளணியினரைக் கொண்ட முழுமையான பிரதேசசெயலகமாக மிளிர் கின்றது.

வலி.தென்மேற்குப் பிரதேசம் விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில், குடிசைத்தொழில், வியாபாரம், அரசசேவை யாளர்கள் போன்ற துறைகளில் தமது தொழில் முயற்சிகளை மேற்கொள்ளுகின்ற மக்கள் வாழ்கின்ற பிரதேசமாக விளங்குகின்றது. இப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் தொழில் முயற்சிக்கும், வாழ்வாதாரத்தைக் கட்டியெ ழுப்புவதற்கும் வறுமையைத் தணிப்ப தற்கும் இப்பிரதேச செயலகத்தில் கடமை யாற்றும் அனைத்து அலுவலர்களும் அர்ப்ப ணிப்புடன் சேவையாற்றுகின்றார்கள்.

யாழ்.மாவட்டத்தில் கலாசார நிகழ் வுகள், பிரதேச விளையாட்டு விழாக்கள், முதியோர், சிறுவர் தின நிகழ்வுகள் முதலா னவை எமது பிரதேசத்திலேயே தனித்துவ மாகவும் பிறரைக் கவரக்கூடிய வகையிலும் நடடைபெற்று வருகின்றன.

இவ்வாறாக எமது பிரதேச செயலகம் முன்னணியில் நிகழ்வதற்கு இங்கு கடமை யாற்றுகின்ற முன்னர் கடமையாற்றிய உதவி அரசாங்க அதிபர்களும்/ பிரதேச செயலர்களுமே காரணகர்த்தாக்களாக இருந்துள்ளார்கள். ஆகவே அவர்களை இந்நேரத்தில் மனதில் இருத்தி நன்றி பாராட்டுவோமாக.

**வலி.தென்மேற்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய உதவி அரசாங்க அதிபர்கள்/ பிரதேச செயலர்கள்**


| | |
|---|---|
| திரு.மா.நடராசா | 1979-1977 |
| திரு.க.மகாதேவா | 1977-1981 |
| திரு.க.கோபாலரத்தினம் | 1981-1984 |
| திரு.க.சண்முகநாதன் | 1984-1986 |
| திருமதி சாந்தி நாவுக்கரசன் | 1986-1988 |
| திரு.A.ஞானசேகரம் | 1988- |
| திரு.க.சபாபதிப்பிள்ளை | 1988- |
| திரு.S.சிவசம்பு | 1989- |
| திரு.A.V.T தியாகராசா | 1989- |
| திரு.க.கனகரத்தினம் | 1990-1991 |
| திரு.H.ஹெக்டர் ஜோசப் | 1991-1992 |
| திரு.கா.சந்திரராசா | 1992-1993 |
| திரு.து.வைத்திலிங்கம் | 1993-1996 |
| திரு.நா.வேதநாயகம் | 1996-2002 |
| திரு.S.செல்வராசா | 2003- |
| திரு.A.சுப்பிரமணியசர்மா | 2004-2005 |
| திருமதி ரூபினி வரதலிங்கம் | 2005-2009 |
| திரு.ம.ஜெகு | 2009- |
| திருமதி எ.அன்ரன் யோகநாயகம் | 2010-2011 |
| திரு.சு.முரளிதரன் | 2012-இன்றுவரை |



பிரதேச செயலகத்தின் முகப்புத் தோற்றம்



ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதி கேணிக்கட்டு



பெரியவிளான் முந்திரிகைப் பயிர்ச்செய்கை




கலாசார விழா கலைஞர் கௌரவிப்பு - 2014




கலாசார விழாவின் கலைநிகழ்வு

# அழியும் அழகிய வாழ்க்கைக் கோலங்கள்

**செ.இராசநாயகம் - கனடா**
(இளவாலை)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலகத்தின் எல்லைக்குள் முள்ளானை, இளவாலை, மாரீசன்கூடல், பெரியவிளான், மாதகல் கிழக்கு, மாதகல் மேற்கு, சில்லாலை வடக்கு, சில்லாலை தெற்கு, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, பிரான்பற்றை(பிரான்பற்று), சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய் மேற்கு, மாகியப்பிட்டி, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய் தெற்கு, நவாலி கிழக்கு, சுதுமலை வடக்கு, சுதுமலை தெற்கு, சாவற்காடு, உயரப்புலம், ஆனைக் கோட்டை எனும் பிரதான நிலப்பிரிவுகள் அடங்குகின்றன.

இவற்றுள் இளவாலை, முள்ளானை, மாரீசன்கூடல், மாதகல், சில்லாலை, பெரிய விளான், பிரான்பற்று, பண்டத்தரிப்பு எனும் ஊர்களைக் கொண்ட பிரதேச நிலத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் கூறுகளுள் பல மறைந்து கொண்டிருக்கின் றன. சில மறைவதற்குரிய மாற்றங்களில் சிக்கித் தவிக்கின்றன. அவற்றுள் சிலவற்றை யேனும் எடுத்துக்காட்டி எழுத்திலேனும் வாழ்வளிக்கலாம் எனும் நம்பிக்கையில் இவ்வெழுத்தாக்கம் இடம்பெறுகிறது.

யாழ்.குடாநாட்டில் ஆறு எனும் பெயர் ஒட்டிக் கொண்டிருப்பது இரண்டே இரண்டில் தான். ஒன்று தொண்டமானாறு மற்றது வழுக்கையாறு யாழ்.குடாநாட்டின் நிலப் பரம்பலை கிழக்கு மேற்காகப் பிரித்த வண்ணம் தெற்கு தென்கிழக்குத் திசைகளிலி ருந்து வடக்கு நோக்கிச் சென்று பாக்கு நீரிணைக் கடலோடு கலப்பது தொண்டை மானாறு.


வடகீழ்ப்பருவப் பெயர்சிக் காற்றி னால் மாரிகால மாதங்களில் பெறப்படும் மழைநீர் பள்ளமான வயல் நிலங்களில் பாய்ந்து அவற்றிலுள்ள குளங்க ளையும் நிரப்பியபின் வடியும் நீரை ஏந்திக் கொண்டு செல்வதே வழுக்கையாறு. இது தெல்லிப் பழை, மாகியப்பிட்டி, அளவெட்டி, சங்குவேலி, சண்டிலிப்பாய், கட்டுடை, வட்டுக்கோட்டை ஆதியாம் ஊர்களினூடாக ஓடி அராலிக் கடலோடு கலக்கின்றது. இவ்வழுக்கையாறு மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், எனும் ஊர்க ளையும் தொட்டுத் தொடர்வதால் இங்கு குறிப்பிடப் படுகின்றது.

வலிகாமம் தென்மேற்கு அரசாங்க நிர்வாகப்பிரிவும் பெருமளவில் யாழ்.குடா நாட்டின் பொதுத்தன்மைக்குரியதான மருதம், நெய்தல் எனும் இருதிணைகளுக் குரிய நிலத்தன்மைகளையே கொண்டுள் ளது. வயலும் வயல் சார்ந்த நிலமாம் மருதமும் கடலும் கடல் சார்ந்த நிலமுமாம் நெய்தலுமே அவையாகும். வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய முப்புறங்களும் கடலாலும், தெற்கில் ஒரு ஒடுங்கிய நிலத்தாலும் சூழப்பட்டிருப்பது யாழ்.குடாநாடு.

பண்டைய தமிழ் இலக்கண இலக்கியங்களுள் திணை மயக்கம் என்பது இடம் பெறுகின்றது.ஐந்திணைகளாம் மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சி, பாலை எனும் இவற்றினுள் ஒரு திணைக்குரிய நிலம், மக்கள், வாழ்வியல் முதலியன மற்றொரு திணைக்குரியனவற்றைக் கொண்டிருப்பின் அதனை திணைமயக்கம் என்றே குறிப்பிடப் பட்டுள்ளது. அவ்வகையில் மருதம், நெய்தல் எனும் இரு திணைகளின் மயக்கமே யாழ். குடாநாட்டில் காணப்படுகிறது எனலாம்.


இவ்விரு நிலங்களையும் சார்ந்தும் சூழ்ந்தும் தலைதூக்கிக் காணப்பட்டவை தமிழ் நிலத்தின் கற்பக தருக்களாம் பனைமரக்காடுகளே. காடும் காடு சார்ந்த நிலமும் முல்லையாதலால் இப்பனை மரக் காடுகளே யாழ்.குடாநாட்டிற்கு அம்முல்லைத் திணைத் தகுதியை அளித்தன. இன்றும் அளித்துக் கொண்டிருக்கின்றன எனலாம். இம்மூவித நிலங்களில் வாழ்ந்து மறைந்த எம்முன்னோர்களின் வாழ்வியலின் அடை யாளங்களை எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இந்நிலங்களில் வாழ்ந்த இன்றும் வாழ்கின்ற மக்களின் உணவு, உறையுள், தொழில் ஆதியாம் வாழ்வாதாரத் தேவை களை இப்பனைமரக் **கற்பகதருக்காடுகளே** தாராளமாகவும் இடையறாத் தொடர்ச்சியாக வும் அளித்துக் காத்தன. இன்றும் காத்தளித்த வண்ணம் உள்ளன.




பனங்காடுகளோடு கூடி வளர்ந்த வேப்ப மரங்கள், பாலை, முதிரை மரங்கள், வீட்டுத்தூண்களாம் கப்புகள், கூரைகளைத் தாங்கும் வளைகள் ஆகின பிளந்து தேவைக்கேற்ப சீர்ப்படுத்தப்பட்ட பனைமரத் துண்டுகள் கூரைப் பகுதிக்கான பாய்ச்சு மரங்கள், சலாகைகள் ஆகின பனை யோலை வீட்டு வேய்ப்புக் கூரையானது. பனை யோலையிலிருந்து நீக்கப்பட்ட வலிய மட்டை அனைத்து வித கட்டுதல்களுக்குரிய நார் ஆகியது பனையோலைக் குருத்துக்கு பெருமையாகச் சூட்டப்பட்ட பெயர் "ஓலைச் சார்" குருத்தோலை தூய தமிழ்ச் சொல்லே "சார்" ஆகும். இச்சாரிலிருந்து பெறப்படும் பொன்னிறமான ஓலைக்கீற்றுகள், எம் மக்க ளின் கைவண்ணத்தில் பெற்ற அழகு வடிவங் களோ அதிகமானவை. ஓலைச்சார் தேவைப் பட்ட பொருளின் ஆக்கலுக்கேற்ற அளவில் வார்ந்து எடுக்கப்பட்டது. அதனைக் கொண்டு நீர் இறைக்கும் பட்டை, அடுக்குப் பெட்டி, தட்டுப்

பெட்டி, கடகம், படுக்கைப்பாய் புற்பறி , மீன் பறி, தலைத்தொப்பி, மா, பிட்டு, கொழுக் கட்டை போன்ற உணவுகளை ஆவியில் அவிய வைக்கும் நீக்கற் பெட்டி (நீத்துப்பெட்டி) பனாங்கட்டிக்குட்டான் என நாளும் பல்வேறு தேவை களுக்காக வடிவப் பொருட்கள் ஆக்கம் பெற்றன. அந்நாள்களில் பாடசாலைகளும் பன்ன வேலை எனும் பாடப்பிரிவில் சார் ஓலைக் கை வேலைகளையும் மாண வருக்குப் பயிற்றுவித்தன.



அக்காலஆண்,பெண் இருபாலாரி டையேயும் பாக்கு வெற்றிலை மென்று உண்டு உமிழும் பழக்கம் பரவலாகக் காணப் பட்டது.பாக்குப் போடுதல் என்பது அக்கால வழக்கமாகும். கமுகிலிருந்து பெறப்படும் பாக்கு விதை கொட்டைப்பாக்கு எனச் சிறப்பிக் கப்பட்டது. கொட்டைப் பாக்குச் சீவல், வெற்றிலை, சுண்ணாம்பு, புகையிலைத் துண்டுகளாம் கூட்டுப் பொருள்களைப் பத்திரமாக வைத்து தாம் செல்லும் இடமெங்கும் எடுத்துச் செல்லப் பாக்குப் போடுவோருக்கு கொட்டைப்பெட்டி தேவைப் பட்டது. அதற்கும் சார் ஓலையே தேவைப் பட்டது. கொட்டைப்பாக்கை மெல்லுவதற்கு எளிதாக்கும் துண்டுகளாக வெட்ட பாக்கு வெட்டி, இரும்பு உலோகத்தில் செய்யப்பட்டது. பாக்கின் வலிய துண்டுகளைக் கடித்து மெல்லு வதற்கு தகுந்த பல் வலுவற்ற முதியோர் உருவில் சிறிய பாக்குரலைப் பயன்படுத் தினர். பாக்குப் போடுவதில் ஊறும் மிதமிஞ்சிய எச்சிலை உமிழ எச்சில் படிகம் இரும்பு உலோகத்தில் ஆக்கப்பட்டது.

பனை ஓலையின் விரிவுக்கீற்று களை இணைக்கும் வலிய பகுதி "ஈர்க்கு" எனப்படுகின்றது. இதனைக் கொண்டு கிணற் றிலிருந்து நீரை அள்ளப் பயன்படும் பாரமான நீர்ப்பட்டையை இழுக்கும் வலு வான துலாக்கொடி, சமைத்த உணவுகள் இடப் பட்ட சட்டி, பானைகள், நிலத்தில் அழுத் தப்பட்டு நொருங்காது பாதுகாக்கும் "திரியணை" போன்ற கைவினைப் பொருட் கள் ஆக்கப் பட்டன. விரித்துக் காய வைத்துப் பதப்படுத்திய பின், வட்டமாக வடிவ மைக்கப்பட்ட ஓலை வெயில் , மழையைத் தாங்கும் குடையாகி யது.மட்டை நீக்கப்பட்ட பச்சை பனையோலை மாட்டுத் தீவன மாகியது.காய்ந்து வலுவேறிய மட்டைகளோ வீட்டைச் சுற்றிக் காக்கும் வேலிகளாயின.



பங்குனி, பனை மரங்கள் பாளை தள்ளும் மாதமாகும் .ஆண், பெண் பனைப் பாளைகளில் ஊறி வடியும் சத்து நிரம்பிய நீர், கள், கருப்பனீர் என இரு வகையில் பெறப்

படுகின்றது. வயலிலோ , கடலிலோ வெயிலில் நின்று வியர்வை சிந்தி உழைக்கும் மக்களுக்கு அளவோடு அருந்தப்படும் கள் களை நீக்கி புத்துணர்ச்சியூட்டக் கூடியது. அளவுக்கு மிஞ்சிய கள் குடி அறிவையும் மயக்கி உற்சாகத்தையும் மழுங்கடித்து அழிவுக்குக் கொண்டு செல்லும் என்பதை எல்லோரும் அறிவர். கருப்பநீரைச் சுண்டக் காய்ச்சி இனிப்பான பனங்கட்டி தயாரிக்கப் படும். பெண் பனைப்பாளைகள் குரும்பைகள் தோன்றும். குரும்பை ஓரளவு முற்றியதும் "நுங்கு" எனும் நுண்பெயர் பெறும் நுங்ககங் கள் இயற்கையாகவே ஒற்றை அல்லது இரட்டை, அன்றேல் முக்கண் கொண்டிருக் கும். நுங்குக் கண்களில் - குழிகளில் இனிமை ததும்பும் சத்து நீருடன் கூடிய வெண் ணிறக்கண்ணாடி போன்று பள பளக்கும் வழுக்கைப் பொருளும் பொதிந்திருக்கும். இவை உண்போருக்கு தாகத்தையும் ஓரளவு பசியையும் தீர்க்கக் கூடியன. இந்நுங்குகளி லுள்ள கண்களே, நுங்கு பனங் காயாக முற்றி யதும் பனம் விதைகளாகும். பனங்காய் கனிய முற்றிப் பனம்பழமாகும். இவை தாய கத்தில் வாழும் சிறுவர்களுக்கும் தெரியும்.

ஏறத்தாழ நூறாண்டுகளுக்கு முன் னர் வாழ்ந்த எம் முன்னோர் நாள் தோறும் இப் பனம்பழக்காலத்தில் அதிகாலையில் எழுந்து இப்பனம்பழங்களை எடுத்து வருவர். பின்பு காலைக்கடன்களை முடித்து உண்ணும் காலை உணவோடு இப்பனம் பழத்தையும் ஓரளவு நெருப்பிலிட்டு வாட்டிய பின் மேற்றோலை உரித்தெடுத்த பின் விதை களைச் சூழ்ந்துள்ள சுவையான செம்மஞ்சட் களியை உண்டு பசி தீர்ப்பர். பல பனம் பழங் களை எடுத்து இங்கனம் பெறப்படும் களியுடன் மிளகு, கறுவா, சீரக முக் கூட்டுத் தூளையும் கலந்து புத்தோலைத் தட்டில் பரப்பி முற்றத்தில் அமைத்த பரணில் வைத்து வெயிலில் காய விடுவர். வெயிலில் பல நாள்கள் காய்ந்து ஈரம் முற்றாக நீங்கி கெட்டியான அப்பனாங்களி "பனாட்டு" ஆகும்.

"அடுதல்" என்ற சொல் சுடுதல் அல்லது சமைத்தல் எனும் பொருள் தரும். ஒரு வினைச் சொல் சூரியக்கதிர் வெப்பத்தினால் சுட்டெடுக்கப்பட்டு திட நிலை பெற்ற பனங் களியே பனாட்டாகும். பனை+அட்டு= பனாட்டு சென்ற காலத்து எம்முன்னோர் சமையலுக் காகப் பயன்படுத்தும் வீட்டின் பிரிவுக்கு அடுப்படி என்றே பெயரிட்டனர். அடுதல் தொழிலுக்காக உருவமைக்கப்பட்டதே அடுப்பு. அடுப்பு உள்ள பகுதியே அடுப்படி. அடுப்படி என்ற சமையலறை பின்னர் "குசினி" என்றொரு புது நாமம் பூண்ட பின் தற்போது ஆங்கிலக் கிச்சினும் ஆகிவிட்டது. சரி பனாட்டு பக்கமே பார்ப்போம். வெயிலில் நன்கு காய்ந்து கெட்டியான பனங்களிப் பனாட்டு பின்னர் விருப்பிற்கேற்பச் சதுர, நீள் சதுர வடிவத் துண்டுகளாக வெட்டப்படும். அவற்றை பனை ஓலைச் சாரினால் பின்னப் பட்ட பெரிய பெட்டிகளில் அடுக்கி வைக்கப் படும். அடுப்பு அமைந்துள்ள இடத்தின் மேற் பகுதி "புகடு" எனும் பெயர் பெறும். அப் புகட்டிலும் சிறிய பரண் கட்டப்பட்டிருக்கும். பல பனாட்டுகள் அடுக்காக வைக்கப்பட்ட பெட்டி இப் புகட்டுப் பரணில் பாதுகாப்பாக வைக்கப் படும். நாளாந்த சமையலால் மேலெழும் வெப்ப புகையினால்உணவுப் பண்டங்க ளைக் கெட்டுப் போகச் செய்யும் நுண்கிருமி கள் கிட்ட நெருங்காத இடமாக இப்புகடு இருக்கும்.

பனங்களி நீக்கப்பெற்ற பனம் விதை "பனங்கொட்டை" எனும் பாரம்பரியப் பெயர் பெறும். யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் மற்றும் வட மாகாணப் பிரதேசங்களிலும் வாழ்ந்து தென்னிலங்கைக்குச் செல்லும் எம் மக்களுக்கும் இப்பனங் கொட்டைப்பட்டம் சூட்டப் படுவதுண்டு. பனம் விதைகளைச் சேகரித்து மிருதுவான மண் படையுள்ள இடத்தில் சிறிது பள்ளம் தோண்டி அவ்விடத்தில் அவற்றை அடுக்காக இட்டு மண்ணால் மூடிவிடப்படும் . இச்செயல் மாரி காலம் தொடங்குவதற்கு முன்னர் நடை பெறும் . பனம் விதைகளை வைத்து மூடப் பட்ட பகுதி "பனம்பாத்தி" என அழைக்கப் பட்டது.

மாரி மழை ஈரத்தில் பனங்கொட்டை களிலிருந்து பனங்கிழங்கு தண்டு வெளிப் படும். கிழங்கின் நடுவே பனை மரமாக வளரவிருக்கும் மெல்லிய குருத்து காணப் படும். இக்குருத்து "பீலி" எனப்பெயர் கொண் டது. பீலி எனும் சொல்லுக்குரிய கருத்து பனங்குருத்து எனஅகராதியே அடித்துக் கூறுகின்றது. பனங்காய், பனங்கிழங்கு பற்றி நாம் அறிந்தது தானே. வீண் விளக்கம் தேவையா எனச் சலித்துக் கொள்ளலாம். ஆயினும் பனையிலிருந்து பெறப்படும் ஒவ்வொரு சிறிய பொருளுக்கும் "பீலி" போன்று பொருள் பொதித்த சுத்தமான தமிழ்ச் சொற்களை நம் முன்னோர் சர்வ சாதாரண மாகவே பயன்படுத்தியுள்ளனர் என்பது அதிச யமானதில்லையா ?

பனங்கிழங்கை இரண்டாகப் பிளக்க உதவுவது பீலி. கிழங்கை அவித்தால் அது புழுக்கொடியல். அவியாதது ஒடியல், ஒடித்து பயன்பெறுவதால் ஒடியல். அவியல், பொரியல், சுண்டல், துவையல் என்பன போல் தொழிலின் அடியாகப் பிறந்த தொழிற் பெயர்கள் இவையாகும். ஒடியல் மாவைக் கொண்டு ஒடியல் பிட்டு, ஒடியல் கூழ் உணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றன. எம் முன் னோர்கள் உணவு வகைளுள் , அவர் களின் தனித்துவ மான கண்டுபிடிப்பே ஒடியல் கூழ். அவர்கள் உணவாகக் கொண்ட பல்வேறு பொருட்களின் கூட்டுணவே கூழ். பல்லின மக்களின் உணவு வகைப்போட்டி நடை பெறின் அதில் தமிழரின் தனிச்சிறப்பு வாய்ந்த உணவாக இடம்பெறக்கூடியது இந்த ஒடியல் கூழே.

தற்போது எம்மவரால் ஆண்டுக்கு இரண்டு மூன்று தடைவைகளிலோ அல்லது வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் தாயகம் வரும் வேளைகளிலோ இக் கூழ் உணவு தயாரிக்கப்படுகின்றது. இக் கட்டுரைக்கென எடுத்துள்ள நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் மருதம், நெய்தல், நிலங் களில் வாழ்ந்த எம் முன்னோரின் நாளாந்த மதிய உண்வாக இக்கூழே பெருவாழ்வு பெற்றது.

அக்கால எம்முன்னோருள் ஆண்கள் வயலுக்கோ கடற்கரைக்கோ காலைக்கடன் களை முடித்துக் கொண்டு , பெரும்பாலும் பழம் தண்ணீர் (இரவில் மிஞ்சிய சோற்றுடன் சேர்த்து வைத்த நீர் இது நீராகாரம் என்றும் பெயர் பெற்றது) சில வேளைகளில் தேநீர் அருந்திய பின் தத்தம் தொழில் காரணமாகச் செல்வர். பெண்கள் தம் மக்களைப் பாடசா லைக்குத் தயார்ப்படுத்தி அனுப்பிய பின் தொழிலுக்காகச் சென்ற கணவர்களுக்குரிய

காலை உணவு வகை கடகங்களில் வைத்துக் கொண்டு கணவர்களின் தொழிலிடங்களுக்குச் செல்வர். அங்கு அவர்களின் தொழில் சார் வேலைகளில் பங்கெடுப்பர். அதனால் நண்பகல் மரக்கறி, மீன் என்பவற்றுடன் வீடு வந்து சேர்கையில் களைத்தே காணப்படுவர்.

அந்நிலையில் வீட்டிலிருந்த முதியோர், இளம்பெண்கள் ஒடியல் மா, அம்மியில் அரைத்துக் கொண்ட செத்தல் மிளகாய் இவற்றுடன் காத்துக் கொண்டிருப்பர். இன்று கிட்டிய உறவு முறையுள்ள குடும்பங்களும் ஒவ்வொன்றும் தனித்தனிக் கிணறு தோண்டியே பயன்படுத்துகின்றனர். அன்று இக்குடும்பங்கள் ஒரே கிணற்றையே பொதுக் கிணறாகப் பயன்படுத்திக் கொண்டு அக்கிணற்றைச் சுற்றியே வாழ்ந்தன. அதனால் அக் குடும்பப் பெண்கள் ஒன்று கூடியும், பெரிய மட் பாண்டத்தில் ஒடியல் மா, மிளகாய், பயற்றங்காய், மரவள்ளிக் கிழங்கு, பலாக்கொட்டை, கறி முருங்கையிலை, முசுட்டையிலை என்பவற்றோடு சிறியளவில் அரிசியும், மச்ச உணவுண்போர், மீன் வகைகளையும் சேர்த்து கூழ் சமைத்து ஆண்கள் ஒருபுறமும், பெண்கள் மறுபுறமுமாக அமர்ந்து இக் கூழையே நாளாந்த மதிய கூட்டுணவாவும், தங்களது கூட்டுறவு உணவாகவும் உண்டு உடல் நலமுள்ளவராக வாழ்ந்தனர். அடுத்த நாள் காலை உணவுக்கான பழஞ்சோறு, கறி வகைகளுக்காக பின்மாலைப் பொழுதிலேயே சோறு, கறி ஆக்கப்பட்டன. எல்லா வீடுகளிலும் அம்மி, குழவி, உரல், உலக்கை, பிட்டுக் குழல், இடியப்பஉரல், திரிகை ஆகிய அவசிய தேவைப்பொருட்கள் நிறைந்திருந்தன.

தொண்ணூற்றுக்கும் மேலான வீதமான வீடுகள் மண்சுவர்களையும்



பனையோலைக்கூரை வேய்ப்பையும் கொண்டனவாகவே காணப்பட்டன. கூரை வேய்தலுக்கான ஓலைகளைப் பார அழுத்தத்தின் கீழ் படிய வைத்துச் சமன் செய்வதற்காக வீட்டை அடுத்திருந்த வெளியில் கரம் போடப்படும். ஓலையிலிருந்து நீக்கப் பட்ட பச்சை மட்டைகளை வட்ட வடிவில் பரப்பி அதன் மீது ஓலைகளையும் அதே வடிவின் மேல் ஒன்றின் மற்றொன்றாகப் பல அடுக்குகளில் வைக்கப்படும். ஈற்றில் மழைநீர் உள்ளே சென்று தங்கா வண்ணம் உச்சியில் முகடு கட்டி வட்ட ஓலைப்பரம்பலின் மேல் பல மட்டைகளைக் கட்டாகக் கட்டி அவற்றுடன் உரல் போன்ற பாரமான பொருட்களையும் மேலே வைத்து அழுத்தவிடும் அமைப்பே கரம் என்பட்டது. ஒரு மாதகாலம் வரை அங்ஙனம் படிய வைத்த பின் அழுத்தத்தினால் சமமான தட்டை வடிவம் பெற்ற ஓலைகளைக் கொண்டு வீடுகள் வேயப்படும். ஒவ்வொரு வீடும் வேயப்படும் நாள் ஒரு கொண்டாட்ட நாளாகும். உறவு முறை கொண்டு சுற்றுக் குடும்பங்களின் ஆண்கள் எல்லோரும் கரம் பிரித்து ஓலைகளை அடுக்குதல், வேயப்படும் வீட்டைச் சுற்றி வைத்தல், எடுத்து கூரைக்கு எறிதல் போன்ற வேலைகளில் பங்கெடுக்கப், பெண்கள் எல்லோருக்குமான கூட்டுச் சமையலில் குதூகல

மாக ஈடுபடுவர். ஆண்களை களைப்புக் காணாது வேலைகளில் உயிர்த்துடிப்புடன் பங்கு கொள்ள வைக்க உற்சாகம் ஊட்டியாம் பனங்கள் துணை நிற்கும். வரிசை வரிசை யாகவும் அடுக்கடுக்காகவும் ஓலைகளை அடுக்கி வீட்டை வேய்கையில் தொழில்நுட்ப அனுபவத் திறன் கொண்டவர். கூரைமீது நடந்தும் இருந்தும் மிக நேர்த்தியாகச் செய்து முடித்தலின் உச்சக்கட்டம் முகடு கட்டுதலாகும். பனம் மட்டையை பிளந்தெடுத்த நாரை வார்ந்தெடுத்து அவற்றைத் தொடுத்த நார் நீட்டத்தால் முகடு கட்டப்படும்.

எல்லா ஊர்களிலும் கோவில்களைத் தவிர்த்து ஓரிரு விடுகளே கல்வீடுகளாகக் காணப்பட்டன. பரந்த நிலப்பரப்புகளின் உரிமையாளர்கள் அக்கால ஆங்கில ஆட்சி யில் விதானை, உடையார், மணியகாரர் நீதி மன்றங்களின் மொழிபெயர்ப்பாளராகப் பதவி பெற்ற தொலுக்கு முதலியார் அரிதாகக் காணப்பட்ட சட்டத்தரணிகள், ஆவண உறுதிகள் எழுதும் கிளாக்கர்மார், ஆசிரியர்கள் போன்றோருள் ஊருக்குள் ஒரு சிலரே இருந்தனர். உலோகப் பணப் புழக்கம் (பழக்கம்) அவர்களிடமே காணப்பட்டது. ஒன் றரைச் சதம் ஒரு துட்டு எனவும் ஆறு சதங்கள் ஒரு பணம், பத்து ரூபா ஒரு பவுண் எனவும் பேச்சு வழக்கில் இடம் பெற்றன. ஒரு சவரன் தங்கம் பத்து ரூபாப் பெறுமானம் கொண் டிருந்ததால் பத்து ரூபா ஒரு பவுண் எனப் பெயரைத் தாங்கியது. பொதுமக்களின் கொடுக்கல் வாங்கல்களில் பண்டமாறே பெருமளவில் நடைபெற்றது.

கல்வீடுகள் , ஒழுங்குற வடிவமைக் கப் பட்ட முருகைக் கற்களாலே கட்டப்பட்டன. கடற்கரை ஓரமாயுள்ள மணற்பாங்கான நிலத்தைக் கிண்டிக்கிளறி எடுத்த முருகைக் கற்களை அகலமான அலகைக் கொண்ட வெட்டுக்கருவிகள் கொண்டு கழிக்க வேண்டி யவற்றை நீக்கியபின் சதுர நீள்சதுரக் கன வடிவுள்ள கற்களாக்கி வீடு கட்டுவோருக்கு விற்கப் பட்டன. இன்றும் இப்படித் தோண்டப் பட்ட கிடங்குகள், குழிகள் மாதகல் துறைக் கரையிலிருந்து இளவாலைத்துறைக் கரை வரையுள்ள கடற்கரைப் பிரதேசங்களில் காணப்படுகின்றன.

கட்டு வேலைக்குத் தேவைப்பட்ட சுண்ணச்சாந்து சூளை அமைத்துப் பெறப் பட்டது. வீடு கட்டப்படும் இடத்துக்கு அண்மை யிலுள்ள வெளி சூளை அமைத்தற்காகத் தெரிவு செய்யப்படும். துண்டு துண்டாக்கப் பட்ட முருகைக் கற்கள் தேவைகேற்ற அளவில் மாட்டு வண்டி மூலம் சூளை அமைக் குமிடத்திற்குக் கொண்டு வந்து குவிக்கப்படும். யாழ்.குடாநாட்டு மரங்களுள் புளியமரம் மிக்க வைரமுடையது. முதலில் புளியமரம் தேடித் தறிக்கப்பட்டு சூளைக்கேற்ற அளவில் துண்டு களாக்கப்படும். நடுவே வட்டக் குழியொன்று அமையக் கூடியதாக இப் புளிய மரத்துண்டு கள் வட்ட வடிவில் அடுக்கப்படும். அவற்றின் மீது முருகைக் கற்களும் அவற்றின் மேல் புளியமரத் துண்டுகளுமாய் வேண்டிய அளவுக்கு இவ்வடுக்குகள் இடம் பெறும். ஈற்றில் வட்ட அமைப்பின் நடுக்குழிப் பகுதி யில் நின்றெரியத்தக்கதாகத் தீ மூட்டப்பட்டு இத் தீ அடுக்கடுக்காக வைக்கப்பட்ட புளிய மரத் துண்டுகள் கொண்ட அடுக்குகளில் பற்றி பல நாட்களுக்கு எரிவதால் கற்கள் அவ்வெப் பத்தில் வெண் பொடிகளாக மாறும். அப்பருவம் கண்டதும் வாளி வாளியாகத் தண்ணீர்

அவற்றின் மேல் கொட்டப்படும். சுண்ணக்கல் வெண்பொடி சுண்ணக் களியாகும். இச் சுண்ணக் களியே கட்டுச் சாந்தாகும்.

கோவில்கள் தவிர்ந்த ஏனைய வீடுகளுள் ஒன்றோ இரண்டோ தான் கல்வீடு களாகக் காணப்பட்டன. பெரும்பணம் படைத் தவர்களே விசாலமான நாற்சதுர வீடுகளைக் கட்டுவர். நாற்சதுர வீடுகள் என்பது திரிபு பட்டு நாற்சார வீடுகளாகின. அக்கம்பக்கமாக வாழ்ந்த குடும்பங்களோடு தொடர்பு கொள்ள வேலிகளில் பொட்டு, கடப்பு வைக்கப்பட்டன. பிரித்துள்ள வேலியின் இரு கதிகால்களி டையே மேலே மறைவாகவும், கீழே வெளி யாகவும் விடப்படுவது பொட்டு. இரு கதிகால் களுக்குக் கீழே மறைத்தடைத்து மேலே வெளியாக விடப்படுவது கடப்பு. பொட்டு வெளி யில் குனிந்து போய் வரவேண்டும். கடப்பு வெளியால் கடந்து போய் வரல் வேண்டும். ஒவ்வோர் ஊரிலும் மக்களின் வாழ்க்கைக்குத் தேவையானவற்றுள் ஒவ்வொன்றையும் மேற்கொண்டோர் வெவ்வேறான இடங்களில் வாழ்ந்தனர். ஒரு தொழிலை மேற்கொண் டோர் மற்றொரு தொழிலை மேற் கொண்டிருந் தோரது வாழ்விடத்தை கடவை என்றனர். இத் தொழிற்கடவைகள் காலப்போக்கில் சாதிக் கடவைகள் ஆகின.

இன்று இப்பிரதேசத்தில் பரந்த பரப்பளவில் காணப்படும் வயல் நிலங்கள் முன்னர் குறைந்த அளவிலேயே இருந்தன. மழைகால வெள்ளப் பாய்ச்சலில் பள்ளங்களே பின்னர் குளங்களாயின. அவற்றைச் சுற்றியிருந்த நிலங்களிலேயே நெற்பயிர்ச் செய்கை தொடங்கியது. பின்னர் அந் நிலங்களை அண்மித்த நிலங்களிலும் ஆண்டு தோறும் மண் அகன்றெடுக்கப்பட்டுப் பள்ளமாக்கி வயல்கள் விரிவிக்கப்பட்டன. மாதகல் வயல் நிலங்களில் காணப்படும் விழிப்புரக்குளம், பாணவெட்டிக்குளம், இளவாலையைச் சார்ந்துள்ள வயல்களில் காணப்படும் பந்தவனைக்குளம், மட்டி வளைக்குளம் என்பவற்றைச் சுற்றியிருக்கும் வயல்நிலப்பரப்புகள் இங்ஙனம் விரிவு பெற்றவையே.

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, பெரியவிளான், இளவாலையெனும் ஊர்க ளில் உள்ள வயல்கள் அமைந்துள்ள நில அமைப்பு தெற்கிலிருந்து வடக்கு நோக்கிய சரிவைக் கொண்டுள்ளது. இதனாற்றான் இவ்வூர்களிலுள்ள குளங்கள் நிரப்பப்பட்டு வயல்களில் கொள்ளளவு நீரையும் மிஞ்சிய வெள்ளம் வடக்கு நோக்கி வெள்ள வாய்க்காலி னூடாக ஓடிக் கடலோடு கலந்தது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச ஊர்களுள் பாக்குநீரிணைக் கடலை வடக்கெல் லையாகக் கொண்டவை மாதகல், இள வாலை இரண்டுமேயெனலாம். இக்கார ணத்தால் இவ்விரு ஊர்களினூடாகவே வெள்ளவாய்க்கால்கள் சென்றன. தற்போது இவை வெள்ளவாய்க்காலின் தோற்றத்தை இழந்து காணப்படுகின்றன. இவ் வெள்ள வாய்க்கால்களின் பக்கங்களில் குடிமனை களையமைத்தோர் அவற்றை நடைபாதை யாக்க வசதியாக உயர்த்தி ஒழுங்கைகளாக் கியதோடு சிலவற்றைத் தார் ஒழுங்கைகளு மாக்கி விட்டனர். வயல் வெளிகளினூடாகச் சென்ற வாய்க்கால்கள் அவற்றின் பக்கமுள்ள வயல்நிலச் சொந்தக்காரரின் ஆக்கிரமிப்புக் குள்ளாகி வயல் நிலங்களாகி விட்டன. கடற்

கரையோரமாக காரைநகர், திருவடி நிலை, மாதகல், உசுமன் துறை, கப்பலடித் துறை, இளவாலைத்துறை, சேந்தாங்குளம் (சேந்தன்களம்), கீரிமலை எனும் பகுதி களைத் தொட்டுச்செல்லும் வீதி ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டது. அப் பாதையில் உள்ள உசுமன் துறை, கப்பலடித் துறை, இளவாலைத்துறை எனுமிடங்களில் அமைக்கப்பட்டு தற்போது பழுதடைந்துள்ள நிலையிலும், அழிவுற்ற நிலையிலும் காணப் படும் மதகுகள் வெள்ள வாய்க்கால்கள் கொண்டு வரும் மழைநீர் கடலோடு கலப்பதற் காகவே அமைக்கப் பட்டன.

இக்கடல் துறைகளைப்பற்றி இன் னொன்றையும் குறிப்பிடுவது பொருத்தமா கும். அக்கால கட்டத்தில் இலங்கை, இந்தியா, பர்மா(தற்போதயை மியன்மார்), மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் ஆங்கிலேயரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இக்காரணத்தால் இந்நாடுகளுக்கிடையே கடல்வழிப் பயண மும், வர்த்தகமும் தடையற்றிருந்தன. மாதகல் தொடக்கம் சேந்தான்குளம் வரை யான கடலில் முருகைக்கற்கள் அற்றதாய் கரை வரை கப்பல்கள் செல்வதற்குரிய கடல்வழி வெள்ளை எனப்பெயர் பெற்றது. அவ் வெள்ளைகளைக் கொண்டிருந்த கடல் வழிகளே போக்குவரவுத் துறைகளுமாயின. மாதகல்துறை, உசுமன்துறை, கப்பலடித் துறை (கடல் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த பெரிய புகைக்கப்பல் ஒன்று இக்கடல்பகுதியில் தரை தட்டி நின்றதால் இப்பெயர் பெற்றது) இளவாலைத்துறை, சேந்தன் கரைத்துறை , என்பவற்றில் இலங்கை, இந்தியா இரு நாடுகளிலும் வாழ்ந்த பெரும் பணக்காரரின் வாணிப வர்த்தகம் நடைபெற்றது.

வீடுவேயப் பயன்படும் ஓடு, துணி வகைகள், அரிசி, பருப்பு, பருத்தி நூல், தேக்கு மரத்துண்டுகள், வண்டியிழுக்கும் பெரிய வடக்கன் எருதுகள், கேரளாவிலிருந்து பெரிய பலாமரங்களைக் குடைந்து செய்யப் பட்ட வள்ளங்கள் என்பன மேற் குறிப்பிட்ட துறைமுகங்களினூடாகக் கொண்டு வரப்பட்டு விற்பனையாகின.

போகம் எனும் சொல் பாலியற் சிற்றின்பத்தை மட்டுமே பொருள் கொண்ட தன்று. பாக்கியம், செல்வம், விளைவு எனும் பொருட்களையும் கொண்டுள்ளது. விவசாய மக்களின் வாயில் பெரும்போகம், சிறுபோகம் எனும் சொற்றொடர்கள் தாராளமாக இடம் பெறுகின்றன. மாரிமழை வெள்ளத்தை மட்டுமே நம்பி மேற் கொள்ளப்படும் ஐந்தாறு மாத நெற்செய்கை பெரும்போகம். குளம், கிணறு போன்ற நீர்நிலைகளிலிருந்து பெறப் படும் நீர்ப்பாசனத்தின் மூலம் செய்யப்படும் குறுகிய கால நெற்செய்கை சிறுபோகம். எம் பிரதேச வயல்களுட் சிலவற்றில் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. பெரும் போக அறுவ டையின் பின் நிலங்களைச் சோம்பியிருக்க விடாது அவற்றில் சாமை, குரக்கன், வரகு, பயறு, மரவள்ளி, மிளகாய், காய்கறி வகைக கள் போன்றனவற்றைச் செய்கை பண்ணவே இக் கிணறுகள் தோண்டப்பட்டன. தற்போது இந்நிலங்களில் வெங்காயம், புகையிலை, கொடி முந்திரிகை எனப் பயிரிடப்படுகின்றன. முன்னர் இந்நிலங்களில் பயறு அல்லது சணல் இரண்டுமே செய்கை பண்ணப்பட்டன. இவற்றிலே சணலே பணப்பயிரின் இடத் தைப் பெற்றிருந்தது. சணல் தண்டுகள் காய்ந்து அவற்றிலிருக்கும் விதைகளைக் கொண்ட காய்கள் கலகலக்கத் தொடங்கியதும்

விதைகளையெடுத்து அடுத்த செய்கைக்கு வைத்துக் கொண்டு காய்ந்து உறுதி பெற்ற தண்டுகளை வெட்டி கட்டுகளாக்கி விற்பனை செய்தனர். கடலோடு தொடர்புடைய மக்கள் அக்கட்டுக்களை வாங்கி மாட்டு வண்டிகளில் ஏற்றித் தத்தம் வீட்டிடங்களுக்குக் கொண்டு சென்று உள்ளீடற்ற சோத்திகளை நீக்கி நல்ல கம்புகளைச் சிறுசிறு கட்டுகளாகக் கட்டி இறுபதிருபது கொண்டனவாகச் சேர்த்துக் கட்டிக் கடல் நீரில் வைத்து கற்களால் மூடி விடுவர். ஒரு வார காலத்திற்கு மேல் கடல் நீரில் ஊறவைத்த அக்கம்புப் புதையலிலி ருக்கும் சணற்கம்புகளின் மேற்படை சிதைந்து கழன்று போகும். ஒவ்வொரு கற்றையாக எடுத்து கடல்நீரில் அடித்துக் கழுவக் கம்பின் உட்படையான நார்ப்பஞ்சு தெரியும் அதனைக் கம்புகளினின்று மேற் பக்கமாகக் கைவிரல்களால் ஒதுக்கிச் சேர்த்த பின் கரைத்தரையில் கூம்பு வடிவில் முழுக்கற்றை நார்ப்பஞ்சையும் காய விடுவர். காய்ந்த பின் தடிகளிலிருந்து பஞ்சை மட்டும் எடுத்து அவற்றினுள் இருக்கும் சிறு தடித் துண்டுகளையும் முற்று முழுதாக நீக்கிய பின் சுத்தமான சணல் நார்க்கற்றை பெறப்படும். பின்னர் ஒவ்வொரு நார்க்கற்றைப் பஞ்சை யும், கயிற்றில் கட்டித் தொங்கவிடப்படும். குடும்பப் பெண்கள் ஓர் இருக்கையில் அமர்ந்த வண்ணம் ஒரு கை விரல்களில் சிறுதளவாக நார்ப்பஞ்சை இழுத்தெடுத்து வடிகல் எனும் கருவியை மறுகையில் மேற்காலில் வைத்து உருட்டி நூலாக நூற்பர். இச்சணல் நூல் வடிகல்லில் பல சுற்றுகளாகச் சேர்க்கப்பட்ட பின் மேல் அகன்று கீழ் ஒடுங்கிய நூற்பந்தா க்கப்படும்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பருத்திப் பஞ்சு நூற் கழிவுகளி லிருந்து பெறப்பட்ட நூலிழைகளைக் கூட்டித் திரித்தெடுத்த பழுதைகளாலும் மீன்பிடி வலைகள் பின்னப்படும். பழுதை என்பது உறுதியான கயிறு என்ற பொருள்படும் ஒரு தூய தமிழ்ச்சொல்.

இந்நூல் வகைகளைக் கொண்டு கடற்றொழிலில் ஈடுபடும் ஆண்கள் படுப்பு வலை, வெள்ளை வலை, வீச்சு வலை, கூடை வலை, முரல் வலை, பறவை வலை, வழிச் சல் வலை, சணல் வலை, தொடுத் தாண்டு வலை, தூண்டில் வலை எனப் பல்வேறு வகை மீன்களைப் பிடிப்பதற்கான வலைக ளைப்பின்னிப் பயன்படுத்தினர். ஒவ்வொரு வகை வலைகளையும் பல மாத உழைப்பின் பின்னரே முழுமைப்படுத்தி அவர்களால் பெற முடிந்தது.


இன்று கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோருக்கு இவ்வலைகளின் பெயர் களோ அவை எங்ஙனம் பெறப்பட்டன என்ற விபரங்களோ தெரியாது. ஆங்கிலேயரா லேயே Catamaran என்று கவர்ந்தெடுக்கப் பட்ட கட்டு மரத்தின் இடத்தை கண்ணாடி இழைப்படகு பிடித்து விட்டது. வலிக்கும் துடுப்பு, காற்றின் உதவியால் ஓட வைக்கும் கூரைப்பாய் என்பவற்றை விசை இயந்திரம் தூக்கி வீசி விட்டது. திருவள்ளுவராம் பேரறிஞரே போற்றி எழுதிய ஏர் என்ற பேர் கொண்ட கலப்பையை உழவு இயந்திரங்கள் உதைத்துத் தள்ளி விட்டன. வாய்நீர் சிந்தி ஏரை இழுத்து உழுத எருதுகள் இன்று மாட்டுப் பொங்கலால் மட்டுமே மறக்கப்படாதி ருக்கும் சூழ்நிலையில் தொழுவத்தில் துயர டைகின்றன.



மானிப்பாய் இடிகுண்டு



காக்கைதீவு வயற்கரை



சம்பில்துறை கடற்கரை



ஆவுரஞ்சிக் கல், ஆனைக்கோட்டை.

வயல்களில் துலா நீரிறைப்புக்காக நாட்டப்பட்டுப் பசுந்தழையும் மஞ்சள் பூவுடன் கூட்டிய மாங்களக் கோலமுமாகக் காணப்பட்ட ஆடுகால் பூவரச மரங்கள் , ஏலவே, பட்டை, பட்டைக்கல், துலாக்கொடி மேலிழுப்பில் துணை நின்ற துளைக்கண்கற்கள் எல்லாம் இழந்து மூளியாய்ப் போயின துலாக்கள். போர்க்கால இடப்பெயர்வில் தப்பிப் பிழைத் தோரால் இவை வெட்டி வீழ்த்தி அழிக்கப்பட்டு விட்டன. நாளாந்தம் பல தடவைகள் இறைப்புக்காக சுத்தநீரைச் சுரந்தளித்த கிணறுகள் கட்டுடைந்து, களையிழந்து பற்றை மூடி, பாம்புகள் உறையும் புற்றுகள் சூழ பாழ்ங்கிணறுகள் என்ற பழிச்சொல் தாங்கியுள்ளன. கழுத்து மணிகள் குலுங்கத் தலையசைத்த வண்ணம் கம்பீரமான எருது களால் இழுக்கப்பட்ட மாட்டு வண்டிகள் உருண் டோடிய பாதைகள், ஓட்டோவும், ஸ்கூட்டரும் ஒன்றையொன்று விஞ்சிய வேகத்திலும் ஒலி யெழுப்புதலிலும் அச்சுறுத்தி ஓடும் வீதிகளாகி விட்டன.

முழுவெள்ளை வேட்டி கட்டிய ஆண்களையோ, இளைஞர்களையோ காண்பதற்கு மூன்றாம்பிறை காணத் தவமிருப்பது போலாகி விட்டது. அன்று வீட்டை விட்டு வெளியில் தலை காட்ட விடாத நாணத்துடனும், தடுப்புடனும் காணப்பட்ட கன்னிப்பெண்கள் சுடிதார் சால்வையுடன் பெற்றோல் எரிவிசை ஸ்கூட்டரில் சுதந்திர மாய் பணிகளுக்குச் சென்றுவரும் காட்சி காணக் காலம் கனிந்துள்ளது.

காலம் மாறினால் கோலம் மாறுமா? உலகின் ஒவ்வொரு உள்வீட்டுக்குள்ளும் புகுந்து விட்ட அறிவியல் இயற்கைக்குச் சவால் விட்டு ஆட்டிப்படைக்கின்றது. அறிவியல் தனது அதி உத்தம புத்திரனாகப் பெற்றெடுத்த அபூர்வ மந்திரவாதியான லெக்ரொன் இயற்கையை இளிச்சவாயனாகக் காட்டி அவமானப்படுத்த கங்கணம் கட்டுகிறது. ஊடகங்களோ உலகின் மூலை முடக்கெங்கும் அதற்கு உடந்தையாகக் காதடைக்க ஒலி பரப்புகின்றன. இதனால் எம்மின முன்னோ ரால் எமக்குத் தரப்பட்ட வாழ்க்கையின் கோலத்தின் கோடுகளும் பல்லின மக்களின் வாழ்க்கைக் கோலக் கோடுகளின் கலப்புக்குத் தப்ப முடியாதென்பது உண்மைதான்.

வெவ்வேறு இனக்கோலங்களின் தாக்கத்தைத் தாங்கிக் கொண்டும், எதிர்த்து நின்றும் பல நூற்றாண்டுகளாகக் காத்தளிக்கப் பட்ட வாழ்க்கைக் கோலத்தின் கோடுகளில் சில மாற்றங்களை ஏற்றுக் கொண்ட நிலைக்கு ஆளானபோதும் அதன் சிறப்பு வாய்ந்த அடிப்படையிலான வடிவத்தைப் பாதுகாத்து அடுத்து வரும் தலைமுறைகளுக்கும் அளிக் கும் பொறுப்பு வாய்ந்த கடமை எம்முன் னேயுள்ளது.

# சமயமும் பண்பாடும்

# இந்துப் பண்பாடு

**ப.கணேசலிங்கம்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## "இந்து" என்ற சொல்

உலகில் இன்று காணப்படுகின்ற சமயங்களுள் மிகவும் தொன்மை வாய்ந்த தாகக் கொள்ளப்படுவது இந்து சமயமாகும். இங்கு - இந்து, இந்துசமயம், சனாதனதர்மம், வைதீகதர்மம், தர்மம் பற்றி விளக்கம் மற்றும் இந்து சமயம் பரந்தவிதம் ஆகிய அம்சங்கள் பற்றி ஆராயப்படுகின்றன. "இந்து" என்ற சொல் "சிந்து" என்பதிலிருந்து பிறந்தது. பாரதத்தின் வடமேற்குப் பகுதியில் பாயும் நதியை "சிந்து" என்பர். தோற்றக்காலத்திலே "இந்து" என்னும் சொல் நிலப்பரப்புக்கு அந்நியரால் வழங்கப்பெற்ற பெயராம். சிந்துநதி பாயும் நிலப்பரப்பே இப்பெயரால் சூட்டப்பட்டிருக்கின்றது. மக்களுக்கோ அல்லது மதத்திற்கோ அச்சொற் பொருள் விரிவு பெற்றது பின்பாகும். சிந்துப் பிரதேச மக்களையும் அவர்களுடைய மதத்தையும் உள்ளடக்கி இந்தியநாடு முழுவதனையும் சுட்டுவதாக விரிவு பெற்றது. அதனிலும் பின்பாகும். பரதன் என்ற பண்டைய மன்னன் பெயரால் பாரதம் என்றும் சிந்து நதியாகிய இந்துவின் பெயரால் இந்தியா என்றும் (இப்பெயர் கிரேக்கரால் வழங்கப்பட்டதென்பர்) குறிக்கப் படும் இந்நாட்டிலே நிலவிய சமயத்தை "இந்து சமயம்" எனப்பாரசீகர் அழைத்தனர். சிந்துவெளி நாகரீகத்தினை இந்துவெளி நாகரீகம் என அழைத்தனர். "இந்து" எனும் பதமானது சிந்து நதிக்கரையில் வாழ்ந்த இந்துக்களைக் (சிந்து, ஹிந்து) குறித்த வகையில் இந்திய மக்களைக் குறித்த பொதுப் பெயராக விளங்கிற்று.

இந்து என இம்மதத்திற்கு வழங்கும் பெயர் இந்திய மொழிகளில் சமயம் பற்றி உருவான மூல நூல்களெதிலும் காணப்படு வதில்லை. "ஹிந்து" என மேனாட்டவர் வழங்கிய பெயர் மருவி, இந்து என வழங்கத் தொடங்கியது. இந்துமதத்தின் தொன்மை யைக் கருத்திற் கொண்டு பார்க்கும் பொழுது, சமீப, காலத்திலேயே இதற்கு இப்பெயர் வழங்கத் தொடங்கியது என்பதை உணருகி றோம். "இந்து" என்ற சொல் காலப்போக்கில், பாரநாடு முழுவதுக்கும் உரிய சமய, பண்பாட்டு நெறியினைக் குறிக்கும் பொதுச் சொல்லாக அது வழங்கி வருகின்றது.

"HINDUISM" எனும் பதத்திலிருந்து இந்து சமயம் என்ற பெயர் வந்ததாகும். சிந்து எனும் பதம் பாரசீகம், கிரேக்கம் முதலிய மொழிகளிலே மாற்றமடைந்து ஆங்கிலத்திலே ஹிந்து (HINDU) எனவும், அது நிலவிய நாட்டினை இந்தியா எனவும் வழங்கப்படலாயின குறிப்பாக, வேதங்களை அடிப்படையாகக் கொண்ட இந்துசமயப் பிரிவுகள் யாவும் "ஹிந்டுயிஷம்" என அழைக்கப்படலாயின. ஆனால் பரந்த கருத்திலே இந்தியாவிலே நிலவுகின்ற எல்லாச் சமயங்களையும் குறிக்கும். இந்தியாவின் பழைய பெயர் பாரதவர்ஷம். காலப் போக்கில் ஆரியர்களுடைய அதாவது இந்தியர்களுடைய சனாதன தர்மம் என்னும் வேதமதம் "ஹிந்துசமயம்" என அழைக்கப்பட்டு வந்தது எனக் கருத இடமுண்டு.

பாரதம் முழுவதும் பயிலும் இந்து மதத்தின் அமைப்பினைச் சமய ரீதியாகவும், தத்துவ ரீதியாகவும், கலையம்சம் மிகுந்த பண்பாட்டு ரீதியாகவும் நோக்குமிடத்து எல்லா மதங்களையும் தன்னுடைய பிரிவுகளாக உள்ளடக்கியும் எல்லாத் தத்துவ சிந்தனைகள் பற்றிய சர்ச்சை நிகழ்ந்த பேரரங்காக விளங்கியும் எல்லாக் கலையம்சங்களையும் பண்பாட்டம்சங்களையும் பேணியும், பெருஞ் சிறப்புப் பெற்று விளங்கும் தென்னாட்டுச் சைவத்தின் மறுவடிவமாகத் தெரிகின்றது.

உலகில் காணப்படுகின்ற ஏனைய சமயங்கள் யாவும் இன்னகாலத்தில் இன்னாரால் தோற்றுவிக்கப்பட்டன என்று வரலாற்று நூல்களிலிருந்து அறிய முடிகின்றது. இந்து சமயம் தோன்றிய காலத்தையோ தோற்றுவித்தவரையோ அறுதியிட்டுக் கூற இயலாத நிலையில், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டு, மிக்க பழமை வாய்ந்ததாக அது விளங்குகின்றது. பாரதத்தினுள் ஆரியர் வருகை கி.மு. 1500 அளவில் தொடங்கியது என்றும் இந்து வெளிநாகரீகம் அதற்கு முற்பட்ட காலத்தில் இடம்பெற்று விளங்கியது என்றும் அதன் காலம் 2400 முதல் இருந்திருக்கலாம் என்றும் ஆராய்ச்சிகள் புலப்படுத்தியுள்ளன. கி.மு. 1500 முதல் கி.மு. 500 வரை வேதகாலம் என்றும் அதற்கு முற்பட்ட காலத்தைச் சிந்து வெளிநாகரீகக் காலம் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் வரையறுத்துள்ளார்கள். இந்து வெளிக் காலத்திலேயே இந்துசமயம் இருந்துள்ளது என்பதற்கு மொகஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வாராய்ச்சிகள் சான்று பகர்கின்றன.

வேதங்கள் இந்துசமயத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. அவற்றின் மேலான உரிமையை, இந்துசமயம் ஒப்புக் கொள்கின்ற போதிலும் இறுக்கமான நெகிழ்ச்சியற்ற, குருட்டுத்தன்மையோடியைந்த நம்பிக்கைகளையும், வரட்டுக் கோட்பாடுகளையும் உள்ளடக்கிய சமயமாக அது இருந்திருக்கவில்லை. அவ்வாறிருப்பின் என்றுமுள்ள சமயமாக இந்துசமயம் விளங்க முடியாது. பழங்கொள்கைகள், பகுத்தறிவுக் கொள்கை வாத மூடநம்பிக்கைகள், மாற்றங்களுக்கு நெகிழ்ந்து கொடுக்காத கோட்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய குறுக்கு வட்டத்திற்குள் செயற்படும் சமயமாக அது இருக்கவில்லை.

**"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்**
**பழம் பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்**
**அப்பெற்றியனே"**

என இறைவனைப் போற்றுவது சைவமரபு, இந்துசமயமும், அது போற்றும் முழு முதற் கடவுளைப் போன்றே தொன்மையும் என்று முள்ள நித்தியமான தன்மைகளையும் கொண்டு விளங்குகின்றது. அது எப்பொழு தும் புடைபரந்து தழைத்தும், ஓங்கியும் வளர்வதுடன், மறுமலர்ச்சியின் ஊற்றாகவும் திகழ்கின்றது. பழைமையின் வழியே புதுமையையும் புதியன மூலம் பழமை யையும் காணக்கூடியதாக இந்து சமயம் அமைகின்றது.

இந்துசமயம், ஒரு வாழ்வியல்நெறி, மக்களை வையகத்தில் வாழ்வாங்கு வாழவைப்பதே இதன் நோக்கமாகும். அவ்வாறு வாழ்வதன் மூலம், விடுதலை பெற்று உயர்வான தெய்வீக நிலையைப் பெறுதலே இதன் பயன். இவற்றைக் கூட்டி வைக்கும் ஒப்புயர்வற்ற சக்தியாக இறை எனும் உள்பொருள் விளங்குகின்றது. வாழ்க்கை நெறியாக விளங்கும் அதே வேளை, மிக உயர்ந்த நிலையில், வளர்ச்சி பெற்று, ஒழுங்குமுறையில் அமைந்த சமயமா கவும் இந்துசமயம் விளங்குகின்றது.

பரதத்தின் அறுவகைச் சமயங்களை யும், அவற்றின் உட்பிரிவுகளையும் ஒன்று சேர்த்துத் தொகுத்துப் பொதுவாகக் குறிப்பிடுவ தற்குரிய ஒரு தொகுதிப் பெயராக "இந்து சமயம்" எனும் சொல் பெருவழக்கிலிருந்து வருகின்றது. மேலும், உலகின் எல்லாச் சமயங்களிலுமுள்ள சிறந்த கொள்கைகளைத் தன்பால் அடக்கியுள்ள நிலையில் இந்துசமயம் மிளிர்கின்றது. சமயங்கள் அனைத்தும் தன்பால் அடங்குதலின் அவையாகவும், அதே வேளை அச்சமயங்களில் தான் அடங்காமை யால், அவை அல்ல ஆகியும் விளங்குவது இந்துசமயமாகும்.

இந்துசமயத்துக்கு பழைய பெயர் சநாதன தர்மம். "**சநாதன**" எனில் "**மிகப் பழைய**", "**என்றுமுள்ள**" எனப் பொருள்படும். வேதங்களிலே வரும் பிரதான சொற்களின் வரலாற்றினை ஆய்ந்து கூறும் நிருக்த ஆசிரி யரான யாஸ்கர் என்பவர் "**சநாதன்**" எனில், என்றும் புதுமை வாய்ந்தது என்பர். எனவே இந்து சமயம் என்றும் புதுமையுடனும் புதுப்பொலிவுடனும் விளங்கும் மதம் என்பதில் ஐயமில்லை. பாரதநாட்டில் இந்து சமயத்திற்கு வழங்கப்பட்ட பழைய பெயர்கள் "**சனாதன தர்மம்**" "**வைதீக தருமம்**" என்பன வாகும். "**சனாதன தருமம்**" என்பதற்கு உரிய பொருள் "**என்றுமுள்ள சமயம்**" என்பதே "**வைதீக தருமம்**" என்பதற்கு "**வேதங்களின் சமயம்**" என்பது பொருளாகும். இந்து சமயத் தின் அடித்தளம் தருமம். இதனால் "**சனாதன தருமம்**" அதன் அநாதியான பெயராக இருந்தது.

தருமம் என்பது நல்லொழுக்கக் கோவை எனலாம். தருமத்தின் அடித்தளத்தில் ஆற்றப்படும் கருமங்கள் யாவர்க்கும் நன்மை யளிப்பன: அதே வேளை எவர்க்கும் தீங்கு பயவாதன. மனத்தால் சிந்திப்பதும், சொல் லால் வெளிப்படுத்துவதும், மெய்யினால் செயற்படுத்துவதும், தருமத்தின் அடிப்படை யில் நிகழ வேண்டுமென்று கொள்வது இந்து தருமம். எவனொருவன் இம்முறையில் ஒழுகத் தொடங்குகின்றானோ, அவனுக்கு அக் கணமே சமய வாழ்வு தொடங்குகின்றது. அவன் சமயி ஆகின்றான். தருமத்தைச் சனாதனதருமம், யுகதருமம், என வகைப்

படுத்துகின்றனர். இவற்றுள் சனாதன தருமம் என்றும் உள்ளது. மாறாத தன்மையை உடையது. எனவே இது சுருதியைக் குறிப்பிடு கின்றது. யுக தருமம் மாறுந்தன்மையுள்ளது. ஒரு குறிப்பிட்ட காலப் பிரிவுக்கு மாத்திரம் ஏற்புடையதாகவுள்ளது. ஸ்மிருதிகள் இதனுள் அடங்குகின்றன. இந்துசமயம், இந்துநதிப் பள்ளத் தாக்கில் வாழ்ந்த மக்களின் சமயமாகத் தோன்றி இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் புடைபரந்து, வேரூன்றித் தழைத்து அத்தோடு நில்லாமல் அயலில் தென் கிழக்காசிய நாடுகளிலும் மேற்காசிய நாடுகளிலும் பல்கிப் பெருகி அவ்வாறு புடைபரந்து தழைத்து நின்ற அளவிற்கு ஒப்ப ஓங்கியும் உயர்ந்தும் செழுமை பெற்றும் திகழ்ந்து இன்று உலகளாவிய இனிய இயல்புடன் திகழ்கின்றது. சிந்துநதிப் பள்ளத்தாக்குப் பிரதேசம் உலக நாகரீக வளர்ச்சியில் தொன்மைக்குரியதொன்று என்பது வரலாற்று அறிஞர் பெரும்பாலானோரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். இப்பெயர் முழு இந்தியாவையும் சுட்டி நின்றதுமுண்டு.

வரலாற்று ரீதியிலே நோக்கும் போது இந்துசமய ஊற்றுக்கள் இந்தியாவின் பழைய கற்கால, புதிய கற்கால நாகரீகங்களிலும், அவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட இரும்புக் காலத்திலும் உருவாகியவை குறிப்பாகச் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்துசமவெளி நாகரீகமும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வேதகால நாகரீகமும் குறிப்பிடத்தக்கன.

இந்துசமயம் என்ற சொல் வழக்கு நவீன காலத்தில் ஏற்பட்ட ஒன்றாகும். அது பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் வழங்கிய இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியவற்றைச் சாராத சமய நெறிகள் அனைத்தையும் பொதுமையிற் குறிப்பதாகும். ஆயினும் வேதங்களை ஆதாரமாகக் கொண்ட சமயங்களே இந்துசமயம் என்று பேசப்படுகின்றன. சைவம், வைணவம், சாக்தம் ஆகியன இதில் அடங்கும். முற்காலங்களிலே வைதீகமான அறுவகைச் சமயங்களையும் "ஷண்மதங்கள்" என்று சம்பிரதாய பூர்வமாகச் சொல்வர். இன்றைய சூழ்நிலையில் சண்மதங்களைப் பற்றிய பேச்சு பொருத்தமற்றதாகும். காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன தனியான சமயங்களாக இந்நாட்களில் வழங்கவில்லை. அவற்றிற்குரிய அம்சங்கள் சைவம், வைணவம், சாக்தம் ஆகியவற்றோடு சங்கமமாகிவிட்டன. முன்னொரு காலத்தில் சைவ சமயமானது பரதகண்டம் அனைத்திலும் பரவிப் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது.

**பண்பாடு பற்றிய கருத்துக்கள்**

பண்பாடு என்றால் என்ன? என்பது பற்றியும் அதனுள் அடங்கும் பல்வேறு அம்சங்கள் பற்றியும் விரிவாக ஆராய்வது இன்றியமையாதது. "CULTURE" என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சமமாகப் "பண்பாடு" என்ற தமிழ்ச் சொல் வழங்கப்பட்டு வருகின்றது. இச்சொல்லுக்குரிய தமிழ் பதத்தினை ஆக்கியளித்தவர் இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார், எஸ். வையாபுரிப்பிள்ளை இதற்குத் தரும் விளக்கம் பின்வருமாறு:-

"கல்ச்சர்" என்பது ஆங்கிலத்தில் இரண்டு பொருட்களில் வழங்கப்படுகின்றது. ஒன்று **தொன் மக்களின்** நூலில் (ANTHRO-

POLOGY) வருவது. மக்களின் ஆதி வரலாற்றில் ஒவ்வொரு காலத்திலும் அவர்கள் இயற்றிக் கொண்ட கருவிகள் முதலியனவும் அவர்கள் வாழ்ந்த சமுதாயத்தினது பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியனவும் வெளிப்படுத்தும் அறிவுநிலையே என இவ் வகை நூல்கள் பெயரிட்டு ஆளுகின்றன. "கல்ச்சர்" என்பதனைப் பிறிதொரு பொருளி லும் ஆங்கிலத்தில் வழங்குகின்றார்கள். இது ஒரு பொதுப் பொருள். மக்களது அறிவு நலம், கருத்துநலம், குணநலம், கொள்கைநலம், ஒழுக்கநலன் முதலியன மேன்மேலும் திருந்திய நிலையே இங்கு குறிப்பிட்ட பொருள். இது விஞ்ஞானத்தில் வழங்கும் பொருளன்று. ஆனால் மாத்யு ஆர்ணால்டு முதலிய இலக்கிய பேராசிரியர்கள் சிலர் இப்பொருளை உற்பத்தி செய்துவிட்டனர். இப்பொருளி லேயே தமிழறிஞர்கள் இச் சொல்லையும் இதன் மொழிபெயர்ப்பாகிய பண்பாடு என்ற சொல்லையும் வழங்கி வருகிறார்கள்.

பண்பாடு அல்லது நாகரீகம் என்பது குறித்து, டேலர் என்பவர் தரும் விளக்கமா னது, ஓர் இனமக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், மரபு மற்றுந் திறன்கள், நடத்தைகள் என்பவற்றை உள்ள டக்கியதாகும். "பண்பாடு" பற்றி மலினோ வியசி குறிப்பிடுவதாவது, ஓர் இனத்தின் பாரம்பரியமான பண்பாட்டுக் கருவிகள், பொருட்கள், தொழில்நுட்பத்திறன், கருத்துக் கள், நடத்தைகள் பெறுமானங்கள் என்பவற் றின் கூட்டு மொத்தமே என்பதாகும். பண்பாடு என்ற சொல் தமிழிலும் அமைந்திருக்கும் மாற்றினை நோக்கினால் அது "பண்" என்ற வினையடியையும் "பாடு" என்ற தொழில் பெயர் விகுதியையும் கொண்டு உருவானதா கும். பண்(ணு) = செய்+பாடு = செய்தல் எனும் பொருளது குறித்ததோர் இனமோ சமுதா யமோ தனது அறிவாலும், அனுபவத்தாலும், சிந்தனைத் திறத்தாலும், தனக்கென வகுத்துப் பேணி வரும் செயற்பாடே பண்பாடெனலாம். இதன் பரிணாமமாகச் சமயநெறி, தத்துவ நோக்கு, அழகியலுணர்வு, குறிக்கோள் என்ற பலவும் வெளித்தோற்றுகின்றன. இவற்றை அவதானிப்போர் குறித்த இனமோ, சமுதாயமோ உயர்ந்த பண்பாடு உடையது. என்ற முடிவிற்கு வருகின்றனர். மனிதனை யும் அவனுடைய பண்பாட்டையும் பிரிக்க வியலாது. பண்பாடு இல்லாமல் சமுதாயம் இல்லை. புதர்மண்டிக்கிடந்து மேடுபள்ளமாய் இருந்த இடத்தை விவசாயம் செய்வதற்கு ஏற்றவாறு செப்பம் செய்வது "பண்படுத்தல்" எனப்படும். அதாவது பழைய நிலையை மாற்றித் திருத்துவது ஆகும். இங்ஙனம் திருந்திய நிலையைத் தான் "பண்படுத்தியது" எனக் குறிக்கின்றனர். நிலத்தை பண்படுத்த லுக்கு மட்டும் "CULTIVATE" என்பதல்லாமல் செப்பம் செய்யப்படுகின்ற எல்லாவற்றிற்கும் இச் சொல்லைப் பயன்படுத்துவர் "CULTURE" என்னும் சொல் இதனடியாகத் தோன்றியதே நிலத்தைச் செப்பம் செய்வதாகிய விவசாயத் திற்கு "AGRICULTURE" எனப்பெயராயிற்று. AGER-FIEID இலத்தீன் சொல் CULTURE பண்படுத்தல். இதைப்போன்றே கரடு முரடாக இருக்கின்ற மக்களின் உள்ளங்களும் செம்மைப்படுத்தப் படுகின்றன. திருத்தம் பெற்ற உள்ளம் பண்பட்ட உள்ளமாகும். இதைத்தான் பண்பாடு என அழைக்கின் றோம். பொதுவாக எல்லாவகையாலும் திருத்தம் பெற்ற, பண்படுத்தல் பெற்ற நிலையையே பண்பாடு என்னும் சொல்லால் குறிக்கின்றனர். பண்பாடு பற்றி ஆங்கில

அகராதிகள் கூறும் விளக்கங்கள் பலவாகும். திருத்தப்படுகின்ற நிலை, திருந்திய நிலை, வளர்ச்சி, கற்றநிலை, மாறுபட்டது, உள்ள வளர்ச்சி, பயிற்சி, அறிவுத் திறன் ஆகிய பொருளையே இவை வலியுறுத்துகின்றன. இவை அக வளர்ச்சியைக் காட்டுவன. இவ் வகராதிகள் புற வளர்ச்சியாகிய நாகரீகத் தையும் பொருளாகக் கொண்ட போதும் நாம் எடுத்துக் கொள்வது அக வளர்ச்சியாகிய பண்பாடாகும்.

"பண்" என்ற சொல்லுக்கு இசை, இசைந்த ஒலி, ஒத்திசைக்கும் ஒலி எனப் பொருளாகும். இதனடியாகப் பிறந்த "பண்பு" என்ற சொல்லுக்கு இயல்பு, ஒத்த இயல்பு, சிறந்த இயல்பு அதாவது தன்னைப்போல் மற்ற உயிரைப் பார்த்தல், கருதுதல், ஒத்த தன்மை எனப் பொருளுண்டு. இன்னும் "பண்" என்ற சொல்லுக்கு இயல்பு, ஒத்த இயல்பு, சிறந்த இயல்பு அதாவது தன்னைப் போல் மற்ற உயிரைப் பார்த்தல், கருதுதல், ஒத்த தன்மை எனப் பொருளுண்டு. இன்னும் "பண்" என்ற சொல்லுக்கு தகுதி, அமைதி, தொண்டு, பருவம் போன்ற பொருட்களும் உள்ளன எனக் கூறினார். இச்சொல் அடிப்படையாகப் "பண்" ஆயிற்று. மேலும் பண்பு+படுதல் = பண்பாடு ஆகும். பண்பு பொருந்துதலே - பொருந்துதலே பாடு எனப் பெறும். பாடு என்பதற்கும் உலக ஒழுக்கம் (கலி - 133), கடமை, குணம், செவ்வி (புறம் - 120) கடமை, பலன் முறைமை (புறம் - 197) முதலியன பொருட்கள் உள்ளமையால் பண்பாடு சிறந்த ஒன்று என்பது விளங்கும் என அவரே கூறினார்.

தமிழ் அகராதி நூல்கள், பண் என்பது இசைப்பாட்டு, நிறைநரம்புள்ள வீணை, குதிரைக் கல்லனை, தகுதி, அமைதி, வாகனங்களின் மேற்றவிசு, மரக்கலத்தின் இடப்புறம், பாய்மரக்கயிறு, தொண்டு, இசை, இசைக்கருவிகள், குதிரைச்சேணம், அலங்காரம், நீர்நிலை, குதிரைக்கதி என்ற பொருட்களில் குறிப்பிடப்படுகின்றது. மேலும் பண்பு என்பது குணம், விதம், தகைமை, சுபாவம் என்ற பொருட்களையும் சுட்டுவதா கும். "பண்படுதல்" என்ற சொற்பதமானது செப்பமாதல், சீர்திருத்தல் என்ற பொருட்களை யும் "பண்பு" என்பது குணம், இயல்பு, தன்மை, அழகு, முறை, செய்கை என்பவற் றையும் சுட்டுவதாகும். இவற்றால் தகுதி, அமைவு, தகைமை, செப்பமாதல், சீர் திருத்தல், இயல்பு, தன்மை, முறை, செய்கை ஆகியன பண்பை விளக்க வந்த சொற்களா கும் எனத் தெரியலாம். இசை மற்றவர்களுக்கு தீங்கு செய்யாது நன்மை செய்து கேட்கச் செய்வது. ஒரே நிலையினதாய், சீர்மைத்தாய் இஃது இருத்தலின் மற்றவர்குத் தீங்கு செய்யாது நன்மை செய்து நிலையினதரக உள்ள செயலுக்கும் பண்பு எனப் பெயராயிற்று. தமிழில் "பண்பாடு" என்று தனிச்சொல் இல்லை "CULTURE" என்பதைப் பண்பாடு என 1937 இல் டி. கே. சி. ஆக்கினார் என்றார் பேராசிரியர். எஸ். வையாபுரிப்பிள்ளை, புலவர் கா. அப்பாத் துரை அவர்களும் இக்கருத்தையே மொழிந் தார். டி.கே.சி.இச் சொல்லை எங்ஙனம் ஆக்கியிருப்பார் என்பதைக் கீழ்க் கண்டவற் றிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

| **வினை** | **பெயர்** |
|---|---|
| கட்டுப்படு | கட்டுப்பாடு |
| முட்டுப்படு | முட்டுப்பாடு |
| தட்டுப்படு | தட்டுப்பாடு |



பிரான்பற்று முத்துமாரியம்மன் தேவஸ்தானம்



பெரியவிளான் பிள்ளையார் ஆலயம்



நவாலி முருகமூர்த்தி ஆலயம்



மாசியப்பிட்டி அங்கணாங்கடவை மீனாட்சியம்மன் தேவஸ்தானம்

| | |
|---|---|
| கடப்படு | கடப்பாடு |
| வழிபடு | வழிபாடு |
| இடிபடு | இடிபாடு |

தொழில் பெயர்களாகிய இச்சொற்களின் ஆக்கம் போன்றே.

பண்படு பண்பாடு என டி.கே.சி. ஆக்கியிருக்க வேண்டும். பண்படு என்னும் சொல்லிருந்தே பண்பாடு என்னும் சொல் ஆக்கம் பெற்றது. நன்னூலும் இதற்கு வழிவகுக்கின்றது.

பண்பாடு என்பது இனிமையும் ஒளியும் என்றும் சிந்தனையின் தொழில் என்றும், அழகிலும் மனித உணர்ச்சியிலும் ஈடுபாடு என்றும் எஸ்.டி.எலியட் என்ற அறிஞர் விளக்கம் தருகின்றார். நம்மிலக்கியத்தில் பண்பாடு என்னும் சொல் இந்நூற்றாண்டில் தான் ஆங்கிலமறிந்த தமிழறிஞரால் உண்டாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. நாம் பண்பாடு எனும் சொல்லால் குறிப்பிடும் துறைகளை நம் முன்னோர் பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை முதலிய சொற்களால் குறித்துள்ளனர். இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் வேறு சில பண்பாட்டுடன் தொடர்புள்ள பொருட்களைக் குறித்தாலும் பல இடங்களில் பண்பாட்டையே கருதுகிறது. கலித்தொகையில் "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுவது" என்றும், வள்ளுவத்தில், "பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்று குறிப்பிடப்படுகின்றன. பண்பாடு உடையவரைச் சான்றோரென்றும், ஒழுக்கமுடையோரென்றும், ஒளியோரென்றும் அழைத்தனர். ஆங்கிலத்தில் "CULTURE" எனப்படும் சொல்லிற்குத் தமிழில் பண்பாடு என்று குறிப்பிடுகின்றோம். ஆங்கிலச் சொல் எவ்வாறு இலத்தீன் சொல்லாகிய "CULTUREAGRI" நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து பிறந்ததோ, அதுபோல தமிழ்ச் சொல்லாகிய பண்பும் நிலத்தைப் பண்படுத்துகிறதோ அவ்வாறு மனதையும், மக்களையும் பண்படுத்துவது பண்பு. இச் சொல்லைப் பண்பாடு என்னும் பொருளில் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் நூலாசிரியர்கள் பயன்படுத்தியுள்ளார். பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், சமூகச் சட்டங்கள், சமயங்கள், வழிபாட்டு முறைகள், இனவொழுக்கம், அகத்திணை, புறத்திணை, மரபுகள், இலக்கியமரபுகள், அரசியலமைப்புகள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், உணவு, பொழுதுபோக்கு, விளையாட்டுக்கள் இவற்றையெல்லாம் குறிக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

கரடுமுரடான நிலத்தைப் பண்படுத்துவதால் அந்த நிலத்தைப் பண்பட்ட நிலம் என அழைக்கின்றோம். அதைப் போன்று கரடுமுரடான மனதைச் செம்மைப்படுத்தும் போது அதைப் பண்புள்ள மனம் என்று சொல்லுகின்றோம். பண்பட்ட நிலத்திலிருந்து மன்னுயிருக்குத் தேவையான நல்லவை விளைவது போன்று, பண்புள்ள மனத்திலிருந்து நல்லவை பிறக்கும். அவையே செயலாக மாறும். தன்னைப்பற்றி எண்ணாமல் தன்னை மறந்து மற்ற உயிரினம் வாழவே எண்ணும் உலகத்தைச் செம்மைப் படுத்த தன்னுடைய உள்ளத்தை முதலில் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். உள்ளம் செம்மையாக இருந்தால் தான்

உயர்வானவை பிறக்கும். இதைத்தான் பாரதியார்,

**"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாம்"**

எனப் கூறிப்போந்தார். உயர்வான பண்பான உள்ளம் இருந்தால் அவ்வுள்ளம் மற்றவருக்குத் தொண்டு செய்திடத் துள்ளி எழும்.

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை இரண்டிற்கும் உள்ள தொடர்பினைக் கீழ்க் கண்டவாறு விளக்கியுள்ளார். சந்தம், இனிமை, இசை உண்டாக்கும் படிப்படியான சிறு முயற்சிகளின் விளைவே பண்பாடு, பண் படுத்தல். அது பெறல் பண்படுத்தல் தமிழில் இச்சொல் நன்செய் புன்செய்கை களுக்கு ஏற்ப நிலத்தைப் பக்குவப்படுத்தலுக்கும், நாகரிக வாழ்வுக்கேற்ப மனிதனை பண்படுத்த லுக்கும் ஒருங்கே வழங்குகின்றது. நிலத்தைப் பண்படுத்தும் செயலிலிருந்தே தமிழர் இச் சொல்லை, நாகரீக வளப்படுத்தும் செயலுக்கும் வழங்கியிருத்தல் வேண்டும் என்று நாம் ஊகிக்கலாம். நிலத்தைப் பண்படுத்துவது போல் இனத்தையும் வாழ்வுக்காக, வாழ்வின் வளத்திற்காக, நீடித்த நலத்திற்காகப் பண்படுத் துகின்றோம். ஆகவே அதுவும் பண்பாடா கின்றது. "இனத்தைப் பண்படுத்துவது பண்பாடு" என்றார் அப்பாத்துரையார். ஞா.தேவநேயப்பாவாணர், பண்படுவது பண்பாடு. பண்படுத்தல், சீர்படுத்தல் அல்லது திருத்துதல், திருத்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும் திருந்திய தமிழைப் "பண்பட்ட செந்தமிழ்" என்றும் திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்லுவது வழக்கம் என விளக்கம் கொடுத்தார். பாவாணர் உள்ளத் தைத் திருத்திப்படுத்த வேண்டும் என்றும், அங்ஙனம் திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளம் என்றும் அழைத்தார். டாக்டர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் "பண்பாடு என்று பேசுகின்றோம். ஆனால் அதன் பொருளை அறிவது அருமை. பண்படுத்திய நிலம் என்று சொல்லுவது போலப் பண்பட்ட மனம் என்றால் பண்பட்ட மனிதப்பாங்கு என்றும் பேசலாம்" என ஒத்த கருத்தினைக் கூறினார்.

ஓர் இனத்தின் பண்பாடு அந்த நாட்டின் இலக்கியம், வரலாறு, சமயம், சமுதாயம், கலை, அறிவியல் முதலியவற் றால் விளக்கமுறுகின்றது. மனிதனது உள்ளம், அவன் வாழும் சூழ்நிலை, சமூகம் ஆகியவை அவனது வாழ்வில் முக்கியத் துவம் பெறுகின்றன. இவை சீர்மைபெறும் போது அவனது வாழ்வும் செம்மையுறு கின்றது. "பண்பாடு" என்ற சொல்லிற் "பண்" என்பது "செம்மைப் படுத்துதல்" என்ற பொருளைத் தருவதாகும். "பண்" என்பது உள்ளச் செம்மையைக் குறித்து நிற்கின்றது. மேலும் இந்துப்பண்பாடு மனிதனை மனிதனாக வாழ வைத்துள்ளது. பண்பாடு பண்பாட்டின் வழியமையும் நல்லியல்பும் உலகை வாழவைக்கின்றன. பண்பாட்டி னால் சமூகநலம் பெற்ற வகைபற்றி நாம் அறியும் போது மனித இனத்தின் மேம்பாட் டினை உணர முடிகின்றது. இந்துப் பண்பாட்டில் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், பழக்கவழக்கம் போன்ற பல திறமைகளின் ஒருங்கிணைப்பைக் காண்கின் றோம். பண்பாடு தனி மனிதன் தொடங்கி குடும்பம், சமூகம், நாடு, உலகம் என விரிந்து சென்று பயன்தரவல்லது. எனவேதான் தனிமனித பண்பாட்டின் உயர்வு சமூகத்

திலும், நாட்டிலும், உலகிலும் பிரதிபலிப்பதை நாம் உணரமுடிகின்றது. பண்பாட்டு உணர்வினால் ஆட்கொள்ளப்பட்ட எண்ணற்ற மகான்களை இந்து நாகரீக வரலாற்றில் நாம் காண முடிகின்றது.

"ஒருவன் தன் குணநலன்கள் நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவாகக் கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும்" என்பது மாத்யூ ஆர்னால்டு கொள்கையாகும். சுருங்கக்கூறின் பிற உயிர்களின் உள்ளத்திற்கும் உடலுக்கும் நம் உள்ளத்தாலும் உடலாலும் துன்பம் கொடுக்காது இன்பமுறு வண்ணம் நடத்தலே பண்பாடாகும். மனிதனுடைய ஆளுமைத் தன்மையில் நுண்ணிய மாற்றங்களை உண்டாக்குகின்றது. பண்பாடு மற்றச் செயல்கள் எல்லாவற்றுள்ளும் தன்னலம் நாடுவது, தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் பார்ப்பது ஆகிய குறைகளைப் பண்பாடு துறந்துவிடச் செய்கின்றது. சுருக்கக் கூறின் பண்பாடு என்பது தியாக வாழ்க்கை யாகும்.

மாந்தரெல்லாம் ஒன்று சேர்ந்து வாழ்ந்த நல்ல உயர்ந்த வாழ்க்கை முறைதான் பண்பாடாகும். இஃது ஒரு பரம்பரையிலிருந்து இன்னொரு பரம்பரைக்குச் செல்லக்கூடியதாகும். என சி. இராசகோபாலச்சாரியார் கூறியுள்ளார். மேலும் அவரே "தாழ்ந்த செய்கை, அறமின்மை, கொடுமை" ஆகிய மூன்றும் நீங்கப் பெற்றதே பண்பாடு என்றும் கூறியுள்ளார். ஒரு சமுதாயத்தில் நிலவியிருக்கின்ற சிறந்த கொள்ளைகள், உயர்ந்த எண்ணங்கள், விரிந்த நோக்கங்கள், கட்டுப்பாடான உறவு, பணிவு ஆகியவை பண்பாடாகும். மேலும் தனிமனிதனின் உள்ளத்தில் மேம்பாடே பண்பாடாகும். மகாத்மா காந்தியடிகளும் ஒழுக்கம், தைரியம்,வலிமை, நற்குணங்கள், மகத்தான காரியங்களுக்காகத் தன்னை மறந்து வேலை செய்தல் ஆகிய பண்புகளை வளர்க்க வேண்டுமெனக் கூறியுள்ளார். இவற்றைக் காந்தியடிகள் பண்பாடாகக் கொண்டார். தன்னலங் கருதாமை, ஒன்று சேர்ந்து வாழ்தல், உயர்ந்தசெயல், உள்ளமேம்பாடு, உயர்ந்த எண்ணங்கள், உள்ளத்தின் செம்மை ஆகிய இவற்றைப் பற்றியே அறிஞர் வற்புறுத்திப் பேசுகின்றனர். இங்ஙனம் பண்பாட்டிற்கு விளக்கம் கூறிய போதிலும் சுருக்கக் கூறின், புத்தர், இயேசு, காந்தியடிகள் முதலிய சான்றோர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறையே பண்பாடு என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றமை குறிப்பிடத் தக்கது.

மனித இனம், தனது வரலாற்றுக் காலத்தில் அடையப் பெற்ற அறிவு, கவின் கலைகளின் வளர்ச்சி, ஒழுக்கம், சமயம், மற்றும் உலகியல் சார்ந்த அடைவுகள் அனைத்தும் "பண்பாடு" ஆகின்றன. இவற்றைப் பற்றிக் கற்பது பண்பாட்டுக் கல்வி எனலாம். மொழி, இலக்கியம், வரலாறு, கணிதம், அறிவியல், இசை, ஓவியம், நடனம், சிற்பம், சமயம், புவியியல் என்பன பண்பாட்டு மரபாக ஒரு பரம்பரையினால் அடுத்து வரும் பரம்பரையினருக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. ஆயகலைகள் என்னும் நூல் சார்ந்த கல்வி என்றும் கூடப் பண்பாட்டுக் கல்வியை வருணிக்கலாம். வழி வழி வந்த அறிவு நிலையின் ஆக்கமே பண்பாடாகும். மனப்பண்பு, சமுதாய வளர்ச்சி, அறிவியல்

வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி, அழகுணர்வு, ஒழுக்கம், சமயமரபு ஆகியவை கூட பண்பாட்டின்பாற்படுவன. இந்து மரபில் கல்வி என்பது பண்பாடு என்றும் அதன் நோக்கம் பண்பாட்டினை வளர்த்தல் என்றும் கொள்ளப்படுகின்றது. கல்வி பெற்ற மனிதன் என்று கூறும் போது அவனை அறிஞன் என்றும் பண்பாளன் என்றும் உலகம் மதிக்கின்றது. மனித இனம் ஆரம்பநிலையில் நாகரிகம் அடைகின்றது. நாகரீக வளர்ச்சியைப் புறநிலைப் பண்பாட்டு வளர்ச்சி அல்லது உலகியல் சார்ந்த பண்பாட்டு வளர்ச்சி என்றும் கொள்ளலாம். இதற்கு பின்னரே, அகநிலை அல்லது உள்ளம் சார்ந்த பண்பாட்டு வளர்ச்சி ஏற்படுகின்றது. கல்வி என்பது பண்பாடு எனக் கொள்வது தமிழ் மரபு, கல்வியின் நோக்கம் பண்பாட்டினை வளர்த்தலாகும். சான்றோனையும் சான்றோர்களைக் கொண்ட சமுதாயத்தையும் உருவாக்குவதே பண்பாட்டுக் கல்வியின் இலட்சியமாகும்.

மனிதர்கள் மட்டுமே பண்பாடு CULTURE என்ற சொல்லோடு தொடர்புடையவர்கள். இதுவே மனிதர்களைப் பிறவிலங்கினங்களிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது. பண்பாட்டை மிகத் தெளிவாக வரையறுத்துக் கூறுவது சிக்கலானது. பண்பாடு என்னும் கருத்து இலக்கியவியல், வரலாற்றியல், உளவியல், சமுதாயவியல், மானிடவியல் போன்ற பலதுறைகளில் பலநிலைகளில் பயன்படுத்தப்படுவதால் இது பற்றிய வரையறையும் பலவாறாக உள்ளது. இதைப் பற்றிய வரையறை நூற்றுக்கு மேல் உள்ளன. பண்பாடு பற்றிய பலதுறை அறிஞர்கள் கூறியுள்ள வரையறைகள் குரோபரும் (KROOBER) குளுக்காணும் (KLUCKHOHN) என்னும் நூலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

பண்பாடு என்பது கவிதை, நடனம், இலக்கியம், கட்டடங்கள், கோயில்கள், இசை, வேதமந்திரங்கள் போன்றவற்றை மட்டும் ஆனதன்று; மக்களின் ஒவ்வொரு செயலாலும் ஆக்கப்பெற்ற நடத்தை முறைகளின் தொகுப்பாகும். இதனுள் ஆயிரமாயிரம் கூறுகள் உள்ளன. இவற்றின் சேர்மங்கள் பண்பாட்டில் பல கோலங்களை (PATTERNS) ஏற்படுத்துகின்றன. பண்பாடு என்பது பல கூறுகள் ஒருங்கிணைந்த நிலையில் செயற்படுவதாகும். இதன்கண் உள்ள உட்கூறுகளை மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம். அவை பண்பாட்டுக் கூறு (CULTURE TRAIT) பண்பாட்டுக் கலவை (CULTURE COMPLEX) நிறுவனம் (INSTITUTION) எனப்படும். ஒவ்வொரு பண்பாட்டிலும் இடம் பெற்றுள்ள கூறுகள் பல தன்மைகளைக் கொண்டுள்ளன. அவற்றை முழுவதும் தொகுத்துக் காணும் போது அவற்றைப் பொருள்சார் கூறுகள் (METERIAL COMPONENTS) அறிதல்சார் கூறுகள் (COGNITIVE COMPONENTS) நெறியியல் கூறுகள் (NORMATIVE COMPONENTS) என மூன்று வகையாகப் பகுக்கலாம்.

இந்தியப் பண்பாடு என்பதற்கு இந்திய மக்களுக்கே தனித்துரிய திருந்திய மனப்பான்மை என்பது பொருளாகும். அதற்கு முன்னர் இச்சொல் கலாசாரம் என்றும் பண்பு என்றும் வழங்கப்பட்டிருந்தது. உலக வரலாற்றிலேயே மிகத் தொன்மையான பண்பாட்டினைப் பெற்றுள்ளது இந்தியநாடு. உலகத்தில் பல்வேறு நாடுகளின் பண்பாட்டுக் கூறுகள்

அவைகளின் சுவடுகள்தெரியாமல் அழிந்து போன பின்னரும், நமது பண்பாடு இன்றும் சிறப்புற்று விளங்குகின்றது.

ஒரு மனிதனை ஆராய்ந்தால் அவனிடம் காணப்படுகின்ற கூறுகள் முறையே உடல், உள்ளம், உயிர் (ஆன்மா) என மூவகைப்படும். இவற்றுள் உடல் அழிந்துவிடக் கூடியது. உள்ளம் உயிரின் பிரதிபலிப்பாகும். ஆகவே உயிர் ஒன்றே நிலையானது ஆகும். உடலையும் உள்ளத்தையும் செம்மைப்படுத்த உயிரின் வளர்ச்சியை (அகவளர்ச்சியை) மையமாகக் கொண்டு இயங்குவது இந்துப்பண்பாடு. அன்பு வேட்கையை அடித்தளமாகக் கொண்டு விளங்குவது இந்துப்பண்பாடு.

பண்பாடு பொருள் பற்றியவை ஆன்மா பற்றியவை என இரு வகைப்படும். இவை மனிதனுடைய அடிநிலைத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே ஏற்பட்டவை. இவற்றின் காரணமாகவே சமூக அமைப்புக்கள் ஏற்பட்டன. சமூக அமைப்புக்களே பண்பாட்டின் அடிநிலை யாகும். பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வாழ்க்கை முறையேயாகும். இவ்வாறே மானிடவியலாளர் கூறுவர். பண்பாடில்லாத "மக்களினமே கிடையாது" என்பது அவர்களுடைய கொள்கையாகும். சீ.பக்தவத்சல பாரதி தாம் எழுதிய பண்பாட்டு மானிடவியல் (1990) என்ற நூலின் பொருளடக்கத்தில் - 4இல் "பண்பாட்டுக் கோலங்கள்" என்ற தலைப்பின் கீழ் பண்பாடு பற்றிய விடயங்களை பின்வருமாறு வகைப்படுத்தி ஆராய்ந்துள்ளார். பண்பாட்டின் உட்கூறுகள் - பண்பாட்டுக் கூறு - பண்பாட்டுக் கலவை - நிறுவனம் - உட்கூறுகளின் தன்மை பொருள்சார் கூறுகள் - அறிதல்சார் கூறுகள் - நெறியியல் கூறுகள் - விழுமியங்கள், நெறிமுறைகள் - குடிவழக்கு - வழக்கடிபாடுகள் - சட்டம், அளிப்புகள் - பண்பாட்டின் அமைப்பு - பொருள்சார் பண்பாடும் - பொருள் சாராப் பண்பாடும் - உகந்த நிலைப் பண்பாடும் உண்மைப் பண்பாடும் உள்ளார்ந்த பண்பாடும் வெளிப்படைப் பண்பாடும் உட்பண்பாடும் எதிர்பண்பாடும் - பண்பாட்டுப் பொதுமைகள் - பண்பாட்டு ஒன்றியம் - பண்பாடு - பண்பாடு ஒரு செயல்பாட்டியல்முறை - பண்பாடு ஓர் அமைப்பியல் முறை - பண்பாடு ஓர் அறிதல் சார் முறை - பண்பாடு ஒரு குறியீட்டு முறை - பண்பாடு ஒரு சார்புடையமுறை - பண்பாடு ஒரு நடத்தைசார் முறை - பண்பாடு ஓர் அமைப்பொழுங்கு முறை - பண்பாட்டுப் படிமலர்ச்சி - பண்பாட்டுப்பரவல் " என்பன.

நாகரிகம் என்னும் சொல்லும் பண்பாடு என்னும் பொருளில் இக்காலத்தில் கையாளப்பட்டு வருகின்றது. திருக்குறளிலும் நற்றிணையிலும் முதன் முதல் தோற்றுமிச் சொல் நகர வாழ்க்கையின் அமைப்பையும் பயனையும் குறிக்கின்றது. ஆங்கிலத்தில் City, Citizen, Civilization என்ற சொற்கள் இலத்தீன் மொழியில் Civitas - Civis - Civitisation எனும் சொற்களிலிருந்து தோன்றியவை. அதே போல இந்த இலத்தீன் சொற்கள் எக்காலத்தில் தோன்றினவோ அக்காலத்திலேயே நகர், நகர நம்பியர், நாகரிகம் என்ற சொற்களும் தோன்றின. நாகரிகம் என்பது ஒரு நாட்டின் மனிதத் தன்மையை அந்த நாட்டன் விழுமிய கருத்து வழிவழியாகப் போற்றிக் காக்கப்படும் பண்

பாடுகளை அடிப்படையாகக் கொண்ட தாகும் என டாக்டர் என். இராதா கிருஸ்ணனின் கூற்று பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எழுச்சி பெறுவதே நாகரிகம் என்ற கொள்கைக்குச் சான்று பகர்கிறது.

**இந்துப்பண்பாட்டின் சிறப்பியல்புகள்**

இந்துப்பண்பாட்டிற்கு அடித்தளம் அமைத்ததும் 5000 ஆண்டுப் பழைமை கொண்டதுமான இந்து வெளிநாகரிகத்திற்குச் சமமும் சமாந்தரமுமாக எகிப்து, பபிலோனியா, அசீரியா, ஆகிய நாடுகளிலும் நாகரிகங்கள் தோன்றின. பிற்காலத்தில் இவற்றுக்கு இணையானவையாகப் பாரசீகம், கிரேக்கம், உரோமபுரி ஆகிய நாடுகளிலும் நாகரிகங்கள் உருக் கொண்டன. ஆனால் இவற்றுக்கு எல்லாம் இல்லாததொரு தனித்த இயல்பு இந்து வெளி நாகரிகத்துக்குரியது என்று ஆர்.சி.மஜீம்தார் கூறியுள்ளமை கவனத்திற் குரியதாகும்.

எகிப்து, சுமேரியா, ஆக்கட் பபிலோனியா, ஆசீரியா, பாரசீகம் ஆகிய நாடுகளின் புராதன நாகரிகமும் பண்பாடும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கவில்லை காலப்போக்கில் அவை வெறும் நினைவுச் சின்னங்களாய் எஞ்சி நிற்கின்றன. கற்றறிந்தோரின் ஆய்வார்வத்துக்கும் பழைய நினைவுகளுக்கும் விருந்தளிப்பதோடு அவை தமது பணியை முடித்துக் கொள்கின்றன. ஆனால் இந்தியாவில் (இந்துவெளி நாகரிகத்தில் தொடங்கிய இந்தியாவின்) வரலாறும் நிறுவனங்களும் உடைவில்லாத இணைப்புச் சங்கிலிகளாய் நிகழ்காலத்துடன் தொடுக்கப் பட்டுள்ளன. இந்துப் பண்பாடோ தான் தோன்றிய நாட்டில் மட்டுமன்றி அது பரவியுள்ள நாடுகளிலும் முன்னைப் பழைமைக்கும் முன்னைப் பழைமை யுடனும் பின்னைப் புதுமைக்கும் போத்துமப் பெற்றியுடனும் தொடர்ந்து நிலவுவதை மறுத்தல் இயலாது.

இந்துமதம் ஒரு காலத்தில் சநாதன தருமம் என்ற பெயரையே பெற்றிருந்தது. தொடக்கம் அறியாப் பழைமையான தருமம் என்பது இதன் பொருள். தொடக்கம் இருந்ததோ இல்லையோ என்பது எமது ஆய்வுக்கு அப்பாற்பட்டது. ஆனால் இந்து சமயம் பழம்பெருஞ் சமயங்களுள்ளே ஒன்றாகவும் தாபகர் எவர் என அறியவொண்ணாததாகவும் உள்ளது என்பதை அனைவரும் ஏற்பர். சமயத்திற்குத் தருமம் என்ற மாற்றீட்டுப் பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. உயர்ந்த சிந்தனைகளையும், வாழ்வாங்கு வாழ்வதையும் உறுதிப்படுத்திப் போஷித்துத் தாங்குவதே சநாதன தருமம் அல்லது இந்து சமயமாகும். அதன் பண்பாடுகள் யாவும் தருமத்தின் அடியாகப் பிறந்தவை. சத்தியத்தை நிலைக்களமாகக் கொண்டவை. எனவே அவை காலங்கடந்து வாழ்வதில் வியப்பு இல்லை.

பரம்பொருளைச் சச்சிதானந்தம் என்று கொள்வது இந்து மதத்தின் சிறப்பு. இந்துக்களின் சிந்தனைகள் யாவும் பரம் பொருளை அடைவதற்கே வழிப்படுத்துவன வாதலின் அவை நிலையானவையாகவும் அறிவுமயமானவையாகவும் ஆனந்த நிறைவுடையனவாகவும் விளங்குகின்றன.

புற உலகில் அறத்தாறு நின்று ஒழுகுங்கால் சமூகத்தோடு இணைந்து வாழ்வதும், சமூக ஒழுக்காற்றைப் பேணுவ

தும் இதற்கென அரசியல், பொருளாதாரம், கல்வி, சமயம்முதலாம் நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதும், கலைகள், இலக்கியங்கள் என்பவற்றை உருவாக்குவதும் இன்றியமை யாதவை என்பதனையும் இந்துப்பண்பாடு கைந்நெகிழ்க்கவில்லை. வேதங்கள், ஆக மங்கள், சிற்பக்கலை, விக்கிரகக் கலை, கட்டடக்கலை, ஆட்சியியல்(அர்த்தசாஸ்திரம்), அறவியல்(தருமசாஸ்திரம்) போர்க்கலை, வானியல், புராணங்கள், இதிகாசங்கள், நாடகக்கலை, முதலாம் இலக்கியங்கள் வேதாந்தம், சித்தாந்தம், முதலாம் தத்துவக் கூறுகள், இசை, நாடகம், ஓவியம் ஆகிய மகிழியலும் அழகியலும் ஒன்றிணைந்த கவின்கலைகள், தச்சுத் தொழில், கொற்றொழில் , மட்பாண்டம் வனைதல், தோற்றொழில், நெசவு அணிகலனியற்றும் உலோகத் தொழில் முதலாகிய பயன்பாட்டுக் கலைகள், சோதிடம், மாந்திரிகம், கணிதம், விஞ்ஞானம், புவியியல், மருத்துவம் ஆகிய அறிவியல்கள் என்ற அனைத்தும் இந்துப் பண்பாடு என்ற உன்னத மாளிகையின் உறுப்புக்களாய் விளங்குகின்றன. உண்மை வழி நிற்றல்(சத்யமேவஜயதே) உயிர்க்கு உறுகண் செய்யாமை, விருந்தினரைப் பேணுதல், கட்டுப்பாடும் ஒழுக்கமும், சமூகத் தொண்டும், குடும்பப் பற்றும் நிறைந்த இல்வாழ்க்கை, எளிய வாழ்வு ஆனால் உயர்வையே உள்ளல்(சிந்தித்தல்) கல்வி யைப் போற்றுதல் , மாதா, பிதா, குரு, மூத்தோர் என்போரை வழிபடல், பிதிர்க்கடன் செய்தல், சமயக் கிரியைகளைத் தவறாதி யற்றல் முதலாக ஒழுக்கங்களையும், ஆசாரங் களையும் கடைப்பித்தற்கான செயன்முறை களும் இந்துப்பண்பாட்டின் இன்றியமையாத அம்சங்களேயாகும். இந்துப் பண்பாடென்பது இம்மைக்கும், மறுமைக்குமான வாழ்வினை அதன் சகல பரிமாணங்களுடனும் தன்னுள் அடக்கியுள்ளது என்பதற்கு ஐயமில்லை.

இந்துப்பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குபவை திருக்கோயில்கள். இவை காலங்காலமாக பண்பாட்டின் உறைவிட மாகவும் சமய வாழ்க்கையின் கேந்திரமா கவும் விளங்கி வந்துள்ளன. திருக்கோயிலும் அங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தியும் தலப்பெருமைக்கு வழிவகுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்துக்களது பண்பாடானது திருக் கோயில்களை மையப்படுத்தி வளர்ச்சி பெற்றதைக் காணலாம். திருக்கோயில்கள் அமைந்த சூழல் திருக்கோயில்களை அமைக்கப் பயன்படுத்தும் பொருட்கள் திருக் கோயில்களில் வழிபாடு இயற்றுவதற்குப் பயன்படும் பொருட்கள் போன்ற இன்னோ ரன்ன பொருட்கள் எல்லாம் இயற்கையிலே கிடைத்த பொருட்களைக் கொண்டே வழிபாடு இயற்றப்பட்டு வருவதைக் கொண்டு இந்துக் களது திருக்கோயில் பண்பாட்டு மரபுகள் புவியியல் காரணிகள் காலந்தோறும் நன்கு வளம் படுத்தி வந்துள்ளதைக் காணலாம்.

காலந்தோறும் பல்வேறு பரிமாணங் களில் வளர்ச்சி பெற்று வந்துள்ள திருக் கோயில்களை அடித்தளமாகக் கொண்டு இந்துப்பண்பாடு மேன்மையடைந்ததைக் காணலாம் திருக்கோயிலை மத்திய நாடி யாகக் கொண்டு மன்னரும் மக்களும் அருளாளர்களும் கலைஞர்களும் குருமாரும் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்காகப் பெரும் பங்காற்றி வந்துள்ளனர். நீண்ட காலமாக

இருந்து வரும் மரபுகளையும் பல்வேறு கலையம்சங்களையும் உள்வாங்கிய நிலையில் இந்துப் பண்பாட்டின் நிறை வடிவமாக திருக்கோயில்கள் விளங்குகின்றன எனில் மிகையில்லை. இந்துப் பண்பாடு பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் இப் பண்பாட்டின் இயக்க சக்தியாக மிளிர்கின்ற திருக்கோயில் பற்றி அறிவது இன்றியமையாததாகும்.

இந்துப்பண்பாடு அழியாத அமைப் போடு இன்றும் நிலைபெற்று உறுதியாகத் திகழ்ந்து வருவது அதன் சிறப்புக் கூறாகும். அப்பண்பாட்டின் மிகச் சிறந்த பண்பு அதன் சகிப்புத் தன்மை. அது தன்னை நாடி வந்த யூதர்களின், முஸ்லீம் மக்களின், கிறிஸ்தவர் களின் பண்பாட்டுக்கூறுகளை வெறுக்காமல் அவற்றைச் சகித்துக் கொண்டு அவற்றை அணைத்தே செல்கிறது. சகிப்புத் தன்மை யால் இந்துப்பண்பாட்டிற்கு விளைந்த நலம் பல்வேறு பண்பாடுகளின் கூட்டிணைப் பாக்கம் ஆகும். வரலாற்றுக் காலத்திற்கு முன்பிலிருந்து இன்று வரை ஆரிய, திராவிட, பாரசீக, கிரேக்க, அரேபிய, இஸ்லாமிய, கிறிஸ்தவப் பண்பாடுகளின் சீரிய கூறுகளின் கூட்டிணைப்பாக இன்றும் சிறந்து விளங்கு வது இந்துப் பண்பாடாகும். இறையுணர்வு ஆன்மீக வேட்கை, இவை இரண்டினைப் பெரும் அடித்தளமாகக் கொண்டு இயங்குவது இந்துப்பண்பாடு. இப்பண்பாட்டின் குறிக் கோள் அழியாத ஆன்மாவின் வேட்கை யாகிய வீடு பேற்றினை இறுதிக் குறிக்கோளா கக் கொண்டிருப்பது இந்துப் பண்பாட்டின் தனிப்பெரும் சிறப்பம்சமாகும். சாதி,சமயம், காலம்,பால் வேற்றுமைகள் கடந்த உலக மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பண்பாகவும் அனைவருடைய தேவை களைப் பூர்த்தி செய்யக்கூடியதாகவும் பேணிக்காக்க அரசு ஆதரவு இல்லாதிருந்தது. மேலும் பல்வேறு அந்நியப்படையெடுப்புக்கள் நிகழ்ந்தன. இந்துப்பண்பாட்டினை வேருடன் களையும் முயற்சிகள் தோல்வியடைந்தன. அவற்றினைத் தாங்கி கொண்டு நமது பண்பாடு இம்மண்ணில் சிறியதும் அழியாது வளர்ந்து ஆலமரமெனத் திகழ்கின்றது. இந்தியாவிலே பிறந்து, வளர்ச்சியுற்ற இப் பண்பாடு உலகெங்கும் விரிந்து பரந்து கிடப்பதை வரலாற்று ஆசிரியர்களும், மொழியியல் வல்லாரும் தொல்பொருளாய் வாளரும் எடுத்தியம்புவதைக் காணலாம். இப்பண்பாட்டின் தோற்றத்திற்கு வரலாறு கிட்டாமையால் இதை அநாதியானாது அல்லது நிலைபேறுடையது அல்லது தொடக்க மில்லாதது எனக்கூறலாம். சமயம் இந்துப் பண்பாட்டின் சீரிய கூறாகும். சமயத்தைப் புறக்கணித்தால் இப்பண்பாடு பொருளற்றதாகி விடும். தருமம் என்ற உயரிய கோட்பாட்டி னைத் தன்னுள் பெற்றுள்ளது இப்பண்பாடு சமயம் உணர்த்தும் கருமநெறி, மறுபிறவிக் கோட்பாடு, அவதாரக் கொள்கை அனைத்தும் இவற்றுள் அடங்கியுள்ளன. இன்னா செய் யாமை, உண்மையே உரைத்தல், உடல் உள்ளக்கட்டுப்பாடு எனப் பேசப்படும் உயரிய அறக் கோட்பாடுகள் வேதகாலந் தொட்டு பௌத்தர்கள், சமணர்கள் காலம் வரை வலியுறுத்தப்படுகின்றன. நடைமுறை வாழ்விலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவ்வுயர்ந்த கோட்பாடுகள் இந்துப் பண் பாட்டின் இணையிலாச் சிகரங்களாக விளங் குகின்றன. இம்மைக்கும் மறுமைக்கும் பயன் படும் இனிய கருத்துக்களின் பெட்டகம் இந்துப்பண்பாடு.



கல்வளைப் பிள்ளையார் ஆலயம், சண்டிலிப்பாய்.



இரட்டையப்புலம் வைரவர் ஆலயம், சண்டிலிப்பாய்.



பிரான்பற்று முருகமூர்த்தி தேவஸ்தானம்



சாந்தை சித்திவிநாயகர் ஆலயம்

உயர்ந்த தத்துவ நோக்கோடு விளங்குகிறது இந்துப்பண்பாடு எப்பொருள் எத்தன்மை உடையதாயினும் அப்பொருளில் மெய்ப்பொருளைக் காணவிழைகிறது. சமுதாயத்தினின்று உருவாக்கப்பட்ட இப் பண்பாடு சமுதாயத்தை வெறுக்காமல் அதே நேரத்தில் தனிமனித சிந்தனைக்கும் ஆளுமைக்கும் (Personalty) நன்மதிப்பு நல்குகின்றது. அறிவியலுக்கு எதிரியன்று இந்துப்பண்பாடு. பல்வேறு அறிவியல்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை அது ஏற்றுக் கொள்கின்றது. இயற்கையோடு இணைந்த வாழ்வினைப் போற்றிப் புகழ்வது இந்துப் பண்பாடு. அது காடு, மலை, ஆறு. கடல், விலங்குகள் போன்றவற்றினைச் சிறப்பாக எடுத்தியம்புகிறது. இவ்வாறு பல்வேறு சீரிய நற்பண்புகளையுடைய இந்துப்பண்பாட்டிற்கு இணையாக உலகில் எப்பண்பாடும் இல்லை என உறுதியாகக் கூறலாம்.

இந்த உலகம் தோன்றியது முதலே அனைவரும் அநுசரித்து வரும் விதி முறைகளே சனாதன தர்மம் ஆகும். காலப்போக்கில் சனாதன தர்மத்தின் கோட்பாடுகளையே அடிப்படையாகக் கொண்ட பல மதங்களுக்கும் உரிய பொதுப் பெயராக இந்து மதம் என்று மாறி, தற்சமயம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அடிப்படையில் சற்று ஆராய்ந்து பார்ப்போமானால் அனேகமாக மற்ற மதங்களின் கோட்பாடுகள் நமது சனாதன தர்மத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளமை விளங்கும்.

**நாமானந்தகிரி சுவாமிகள்**
தக்ஷிண ஹாலஷியம் - தென்னாங்கூர்

பழம்பெருஞ் சமயமென உலக அறிஞர் பலராலும் போற்றப்படுவது இந்து சமயம். சிறப்புக்கள் பல பொருந்திய இச்சமயத்தின் மேம்பட்ட கருத்துக்களை உலக மக்கள் அனைவரதும் சிந்தனைக்கு விருந்தாகப் படைத்தளிக்க வேண்டும்.

**சீர்வளர் சீர். சிவப்பிரகாச தேசிக பராமாச்சாரிய சுவாமிகள்**
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

# இந்து ஆலயங்கள்; வரலாறும் பெருமையும்

## பண்டத்தரிப்பு சில்லாலை மேற்கு சாந்தை அருள்மிகு சித்தி விநாயகர்

இலங்கையின் சிரசாம் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண நன்னகரின் முகமாகத் தோன்றும் வலி.தென்மேற்குக் கடற்கரையுமான மாதகல் சம்பில்த்துறை (ஜம்புகோளம்)யை அண்டிய பண்டத்தரிப்புப் பிரதேசத்தில் செந்நெல் கொழிக்கும் தும்பளப் பாய் வயல்வெளியுடன் கூடிய சைவ மணம் கமழும் ஒரு அழகிய கிராமம் சாந்தையாகும். இலங்கையின் வரலாற்றுக் காலம் முதல் இங்கு குடிகொண்டிருப்பவரே சாந்தை விநாயகர் என்பதை வரலாறு மூலம் அறிய முடிகின்றது.

மிகப் பழங்காலத்தில் சம்பில்துறை ஒரு பெரிய வர்த்தகத் துறையாக விளங்கி பின் ஏற்பட்ட ஒரு கடல் கோளால் இது அழிந்து சிறு துறையாக மாறியதென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இத்துறையில் அக்காலத்தில் கிழக்காசிய நாட்டு வர்த்தகர்கள் வாணிபம் செய்ததாக அறிய முடிகின்றது. அதே காலப் பகுதியில் தென்னிந்தியாவிலுள்ள செட்டி இனத்தவர்களும் இத்துறையூடாக வர்த்தகம் செய்தனர்.

இங்கு வர்த்தகத்தில் ஈடுபட்ட செட்டி மார்கள் இங்கு தமது குடியிருப்புக்களையும் நிறுவினர். அவர்கள் குடியிருப்பானது சாந்தை, பனிப்புலம், சுழிபுரம் கிழக்கு, காலையடி, செட்டிகுறிச்சி, மாதகல் மெற்கு ஆகிய இடங்களை உள்ளடக்கியதாக இருந் தது. அவர்கள் குடியேறிய இடங்களில் எல்லாம் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற வாக்குக்கிணங்க பல கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுழிபுரம் வடக்கு கண்ணகை அம்பாள் ஆலயம், பனிப்புலம் சாத்தாஒல்லை சிவன் ஆலயம் (சம்புநாதர்) காலையடி ஞானவேலாயுதர் ஆலயம் (இடும்பன்) காலையடி வெற்றி முருகன் ஆலயம், சாந்தை சித்திவிநாயகர் ஆலயம் என்பன அவர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களே.

தென்னிந்தியாவில் வாழ்ந்த செட்டி இனத்தவர்கள் தாம் அங்கு வணங்கிய குல தெய்வங்களையே இங்கு கொண்டு வந்த தாகக் கூறப்படுகின்றது. அத்துடன் சந்தோஷி விநாயகர் வழிபாட்டை இங்கு கொண்டு வந்தார்கள் எனவும் அறிய முடிகிறது. (விநாயகருக்குச் சந்தோஷி என ஒரு மகள் இருப்பதாகவும், அதனாலே சந்தோஷி விநாயகர் எனப்பட்டார் எனவும் புராணக் கதைகள் கூறுகின்றன).

சந்தோஷி விநாயகர் மருவிப் பிற் காலத்தில் சாந்த விநாயகர் எனப்பட்டது. சாந்த விநாயகர் சாந்தை விநாயகராகி இவ் இடம்

சாந்தை எனப் பெயர் பெற்றது. இவ் விநாயகர் சாந்தகுணம் உள்ளவர் என்றும் அதனால் சாந்த விநாயகர் எனப்பட்டுப் பின் சாந்தை விநாயகர் எனக் கொள்வாருமுளர். இவ்வாலயம் பற்றி மிகப் பழம் கதையொன்றும் கூறப் படுகின்றது. பார்வதி பரமசிவன் திருக்கல்யாணத்தின் போது பார்வதியின் ஒரு தோழியான சாந்தை என்பவளின் விருப்பத்துக்குச் சிவன் பார்வதியுடன் இணைந்து காட்சி கொடுத்த இடம் எனவும் கூறுவர். இதனாலேயே இவ்வாலயம் ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை ஈஸ்வர விநாயகர் ஆலயம் என அழைக்கப்பட்டு வந்தது. அண்மையிலேயே இது பல சித்திகள் பெற்றவர்களால் சித்தி விநாயகர் எனப்பட்டார்.

நீண்ட காலமாக இவ்வாலயம் ஒரு பாரிய இலுப்பை மரத்தின் அடியில் ஒரு ஓலைக் கொட்டிலாகவே இருந்து வந்தது. அந்நியர் இந்து ஆலயங்களை அழிக்கும் காலத்தில் அவர்கள் கண்களுக்கு இது ஆலயமாகத் தெரியாத அளவுக்குச் சிறு ஆலயமாக இருந்ததால் இவ்வாலயம் அழிக்கப்படாது பாதுகாப்பாக இருந்தது போற்றுதற்குரியதாகும். இலுப்பை மரஅடியில் சந்ததி சந்ததியாக இங்கிருந்த செட்டிமாரினால் இவ்வாலயம் வணங்கப்பட்டு வந்தது. இவ்வாலயத்துக்கெனப் பல காணிகள் செட்டிமார்களினால் எழுதப் பட்டிருந்தது.

பிற்காலங்களில் செட்டிமார் வியாபார நோக்கங்களுக்காக இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்கு (கொழும்பு, இந்தியா, பூநகரி போன்ற இடங்கள்)ச் சென்றதால் இங்குள்ள அவர்களின் சந்ததி வீழ்ச்சி அடைந்தது. இறுதியாக இங்கிருந்த மிகக் குறைந்த இவர்களின் இனத்தவரால் இவ்வாலயம் பராமரிக்கப்பட்டு வந்தது. இறுதியில் இச்செட்டியார் பரம்பரையில் உள்ள விநாசித்தம்பிச்செட்டியாரின் பராமரிப்பில் இருந்தது. அவருக்குப் பின் அவரது சகோதரர் கந்தர் செட்டியாரிடம் வந்து பின் அவர் மகன் ஆறுமுகச் செட்டியாரிடம் சிறந்த பராமரிப்பில் இருந்தது.

இக்காலத்தில்(1935ம் ஆண்டளவில்) இவ்வூர்ப் பிரபல வர்த்தகர் அமரர் தம்பையா சிவசம்பு அவர்களால் இலுப்பை மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டு அதனருகில் ஒரு கற்பகக் கிரகத்துடன் கூடிய ஆலயம் அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு ஆறுமுகச் செட்டியாரின் நித்திய பூசையுடன் பரிபாலிக்கப்பட்டு வந்தது. ஆறுமுகச் செட்டியார் காலத்துக்குப் பின் அவர் மகன் பஞ்சாட்சரச் செட்டியாரிடம் வந்தது. இக்காலப் பகுதியில் நாட்டு நிலை மோசமானதாலும் வெளிநாட்டு மோகம் காரணமாகவும் பஞ்சாட்சரச் செட்டியார் ஆலயத்தை ஊர் மக்களிடம் கையளித்துக் குடும்பத்துடன் கனடா நாட்டுக்குச் சென்றுள்ளார். கையேற்ற பொதுமக்கள் பரிபாலன சபை, திருப்பணிச் சபை என்பவற்றை அமைத்துப் புனரமைப்பில் ஈடுபட்டனர். இதன் பிரகாரம் பல மண்டபங்களும் பரிவார மூர்த்திகளும் கொண்டதாகவும் ஆகம முறைப்படி அமைந்த கற்பக்கிரகத்துடன் 1999ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டது. 29.10.2001ம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டு மிக நீண்ட காலமாக வரலாறு தெரியாத மூல விக்கிரகமே மீண்டும் பிரதிஷ்டை செய்யப் பட்டது. சித்திரை வருடப்பிறப்பை இறுதி நாளாகக் கொண்டு 10 நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்தபோது

கும்பாபிஷேகத்துடன் இது ஆவணி மாதச் சதுர்த்தியை இறுதி நாளாகக் கொண்டு 12 நாட் திருவிழாவாக மாற்றப்பட்டது. அத்துடன் சித்திரை வருடப்பிறப்பு, தைப்பொங்கல், மாதச்சதுர்த்தி, திருவெம்பாவை, விநாயக சஷ்டி போன்ற தினங்களில் விஷேட அபிடேக ஆராதனைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

அண்மையில் மீண்டும் கற்பக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு பரிவார மூர்த்திகள் விரிவாக்கப்பட்டுச் சுற்றுக் கொட்டகையுடன் கூடிய ஆலயமாக மாற்றப்பட்டு 18.06.2014 மகா கும்பாபிஷேகம் நடைபெற்று இன்று பனிப்புலம் முத்துமாரி அம்பாள் தேவஸ் தானப் பூசகரான சிவஸ்ரீ வேலாயுத பாலசுப்பிர மணிய ஐயா அவர்களின் பூசைஆராதனை களுடன் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின் றது.

**- ஆ.த.குணத்திலகம்**

### கரைப்பிரான் பிள்ளையார் கோவில்

தென்னிந்தியாவில் சோழர் ஆட்சி புரிந்த காலத்தில் சோழர்குல இராஜகுமாரியாகிய மாருதப்புரவீகவல்லி இளம்பராயத்தில் முனிவர் ஒருவரைத் துன்புறுத்த அவர் கோபம் கொண்டு இராஜகுமாரியின் அழகிய முகம் ஒரு குதிரை முகம் பெறும்படியாகச் சாபமிட்டார். மனம் வருந்தி தனக்குச் சாபவிமோசனம் அளிக்கும்படி கேட்ட இராஜ குமாரியிடம் கடல்கடந்து சென்று பல தலங்கள் சென்று நீராடும் படியும் இவ்வாறு நீராடி வரும்பொழுது மகிமை பொருந்திய தலமொன்றில் அவளது குதிரை முகம் நீங்கும் என்றும் பின்னர் அந்த இடம் அவள் ஆட்சி செய்ய உகந்த இடமாக அமையுமென்றும் கூறினார்.

இதன்படி தென்னிந்தியாவிலிருந்து இலங்கை வந்த மாருதப்புரவீகவல்லி தற்போதைய மா விட்டபுரத்தில் குதிரை முகம் நீங்கினாள்.

மா - குதிரை
விட்ட - நீங்கிய
புரம் - இடம்

இதுவே மாவிட்டபுரம் என்று காரணப்பெயராக அமைந்தது. இவ்வாறு குதிரை முகம் நீங்கிச் சாபவிமோசனம் பெற்று மாவிட்டபுரத்தில் செம்மையாக ஆட்சி புரிந்துவரும் நாளில் அவளோடு தென்னிந்தி யாவில் சீர்காழியில் இருந்து வந்த அவளின் குடிமக்களாகிய சலவைத் தொழிலாளர்கள் இராஜகுமாரியிடம் சென்று தமது சலவைத் தொழிலை இடையூறின்றி மேற்கொள்ளவும், துணிகளைத் தோய்க்கவும், உலர்த்தவும் உகந்த இடம் தருமாறு பணிவுடன் விண்ணப்பித்தனர்.

அதற்குச் செவி சாய்த்த பட்டத்து இராணியாகிய இராஜகுமாரி தனது பட்டத்து யானையை நடக்கும்படி செய்து இவ்வாறு நடக்கும்பொழுது அதற்கு முன்பாக வெள்ளைத் துணியை விரித்து யானையை அதன் மீது நடக்க விட வேண்டும் என்றும் அவ்வாறு யானை நடந்து செல்லும் போது யானை நடந்து சென்ற துணியை எடுத்துப் பார்க்கும்படியும் அவ்வாறு பார்க்கும் போது எந்த இடத்தில் யானையின் காலடி பட்ட இடத்தில் துணியின் மீது மண் ஒட்டவில் லையோ அந்த இடம் உங்களுக்குத் தொழில்

செய்ய உகந்த இடமாகும் அதனை யாம் உங்களுக்கு மானியமாக வழங்குவோம் என்றும் கூறினாள்.

அதன் பிரகாரம் பட்டத்து யானை எல்லா இடங்களையும் தாண்டித் தற்போதைய ஆனைக்கோட்டையில் வரும் போது யானை மிதித்த துணியில் மண் ஒட்டவில்லை என்பதாக அறிகிறோம். ஆனை + ஒட்டா = ஆனைக்கோட்டை என மருவி வந்தது என்பர். பின்னர் இந்த ஊரை தான் கூறியதன் பிரகாரம் சலவைத் தொழிலாளர் களுக்கு மானியமாக இராணி வழங்கினாள் என்று கர்ணபரம்பரைக் கதைகளால் அறிகிறோம். தற்போது கூட இவ்வூர்க் குடிமக்களே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குத் தொண்டு புரிந்து வருவதை அறியும் போது இக்கருத்து ஏற்புடையதாகவே அமைகின்றது.

இவ்வாறு சலவைத் தொழிலாளர் களும் மற்றும் பலரும் வந்து குடியேறி வாழ்க்கையை நடாத்தி வரும் சமயம் கடலும் கடல் சார்ந்த இடமாகிய நெய்தல், வயலும் வயல் சார்ந்த இடமாகிய மருதம் என்பவற் றின் கரையில் உள்ள இடத்தினைத் தேர்ந்தெடுத்து விநாயகப் பெருமானை அதில் எழுந்தருளப் பண்ணி அதனை வழிபட்டு வந்ததாகவும் கரையில் அமைந்த பிரான் ஆகையால் கரைப்பிரான் என்றும் அடியார்கள் பெயரிட்டு விருப்புடன் வழிபட்டு வருகின்றனர்.

- ஆலய பரிபாலனசபை

## மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார்

மானிப்பாய்ப் பட்டினத்தில் நவாலி என்னும் சிற்றூர் ஒன்று அமைந்துள்ளது. இதன் வரலாற்றினை நாம் நோக்குகின்ற போது இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாலயம் பழமை வாய்ந்ததாகக் கூறப்படுகின்றது. ஆதியில் இவ்விடத்தில் குமுழமரமும், கொன்றை மரமும் நிழல் விருட்சங்களாக நின்றன. குமுழ மரத்தடியில் வேலைக் கையில் ஏந்தியவாறு முருகனது சிலை ஒன்று காணப்பட்டதாகவும் இதனைக் கண்ட மக்கள் வணங்கிவிட்டுச் சென்றதாக வும் கூறப்படுகின்றது. பின்னர் தம்பையா என்பவரே இச்சிலையினை வைத்துச் சிறுகோயில் ஒன்றை அமைத்து அதற்குப் பூசை செய்ய அயலில் இருந்த சுப்பிரமணியக் குருக்களின் தகப்பனாரான நடராசக் குருக்களைப் பூசகராக நியமித்துப் பூசையி னையும், விழாக்களையும் நடைபெறச் செய்தார்.

ஆலயத்திற்குப் பெயர் வழங்கும் போது வேலக்கைப் பிள்ளையார் என்றே வழங்கினார்கள். இதன் உட் பொருளை விளங்கினால் வேலைக்கையில் வைத்திருக் கும் பிள்ளை முருகன், அவருக்குரிய ஆலயமே இதுவாகும் என்பது தெளிவு. ஆனால் இதனை விளங்காதவர் களும், போக்குவரத்துச் செய்பவர்களும் "வேலக் கைப் பிள்ளையார் அப்பா" என்று கும்பிடு போட்டுவிட்டுச் செல்வார்கள். இவ்வாலயத்தில் ஆரம்பத்தில் வேலைக் கையில் ஏந்தியவாறு முருகன் காட்சியளித்தமையாலேயே இப்பெயர் ஏற்பட்டது என்பது மனம் கொள்ளத்தக்கது.

வேலக்கைப்பிள்ளையார் ஆலயம் சிறு கோயிலாக இருந்தாலும் இதனுடைய அருட்கடாட்சம் பெரிதாகவே இருந்தது. தம்பையா என்பவரைத் தொடர்ந்து சிவக்கொழுந்து முதலியாரே இக்கோயிலைப் பொறுப்பேற்றுப் பூசைகளையும், விழாக்க ளையும் சிறப்புற நடாத்தி வந்தார். இவரது காலத்திலும் கோயில் சிறு கோயிலாகவே இருந்தது. பூசைகள் ஆகம மரபிற்கு ஏற்பவே நடைபெற்றது. மூன்றுகாலப் பூசைகளையும் குருக்கள் செவ்வனே நடாத்தினார். சிவக்கொழுந்து முதலியாரின் மகனான சிவா முத்துக்குமாரசாமி, சிவா இராஜேந்திரன் போன்றவர்களது காலத்தில் தான் ஆலயத்தின் முன் மண்டபக் கொட்டகை கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து பூந்தோட்டம் அமைக்கப் பட்டுச் சுற்றுமதிலும் கட்டப்பட்டுள்ளது.

1920களில் ஆலயம் தனக்கேயுரிய கோபுரம், விமானம், மகாமண்டபம், நிருத்த மண்டபம், பரிவார மூர்த்திகளான விநாயகர், சண்டேஸ்வரர், நடராசர், நாச்சிமார் போன்ற தெய்வங்களையும் கொண்டு விளங்கியது. இங்குள்ள மக்களின் ஆலய வழிபாட்டுச் சிறப்பினால் ஆலயம் சிறப்புற எழுச்சி பெற்றது. அத்துடன் செவ்வாய்,வெள்ளி போன்ற தினங்களில் பின்னேர நேரங்களில் பஜனைகள் நடைபெற்றன. இதில் சிறுவர் களும், சிறுமியர்களும் சைவப் பெரியார் களும் பங்குபற்றினார்கள். இதனைத் தொடர்ந்து மானிப்பாயில் இந்து சமய விருத்திச் சங்கம் 1956ஆம் ஆண்டு திரு.மு.வைரமுத்து அவர்களினால் ஆரம்பிக் கப்பட்டது. இச்சங்கத்தின் மூலம் சைவ சமய முன் நடைமுறைகளும் பேணிக் காக்கப்பட்டு மக்கள் அனைவருக்கும் ஆலய வழிபாட்டின் சிறப்பும் உணர்த்தப்பட்டது.

ஆலயத்தோடு ஈடுபாடு கொண்டவர் களாக மக்களும், சைவப் பெரியார்களும் காணப்பட்டனர். பூசை, திருவிழா, குரு பூசைகள் என்பன நேரம் காலம் தாழ்த்தாது செய்யப்பட்டு வந்தன. 1982ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டு ஓராண்டுக்குள் பூர்த்தி ஆக்கப்பட்டு வழமைபோல் விழாக் களும், பூசைகளும் நிகழ்த்தப்பட்டன. பின்னர் 2001ஆம் ஆண்டு மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் இருந்தே வேலக்கை பிள்ளைளார் ஆலயத்தில் குருக்கள்மாரே பூசக ராக இருந்து வருகின்றார்கள். இவ்வாறு இருந்தும் மஹோற்சவ காலங்களில் கொடி யேற்றித் திருவிழாவினை சிறப்பாகச் செய் வதற்கு மயிலணியில் இருந்து சோமஸ்கந்தக் குருக்கள் என்பவரை வரவழைத்து இந்நிகழ் வுகளை நிகழ்த்துகின்றமை இவ்வா லயத்தின் பெருமையினை எமக்கு உணர்த்து கின்றது.

வேலக்கைப் பிள்ளையார் ஆலயத் தின் நிர்வாகம் பற்றிய கருத்துக்களை நோக்கு கின்றபோது இந்த ஆலயம் தனியாருக்குச் சொந்தமாக இருக்கின்றது. ஆனாலும் நிர்வாகம் சீரான அமைப்பில் இயங்குகின் றது. ஆலயத்தினைப் பரிபாலனம் செய்வோர் நன்கு கற்றவர் களாகவும், இறை வழிபாட்டில் நம்பிக்கை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் ஆலயத்தின் நிர்வாகம் சிறப்புற அமையும். இதற்கேற்ப இவர்கள் யாவரும் கற்றவர்களாகவும், மிகுந்த பய பக்தியுடையவர்களாகவும் விளங்கினார் கள். சிவா இராஜேந்திரன் சட்டத்தரணியாகப் பணி புரிந்தார். இவரது தந்தையாரும் சட்டத்தரணியாகவே இருந்தார். அது



மாதகல் நுணசை முருகன் ஆலயம்



சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலயம்



ஆனைக்கோட்டை மூத்த நயினார் தேவஸ்தானம்



களையோடை கண்ணகை அம்மன் ஆலயம் (பிட்டி)

மட்டுமன்றி இவர்கள் பஞ்சபுராணம் பாடுவதிலும், பஜனை பாடுவதிலும் ஈடுபாடு உடையவர்களாகவே விளங்கினார்கள்.

ஆலயத்தில் எந்தவொரு பணியினை இவர்கள் மேற்கொண்டாலும் சிறப்புற அதனை ஆற்றுவார்கள். திட்டமிட்ட முறையில் குடும்ப அங்கத்தவர்கள் யாவரும் தீர்மானித்து அதனைச் செயற்படுத்தினார்கள். ஆலயத்திற்கு என விடப்பட்ட நெற்காணிகளைக் குத்தகைக்குக் கொடுத்து அதன் மூலம் பெறப்படும் வருவாயை ஆலயத்திற்கே செலவிட்டார்கள். ஆலயத்தினை இதுவரை காலமும் எந்தவொரு நிறுவனத்திலும் பதிவு செய்யாது தாமே ஆலயத்திற்கு வேண்டிய முழுச் செலவினையும் பூசை செய்வோரில் இருந்து ஏனைய எடுபிடி வேலை செய்வோர்களுக்கும் சம்பளம்கொடுத்தனர். பண்டாரம், மேளம் என்பவற்றை ஆலயத்திற்கு நித்தியமாக வைத்து அவர்களுக்கும் சம்பளம் வழங்கப்பட்டது. குருக்கள், பண்டாரம், மேளம் ஆகியோருக்கு ஆலயத்திற்கு அருகாமையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது. இதனால் அவர்கள் நேரம் தவறாமல் தமது கடமைகளை ஆற்றி வந்தார்கள். ஆலயத்திற்கு வருபவர்களிடம் ஆலயத்தில் அர்ச்சனை செய்ய இவ்வளவு தர வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் எதுவுமே இருக்கவில்லை. அடியார்களது விருப்பப்படி எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம். இறைவனிடம் தூய அன்பு கொண்டு அவரை அர்ச்சித்தால் போதும் என்ற மனநிறைவையே அவர்கள் விரும்பினார்கள்.

இவர்களது நிர்வாகம் பொதுநலத்துடன் விரிந்த சேவையாக விளங்கியது. ஆலயத்தினை வளர்ச்சியடையச் செய்து மக்களது விருப்பப்படி பூசையினையும், விழாக்களையும் நிகழ்த்துவதே சிறந்தது என இவர்கள் கருதினார்கள். விழாக்காலங்களில் கூட ஆலயத்திற்கு வருபவரிடம் இருந்து, வாகனப்பாதுகாப்பு, வீதிச்சுத்தம் இவற்றுக்காகப் பணம் வசூலிக்காது இதனைப் பொதுக் கடமையாகவே ஏற்றுச் செய்தார்கள். ஆலயத்தின் நிர்வாகத் திறமைகளையும் இதன் சிறந்த அமைப்பினையும் உணர்த்தத் திருவாளர் மு.வைரமுத்து என்ற பெரியார் 1956ஆம் ஆண்டில் இந்து சமய விருத்திச் சங்கம் ஒன்றினை மானிப்பாயில் ஆரம்பித்து ஆலயத்திற்கு வேண்டிய தொண்டுகளை முன்னின்று செய்துகொடுத்தார். சிறுவர்களது வினாவிடை, கட்டுரை, சொற்பொழிவு போன்றவற்றினை நிகழ்த்தி அவர்களை மேலும் ஊக்குவித்தனர். 1981ஆம் ஆண்டு முதலியார் மகேசன் அவர்களால் பன்னிரண்டு பேரைக் கொண்ட தொண்டர் சபை ஒன்று ஆலயத்திற்கு அமைக்கப்பட்டது. இவை யாவும் ஆலயத்தின் நிர்வாகத் திறமையினால் நிகழ்ந்தவையாகும்.

சட்டத்தரணியின் மைந்தர்கள் சமூகச் சட்டத்தைக் காப்பது போல் ஆலய விதிமுறைகளையும் நன்கு உணர்ந்து கொண்டு அதற்குப் பொருத்தமாகத் தங்களது நிர்வாகத்தை அமைத்துக் கொண்டார்கள். இவர்கள் எல்லோரிடத்திலும் அன்புடன் நடந்து கொண்டார்கள். அடியார்களும், பக்தர்களும் தங்களது விசுவாசத்தினைக் காட்டி ஆலய நிர்வாகத்திற்குப் பெரு உதவி வழங்கினார்கள். நிர்வாகத்தின் தலைவரான தர்மகர்த்தா தலைமுறை தலைமுறையாக இருந்து வருவதனால் இவர்களுக்கு

ஆலயத்தின் மீதும் நிர்வாகத்தின் மீதும் பெருமதிப்பும் அனுபவமும் இருந்தது. இதனால் ஆலய நிர்வாகம் சீரான முறையில் செம்மையாக நடைபெற்றது. பூசைகளும், விழாக்களும், குருபூசைத்தினங்களும் மற்றும் விசேட தினங்களும் குறிப்பிடப்பட்ட தினத்தில் நடைபெற்று வந்தன. இதனால் பலன்களும் கிடைத்தன. வேலக்கைப் பிள்ளையார் முருகன் ஆலய நிர்வாகம் நிர்வாகத்திறமையுடன் நடாத்தி வருகின்றது. ஆரம்பத்தில் இருந்தே இதன் நிர்வாக விடயங்களைப் பார்த்த எமக்குப் பெருமையும் பிறக்கின்றது

**- ஆலய பரிபாலனசபை**

## கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர்

மானிப்பாய் மாநகரில் கட்டுடை என்னும் ஷேத்திரத்தில் வயல்களின் நடுவே (மருதநிலம்) அரசமர நிழலில் கோயில் கொண்டிருக்கும் வீரகத்தி விநாயகரின் வரலாற்றை அமரர் திருமதி புவனேஸ்வரி - கதிர்காமநாதன் எனும் மூத்த அம்மையார் சொல்ல எழுதியவர் அமரர் திரு.இ.மகாலிங்கம் ( இளைப்பாறிய அதிபர், யா/ கட்டுடை சைவ வித்தியாசாலை) ஆவர்.

கட்டுடைத்து வெள்ளம் பாய்வதால் கட்டுடை என்ற பெயர் கொண்ட கிராமத்தில் மருதநிலத்தின் நடுவில் அமரர் வீரகத்தி என்பவர் கிணறு தோண்டும் போது நிலத்தினடியில் கருங்கல்லாலான விநாயகப் பெருமானின் திருவுருவம் அவரது கண்ணில் பட்டது. அவர் அதைக் கவனமாக எடுத்து அருகில் இருந்து அரச மரத்தில் வைத்து வழிபட்டு வந்தார். அங்கு இரணை வட்டுத் தென்னை மரமும் இருந்ததால் இரணை வட்டுப் பிள்ளையார் என அழைத்து வழிபட்டு வந்தனர். பக்தன் வீரகத்தி என்பவர் காலமாகியதன் பின்னர் அவரது மனைவி விநாயகப் பெருமானை ஆதரித்து வந்தார். அக்காலத்தில் பெருமான் கனவில் தோன்றி தனக்கு ஓர் ஆலயம் அமைத்து வழிபடுமாறு கூறியதற்கிணங்க அரசமரத்தினருகில் ஓர்சிறிய ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தனர். காலப்போக்கில் இவ்வாலயம் அடியார்களின் விடா முயற்சியால் வளர்ச்சி பெற்றது. எம்பெருமான் தன்னை நம்பிவரும் அடியார்களுக்கு அருள்பாலித்து வந்தார். பின்னர் இரணை வட்டுத் தென்னை பட்டு விட்டதால் மருதநில மத்தியில் இருந்த விநாயரைக் கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் என அடியார்கள் வழிபட்டு வந்தனர்.

இந்த ஆலயத்தின் பூசை உரிமை அட்டகிரிக் குருக்கள் கோயிலடியில் வசித்து வந்த சுவாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களது மூதாதையருக்கே சொந்தமாக இருந்தது. அதன் பின் சுவாமி விஸ்வநாதக் குருக்கள் மருமகன் பாலசண்முகக் குருக்கள் பூசை செய்து வந்தார். பின்னர் பல பூசகர்கள் பூசை செய்து வந்தனர். கடந்த சில காலங்களாக சி.தர்மராசக்குருக்கள் அவர்கள் பொறுப்பேற்று பூசை செய்ய வந்தார். 2014ல் அவர் சுகயீனம் காரணமாக இறைவனடி சேர்ந்ததால் முன்பு பூசகராக திரு.இ.புஸ்பராசக் குருக்கள் மீண்டும் ஆலயக் கிரியைகளைப் பொறுப்பேற்று நடாத்தி வருகிறார்.

நாம் அறிந்த அளவில் முதலாவது அறங்காவலராக வீரகத்திப் பரம்பரை வந்த

சேதுகாவலர் என்பவர் இருந்தார். அவருக்குப் பின் அடுத்த வாரிசான அ.வ. சின்னையா அவர்கள் அறங்காவலராக இருந்தார். அவரைத் தொடர்ந்து செல்லப்பா சுப்பிர மணியம் அவர்கள் அறங்காவலராக இருந்தார். அவரது காலத்தில் ஒறேற்றர் செ.சுப்பிரமணியம் அவர்களது தலைமை யில் தர்மகர்த்தா சபை உருவாக்கப் பட்டு ஆலயம் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இவரது காலத்தில் இவரதும், அமரர் சண்முகதாசன், அமரர் த. பரஞ்சோதி, அமரர் பொ.இராசலிங் கம் ஆகியோரது விடா முயற்சியால் சித்திரத் தேர் உருவாக்கப்பட்டது. அமரர் ஒறேற்றர் செ.சுப்பிரமணியம் அவர்களது காலத்தின் பின் அமரர் த.சண்முகதாசன் அவர்களது தலைமையில் சபை இயங்கி வந்தது. இவரது காலத்தின் பின் அமரர் இ.மகாலிங்கம் அவர்கள் தலைமையில் சபை இயங்கி வந்தது. அவருக்குப் பின் திரு.ச.சிவகுமாரன் அவர்கள் தலைமைப் பொறுப்பேற்றார். இப்பொழுது ஆலயத்தில் கேலங்காமம் அடியார்களது முயற்சியால் மஞ்சமும், வேறு பல அடியார்களின் முயற்சியால் கைலாய வாகனம், சர்ப்பவாகனம், அன்னப்பட்சி வாகனம் என்பனவும் எமது ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் நூறு ஆண்டுக ளுக்கு முன்பே மஹோற்சவம் நடந்தது என்பதற்கு சான்றாக திகதி பொறிக்கப்பட்ட மூஷிக வாகனம், குதிரைவாகனம், யானை வாகனம், ஊஞ்சற்பீடம் என்பன இன்றும் நல்ல நிலையில் இருப்பதைக் காணலாம். ஆலயம் இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதற்குச் சான்றாக ஆலயத்தின் ஆதிமூலக் கதவின் நிலையில் திகதி பொறிக்கப்பட்டு பாதுகாப்பாக இருக்கிறது. தல விருட்சமாகிய அரச மரத்தில் விநாயகப்பெருமானின் யானை முகம் உருவாகி வருகிறது. சென்ற வருடத்தில் இருந்து இக்கிராமத்தைச் சேர்ந்த மகளிர் சங்கத்தினர் தர்மகர்த்தா சபையின் அனுசரணையுடன் அறநெறிப் பாடசா லையை ஆரம்பித்து சிறப்பாக நடாத்தி வரு கின்றனர். எமது ஆலயத்தை மாரி காலத்தில் தூரத்தில் நின்று பார்த்தால் கடலின் நடுவே கப்பல் நிற்பது போல் கடற்கோட்டை போல் காட்சிய ளிப்பது கண் கொள்ளாக் காட்சியாகும்.

**- ச.சிவகுமாரன்**

வலி.தென்மேற்கு பிரதேசசபையின்
தவிசாளராகவும், கலாசாரப் பேரவை உறுப்பினராகவும்
சேவையாற்றி அமரத்துவமடைந்த
சண்முகம் சிவகுமாரன் அவர்களின் இறுதிப் பதிவு இது....

## கல்வளை அருள்மிகு காளியம்பாள் ஆலயம்

வயலும் வயல் சார்ந்த சூழலையும் கற்பகதருக்களையும் கல்வளை வீதி காளி கோயிலடி எனும் முகவரியினை சூடிக் கொண்ட சிறிய கிராமத்தின் குலதெய்வம், கிராமியத்தெய்வம் எனும் பெருமையுடன் நூற்றாண்டுகளைக் கடந்து இப்பகுதியில் வீற்றிருக்கும் தெய்வம் தான் அருள்மிகு காளி யம்மன் ஆலயம். இப்பகுதி மக்களின் பக்திக் கும், நம்பிக்கைக்கும் உரிய குலதெய்வமாக வழிபடப்படுகிறாள் காளியம்மன்

இவ்வாலயம் எப்போது தோன்றியது என்று கோடிட்டுக் காட்டக் கூடிய சான்றுகள் எதுவும் இல்லை. இருப்பினும் செவி வழிக் கதையின் பிரகாரம் இவ்வாலயத்தில் இன்றும்

நிலைத்து நிற்கக் கூடிய பூவரச மரத்தடியில் சிறுவர்களோ, கர்ப்பிணிப் பெண்களோ மற்றும் ஆசௌசம் உடையவர்கள் சென்றால் அவர்கள் சில தினங்களுக்கு நோய்ப் பிணிக்குள் சிக்கி விடுவார்கள்.

இது ஏன் இப்படி நடக்கிறது என்று இப்பகுதி மக்கள் சிந்திக்கத் தொடங்குவார்கள். இவ்வேளையில் தான் இவ்வூரில் வசித்த முத்துப்பிள்ளை கணபதி என்பவரின் கனவில் தோன்றி "நான் பூவரச மரத்தடியில் கோயில் கொள்ளப் போகிறேன்" என்று காளியம்மன் கூறியதாகவும் இதனைக் கேள்வியுற்ற அடிய வர்கள் அளவையூர் அருட்கவி சீ.விநாசித் தம்பி ஐயாவிடம் கேட்டபோது அவரும் அப்படியே அருள்வாக்காகக் கூறினார். இதன் பிரகாரம் சிறிய ஓலைக் குடிசை ஒன்றி னையமைத்து பொங்கல், மிருக பலியிடுதல் என்று கிராமிய வழிபாட்டு டன் மிகவும் பக்தி சிரத்தையாக ஒன்றித்துப் போனார்கள்.

குறிப்பிட்ட சில வருடங்கள் கடந்து போக மிருகபலியிடுதல் கைவிடப்பட்டு 8 நாட்கள் அலங்காரத் திருவிழாவாகவும் இறுதி 9ஆம் நாள் மடை பரவி பொங்கல் என்ற முறைமைக்கு மாறியது. இவ்வூரைச் சேர்ந்த அன்பர்கள் ஆகமம் சாராத பூசை முறைகளை மேற்கொண்டனர்.


காலப்போக்கில் இவ்வாலயம் முற்றாக இடிக்கப்பட்டு அழகிய முறையில் ஆகம முறைகளுக்கு அமைவாக அமைக்கப் பட்டு இக்கிராம மக்களின் அதீத முயற்சியால் 02.11.2006ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷே கம் நடைபெறத் திருவருள் கைகூடியது. தற்போது ஆகமம் சார்ந்த வழிமுறைகளில் பூசைகள் நடைபெற்று வருகிறது.

ஆனி மாதத்தில் வருகின்ற இறுதி வெள்ளிக் கிழமை(தமிழுக்கு) அலங்காரத் திருவிழா ஆரம்பமாகி 9ஆம் நாள் பொங்கல் விழாவுடன் நிறைவுபெறும்.

கற்பகதருக்களை நம்பித் தமது வாழ்வாதாரத்தை நகர்த்திய இக்கிராம மக்களின் வாழ்வில் தற்போது திருப்பங்கள் ஏற்பட்டுள்ளது. கல்வியிலும், பொருளாதாரத் திலும் மெல்ல மெல்ல மேன்மை பெற்று வருகின்ற சமூகமாக இன்று இக்கிராம மக்கள் விளங்குகின்றனர். இதற்கெல்லாம் மூல காரணம் இக்கிராமத்தில் வீற்றிருக்கும் குலதெய்வம் காளியம்மன் அழகுற காட்சியளிப்பதால் பூசை வழிபாடுகள் சிறந்த முறையில் நடைபெறுவதால் என்று இக்கிராம மக்களின் மனங்களில் அசைக்க முடியாத பக்திபூர்வமான நம்பிக்கை துளிர் விட்டுள்ளது.

**- செ.கவிதரன்**

## இளவாலை - சித்திரமேழி
## அருள்மிகு ஞானவைரவர் ஆலயம்



யாழ்ப்பாணத்தின் வடபாலில் கீரிமலை என்னும் புண்ணிய தீர்த்தத் தலத்துக்குத் தென்மேல் பகுதியில் சித்திரமேழி என்னும்



மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தானம்



சுதுமலை அம்மன் ஆலயம்



வேலக்கை பிள்ளையார் ஆலயம், மானிப்பாய்.



கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலயம், ஆனைக்கோட்டை.

பழம்பெரும் பதியுள்ளது. இவ்வூர் மக்கள் வடக்கே சென்று சிதம்பரம் முதலாம் சிவதல யாத்திரை செய்து வருபவர்கள். அங்கிருந்து மீளும்போது தம் கமத் தொழிலுக்கேற்ற வடக்கன் மாடுகளைக் கொண்டு வருவது வழக்கம். இங்ஙனம் சென்றுவருபவர்களில் முதலிக்குட்டி கோர்வையில் உதித்த கந்தப் பரும் ஒருவராவார். இவர் 16ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சிதம்பரம் சென்றிருந்தார். சிதம்பரம் முதலாம் சிவதல தரிசனங்களை நிறைவு செய்து கொண்டு அங்கிருந்து திரிசூலம் ஒன்றையும் எடுத்து வந்தார். சித்திரமேழி என்ற காணிப்பெயர் பூண்ட இடத்தில் கொன்றை மரத்தடியில் அதனை முறையாக ஸ்தாபித்து வைரவ வழிபாட்டினை ஆரம்பித்து வைத்தார். சிதம்பரத்திலிருந்து கொண்டு வந்து ஸ்தாபித்த வைரவர் ஆதலின் இவ் வைரவர் அம்பலவாணர் வைரவர் என்று அழைக்கப் பட்டார். இத்திருநாமத்தை வைரவர் ஆலயத்துக்கு எழுதி விடப்பட்ட காணி உறுதிகளில் காணலாம். இளவாலைப் பகுதியில் உள்ள சைவ ஆலயங்களில் இது பழமை வாய்ந்தது. இவ்வாலயத்திற்குரிய நிலம் பரிகாரி வன்னியராலும், பூசாரி வம்சத்தினராலும், விநாயகர் வம்சத்தினரா லும் வழங்கப்பட்டது. சைவப் பாரம்பரிய வாழ்க்கையில் சிறிதளவும் தவறாதவர் நம்மூர் மக்கள். இவர்களின் பெரும் பொக்கிஷமாக இவ்வாலயம் அமைந்திருக்கிறது. இவர்கள் ஆசார அனுட்டான சீலர்கள். இவர்கள் காலை, மாலை வேளைகளில் சுவாமி தரிசனம் செய்த பின்பே தம் முயற்சிகளை மேற்கொள்ளுவது மட்டுமல்லாது வழிபாட்டின் பின்னரே உணவும் அருந்துவது வழக்கம். இவ்வாலய பூசைகளைச் சைவ வேளாளர்களே முன்னின்று நடத்தினர். முதலில் திரு.கந்தப் பரும் அவரின் மகன் திரு.வைரவ நாதரும் அதன் பின் திரு. ஆறுமுகமும் பூசையை நடாத்தி வந்தார் கள். ஆறுமுகத்தின் மக்கள் திருவாளர்கள் சின்னத்தம்பியும், முருகேசுவும் பூசையைச் செய்தனர். இவர்களது சைவ அனுட்டான சீல நெறியைக் கண்ட மக்கள் பக்தி சிரத்தையோடு பூசாரி என்று அழைத்தனர். இவர்களை அயலவர்களும் சிறப்பித்தனர். பிற்காலத்தில் இவர்கள் சிவஸ்ரீ செல்லையாக் குருக்கள் எனப்படும் மகா கணபதிக் குருக்களை மாதகலில் இருந்து அவரின் தாயாருடன் 1875ஆம் ஆண்டு அழைத்து வந்தனர். இக்குருக்கள் பிற்காலத்தில் கல்வி கேள்விகளிற் சிறந்து, சிறந்த அர்ச்சகராக விளங்கினார். இவர்களுக்கு வசிப்பிடம் கொடுத்து ஆதரித்தவர்கள் வைரவநாதர் கந்தரும், கணபதியாருமாவார். குருக்களுக்கு வழங்கப்பட்ட காணி சந்திரசேகரம் கந்தையாவுக்கு உரியது என்பது குறிப்பிடத் தக்கது. குருக்கள்மார் ஆலய விசேட பூசைகளைச் செய்து வர நித்திய பூசைகளைத் திரு. ஆறுமுகம் சின்னத்தம்பியும் அவர் மகன் ஆறுமுகமும் செய்து வந்தனர். இவர்களைத் தொடர்ந்து சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்களும் இராமலிங்கசர்மாவும் பூசையைச் செய்து வந்தனர். இவ்வாலயத்தில் சைவ புண்ணிய காலங்களில் சிறப்பாக விழாவெடுத்துக் கொண்டாடி வருவது வழக்கம். ஊரவர் அனைவரும் மனமொத்துக் கலந்து வழிபட்டு மகிழ்வர்.

சிவஸ்ரீ இராமலிங்கக் குருக்களின் பின் அவரது பெறாமக்கள் கோவில் பூசையை மேற் கொண்டு வந்தனர். இதனைத் தொடர்ந்து கீரிமலை தேவஸ்தானத்தைச்

சேர்ந்த சிவஸ்ரீ ந.இராமச்சந்திரக் குருக்கள் தன் சிறுவயதிலே இவ்வாலயத்தில் பூசையைக் கையேற்றுச் சிறப்பாகப் பணியாற்றி வந்தார். இவர் காலத்தில் ஆலயம் திருவருட் பொலிவுடன் விளங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரின் பின் இவர் மகன் சிவஸ்ரீ இ.பாலச்சந்திரக்குருக்கள் பூசையைப் பொறுப்பேற்று இன்றுவரை பணியாற்றி வருகின்றார்.

இவ்வாலயம் ஆரம்பித்த காலம் தொட்டே புராணபடனம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பன காலந்தோறும் நடைபெறுவது வழக்கமாக உள்ளது. திருக்கல்யாணம் படிப்பு விழாவாக எடுத்து நடாத்தப்பட்டு வந்துள்ளது. இவ்விழாவைத் திரு.சி.விசுவநாதரும், திரு.சி.சிதம்பரப்பிள்ளையும் நடாத்தி வந்தனர். திரு.மு. சதாசிவம், திரு.ச. கந்தையா, திரு.சி ஆறுமுகம், திரு.ஆ.வயிரவப்பிள்ளை, திரு.சி.நமசிவாயம், திரு.சி.சுப்பிரமணியம் என்போர் இக் கைங் காரியத்தில் ஈடுபட்டு வந்தனர். பின் இம் முயற்சியில் சைவப் புலவர் வித்துவான் திரு.வ.செல்லையா, சைவப்புலவர் திரு.சு. செல்லத்துரை, திரு.வ.சதாசிவம், திரு.வ. மயில்வாகனம், திரு.ச.ஜெகநாதன், சைவ இளவல் திரு.மா.மார்க்கண்டு என்போர் ஈடுபட்டு உழைத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இம்மரத்தடியில் ஞானவைரவப் பெருமான் பலருக்குக் காட்சி கொடுத்தமை ஓர் அற்புத நிகழ்ச்சியாகக் குறிப்பிடலாம்.

திரு.த.பேரானந்தராசா தலைமையில் திரு.புனித தயாபரன் செயலாளராகவும், திரு.ச.பிரபாகரன் பொருளாளராகவும் அமைந்த ஆலய பரிபாலனசபை முயற்சியால் உள்மண்டபங்கள், வெளி மணி மண்டபம் என்பன புனரமைக்கப்பட்டு 5ஆவது கும்பாபிஷேகம் ஆடிமாதம் 14ம் திகதி 2013 நடத்தப்பட்டது. ஆலய பரிபாலன சபையால் பழனியானந்தன் முன்பள்ளி கடந்த பத்து வருடங்களாக இயக்கப்பட்டு வருகின்றது.

பழனியானந்தன் முன்பள்ளிக்கான விளையாட்டு மைதானம் ஆலயபரிபாலன சபையால் அமைக்கப்பட்டது. ஆலயத்தின் முன்பாக உள்ள 3 பரப்புக் காணி மலேசியாவில் வசித்த அமரர் சின்னத்தம்பி கனக சபையால் வழங்கப்பட்டது. அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் அன்னதான மண்டபம் ஆலய பரிபாலன சபையால் அமைக்கப்பட்டது. அம்மண்டபத்தில் இப்பொழுது முன்பள்ளி இயங்கி வருகின்றது.

**- வைத்திய கலாநிதி. த.பேரானந்தராசா**

**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்**

இலங்கையில் இந்து ஆலயங்கள் பல சிறப்புடன் விளங்குகின்றபோதும் அவற்றுள் குறிப்பிடத்தக்க சில ஆலயங்கள் பிரசித்தி பெற்றுக் காணப்படுகின்றன. அந்த வகையில் ஈழத்திலுள்ள புகழ் வாய்ந்த விநாயகர் ஆலயமாக விளங்குவதி "மானியம்பதி மருதடி விநாயகர்" ஆலயம் ஆகும். மருதமரச் சோலையில் இவ்வாலயம் அமைந்துள்ள படியால் தொன்று தொட்டு மருதடி விநாயகர் ஆலயம் என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தின் நிர்வாகப் பிரிவுகளுள் ஒன்றாகிய வலிகாமத்தின் தென்

மேற்குப் பிரிவில் உள்ள மானிப்பாய் என்னும் பட்டினத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இக்கோயில் அமைந்துள்ள நிலப்பகுதி "பிள்ளையார் திடல்" என அழைக்கப் படுகின்றது. கிழக்கே மானிப்பாய் பிரதான வீதிக்கும், வடக்கே மருதடிச் சந்திக்கும், தெற்கே மானிப்பாய் பட்டினத்திற்கும், மேற்கே பரந்த வயல்வெளி களுக்கும் மத்தியில் மருதடி விநாயகர் ஆலயம் விளங்குகின்றது. சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய வயலும் வயல் சார்ந்த நிலமும் "மருதம்" என அழைக்கப் பட்டது. மருதடியான் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அமைவிடமும் இதனோடு ஒப்பு நோக்கத்தக்க வகையில் தெற்கு, மேற்குப் பகுதியில் மருதநிலப் பிரதேசத்திற்குரிய வயல்கள், குளங்கள் என்பவற்றைக் கொண்டு விளங்குகிறது.

மருதடி விநாயகர் ஆலயத்தின் தோற்றமும் ஞானி ஒருவருடன் தொடர்பு பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாலயம் யோக நிஷ்டை கை வந்த சிவயோகி ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டு பூஜித்து வந்ததாக ஐதீகம் உள்ளது. இந்த சிவயோகி மருதடி விநாயகர் தற்போது கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் கர்ப்பக்கிருஹ மண்டபத்தை ஸ்தானமாகக் கொண்டு விநாயகரை சற்குருவாக சிந்தித்து ஞான சாதனங்களை மேற்கொண்டார் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு ஞான சாதனைகளை மேற்கொண்டு வந்த மகான் விநாயகர் திருப்பாதங்களை அடைக்கலமாகக் கொண்டு சமாதியடைந்த பின்னர் இவரது சமாதியினை ஸ்தானமாகக் கொண்டு மருதடி ஆலயம் அமைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நல்லூர், செல்வந்நந்நிதி, புலோலி பசுபதீஸ்வரர் கோயில் போன்ற ஆலயங்களும் மகான் களின் சமாதியுடன் சம்பந்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய சமாதி உள்ள ஆலயங்களில் தெய்வசாந்நித்யமும் இதன் காரணமாக புலன்கள் இறைவனை நோக்கி ஒருமுகப்படும் தன்மையும் அதிகமாக இருப்பதைக் காணலாம்.

இந்த மகானின் சாந்நித்யத்தா லேயே மருதடி விநாயகர் கோயில் மேன் மேலும் மகத்துவம் பெற்றது. பெருந்திரளான மக்கள் வந்து மருதடியானை வழிபடுவதற்கும் அதுவே காரணமென்று கூறலாம். இந்த மகானின் காலம் ஏறத்தாழ கி.பி 14ம் நூற்றாண்டு அல்லது அதற்கு முற்பட்டதாக இருத்தல் வேண்டும். ஏனெனில் இவரால் தோற்றுவிக்கப்பட்டு பின்னர் வளர்ச்சியுற்ற ஆலயத்தை போர்த்துக்கேயர் இடித்ததாகக் கூறப்படுகின்றது. போர்த்துக்கேயரால் இடித்த ழிக்கப்பட்ட ஆலயங்கள் யாவும் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசர்களாகிய ஆரியச்சக்கர வர்த்திகளால் அமைக்கப்பட்ட வையே ஆகும். எனவே மருதடி விநாயகர் ஆலயமும் ஆரியச் சக்கரவர்த்திகளின் போஷிப்பைப் பெற்றிருத் தல் கூடும். ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பா ணத்தை அரசாட்சி செய்த காலம் கி.பி 13ம் நூற்றாண்டின் இறுதி தொடக்கம் 16ம் நூற்றாண்டு வரையாகும். எனவே ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆலயங்களையமைத்த காலத்தை முன்னெல்லையாக வைத்துக் கொண்டு மகானின் காலத்தையும், மருதடி விநாயகர் ஆலயத் தோற்றக் காலத்தையும் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

கி.பி 17ம் நூற்றாண்டில் போர்த்துக் கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது

இக்கோவிலும் அவர்களது சுதேச மதங்க ளுக்கு எதிரான கொள்கைக்கு இலக்காகி இடித்தழிக்கப்பட்டது. இவர்கள் இக் கோவிலை இடித்தழித்ததோடமையாது இக்கோவில் இருந்த இடத்தை சவக்காலையாக்கி விட்டனர். பழைய ஆலயக் கட்டிடத்திற்கு இவ்விடத்தில் அத்திவாரம் வெட்டும் பொழுது மனித எலும்புகள் காணப்பட்டமையானது இதற்கு ஓர் ஆதாரமாகும். சவக்காலையும் மயானமும் இப்போது கோயிலில் இருந்து ஏறக்குறைய 125 யாருக்கப்பால் ஆலயத்தின் மேற்கு வாயிலுக்கு நேரேயுள்ளன.

மானிப்பாய் பகுதியில் மகான் சமாதியடைந்த இடமும் இப்போதுள்ள ஆலயத்தின் மூலஸ்தானத்திற்குக் கிழக்கில் இருப்பதுமாகிய மருதமரத்தின் கீழ் இராக் காலங்களில் போர்த்துக்கேயர் கண்க ளுக்குப் புலப்படாமல் சைவமக்கள் கற்பூரம் கொளுத்தி மருதடி விநாயகரை மானசீகமாக வழிபட்டு வந்தனர். காலம் செல்லச் செல்ல இவ்வழிபாடு இவ்விடத்தில் நின்ற பல மருதமரங்களில் ஒன்றன் கீழ் நடந்து வந்தது. இதற்கு ஓர் ஆதாரமாக இப்பொழுதும் மூலஸ்தானத்திற்கு அருகாமை யில் உள்ள மருதமரத்தின் கீழும், வெளி வீதியில் நிற்கின்ற மருதமரத்தின் கீழும் மக்கள் உற்சவ காலங்களில் கற்பூரம் எரித்து மருதம் தளிரைப் பறித்து கண்களில் ஒற்றி காதில் அல்லது தலையில் அணிந்து கொள் கின்றமையைக் கூறலாம். அக்காலத்தில் மருதமரத்தின் கீழ் மருதடியானை மானசீக மாக மக்கள் வழிபட்டமையின் தொடர்ச்சியே இவ் வழிபாட்டு மரபு என்று கூறலாம்.

போர்த்துக்கேயருக்குப் பின் யாழ்ப்பா ணத்தை ஆட்சி செய்த ஒல்லாந்தர் காலத்தின் பிற்பகுதியில் மருதடி விநாயகர் கோயில் மீளவும் சிறிதாக அமைக்கப்பட்டது. மருதடியா னின் ஆலயம் மீண்டும் கட்டப்படுவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவர் தியாகராஜக்குருக்கள் ஆவார். ஒல்லாந்தர் போர்த்துக்கேயரைப் போல் அல்லாமல் தமது ஆட்சியின் இறுதிக்காலத்தில் மத பரஸ்பரக் கொள்கையைக் கடைப்பிடித்தமையும், இடிக்கப்பட்ட ஆலயங்கள் மீளவும் கட்டப் படுவதற்குக் காரணமாக அமைந்தது. நல்லூர் கந்தசுவாமி கோயில், நயினை நாகபூஷணி அம்மன்கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் என்பன இக்காலத்தில் மீள அமைக்கப்பட்ட கோயில்களாகும். இலங்கையிலுள்ள விநாயகர் ஆலயங்களுள் பிரசித்தி பெற்றது மருதடி விநாயகர் ஆலயமாகும். இரண்டு கோபுரங்கள் பரிவார சந்நிதிகள் என்பவற் றுடன் தீர்த்த மண்டபம், அன்னதான மண்டபம் என்பவற்றுடன் ஆலயத்தின் அமைப்பு முறை இன்று வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றது. இன்றுள்ள ஆலயத்தின் கட்டிட வளர்ச்சி ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் இறுதியில் தோன்றியதாகத் தெரிகின்றது. தியாகராஜக்குருக்கள் ஸ்தாபித்த ஆலயத்தை நிலைக்களனாகக் கொண்டு காலத்திற்குக் காலம் சைவ அன்பர்களால் ஆலயக் கட்டிட அமைப்புப் பல அம்சங்க ளுடன் வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

**- சுப்பிரமணியம் உதயபாலன்**

## நவாலியூர் அட்டகிரி கந்தசுவாமி கோவில்



நவாலி என்னும் புராதன கிராமமானது யாழ்ப்பாணத்தின் தலைநகரில் இருந்து சுமார் ஆறு கிலோமீற்றர் தூரத்தில் மேற்குப் பக்கமாக அமைந்துள்ளது.இக் கிராமத்தின் அஸ்டதிக்குகளிலும் தனிச்சிறப்பு பெற்ற பல ஆலயங்கள் அமைந்துள்ளது. இவற்றுள் முருகப் பெருமானின் வழிபாட்டுத் தலம் நவாலி கிராமத்தின் வடக்கே அட்டகிரிக் கந்த சுவாமி கோவில் என்ற பெயரில் அமைந்துள்ளது.

நவாலி கிராமத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த முன்னோர்களில் பெரியவர் வீரசிங்கம் உடையார் குடும்பமும் ஒன்றாகும். இவரது பெருந்தொகையான காணி நிலங்கள் இன்றும் நவாலி வடக்கில் பரந்து காணப் படுகின்றன. இவர்களில் வாரிநாசகம் என்பவரது காணி அட்டகிரி என்னும் பெயருடன் வயல் ஓரம் அமைந்துள்ளது. அக்காணி சுமார் இரண்டே முக்கால் நிலப்பரப்பு நிலமாகும். இதில் பெரியார் வீரசிங்கம் அவர்களின் முன்னோர்கள் ஒரு மடம் அமைத்து அதில் சிவபூசை அறையும் நீண்ட வெளி விறாந்தையும் அமைத்து இந்து சமயக் கிரிகைகளை நடாத்த இந்தியாவிலிருந்து வரவழைத்த சைவக்குருக்களையும் குடிய மர்த்தி இருந்தனர். இச் சைவக்குருக்கள் மார் சுற்றுப்பட்டிக் கிராமங்களில் புரோகிதம் செய்து வாழ்ந்து வந்தனர். இத்தெய்வீக மடம் குருக்கள் மடம் எனப் பெயர் விளங்கியது. அதன் தேவைக்காக சிறிய கிணறு ஒன்று அமைக்கப் பட்டு இன்று வரை நன்னீர் சுனையாக இப்பகுதி மக்களுக்கு தாக சாந்தி வழங்கி வருகின்றது.

நவாலிக் குருக்கள் மடத்தின் கிழக்கே நன்செய் நிலங்களும், தாமரைத்தடாகமும் அமைந்திருந்தது. இம் மருத நிலச்சூழலிலேயே பிற்காலத்தில் அட்டகிரி முருகப் பெருமான் குடி கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

நவாலியின் குடிமக்கள் பலரையும் போல் இக்கிராமத்தில் வாழ்ந்த கதிரை மலை என்ற பெண் ஒருவர் கதிர்காமம் முருகன் மீது பெரும் பக்தி கொண்டு வாழ்ந்தார். இவரது வேண்டுதல் பக்தியின் பயனாக வட்டுக்கோட்டை யாத்திரிகர் மூலம் கதிர்காமத்தில் இருந்து கொண்டு வந்த வேல் ஒன்று கிடைத்தது. அவ் வேலை வீட்டில் வைத்து வணங்க மனம் விரும்பாத கதிரைமலை என்ற அம்மையார் அட்டகிரி வளவில் அமைந்த குருக்கள் மடத்தின் சிவபூசை அறையில் வைத்து சகலரது வழிபாட்டுக்கும் வழிசெய்தார். இச்சிவசை அறை கிழக்கு நோக்கி அமைந்திருந்தது. அம்மடத்தி லேயே தங்கியிருந்த சைவக்குருக்கள் அவ்வேலுக்கு பூசை செய்து வந்தார். இவை நடந்த காலம் அண்ணளவாக 1850ம் ஆண்டு என நாம் துணிபு கொள்கின்றோம்.இக்குருக்கள் மடம் 1969ம் ஆண்டளவில் தகர்த்துப் புது நிர்மாணம் செய்யப்பட்டது. தகர்க்கப்பட்ட மடம்

சுண்ணாம்பும், கண்டகல்லும் கொண்டு கட்டப்பட்டிருந்தது. அதன் அமைப்பு மற்றும் பண்படுத்தப்பட்ட ஓடுகள் மூலம் அம்மடம் சுமார் 125 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என அப்போது அறியப்பட்டது.

முருகப்பெருமானின் வேலின் மகத்து வமும் கீர்த்தியும் பரவ மெய்யடியார்களின் கூட்டம் பெரும் கூட்டமானது. உரிய காலமும் வந்தேற குருக்கள் மடத்திற்கு வடக்கே அமைந்த சுப்பிரமணியம் முதலியாரின் அட்டகிரி என்னும் காணிப்பெயர் கொண்ட புண்ணிய பூமியில் வள்ளி தேவயானை சமதே முருகப்பெருமான், செங்கல் கொண்டு அமைக்கப்பட்ட கருவறை யும் அர்த்த மண்டபமும் அமைந்த ஆலயத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டு பூசை வழிபாடு செய்யப்பட்டு வந்தார்.

இவ்வாலயத்தின் வளர்ச்சியும் தேவை யும் உணரப்பட்டு உற்சவங்கள் மற்றும் நைமித்திய கருமங்களை சிறப்புறச்செய்ய பிராமணக்குருக்களை நியமிக்க இக்கிராம மக்கள் விருப்பம் கொண்டனர். இதன் பொருட்டு இந்தியாவின் சீர்காழி என்ற இடத்தே இருந்து பிராமணக்குடும்பம் ஒன்றை இலங்கைக்கு வரவழைத்தனர். இப்பிராமணக்குடும்பம் ஆரம்பத்தில் மானிப்பாய் நகரின் எழுமுள்ளி என்னும் கிராமத்தில் பிராமணன் வளவு என்று அழைக்கப்படும்வளவில் குடியிருந்து இவ் ஆலயபூஜைகளைக் கவனித்தனர். இவர்களின் இருமகன்கள் பிரம்மஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் மற்றும் பிரம்மஸ்ரீ வேங்கடேஸ்வரக்குருக்கள் ஆவர். இவர்கள் பின்னர் குருக்கள் மடத்தின் தெற்கே இரு இல்லம் அமைத்து சந்ததி சந்ததி யாக வாழ்ந்து வந்து ஆலயக் கருமங்களை கவனித்து வந்தனர். இவர்களது ஏழாவது சந்ததி தற்போது ஆலய பிரதம குருவாக இருக்கின்றார்.

குருக்கள் மடம் முருகனின் கோவி லாக மாற்றப்பட்டமையால் குருக்கள் கோவில் எனப் பெயர் பெற்று இன்றும் நவாலியூர் அட்டகிரி கந்தசுவாமி கோவில் என்ற பெயருடனும் குருக்கள் கோவில் என்றும் அழைக்கப்படுகிறது.

நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர் அட்டகிரிப் பதிகம் என்னும் பதினொரு பதிகமும் திருவூஞ்சல் பதிகமாக பதினொரு பாடல்களும் அட்டகிரி முருகன் மேல் பாடியுள்ளார். இவ்வா றாக இலங்கையின் தலைசிறந்த புலவரால் பாடப்பட்ட பாடல் பெற்ற தலமாக நவாலியூர் அட்டகிரி கந்தசுவாமி கோவில் சிறப்புப் பெற்றிருக்கிறது.

**க.கௌரிகாந்தன்**

# 17ஆம் நூற்றாண்டில் யாழ். கத்தோலிக்க திருச்சபையின் எழுச்சி

**சுவாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை,**
மறையாசிரியர், சில்லாலை.

17ம் நூற்றாண்டு தொடக்கத்திலே நல்லூர் அரசு போத்துக்கேயர் வசமானது. அதனோடு பிரான்சீஸ்கன் சபையாருடன் வேதம் போதிக்க யேசு சபை, அகுஸ்தீனார் சபை, சாமிநாதர்சபை, கப்புச்சீன் சபை குருக்களும் இலங்கைக்கு வந்தனர். அதனால் அனேகர் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்தனர். யாழ் குடாநாடு 34 பங்குகளாகப் பிரிக்கப்பட்டுக் கரையோரத்தில் பிரான்சீஸ் கன் சபையாரும் உட்பகுதியில் யேசு சபையாரும் பரிபாலனம் செய்தனர். பண்டத்தரிப்பிலே யேசு சபை யாரின் மருந்து மாதா ஆலயமும், குருமனையும், பாடசாலை யும் நிறுவப்பட்டன. இந்து சமயத்தை விட்டு மனம் மாறியவர்கள் சாதியில் கெட்டவர்கள் என்று இனசனரால் பழிக்கப்பட்டு இம்சிக்கப் பட்டனர். அதனால் அமைதிதேடிய சிலர் மேற்கேயுள்ள காட்டுப் பகுதியாகிய சில்லாலை யில் குடியேறினர். அயலூரிலிருந்த யேசு சபைக் குருமாரும் ஆலயம் அமைத்து வழிபாடு நடத்தினார் கள்.1641ல் எல்லோரும் கத்தோலிக்கரான இக்கிராமத் திலே 395பேர் வாழ்ந்தனர். ஆனால் அவர்கள் விரும்பிய அமைதி நெடுநாள் நீடிக்கவில்லை.1658 ஆவ யிலே யாழ்ப்பாணத்து அடைக்கல மாதா கோட்டை ஒல்லாந்தர் கைவசமானது. இவர்கள் வியாபாரம், அதிகாரம் போன்ற வற்றில் போத்துக்கேயரின் போட்டியாளர்கள் மட்டுமல்ல சமயத்திலும் கல்வின் பிரிவுக்குச் சேர்ந்த எதிரிகளாகவும் இருந்தனர். அதனாலே கத்தோலிக்க சமயத்தை முற்றாக வேரறுக்க முயன்றனர். குடாநாட்டில் பணி புரிந்த குருக்களைச் சிறைபிடித்து இந்தியா விற்கு அனுப்பினர். கோயில்களையும், பாடசாலைகளையும் அபகரித்துப் பிரிவினைப் போதனையை பரப்ப முயன்றனர். கல்வின் மத வழிபாட்டிலே சமூகமளிக்கவும் பிள்ளை களை அவர்களுடைய போதனைகளை கேட்க அனுப்பவும் கட்டளையிட்டனர். தவறினோர்க்கு தண்ட மும் தண்டனையும் வழங்கினர். வேலை வாய்ப்புக்கள் மறுக்கப் பட்டன. இவ்வாறாகப் பல விதத்தில் கத்தோலிக்கரைத் துன்புறுத்தினர்.

எல்லோரும் கத்தோலிக்கரான சிற்றூர் சில்லாலை. யேசுசபையினர் போதி த்த உரோமத் திருச்சபையின் கொள்கையி னைக் காப்பாற்றியது. பண்டத்தரிப்பிலுள்ள

மருந்து மாதா உருவச்சிலைகளை எடுத்து வந்து சேமித்தனர். அதிலொன்றுதான் நமது ஆலயத்துள்ளே ஆசனத்தில் அமர்ந்து தோன்றும் மாதாவின் பிரதிமை. கோயிலின் முகப்புப் பக்கத்தை ஆலய மூப்பரின் உறைவிடமாக்கினர். அதனால் அது எட்டுச் சார் வீட்டின் உருவெடுத்தது. தெற்குப் பக்கம் வாசல் இருந்ததைத் தெற்கொழுங்கையின் வளைவு காட்டுகிறது. மூப்பர் வீடு தாண்டியே ஆலயத்தின் பீடப் பக்கம் போக வேண்டியிருந் ததனால் ஆலயம் மறைவாயிற்று. அத்துடன் வேறு பலரும் கோயில் வளவினுள்ளே தங்கள் குடிசைகளை அமைத்தனர். இதனால் வேத வழிபாடும் கல்வியும் தொடர வசதியானது. பதித அதிகாரிகள் திடீர் தாக்குதல் நடத்தவும் இடம் அருகியது. வியாபாரிகளின் பொருளாசைக்கு இடமளிக்காத சிற்றூர் ஆதலால் சில்லாலை மக்களை தொல்லை யின்றி வாழ வழி சமைத்து ஒல்லாந்தரால் சின்னத் தோமையார் என வசைப்பெயர் சூட்டிப் புறக்கணிக்கப்பட்டனர். அதனால் 30 ஆண்டளவாகக் கத்தோலிக்கக் குருக்களின் பணிகள் இல்லாதபோதும் சத்தியவேத ஒழுக்கத்திலே நிலைத்திருந்தனர். சில்லாலை மக்களின் கத்தோலிக்க விசுவாச வைராக்கியத்திற்கு வெகுமதி போலவே அருளாளர் யோசப் வாசை அவர்களிடம் அனுப்பக் கடவுள் கருணை கூர்ந்தார்.

அருளாளர் யோசவ் வாஸ் 1651ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 21ம் நாள் இந்தியா வின் கோவாவில் வனாலி எனும் ஊரில் பிறந்தார். 1676ல் குரு பதவி பெற்றார். கோவை இராட்சியத்தின் பல பாகங்களிலும் பணியாற்றியபின் இலங்கையில் ஒல்லாந்தர் களால் கத்தோலிக்கர்கள் அனுபவிக்கும் பல துன்பங்களை அறிந்து அவர்களுக்கு பணியாற்றுவதற்காக பல விதமான பயணக் கஷ்டங்கள் மத்தியிலும் இரப்போன் வேடம் பூண்டு மன்னார் ஊடாக 1687ல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். பிச்சைக் காரன் கோலத்தில் ஊரில் கத்தோலிக்கரைத் தேடிக் கண்டு பிடித்து அவர்களுக்குப் பணியாற்றினார். ஆனால் ஒல்லாந்தரின் கடினமான கட்டளைகள், அட்டூழியங்களை அறிந்திருந்த யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோ லிக்கர் பதித அதிகாரிகளுக்கு அருகில் இருப்பது அருளாளருக்கு ஆபத்து என்று உணர்ந்து 10மைல் தொலைவிலுள்ள சில்லாலை வசதியானது என்று குருவை அங்கு அனுப்ப முடிவு செய்து அனுப்பியும் வைத்தார்கள்.

30வருடங்களின் பின்னர் கத்தோலிக்கக் குரு ஒருவர் வந்திருக்கிறார். அத்துடன் சில்லாலையில் தங்க வந்திருக் கிறார் என்றறிந்த மக்கள் மிகவும் குதூகலத் துடன் இருந்தனர். அருளாளர் யோசவ் வாஸ் ஏறக்குறைய மூன்று வருடங்கள் சில்லாலை யில் முதல் பங்கு குருவாக அங்கு தங்கி யிருந்து அரும் பணியாற்றினார்.

சில்லாலை கத்தோலிக்க கிராமத்தின் உற்பத்தி, ஆலய நிர்வாகம், வழிபாட்டு முறை கள், நாட்டுவழப்பம், மொழிநடை ஆகிய வற்றை முனிவர் பலரிடமும் கேட்டறிந்து அதற்கேற்ற விதத்தில் இறை யேசுவின் நற் செய்திப் பணியை ஆற்றினார். கோவிலாகப் பயன்படுத்திய நாற்சபர் அறையிலே முனிவ ருக்கு மக்கள் இடம் தயாரித்தனர்.

யோசவ் வாஸ் அடிகளார் இவ்வு லகை விட்டு நீங்கியதன் 300வது

ஆண்டைப் பூர்த்தி செய்யும் முகமாக 2013.01.16ல் அவர் வாழ்ந்த இடத்தில் எண் கோண வடிவத்தில் மண்டபம் ஒன்று அவரின் நினைவாக ஸ்தாபிக்கப்பட்டது.

2015 ஜனவரியில் புனித பாப்பரசர் 13ம் பெனடிக்ற் அவர்களின் இலங்கை விஜயத்தின் போது யோசவ் வாஸ் அடிகளார் புனிதராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இக் கிராமத்தை முன்னைநாள் தமிழ் அரசர்கள் இராசதானியாகக் கொண்டார்கள் என்பதும் வாய்மொழிக்கதைகள். இதற்கொப்ப இக்கிராமத்தில் தற்போது காணப்படும் தடயங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

**முருகன் கேணி**

"புராதன சில்லாலை" என்னும் கட்டுரையில் குறிப்பிடப்பட்ட முருகன் கோவிலையடுத்துக் காணப்பட்ட முருகன் கேணி, இன்று பனை, ஈச்சம் பற்றை, நாயுண்ணி போன்றவற்றால் நிறைந்து கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின் றது.

**நீர்வாவியடி**

அக்காலத்தில் அரசகுமாரிகள் நீராடு வதற்காக அமைக்கப்பட்ட நீர்த்தடாகம். இங்கு ஜாடி ஜாடியாகப் பொற்குவியல் நிலத்துள் புதைத்து வைக்கப்பட்டுள்ளது எனவும், பொன்னாலான அம்மியும் குளவியும் உண் டெனவும் இப்பெரும் புதையல் யாவற்றையும் ஒரு காவற்தெய்வம் காத்துவருகின்றது எனவும் கதைகள் உள்ளன.

நாம் அறியப் படிக்கற்கள் உடைந்து விழுந்து காணப்பட்ட இவ்வாவி இன்று தூர்ந்து பனை பற்றைகளின் இருப்பிடமாகி விட்டது. சில்லாலைச் சரித்திரத்தில் நீர்வாவி யடி முக்கிய இடம்பெறுகிறது.



**ஜோசவ்வாஸ் முனிவரின் சிலுவை**

வேதவிதிகளை அனுசரியாத காயர் பிறஞ்சிப்பிள்ளை ஞாயிறு தினங்களில் பூசையை அலட்சியம் செய்து வேலைசெய்து வந்தார். ஒரு ஞாயிறன்று வழமைபோல் பூசைக்குச் செல்லாது வீடு வேய்ந்தார். இதையறிந்த ஜோசவ் வாஸ் வீடு வேய்வதை விட்டுப் பூசைக்கு வருமாறு கூறியனுப்பினார். காயர் செவிசாய்க்கவில்லை. "காயர் வீடு தீப்பற்றி எரியட்டும்" என்றார் முனிவர் எரிந்தது வீடு. முனிவரிடம் சென்று மன்னிப்புக் கோரினார் காயர். முனிவர் தன் சிலுவையைக் கழற்றி "இச்சிலுவை உன்னிடம் உள்ளளவும், குறையாச் சோறும் புத்திரபாக்கியமும் உண்டு" என ஆசீர்வதித் தார். இச்சிலுவை தலைமுறை தலை

முறையாகக் காயர் இனத்தவரிடமுள்ளது. தற்போது இது திருமதி அந்தோனிப்பிள்ளை திரேசம்மாவின் காப்பிலுள்ளது. இவர் இதனை உயிர்போலக் காத்துவருகிறார். இதனுள் இருப்பதை அறியச் சிலுவையை உடைத்து பார்த்த குரவர் ஒருவர் குருடர் ஆனதாகக் கர்ண பரம்பரைக் கதையுண்டு. இச்சிலுவையைப் பற்றி ஆராய்ச்சி நடாத்த வந்த பாப்பரசரின் பிரதிநிதிகள் றோமைக்கு எடுத்துச் செல்வதற்கு இதனைத் தருமாறு கேட்டதற்கு இதன் உடைமையாளர் மறுத்து விட்டார்.

**நீர்வாவியடித்திடல்.**

இது அழிந்தொழிந்த வரலாறு பெற்றஅரண்மனைத்திடலென ஊகிக்கப் படுகிறது.

**பூமணந்தான் கேணி**

வட இலங்கையின் பழைய இராசதானிகளில் ஒன்றாகச் சில்லாலை திகழ்ந்தது. அரசரின் அந்தப்புர மாதர்களும், மந்திரிப் பிரதானிகளின் குடும்பப் பெண்களும் பூம்பந்தாடிப் பொழுது கழித்த நந்தவனம் தான் பூமணந்தான் என்று இன்று அழைக்கப் படும் இடமென தேர்கிறோம். ஒருகாலத்தில் இங்கு சந்தணத் தருக்களும் மந்தார மரங்களுமிருந்ததென சொல்லப்படுகிறது.

**அதிகாரி கலட்டி**

இன்று சில்லாலை விளையாட்டு மைதானமாக விளங்கும் இந்தப் பரந்தவெளி அன்று தமிழரசரும், அதிகாரிகளும் வசித்த இடமென தெரிகிறது. இதற்கு அடுத்துள்ள குழியெனும் இடத்தில் குற்றவாளிகளைத் தண்டிக்கும் தூக்குமேடை அமைந்திருந்தது என அறிகின்றோம்.

## தமிழில் எழுந்த கிறிஸ்தவக் காப்பியங்கள்

- தேவ அருள் வேத புராணம்
- தேம்பாவணி
- திருச்செல்வர் காவியம்
- யோசேப்புப் புராணம்
- கிறிஸ்தாயணம்
- திருவாக்குப் புராணம்
- ஆதி நந்தவனப் புராணம்
- ஆதி நந்தவன மீட்சி
- ஞானானந்த புராணம்
- ஞானதிக்கராயர் காப்பியம்
- அர்ச்சயசிஷ்ட சவேரியார் காவியம்
- பூங்காவனப் பிரளயம்
- கிறிஸ்து மான்மியம்
- இரட்சணிய யாத்திரிகம்
- சுவர்க்க நீக்கம்
- சுவிசேட புராணம்
- திரு அவதாரம்
- சுடர்மணி
- வியாகுலப் பிரசங்கம்
- இயேசு காவியம்
- அருள் அவதாரம்
- அறநெறி பாடிய வீரகாவியம்
- எஸ்தர் காவியம்
- மோட்சப் பயணக் காவியம்
- அன்னை தெரசா காவியம்
- அருள்நிறை மரியம்மை காவியம்
- புவியில் ஒரு புனித மலர்
- அருட்காவியம்
- நறசெயதிக் காவியம்
- இயேசு மாகாவியம்
- இதோ மானுடம்
- புதிய சாசனம்
- பவுலடியார் பாவியம்
- உலக சோதி
- திருத்தொண்டர் காப்பியம்
- மீட்பதிகாரம் என்னும் பேரின்பக் காப்பியம்
- ஆதியாகம காவியம்
- அருள் மைந்தன் மாகதை
- இயேசுநாதர் சரிதை
- பிள்ளை வெண்பா என்னும் தெய்வசகாயன் திருச்சரிதை
- புனித பவுல் புதுக்காவியம்
- கன்னிமரி காவியம்
- புதுவாழ்வு
- சிலுவையின் கண்ணீர

# மானிப்பாய் திருச்சபை

1816ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த அமெரிக்கன் மிஷனரிமார் தமது பணியை யாழ்ப்பாணத்தில் செய்யும்படி இலங்கையில் இருந்த பிரித்தானிய ஆளுநர் கட்டளையிட்டார். இதன் பிரகாரம் அவர்கள் தமது சமயப் பணிகளைச் செய்தனர். 1820 ஆம் ஆண்டு அருட்திரு.G.லட்லேட் குடும்பத் தினரால் மானிப்பாயில் ஆரம்பிக்கப் பட்ட திருப்பணி பரவத் தொடங்கியது. அதே காலத்தில் தேவாலயத்திற்கு முன்பாக நின்ற மருத மரத்தடியில் இந்துக்களும் கூடித் தங்கள் குல தெய்வமாகிய பிள்ளையாரை வழிபட்டு வந்தனர். ஒரு சிறு இந்துக் கோவிலும் அங்கு உருவாக்கப்பட்டது.1823 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கந்தன் என்பவர் முதன்முதலாக மானிப்பாய்த் திருச்சபையில் சேர்ந்தார். பின்னர் 1824 ஆம் ஆண்டு கதிர்காமர் என்பவர் அவரது நான்கு பிள்ளைகளோடு சபையில் சேர்ந்தார். இவர்களே மானிப்பாய்த் திருச்சபையின் ஆரம்ப விசுவாசிகள்.

மானிப்பாயிலுள்ள ஒல்லாந்தரின் கைவிடப்பட்ட ஆலயத்தில் தமது திருத்தங் களை மேற்கொண்ட பின்னர் தமது பணியை அமெரிக்க மிஷனரிமார்கள் ஆரம்பித்தனர். தமிழ்ப் பாஷையைப் படித்துத் திருப்பணி யைச் செய்து ஆலயத்தையும் திருத்தி அதில் தமது ஆராதனைகளை நடத்தி வந்தனர். 1931ஆம் ஆண்டு மார்ச்மாதம் மானிப்பாயி லுள்ள மிஷன்வீடும், ஆலயமும் எரிந்தன. அங்கே அப்பொழுது ஊடுலேட் ஐயரும் அம்மாளும் வசித்தனர். உவெசிலியன் மிஷனைச் சேர்ந்தவர்களாயிருந்த றட்பேட் ஐயரும் அம்மாளும் அன்று அவர்களுடன் தங்கியிருந்தனர். தேவ கிருபையால் அந்த அக்கினிச் சேதத்திலிருந்து யாவரும் உயிர் தப்பிக் கொண்டார்கள்.

1931ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மானிப்பாய்த் திருச்சபை தனித்திருச்சபையாக உதயமாயிற்று. 1840இல் இங்கு எண்பத் தொரு பேர் பணியாற்றியதாகவும் இவர்கள் 6 வருடத்தில் 150 பவுண் சேர்த்து மானிப்பாய்த் தேவாலயத்தின் கூரை கோபுர வேலைகளுக் கெனக் கொடுத்து உதவியதாகவும் அறியப் படுகின்றது.

1851 ஆம் ஆண்டு டானியேல்பூவர் சபையின் போதகரானார். இவர் காலத்தில் மானிப்பாயில் பயங்கரமான பேதி நோய் பரவியிருந்தது. இவரும் டாக்டர் கிறீனும் வீடு வீடாகச் சென்று சேவை செய்தனர். ஈற்றில் இருவரும் பேதி நோயால் பீடிக்கப்பட்டனர். டாக்டர் கிறீன் ஒருவாறு குணமடைந்தார். ஆனால் அருட்திரு.பூவர் 1855இல் மரித்து

விட்டார். இவரது இறுதி ஆராதனை மானிப்பாயில் நடாத்தப்பட்டது.

1860ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதி முதல் நவாலித்திருச்சபை மானிப்பாய்த் திருச்சபையின் ஒன்றிப்பிலிருந்து பிரிந்து தனிச்சபையாக செயற்படத் தொடங்கியது. மானிப்பாய்த் திருச்சபை அமைந்துள்ள இயற்கைச் சூழல் பற்றிப் பால்தெயஸ் பாதிரியார் குறிப்பிடுகின்றார். "2000 மக்களைக் கொள்ளத்தக்க பெரியதொரு தேவாலயம் இருக்கின்றது. அதன் முன்பாக ஒரு சைவக் கோயில் இருக்கின்றது. அதனருகில் ஒரு குளம் இருக்கின்றது" என்கிறார் பால்தெயஸ் பாதிரியார் .

**கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை**

இலங்கையின் முதலாவது மேலைத் தேய வைத்தியசாலை மானிப்பாயில் 1848ஆம் ஆண்டு டாக்டர் S.F கிறீன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இவர் ஆரம்பித்த வைத்திய கலாசாலையே இலங்கையின் முதல் வைத்திய கலாசாலை யாகும்.

அந்நாட்களில் மாணவர்களை பயிற்றுவித்து மருத்துவர்கள் ஆக்குவதில் டாக்டர் கிறீன் மிகவும் அக்கறையாக இருந்தார். வடமாகாணத்தை வைத்திய நிபுணர்களினால் நிரப்புவது டாக்டர் கிறீனின் கனவாக இருந்தது.




டாக்டர் கிறீனின் முதலாவது மருத்துவ மாணவர் அணி



அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை, மானிப்பாய்



நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயம்



மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலயம்



யோசெப் வாஸ் அடிகளாரின் திருச்சிலுவை

மருத்துவப் புத்தகங்கள் போதாது இருந்ததால் டாக்டர் கிறீன் புத்தகங்களை ஆக்கி அல்லது வேறு மருத்துவ புத்தகங்களி லிருந்து தமிழில் மொழி பெயர்த்தார். மொழிபெயர்த்த புத்தகங்கள் 4000 பக்கங்களை உடையனவாக இருந்தன. இலங்கையில் வைத்தியர்கள் போதாதிருந்த மையினால் அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்து வைத்தார்.

டாக்டர் கிறீன் யாழ். அரசாங்க அதிபர் டைக்குடன் (Dyke) சேர்ந்து Jaffna Friend - in Need Society Hospital ஐ ஆரம்பித்தார். இந்த Friend - in Need Society Hospital இன்றுயாழ்.போதனா வைத்தியசாலையாகப் பெயர் மாற்றம் பெற்றது. டாக்டர் கிறீன் 1873இல் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்றார். திரும்பி அவர் வராத காரணத்தால் அரசாங்கம் கொழும்பில் ஒரு மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்தது.

## மானிப்பாயில் முதலாவது அச்சு இயந்திரசாலை

மிஷனரிமார் ஆரம்பத்தில் ஓலைச் சுவடிகளில் திருமறை வசனங்களை எழுதி விநியோகித்தனர். இந்தியாவிலிருந்தே சகல தமிழ் நூல்களையும் பெற்றனர். 1820 இல் ஜேமன் கரட் என்பவரை அமெரிக்கன் மிஷன் சங்கம் ஒரு அச்சு இயந்திரத்துடன் அனுப்பியது. இவர் யாழ்ப்பாணத்திற்குப் போக பிரிட்டிஷ் தேசாதிபதியால் அனுமதி வழங்கப் படவில்லை. எனவே, தான் கொண்டுவந்த அச்சு இயந்திரத்தை நல்லூரில் இருந்த இலங்கைத் திருச்சபை யைச் சேர்ந்த ஜோசப் நைற் என்பவருக்கு விற்று விட்டார். 1832இல் அமெரிக்கன் மிஷன் மேல் போடப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. 1833இல் அச்சு வேலையில் அனுபவம் மிக்க ஈஸ்டமன் மைனரும் அவரது மனைவியும் இப் பணிக்காக அனுப்பப்பட்டனர். இவர் 1834இல் இலங்கைத் திருச்சபையிடமிருந்து முன்னர் விற்கப்பட்ட அச்சு இயந்திரத்தை வாங்கி மானிப்பாயில் ஓர் அச்சு இயந்திர சாலையைத் தொடங்கினார்.

உலகின் முதல் தமிழ்ப் பத்திரிகை யான உதயதாரகையும் இலங்கையின் இரண்டாவது ஆங்கிலப் பத்திரிகையான Morning Starம் 1841இல் இந்த அச்சு இயந்திரசாலையிலிருந்து வெளியாகியது என்பது குறிப்பிடத் தக்கது.

## மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

மிஷனரிமார் மக்களுக்குக் கல்வி அறிவூட்டுதல் அவசியமென உணர்ந்து கிராமப் பாடசாலைகளையும் அத்தோடு ஆங்கிலமொழி மூலமான ஆங்கிலப் பாடசாலைகளையும் நிறுவினர். 1836இல் ஒரு கிராமப் பாடசாலை மிஷனரிமாரால் தொடங்கப்பட்டது. அது ஆரம்பத்தில் தற்போதைய வைத்தியசாலை வளாகத்தின் தென்மூலையில் அமைந்திருந்ததாக அறியப் படுகின்றது. இந்த மிஷன் பாடசாலையும் கனம் போச் என்பவர் நடாத்தி வந்த பாடசா லையும் 1900த்தில் ஒன்றாக இணைக்கப் பட்டு மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை தொடங்கப்பட்டது. இதன் முதல் அதிபராக A.M நத்தானியேல் கடமையாற்றினார். இப்பாடசாலை 1960இல் அரசுடமையாக்கப் பட்டது.

**- கலாசாரப் பேரவை**

# பண்டத்தரிப்பில் அமெரிக்க இலங்கை மிஷனரிமாரின் சேவையும் பயன்பாடும்

**கலாநிதி சி. நோபிள் சுரேந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

**அமெரிக்க மிஷனரிமாரின் வருகைக்கு முன்**

யாழ்ப்பாணத்தில் மூவகைச் சாதியினரும், நால்வகை மதத்தினரும் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. தமிழர்கள் தூய்மைக்குப் பேர் போன சைவசமயத்தையும் வியாபார நோக்கமாக யாழ்ப்பாணம் வந்த சிங்களவர்கள் அகிம்சை மார்க்கமான பௌத்தத்தையும், வாணிப நோக்கமாக வந்த முஸ்லீம்கள் சகோதரத்துவத்தைப் போதிக்கும் மகமதிய மார்க்கத்தையும், மதம் மாறிய தமிழர்கள் அன்பு மார்க்கமான கிறிஸ்தவத்தையும் பின்பற்றி வாழ்ந்தனர்.

யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்த ஆரியச் சக்கரவர்த்திகளைப் போரிட்டுத் தோற்கடித்துப் போர்த்துக்கீசர் இந்நாட்டை ஆண்டனர். அவர்களால் ரோமன் கத்தோலிக்க மதம் யாழ்ப்பாணத்தில் பரம்புவதாயிற்று. போர்த்துக்கீசரைப் போரிலே தோற்கடித்த ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்பினர்.

கி.பி 1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் காலம் தொடங்கியது. அப்போது ரோமன் கத்தோலிக்கச் சபையின் மூன்று பிரிவுகளில் ஒன்றான யேசு சபைக்குருமார் பத்துச் சபைகளில் ஊழியம் செய்தனர். இதில் ஒன்றான பரிகரிப்பு மாதா (the Lady of Remedies) பண்டத்தரிப்பில் ஸ்தாபிக்கப்பட்டது. பண்டத்தரிப்பில் ரோமன் கத்தோலிக்க மதம் பல நூற்றாண்டுகளாக நிலை பெற்று நீடித்து நிற்கிறது. இக்காலத்தில் பண்டத்தரிப்பிலுள்ள தென்னிந்தியத் திருச்சபைத் தேவாலயம் 1656ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பலர் காலத்துக்குக் காலம் மதம் மாறியபோதும் ரோமன் கத்தோலிக்கச் சபையினரில் பலர் பக்தி வழுவாது வாழ்ந்து வருவது பெருமைக்குரிய ஒன்றாகும்.

1658ஆம் ஆண்டு ஒல்லாந்தர் போர்த்துக்கீயரிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றித் தமது அரசை நிலைநாட்டினர். தமது மதமான புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்பப் பல்வேறு முயற்சிகளையெடுத்தனர். மார்க்க போதனையிலும், கல்வி முயற்சிகளிலும் ஈடுபட்டனர் .இவர்களுள் பால்டியஸ் ஐயர் (Baldaevs) மிகச் சிறப்பான சேவையாற்றி 130 தேவாலயங்கள் கட்ட வழி

வகுத்தார். பண்டத்தரிப்புத் தேவாலயத்தைக் குறிப்பிடும்போது "பிரமாண்டமான கல்லாலான கட்டிடம்" எனவும், இதனருகாமையில் 600 மாணவர்களைக் கொண்ட பாடசாலை இருப்பதாகவும், இரு அறைகளைக் கொண்ட விசாலமான வீடும், அருகில் அழகிய பூந்தோட்டமும், நன்னீர்மீன் தொட்டியும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1200-1300 பேர் வரை ஞாயிறு ஆராதனைகளில் பங்கு பற்றுகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அமெரிக்க மிஷனரிமார் வருகை

"நீங்கள் உலகமெங்கும் போய்ச் சகல சிருஷ்டிக்குஞ் சுவிஷேசத்தைப் பிரசங்கியுங்கள்" என்ற கட்டளையிலும் "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடன் கூட இருக்கிறேன்" என்ற இயேசு பிரானின் வாக்குத்தத்தத்திலும் நம்பிக்கை கொண்டு குரு அபிஷேகம் பெற்றவர்களாய் 1815ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ம் திகதி நியூபெரிபோட்(New Bery Port) துறைமுகத்திலிருந்து டிறயட் (Dryad) என்றும் பாய்க் கப்பலில் ஆண்குருமார் ஐவரும் பெண்கள் நால்வருமாக ஒன்பதின்மர் கடவுளை மட்டுமே நம்பித் தமது சுவிஷேசப் பயணத்தை ஆரம்பித்தனர். ஐந்து மாதக் கடல் பிரயாணத்தின் பின் 1816ஆம் ஆண்டு பங்குனி 22ம் திகதி கொழும்பு வந்து சேர்ந்தனர். கொழும்பிலிருந்து, கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் ஜேம்ஸ் றிச்சட்ஸ் (James Richards ) மெக்ஸ் (B.CMeigs) தானியல் பூர் (Danial Poor) எச்.பாரட்வெல் (H.Bardwell ) எட்வேட் உவறன் (E.Warren) என்போரும் முதல் மூவரின் மனைவியரும் வந்தனர். இவர்கள் மார்க்க வளர்ச்சியிலும், கல்வி அபிவிருத்தியிலும், மருத்துவ சேவையிலும், சமூக சேவையிலும் தங்கள் பணிகளைச் செய்யத் தொடங்கினர்.

## சமயப்பணி

இப்பணியைச் செவ்வனே செய்ய அமெரிக்க மிஷனிமார் தமிழ் மொழியைக் கற்றனர். அதன் மூலம் சுதேசிகளுக்கு வேதப் பாடங்களும் நடத்தப்பட்டன. தரும விடுதிப் பாடசாலை ஒன்று பண்டத்தரிப்பில் ஸ்தாபிக்கப்பட்டது. 1656ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட பண்டத்தரிப்புத் தேவாலயம் கனம் ஸ்கடர் ஐயர் அவர்கள் தன் செலவிலே புனருத்தானம் செய்து ஆராதனைகள் நடாத்தினார். 1820 ஆனி மாதம் 08ந் திகதி இத்தேவாலயத்தில் முதலாராதனை டாக்டர் ஸ்கடர் ஐயரால் நடத்தப்பட்டது. 1831இல் பண்டத்தரிப்பு தனிச் சபையாகிற்று. இலங்கையில் அமெரிக்க இலங்கை மிஷனரிமார் ஊழியம் செய்ய ஆரம்பித்த முதற் கிராமங்களில் பண்டத்தரிப்பும் ஒன்றாகும். 1821இல் யாழ்ப்பாணத்திற்கு வந்த மிஷனரிமார் யாவரும் ஒன்றுகூடிப் பண்டத்தரிப்புத் தேவாலயத்தில் ஒரு நற்கருணை ஆராதனை நடத்தினர். ஸ்கடர் ஐயரின் ஊழியம் அயல்கிராமங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. அயல் கிராமங்களில் கூடாரம் அடித்து நோயாளருக்கும் மருத்துவ உதவிகளைச் செய்து கிறிஸ்துவின் அன்பைப் போதனையிலும், சாதனையிலும் வெளிப்படுத்தினார்.

தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, உடுவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு என ஐந்து பிரிவுகளாகப் பிரிந்து மிஷனரிமார் ஊழியம் செய்தனர். இவ் ஐந்து இடங்களிலும்

சுழற்சி முறையில் நற்கருணை ஆராதனைகள் நடத்தப்பட்டன.

1820ஆம் ஆண்டிற்குப் பின் முறையாகக் காலத்துக்குக் காலம் அமெரிக்க இலங்கை மிஷனரிமார் வருகை தந்து பண்டத்தரிப்புக்கும் வந்து ஊழியம் புரிந்தனர். இக்காலத்தில் அயற்கிராமங்களில் பண்டத்தரிப்புத் திருச்சபை தன் செல்வாக்கைப் பயன்படுத்திச் சுவிஷேசப் பணிகளில் ஈடுபட்டு வல்லமையுடைய சபையாக விளங்கிற்று. சபையார் சாதி, சமய வேறுபாடுகளைக் களைந்து ஒருவரையொருவர் கனப்படுத்தித் திருச்சபை முறைமைகளைக் கடைப்படித்து வேற்றுமைகளை விலக்கி விட்டு இயேசு பெருமானின் போதனைகளின் படி நடந்தனர்.

1795இல் போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட ஆலயங்கள் யாவையும் ஒல்லாந்தர் சுவீகரித்து மதம் மாறியவர்கள் விரும்பிய மதங்களுக்குச் சென்று வழிபட அனுமதித்தனர். யாவரும் சொந்த மதங்களுக்குத் திரும்பினர். யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மத வளர்ச்சி தளர்வுற்றது. பல கிறிஸ்தவர்கள் வேடதாரிகள் ஆகி இரட்டை வாழ்வு வாழ்ந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியில் அரச உத்தியோகம், பிள்ளைகளின் படிப்பு, கை நிறையச் சம்பளம், பட்டம், பதவி, உயர்ந்த சமுதாய அந்தஸ்து இவைகளுக்காகப் பல சுதேசிகள் புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவினர். பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையுமாக வாழ்ந்த இப்போலிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ போதனைகளுக்கு எதிரான இரகசிய பாவங்களிலும் ஈடுபட்டனர். இவர்களில் சிலரே இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளாக உண்மைக் கிறிஸ்தவர்களாகக் காணப்பட்டனர். இவற்றை அறிந்திருந்தும் அமெரிக்க இலங்கை மிஷனரிமார் தாங்கள் எதற்காக இங்கு வந்தார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற அயராது பாடுபட்டுச் சுவிசேடப் பணியை முன்னெடுத்துச் சென்றனர். பிற மதத்தினரின் கல்லெறிக்கும், சொல்லெறிக்கும் அவர்கள் பயப்படவில்லை. கள்வர்கள் அவர்கள் உடைமைகளைக் கைப்பற்றினர். கிறிஸ்தவர்களானவர்களினதும், மிஷனரிமாரின் வீடு ஒன்றும் எரிக்கப்பட்டது. பணமுடையினால் பல காலம் கஷ்டப்பட்டனர். இம் மிஷனரிமாரின் சமயத் தொண்டு மட்டும் அவர்கள் இந்நாட்டை விட்டு வெளியேறும் வரை தொடர்ந்து கொண்டே இருந்தது. அன்புக்குரியவர்களை இம் மண்ணிலும், கடலிலும் காவு கொடுத்த போதும் அவர்கள் அர்ப்பணிப்புடன் செய்யப்பட்ட இப்பரிசுத்த மிஷனரிமாரின் சேவையைக் கிறிஸ்தவர்களாக இலங்கையில் இருப்போர் இன்றும் நினைவு கூர்ந்து போற்றுகின்றனர்.

## கல்விச்சேவை

அமெரிக்க இலங்கை மிஷனரிமார் இங்கு வந்த போது விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே படிப்பறிவுள்ளவர்களாக இருந்தனர். பெண்களில் யாருமே படித்ததாகக் கண்டிலர். பெண்கள் படிப்பது தவறானது, அப்படிப் படித்தால் அவர்களுக்குத் திருமணமேயாகாது எனச் சுதேசிகள் நம்பினர். வீட்டுக்குள்ளே பெண்களைப் பூட்டி வைத்து அடிமை வாழ்வு வாழச் செய்தனர். இது அமெரிக்க இலங்கை மிஷனரிமார்களின் உள்ளத்தை வெகுவாகத் தொட்டது.

ஒரு சமுதாயம் முன்னேறக் கல்வி அறிவே முக்கியமெனக் கண்ட அம் மிஷனரி

மார் கல்விக்கூடங்களை நிறுவி பெண் கல்விக்கு முக்கியம் கொடுத்தனர். ஆங்கிலக் கல்வியும், தமிழ்க்கல்வியும் போதிக்கப் பட்டன. படிப்படியாகக் கல்வியில் சுதேசிகள் ஆர்வங்காட்டத் தொடங்கினர்.

1823ஆம் ஆண்டு இன்றைய யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரக் கல்லூரி பாலர் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு இன்று அசுர வளர்ச்சி கண்டு பெருமையுடன் நிமிர்ந்து நிற்கின்றதென்றால் இதற்குக் காரணமாக இருந்த ஒரு அமெரிக்க மிஷனரியையும், சுதேசிகளில் ஒருவரான அதிபரையும் யாருமே மறக்க முடியாது. செல்வி எச்.எ கில்லிஸ்(H.A Hillic) என்னும் அமெரிக்க மிஷனரியே பண்டத்தரிப்பில் முதல் பெண் ஊழியராக வந்து ஒரு பெண்களுக்கான பாலர் பாடசாலையை ஆரம்பித்துத் தானே ஆசிரியையாகவும் இருந்து பணி புரிந்தார். பண்டத்தரிப்பில் தங்கியிருந்து அயல்கிராமங்களுக்குச் சென்று பெண் கல்வியின் முக்கியத்தை எடுத்துக் கூறி மாணவர்களைச் சேர்த்தார். பெண்களுக்கென இலவச விடுதியும் அமைத்தார். இவரது வைராக்கியமான ஆற்றல் மிக்க கல்விச் சேவை பத்து வருடங்கள் வரை தொடர்ந்தது. மாற்று மதத்தவர் கூட வாயாரப் புகழ்ந்து நினைவு கூர்ந்தனர். இவரது தன்னலமற்ற சேவையைச் செல்வி கிருபைமலர் மதியாபரணம் அவர்கள் 1946ல் பொறுப்பேற்று கல்லூரியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். இவர் காலமே இக் கல்லூரியின் பொற்காலம் எனலாம். அதிபர், ஆசிரியர்கள் விடுதியில் தங்கியிருந்து பணி செய்ய வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்தார். விடுதி வசதிகளைப் பெருக்கிப் பல புதிய கட்டடங்களை நிர்மாணித்தார்.

புதிய திறந்த வெளியரங்கு, விளையாட்டு மைதானமெனப் பல கட்டுவித்தார். இன்று பௌதீக வளங்கள் நிரம்பப் பெற்ற பெண்கள் கல்விக் கூடமாக மிளிர்வதற்கு இவரே காரணகர்த்தாவாக இருந்தார். 1966ல் இப்பாடசாலை அரசால் சுவீகரிக்கப் பட்ட போது 1800க்கு மேற்பட்ட மாணவர்களும், 75க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் இருந்தனர். இப்பாடசாலையின் விடுதியில் 500க்கு மேற்பட்ட மாணவர்கள் குடாநாட்டிலும் இலங்கைத்தீவின் பல பாகங்களிலுமிருந்து வந்து கல்வி கற்றமை இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அமெரிக்க இலங்கை மிஷனரிமாரில் வைத்திய கலாநிதி ஸ்கடர் அவர்களின் உழைப்பாலும், முயற்சியாலும் ஏனைய மிஷனரிமாரின் துணை கொண்டு பண்டத்தரிப்பு அயல் கிராமங்களில் பின்வரும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

1) மாதகல் மேற்கு அ.மி.த.க பாடசாலை
2) நுணசை அ.மி.த.க பாடசாலை
3) பண்டத்தரிப்பு அ.மி.த.க பாடசாலை
4) பண்ணாகம் அ.மி.த.க பாடசாலை
5) பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலை
6) பிரான்பற்று அ.மி.த.க பாடசாலை
7) பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி

1950ம் ஆண்டு அரசினால் இப் பாடசாலைகள் கையேற்கப்பட்டபோது வெளிநாட்டு மிஷனரிமார் படிப்படியாக எம் நாட்டை விட்டு வெளியேறினர்.

இவர்களது கல்விப் பணியால் இன்று ஆயிரம் ஆயிரம் பேர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்விமான்களாகக், கனவான்களாக பார் போற்ற வாழ வித்திட்ட இம்

மிஷனரிமார் சேவையைப் பண்டத்தரிப்பும் அதைச் சூழ உள்ள கிராமங்களும் என்றும் மறப்பதற்கில்லை.

## மருத்துவப் பணி

மருத்துவக் கலாநிதி J.ஸ்கடர் ஐயாவே பண்டத்தரிப்பிலும் அதைச்சூழ உள்ள மாதகல், சில்லாலை, மாரீசன்கூடல், சிறுவிளான், பண்ணாகம், சித்தன்கேணி, வடலியடைப்பு ஆகிய கிராமங்களிலும் மருத்துவப் பணியை ஆரம்பித்த முதல் மிஷனரி வைத்தியராவார். இதன் மூலம் பண்டத்தரிப்பு உலகம் முழுக்கப் பேசப்படும் நிலையேற்பட்டது. இவர் உலகிலேயே முதன்முதலாக பண்டத்தரிப்பில் வைத்தியம் செய்ய ஒரு வைத்தியசாலையையும் அமைத்து மருத்துவத் தொண்டை 1820ஆம் ஆண்டு ஆனி மாதம் 08ந் திகதி ஆரம்பித்தார். தென்னிந்தியாவிலே புகழ் பூத்து நிற்கும் வேலூர் வைத்தியசாலையைக் கட்டி அங்கு பணி புரிந்தவரும் இவரே.

செல்வாக்கான குடும்பத்திலே அமெரிக்காவில் பிறந்து, வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்று சிறந்த வைத்தியரெனப் பெயரெடுத்த இவர் தேவ அன்பினால் உந்தப்பட்டுப் பெற்றோர், உறவினர் தடுத்தும் கேட்காமல் வசதியற்று நோய்வாய்ப்பட்டு இறக்கும் ஏழையெளியவர்களுக்காகச் சேவை செய்யத் தன்னை ஒப்புக் கொடுத்து 1820ம் ஆண்டில் பண்டத்தரிப்பிலமைந்துள்ள தேவாலயத்தில் முதல் ஊழியராகக் கடமையேற்றவர். 1833ம் ஆண்டு வரை தொடர்ந்து மருத்துவப் பணி செய்தார். இதன் மூலம் அமெரிக்க இலங்கை மிஷனரிமார் பணிகளில் வைத்தியசேவையும் முக்கிய இடத்தைப் பிடித்தது.

இவர் பண்டத்தரிப்புக் கிராமத்தோடு நில்லாமல் மேற்குறிப்பிட்ட அயல் கிராமங்களுக்கும் சென்று கூடாரமடித்து அங்கு தங்கி அல்லல்பட்டுக் கவனிப்பாரற்றுக் கிடந்த நோயாளரைச் சந்தித்து வைத்தியம் செய்தார். அத்தோடு கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து மத போதனைகளும் செய்தார். கற்கக்கூடிய மாணவர்களுக்கு முதல் உதவி முறைகள், சிறிய வைத்தியசிகிச்சை முறைகள், சுத்தம் பேணும் வழிவகைகள் யாவையும் பண்டத்தரிப்பிலும், அயல் கிராமங்களிலும் கற்றுக் கொடுத்தார். இவரது வைத்திய சேவையைப் பெற்ற பண்டத்தரிப்பு மக்கள் பாக்கியம் செய்தவர்களாகவே கருதப்படுகிறார்கள். இன்று அவர் வாழ்ந்த இல்லம் குரு இல்லமாக ஸ்கடர் இல்லமாக பெயர் பூண்டு குருமாரால் உபயோகிக்கப்படுத்தப் பட்டு வருகின்றது. இவர் இங்கிருந்து 1833ம் ஆண்டு மாற்றலாகிச் சென்றதன் பின் மருத்துவப்பணி செவ்வனே இங்கு நடந்தமைக்குச் சான்றுகள் இல்லை.

## சமுதாயப்பணி

அமெரிக்க மிஷனரிமார் தீண்டாமையை ஒழிக்கப் பாடுகள் பட்டனர். ஆனால் இதில் அவர்கள் தோல்வியே கண்டனர். ஆண்டான் அடிமை, உயர்ந்தோன் தாழ்ந்தோன், பாமரன், பணக்காரன் என்ற வேறுபாடுகளை நீக்க முயற்சித்தனர். ஆலய தரிசனம், பாடசாலைகளில் உயர்ந்தோருக்கு முதலிடம், பொதுக்கிணறுகளில் தண்ணீர் மொள்ளுதல் போன்றவை கீழ் சாதியினருக்கு மறுக்கப்பட்டது. இக்காலத்தில் சாதிவெறி தலைவிரித்தாடுவது கண்டு வேதனைப்பட்டனர். தாழ்வுற்று நலிவுற்று நின்ற மக்களுக்கு

உணவு, உடை, பொருளுதவி செய்தனர். சாதி, மதம் பாராது வைத்தியம் செய்தனர். சனசமூக நிலையங்கள், தையற்பயிற்சி நிலையங்கள் போன்றவற்றை அமைத்து மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்க வழி வகுத்தனர். பெண் கல்விக்கு முக்கியம் கொடுத்து கல்வியறிவை அவர்கள் பெற இலவசப் பாடப் புத்தகங்களிலிருந்து கல்வி கற்க அத்தனை வசதிகளையும் செய்து கொடுத்தனர். தேவையிலுள்ள அன்றாடு காய்ச்சித் தின்னும் வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினர். விடுதிகளில் மாணவர்கள் தங்கிக் கற்க இலவச, உணவு, உடை, கற்றல் உபகரணங்கள் கொடுத்துதவினர். தம்மை ஒறுத்துச் சுய சிந்தனையைத் தவிர்த்துக் கெட்டிக்கார மாணவர்களை உயர் கல்வி கற்கச் செய்தனர். வசதியற்ற ஏழைப்பிள்ளைகளைத் தத்தெடுத்துத் தம் செலவிலே வளர்த்துப் படிப்பித்தனர். மக்கள் பணி செய்த இயேசு நாதரின் திருத்தொண்டர்களின் தியாகம் நிறைந்த சேவையால் பண்டத்தரிப்புப் பகுதி வாழ் ஆதிக் கிறிஸ்தவ பரம்பரையின் விழுதுகள் இன்றும் இவர்களது கல்வி, சமய, சமூக, வைத்தியப்பணிகளைத் தம் மூதாதையர் சொல்லக் கேட்டுப் பிரமித்துப் பெருமித மடைந்து நன்றிகூறி வருகின்றனர்.

## முடிவுரை

பண்டத்தரிப்பில் அமெரிக்க இலங்கை மிஷனரிமாரின் சமய, சமூக, வைத்தியப் பணிகள் சொல்லில் அடங்கா தவை. உலகத் திருச் சபையின் ஒரு சிறு துளி போல் இச்சபை இருந்தாலும் மிஷனரி மாரின் வருகையால் இப்பகுதிவாழ் மக்கள் பெற்ற நன்மைகள் மிக மிக அதிகம் எனலாம். அருள்நாதர் இயேசு பிரான் மேல் அசைக்க முடியாத நம்பிக்கையும் துணிவும் கொண்டு ஆயிரக்கணக்கான மைல்கள் பாய்க்கப் பல்களில் பிரயாணம் செய்து என்றுமே அறிந்திராத புதிய இடமான பண்டத்தரிப்புப் போன்ற கிராமங்களுக்கு வந்து மொழி, பழக்கவழக்கங்கள் எதுவுமே அறியாதவர் களாய், சுதேசிகளின் பண்பாடு கலாச்சாரம் புரியாதவர்களாய், தட்ப வெப்பச் சூழல் மாறுபாடுகளுக்கு ஈடுகொடுத்துத் தங்கள் தாய் தந்தையர், மனைவி மக்களைப் பிரிந்தும் வரும் வழியில் மிஷனரி நண்பர்களைக் கடலிலே பிணமாக இறக்கி விட்டும், இந்த மண்ணிலேயே தங்கள் உயிர்களை விட்டும், அரசினதும், பிற மதத்தினரதும் எதிர்ப்புகளைச் சமாளித்தும், தொண்டும் துறவும் மேற் கொண்டு கல்விப்பணி மூலம் அறிவொளியூட் டியும், சமயப் பணிமூலம் ஆண்டவரின் அன்பை வெளிப்படுத்தியும், மருத்துவப் பணி யினரால் ஏழை மக்களைக் குணப்படுத்தியும் சேவை செய்த இத்தேவ மக்களை யாருமே மறந்து விட முடியாது. வைத்திய கலாநிதி ஸ்கடர் ஐயரின் ஞாபகார்த்தமாகப் பண்டத்தரிப்பு நாற்சந்தியில் பெண்கள் பாடசாலைக்கு அருகில் அவர் வாழ்ந்த இல்லத்திற்கு அவரது பெயர் பொறிக்கப் பட்டிருக்கிறது. அவர் நினைவுக்கு இது மட்டும் போதுமானதல்ல. அவர் உருவச்சிலை அமைக்கப்பட வேண்டும். இதை எதிர்காலச் சபையினர் செய்வார்களா?

# இலங்கையில் அமெரிக்க மிஷனரிமாரின் பணிகள் ஒரு சுருக்கமான உசாவல்

**மு.அருணன்**
கிராம அலுவலர்

**இலங்கையில் அமெரிக்க மிஷன்**

1808ம் ஆண்டுக்கு முன்னர் அமெரிக்காவில் பல மிஷனரி சங்கங்கள் காணப்பட்டாலும் 1808ம் ஆண்டிலேயே சகோதரச் சங்கம் (Society of brothern) எனும் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் ஸ்தாபகர் சாமுவேல் மில்ஸ் ஆவார். இது சர்வதேச ரீதியில் மதப்பிரச்சாரம் செய்யும் ஒரு சங்கமல்ல. உள்ளூர் சமயப் பணிகளையே செய்து வந்தது. ஆயினும் சர்வதேச மதப் பிரச்சாரப் பணி செய்யும் எண்ணத்து டனேயே அமைக்கப்பட்டு இருந்தது.

இதன் பயனாக 1810 ஆனி 29ம் திகதி அமெரிக்கன் போட் (Americaon Board) சங்கம் உருவாக்கப்பட்டது. இது 9 பேரை நிர்வாக உறுப்பினராகக் கொண்ட ஓர் அமைப்பாகும். இச்சங்கம் தனது முதலாவது மிஷனரிமாரை இந்தியாவுக்கு அனுப்பத் தீர்மானித்தது. அத்தீர்மானத்தின் படி 1812ஆம் ஆண்டு மாசி 19ம் திகதி சாலெம் எனும் துறைமுகத்திலிருந்து கரவன் (Caravan) எனும் கப்பல் மூலமும் அதேயாண்டு ஆண்டு மாசி 24ம் திகதி பிலடெல்பியா துறைமுகத்திலிருந்து ஹாமணி (Harmony) எனும் கப்பல் மூலமும் இந்தியா நோக்கி அமெரிக்க மிஷனரிமார் புறப்பட்டனர்.

கரவன் எனும் கப்பல் 1812 ஆனி 17ம் திகதி கல்கத்தா துறைமுகத்தை வந்தடைந்தது. இக்கப்பலில் வந்திறங்கிய மிஷனரிமாரை மதப்பணி செய்ய இந்திய அரசினர் தடை விதித்தனர். இந்தியா அப்பொழுது ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழிருந்தது. ஆங்கிலேயருக்கும், அமெரிக்கர்களுக்கும் இடையில் யுத்தம் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு காணப்பட்ட காலமது. எனவே உடனடியாக அமெரிக்க மிஷனரிமார் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்ததால் இக்கப்பலில் வந்த மிஷனரிமார் 1812 ஆவணி 4ம் திகதி மொறீஷியஸ் தீவுக்குப் புறப்பட்டனர்.

அமெரிக்க மிஷனரிமாருள் ஒருவரான நியூவெல் என்பவர் 1813மாசி 24ம் திகதி கொழும்புக்கு வந்திருந்தார். இவர் மொறீஷியஸ் தீவில் இருந்து பம்பாய்க்கு செல்லும் வழியில் இலங்கையில் தற்காலிகமாகத் தங்க வேண்டியேற்பட்டது. 1812 மாசி 19ம் திகதி சாலெம் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட கரவன் எனும் கப்பலில் புறப்பட்டு இந்தியா வந்து மொறீஷியஸ் தீவுக்கு சென்றிருந்தவர். இவர் இலங்கையை அடைந்த பொழுது இலங்கை ஆங்கிலேய தேசாதிபதி

சேர்.பிறவுண்றிக் என்பவரின் ஆளுகையின் கீழ் இருந்தது. எனவே நியூவெல் அவர்கள் தேசாதிபதி பிறவுண்றிக், சிரேஸ்ட நீதிபதி சேர் அலெக்சாண்டர் ஜோண்ஸ்டன் (Sir Alexander Johnston) , மதகுரு ருவிஸ் லெற்றன் (Rev.Twestleton) ஆகியோரை சந்தித்தார். அவர்களும் ஆங்கிலேயராக இருந் தாலும் இந்தியாவில் இருக்கும் ஆங்கிலேய ஆட்சியாளர்களைப் போல விரோதம் பாராட்ட வில்லை. எனவே இலங்கையில் ஒரு மிஷனை ஸ்தாபிக்க சாதகமான சூழ்நிலை இருப்பதாக நியூவெல் உணர்ந்தார். எனவே பத்து மாதங்கள் இலங்கையில் தங்கியிருந்து மிஷன் வேலைக்குப் பொருத்தமான ஒரு இடத்தை ஆராய்ந்தார்.

**இலங்கையின் வடபகுதியில் அமெரிக்க மிஷன்**

இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணமே மிஷன் வேலைகளுக்குப் பொருத்தமானது என இலங்கைத் தேசாதிபதி தெரிவித்ததால் நியூவெல் அவர்கள் 1813 புரட்டாதி 7ம் திகதி யாழ்ப்பாணம் வந்தார். இவர்களுக்கு தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இரண்டு ஆலயங்களையும் அதனுடன் இணைந்திருந்த வீட்டையும் அப்போது ஆட்சி புரிந்த ஆங்கிலேயர் வழங்கினர். இவ்வாலயங்களும், வீடுகளும் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டு பின்னர் ஒல்லாந்தரால் புனர்நிர்மாணம் செய்யப் பட்டி ருந்தவை ஆயினும் நீண்டகாலம் கைவிடப் பட்டிருந்த காரணத்தினால் இவைகள் பாழடைந்த நிலையிலே காணப்பட்டி ருந்தன. இவற்றை மிஷனரிமாரே திருத்திய மைத்து பயன்படுத்தத் தக்க வகையில் மாற்றிக் கொண்டனர்.

**பாடசாலை உருவாக்கம்**

அடுத்த கட்டமாக தமது சமயப் பணிகளை மேற்கொள்ள முனைகையில் மொழி ஒரு தடையாக இருப்பதை உணர்ந்து தமிழைக் கற்க ஆரம்பித்தனர். இவ்வாறு தமிழைக் கற்றுத் தேர்ச்சியடைந்தவர்களில் டானியல் புவர் (Danial Poor), வொறன் (E.Warren) ஆகியோர் முக்கியமானவர்.

இம் மிஷனரிகளுள் டானியல் புவர் என்பவர் மிக விரைவாக தமிழில் தேர்ச்சிய டைந்து 1817ம் ஆண்டின் பிற்பகுதி யில் தமது சமய பிரசங்கங்களை தமிழில் செய்ய ஆரம்பித்தார். அதேநேரம் தமது சமயப் பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு கிராமத்தில் உள்ள இளைஞர்களுக்கு கல்வியறிவு புகட்டுதல் ஒரு சிறந்த நடவடிக்கை என்பதையுணர்ந்து கிராமப்புற பாடசாலைகளை ஸ்தாபிப்பதில் ஆர்வம் காட்டினார்.


இம்மிஷனரிமாரின் முயற்சியினால் 1816ம் ஆண்டு தெல்லிப்பளையில் ஒரு ஆங்கிலப் பாடசாலையும் தொடர்ந்து வட்டுக் கோட்டையில் மற்றுமொரு ஆங்கிலப் பாடசாலையும் ஸ்தாபிக்கப்பட்டன. இங்கு தமிழும் ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டது. இப் பாடசாலைகளில் கற்ற மாணவர்களுக்கு உணவு, உடை, கல்வி யாவும் வழங்கப் பட்டன. மிஷனரிமார் வசிக்கும் வளவுக்குள் செல்லுதல், அங்கு சாப்பிடுதல் அவர்கள் பயன்படுத்தும் கிணறுகளிலிருந்து பெறப்பட்ட நீரை அருந்துதல் போன்ற செயல்கள் சைவ மக்கள் மத்தியில் சமயக் குற்றமாக கருதியதால் இப்பாடசாலைகளில் ஒரு சில பிள்ளைகளே சேர்ந்து படித்தனர். மிஷனரிமாரின்

தொடர்ச்சியான முயற்சியின் விளைவாக 1819ம் ஆண்டு இப்பாடசாலைகளில் 48 மாணவர்கள் கல்வி கற்றனர்.

1823ம் ஆண்டு ஆடி மாதம் 22ம் திகதி யாழ்ப்பாண மாணவர்களுக்கு ஒரு உயர்தரத்திலான கல்வியறிவினை வழங்கும் பொருட்டு வட்டுக்கோட்டையில் செமினரி என்னும் பெயரில் ஒரு கல்விச்சாலை அமைக்கப்பட்டது. இக் காலத்தில் அமெரிக்க மிஷன் பாடசாலைகளில் படித்த சிறப்புத் தேர்ச்சி பெற்ற 48 மாணவர்கள் இச்சாலையில் சேர்க்கப்பட்டனர் இது பல்கலைக் கழகத்திற்கு ஈடாக அன்றைய காலத்தில் கருதப்பட்டது. இதுவே அக் காலத்தில் ஆசியாவில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது உயர் தரத்திலான கல்விச்சாலையாகும்.

தொடர்ந்து இதே வகையில் பெண்களுக்கான ஒரு உயர்தரத்திலான பாடசாலை அமைப்பதில் கவனம் செலுத்தப் பட்டதைத் தொடர்ந்து 1824ம் ஆண்டு உடுவிலில் ஒரு பெண்கள் பாடசாலை அமைக்கப்பட்டது. ஏற்கனவே மிஷன் வளவில் படித்த 30 பெண்பிள்ளைகளில் 29 பெண்பிள்ளைகள் இப்பாடசாலையில் சேர்ந்து படித்தனர். இவர்கள் அனைவரும் 5 வயதிற் கும் 11 வயதிற்கும் இடைப்பட்டவர்களாவார். இப்பாடசாலையின் முதல் அதிபர் திருமதி வின்ஸ்லோ என்ற மிஷனரி பொறுப்பேற்றார். இதுவே ஆசியாவிலே அமைக்கப்பட்ட முதலாவது பெண்கள் விடுதிப் பாடசாலையாகும். இங்கு மாணவர்களுக்கு உணவு, உடை ஆகிய சகல வசதிகளும் இலவசமாக வழங்கப்பட்டன. ஆயினும் இது வட்டுக் கோட்டையில் அமைக்கப்பட்ட செமினரிக்கு ஒத்ததான பாடசாலையல்ல. இதே காலப் பகுதியில் 1534ல் வரணியிலும் ஒரு விடுதிப் பெண்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையானது புதிதாக வந்த 1803ம் ஆண்டு மிஷனரிகளுள் ஒருவரான கற்சிங்ஸ் (S.Hutchings) என்பவரால் ஸ்தாபிக்கப் பட்டது.

**அச்சியந்திர அறிமுகம்**



**(1850களில் பயன்படுத்தப்பட்ட அச்சியந்திரம்)**

இக்காலப்பகுதியில் அமெரிக்க மிஷன் சங்கத்தால் யாழ்ப்பாண மிஷனுக்கு அச்சியந்திரம் ஒன்று அனுப்பி வைக்கப் பட்டிருந்தது. மிஷன் வேலைகளுக்கும் ஏனைய கல்வி நடவடிக்கைகளுக்கும் மிக மிக அவசியம் என உணரப் பட்டதாலேயே இவ்வச்சியந்திரம் அனுப்பி வைக்கப்பட் டிருந்தது. அக்காலப் பகுதியில் அச்சியந்திரம் எனப்படுவது உயர்ந்த தொழினுட்பம் கொண்டதோர் இயந்திரமாகும். அக் காலத்தில் எல்லா ஆவணங்களும் யாழ்ப்பாணத்தில்

பனையோலைச் சுவடிகளிலேயே எழுதப் பட்டிருந்தது. எனவே அச்சியந்திரம் எனப் படுவது மிக முக்கியமானதோர் இயந்திரமா கும். இதற்கான தமிழ் எழுத்துக்கள் இந்தியா வில் கல்கத்தாவில் இருந்து எடுக்கப் பட்டிருந்தன. அதே நேரம் இயந்திரத்தின் இயக்குநர் (Operater) ஆக ஜேம்ஸ் காரட் (James Carrett) என்ற மிஷனரி ஒருவரும் அனுப்பி வைக்கப் பட்டிருந்தார். எனினும் இலங்கை அரசியலில் நிலவிய உவப்பற்ற சூழலால் அவ்விச்சியந்திரத்தையும் அதற் கான தளபாடங்க ளையும் யாழ்ப்பாணத் தில் இயங்கிய சேச் மிஷன் மதகுருவான நைற் என்பவருக்கு அமெரிக்க மிஷனரிமார் கொடுத்தனர். இவர் 1826ம் ஆண்டு "முத்தி வழி" எனும் ஒரு புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டார். இதுவே யாழ்ப்பாணத்தின் முதல் தமிழ் அச்சுப்பதிப்பாகும். பின்னர் 1834ம் ஆண்டு அமெரிக்க மிஷனரிமார் அவ்வச்சியந்திரத்தை வாங்கி மானிப்பாயில் ஸ்தாபித்து இயக்கினர். மைணர் (E.S.Minor) என்பவர் அச்சியந்திரத்தை இயக்கவும், பராமரிக்கவும் தெரிந்தவராக இருந்தார். இவரே 1834ம் ஆண்டு நல்லூரில் இயங்கிக் கொண்டிருந்த அச்சியந்திரத்தை வாங்கி மானிப்பாயில் ஸ்தாபித்து இயக்கியவராவார். இவ்வச்சியந்தி ரமானது ஏற்கனவே அமெரிக்க மிஷனால் யாழ்ப்பாணத்தில் இயங்கிய சேச் மிஷனுக்கு விற்கப்பட்டிருந்தது. அச்சியந் திரத்தை மானிப்பாயில் ஸ்தாபித்த அதே ஆண்டிலும் 1836,1838 ஆகிய ஆண்டுக ளிலும் மேலும் சில அச்சியந்திரங்களையும் வாங்கி மொத்தம் 4 அச்சியந்திரங்கள் மானிப்பாயில் இயக்கப் பட்டன. இவ்வச்சியந் திரசாலை இயங்க ஆரம்பித்து ஆறு வருட நிறைவில் மொத்தம் 81 தொழிலாளர்கள் வேலை செய்ததாக குறிப்புக்கள் காணப் படுகின்றன. இங்கு பாடசாலைப் புத்தகங் களும், வேதாகமப் பிரதிகளும், பத்திரிகைக ளும் ஏனைய பல வகையான புத்தகங்களும் அச்சிடப்பட்டன. கண்காட்சி ஒன்றும் நடாத்தப் பட்டிருந்தது. பெருமளவானோர் கலந்து கொண்டதுடன் இதன் புகழும் நான்கு திசைகளிலும் பரவியது.

இதன் பின்னர் 1898இல் T.S ஸ்மித் அவர்கள் மீண்டும் அமெரிக்காவுக்கு லீவில் சென்றிருந்தார். திரும்பி வரும் பொழுது மேலும் ஒரு தொழிலிநுட்பவியலாளர் ஒருவரை அழைத்து வருவதற்கு எண்ணியி ருந்தார். ஆயினும் அவர் இலங்கை திரும்புவதற்கு முன்னரேயே அமெரிக்காவில் காலமானார். இறப்பதற்கு முன்னர் J.H . டிக்சன் (J.H. Dixon) அவர்களை சந்தித்த T.S. ஸ்மித் அவர்கள் இலங்கை வந்து தெல்லிப்பளையில் நடைபெற்று வரும் கைத்தொழில் பகுதியை பொறுப்பேற்று நடத்துமாறு கேட்டிருந்தார். இதற்கு சம்மதம் தெரிவித்த J.H . டிக்சன் அவர்கள் தான் கொடுத்த வாக்குறுதிக்கமைவாக 1900ம் ஆண்டு தெல்லிப்பளைக்கு வந்து கைத் தொழிற்சாலையைப் பொறுப்பேற்றார். இவர் இலங்கைக்குப் புறப்படுவதற்கு முன்னரேயே T.S . ஸ்மித் அவர்கள் காலமாகியிருந்தார்.

J.H . டிக்சன் அவர்கள் இக்கைத் தொழிற்சாலையை கையேற்று இரண்டு வருடங்கள் வெற்றிகரமாக நடாத்தியதன் பின்னர் சில மாற்றங்களைச் செய்தார். இதற்க மைவாக மர வேலைகளைக் குறைத்ததோடு படம்பிடிக்கும் வேலையை நிறுத்தினார். இதன் பெயரை அமெரிக்க இலங்கை மிஷன்

அச்சியந்திரசாலை என மாற்றினார். முன்னர் மிஷனின் கீழும் பின்னர் தனியாருக்குச் சொந்தமானதாகவும் இயங்கிக் கொண்டிருந்த மானிப்பாய் அச்சியந்திரசாலையை 1903ம் ஆண்டு மீண்டும் வாங்கி இங்கு ஸ்தாபித்தார்.

### மது விலக்குச் சங்கம்

இதே காலப்பகுதியில் 1834இல் இம் மிஷனரிமாரின் முயற்சியினால் யாழ்ப்பாணத்தில் மது விலக்குச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. கீழைத்தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது மது விலக்குச் சங்கம் இதுவாகும். இச்சங்கத்தினால் கீழைத்தேச மது விலக்கு நியாய துரந்தரன் (Oriental temperance advocate) என்னும் பத்திரிகை ஒன்று இலங்கையிலும் இந்தியாவிலும் வெளியிடப்பட்டது. இப்பத்திரிகையும் மானிப்பாயிலிருந்த அச்சியந்திரசாலையிலே பிரசுரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### பத்திரிகை வெளியீடு

1941ம் ஆண்டு அமெரிக்கன் மிஷன் ஆதரவின் கீழ் உதயதாரகை எனும் செய்திப் பத்திரிகை ஆரம்பமானது. இலங்கையில் முதலில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை ஒப்சேவர் எனும் ஆங்கிலப் பத்திரிகையாகும். அதற்கு அடுத்ததாக தோன்றிய பத்திரிகை உதய தாரகை பத்திரிகையேயாகும். இப்பத்திரிகையில் சில பக்கங்கள் ஆங்கிலம் ஏனைய பக்கங்கள் தமிழிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தன. ஆங்கிலப்பதிப்புக்கு மோர்னிங் ஸ்ரார் (Morning Star) எனவும், தமிழ் பத்திரிகைக்கு உதய தாரகை எனவும் பெயரிடப்பட்டிருந்தன.

கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பித்த பின்னர் முதலாவதாக கல்வி கற்க வந்த சிறுமி அயலில் வசித்த ஏழைக் கைம்பெண் ஒருவரின் மகள் என மெக்ஸ் என்னும் மிஷனரி குறிப்பிட்டுள்ளார். இச்சிறுமியைத் தொடர்ந்து சில கைம்பெண் பிள்ளைகள் இப்பாடசாலையில் சேர்ந்து படித்தனர். இவர்கள் அனைவரும் பனையோலைகளிலேயே எழுதிப்படித்தனர். 1819ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இம்மிஷனின் கீழ் 15 பாடசாலைகள் இயங்கின என்றும் அவைகளில் 633 ஆண் பிள்ளைகளும் 10. பெண் பிள்ளைகளும் படித்தனர் என்றும் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

### வைத்தியம்

மிஷன் வேலைகளை செய்து கொண்டிருந்த மிஷனரிமாரில் இருவரான வொறன், றிச்சட்ஸ் ஆகியோர் குறிப்பிட்டளவு வைத்தியப் பட்டம் பெற்றவர்கள் அல்ல. ஆயினும் பென்சில்வேனியாவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் மருத்துவம் கற்று அங்குள்ள வைத்தியசாலை ஒன்றில் பயிற்சி பெற்றிருந்தனர். எனவே இவர்கள் தெல்லிப்பளையில் ஒரு சிறிய வைத்தியசாலை ஸ்தாபித்து மக்களுக்கு வைத்திய உதவி வழங்கி வந்தனர். இவ் வைத்தியசாலைக்கான ஒரு குறிப்பிட்டளவு பொருளுதவியை அன்றைய அரசினர் வழங்கியிருந்தனர்.


வண.ஹொய்சிங்டன் 1844ம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து மீண்டும் இலங்கை திரும்பினார். இவர் திரும்பும் பொழுது செமினாரிகளுக்குத் தேவையான பல அரிய அறிவியல் புத்தகங்களையும் விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்களையும் கொண்டு வந்திருந்தார். இக்காலத்தில்

செமினாரியில் கல்வியானது மூன்று பிரிவுகளை உள்ளடக்கி இருந்தது. அவை வேதக்கல்வி, ஆங்கிலக்கல்வி, சாஸ்திரக் கல்வி என்பனவாகும். மாணவர்கள் ஆங்கில கல்வி உட்பட ஏதாவது இரண்டு கல்விகளைக் கட்டாயம் கற்றுக் கொள்ள வேண்டும். இக்காலத்தில் நான்கு மாணவர்கள் மருத்து வக் கல்வியும் கற்றனர். இம்மருத் துவக் கல்வியானது சாஸ்திரக் கல்வி என்ற பிரிவின் கீழ் காணப்பட்ட ஒரு உப பிரிவாகும்.

இதன் பின்னர் 1847ம் ஆண்டு E.P கேஸ்றிங்ஸ், W ஸ்கடர், S.F . கிறீன் ஆகி ய மூன்று மிஷனரிமாரும் வந்திருந்தனர். இவர்களில் W . ஸ்கடர் (Williem Scudder) என்பவர் 1819ல் ஏற்கனவே இலங்கைக்கு மிஷனரியாக வந்திருந்த வைத்தியர் J.ஸ்கடர் (Dr.John Scudder) என்பவரின் இரண்டாவது மகனாவார். J. ஸ்கடர் என்பவர் உலகின் முதலாவது வைத்தியர்.

1819ம் ஆண்டு J. ஸ்கடர் மிஷனரி யாக இலங்கைக்கு புறப்படும் காலத்தில் உலகத்தில் எந்தவொரு வைத்திய நிபுணரும் மிஷனரியும் இருந்ததாகக் குறிப்புகள் எதுவுமில்லை. இவர்களில் 1847ம் ஆண்டு வந்த மிஷனறிகளுள் மிக முக்கியமான வராகக் கருதப்படுபவர் S.F கிறீன் என்னும் வைத்திய மிஷனரி ஆவார். இவரே இலங்கையில் ஒரு மருத்துவப் புரட்சி செய்தவர். முன்னர் 1833இல் வைத்தியர் நேதன் வோட் என்பவர் அமெரிக்காவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து வட்டுக்கோட்டை செமினறியில் வைத்தியம் கற்பித்தும் வைத்தியம் செய்தும் வந்தார். இவரிடம் வைத்தியம் கற்றவர்களில் 4பேர் மிகச் சிறப்பாக வைத்தியம் பயின்று வட்டுக் கோட்டையிலும், உடுவிலிலும் மிஷனின் கீழ் வைத்தியசேவை புரிந்தனர். இவ்வாறு சிறந்த வைத்தியராகக் கருதப்பட்ட நேதன் வோட் என்பவர் 1847ம் ஆண்டு அமெரிக்கா வுக்கு செல்ல இதே ஆண்டு வைத்தியர் S.F . கிறீன் (Dr. Samuel Fisk Green) என்பவர் மிஷனரியாக யாழ்ப்பாணம் வந்தார். வந்த ஆரம்பத்தில் வட்டுக்கோட்டையில் கடமை புரிந்தார். பின்னர் வைத்திய மிஷனுக்கு மத்திய ஸ்தானமாக மானிப்பாய் தெரிவு செய்யப் பட்டதனால் அவர் மானிப்பாய்க்கு சென்று கடமைகளைப் பொறுப்பேற்றார். இங்கு மிஷன் ஒரு வைத்தியசாலையை ஸ்தாபித்தது. இங்கு கிறீன் அவர்கள் வைத்தியம் செய்து கொண்டும் வைத்தியம் கற்பித்துக் கொண்டும் தமது கடமையைச் சிறப்பாகச் செய்து வந்தார்.

(டாக்டர் கிறீன் ஆரம்பித்த முதலாவது வைத்தியசாலை)



வைத்தியர் S.F . கிறீனிடம் பல மாணவர்கள் வைத்தியம் கற்றிருந்தார்கள். ஆயினும் டான்போத் பெரியதம்பி (Dan forth Periyathamby) என்பவரே மிக முக்கியமான வராக கருதப்படுகின்றார். வைத்தியத்துறை யில் இவரின் சிறப்புத் தேர்ச்சியைக் கருத்திற் கொண்டு கிறீனுடைய சிபாரிசின் பேரில்

அமெரிக்க வைத்தியக் கல்லூரி இவருக்கு M.D பட்டம் வழங்கியிருந்தது. இவர் M.D பட்டம் பெற்ற முதல் இலங்கையர் ஆவர்.

Dr. கிறீன் அவர்கள் 1857இல் அமெரிக்கா சென்று மார்கிறேட் என்பவரைத் திருமணம் செய்து கொண்டு 1862 வைகாசி மாதம் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். இவர் அமெரிக்காவில் தங்கியிருந்த காலத்தில் பல மருத்துவ நூல்களை தமிழில் மொழிபெயர்த்திருந்த அதே நேரம் சில புத்தகங்களை எழுதியும் இருந்தார். மேலைத்தேய வைத்திய நூல்களை முதன்முதலில் தமிழில் எழுதியவரும் இவரே.கட்லர் (cutler) என்பவரால் எழுதப் பட்டிருந்த "உடல் கூறும் உடல் நலமும்" (Anatomy Physiology Hygiene) எனும் நூலை தமிழில் மொழிபெயர்த்து 1857ம் ஆண்டு வெளியிட்டார். இதுவே தமிழில் அச்சிட்டு வெளியிடப்பட்ட முதலாவது மேலைத்தேச வைத்தியநூலாகும். இவ்வாறான மொழிபெயர்ப்புகளில் டாக்டர் கிறீன் அவர்களுடன் அவரது மாணவர்

Dr. S.F Green



களான டான்போத் (Dan forth), சாப்மன் (Chapman), எவர்ட்ஸ் (Evarts) ஆகியோரும் இணைந்து கொண்டனர். இவற்றில் டான்போர்த் மொழிபெயர்த்த இரண வைத்தியம் (Druht's Surgery) சாப்மன் மொழிபெயர்த்த அங்காதிபாதம் (Gray's Antomy) வில்லியம் போல் மொழி பெயர்த்த வைத்தியாகாரம் (Hooper's Physicians Vedemecum) ஆகியவை முக்கியமானவை.

Dr . கிறீன் அவர்கள் அமெரிக்காவுக்கு சென்று விட்ட பின்னரும் கூட இம்மிஷன் வைத்தியசாலை துரித வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. அடிக்கடி நவீன மருத்துவ உபகரணங்களை அமெரிக் காவிலிருந்து எடுப்பித்து சிறந்த சேவையை இவ் வைத்தியசாலைக்கு வழங்கி வந்தது.

**நிறைவுரை**

இவ்வாறாக இலங்கை அமெரிக்க மிஷனின் பங்களிப்புகள் பலதரப்பட்டனவாக அமைந்தன. வெறுமனே மதப்பிரசாரத்துடன் மட்டும் நின்று விடாது சமூக முன்னேற்றத் தினைக் கருத்திற் கொண்டு அவர்களால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நோக்கப் பட வேண்டியவை. ஈழத்துத் தமிழ்ச் சமூகம் நவீனத்துவத்தை நோக்கி நகர்வதற்கான பலமான அத்திவாரத்தை அவர்கள் இட்டனர். இதன் மூலம் ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தில் மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் ஏற்படுத்த முனைந்தனர். பிற்காலங்களில் நிகழ்ந்த வளர்ச்சிகளுக்கான உரமான அடிப்படைகளாய் இவை அமைந்தன எனக் குறிப்பிடுவதில் தவறில்லை.

# தேவாலயங்களும் தெய்வீகமும்

## புனித தோமையார் ஆலயம்

சமுத்திரத்தால் சூழப்பட்ட ஈழ நங்கையின் வட பகுதியிலுள்ள யாழ் நகரின் மேற்குக்கடலோரமாக மாதகல் என்னும் சரித்திர பெருமை வாய்ந்த கிராமம் உள்ளது. நெய்தலும் மருதமும் கொஞ்சும் நிலமாக வணிகமும் கலையும் கலக்கும் நதியாக மிளிரும் மாதகல் கிராமத்து முன்னோர்கள் இந்துக்களாகக் காணப்பட்ட போதிலும் 17ம், 18ம் நூற்றாண்டுகளில் பிரான்ஸ்கன் சபை ஐரோப்பிய துறவிகளாலும் வண. யோசவாஸ் அடிகளாராலும் மனந்திரும்பிச் சத்திய திருச்சபையில் நிலை கொள்ளப்பட்டனர். அக் காலத்தில் புனித சவேரியாரையும் புனித அந்தோனியாரையும் தம் பாதுகாவலராய்ச் சிறு ஆலயம் அமைத்து வழிபட்டனர்.

குடி மக்கள் பெருகியதால் குருகுல மன்னரின் வழித் தோன்றினரால் 17ம் நூற்றாண்டு இடைப் பகுதியில் தேவ தாயின் திரு இருதய ஆலயம் அமைக்கப்பட்டு வருடந் தோறும் ஆவணி மாதத்தில் அன்னைக்கு விழா கொண்டாடப்பட்டு வந்தது. திரு இருதய அருளைப் பெற வந்தவர் அனைவருக்கும் அன்னை அருள் புரிந்ததால் "மாதகல் செல்வி" என மறு நாமம் சூட்டி அழைக்கப் பட்டாள். இவ்விதம் இறைகுலம் கொண்ட எம் குருகுல மக்கள் ஆழ் கடலோடி மீன் பிடிப்பதோடு கப்பலோட்டும் தமிழரா கவும் வாழ்ந்து வந்தனர். இத் தொழிற்பாடா னது புனித தோமையாரின் திருவடி தோய்ந்த இந்திய தேசம் புதுமைகள் கண்ட புகழ் இடங்கள் என்பவற்றை இணைய வைத்து புனித தோமையாரின் அருள் வளங்களைப் பெற்ற மக்கள் புதிதாகக் கட்டவிருக்கும் ஆலயத்திற்கு புனித தோமையார் நாமத்தைச் சூட்ட விரும்பினார்.

1847ல் வண. விஸ்தறீனி அடிக ளாரால் சிறிய கொட்டிலாக ஆலயம் நிறுவப்பட்டது. பின் மகா. வந். பொன்ஜின் ஆண்டகையால் 1868ம் ஆண்டு மார்கழி 21ம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டு ஆலய வேலைகள் ஆரம்பமானது. குறுகிய காலத்தில் இது பேராலயமாகத் திகழ்ந்தது. அதற்குக் காரணம் மக்களின் உற்சாகமேயாகும். பத்தில் ஒன்று காணிக்கை என்று சட்டமாக இருந்த போதும் ஐந்தில் ஒன்று மனமாரக் கொடுத்தனர். மக்கள் ஒத்துழைப்பாலும் பங்குத் தந்தையின் விடாமுயற்சியாலும் ஆலயம் அதே ஆயரால் 1884ம் ஆண்டில் வானளாவும் ஆலய முகப்பு முடிவுற்று ஆசீர்வதிக்கப்பட்து. 1886ல்

கல்லறைச் சொரூபம் வைக்கப்பட்டது. 1889ல் குருசுக் கோவிலாக அமைந்த வளைமாட அமைப்பு பூர்த்தியடைந்து பலிபீடத்தை சூழ அமைந்த தூண்களின் உட்பாகத்தில் சும்மனசுகள் நால்வரின் உருவம் வடிவமைக் கப்பட்டதாகவும் நான்கு தூண்களில் நின்றே விசிறப்பட்ட எட்டு வில்லுக்களால் பக்கச் சுவர் களை இணைத்து குருசுக் கோவிலாகவும் முன்புறத்தில் வானமளவும் முகப்புக் கொண்டதாகவும் நடுக் கோவிலுனுள் தூண்கள் இல்லாமலும் வெளிப் பக்கங்களில் இரு மருங்கிலும் விறாந்தைகள் கொண்டும் அமையப் பெற்றது. மேலும் கோவிலின் உட்பூச்சும் பல வர்ணக் கண்ணாடி யன்னல்களும் 1897 - 1899ம் ஆண்டு செய்யப் பட்டது. வெளிப்பக்கமாக இரு மருங்கி லும் விறாந்தை 1910 - 1913ம் ஆண்டு செய்யப் பட்டதுடன் 1911ல் கோவில் பீடமும் மாபிள் தளக் கற்களும் வெளிமதில் பூச்சும் கட்டப்பட்டது.

1914 - 1915ம் ஆண்டில் பாரிய குருமனை கட்டப்பட்டது. 1916 - 1917ம் ஆண்டில் ஆலய வலது கைப்பக்கத்திலுள்ள புனித லூர்து நாயகியின் திருச்சொரூபம் வைக்கப்பட்டுள்ள பலிபீடம் மொறட்டுவாவி லுள்ள சித்திர ஆச்சாரியர் களினால் மரத்தினால் அழகிய வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டது. புனித தோமையார், அந்தோனியார், சூசையப்பர், திருஇருதய ஆண்டவர் ஆகியோரின் பெரிய சொரூபங்கள் 1917 - 1918 ம் ஆண்டு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டன. கல்லறைச் சொரூபப் பீடமும், இருதய மாதா, சதாசகாயமாதா பீடங்களும், சித்திர வேலைப்பாடுடன் அமைந்த பெரிய பிரசங்க மேடையும் வண. பிதா S.A. ஞானப்பிரகாசம் அடிகளாரால் வைக்கப்பட்டது. 1959 - 1960ம் ஆண்டளவில் பலிபீடத்தைச் சூழ அமைந்த நான்கு தூண்களின் உட்பாகத்தில் நான்கு சுவிசேஷர்களின் உருவம் பொறிக்கப்பட்டது. இத்தகைய ஆலயம் வண. பிதா L. யோசப் அடிகளார் பங்குத் தந்தையாக இருந்த 1968 - 1976க்கு இடைப்பட்ட காலத்தில் வணக்கத் திற்கும் வசதிக்கும் ஏற்றாற் போல் பலிபீடக் கட்டுக்கள், படிகள் எல்லாம் நீக்கப்பட்டுக் கல்வாரிமலைக் காட்சியே முன்னுருவாகத் தோற்ற நற்கருணைப்பீடம் அதன் அடியில் நிறுவப்பட்டுச் சிலுவைப்பாதை சொரூவங்கள் அமைக்கப்பட்டன.

1983ம் ஆண்டு லூர்து அன்னை பவனிவரும் பவளமணித் தேர் செய்யப் பட்டது. 1988ல் அப்போதிருந்த பங்குத்தந்தை அவர்களால் பலிபீடத்தின் தூரமாக அமைந் திருந்த நற்கருணைப்பீடம் கல்லறைப் பீட மாகவும் புதிய நற்கருணைப் பேழை பலிபீடத்துடனும் அமைக்கப்பெற்று திருப்பலி நிறைவேற்றும் வசதியைப் பெற்றுள்ளது. புனித தோமையார் ஆலய முகப்பின் முன் பெரியதோர் இரும்புக் கேடரினால் செய்யப்பட்ட உயரமான மணிக்கூண்டில் இரு மணிகள் தொங்கு கின்றன. 1925ல் மேலைத்தேய பெருமணி யானது சிறிய மணிக்கூண்டில் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. தற்போதிருக்கும் மணிக் கூண்டில் 1931ம் ஆண்டில் ஆலய வளவினுள் வாசிகசாலை நிறுவப்பட்டது. 1910ம் ஆண்டில் ஆலய வளவினுள் திருக்குடும்ப கன்னியர் மடம் நிறுவப்பட்டது. இதுவே யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட இரண்டாவது மடமாகும்.



பண்டத்தரிப்பு பற்றிமாமாதா தேவாலயம்



சில்லாலை கதிரைமாதா தேவாலயம்



மாரீசங்கூடல் கைத்தார் தேவாலயம்



மாதகல் லூர்து கெபி தேவாலயம்

மார்கழி 21ம் திகதியே புனித தோமையாரின் திருவிழா கொண்டாடப்பட்டு வந்தது. 2009ம் ஆண்டிலிருந்து ஆடி 3ம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. 2010ம் ஆண்டு ஆலய புனரமைப்பு வேலைகள் சிறப்பாக நடைபெற்று 2010ம் ஆண்டு 125வது ஆண்டுவிழா ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## புனித அந்தோனியார் ஆலயம்

யாழ். மறை மாவட்டத் தொன்மை வாய்ந்த கிறிஸ்தவ கிராமங்களில் ஒன்றான மாதகல் சரித்திரப் பெருமை வாய்ந்த கிராமமாகும். மாதகல் ஒரு வியாபாரத்தலமாகவும், மக்கள் செழிப்பு மிக்க இடமாகவும் தமிழ் அறிஞர்கள், வைத்தியர்கள், கட்டிடக் கலைஞர்கள், விவசாய மேதைகள் இந்தியாவிலிருந்து குடியமர்ந்த இடமாகவும் காணப்பட்டது. 17,18ம் நூற்றாண்டில் சத்திய திருச்சபையில் நிலை கொண்ட இவர்கள் தற்போதைய அந்தோனியார் ஆலயவளவினுள் வட கிழக்கு மூலையில் புனித சபேரியார் பெயர் கொண்ட சிறு குடிசைக் கோவிலமைத்து வழிபட்டனர். சிறிது காலத்தின் பின் சிற்றாலயம் புனித சபேரியார் - புனித அந்தோனியார் பெயர் கொண்டு விளங்கியது. இதுவே மாதகல் மக்களின் முதல் ஆலயமாகும்.

கத்தோலிக்க சமயத்தைத் தழுவிய மக்கள் புனித அந்தோனியாரின் வாழ்க்கையையும் அவரின் அற்புதங்களையும் அறிந்து புனிதரின்மேல் கொண்ட பக்தித் தூண்டுதலால் அவரின் பெயர்கொண்ட ஆலயம் அமைக்க ஆவல் கொண்டனர். ஆவலின் பூர்த்தியினால் 1868ம் ஆண்டு வண. சூணவேல் அடிகளாரால் அந்தோனியார் ஆலய அடிக்கல் நாட்டப்பட்டது. அக்காலத்தில் ஆலயம் அமைக்க சந்தியாப்பிள்ளை சந்திர சேகரா என்பவர் நிர்மாண வேலையின் பெரும்பகுதியைத் தனது சொந்த செலவில் செய்துகொண்டிருந்தபோது இறைவனடி சேர்ந்தார்.

ரோமானிய நாகரீகப்படி அரை வட்டமாக அமைந்திருந்த பலிபீட அமைப்பை வண. ஜீடேய் அடிகளார் முற்றாக மாற்றிக் கொதிக் நாகரீகப்படி கட்டிமுடித்தார். தம் சொந்த நாடாகிய பிரான்சிலிருந்து பெருந்தொகைப் பணத்தை நன்கொடையாகப் பெற்று அபூர்வ வேலைப்பாடுகள் நிறைந்த முகப்பை 1888ல் பூரணப்படுத்தினார். 1900ம் ஆண்டில் சமையல் கூடம் கட்டப்பட்டது. 1917 - 1918ல் கோவில் தளம் சீமெந்து பூசப்பட்டதுடன் 1925ம் ஆண்டில் கோவிலின் இரு பக்கத்திலும் குருசு வடிவமாக நிர்மாணிக்கப் பட்டது. 1931ல் கல்லறை சுரூபம் வைக்கப் பட்டது. 1952 - 1954ல் கோவில் முன் மண்டபமும் 1967ல் கல்வாரிக் காட்சியும் நிறுவப்பட்டதுடன் 1981ம் ஆண்டில் புதிய மணியுடன் கூடிய ஓர் அழகான மணிக் கோபுரமும் கட்டப்பட்டது. 1982ல் 3பெரிய கதவுகள் அகற்றப்பட்டு வேலைப் பாடுகள் நிறைந்த இரும்புக் கதவுகள் பொருத்தப் பட்டன. 1985ம் ஆண்டு கோவில் மதில்கள் கட்டப்பட்டன. புதுமுறையிலான நற் கருணைப்பீடம் அமைக்கப்பட்டது. ஆலயத்தின் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புது வருடம், நத்தார், பரிசுத்தவார வழிபாடுகள்

இடம்பெற்று வருகின்றன. 1952 - 1954ல் பங்குத்தந்தையாகவிருந்த வண. பிதா கொன்சாலஸ் அடிகளாரால் நவநாட்கள் பொதுவாக்கப்பட்டு ஆனி 4ம் திகதியிலிருந்து நவநாட்கள் ஆரம்பமாகி 13ம் திகதி திருவிழா திருப்பலியும் இடம்பெறுவது அன்றிலிருந்து இன்றுவரை வழமையாயிற்று.

### புனித லூர்து கெபி

மாதகல் வாழ் கத்தோலிக்க மக்கள் மத்தியில் லூர்து அன்னை மட்டில் தனிப்பட்ட பக்தி வளர்ச்சியடைந்திருந்த அந் நாட்களில் மாசில்லா மாதா பக்தி சபையின் தலைவியாக இருந்த பிரான்சிஸ்கம்மா தன் காணியில் லூர்து அன்னைக்கு ஆலயம் அமைக்கத் திட்டமிட்டதுடன் இதற்கென மருதமடுப் பகுதியிலிருந்து லூர்து அன்னையின் திருச் சொரூபமொன்றை வாங்கி நிதியும் சேர்த்து வைத்திருந்தார். ஆனால் அவர் இறந்ததால் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. அவர் வாங்கிய அச் சிறிய சொருபமே (21/2அடி) தற்போது அன்னையின் திருவிழாவின்போது பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது.

லூர்து அன்னையின் பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் அன்றைய பங்குத்தந்தை அருட்பணியாளர் வியாட் அ.ம.தி அடிகளின் விடாமுயற்சியாலும் யாழ் ஆயர் மேதகு J.A. கியோமர் ஆண்டகையின் மனப் பூர்வமான ஒத்துழைப்பாலும் பிரான்ஸ் லூர்து நகரில் அமைந்துள்ள லூர்து கெபியின் தோற்றத்தை ஒத்த ஒரு கெபி மாதகல் துறைமுகத்தில் தோமையார் ஆலயத்திற்கு உரித்தான தென்னந்தோட்டக் காணியில் அமைக்கப்பட்டது. 1938 கார்த்திகை 19ம் திகதி சனிக்கிழமை மாதாவின் பக்தர்கள் புடைசூழ அருட்பணியாளர் வியாட் அடிகளாரால் திருச் சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டு முதல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. 1939ம் ஆண்டு தொடக்கம் மாசி 11ம் திகதிக்கு பின்வரும் ஞாயிறு தினத்தில் அன்னையின் திருவிழா கெபியில் கொண்டாடப்பட்டு வருகிறது. மாதத்தின் முதல் சனிக்கிழமை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதுடன் இத்திருப்பலிக்கு மாதகல் மக்கள் மட்டுமல்லாது அயல் கிராமங் களிலிருந்தும் மக்கள் வழிபாட்டிற்கெனக் கூடுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. லூர்து கெபி தோற்றம்பெற்ற காலத்திலிருந்து முதல் ஆயத்த வழிபாடுகள் 8 நாட்களும் தோமையர் ஆலயத்தில் இடம் பெற்று 9ம் நாள் திருச் சுரூபம் பவனியாக கெபிக்கு எடுத்துவரப்பட்டு மாலைத் திருப்பலியும் நற்கருணை ஆராத னையும் பவனியும் இடம்பெற்று மறு நாட் காலை திருவிழா திருப்பலியுடன் நிறைவடை யும். அன்றைய தினம் அன்னதானம் வழங்கப்படுவது வழக்கம். பணியாளர் லூயஸ் யோசப் அடிகளார் பங்குத்தந்தையாக இருந்த காலத்தில் (1968 - 1976) லூர்து கெபியிலே கொடியேற்றத்துடன் திருவிழா விற்கு ஆயத்த மான 9 நாட்களும் திருவிழா வழிபாடுகள் இடம்பெறுவது வழக்கமாயிற்று.

1942ல் கெபியின் குருக்கள் தங்குவ தற்கெனக் குருமனையும் அன்னதான மண்டபமும் அமைக்கப்பட்டது. இம் மண்டபம் காலாகதியில் சிதைவடைந்ததால் 1982ல் இரு பெரிய மண்டபங்கள் மக்கள் தங்குவதற் கும் அன்னதானம் வழங்கவும் கட்டப்பட்டன. 1983ம் ஆண்டு 153 மணிச் செபமாலையின் 15 காரணிக்கங்களின் இரகசியங்களையும் சித்திரம் செதுக்கியுள்ள அழகும் கலையும்

மிளிரும் பவளமணித்தேர் அமைக்கப்பட்ட துடன் அதில் பவனி வருவதற் கென அருளப்பு என்பவர் தம் நேர்த்தியின் பயனாக அன்ப ளிப்பு செய்த லூர்து அன்னையின் பெரிய திருச் சுரூபம் ஒன்றும் காணப்படுகிறது.

1989ம் ஆண்டு லூர்து கெபி பீடப் பகுதி விரிவாக்கப்பட்டது. 1988ல் லூர்து கெபி அமைக்கப்பட்டு 50வது ஆண்டு நிறைவுற்ற போதும் இதற்கான கொண்டாட்டம் 1989ம் ஆண்டு மாசி மாதம் 19ஆம் நாளே பொன் விழாவாகக் கொண்டாடப்பட்டதுடன் பொன் விழா நினைவுமலரும் கெபி குகைத் தோற்ற தபாலட்டையும்வெளியிடப்பட்டன. அன்றைய வழிபாடுகள் ரூபவாகினி தொலைக்காட்சியில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழி மூலம் ஒலி, ஒளி பரப்பப்பட்டது. 1992ல் இடம்பெற்ற இடப்பெயர்வின் பின்னர் அங்கு வழிபாடுகள் இடம்பெறவில்லை. மீண்டும் மக்கள் கிராமத்திற்கு வருகை தந்தபின் வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின் றன. 2010ல் மண்டபமும் பீடப்பகுதியும் புனரமைக்கப் பட்டு பீடப்பகுதி சலவைக் கற்கள் (மாபிள்) பதிக்கப்பட்டதுடன் நற்கருணைப் பவனிப் பாதையில் கொங்கிறீற்றிலான மின் கம்பங்களும் பங்குத்தந்தை அருட்பணியா ளர் ஆனந்தகுமாரின் முயற்சியால் அமைக்கப் பட்டு, திருவிழா திருப்பலி வெகு சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## புனித செபஸ்ரியார் ஆலயம்

மாதகல் வாழ் கத்தோலிக்க மக்கள் தம்விவசாய வாழ்வில் உறுதியாக வாழ்ந் தனர். இதனால் அந்தோனியார், தோமையார் பெயர்கள் கொண்ட ஆலயங்கள் அமைக்கப் பட்டு வழிபாடுகள் நடைபெற்றன. குடிமக்கள் பெருகியதால் புதிதாக மாதகலில் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. இதற்குப் புனித செபஸ்ரி யாரின் நாமம் சூட்டப்பெற்றது. இவ்வாலயம் தற்போதுள்ள செபஸ்ரியார் ஆலயத்திற்கு அருகில் 1933ல் அப்போதைய பங்குத்தந்தை வண. பிதா G.A. குருசாமி அடிகளாரின் ஒத்துழைப்பால் குடிசைக் கோவிலாகவும் சில ஆண்டுகளின் பின்பு வண. கியோமார் ஆண்டகையினால் சிற்றாலயமாகவும் அமைக்கப்பெற்றது.

1947ல் வண.கியோமார் ஆண்ட கையினால் தற்போதுள்ள ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அப்போதைய பங்குத்தந்தை வண.பிதா கொன்சலாஸ் அடிகளாரின் விடா முயற்சியா லும் மக்களின் ஒத்துழைப்பாலும் சிற்றாலயம் ஓர் குறுகிய காலத்தில் ஓர் ஆலயமாக மாற்றப்பட்டது.1950 -1953ம் ஆண்டளவில் கோவில் குருசு வடிவமாக நிர்மாணிக்கப்பட்டதுடன் 1953ல் ஆலய முகப்பு கட்டப்பட்டது. இக் காலத் திலேயே வளைமாட அமைப்பும் பூர்த்தியடை யலாயிற்று. 1957 - 1959ம் ஆண்டளவில் கோயில் தளம் சீமெந்து பூசப்பட்டது.

1967ல் தவக்கால 6ம் வெள்ளியன்று இறைவணக்கத்திற்கு ஏற்றாற்போல் கல்வாரி மலைக் காட்சி அமைக்கப்பட்டது. இக் காலத் தில் ஆலய பரிபாலன பணிமனையும் கட்டப் பெற்றது. இதனைத் தொடர்ந்து வருடந் தோறும் தவக்கால 6ம் வெள்ளி ஆராதனை கள் இவ்வாலயத்திலேயே நடைபெற்று வரலா யிற்று. கோவில் அருகில் இயங்கிவந்த செபஸ்ரியார் வாசிகசாலை 1969ம் ஆண்டில்

நிரந்தரக் கட்டிடமாகியது. 1970 - 1973ம் ஆண்டு காலப் பகுதியில் மதில் புனரமைக் கப்பட்டது. 1970 - 1974ம் ஆண்டுகளில் ஆலய இருமருங்கிலும் விறாந்தைகள் கட்டப் பட்டன. 1981ம் ஆண்டு ஆலய முகப்பின் முன் மண்டபம் கட்டப் பட்டது.

மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நத்தார் வருடம், பரிசுத்தவார வழிபாடுகள் இவ்வாலயத்தில் இடம்பெற்று வருகின்றன. இவ்வாலயத் திருவிழா வருடந்தோறும் தை 11ம் திகதி கொடியேற்றத்துடன் நவநாட்கள் ஆரம்பமாகி 19ம் திகதி நற்கருணை விழாவும் 20ம் திகதி திருநாட் திருப்பலியும் திருச்சுரூப பவனியும் இடம் பெறும்.

## புனித சூசையப்பர் சிற்றாலயம்

வரலாற்றுப் புகழ் மிக்க இயற்கை எழில் கொஞ்சும் மாதகல் சம்பில் துறையில் கடற்கரைஓரத்திலே தொழிலாளர்களின் பாதுகாவலராம் புனித சூசையப்பர் சிற்றால யம் உண்டு. மாதகல் புனித தோமையர் ஆலயத்தைச் சேர்ந்த சம்பில் துறையில் கடற் தொழில் புரியும் தொழிலாளர்கள் தமது வழிபாட்டிற்காகச் சிற்றாலயம் அமைக்க விரும்பினர். தொழிலாளர்களின் விடா முயற் சியால் அப்போது பங்குத் தந்தையாக இருந்த அருட்பணியாளர் ஸ்ரீபன் வேந்தக்கோன் அ.ம.தி அடிகளாரால் 1961ல் புனித சூசையப்பர் திருச் சுரூபம் ஆசீர்வதிக்கப்பட்டு தொழிலாளர் கள் தங்கும் கொட்டிலில் வணக்கத்திற்காக ஸ்தாபிக்கப் பட்டது.

1963ம் ஆண்டு தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் கற்தூண் கட்டப்பட்டு அதில் திருச்சுரூபம் வைக்கப்பட்டது. அப்போது பங்குத்தந்தையாக இருந்த அருட் பணியாளர் லூயிஸ் யோசப் அ.ம.தி அடிக ளாரின் முயற்சியினால் 1972ல் புனித சூசை யப்பரின் சுரூபம் வைக்கப்பட்டுள்ள தூணு டன் இணைத்துச் சிற்றாலயம் அமைக்கப் பட்டது.

பண்டத்தரிப்புத் தியான இல்ல குரு அருட்பணியாளர் Z.N குருஸ் அ.ம.தி அடிக ளார் அன்பளிப்புச் செய்த புனித சூசையப்பர் சுரூபமும், கூடும் 1972.04.30ம் திகதி மாலை புனித தோமையார் ஆலயத்திலிருந்து லூர்து அன்னை (கெபி) திருத்தலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து அலங்கரிக்கப்பட்ட வெளியி ணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட கட்டு மரத்தில் கடல் வழியாகப் பவனியாக எடுத்து வரப்பட்டுப் புதிதாக அமைக்கப்பட்ட சிற்றாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டு திருப்பலியும் நற்கருணை வழிபாடும் இடம்பெற்றது. மறுநாட்காலை வைகாசி 1ம் நாள் புனித சூசையப்பரின் திருவிழா திருப்பலி இடம் பெற்றது.

1987ம் ஆண்டு பங்குத் தந்தையாக இருந்த அருட்பணியாளர் றெஜி இராஜேஸ் வரன் அடிகளார் காலத்தில் இச் சூசையப்பர் சிற்றாலயம் புனித தோமையார் ஆலய நிர்வா கத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப் பட்டது. 1991ம் ஆண்டு நாட்டின் சூழ்நிலை காரணமாக வழிபாடுகள் இடம் பெறவில்லை. 2003ம் ஆண்டு அருட்பணியாளர் A.C கிறிஸ்தோப் பர் அடிகளாரின் முயற்சியால் மாதத்தின் முதல் புதன்கிழமைகளில் மாலை 04.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு வருவ துண்டு.

2010ம் ஆண்டு பங்குத்தந்தை அருட்பணியாளர் ஆனந்தக்குமார் அடிகளாரின் முயற்சியால் சித்திரை 30ம் திகதி மாதகல் லூர்து அன்னையின் திருத்தலத்திலிருந்து கடல் வழியாக படகுகள் பவனி வர புனிதரின் திருச்சுரூபம் எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியும் நற்கருணை வழிபாடும் இடம்பெற்று மறுநாட்காலை திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் தொழில் வளங்களும் கடலும் ஆசீர்வதிக்கப்பட்டு விழா இனிதே நடைபெற்றது.

## புனித வேளாங்கன்னி

வரலாற்றுப் புகழ் மிக்க மாதகல் கிராம மக்கள் தாம் பெற்றுக் கொண்ட விசுவாச வாழ்வில் மிகவும் உறுதியாக வாழ்ந்து வந்தனர். சற்றுத் தூரத்தே மருதநிலப் பிரதேசங்கள் படர்ந்து காணப்படும் மாதகலில் அவ் அழகான மருத நிலங்களுக்கு மத்தியில் அரசினருக்குச் சொந்தமான அரசாங்க வைத்தியசாலை ஒன்றுண்டு. அங்கு நோயினால் வருபவர்களினதும், பணிபுரியும் ஊழியர்களினதும் ஆன்மீக செயற்பாட்டிற்காகவும், ஆறுதலிற்காகவும் அமைக்கப் பட்டதே புனித வேளாங்கன்னி ஆலயமாகும்.

வைத்தியசாலை வளவினுள் அன்னையின் பதி தேவையென உணர்ந்து வைத்தியசாலையில் பணிபுரிந்த மாதகலைச் சேர்ந்த சந்தியா அன்னம்மா, மாரீசன்கூடலைச் சேர்ந்த எஸ்.அலற்றா, சில்லாலையைச் சேர்ந்த என்.செபமாலை முத்து என்பவர்கள் பங்குத் தந்தையின் அனுமதியுடன் தாம் சேர்த்தநிதியிலும், தம் சொந்த செலவிலும் ஆலயம் கட்ட முடிவு செய்தனர். இதற்காக அரச அனுமதியையும் பெற்றுக் கொண்டனர். 1985.12.06ம் நாள் அப்போதைய பங்குத் தந்தை அருட்பணி பீற்றர் துரைரட்ணம் அடிகளாரால் அடிக்கல் நாட்டப்பட்டு 1987.06.06ம் திகதி ஆலய வேலைகள் அனைத்தும் முடிவடைந்தது. இவரே முதல் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். அன்றிலிருந்து அன்னையின் பிறந்த தினமாகிய புரட்டாதி 08ம் திகதி திருவிழா ஒப்புக் கொடுக்கப் பட்டு வந்தது. அயற்கிராம மக்களுக்கு நவநாட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுத் திருவிழா சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

1992ம் ஆண்டு நடைபெற்ற இடப்பெயர்வின் பின்வழிபாடுகள் இடம்பெறவில்லை. 2002ம் ஆண்டு மக்கள் மீண்டும் தம் சொந்த இடங்களுக்கு வந்த பின் அன்னம்மா என்பவரின் முயற்சியால் ஆலயம் புனரமைக்கப்பட்டது. மாதத்தின் முதல் வியாழன் திருப்பலியும் நடைபெற்று வருகின்றது. தற்போது இவ்வாலய வழிபாடு கள் மாதகல் புனித தோமையார், புனித செபஸ்ரியார், புனித அந்தோனியார் ஆலய மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன. 2010ம் ஆண்டு அருட்பணி ஆனந்தகுமாரின் தலைமையில் புரட்டாதி 08ம் திகதி அன்னையின் திருநாள் திருப்பலி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதற்கான செலவுகளை புனித தோமையார், புனித செபஸ்ரியார் ஆலயங்கள் ஏற்றுக் கொண்டன. நோயினால் அல்லல்பட்டு தம்மைத் தேடி ஓடி வருபவர்களை அன்னை இன்றும் பாதுகாத்துப் பராமரித்து வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## மாரீசன்கூடல் புனித கயித்தான்

## முனீந்திரனின் ஆலயம்

இலங்கைக் கத்தோலிக்கத் திருச் சபையின் வரலாற்றை மனக்கண் கொண்டு சிந்தித்தால் புனிதர்களை வழிபட வைப்பது ஆலயமே . இவ்வழித் தோன்றலில் 167 வருட சிறப்புக் கொண்டு ஆலயங்களில் மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலயம் முன்னணி யில் உள்ளதெனக் குறிப்பிடலாம்.


இம்மண்ணின் மக்கள் பாதுகாவல ராம் புனித கயித்தாரின் பாதுகாப்பும் வழி காட் டலும் இறையன்பும் ஒன்றிணைந்த விசுவாச மும் இறை சிந்தனையும் அளப்பரிய விஷேட அருளையெல்லாம் பரம பிதாவிடம் இப் புனிதர் மூலம் பெற்று, சகோதர பாசம் அயலி லுள்ள இந்துமத சகோதரரின் அன்பைப் பரிமாறி வாழ்கின்றனர். இவ்வாலயம் 1843ம் ஆண்டு தொடக்கம் 1865ம் ஆண்டு வரை யான 28ஆக புனிதரின் நாமத்தை இலங் கையின் 11 மறை மாவட்டங்களிலும் எமது யாழ். மறைமாவட்டத்தில் குறிப்பாக சண்டிலிப் பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாரீசன் கூடல் மண்ணில் புனித கயித்தாரின் முதலா வது பழைய ஆலயமாக இருப்பது நமது கத்தோலிக்க மக்கள் பெற்ற தவப்பலனே. 1865ம் ஆண்டு ஆலய வளர்ச்சியை உருவாக்க மனதிற் கொண்ட பொயிசியோ என்னும் போதகர் சபைக்குருவால் ஆரம்பிக் கப்பட்டு 1888ம் ஆண்டு இலவாஜ் என்னும் குருவானவரால் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் முகப்புப் பூரணப்படுத்தப்பட வில்லை என்பது முன்னோரின் கூற்று.

19ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ம்நூற்றாண்டின் தொடக்கத்திலும் மாரீசன் கூடல் பங்கு மக்கள் மட்டுமன்றி அயற் கிராமங் களான இளவாலை, விளான், பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், வலித் தூண்டல் சார்ந்த அனைத்து மக்களுக்கும் அர்ப்பணிப்பு மிக்க நற்செய்திப் பணியை மேற்கொள்ள முக்கிய மான திருநாட்கள் முன்னெடுக்கப்பட்ட படி யால் மாட்டு வண்டிகளில் வந்து பங்கெடுத்து ஒரு சிலர் இரவுப் பொழுதில் ஆலய முன்றலில் இளைப்பாறிச் செல்வதும் உண்டு.

தம்மைத் தாழ்த்துபவர்கள் உயர்த் தப்படுவார்கள் என்பதற்கொப்பக் கயித்தா னின் உத்தம வாழ்வு அவரை ஓர் புனிதராக உயர்ந்து உன்னத நிலையை எய்தச் செய்தது. மரணத்தின் 72 வருடங்களின் பின்பு முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கப் பட்டது. இன்று மாரீசன்கூடலில் உள்ள பழைய ஆலயம் 1964-1970காலப்பகுதியில் முருகைக்கல் - சுண்ணாம்புக் கலவை கொண்டு உட்கட்டுமானம் சீர் செய்யப்பட்டது. ஆலயம் போர்க்காலச் சூழலினால் குண்டு களின் அதிர்வு கொண்டு சிதைவுண்ட நிலை கண்டு தற்போதைய பங்குத்தந்தை அருட்பணி MMH ஞானேந்திரன் அடிகளா ரின் நெறிப்படுத்தலில் அருட்பணி சபையின ரின் துணிவு கொண்ட புதிய கட்டுமானப் பணியை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் அனுமதியைப் பெற்ற பங்கு மக்கள் அனைவரினதும் ஒற் றுமை அற்புதமானது, ஆச்சரியம் கொண்ட வியக்கத்தக்க வகையில் இவ்வால யத்தை அதி விஷேட மாற்றம் செய்து கட்டியெ முப்பினர் என்று தான் கூறலாம். கடற்றொழில் கொண்டு சிறு ஊதியத்தை சேர்ப்பவர்கள் கூடத் தமது நாள் வருமானங்களை ஆலயக் கட்டுமான நிதிக்குச் சேர்த்தனர். இன்று

ஆலயம் கற்பனை பண்ண முடியாத உயர்ந்த பலிபீடத்தைக் கட்டிக் காக்கும் பிரகாசம் கொண்ட கோபுரமாகக் கண் கொள்ளாக் காட்சியாக மாறியுள்ளது. ஆலயக் கட்டுமானப் பணி கொண்டவர்கள் தம் திறமையை வெளிப்படுத்த மிகுந்த பிரயாசைப்பட்டுள் ளனர். ஆலயம் மூன்றாவது புதிய கட்டுமானப் பணியை நிறைவு செய்தமை கொண்டு 12.08.2010 அன்று யாழ். ஆயரினால் மந்திரி த்துத் திறந்து வைக்கப் பட்டது. இன்று பாருறை மக்களை வியக்க வைக்கும் பேராலயமாகக் காட்சியளிப்பதானது புனிதரின் வேண்டு தலின் வெளிப் பாடாகும்.

**- திரு.ஞா.பெர்னாட்**



**மாரீசன்கூடல் புனித கயித்தார் தேவாலயம்**

புனிதரான ஜோசப் வாஸ் அவர்களே,
நாங்கள் புனிதத்தில் வளர்ந்திடவும்,
நற்செய்தியின் இரக்கம் என்ற
செய்தியை வாழ்ந்திடவும்
எங்களுக்குக் கற்றுத் தாரும்

-பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ்

# கலை இலக்கிய

# எழுச்சி

# சண்டிலிப்பாய் பிரதேசத்தின் இலக்கியப் பதிவுகளை முன்நிறுத்திய ஒரு வரலாற்றுப் பார்வை

**கே.ஆர்.டேவிட்**

ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்

சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தின் இலக்கி யப் பரம்பல் பற்றிய வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கு, சண்டிலிப்பாய் பிரதேசத்திற்கு உட்பட்ட கிராமங்கள் பற்றிய புரிதல்கள் அவசியமாகும். மனிதக் குழுமங்களின் கூட்டு நிலையே, கிராம மாகவும் கிராமங்களின் கூட்டு நிலையே பிரதேசமாகவும் வகுக்கப் பட்டுள்ளது.

ஒரு சமூகத்தின் நனவிலிமனத்தின் உணர்வுப் படிமங்களின் புறநிலை வடிவமே இலக்கியம் என இலக்கிய ஆய்வாளர்கள் வரையறை செய்துள்ளனர். எனவே ஒரு பிரதேசத்தின் இலக்கியப் பரம்பலை, அப்பிர தேசத்தில் மக்கள் குழுமங்களின் சமூக இயங்கியல் நகர்வுகளைத் தவிர்த்துச் சிந்திக்க முடியாது என்ற முடிவுக்கு நாம் வரமுடியும்.

சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தின் வரை படத்தின் உதவியோடு, சண்டிலிப்பாய்ப் பிர தேசத்திற்குட்பட்ட கிராமங்களைப் பின்வரு மாறு இனங்காண முடியும். சுதுமலை வடக்கு, தெற்கு, சாவற்கட்டு, உயரப்புலம், ஆனைக் கோட்டை, நவாலி (முழுமையாக) , மானிப்பாய் (முழுமையாக), சண்டிலிப்பாய் வடக்கு, மத்தி, மாசியப்பிட்டி, வடலி அடைப்பு, பண்டத்தரிப்பு, பிரான்பற்று, சில்லாலை வடக்கு, தெற்கு, மாதகல் கிழக்கு, தெற்கு, பெரியவிழான், மாரீசன்கூடல், இளவாலை, முள்ளானை போன்ற கிராமங்களாகும்.

ஒரு கிராமத்தின் அல்லது, ஒரு பிரதேசத்தின் இலக்கியப் பரம்பல் பற்றிய ஆய் வுக்கு அக்கிராமத்தின் அல்லது, அப்பிர தேசத் தின் கடந்தகால அரசியல் அமைதி நிலை அடி நாதமாகவும், ஆதாரசுருதியாகவும் அமை கின்றது. இலங்கைத் தேசியத்தைப் பொறுத்த வரை 1948 வரை பிரித்தானியரின் ஆட்சிக்கு உட்பட்டதாகவும், 1948ம் ஆண்டின் பின்னர் வடபகுதிப் பிரதேசங்கள் இன வன்முறைக்கு உட்பட்டதாகவும், 1983ம் ஆண்டுக்குப் பின்னர், 2009ம் ஆண்டு வரை ஆயுதப் போராட்டத்திற்கு உட்பட்ட பிரதேசங்க ளாகவுமே இருந்திருக்கின்றன. மொத்தத்தில் இலங்கை அரசியல் வரலாற்றில் 1505ம் ஆண்டில் போர்த்துக்கேயர் இலங்கையை ஆக்கிரமித்திருந்ததிலிருந்து, 2009 இல் நடந்த முள்ளிவாய்க்கால் யுத்தம் வரையும்,

ஏன் இற்றை வரையிலும் இலங்கைத் தேசியத்தில் அமைதியானதொரு அரசியல் நீரோட்டம் இருந்ததற்கான எந்த வரலாறு களும் இல்லையென்றே கூற வேண்டும். இதனால் படைப்பாளர்களுக்கோ, அல்லது படைப்பாளரின் படைப்புக்களுக்கோ எந்த விதமான பாதுகாப்புக்களும் இல்லாததால் இன்று சீரானதொரு ஆய்வுக்குரிய எந்த ஆவணங்களையும் மிகக் கஷ்டப்பட்டே பெற வேண்டியிருந்தது. பெற்ற ஆவணங்களும் பூரணமான ஆவணங்கள் என்று கூற முடியாது உள்ளது.

இதே போன்ற படைப்பாளர்களைப் பிரதேச அடிப்படையில் இனங்காண்பதிலும் இடர்பாடுகள் காணப்படுகின்றன. சண்டிலிப் பாய்ப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்து, தவிர்க்க முடியாத உறவுநிலை காரணமாகச் வேறு பிரதேசங்களை வாழ்விடமாக கொண்ட படைப்பாளர்கள், வேறொரு பிரதேசத்தில் பிறந்து வளர்ந்து தவிர்க்க முடியாத உறவு நிலை காரணமாக சண்டிலிப்பாய் பிரதேசத் தை உத்தியோகப்பூர்வமாக வாழ்விடமாகக் கொண்ட படைப்பாளிகள் இவர்களை எந்தப் பிரதேச செயலகத்திற்கு உட்படுத்துவதென்ற பிரச்சினை உள்ளது.

சகல பிரச்சினைக்கும் சட்டப் புத்தகத் தை விரிப்பது பொருத்தமானதல்ல என்ற முடி வோடு, படைப்பாளர்களை ஒரு பொதுநிலை யில் வைத்தே நோக்கப்பட்டுள்ளனர்.

அடுத்து, கலை இலக்கியம் என்பதற் குள் எத்தனையோ வகைகள் உண்டு ஒரு ஆய்வுக்குள் இலக்கிய வடிவங்கள் அத்தனை யையும் உள்ளடக்கிவிட முடியாது. உள்ளடக்க வும் கூடாது. இதன் அடிப்படையில் இலக்கியப் பரம்பலில் "ஆக்க இலக்கியத் துறை" சார்ந்த இலக்கியப் படைப்பாளர்கள் மட்டுமே இப் பந்தியில் நோக்கப்படுகின்றன என்பது கவனத்திற்குரியதாகும்.

சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தின் ஆக்க இலக்கியம் பற்றிய ஆய்வை ஆரம்பிக்கும் போது எங்களை அறியாமலேயே நமது சிந்தனையை முந்திக் கொண்டு நமது மன தில் தோன்றுபவர் "தங்கத் தாத்தா" நவாலி யூர் சோமசுந்தரப் புலவர் ஆவார். 70களில் நான் மாணவனாக இருந்த போது பாட நூல்களில் இவரது படமும், இவரது கவிதை களும் இடம்பெற்றிருந்தன. நகைச்சுவை யோடு கூடிய இவரது பாடல்கள் கிராமப்புற மக்களின் அன்றாட வாழ்க்கைச் சம்பவங் களைச் சித்தரிப்பனவாக அமைந்திருந்ததால் அவை மிக இலகுவாக நமது மனதில் பதிந்து இன்னமும் வாழ்ந்து கொண்டி ருக்கின்றன.

இவர் நவாலியைச் சேர்ந்த வன்னிய சேகரத்தின் வழித்தோன்றலாகக் கதிர்காமருக் கும், இலக்குமிப்பிள்ளைக்கும் 1878ம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் எனப் பதிவுகள் கூறுகின்றன. பிரித்தானியர் இலங்கையை ஆக்கிரமித்து இருந்தபோது பிறந்த இவர் 75 ஆண்டுகள் வாழ்ந்து 1948இல் இலங்கை சுதந்திரமடைந்த பின் 1953இல் காலமாகி யுள்ளார். இவரது காலத்திற்கு முற்பட்ட வர்களாக மயில்வாகனப்புலவர், சுதுமலை யைச் சேர்ந்த இராமலிங்கம் போன்றோரும் வாழ்ந்ததாக வரலாற்றுப்பதிவுகள் கூறுகின் றன. ஆனால் இவர்களது படைப்புக்கள் பற்றியோ அல்லது, இவர்களது வாழ்க்கை வரலாறு பற்றியோ தெளிவாக எந்தப் பதிவு களையும் காணமுடியவில்லை.

நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பிறந்து - வாழ்ந்த எழுபத்தைந்து ஆண்டுகளில் இறுதி ஐந்து வருடங்கள் மட்டும் சுதந்திர இலங்கையில் வாழ்ந்துள்ளார். அதற்கு முற்பட்ட எழுபது ஆண்டுகளும் பிரித்தானியர் ஆட்சியிலேயே வாழ்ந்துள்ளார். பிரித்தானியர் காலத்திலேயே இலங்கையில் படைப்பு இலக்கியம் தோற்றம் பெற்றதாகவும், அச்சுப் பதிவுகள் ஏற்பட்டதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் ஆக்கங்களை அவதானிக்கும் போது அக் காலத்து இலக்கியப் பண்புகளாக இரண்டு விடயங்களைக் கூறக்கூடியதாகவுள்ளது. ஒன்று, இவர் 1500 செய்யுள்களை எழுதியுள்ளார் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதன் மூலம் இவர் தமது படைப்பு முயற்சிகளை வசன நடையைப் பின்பற்றாமல் செய்யுள் வடிவத்தையே பின்பற்றியுள்ளார் என்பதையும், இரண்டாவதாக, இவர் இறைபக்தியையும், கிராமப்புற மக்களின் வாழ்வியலையுமே கொண்டுள்ளார் என்பதுமாகும். இவர் வாழ்ந்த 20ம் நூற் றாண்டின் முற்பகுதியில் இவரோடு இன்னும் சில இளம் படைப்பாளிகள் வாழ்ந்திருக்கின்றனர். இவர்களின் இருவரை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இருவருமே ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் எஸ். அகஸ்தியர், கே. டானியல் இவர்களோடு இளவாலையைச் சேர்ந்த சிறீரங்கம் அப்பாத்துரை, ஆனைக் கோட்டையைச் சேர்ந்த நமசிவாயம் சிவபாதம் (புத்தொளி), நவாலியைச் சேர்ந்த 'பாவலன்' பாவிலு சத்திய சீலன் ஆகியோரையும் குறிப்பிடலாம். மேற் குறிப்பிடப் பட்டவர்கள் சோமசுந்தரப் புலவரின் காலத்தில் வாழ்ந்தவர்களாக இருப்பினும், சோமசுந்தரப் புலவருக்கும், இவர்களுக்குமிடையில் ஏறத்தாழ கால் நூற்றாண்டு கால இடைவெளி வித்தியாசம் உண்டு என்றதன் அடிப்படையில் இவர்களது படைப்புகளை ஒப்பீடு செய்வது எந்த வகையிலும் பொருத்தமாகாது என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமானதாகும்.

அறுபதுகளில் மாக்சிஸ அரசியலின் வருகையும், எழுபதுகளில், இலவசக் கல்வித் திட்டம், பல்கலைக்கழகக் கல்வியில் தாய் மொழிப் போதனை போன்ற கல்வித் திட்டங்களின் அறிமுகங்களோடு கல்விப் புலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இலக்கியப் பரப்பிலும் தாக்கங்களை ஏற்படுத்தின. பிரித்தானியர் காலத்திலும் அதற்குப் பின்னரும் உயர்கல்வி வாய்ப்புக்கள் உயர் மட்டத்தினருக்குரிய தாகவே கருதப்பட்டன. கல்விப் புலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்த அடிமட்ட மக்களும் உயர்கல்வியைப் பெறக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியதால், அடி மட்ட மக்கள் மத்தியில் சமூக சிந்தனைகளில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இந்த மாற்றம் இலக்கியப் புலத்திலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. கிராமப் புறங்களிலிருந்து தோற்றம் பெற்ற எழுத்தாளர்களில் முக்கியமான இரண்டு படைப்பாளர்கள் சண்டிலிப்பாய்ப் பிரதேசத்திற்கு உட்பட்ட ஆனைக்கோட்டைக் கிராமத்தைச் சேர்ந்தவராகக் காணப்படுகின்றனர். கே.டானியல், எஸ். அகஸ்தியர் ஆகிய இருவரோடு ஆனைக்கோட்டையை சேர்ந்தவர்களான கே.ஆர். டேவிட், பொன். பொன்ராசா ஆகிய இருவரையும் சேர்த்துக் கொள்ளலாம். கே. ஆர். டேவிட், பொன். பொன்ராசா ஆகிய இருவரும் 20ம் நூற்றாண்டில் பிற்பகுதியில்

எழுத்துப் பணியில் ஈடுபட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். பொன். பொன்ராசா அவர்கள் 28.08.1947 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்து 16.05.1977 இல் நடந்த திருமணத் தின் மூலம் ஆனைக்கோட்டையில் குடியேறி 02.02. 2001இல் காலமாகி விட்டார். இவர் படைப்பிலக்கியத் துறையில் அவ்வப்போது தனது படைப்புக்களை வெளியிட்டிருந்தாலும் நூலுருவில் இவரது தொகுப்புக்கள் எதுவும் வெளி வந்ததாக தெரியவில்லை. இரண்டாம வரான கே.ஆர். டேவிட் அவர்கள் இன்றும் படைப்பிலக்கியத் துறையில் ஈடுபட்டு வருகின்றார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சவரிமுத்து அன்னம்மா தம்பதிகளுக்கு 3வது மகனாக 24.08.1926இல் அகஸ்தியர் பிறந் தார். இவர் தனது 20வது வயதில் எழுதத் தொடங்கினார். இவர் எழுதிய முதல் கவிதை சுதந்திரன் பத்திரிகையில் பிரசுரமானது. இவர் கவிதைத் துறையில் தனது எழுத்துப் பணியை ஆரம்பித்தாலும், பிற்பட்ட காலத்தில் சிறுகதை, குறுநாவல், நாவல், ஆய்வுக் கட்டுரை போன்ற துறைகளில் வல்லமையுள் ளவராகக் காணப்பட்டார். இவரது படைப் புக்கள் இலங்கைப் பத்திரிகைகளில் மட்டு மல்ல, இந்தியாவில் "தீபம்", "தாமரை" போன்ற பத்திரிகைகளிலும் பிரசுரமாகின. 1970இல் "தாமரை" என்ற சஞ்சிகை இவரது படத்தை சஞ்சிகையின் அட்டைப் படமாகப் பிரசுரித்து கௌரவப்படுத்தியதற்கான பதிவு கள் காணப்படுகின்றது. இவர் பின்வரும் நூல்களை எழுதி வெளியீடு செய்துள்ளார்.

01. பூந்தான் யோசேப்பு வாழ்க்கை வரலாறு
02. மகாகனம் பொருந்திய.....
03. எவருக்கும் தாயாக....
04. அகஸ்தியர் பதிவுகள்
05. கலை இலக்கியமும் வர்க்க நிலைப்பாடும்
06. அகஸ்தியர் கதைகள்
07. இருளின் உள்ளே
08. திருமணத்திற்காக ஒரு பெண் காத்திருக்கிறாள்
09. மண்ணில் தெரியாது ஒரு தோற்றம்
10. கோபுரங்கள் சரிகின்றன
11. எரி நெருப்பில் இடைபாதை இல்லை
12. நகரத்திலிருந்து

மொத்தமாக 12 நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார். இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளால் பிரான்ஸ் நாட்டுக் குப் புலம் பெயர்ந்த இவர் 08.12.1995 இல் பிரான்ஸ் நாட்டிலேயே காலமானார். இவர் தனது படைப்புக்களை பாதுகாப்புக் கருதி கீரிமலையில் ஒரு வீட்டில் சேமித்து வைத் தார். கீரிமலையில் நடந்த இராணுவ நடவடிக்கையின் போது அத்தனை நூல்க ளும் எரிக்கப்பட்டு விட்டன. "வர்க்க முரண் பாடுகள் அற்ற தொரு பொதுவுடமை சமுதா யத்தை" உருவாக்குவதை தனது இலக்கியத் தளமாகவும் , அதே வேளை சாதியமைப்பு போன்ற சமூக முரண்பாடுகளை அழிப்பதற் கான சக்திகளாக தனது படைப்புக்கள் அமைய வேண்டுமென்றும் அகஸ்தியர் எழுதினார். வர்க்க முரண்பாடுகள் அற்றதொரு பொதுவு டைமைச் சமுதாயத்தை உருவாக்குதல் என்ற அகஸ்தியரின் கோட்பாட்டைப் போலவே டானியலும் கொள்கைப் பிடிப்பாள ராக இருந்ததோடு சாதி அமைப்புக்கெதிரான போராட்டங்களைத் தானே தலைமை தாங்கி நடாத்தியும் வந்துள்ளார். அதுமட்டுமல்லாமல் சாதியமைப்புக்கெதிரான பெருமளவு இலக்கி யங்களைப் படைத்தவொரு எழுத்தாளனா

கவும் டானியல் அவர்களே காணப்படுகின் றார். இந்தியாவில் டானியலை "தலித் இலக் கியத்தின் தந்தை" என்று இலக்கியகாரர்கள் வர்ணிக்கும் அளவிற்குச் சாதியமைப்பிற்கு எதிரான நடவடிக்கைகளை இலக்கியத்தில் மேற்கொண்டிருந்தார்.

சண்டிலிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட ஆனைக்கோட்டைக் கிராமத்தில் டானியல் அவர்கள் 25.03.1927இல் பிறந்தார். ஆரம்பக் கல்வியோடு தமது படிப்பை முடித்துக் கொண்ட இவர் குடும்பக் கஷ்டம் காரணமாக தந்தையின் தொழிலுக்கு உதவி செய்ய ஆரம் பித்தார். இக் காலப்பகுதியில் தான் இவர் எழுத ஆரம்பித்தார். இவரது ஆரம்பப் படைப்புக்கள் சிறுகதை வடிவங்களாக இருந்தாலும், பிற்கா லத்தில் சிறுகதைகளோடு குறுநாவல், நாவல் என்பனவற்றிலும் தேர்ச்சி பெற்றுத் தொடர்ச்சி யாக நாவல்களையே எழுதினார். இவரால் எழுதப்பட்ட "கானல்" என்ற நாவல் இப்பொ முது இந்தியாவில் தஞ்சாவூர் பல்கலைக்கழகத் தில் பட்டதாரி மாணவர்களுக்கான பாடநூலா கப் பேணப்பட்டு வருவது இலங்கை எழுத்தா ளர்கள் அனைவரிற்கும் பெருமை சேர்க்கும் செய்தியாகும். இவரால் எழுதப்பட்டு பதிப்பிக் கப்பட்ட நூல்கள்

01. டானியல் சிறுகதைகள்
02.போராளிகள் காத்திருக்கிறார்கள்
03.பஞ்சமர்
04.தண்ணீர்
05.கானல்
06.பஞ்சகோணம்
07.அடிமைகள்
08.கோவிந்தன்
09.முருங்கையிலைக் கஞ்சி
10. இருளின் கதிர்கள் ஆகியனவாகும்.

நோய்வாய்ப்பட்டிருந்த இவர் சிகிச்சை பெறுவதற்காக இந்தியாவிற்குச் சென்று பலனளிக்காத நிலையில் 23.03. 1986 இல் தஞ்சாவூரில் காலமானார். இவரின் இலக்கிய ஆற்றலை மதித்து இந்திய எழுத் தாளர்கள் தஞ்சாவூரில் இவரது மரணச் சடங்கு களை நடத்தியதோடு இவருக்கென ஒரு சமாதியையும் அமைத்துள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தின் படைப் பிலக்கிய கர்த்தாக்கள் பற்றியதும், அவர்களது படைப்புக்கள் பற்றியதுமான நமது இலக்கியப் பார்வை 19ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்று இலக்கியப்பணி செய்த நவாலியூர் சோமசுந் தரப் புலவரில் ஆரம்பித்து , 20ம் நூற்றாண் டில் தோற்றம் பெற்று இலக்கியப்பணி செய்த அகஸ்தியர், டானியல் போன்றோரின் படைப் புகள் பற்றிய ஆய்வுகளை நிறைவு செய்து தற்போது 20ம் நூற்றாண்டின் பிற்பகுதி யையும், 21ம் நூற்றாண்டின் முற்பகுதியை யும் அண்மித்து நிற்கின்றது.

20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியி லிருந்து இற்றைவரை தமிழர் வாழும் பிர தேசங்களில் நிறைய சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் சங்கிலித் தொடராய் நிகழ்ந்திருக்கின்றன. 1956ல் தமிழ்த் தலை வர்கள் காலிமுகத்திடலில் நடத்திய அகிம்சை வழிப் போராட்டம் முறியடிக்கப்பட்டமை, 1958ல் நடந்த இன வன்முறை, 1974ல் இராணுவத்தால் குழப்பியடிக்கப்பட்ட தமிழ் ஆராய்ச்சி மகாநாடு, 1981ல் யாழ்ப்பாண நூலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம், பூபாலசிங்கம் புத்தகக் கடை போன்றவை எரிக்கப்பட்டமை, 1983ல் நடந்த இனக் கலவரம், இதைத் தொடர்ந்து 3தசாப்தங்கள்

வரை நீடித்த தமிழீழப் போராட்டம், நீடித்த வரலாற்று நிகழ்வுகளை இப்படியே நீட்டிக் கொண்டு செல்லலாம். இதனால் இலக்கியப் போக்கிலும் நிறையக் கள மாற்றங்கள் நிகழ்ந் திருக்கின்றன. அதுமட்டுமல்ல எத்தனையோ படைப்புக்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன. மேற் குறிப்பிடப்பட்ட இலக்கியத் தாக்கங்களிலி ருந்து சண்டிலிப்பாய் பிரதேசத்தைத் தவிர் த்து நாம் நோக்கிவிட முடி யாது.

20ம் நூற்றாண்டில் பிற்பகுதியிலும், 21ம் நூற்றாண்டிலும் சண்டிலிப்பாய் பிர தேசத்தில் படைப்பிலக்கியப் பணியில் ஈடு பட்ட படைப்பாளர்கள் பின்வருமாறு இனங் காணப்படுகின்றார்கள்.

மாதகலைச் சேர்ந்த செல்வரத்தினம் குமாரசுவாமி, மானிப்பாயைச் சேர்ந்த இராச யோகன், இராசவல்லவன், மாதகலைச் சேர்ந்த துரைராசா இராசசிங்கம், நவாலியைச் சேர்ந்த கோகலே ஜெயரட்ணம், டாக்டர் சிவன டியான், ஆனைக்கோட்டையை சேர்ந்த கே. ஆர். டேவிட், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பொன்.பொன்ராசா போன்றோர் இனங்காணப்படுகின்றார்கள்.

இவர்களில் மானிப்பாயைச் சேர்ந்த இராசவல்லவன் இராசயோகன் சண்டிலிப் பாய் பிரதேச செயலகத்தில் கிராமசேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றியுள்ளார். இவர் சிறுவர் இலக்கியம் படைப்பதிலேயே வல்லவராகக் காணப்படுகின்றார். இவரது சில ஆக்கங்கள் நூல்வடிவம் பெற்றுள்ளன. அவற்றுள் "சிந்தனை செய் மனமே" என்ற தொகுதி குறிப்பிடக்கூடியதாகும். நவாலியைச் சேர்ந்த கோகலே செல்வரட்ணம் என்பவரும் மாதகலைச் சேர்ந்த செல்வரத்தினம் குமார சுவாமி என்பவரும் கவிதை, நாடகம், பட்டி மன்றம் போன்ற துறைகளில் பணியாற்றி யுள்ளனர். இவர்களிடமிருந்து நூல் வடிவம் பெற்ற எந்தப் பதிப்புகளும் வெளிவந்ததாக தெரியவில்லை. அடுத்து மாதகலைச் சேர்ந்த செல்வரத்தினம் குமாரசுவாமி, மானிப்பா யைச் சேர்ந்த டாக்டர் சிவனடியான், ஆனைக் கோட்டையைச் சேர்ந்த பொன்.பொன்ராசா ஆகியோர் சிறு கதைத்துறையில் ஆற்றல் மிக்கவராக இருந்துள்ளனர். செல்வரத்தினம் குமாரசுவாமி அவர்கள் "பசி", "மனிதனா நீ" ஆகிய சிறு கதைத் தொகுதிகளை வெளியீடு செய்ததாகவும், இவரிற்கு "நகைச்சுவைச் செல்வர்" என்ற பட்டம் வழங்கப்பட்டதாகவும் பதிவுகள் தெரிவிக்கின்றன. மானிப்பாயைச் சேர்ந்த டாக்டர் சிவனடியான் அவர்கள் "என் கையெல்லாம் இரத்தம்" என்ற ஒரு சிறு கதைத் தொகுதியை வெளியீடு செய்துள்ளார். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பொன். பொன்ராசா அவர்கள் சில நூல்களைப் பதிப் பித்து வெளியீடு செய்ததாகவும் செய்திகள் உண்டு. அந்த வெளியீடுகள் இராணுவ நட வடிக்கையின் போது எரிக்கப்பட்டு விட்டதாக வும் அதே செய்தித் தொடரில் கூறப்பட்டுள்ளது.

அடுத்துள்ளவர் ஆனைக் கோட் டையைச் சேர்ந்த கே. ஆர். டேவிட் அவர்கள் இவர் சிறுகதை, குறுநாவல், நாவல், விமர் சனம். இலக்கிய ஆய்வு போன்ற பல துறை சார்ந்தவராகக் காணப்படுகின்றார். இவரால் வெளியீடு செய்யப்பட்ட நூல்கள்

01. வரலாறு அவளைத் தோற்றுவிட்டது (நாவல்)
02. ஆறுகள் பின் நோக்கிப் பாய்வதில்லை (குறுநாவல்)

03.பாலைவனப் பயணிகள் (குறுநாவல்)

04.வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் (குறுநாவல்)

05.ஒருபிடிமண் (சிறுகதைத் தொகுதி)

06.பாடுகள் (சிறுகதைத் தொகுதி)

07. மண்ணின் முனகல் (சிறுகதைத் தொகுதி)

என்பன. தவிர, தற்போது கல்வியமைச்சினால் நடைமுறைப்படுத்தப் படுகின்ற பாடநூல்களில் தரம் -08 தமிழ் மொழியும் இலக்கியமும் என்ற பாடநூலில் இவரால் எழுதப்பட்ட, எழுதப்படாத வரலாறு என்ற சிறுகதை இடம்பெற்றுள்ளது. சிறப்பான அம்சமானது மட்டு மல்ல 70களில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் கவிதை பாடநூலில் இடம் பெற்றதால் நவாலிக் கிரமத்துக்கும், சண்டிலிப்பாய்ப் பிரதேசத்திற்கும் ஏற்பட்ட சிறப்பை இன்று கே.ஆர். டேவிட் அவர்களின் சிறுகதைப் பாடநூலில் இடம் பெற்றதன் மூலம் தொடர்ந்தும் காப்பாற்றக் கூடியதாகவுள்ளது.

இக் கட்டுரையின் நிறைவாக இரண்டு விடயங்களைச் சுட்டிக் காட்டி இக் கட்டுரையை நிறைவு செய்யலாம் என எண்ணுகிறேன்.

01. தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் நடந்த வன்முறைச்சம்பவங்களால் எத்தனையோ படைப்பாளிகள் செயலாற்ற முடியாதவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். எத்தனையோ ஆக்கங்கள் அழிந்து போய் இருக்கின்றன. இதனால் சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தின் இலக்கிய வரலாற்றைப் பூரணமாக என்னால் தர முடிய வில்லை என்பது.

02. ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இயங்குகின்ற கலாசாரப் பிரிவினர் கலை, இலக்கிய கர்த்தாக் களை ஆதரிக்க வேண்டும் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களைக் கௌரவிக்க வேண்டும். இதன் மூலம் தான் ஒரு பிரதேசத்தின் இலக்கிய வளத்தைச் செழுமைப்படுத்த முடியும். என்பது என் நம்பிக்கையாகும்.

"வாய்க்காலில் தண்ணீர் சலசலத்து ஓடுவது எவ்வளவு முக்கியமோ வாய்க்காலில் ஓடுகின்ற தண்ணீர் செடி நிற்கின்ற பாத்தியை சென்றடைய வேண்டும் என்பது அதைவிட முக்கியமாகும்."

"இலக்கியம், காலக்கண்ணாடி" - மேத்யூ அர்னால்ட் (**Mathew Arnold**)

"இலக்கியம் என்பது ஒரு சமுதாயத்தின் வெளிப்பாடு. சமுதாயத்தில் விளைந்து, சமுதாயத்தை இயக்க வல்லது. ஒரு சமுதாயத்தை உருவாக்கும் ஆற்றல் பெற்றது - பொனால்டு (**Ponald**)

"சமுதாயம் இலக்கியத்தின் பிரதிபலிப்பு" - மைக்கேல் பக்தின் (**Michael Bukthin**)

"எது இலக்கியம் இல்லை என்று கூறுவது எளிது, எது இலக்கியம் என்று உணரலாமே தவிர உணர்த்த இயலாது' - பேரறிஞர் டாக்டர் சாமுவேல் ஜான்சன் (**Johnson, The Literary Dictator**)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களின் கூத்துக்கலை வளர்ச்சியும், இன்றைய நிலையும்

**அ.அ.தயஸ்**

அபிவிருத்தி உத்தியோகத்தர்

ஈழத்தில் காணப்படும் பாரம்பரிய வடிவங்களில் ஒன்றாகக் கூத்தும் காணப் படுகின்றது. இயலுக்கும், இசைக்கும் முக்கியத் துவம் கொடுத்து நல்ல உயிரோட்டம் நிறைந்த சிந்தனைக்கதைகள் கலை வடிவ மாக இருந்து நிலைத்து நின்று அடையாளம் காணப்படுகிறது. இதுவே பற்பல மாவட்டங் களில் ஆய்வுகளையும், அரங்கேற்றங்களை யும் , பாராட்டுதல்களையும் பெற்று தனித்துவ மாய் நடைபோடும் ஒரு பாரம்பரிய கலை வடிவமாக விளங்குகின்றது.

மக்கள் வாழ்க்கையில் ஆற்றல் மிக்க சாதனங்களாக சமயமும் அதனோடு இணைந்த கலைகளும் விளங்கி வந்தன. பூர்வீக காலம் முதலாக கலைகளும் சடங்கு களும் மக்களால் போற்றப்பட்டுள்ளன. இக் கலைகளில் ஆடலும், பாடலும் முதன்மை பெற்றன. காலப்போக்கில் கூத்து, நடனம், கரகம், காவடி, வில்லுப்பாட்டு முதலான கலைவடிவங்களும் தோற்றம் பெற்றன. பின்பு கூத்து நடனமாக நடிக்கப்பட்டது.

ஈழத்தில் யாழ்ப்பாணம், மட்டக் களப்பு, மன்னார், முல்லைத்தீவு, சிலாபம், புத்தளம், மலையகம் மாவட்டத்தில் கூத்துக் களின் வளர்ச்சி மேலோங்கிக் காணப்படுகின் றன.

இத்தகைய கூத்துக்கள் யாழ்ப்பா ணத்திலும் பிரபல்யம் பெறத் தொடங்கின. குறிப்பாக கரையோரங்களை அண்மையாகக் கொண்ட பிரதேசங்களே நாட்டுக்கூத்தினை வளர்ப்பதனில் அதிக ஈடுபாடு காட்டின. காரணம் கூத்துக்களின் முக்கிய நோக்கம் மதங்களை மையப்படுத்தியதாகக் காணப் பட்டது. கரையோர மக்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தினைப் பின்பற்றுபவர் களாக இருப்பதால் தத்தமது ஊர்ப் புதினங் களை கருப்பொருளாகக் கொண்டு கூத்துக் களை உருவாக்கினார்கள்.

இவ்வாறாக பொதுவான கூத்து நடை முறை காணப்பட்ட போதும் சண்டிலிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட கிராமங்களும் இதற்கு விதிவிலக்கன்று. கூத்துக் கலையை வளர்ப் பதில் இப்பிரதேச மக்கள் காட்டிய ஆர்வம் போற்றத்தக்கது.

இவ்வாறு பார்க்கும் போது மரபு வழியாக எவ்வாறு கூத்துக்கலை எனப்பெயர்

பெற்றது என்பதை நோக்கினால் 1950ற்குப் பின் ஆய்வாளர்கள் அரசியல் வாதிகள் அறிஞர்களால் நாட்டுக்கூத்து என்ற புதிய பெயர் சூட்டிக் கொள்ளப்பட்டது. நாட்டுக்கூத்தில் பங்கு கொள்ளும் நடிகர் அண்ணாவியார் பெரும்பாலும் பாமர மக்களாகவே இருந்தது. ஆடல். பாடல், பாடல், உடை, நடிப்பு வளர்ச்சி யடைந்த நாடகங்களில் உள்ளது போல் செம்மைப்படுத்தப் படாமல் இருந்தாலும் கிராமப்புறங்களிலே கூத்துக்கள் மேடையேற றப்பட்டதாலும் நாட்டுக்கூத்து என நாமம் சூட்டினர். முன்பு கூத்துக்களே நாடு தழுவிய நாடகமாக இருந்ததால் இதனை நாட்டுக்கூத்து என்றும் நாட்டு சினிமா என்றும் அழைப்பார். புதியதும் என்ற நூலில் மௌனகுரு குறிப்பிடுகிறார். இக்கூத்து இலங்கையில் மட்டுமல்ல ஆசிய நாடுகள் அனைத்திலுமே நடைபெறுகின்றன.

நெய்தலும் மருதமும் இரண்டாகக் கலந்து வளமாக்கிக் கொண்டிருக்கும் சண்டிலிப்பாய் கிராமத்தில் அமைந்து காணப்படும் பிரதேச செயலகம் தன்னுடைய பிள்ளைகள் போல் செயல்படும் கிராமங்க ளையும் கூத்து கலையில் வளர்த்திருப்பது என்பது மிகவும் போற்றுவதற்குரிய விடயமா கும். இவ்வாறு பார்க்கும் போதும் சண்டிலிப் பாய் பிரதேச செயலகத்தில் 28 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படும் கிராமங்களில் 05 கிராமங்களில் கூத்துக்கலை பெருவளர்ச்சியடைந்தமைக் கான காரணமாக அவர்களின் அமைவிடம் காணப்படுகின்றது.

கரையோரத்தை அண்மித்த பகுதி யில் காணப்படும் இக்கிராமங்கள் கூடுதலாகத் தங்களுடைய தொழிலாக மீன்பிடித்த லையே பிரதானமாகக் கொண்டுள்ளனர். இதனால் அவர்கள் தங்களுடைய தொழில் நேரங்களில் களைப்பைப் போக்குவதற்காக ஏதாவது பாட்டைப் பாடிக் கொண்டே தங்க ளுடைய தொழிலைச் செய்வதைக் காணக் கூடியதாக உள்ளது. இதன் பிரதிபலிப்பு தான் அவர்கள் பின்பு கூத்து கலையை வளர்ப் பதற்கு அத்திவாரமாக இருந்துள்ளது. எனவே அமைவிடம் பெரிதும் கூத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியுள்ளது.

கூத்துக் கலையில் வளர்ச்சிக்கு மதமும் பிரதான காரணமாகக் காணப்பட் டுள்ளது. அதாவது கூத்துக்கள் மேடையேற் றப்படும் தினங்களை எடுத்துப்பார்க்கும் போது கிறிஸ்தவ திருவிழாவின் கடைசிநாள் மற்றும் இந்து திருவிழாக்களின் விசேட நாள் இவ்வா றான திருவிழாக்களின் கடைசிநாள் கட்டாயம் கூத்து அரங்கேற்றும் நிகழ்வு காணப்படுகின் றது. மாதகல், இளவாலை, சில்லாலை பகுதிக ளில் இவ்வாறான நடைமுறை அதிகளவில் காணப்படுகிறது. குறிப்பாக மாதகல் கிராமத் தில் பிரசித்தி பெற்று விளங்குகின்ற கரையோ ரத்தில் அமைந்துள்ள கெபி மாதா திருவிழா வின் கடைசி நாளில் 7.00 மணிக்குக் கூத்து அரங்கேற்றப்படும். இது ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருவ தைக் காணமுடிகிறது. இவ்வாறு கூத்துக் கலை வளர்வதற்கு மதங்களும் பிரதானமாக இருந்துள்ளது. மற்றும் கூடுதலாகப் பார்க்கும் போது கிறிஸ்தவ மத புனிதர்களின் பெயர்களே கூத்தின் பெயர்களாக அதிகளவு இருந்துள்ளது. ஆனாலும் வரலாறு சம்பந்தமான கூத்துப் பெயர்களும் இடம்பெற் றுள்ளதை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

இந்த வகையில் இக்கிராமங்களில் மேடையேற்றப்பட்ட கூத்து விபரங்களை எடுத்து நோக்குவோமானால்,

**மாதகல் கிராமத்தில் நடித்து மேடையேற்றப் பட்ட கூத்துக்களாக**

தொம்மையப்பர் கூத்து
சங்கிலியன் கூத்து
நொண்டிக்கூத்து
அகனேச கன்னிக் கூத்து
சகுனக் கன்னிக் கூத்து
பார்த்தீபன் கூத்து
உத்தமபுத்திரன் கூத்து
தந்தைக்கொரு வீரமைந்தன்
சகோதரபாசம்
தர்மசீலன்
கம்பர் மகன்

**சில்லாலை கிராமத்தில் மேடையேற்றப்பட்ட கூத்துக்களாக**

சங்கிலியன்
எஸ்தாக்கியர்
மறைசாத்த மாவீரன்
மனம்போல் மாங்கல்யம்
தேவசாவு பயம் பிள்ளை
யேனோவா

**இளவாலை கிராமத்தில் மேடையேற்றப்பட்ட கூத்துக்களாக**

வீரபாண்டிய கட்டபொம்மன்
சங்கிலியன்
அரிச்சந்திர மயானகாண்டம்
சூழ்ச்சியின் வீழ்ச்சி
மனம்போல் மாங்கல்யம்
நந்திவர்மன்
சகோதரபாசம்

**மாரீசன்கூடல் கிராமத்தில் மேடையேற்றப் பட்ட கூத்துக்களாக**

வகய மனோகரன்
வரத மனோகரி
மனம் போல் மாங்கல்யம்
அகனேச கன்னி
யதுத குமாரன்
சகோதர பாசம்
சூழ்ச்சியின் வீழ்ச்சி

**நவாலி கிராமத்தில் மேடையேற்றப்பட்ட கூத்துக்களாக**

வரப்பிரகாசம்
நொண்டி
எஸ்தாக்கியர்
ஞானசீலன் ஞானசீலி
யூதேயா



**சாந்தை கிராமத்தில் மேடையேற்றப்பட்ட கூத்துக்களாக**

காத்தவராயன்
சத்தியவான் சாவித்திரி

அரிச்சந்திரா மயானகாண்டம்

இவ்வாறான கூத்துக்கள் கிராமங்களில் மேடையேற்றப்பட்டு கூத்துக் கலையை வளர்த்துச் சென்றுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இக்கலையை வளர்ப்பதற்கு முன்பு அண்ணாவியார் இல்லாமையால் குருநகர் கிராமத்தில் இருந்தே அண்ணாவிமார் வரவழைக்கப்பட்டு நடிகர்களை பயிற்றுவித்தனர். பின்பு அந்த அந்த கிராமங்களிலே நடிகர்கள் வளர்ச்சி அவர்கள் தங்களுடைய கிராமத்துக் கூத்தை வளர்த்துச் சென்றுள்ளார்கள்.

இக்கூத்து கலையின் வளர்ச்சி நிலையானது சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குள் மட்டும் நிற்கவல்ல அவர்களின் திறமையால் வெளிச்சடங்குகளுக்குச் சென்று கூத்தை அரங்கேற்றியுள்ளனர். குறிப்பாக மாதகல் கிராம மக்கள் தங்களுடைய கூத்தை காரைநகர் கொண்டைச்சிக் குடா போன்ற இடங்களிலும் அரங்கேறியுள்ளது அறிய முடிகிறது.

இக்கிராம மக்களின் கூத்துக்கலை வளர்ச்சியின் உச்சக்கட்டமாக சில்லாலை, மாதகல் கிராமத்தில் உள்ள அண்ணாவியார்களுக்கு கலாபூசணம் விருது கிடைத்தது ஆதாரமான விடயமாகக் காணப்படுகிறது. அதாவது சில்லாலையைச் சேர்ந்த ஆரோக்கியநாதன் சைமன் விக்ரர், மாதகலைச் சேர்ந்த இன்னாசி முத்து யேசுதாசன் என்பவர்களுக்கு கலாபூசணம் விருது வழங்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. இன்னாசி முத்து யேசுதாசன் 2014ம் ஆண்டில் முதலமைச்சர் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவ்வாறாகக் கூத்து மரபானது பெரு வளர்ச்சி கண்டாலும் தற்போது இக்கலை பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது.

**கூத்து மரபின் இன்றைய நிலை**

காலங்கள் மாறுகின்றது துறைகள் வளர்கிறது மனித வாழ்வு மேம்படுகிறது. உலகம் முன்னேறுகிறது ஆம் இன்றைய உலகமானது நவீனத்துவத்தை நோக்கிப் பயணத்தை ஓட்டி வருகின்றான். இதற்கு சண்டிலிப்பாய் பிரதேசத்துக்குட்பட்ட கிராமங்களும் விதிவிலக்கல்ல. அவர்களும் இன்று பாரம்பரியங்களை விட்டு பல முன்னேற்ற முயற்சி வடிவங்களைக் கையாண்டு கொண்டு வருகின்றனர். கடற்தொழிலை பரம்பரையாக செய்த காலம் மாறி இன்று படிப்பனைத் தொடர்ந்த வண்ணமிருக்கின்றனர் அரச உத்தியோகங்களை நாடிச் சென்று பரம்பரைத் தொழிலுக்கு முற்று வைக்கின்றனர். எல்லா வீடுகளுமே நவீனத்தை உள்வாங்கி முன்னேற்றம் கண்டு வருகின்றனர்.

கூத்துக்கலையுடன் மிகவும் ஈடுபாடுடையவர்கள் வெளிநாடுகளை நாடிச் சென்றுள்ளனர். இன்றும் சிலர் வெளி மாவட்டங்களில் நிரந்தரப் பிரஜைகளாக்கப்பட்டுள்ளனர். இன்றும் சிலர் இறுதிப்போரில் வாழ்வை மாய்த்துவிட்டனர். ஆனால் கலை அதுவும் இன்று எங்கே செல்கிறது என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.


அதிலும் சற்று உள்நோக்கிப் பார்த்தால் நாட்டுக்கூத்தின் இன்றைய நிலை எங்கே செல்கிறது வளர்கிறதா? வளர்க்கப் படுகிறதா? தேய்கின்றதா? என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது. அன்றைய கால கலையை வளர்த்த கலைஞர்கள் புதைக்கப் படும்போது கலைகளும் புதைக்கப்பட்டு விட்டனவோ தெரியவில்லை.

அன்றைய காலத்தை விட இன்றைய காலத்தில் நாட்டுக்கூத்து வளர்ச்சி குறைவடைந்து சென்றமைக்குப் பல காரணங்களை எடுத்து நோக்கலாம்.

01) மக்கள் சினிமா மோகத்துக்கு ஆசைப்பட்டு விட்டனர்.
02) கூத்தினை பொறுமையாக இருந்து பார்ப்பதற்கு நேரமில்லை.
03) தொலைக்காட்சி நாடகங்களின் கவர்ச்சித் தன்மை.
04) பல கலைஞர்களின் இழப்பு.
05) இன்றைய சமூகத்தினர் கலைகளில் நாட்டமின்மை.
06) கலைகளை வளர்த்தெடுக்கும் மனப் பக்குவம் இன்று யாரிடமும் இல்லை.
07) பாரிய இடப்பெயர்வு.
08) உயிரிழப்புக்கள்.
09) வெளிநாட்டுப்பயணங்கள்.
10) நாட்டுப்பிரச்சனை


இப்படியாக மேற்குறிப்பிட்ட காரணங்களால் இன்று கூத்துக்கலையானது நலிவடைந்து செல்கிறது. ஆயினும் அழிந்து விட்டது என்று கூற முடியாது. பிரதேச அரசியல், நிர்வாக, சமூக தலைமைகள் கரிசனை காட்டும் போது மீண்டும் கூத்துக் கலையை வளர்த்தெடுக்க முடியும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகக் கிராமங்களின் கூத்துக்கலையின் வளர்ச்சிப் போக்கினை வரைபடமாகப் பார்ப்போமாயின்,




மேற்குறிப்பிட்ட வரைபினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றவேளை ஆரம்ப காலங்களில் கலைக்கு முக்கியத்துவம் இருந்த காலங்களில் நாட்டுக்கூத்து 90% அளவிற்கு 90 ஆண்டு வரை வளர்ந்து சென்றிருக்கிறது. பின்பு 1991ல் ஏற்பட்ட இடப்பெயர்வினால் கலைகள் கவனிப்பாரின்றி விடுபட்டுக் கொண்டு சென்றது. 2000ம் ஆண்டுகளுக்குப் பின் சிறிது சிறிதாக அண்ணா வியாரின் ஆர்வத்திற்கமைய கலை வளர்ச்சி கண்டது. ஆனால் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி பொழுதுபோக்கு மாற்றங்களால் இன்று வீழ்ச்சி நிலையடைந்துள்ளது.

கடந்த 5 வருடங்களில் நாட்டுக் கூத்தின் வளர்ச்சியின்மை முக்கிய காரணங்களில் அளவினை வட்ட வரைபில் காட்டினால்



இன்று பொதுவாக சிறுவர் தொடங்கி பெரியவர் வரை நவீனத்துவத்தினையே விரும்புகின்றனர். நவீனத்துவத்துள் தமது வாழ்வைப் புதைத்து தமது முகத்தை மூடிக் கொண்டு பாரம்பரியத்தினை மறந்து வாழ்கின்றனர். நவீன மெருகூட்டலுடன் அனைத்து விடயங்களையும் நினைத்துப்

பார்க்கும் பண்பு அதிகரித்து விட்டது. எந்த விடயத்தையும் புதுமுறைக்கூடாகவே பார்க்க வேண்டும் என்ற ஆர்வமே அதிகமாக அவர்களிடம் இருக்கின்றது. எனவே புதியன புகுதலும் பழையன கழிதலும் என்பதற்கேற்ற வாறு நாட்டுக்கூத்து கிழ்நிலைக்குத் தள்ளப் பட்டு தொழில்நுட்ப உபகரணங்களுக்கு ஊடாக வருகின்ற கலைகளை தொலைக்காட்சி நிகழ்வுகளை மக்கள் தொலைக்காட்சி நிகழ்வு களை மக்கள் விரும்பிப் பார்த்தால் நாட்டுக் கூத்துக் கயில் ஆர்வம் இல்லாமல் போய் பாரம்பரிய கலை கீழ்நிலைக்குத் தள்ளப் படுவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு வளர்ச்சி குன்றிய நிலையில் உள்ள பாரம் பரிய கூத்துக்கலையை வளர்த்தெடுப்பதற்கு பின்வரும் முயற்சிகளை முன்னெடுக்கலாம்.

- நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர் கையில் கூத்துப் பொறுப்பினை ஒப்படைக் கலாம்.
- தற்போது இளைஞர் சமூகத்தினால் ஆர்வ முள்ள அண்ணாவியார்களுடன் தொடர்பு படுத்தி எதிர்காலக் கூத்துப் பொறுப்பை ஒப்படைக்கலாம்.
- பிரதேச செயலகத்திலுள்ள கலாச்சாரப் பிரிவு நாட்டுக்கூத்து போட்டிகளை வைத்து கூத்தை வளர்க்கலாம்.
- பாடசாலைகளில் நாட்டுக்கூத்து சேகரிக்கக் கூடிய ஏற்பாடுகளை வழங்கலாம்.
- கூத்து மரபு முறையை அமைத்தல்.

இவ்வாறான முயற்சிகளை முன்னெடுக் கும் போது ஆண்டுக்கு முதல் வளர்ச்சியில் இருந்த கூத்து முறையை திரும்பவும் மீட்டுரு வாக்கம் செய்யலாம்.



# நல்லூர் சின்னத்தம்பிப் புலவரும் கல்வளையந்தாதியும்

**செல்வி சுபராகினி தணிகாசலம்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்

**"தோன்றில் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று"**

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் கி.பி 1658 - 1796 வரையாகும். இக்காலம் சமய வழிபாட்டுச் சுதந்திரம் கிடைக்கப் பெற்ற காலமாகும். போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் நிலவி வந்த அடக்கு முறைகள் ஒழுங்கு முறைகள் அகன்று ஒல்லாந்தர் காலத்தில் சமாதானம் நிலவியமையால் பலவகையான தமிழ் இலக்கிய நூல்கள் தோற்றம் பெற்றன. கல்வித் துறையில் பல முன்னேற்றச் செயற்பாடுகள் ஆரம்பிக்கத் தொடங்கின. கல்வி கேள்விகளில் சிறந்த புலவர்கள் தமது பிரதேச ஆலயங்கள் தொடர்பான சமய நூல்கள், ஆலயவழிபாட்டு நூல்கள், உள்ளூர்ப் பிரபுக்களைப் பெருமைப் படுத்தும் நூல்கள், வைத்தியம், சோதிடம் சார்ந்த நூல்கள், வரலாறு மற்றும் நாடக நூல்களை எழுதினர்.

இவ்வாறான புலவர் வரிசையில் யாழ்ப்பாண நல்லூர் சின்னத்தம்பிப் புலவரும் ஒருவராவார். இவர் தன்னகத்தே சிறப்பான புலமையைத் தக்க வைத்தவர். சமயம் சார்பான அந்தாதி, பள்ளு பிரபந்தங் களையும் உள்ளூர்ப் பிரபுக்களைச் சிறப்பிக் கும் முகமாகக் கோவைப் பிரபந்தத்தையும் பாடியுள்ளார். சமய நூல்களில் ஆலயமகிமை யும் அதில் உறையும் இறைவன் மகிமை, புகழ் ஆகியவற்றையும் பக்தியோடு பாடி மகிழ்ந்தார்.

கல்வளை அந்தாதியை இயற்றிய வரகவியாகிய சின்னத்தம்பிப் புலவர் இற் றைக்கு 200 வருடங்கட்கு முன்னர், ஒல்லாந் தர் இந்நாட்டை ஆண்ட காலத்தில் யாழ்ப் பாணத்து நல்லூரில் வாழ்ந்த வில்வராய முதலியாரென்னும் பிரபுவின் புதல்வராவார். வில்வராய முதலியார் உயர்குடிப்பிறப்பு, கல்வியொழுக்கம், செல்வம், செல்வாக்கு, அதிகாரம் முதலிய குணங்களோடும் நற் செயல்களோடும் கூடியவர். வில்லவராயரது திறமையை அறிந்த ஒல்லாந்தர் அரசினர் தேசவழமையை எழுதுவதற்கான தலை மைப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தனர்.

இப்படியான அறிவிற் சிறந்த வில்லவராய முதலியாருடைய புத்திரராகச் சின்னத்தம்பிப் புலவர் சிறுபராயத்தில் கல்வி கற்றலை அலட்சியம் செய்து விளையாட்டி

னுடனே சிந்தனை செய்வாராயினர். இவ்வாறு மாடு மேய்க்கும் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சமயம் இவரது தந்தையாராகிய முதலியாரைக் காணும் படி இந்தியாவிலிருந்து வந்த தமிழ்ப் புலவர் ஒருவர் "முதலியார் வீடு எவ்விடத்தோ" என்று இவரைக் கேட்க அப்பொழுது ஏழு வயசுப் பராயமுடையவராகிய இவர் வசனத்தில் பதில் சொல்லாமல்

**"பொன் பூச் சொரியும் பொலிந்த**
**செழுந் தாதிறைக்கும்**
**நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம் -**
**மின் பிரபை**
**வீசு புகழ் நல்லூரான் வில்வரா யன்கனக**
**வாசலிடைக் கொன்றை மரம்"**

என விடையீந்தாரென்றுஞ் சொல்வர். அதன் பின்பே இவர் வரகவியென்பது உலகோர்க்குப் புலனாயிற்று.



கல்வளையிலுள்ள சின்னத்தம்பிப் புலவரின் சிலை

மேலும் எமது புலவர் புராண இதிகாசங்களை நன்கு ஆராய்ந்து அவற்றின் கண்ணுள்ள நுண் பொருளையுணர்ந்துள்ளாரென்பது கீழ் வரும் ஐதீகத்தால் இனிது விளங்கும். ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த கணேசையர் என்பவர் தமது இல்லத்தில் பல வித்துவான்களை அழைத்து நாள்தோறும் இராமாயணத்துக்கு அர்த்தம் சொல்லும் போது ஒரு தினம் அவ்வித்துவான்கள் கம்ப சூத்திரமொன்றிற்குப் பொருள் காண முடியாது மயங்கியவிடத்து இப்புலவர் அதன் பொருளை எளிதில் விளக்கிச் சபையோரை அற்புதமுறச் செய்தாரென்றும், அதற்கு மகிழ்ந்து கணேசையர் நல்லூரிலுள்ள பண்டாரக்குளம் எனும் வயலைப் புலவருக்குச் சன்மானமாகக் கொடுத்தாரென்றும் வரலாறுண்டு.

சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய நூல்கள் மறைசையந்தாதி, கல் வளையந்தாதி, கரவை வேலன் கோவை, பறாளை விநாயகர் பள்ளு என்னும் இவைகளாம். இவற்றுள் முதல் நின்ற மறையந்தாதியைச் சிதம்பர வேதாரணியேசுவரர் மீது பாடினார். இரண்டாவதாகக் கல்வளையந்தாதி சண்டிலிப்பாயிலுள்ள புராதன தலமாகிய கல்வளைப்பதியில் எழுந்தருளிய விநாயகர் மீது பாடப் பெற்றதாகும். மூன்றாவதாக உள்ள கரவை வேலன் கோவை கரவெட்டியில் வாழ்ந்த வேலாயுதப்பிள்ளை என்னும் பிரபு மீது பாடப்பெற்றதாகும். இறுதியில் சொல்லப்பட்ட பறாளை விநாயகர் பள்ளு சுழிபுரத்தைச் சேர்ந்த பறாளை (பறளாய்) என்னுந் தலத்தில் கோயில் கொண்டருளிய விநாயகக் கடவுள் மேற்பாடப் பெற்றது. சொற்சுவை பொருட்சுவை மலிந்தது. சிறப்பான பள்ளுப் பிரபந்தமாகவுள்ளது.

ஈழநாட்டின் வடபகுதியில் பிள்ளையார் கோயில்கள் இல்லாத கிராமங்களே இல்லை எனலாம். அவற்றுள் பழமையானதாகக் கருதப்படும் கோயில்களில் சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவிலும் ஒன்றாகும். இப் பிள்ளையார் மேல் வரகவி சின்னத்தம்பிப் புலவர் அவர்களால் கல்வளை அந்தாதி பாடப் பட்டது.

இத் திருத்தலம் ஈழநாட்டின் வடபகுதியில் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தின் சண்டிலிப்பாய் கிராமத்தில் கல்வளை என்னும் குறிச்சியில் அமையப்பெற்றதாகும். கல்வளை என்னும் பெயர் நீர் நிலையத் தின் பெயராகும். முள்ளியவளை, கண்டாவளை, ஆழியவளை, கும்பழாவளை, கழுதாவளை, ஆவளை போன்றவை உதாரணங்களாகும். இக் கல்வளை என்னும் நீர் நிலை ஓர் பெரிய திருக்குளம் ஆகும். காலத்தால் மிக மிக பழமையானது.

இத்தலம் பண்டைய அரசர்களின் காலத்துடன் சம்பந்தப்பட்டதாகும். இக் கோவில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஆரியச்சக்கரவர்த்திகளுடன் தொடர்புடையதாகும். யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த பரராசசேகரனுக்கும், பாண்டி மழவன் மரபில் வந்த அரசகேசரியின் புத்திரி ஆகிய வள்ளியம்மைக்கும் பரநிரூபசிங்கன் பிறந்தான். பரராசசேகரன் பரநிரூபசிங்கத்திற்குக் கல்வியங்காடு, சண்டிலிப்பாய், அராலி, அச்சுவேலி, உடுப்பிட்டி, கச்சாய், மல்லாகம் என்னும் ஏழு கிராமங்களையும் தாமிரசாசனம் செய்து கொடுத்து அக்கிராமங்களுக்கு அதிபதியாக்கி அநேக இராஜ வரிசைகளும் ஈந்தான்.

1620ம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் பரநிரூபசிங்கத்திற்கு அவனுக்குச் சொந்தமாக உள்ள ஏழு கிராமங்களுடன் நல்லூர், மாதகல் என்னும் இரண்டு கிராமங்களையும் மந்திரி உத்தியோகத்தையும் கொடுத்து அவன் குமாரன் பரராஜசிங்கத்துக்குக் கிராம அதிகாரத்தையும் கொடுத்தார்கள்.

1629ம் வருடத்தில் பரநிரூபசிங்கன் சிவபதமடைந்தான். அதன்பின் பரநிரூபசிங்கத்தின் மகனும் பரராசசேகர மகாராசாவின் பேரனும் ஆகிய பரராசசிங்கத்தைப் பறங்கியர் அரசாட்சி ஆலோசனைத் தலைவனாக்கிப் பரராசசிங்க முதலி என்றும் அவன் குலத்திற்கு மடப்பள்ளி என்றும் பட்டம் சூட்டி அவனை கௌரவப்படுத்தினார்கள்.

பரராசசிங்கமுதலிக்கு மரண காலம் சமீபித்த பொழுது அவன் தன் குமாரர்கள் ஏழு பேரையும் அழைத்துத் தனது ஆஸ்திகளைப் பங்கிட்டு நல்லூரையும் கல்வியங்காட்டையும் அழகாண்மைவல்லமுதலி எனும் மகனுக்காக்கி அவனை நல்லூரிலுள்ள தன் மாளிகையில் இருத்தினான். மற்றைய தனது குமாரர்களில் தனபாலசிங்க முதலிக்கு மல்லாகத்தையும் வெற்றிவேலாயுத முதலிக்குச் சண்டிலிப்பாயையும் கொடுத்தான். சண்டிலிப்பாய்க் கிராமம் பல குறிச்சிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தமை அவற்றின் இடப்பெயர்களால் அறியப்படுகின்றது. இதில் ஒரு பகுதி சண்டிலிப்பாய் நடுக்குறிச்சியைச் சேர்ந்த பகுதி கல்வளை ஆகும்.

கல்வளைப்பகுதி கீரிமலையில் இருந்து அராலிக்கடல் வரை செல்லும் ஆழமான வழுக்கை ஆற்றின் கரையின் மேற்குப் பக்கமாக அமைந்துள்ளது. இதனால் இப்பகுதி வயல் சார்ந்த மருத நிலமாக விளங்குகின்றது. அத்துடன் அக்காலத்தில் தமிழ் நாட்டுடன் தமிழ் மக்கள் போக்குவரத்து வாணிபம் என்பவற்றில் ஈடுபட இது ஒரு நீர் வழிப் பாதையாக முக்கியம் பெற்றிருந்தது. கல்வளைப்பகுதியும் வழுக்கை ஆற்றுடன் அண்டி இருந்ததினால் பிரபல்யம் பெற்றிருந்தது. தமிழகத்துப் பிரபல்யம் வாய்ந்த ஆற்றங்கரைத் திருத்தலங்களைப் போல இத்தலமும்

எழுப்பெற்றது. ஆதி திராவிடரின் நாகவழி பாடும் வழுக்கை ஆற்றின் கரையோரமாக இங்கு பரவியது. குறிப்பாக, கல்வளையில் நாகதம்பிரான் வழிபாடு முதன்மையாகக் கருதப்பட்டது. இக்கோவிலில் நாகதம்பிரான் பொங்கல் பங்குனி கடைசி வெள்ளிக்கிழமை யில் மிக விமரிசையாக நடந்தமைக்கும் அயல் கிராமங்களில் இருந்தும் (சண்டிலிப் பாய், சங்குவேலி, மாகியப்பிட்டி) மக்கள் வந்து நூற்றுக்கணக்கான பானைகளில் பொங்கல் நடந்தமைக்கும் சான்றுகள் (தோம்பு) உண்டு.

கல்வளையில் பிள்ளையார் கோவில் தோன்றியதைப் பற்றி ஓர் புராதன கதை யுண்டு. கந்த வழிபாட்டை அனுஷ்டித்த மாரு தபுரவீகவல்லி என்னும் சோழ அரசிளங் குமாரி தன் வழிபாட்டில் பூரண நிறைவு காணாது விக்கினம் தீர்க்கும் விநாயகரை வணங்கிப் பல கோவில்களை வழுக்கை ஆற்றங்கரை ஓரமாக அமைத்தார். ஏனைய கோவில்களும் வழுக்கை ஆற்றுக்கு மேற்குக் கரையோரமாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று கல்வளைப் பரமானந்தப் பிள்ளையார் கோவில் ஆகும். இதற்குச் சான்று அளவெட்டி அருள்மிகு கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் வரலாறு. இவரால் ஸ்தாபிக்கப்பட்ட மற்றக் கோவில்களைப் போல் கலைப் பாணி யில் குளமும் கோட்டமுமாக பொலிந்து விளங் குகின்றது. ஒரு காலத்தில் புகழுடன் இருந்த இச்சேத்திரங்கள் போர்த்துக்கேயர் ஆட்சியில் அழிக்கப்பட்டன. இவ்விதம் சிதைந்த கோவில் கள் மீண்டும் புதுப்பிக்கப் பட்டுள்ளன.

இதற்கமையப் பரராசசிங்க முதலி யால் தனது மகனான வெற்றிவேலாயுத முதலிக்குக் கொடுக்கப்பட்ட சண்டிலிப்பாயில், வெற்றி வேலாயுதமுதலி குடும்பத்தினரால் தங்கள் கல்வளை என்னும் நிலத்தில் அமைந் திருந்த கல்வளை பரமானந்தப் பிள்ளையார் கோவிலை மீண்டும் நிறுவித் தங்கள் குல தெய்வமாக வழிபட்டார்கள். அத்துடன் பொது மக்களும் வழிபட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அவரின் வழித்தோன்றல்கள் கல்வளை என்னும் காணியில் எழுந்தருளியுள்ள பர மானந்தப் பிள்ளையார் கோவிலைப் பரா மரித்து வந்தனர்.

குலோத்துங்க முதலியாரின் புரோகி தர்களினால் (பிராமணர்கள்) இக் கோவில் பூஜை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர்களின் வழித்தோன்றல்களால் பூஜை செய்யப்பட்டு வந்துள்ளது. அண்ணன் அழ காண்மை வல்லபமுதலி தம்பி வெற்றி வேலா யுத முதலியிடம் வரும் பொழுது கல்வளை விநாயகரைத் தரிசித்து வணங்கிச் செல்வது வழக்கம்.

கல்வளைப் பிள்ளையார் மேல் மிகுந்த பக்தி கொண்டு கல்வளைப் பிள்ளை யார் திருவூஞ்சல் என்னும் திருவூஞ்சல் பாடலைப் பாடி மகிழ்ந்தார். இவரின் காலம் 17ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இந் நிகழ்வுகளுக்கு பல ஆண்டுகளுக்கு முன் அதாவது ஒல்லாந்தர் ஆண்ட காலத்தில் இற்றைக்கு ஏறக்குறைய 300 வருடங் களுக்கு முன் வில்லவராயமுதலியார் தோன் றினார். அவரும் கல்வளைப் பிள்ளையார் மேல் மிகுந்த பக்தி உடையவராய் விளங் கினார். இதனால் கல்வளைப் பிள்ளையார் பெயரில் ஓர் அந்தாதி பாடத் தொடங்கி காப்பின் முதல் இரண்டு வரிகளான

**"தார் கொண்ட பூ மல்லிகைச்**
**சேக்கையில் தும்பி சாலம்பும்**
**சீர்கொண்ட கல்வளை அந்தாதி பாடத் திரை**
**கடல் சூழ்"**

என்ற இரண்டு வரிகளையும் ஏட்டில் குறித்து பின்னர் மேற்கொண்டு எழுதுவதற்குச் சிறிது சிரமம் உண்டாகவே ஏட்டையும் எழுத் தாணியையும் தமது வீட்டில் விட்டுச் சென்று செய்யுளை முடிக்குந் திறன் வேண்டி விநாய கரை வணங்குவதற்காக ஆலயம் சென்று விட்டார். தந்தையார் இல்லாத நேரம் தாயிடம் வரும் மகன் சின்னத்தம்பி அங்கிருந்த ஏட்டைப் பார்த்து இரண்டு வரிகள் மட்டும் எழுதப் பட்டிருந்த செய்யுளைப் பார்த்து மிகுதி இரண்டு வரிகளான

**"பார் கொண்ட பல்லுயிர்க்கு ஆனந்த**
**மும்மதம் பாயும் கும்பக் கார் கொண்ட கம்பக்**
**களியானை முன்னின்று காப்பதுவே"**

என எழுதிச் செய்யுளைப் பூர்த்தி செய்து விட்டுச் சென்றுவிட்டார். தந்தையாராகிய வில்லவ ராய முதலியார் தனது மகன் சின்னத் தம்பியின் திறமையைக் கண்டு அவரை அழைத்து "இக்கல்வளை அந்தாதியைப் பாடி முடிப்பாயாக" என்று பணித்தார். இக் கல் வளை அந்தாதி சண்டிலிப்பாயிலுள்ள புராதன கல்வளைப் பகுதியில் எழுந்தருளியுள்ள பரமானந்தப்பிள்ளையார் மீது பாடப் பெற்றதா கும். சின்னத்தம்பிப் புலவருடைய இயற் பெயர் செயதுங்கமாப்பாணமுதலி என்ப தாகும். பின்பு இவர் புலவர் வரிசையில் இடம் பெற்றார். விநாயகர் அருளால் சிறுவயதிலி ருந்தே வரகவியாக விளங்கினார்.

கல்வளை அந்தாதியில் நிறைய இடம்பெறும் தாழைமரம், தாழம்பூ முதலிய வற்றைக் குறிப்பிடும். "தாழையடி" என்ற பகுதியும் வில்லவன் தாழ்குளம் எனக் குறிப்பி டும் குளமும் கல்வளைப் பிள்ளையார் கோவி லுக்கு முன் அமைந்து இருக்கின்றன.

இவ்வாறாகக் கி.பி 1700ம் ஆண்டள வில் கல்வளைப் பகுதியில் எழுந்தருளியிருக் கும் விநாயகர் பெருமானின் மீது கல்வளை அந்தாதிப் பிரபந்தம் பாடப்பட்டது. இது அந்தா திப் பிரபந்த இலக்கணத்திற்கு அமைவான யமக அந்தாதியாகப் பாடப்பட்டது. யமகம் எனப்படுவது ஒரே வகையான தொடர் வெவ்வேறு வகையான பொருள் தரக்கூடிய வகையில் அமைவதாகும். யமகம் பாடுவது எல்லாப் புலவருக்கும் முடியக் கூடியதல்ல இக்கல் வளையந்தாதி சொன்னயம், பொருள் நயம் மிக்கதென்று அறிஞர் உலகினில் பாராட் டப்படுவதாகும். இந்நூலுக்கு வல்லை வைத்தி லிங்கம்பிள்ளை அவர்கள் செய்த உரை ஒன்றுண்டு என அறிகின்றோம். தொகுத்து நோக்கும் போது சின்னத் தம்பிப் புலவர் இலக் கண இலக்கியச் சிறப்புக்களினால் பல நூல்க ளை பாடினாலும் இவரது கல்வளை அந்தாதி எனும் பிரபந்தம் சிறப்புடையதாக இருப்ப தைக் காணலாம். நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் மறைந்தாலும் அவர் பாடிய பிரபந்தம் இன்றும் நிறைந்திருக்கிறது. பார் போற்றும் புலவராய் வரகவியாக வாழ்ந்த சிறப்பு நல்லூர் சின்னத்தம்பிப் புலவரையே சாரும்.


சின்னத்தம்பிப் புலவர்

இத்திருவுருவம் தமது 15ஆவது வயதில் கல்வளையந்தாதி பாடிய சின்னத்தம்பிப் புலவர் என்று செல்லமாக அழைக்கப்படும் செயதுங்க மாப்பாண முதலியார். வாழ்ந்த காலம்: 1700-1764ம் ஆண்டு வரையாகும். இவரின் தந்தையார் நல்லூர் வில்லவராய முதலியாராவார். இவர் 1705ம் ஆண்டளவில் யாழ்ப்பாணத் தேச வழமைச்சட்டத்தை இயற்றிய குழுவிற்குத் தலைமை வகித்தவராவார்.

(கல்வளை சின்னத்தம்பிப் புலவரின் சிலையிலுள்ள கல்வெட்டுக் குறிப்பு)

# யாழ்ப்பாணத் தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தில் சோமசுந்தரப் புலவர்

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.



## அறிமுகம்:

யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பாரம்பரியத்தினை அதன் சீரும் சிறப்பும் குன்றாத வகையில் பாதுகாத்ததிலும் வளர்த்தெடுத்ததிலும் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், பெரியோர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், தொழில் வினைஞர்கள் முதலானோரது பங்களிப்புக்கள் காலந் தோறும் இருந்து வந்துள்ளன. அந்த வரிசையில் நவாலியூரிலே பிறந்து நமது மொழிக்கும் பாரம்பரியத்திற்கும் தனது எழுத்துக்களாலும் சேவைகளாலும் பலஞ் சேர்த்தவர் சோமசுந்தரப் புலவர். அவரது பங்களிப்பினை இரண்டு தளங்களில் நோக்க முடியும்.

தமது இலக்கியங்களில் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பாரம்பரியத்தினை மிகவும் துலக்கமாக வெளிப்படுத்தியவர்களில் சோமசுந்தரப் புலவருக்கு முதலிடம் இருக்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் நவீனத்துவம் யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சூழலுக்குள் பரவிக் கொண்டிருந்த சூழலில் பழைய பாரம்பரியத்தில் காலூன்றி நின்று அதனைக் கட்டிக் காக்க முயன்றவர்களில் சோமசுந்தரப் புலவர் முக்கியமானவராக இருக்கின்றார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சோமசுந்தரப்புலவரினை 'யாழ்ப்பாண மரபுவழித் தமிழ் பாரம்பரியத்தின் கடைசிக் கொழுந்து' என வர்ணிப்பதினை இவ்விடத்தில் நினைவு கூர்தல் பொருந்தும்.

## வாழ்வும் புலமையும்:

சோமசுந்தரப்புலவர் நவாலியிலே பரம்பரைச் சிறப்பும், கல்விப்பின்னணியும்

கொண்ட குடும்பம் ஒன்றில் 1878 ஆம் ஆண்டு பிறந்தவர். தந்தையார் பெயர் கதிர்காமர் தாயார் இலக்குமிப்பிள்ளை. இருவருக்கும் முதற் பிள்ளையாகப் பிறந்த புலவர் இளமைதொட்டு கல்வியில் நாட்டமுடையவராக இருந்தார். சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பின்னணியிலேயே இவர் தனது கல்வியறிவினை வளர்த்துக் கொண்டார். அருணாசல உபாத்தியாயரிடம் ஆரம்பக் கல்வியிறிவினைப் பெற்றுக் கொண்ட புலவர் தொடர்ந்து தம்பையா உபாத்தியாயர், மாரிமுத்து உபாத்தியாயர் என்போர் முறையே நவாலியிலும் மானிப்பாயிலும் நடாத்திய பாடசாலைகளில் மேற்படிப்பினைத் தொடர்ந் தார். தந்தையாரிடமிருந்தும் திருக்குறள், பாரதம் கந்தபுராணம், திரு விளையாடற்புராணம் முதலான இலக்கியங்களையும் கற்றுத் தேர்ந்தார். பிற்காலங்களில் சோதிடம், மருத்து வம், வானசாஸ்திரம், கைக்குறிநூல் முதலியவற் றிலும் புலவர் புலமைபெற்றார்.

புலவர் அவர்களுக்கு தமிழ் மொழி யைப் போலவே ஆங்கில மொழியிலும் ஆழ்ந்த புலமை இருந்தது. இதனால் அக்காலத்தில் வட்டுக்கோட்டையில் சைவச் சிறார்களின் நலன் கருதித் தாபிக்கப்பட்டிருந்த சைவாங்கில வித்தியாலயத்தில் ஆசிரியராகப்பணியாற்ற வாய்ப்புக் கிட்டியது. அங்கு அவர் கற்பித்த பாடங் களில் ஆங்கில மொழியும், ஆங்கில இலக்கிய மும் உள்ளடங்கும். சுமார் நாற்பது ஆண்டுகள் அவரது ஆசிரியப் பணி அப் பாடசாலையில் தொடர்ந்தது. அவர் எழுதிய நூல்கள் சிலவறறில் கூட அவரது ஆங்கில இலக்கியப் பயிற்சியின் தாக்கத்தினை அவதானிக்க முடியும்.

புலவர் அவர்கள் தனது இருபத்தெட் டாவது வயதிலே சின்னம்மை என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு மூன்று புதல்வர்களும் இரண்டு புதல்வியர் களும் பிறந்தனர். பிற்காலங்களில் மிகச் சிறந்த தமிழ் அறிஞராக விளங்கியவரான பண்டிதர் இளமுருகனார் மற்றும் தமிழ், வடமொழி, சிங்களம் முதலான மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவராய் பல மொழிபெயர்ப்புக்களையும் வடமொழி இலக்கிய வரலாறு என்னும் சிறந்த நூலையும் ஆக்கிய நடராசன் என்போர் சோமசுந்தரப் புலவரின் பிள்ளைகளே என்பது இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது.

## படைப்புக்கள்:

ஆழ்ந்த மொழியறிவும் சிறந்த யாப்பிலக்கணப் பயிற்சியுமுடையவரான புலவர் தன் வாழ்நாட்களில் எழுதிய நூல்கள் பல. அவற்றுள் அதிகமானவை திருத் தலங்கள் மீது அவர் பாடிய பிரபந்தங்களாகும். யாழ்ப்பாணத் திலும் யாழ்ப்பாணத்துக்கு அப்பாலும் பிரசித்தி பெற்றிருந்த முருகனாலயங்கள் மீது அவர் பாடல்களைப் பாடியுள்ளார். குறிப்பாக நவாலி யைச் சூழவிருந்த திருத்தலங்கள் மீது பிரபந்தங் கள் அதிகம் பாடப்பட்டுள்ளன. இவற்றுள் அதிகமானவை பதிகங்களும் ஊஞ்சல்களு மாகும். குலதெய்வமாக விளங்கிய நவாலி அட்டகிரி முருகன் மீது புலவர் கொண்டிருந்த பக்தியையும் பற்றையும் அவரது பாடல்கள் பலவற்றில் அவதானிக்க முடியும்.

- அட்டகிரிக் கலம்பகம், பதிகம், வெண்பா, திருவூஞ்சல், பிள்ளைத்தமிழ்.
- கந்தவனக் கடவை முருகன் நான்மணிமாலை,பதிகம், திருப்பள்ளி யெழுச்சி
- நல்லை முருகன் அந்தாதி, திருப்புகழ்
- மிடிமாலை
- கழையோடை வேற்பதிகம்.
- விநாயகர் பாமாலை
- நாமகள் புகழ்மாலை
- கதிரைச் சிலேடை வெண்பா, கதிர்காம வேலவர் பதிகம்


- சித்தாந்த விளக்கம்
- கந்தபுராணக் கதைகளின் உண்மை நூற்பொருள்

புலவரது துறைதோய்ந்த மொழிப் புலமையை கதிரைச் சிலேடை வெண்பாவிலே அவதானிக் கலாம். இருபொருள் தரும் சிலேடை என்னும் அணியை இலாவகமாகக் கையாண்டு இந்நூலி னைப் புலவர் ஆக்கியுள்ளார். ஆளுமை மிக்க கவிஞர்களுக்கே சிலேடை அணியினைப் பிசகின்றிக் கையாளுந்திறன் கைகூடும். இந்நூலின் கண்ணுள்ள சிலேடை நயம் செறிந்த பாடல்கள் ஒவ்வொன்றும் படிப்போர்க்குச் சுவை பயப்பவை.

புலவர் இருபத்தொராவது வயதிலே பெங்களூரில் இருந்து வந்த சித்தர் சுப்பிரமணிய சுவாமி என்பவரிடம் ஞான தீட்சை பெற்றுக் கொண்டனர். அன்றுதொட்டு அவர் ஆன்மீக நெறியில் அசையாத உறுதியும் தத்துவத் தேடல் கொண்டவராகவும் விளங்கினார். புலவரின் தத்துவ அறிவினையும் ஆராய்ச்சித் திறனையும் அவரது 'கந்தபுராணக் கதைகளின் உண்மை நூற்பொருள்' என்னும் நூல் வெளிப்படுத்துவதாய் அமைந்தது. 'சித்தாந்த விளக்கம்' என்னும் ஒரு நூலையும் புலவர் எழுதினார் என அறிய முடிந்தாலும் அது அச்சில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. புலவரும் அவரது நண்பர் பண்டிதர் சுப்பிரமணியமும் இணைந்து 1910 ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகள் நடாத்தி வந்த 'சைவபாலிய சம்போதினி' என்னும் பத்திரிகையில் புலவர் மயாவாதக் கொள்கைகளை மறுத்து எழுதிவந்த கட்டுரை களிலும் அவரது தத்துவ அறிவு பிரகாசிப்பதைக் கண்டு கொள்ளலாம். புலவர் எழுதிய உயிரிளங்குமரன் நாடகமும் தத்துவச் சார்புடையதொன்றே.

## பிற படைப்புக்கள்:

புலவரின் பக்திசாராத பிற படைப்புக் களும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை.



சிறுவர் பாடல்கள்
சுகாதாரக் கும்மி
சாவித்திரி கதை
இலங்கை வளம்
தால விலாசம்
மருதன் அஞ்சல் ஓட்டம்
பசுவின் கதை
ஆடு கதறியது
நவாலியூர் வன்னிய சேகரன் பள்ளு
தந்தையார் பதிற்றுப் பத்து
உயிரிளங் குமரன் நாடகம்

முதலானவை குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவை. முதலில் புலவர் எழுதிய சிறுவர் பாடல்கள் பற்றி நோக்கலாம். சிறுவர் பொருட்டுப்

புலவர் எழுதிய பாடல்கள் கவிச்சுவையும், விநோதமும், கருத்தாழமும் படைத்தவை. கதிரைச் சிலேடை வெண்பா பாடிய புலவரா இதனையும் பாடினார் என வியக்கத்தக்க வகையில் எளிமையானவை. 'ஆடிப்பிறப்பு', 'கத்தரித் தோட்டத்து வெருளி', 'தாடியறுந்த வேடன்', 'அன்புடைய தாய்', 'விறகு வெட்டி', 'இலவுகாத்த கிளி', 'பவளக்கொடி', 'கொழுக் கட்டைப் பொன்னன்' முதலானவை இன்றும் சிறார்கள் படித்து இன்புறும் கவிதைகளாகும். பல கவிதைகள் பாடநூல் களில் இடம்பிடித்துள்ளன. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் கல்வியதிகா ரியாக இருந்த க.ச அருணந்தி கேட்டுக் கொண்ட தன் பெயரில் இவற்றுள் பல பாடப்பட்டன எனத் தெரிய வருகின்றது. இப் பாடல்களும் வேறுஞ் சிலவும் தொகுக்கப்பட்டு 1955 இல் 'சிறுவர் செந்தமிழ்' என்னும் தொகுதி வெளிவந்தது. புலவருக்குத் 'தங்கத் தாத்தா' என்ற அழியாப் பட்டத்தினையும் மக்கள் மத்தியில் அதிக வரவேற்பினையும் பெற்றுத் தந்தவை அவரது சிறுவர் பாடல்களே எனின் மிகையாகாது.

புலவர் எழுதிய 'ஆடிப்பிறப்பு' என்னும் கவிதை ஆடிக் கூழ் ஒன்றினை எவ்வாறு காய்ச்சுவது என்பது பற்றிய சிறந்த விபரணமாக அமைகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் நிலவிய யாழ்ப்பாணத் தமிழ்ப் பண்பாடு பற்றிப் பேசுகின்றவர்களும் எழுதுகின் றவர்களும் அடிக்கடி தொட்டுக் காட்டும் சிறப்பு இக்கவிதைக்குண்டு.

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனாங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே"

தாடியறுந்தவேடன், பவளக்கொடி, கொழுக்கட்டைப் பொன்னன் முதலான கவிதை கள் புலவரின் நகைச்சுவைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன. வட்டுக்கோட்டை சைவாங்கில வித்தியாசாலை தலைமையாசிரியராக இருந்த சபாரத்தின சிங்கத்தின் வேண்டுகோட்படி புலவர் சிறுவர் களுக்கெனப் புலவர் எழுதிய 'சுகாதாரக் கும்மி' எனும் இலக்கியத்தினையும் எழுதியிருந்தார். சிறுவர்களை நல்லாற்றுப் படுத்தும் பாங்கில் எழுதப்பட்ட இவ்விலக்கியம் பல ஆண்டுகளாகப் பள்ளிச் சிறார்களுக்குப் படிப்பிக்கப்பட்டு வந்த சிறப்பினையுடையது. 1912 இல் சிறுவர்க ளுக்காக உரைநடையில் புலவர் 'சாவித்திரி கதை' என்னும் நூலையும் எழுதினார். சுருங்கச் சொல்லின் ஈழத்துச் சிறுவர் இலக்கியத் தின் முன்னோடிகளுள் ஒருவராகக் கொள்ளத் தக்க ஆளுமையும் தகுதியும் சோமசுந்தரப் புலவருக்குண்டு. தமிழகத்தில் சிறுவர் இலக்கி யம் தொடர்பில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்கு எந்தளவு முக்கியத்துவம் உண்டோ அந்தளவு முக்கியத்துவம் ஈழத்தில் சோமசுந்தரப் புலவருக்கு உண்டென்று கூறினும் தவறில்லை.

புலவர் எழுதிய இலங்கை வளம் என்னும் இலக்கியம் மிகச் சுவைபொருந்தியதும் எப்போதும் படித்து இன்புறக் கூடியதுமாகும். இலங்கைத் திருநாட்டிலுள்ள முக்கியமான பட்டணங்கள் மற்றும் பட்டினங்கள், விசேட திருத்தலங்கள், பிரசித்தி பெற்ற இடங்கள் என்பன குறித்தும் நீர்வளம், நிலவளம, கடல்வளம், பொருள்வளம் என்பன குறித்தும் எழுதிய பாடல்கள் இந்நூலின் கண்ணுள்ளன. இலங்கை நாடு பற்றியதோர் உயர்ந்த கற்பிதம் ஒன்றினை வாசகர் மனதில் பதியவைப்பனவாய் இவ்விலக்கியம் அமைந்துள்ளது. யாழ்ப்பாண நகரம் பற்றிப் புலவர் பின்வருமாறு பாடுகின்றார்.

" எண் சாண் உடம்புக்குச் சென்னி சிறந்திடும்
என்றே உரைப்பர் அதுபோலப்
பொன்சேர் இலங்கைச் சிரம் எனவே வரும்
புண்ணியம் ஓங்கிடும் யாழ்ப்பாணம்"

கொழும்பு பற்றிப் புலவர் என்ன கூறுகின்றார் என்பதனை அடுத்துப் பார்க்கலாம்.

"கலைப்பட்டினம் கரைப்பட்டினம் கலப்பட்டினம் பெருமை
தலைப்பட்டினம்வரைப்பட்டிராத் தலைப் பட்டினம் கொழும்பு"

என்கிறார். கன்னியாய் வெந்நீர் ஊற்றுப் பற்றிப் புலவர் எழுதிய பாடல் எல்லோராலும் அடிக்கடி மேற்கோள்காட்டப்பட்டு வரும் சிறப்புடையது. கன்னியாய் வெந்நீரூற்றிலுள்ள ஏழு கிணறு களும் வெவ்வேறு வெப்பநிலை கொண்டவை. இவ்வெப்பநிலை வேறுபாட்டுக்கு புலவர் எடுத்துக் காட்டாகச் சுட்டும் உவமைகள் படித்து இன்புறத்தக்கன.

" காதலனைப் பிரிந்தவளின் மனம்போல ஒன்று
கவிபாடிப் பரிசுபெறான் மனம்போல ஒன்று
தீதுபழி கேட்டவன்தன் மனம்போல ஒன்று
செயதபிழைக்கு அழுங்குமவன் மனம்போல ஒன்று
நீதிபெறா ஏழைதுயர் மனம்போல ஒன்று
நிறைபழித்த கற்புடையாள் மனம்போல ஒன்று
காதும் அழுக்காறுடையான் மனம்போல ஒன்று
கனலேறு எழுநீர்கள் உண்டு கன்னியாயில்"

யாழ்ப்பாணத்துக்கெனத் தனித்துவமான அடையாளமாக விளங்கும் பனைமரத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டும் விதத்தில் 'தாலவிலாசம்' என்றோர் நூலினையும் புலவர் எழுதியிருந்தார். பனையின் வகைகள், அதன் பயன்தரும் பாகங்கள், பனம் பண்டங்கள், அவற்றினைச் செய்யும் முறைகள் குறித்துப் புலவர் தந்துள்ள விபரணங்கள் மிக முக்கியத் துவம் வாய்ந்தவை. அத்துடன் ஒருகாலத்தில் யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வில் பனை பெற்றிருந்த மதிப்பினையும் பனம் பண்டங்கள் பெற்றிருந்த செல்வாக்கினையும் இவ்விலக் கியம் மிகத் துல்லியமாகப் பதிவுசெய்துள்ளது. யாழ்ப்பாணப் பாரம்பரியங்கள் பற்றி ஆய்வு செய்வோருக்கு அருமருந்தன்ன பதிவுகளாக இவை அமைந்துள்ளன.

புலவர் எழுதிய மருதன் அஞ்சல் ஓட்டம் என்னும் இலக்கியமும் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பண்டைய காலத்தில் 'வெற்றி கொண்டோம்! விழாவணி செய்யுங்கள்! என யவன வீரன் கூறியதை நினைவுறுத்தும் ஓட்டம் மருதன் அஞ்சல் ஓட்டமாகும். ஆங்கிலேயர் ஆட்சியில் நின்றும் இலங்கைநாடு சுதந்திரம் அடைந்த புழகாங் கிதத்தினை எங்கும் சொல்லி ஆரவாரிக்க இளைஞர்களை மருதன் அஞ்சல் ஓட்டம் நிகழ்த்த வருமாறு புலவர் அழைப்பதாக இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

"மருதன் அஞ்சல் ஓடுவோம்
மருதன் அஞ்சல் ஓடுவோம்
மாலிலங்கை நகரில் வாழ்
வாலிபர்கள் நாங்களே

எடுத்த காலில் ஆண்மையும்
இட்ட காலில் தாழ்மையும்
மடுத்துப் பிடித்த கைகளில்
மானம் ஊக்கம் பூண்டுநாம்

மருதன் தேசியப்பற்றும் பிறந்த தாய்நாடு பற்றிய பெருமிதமும் மீதூர இந்நூல் பாடப்பட்டுள்ளது. புலவரின் இலங்கைவளத்தின் மற்றோர் பரிணாமம் மருதன் அஞ்சல் ஓட்டம் இந்நூல் எனக் குறிப்பிடலாம். ஈழநாட்டின் அழகு, வரலாறு, மாற்றார் ஆட்சியில் இந்நாடு அடைந்த தாழ்வு, சுதந்திரத்திற்கான அடியீடு, சுதந்திரம் பெற்ற மகிழ்ச்சி நிலை இவற்றினை எளிமையும் சுவையும் நிறைந்த கவிதைவரிகளில் புலவர் விபரித்துச் சொல்லுந் திறன் படித்தின்புறத் தக்கது.

'ஆடு கதறியது' என்ற தலைப்பில் புலவர் எழுதிய பாடல் சமூகச் சீர்திருத்தத்தினை அவாவும் நோக்குடையதாகும். அக்காலத்தில் தெய்வ நேர்த்தி அல்லது சமயச் சடங்கு என்ற போர்வையில் உயிர்ப்பலி யாழ்ப்பாணத்தின் சில ஆலயங்களில் நிகழ்த்தப்பட்டு வந்தது. இதனைக் கண்டித்தும் ஆடுகளைப் பலியிடுவதை

நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தும் பாடப்பட்டதே இப் பாடலாகும். தாயாடு ஒன்று தன் மகன் பலியிடப் பட்டதை அறிந்து புலம்புவது போன்று பாடப் பட்ட இப்பாடல் கேட்போர் மனதில் இரக்கத்தினையும் சோகத்தினையும் ஒருங்கே வரவழைக்கும் தன்மை வாய்ந்தது.

புலவரது 'உயிரிளங் குமரன்' என்னும் நாடகம் நாடகத்துறையில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தினையும் பெற்றிருந்த ஆக்கத் திறனையும் எடுத்துக் காட்டுகின்றது. புலவர் வட்டுக்கோட்டை சைவாங்கில வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த காலங்களில் மாணவர்கள் நடித்தற்காக நாடகங்கள் சிலவற்றினை எழுதியிருந்தார். ஆரம்பத்தில் அவ்வாறு மாணவர்களுக்காக எழுதப்பட்ட நாடகங்களில் ஒன்றுதான் உயிரிளங் குமரன் என்னும் நாடகமுமாகும். 1925 ஆம் ஆண்டு சைவசிதாந்தத்தைத் தழுவிச் சில காட்சிகளுடன் இந்நாடகமும் அரங்கேற்றப் பட்டது. இதனைக் கண்டு இரசித்த அறிஞர்களின் வேண்டுகோளுக் கிணங்க 1926ஆம் ஆண்டில் அதனை விரித்து உயிரிளங் குமரன் என்ற பெயரில் இந்நாடகத்தினை புலவர் எழுதினார். இந்நாடகமே சோமசுந்தரப் புலவருக்கு 'புலவர்' பட்டத்தினையும் அறிஞர்களது கௌரவத்தினையும், பரிசில்களையும் பெற்றுத் தந்தது.

## முடிவுரை:

இங்ஙனம் பதினையாயிரத்துக் கும் மேற்பட்ட பாடல்களைப் வெண்பா, கலி வெண்பா, சிந்து, விருத்தம், ஆசிரியப்பா எனப் பல்வேறு யாப்புக்களிலும் பதிகம், நான்மணி மாலை, அந்தாதி, பள்ளியெழுச்சி, கலம்பகம் எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களிலும் பாடிய வர் சோமசுந்தரப் புலவர். நூற்றுக் கணக்கான தனிப்பாடல்களையும் அவ்வப்போது அவர் பாடியுள்ளார். கவிதையில் மட்டுமன்றி உரைநடையிலும் அவரது படைப்புக்கள் சில வெளிவந்துள்ளன. பக்தியை மட்டுமே கருப்பொருளாகக் கொள்ளாது தத்துவம், தேசியம், சமூகம் என்னும் புதிய தளங்களில் நின்றும் அவர் இலக்கியங்களை யாத்துள்ளார். அவை பழமையையும் புதுமையையும் இணைக்கும் பாலம்போல் விளங்குபவை. ஒட்டுமொத்தத்தில் இருபதாம் நூற்றாண்டில் ஈழம் கண்ட ஈடிணையற்ற கவிஞர்களுள் முக்கியமான ஒருவராகச் சோமசுந்தரப்புலவர் விளங்குகின்றார். அவரது ஆக்கங்கள் எதிர்காலச் சந்ததிக்கு புதிய திசைவழியைக் காட்டுவனவாகவும் நமது பாரம்பரியம் சார்ந்த உள்ளுரத்தினைத் தருவனவாகவும் அமைந்துள்ளமை நோக்கத் தக்கதாகும்.

### 4. தாலாட்டு

ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ

சீருஞ் சிறப்புந் திருவும் பெருகவந்த
ஆரும் விரும்பும் அருமருந்தே கண்வளராய் —ஆரா.

முத்தே பவளமே முழுமதியே எம்முடைய
சித்தம் மகிழுந் திரவியமே கண்வளராய் —ஆரா.

தெள்ளமுதே தேனே தெவிட்டா நறும்பாகே
உள்ளங் குளிரவரும் ஓவியமே கண்வளராய் —ஆரா.

மாமி அடித்தாளோ மாமனார் ஏசினரோ
பூமிச் சிறந்தசெல்வப் புத்தமுதே கண்வளராய்—ஆரா.

பாலாற் குறையுண்டோ பஞ்சணையாற் பஞ்சமுண்டோ
மேலான அன்பே விழிமூடிக் கண்வளராய் —ஆரா.

பொன்னே உறங்காய் புதுமணியே கண்ணுறங்காய்
கண்ணே உறங்காயென் கண்மணியே கண்ணுறங்காய்
—ஆரா.

### 5. வெண்ணிலா

இருளகற்று-சூரியனும் சந்திரனும்.
விசும்பு-ஆகாயம்.
தூயவொளி-வெண்மையான வெளிச்சம்.
எண்ணிரண்டு-பதினாறு.
கலை-சந்திரனின் பாகம்.
அமுதவொளி-குளிர்ந்த இனிய வெளிச்சம்.

இருளகற்றில் ஒருவிளக்காம் வெண்ணிலாவே
இராக்காலத் தொளிகொடுப்பாய் வெண்ணிலாவே

சூரியன்போய் மறைந்தபின்பு வெண்ணிலாவே
தூயவொளி பரப்பிடுவாய் வெண்ணிலாவே

தயிர்க்கடலில் வெண்ணெய்போல வெண்ணிலாவே
தனிவிசும்பில் தவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே

பெண்கள்முகம் போல்வருவாய் வெண்ணிலாவே
பிறையாகி வளர்ந்திடுவாய் வெண்ணிலாவே

எண்ணிரண்டு கலையுடனே வெண்ணிலாவே
எழுந்துநிலாப் பொழிந்திடுவாய் வெண்ணிலாவே

வளர்ந்தபின்பு தேய்ந்திடுவாய் வெண்ணிலாவே
வறுமைசெல்வ முனக்குமுண்டோ வெண்ணிலாவே

ஒருநாளில் மறைந்திடுவாய் வெண்ணிலாவே
ஒளியின்றி வாடுவமே வெண்ணிலாவே

அமுதவொளி பரப்பிவரும் வெண்ணிலாவே
அன்புடனே வாழியென்றும் வெண்ணிலாவே.

"தான்தோன்றிக் கவிராயர்"

# சில்லையூர் செல்வராசன்

**வரணியூரான் (ஜுனியர்)**



கவிஞர், நாடகாசிரியர், மொழி பெயர்ப்பாளர், நடிகர், முற்போக்கு எழுத்தாளர், அங்கதக் கவிஞர், பத்திரிகை ஆசிரியர் எனப் பன்முக ஆளுமையாக அறியப்பட்டவர். கவிதை, சிறுகதை, புதினம், கட்டுரை, நாடகம், வானொலி நாடகம், மொழி பெயர்ப்பு, விளம்பரம் எனப் பல்துறைகளுக் கும் பங்களிப்புச் செய்தவர் சில்லையூர் செல்வ ராசன்.

தான் பிறந்த சில்லாலை ஊரின் பெயரை முதல் நிலைப்படுத்தித் தனது பெயரைச் சில்லையூர் செல்வராசன் எனச் சூடிக் கொண்டார். தான்தோன்றிக் கவிராயர் என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியுள்ளார். அங்கதப் பாணிக் கதைகள் எழுதிய இவரது கவிதைகள் கவியரங்குகளில் பெருவரவேற் புப் பெற்றன. விளம்பரத்தைக் கவிதை இலக்கியமாக ஆக்கிய பெருமையும் அவரைச் சாரும். சில்லையூராரின் கவித்திறனுக்கு "ஞாயிறென வந்தாள்" என்ற பாடல் பெரும் புகழ் சேர்க்கிறது. அது கிழமை களையும், மாதங்களையும் வைத்து அழகா கப் படிக்கப்பட்ட பாடலாகும்.

அவரது தயாரிப்பில் மக்கள் வங்கி விளம்பர நிகழ்ச்சியாக வந்து வெற்றி பெற்ற "கோமாளிகள் கும்மாளம்" ஏறக்குறைய இரண்டாண்டுகள் ஒலிபரப்பாகியது. தொடர் ந்து அவரே எழுதிய "தணியாத தாகம்" என்ற திரைப்படச்சுவடி அடுத்த தொடர் நாடகமாக ஆரம்பித்துச் சில வாரங்களில் ஞாயிறு தோறும் நாலரை மணிக்கு வீடுகளில், தோட்டங்களில், வயல் வரம்புகளில், நாட்டின்

மூலைமுடுக்கிலெல்லாம் ரசிகர்கள் தணியாக தாகத்திற்காக வானொலிப் பெட்டிகளோடு காத்திருந்தார்கள்.

சேக்ஷ்பியர் கவிதைகளை தமிழில் சிறப்பாக மொழி பெயர்த்துள்ளார். யூலியஸ் சீசர் நாடகத்திலிருந்து இவர் மொழிபெயர்த்த பகுதி சிறப்பானதாகும். 1959ல் பம்பாயில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் பங்குபற்றியவர். 1987 ஆம் ஆண்டு கோபால் நகரில் (பாரத்பவன்) நடைபெற்ற உலகக் கவிஞர்கள் மாநாட்டில் பங்குபற்றிய ஒரேயொரு தமிழன் சில்லையூர் செல்வ ராசன். Ordinary Magic (1993), The Further Adventures of Tennessee Buck (1988) போன்ற ஆங்கிலப்படங்களிலும், "கோமாளிகள்" என்ற இலங்கைப்படத்திலும் நடித்துள்ளார். அ. ந. கந்தசாமி எழுதிய "மதமாற்றம்" நாடகத்திலே முக்கிய பாத்திரத்தில் நடித்து பாராட்டுப் பெற்றவர். பூந்தான் சோசப் அண்ணாவியாரின் நாட்டுக் கூத்திலும் நடித்த பெருமைக்குரியவர்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய உறுப்பினராக இருந்து இலக்கியச் செயற்பாடுகளில் முன்னின்றார். 1950 இல் பொதுவுடைமைவாதியாக காலடி வைத்த சில்லையூர் செல்வராசன் அதைப் பற்றுறுதியுடன் கடைசி மூச்சுவரை பற்றிக் கொண்டார். பண்டித வர்க்கத்தினரால் இழிசனர் வழக்கு என்று கொச்சைப்படுத்தியவர்களுக்கு எதிராக தன் கவித் திறமையால் சாடி கவிதைகளைப் படைத்தார். இழிசனர் மரபு வாதத்தில் ஊறி நின்று ஓரங்க நாடகத்தைச் செய்து காட்டி அவர்களுக்குச் சாட்டையடி கொடுத்தார்.

நாவலரின் மனிதநேயத்தை எடுத்தியம்பி கவியரங்குகளில் அவரின் தனித்துவத்தை நிலைநாட்டி வந்தார். பண்டித பரம்பரையினரைச் சாடி புதுக்கவிதைப் பரம்பரையைச் செல்வராசன் முன்வைத்தார். சாதி முறைக்கு எதிராகப் புதிய வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க அங்கத மொழியில் செல்வராசன் சங்கநாதத்துடன் கவிதையால் எடுத்தியம்பியுள்ளார். சமுதாய அடக்கு முறைகள், அநியாயங்கள், மூடக் கொள்ளைகளை கவிதையால் சாடினார். அங்கதக் கவிதைகள் புதுமைக் கருத்தை இலக்கியத்தில் புகுத்தின. தலைவர்கள் வாழ்க மாதோ என்ற அங்கதக் கவிதைகளால் அரசியல் தலைவர்களைச் சில்லையூரான் சாடினார். இவர் தனது கவிதைகளைத் தானே உரைத்திட "கவிதைச்சிமிழ்" என்ற ஒலிப் பேழை ஒன்று வெளியிடப்பட்டது. செல்வராசன் பத்திரிகைத் துறையிலும் தடம் பதித்திருந்தார். சுதந்திரன், வீரகேசரியில் சிலகாலம் பணியாற்றினார்.

ஊரடங்கப் பாடல்கள், ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி, கவிதை தமிழ் (ஒலிப் பேழை), தணியாத தாகம் - திரைப்படச் சுவடி நூல், சில்லையூர் செல்வராசன் கவிதைகள் - தொகுப்பு 1 போன்ற நூல்களைத் தந்தவர். இலங்கையில் வெளியான நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றையெல்லாம் வரிசைப்படுத்தி வைத்திருந்தார். பல சிறு கதை எழுத்தாளர்கள் தாங்கள் சிறுகதைத் தொகுப்புக்கள் வெளியிடும் பொழுது, தவற விட்ட தங்களுடைய சிறுகதைகளை இந்தச் சேகரிப்பில் இருந்து பெற்றுக் கொண்ட சம்பவங்கள் உண்டு.

1995 அக்டோபர் 14 இல் அமரத்துவம் அடைந்து விட்ட சில்லையூரான் தன் பன்முக ஆளுமையால் தடம் பதித்த கலை இலக்கியப்பரப்பில் இன்றும் உலவிக் கொண்டிருக்கிறார்.

# "மக்கி மண்ணும், குறுணிக் கற்களும்"

## என் நினைவின் பதிவுகள்

**நவஜோதி ஜோகரட்ணம்**
லண்டன்

ஈழத்து நாடக வரலாற்றில் ஆனைக் கோட்டை அழுத்தமான சுவடுகளைப் பதித் திருக்கிறது. அந்தச் சின்னக் கிராமத்தின் வெளிகளில் நடனமும், கூத்தும், இசையும் நர்த்தன மிட்டிருக்கின்றன. மக்கி மண் கலந்து மணக் கும் ஆனைக்கோட்டை, மணல் தரையாக வும் பனங்கூடல்களாகவும் படர்ந்து கிடந்த அந்த அழகிய கிராமத்தை என்னால்மறக்க முடியவில்லை. ஆனைக் கோட்டை அன்னையின் அரவ ணைப்பில் இசைக்கலைஞர்களும் கூத்துக் கலைஞர் களும் போஷிக்கப்பட்டார்கள். அந்த அழகிய கிராமத்தை நினைக்கும் போது நினைவு அடுக்குகளில் நான் சின்ன வயதில் பார்த்தும் கேட்டும் மகிழ்ந்த கூத்துக்களும், நாடகங்க ளும், கச்சேரிகளும் எதிரொலிகளை எழுப்பு கின்றன.


அந்தக் கலைப் பாரம்பரியக் குடும்பங் களில் புல்லாங்குழல் வித்துவான் ஜி.எஸ் வசந்தகுலசிங்கம், நடிக கலாமணி எஸ் சிலு வைராஜா, கலைஞர் புளுகு சின்னத்துரை, கலைஞர் தம்பித்துரை, கலைஞர் திரவியம், கலைஞர் எஸ். நவம், ரசிகன் எஸ். லூயிஸ், கலைஞர் எஸ். அகஸ்தியர் போன்ற அந்த ஊரின் நடிப்புக் கலைஞர்கள் என் நினைவில் வட்டமிடுகிறார்கள்.

**ஜி.எஸ். வசந்தகுலசிங்கம்** – ஆனையூரின் மக்கி மண்ணும், குறுணிக் கற்களும் என்னைக் கவர்ந்த விளையாட்டுப் பொருட் கள். தென்னையும், மாவும், வாழையும், கமுகும் நிழல் விரித்து, செவ்வரத்தையும் மல்லிகையும் செழித்துக் கோலம் காட்டும் எங்கள் வீட்டிலிருந்து அந்த ஊரின் ஒழுங்கை களை நோட்டமிடும் எனக்கு, இடது புறமாக திரும்பி நடக்க வரும் ஒழுங்கை முனையில் மல்லிகை மணம் வீசும் ஒரு மூலை வீட்டைக் கண்டதும் எனது சிறு கால்கள் முடங்கி விடும்.

அந்த கலைக்கோயிலில் இருந்து வேணுகான இசைமேதை ஜி.எஸ். வசந்த குலசிங்கத்தின் சங்கீத அங்கதாங்களும், அந்த மதுரமான வேய்ங்குழலின் ஓசையும் என்னில் தாவியதை உணர்ந்திருக்கிறேன். வித்து வான் வசந்த குலசிங்கத்தின் காதல் மனைவி 'மதுரம்' அந்த ஊர்ப்பெண்களோடு நெடுநேரமாகச் சல்லாபித்து மகிழ்ந்து

புன்னகைத்துக் கொண்டேயிருப்பார். புல்லாங்குழல் வித்துவான் வசந்த குலசிங்கமோ அதிக நேரம் தன் காதல் மனைவியைக் காணாது தவித்துப் போயிடுவார். மல்லிகை படர்ந்த தனது வீட்டின் முற்றத்தில் நின்று மனைவி மதுரத்தை 'மதுரம் எங்கே நிற்கின்றாய்? விரைவாக வந்துவிடு மதுரம்' என்று வேய்ங் குழலால் இசையெழுப்பி அழைக்கும் ஒரு அற்புதமான கலைஞனைக் கண்டிருக் கிறேன். அந்த வேணுகான இசையைக் கேட்டு எட்டு வீடுகள் தள்ளியிருந்தாலும் நாணமும், புன்னகையும் கமழ மதுரம் அன்ரி ஓடி வருவதையும் பார்த்திருக்கிறேன். இப்படி யெல்லாம் அந்த வீடுகளில் ஒலித்த கான இசைகள் இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாண வரலாற்று ஆய்வு களின் அக்கறை கொண்ட என் தந்தை அகஸ் தியர் சங்கிலி மன்னனைப் பற்றி எனக்குக் கூறியதைக் கேட்டிருக்கிறேன். அந்தச் சங்கிலி மன்னனைக் கண் முன் நிறுத்தி 'மதத்தைக் காட்டி ஆதிக்கம் புரிய வந்த அந்நியர்களே! சதிகாரர்களின் சூழ்ச்சியால் என்னை மண்டி யிட வைக்க முடியும் என்று கனவு காணா தீர்கள். சங்கிலியன் சரணாகதி அடைய மாட்டான். பேடிகள் போல் மக்களைக் காட்டிக் கொடுக்கும் கேடியாகவும் மாற மாட்டான். நான் இறந்தாலும். எனது மக்கள் உன் ஏகாதிபத்தி யத்தை எதிர்த்துப் போராடி என்னை விரட்டி யே தீருவார்கள். இது உறுதி' என்று வீராவேசத்தோடு மேடையில் சங்கிலி மன்ன னாகிக் கர்ஜித்தவர் எனது பெரிய தந்தை எஸ்.சிலுவைராஜா. இத்தகைய கலைஞர் களுக்கு மத்தியில் வெள்ளை வேட்டியும், கை நீட்டிய வெள்ளைச் சேட்டும், கழுத்தில் ஒரு அழகிய சால்வையும் போட்டுக் கொண்டு ஒரு பொல்லோடு ஒரு பெரியவர் வீர முகத்தோடு வீற்றிருப்பார். இவர்தான் '**நவீன நாடகத்தின் தந்தை கலையரசு சொர்ணலிங்கம்**' என்று என் தந்தை அகஸ்தியர் கூறியது இன்றும் என் காதில் எதிரொலிக்கின்றது.




யாழ்ப்பாணக் கூத்து வடிவங்கள் பற்றி அதாவது வடபாங்கு, தென்பாங்கு, மன்னார்க் கூத்து வடிவங்கள், மட்டக்களப்புக் கூத்து, காத்தவராயன், மலையக வடிவங்கள், கண்டிய நடனங்கள் என்று தேசிய நாடக வடிவின் கூத்தாட்டங்களின் சிறப்புக்களைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருப்பார்கள். யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரியில் கலையரசு சொர்ணலிங்கம் பயின்ற போது

நாடக மேடையேற்றங்களுக்கான ஆர்வத்தைப் பாடசாலைக் காலங்களிலேயே அவர் கொண்டிருக்கிறார். நாடகத்திற்கு அவ்வளவு அங்கீகாரம் கிடைத்திராத ஒரு காலகட்டத்தில் நாடக சங்கம் ஒன்றை நிறுவி தமிழ் நாடகங்களை மேடையேற்றிய முன்னோடி நாடகராகக் கலையரசு திகழ்ந்தார். ஆங்கில நாடக மேதை ஷேக்ஷ்பியரின் நாடகங்களில் ஈடுபாடு மிகுந்த 'வெனிஸ் நகரத்து வாணிபன்' (Merchant of Venice) என்ற நாடகத்தில் வரும் 'Shyloc' என்ற யூத கதாபாத்திரத்தை அற்புதமாக நடித்துக் காட்டியிருக்கின்றார். சில காலம் பள்ளி ஆசிரியராகக் கடமையாற்றிய கலையரசு சொர்ணலிங்கம் பின் அத்தொழி லைக் கைவிட்டு காப்புறுதித் தொழிலில் இறங்கினார்.

**லோட்டன் கனகரட்ணம்:-** கலையரசு சொர்ணலிங்கம் வளமான நாடகப் பின்னணியிலே வளர்க்கப்பட்டவர். யாழ்ப்பாணத்தில் புகைப்படக் கலையின் முன்னோடியான லோட்டன் கனகரட்ணத்தின் புதல்வராகத் திகழ்ந்த சொர்ணலிங்கம் தனது நாடக உந்துதலைத் தன் தந்தையின்வளர்ப்புச் சூழலிலே பெற்றிருக்கின்றார். புகைப்பட நுட்பத்தில் கை தேர்ந்த லோட்டன் கனகரட்ணத்தின் வீட்டில் கூத்தும் நாடகமும் இடம் பெற்றிருக்கின்றன. கூத்துக் கலைஞர்களையும், நாடகக் காட்சிகளையும் தனது தந்தையார் புகைப் படம் பிடித்திருப்பதைக் கலையரசு சொர்ணலிங்கம் நினைவு கூர்ந்திருக்கிறார். 1950களில் கலையரசு சொர்ணலிங்கம், பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோர் கூத்தாகப் பாடி நடிப்பதை விடுத்து வசனம் பேசி நடிப்பதின் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். வசனம் பேசி நடிப்பதுதான் நவீன நாடகம் என்று வலியுறுத்தியவர்கள் இவர்கள். நவீன நாடகத்தின் தந்தையாகக் கலையரசு சொர்ணலிங்கம் திகழ்ந்தார்.

இவரது நடிக்கும் திறமையின் முக்கிய குணம் என்னவென்றால் வெவ்வேறு விதமான - பலவிதமான பாத்திரங்களை நடித்ததேயாம். இதுவுமன்றி தான் எந்த வேடம் பூண்டாலும் தானே மற்றொருவர் உதவியின்றி தக்கவாறு வேடம் பூணுவதில் மிகவும் நிபுணர் என்று பம்மல் சம்பந்தமுதலியார் குறிப்பிட்டிருப்பதில் கலையரசு சொர்ணலிங்கத்தின் நடிப்பின் உச்சத்தைப் புரிய முடிகிறது. நாடகத்துறையில் அவர் கொண்டிருந்த வீச்சு நவீன நாடகத்துறையை யாழ்ப்பாணக் கிராமங்களில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களினால் மேற்கொண்டு செல்ல உதவியது. நீண்ட காலமாக யாழ்ப்பாணத்தில் பாட நாடகங்களும், சரித்திர நாடகங்களும் கலையரசு சொர்ணலிங்கத்தின் பாணியிலேயே அமைந்திருந்தன. மத்தியதர வர்க்கப் பார்வையாளர்களுக்காகக் கலையரசு சொர்ணலிங்கம் முன்னெடுத்த நவீன நாடகங்கள் ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சியில் தோற்றுவாயாகத் திகழ்ந்தது. கலையரசு சொர்ணலிங்கம் பம்மல் சம்பந்த முதலியார் நாடகங்களைப் பின்பற்றி நவீன நாடகங்க ளைத் தயாரித்திருந்தார்.

கூனியின் வாய்ச்சப்பல், சிரிப்பு, பேச்சு அத்தனையும் பல கிழவிகளிடமிருந்து தான் கற்றதாக அவர் கூறியுள்ளார். நடிப்பில் அவர் எவ்வளவு தூரம் கவனமும் முயற்சியும் எடுத்தார் என்பது அதனால் விளங்குகிறது என்று அக்கால கலை ஆர்வாளரும், யாழ் வீரசிங்க மண்டபத்தை உருவாக்கியவருமான திரு. பொ. செல்வரத்தினம் கூறியிருப்

பது கலையரசு எவ்வளவு தூரம் நடிப்பின் நுட்பங்களை அவதானித்துச் செயற்படுத்தி யிருக்கிறார் என்பது புலப்படுகிறது.

புராணக் கதைகளையும், இதிகாசங் களையும், வடமொழி நாடகங்களையும், ஆங் கிலத் தழுவல் நாடகங்களையும் அடிப்படை யாகக் கொண்டு கலையரசு சொர்ணலிங்கத் தின் நாடகங்கள் அமைந்தன. நாடகம் என்பது யாழ்ப்பாணத்தில் அங்கீகரிக்கப்படாத ஒரு கலையாக இருந்த காலத்தில் கிராமிய மட்டத்தில் கலையரசு சொர்ணலிங்கம் மேற் கொண்ட நாடக முயற்சிகள் ஈழத்து நாடக அரங் கியலுக்கு வலுவான தளத்தைத் தீர்மானித் தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஈழத்தில் இலக்கிய நாடக அரங்கொன்றி னைத் தீர்மானித்ததில் கலையரசு சொர்ண லிங்கம் அவர்கள் தனியிடம் வகிக்கிறார்.



ஆனைக்கோட்டையில் எமது இல்லத்தில் வாய் சிவக்க பாக்குச் சாப்பிடும் இம் மாபெரும் கலைஞரோடு ஆனையூர் கலை ஞர்களும், கலாநிதி பூந்தான் யோசேப்பு, அருங் கலைஞர் இன்ஸ்பெக்டர் நாதன் போன்றோர் சேர்ந்து பாடுவதையும், புகைப் படங்கள் எடுத்ததையும் அவதானித்திருக் கிறேன்.

ஆனைக்கோட்டையில் அடைக்கல மாதா கோயிலுக்கு அருகாமையில் தான் கூத்துக்கள் நடைபெறும். பிடாரி கோயிலுக்குப் பக்கத்தில் பெரிய ஆலமரம். அதனோடு சேர்ந்து பெரிய வெளி. அங்கும் அதிகமான கலை நிகழ்வுகள் நடைபெறும். கலைஞர் சின்னத்துரையின் வீட்டிற்கு அருகாமை யிலும் ஒரு சோடாத் தொழிற்சாலையை அண்டிப் பெரிய வெளி இருந்தது. அங்கும் நாடகங்கள் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவ துண்டு.

அப்படியாக நாடகம், கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் வேளைகளில் துண்டுப்பிர சுரங்கள் அடித்து "லவுட்ஸ்பீக்கர்" போட்டுக் கட்டிய காரில் மானிப்பாய், கொக்குவில், நவாலி போன்ற கிராமங்களுக்குச் சென்று அறிவிப்பார்கள். சனங்கள் திரள்திரளாகச் சென்று கலைநிகழ்ச்சிகளைப் பார்த்து ரசித்துக் கொள்வார்கள். உண்மையில் மறக்க முடியாத மகிழ்வான நாட்கள் அவை.

**கலையரசின் ரசனை:-** கூத்துக்கள் நடை பெறும் போதெல்லாம் பெரியவர் கலையரசு சொர்ணலிங்கம் தனது உடற் பலவீனங்க ளைக் கருத்திற் கொள்ளாது சமூகமளிப்பார். கூத்து நடைபெறும் போது மேடைக்கு மிக அண்மை யில் வசதியான கதிரையில் இருந்து பார்வை யிடுவதைக் கண்டிருக்கிறேன்.

எனது பெரிய தந்தை சிலுவைராஜா கண்டியரசன், சங்கிலியன், வலேந்திரியன்

போன்ற அரச பாத்திரங்களைத் தான் ஏற்று நடிப்பார். கூத்துப் பாடல்களுக்கிடையில் நறுக் கான வசன அமைப்புக்களை எனது தந்தை எழுதிக் கொடுப்பார். வசனக் கோவைகளை எனது தந்தை கலையரசு சொர்ணலிங்கத் தோடு ஆலோசிப்பதையும், சில வேளைகளில் சீனுக்குப் பக்கத்தில் நின்று வசனங்களை நினைவுபடுத்தி சொல்லிக் கொடுப்பதையும் பார்த்திருக்கிறேன்.

இளவாலை கன்னியர் மடத்தில் நான் கல்வி பயிலுவதற்காகக் கீரிமலையில் வசித்து வந்த போது கீரிமலைச் சிவன் கோயில் தேர்த்திருவிழாக்கள், நவராத்திரி விழாக்கள் என்று கோயில் வைபவங்கள் கோலாகலமாக நடைபெறுவதுண்டு. பல் வேறு கிராமங்களில் இருந்தும் பாட்டுக் கோஷ்டி, நாடகக் கோஷ்டி என்று வந்து சிறப் பிப்பார்கள். கீரிமலைக் கிராமத்துக் கலைஞர் களும் கலைநிகழ்ச்சிகளைச் செய்வார்கள். சங்கிலியன் என்ற நாடகத்தை நாட்டுக் கூத்துப் பாணியில்லாமல் நவீன நாடக முறையில் நடித்திருந்தார்கள். நான் அதில் நடனமும் ஆடியிருந்தேன் என்பதை நினைவு கூருகை யில் மனம் மகிழ்ச்சி அடைகிறது. கீரிமலைச் சிவன் கோயில் விழாக் காலகளில் வி. வி. வைரமுத்துவின் புராண நாடகங்கள், காத்தவராயன் கூத்து, இலக்கிய நாடகங்கள் என்று நடிப்பார்கள். இவ்விதமான கலை நிகழ்ச்சிகளை மிகுந்த வாஞ்சையோடு எல்லோரும் சென்று பார்ப்பார்கள் நானும் சென்று பார்த்திருக்கிறேன். எனது அம்மம்மா திரேசம்மா எனக்கு எல்லா விளக்கங்களும் தந்து கொண்டு இருப்பார்.

**வேங்கையின் மைந்தன்:-** இப்படியான கலையார்வமும், அரசநாடகங்களும், பரீட்சய மும் ஏற்பட்டதன் விளைவோ என்னவோ கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நான் பயிற்சி பெறுகின்ற ஆசிரியராக இருந்த போது "ஜீவ மணி" அகிலனின் "வேங்கை யின் மைந்தன்" போன்ற நாடகங்களில் ஆசிரியராக, இளவரசியாகவும் நடித்து அப் போது ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் அதிபராக இருந்த திருமதி ஆனந்த குமார சுவாமி அவர்களின் பாராட்டையும் பெற்றுக் கொண்டேன்.

1889ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி மானிப்பாயில் பிறந்த பெரியவர் கலை யரசு சொர்ணலிங்கத்தை எமது வீட்டில் நேரில் காணும் அருமையான பாக்கியம் பெற்ற நான் இன்றைய தலைமுறையினர் மத்தியில், குறிப்பாகப் புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் மிகவும் பெருமிதம் கொள்கின்றேன். அவர் மறைந்து 25 வருடங்கள் கடந்தும் அவரது கலைப்பணிகளை நாம் நினைவு கூறுவது "கலையரசு" என்ற அந்த கலை உபாசகனுக்கு நாம் கொடுக்கத்தக்க மிக உயர்ந்த மரியாதை என்று எண்ணுகின் றேன்.

நாடகம் வல்லோன்
நற்றமிழ் கலைஞன்
சொற்றமிழ் வல்ல
சொர்ணலிங்கப் பெரியோன்
தீதிலா திறன்கள்
தெரிந்தே புகுத்தி
புதுமுறை நாடகம்
புதிய நுட்பங்கள்
மத்திய தரத்தார்
மகிழ்ந்தே பார்த்திட
தந்தனன் - தமிழ்போல்
தளராது அவர் புகழ்.

ஈ.குமரன்

"ஈழத்துக் கலை முகவரி"

# முகத்தார் யேசுரட்ணம்

**வரணியூரான்** (ஜுனியர்)



ஈழத்தின் புகழ் பெற்ற ஒரு நாடக நடிகர், வானொலிக் கலைஞர், திரைப்படநடிகர், எழுத்தாளர், நெறியாள் கையாளர் எனக் கலைத் துறையின் அனைத்துத் துறைகளிலும் சுமார் நாற்பது வருடங்களுக்கு மேலாக புகழோடு விளங்கியவர் "கலை மாமணி" இளவாலை, முகத்தார் யேசுரட் ணம். யாழ்ப்பாண வட்டார வழக்குச் சொற்களை நகைச் சுவைக்காக மட்டுமன்றிக் காத்திரமான படைப்புக்களிலும் கையாள முடியும் என்பதை எடுத்துக் காட்டியவர்.

சந்தியாப்பிள்ளை யேசுரத்தினம் அவர்கள் முகத்தார் யேசுரட்ணம் ஆனது இலக்கியச் சம்பவம். இலங்கை வானொலியில் இவரது எழுத்து, நடிப்பு, இயக்கத்தில் தொடராக ஒலிபரப்பான "முகத்தார் வீடு" 15 நிமிடத்துக்குள் ஒரு விவசாயக் குடும்பத்துள் நடக்கும் நகைச்சுவையான சம்பவங்களுடன் விவசாயத் தகவல்களை வழங்குமொரு நிகழ்ச்சியாகச் சுமார் ஐந்து வருடங்கள் (268 வாரங்கள்) ஒலிபரப்பாகிச் சாதனை படைத்ததால் இவர் பெயருக்கு முன்னால் "முகத்தார்" என்னும் பெயர் இணைந்து கொண்டது. "முகத்தார் வீடு" யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் அமைந்திருந்ததுடன், நூற்றுக் கணக்கான குடும்பப் பிரச்சினைகளை யதார்த்த பூர்வமாகச் சித்திரித்தது. இந் நாடகம் பின்னர் பாரிஸில் திரைப்படமாகவும் தயாரிக் கப்பட்டது.

இளவாலையில் பிறந்த யேசுரத்தினம் புனித ஹென்றியரசர் கல்லூரியில் கல்வி கற்றார். இலங்கை சந்தைப்படுத்தல் திணைக்களத்தில் 33 வருட காலம் பணியாற்றி 1984 ஆம் ஆண்டில் பணி ஓய்வு பெற்றார். இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரங்களினால் ஐந்து தடவைகள் அகதியாக்கப் பட்ட அனுபவத்தைப் பெற்றிருந்தார். 1983ம் ஆண்டு இடம் பெற்ற கலவரத்தின் போது ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய ஆலயத்தில் அகதியாக்கப்பட்டு, பின்பு 1985ம் ஆண்டு முதல் திருச்சியிலும், சென்னையிலும் அகதி வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றார். 1993ம் ஆண்டில் பிரான்சிற்குப் புலம்பெயர்ந்து தான்

இறக்கும் வரை பிரான்சிலேயே வசித்து வந்தார்.

பாடசாலைக் காலத்தில் தன்னை நடிகனாக அடையாளம் காட்டினார். ஆரம்பத்தில் ஆங்கில நாடகங்களில் பங்கேற்றாலும் கூட பின்னர் தமிழில் தனது திறனை வெளிப்படுத்தினார். 1966இல் இலங்கை வானொலியில் வானொலிக் கலைஞராக இணைந்த இவர் பல நாடகங்களை எழுதி, நடித்து நெறியாள்கை செய்துள்ளார். இலங்கை வானொலியில் சனி இரவு "நாடகம்" ஞாயிறு பகல் "கதம்பம்", "குதூகலம்" போன்ற நிகழ்ச்சிகளில் இவரின் எழுத்துக்கள் மிளிர்ந்திருந்தன. கதம்பத்தில் 123 தனி நாடகங்களையும், பருவக் காற்றுத் தொடர் நாடகத்தையும் (52 வாரங்கள்) எழுதி, நடித்து நெறியாள்கை செய்த இவரின் வானொலிப் பணி நிலைத்துள்ளது.

சில்லையூர் செல்வராசனின் 'தணியாத தாகம்' வானொலி நாடகமாக உருப்பெற்ற போது இந்த நாடகத்தில் ஒரு மலேசியன் ஓய்வூதியம் பெறுபவராக நடித்தவர். சண்டியன் சின்னத்தம்பி, லண்டன் மாப்பிள்ளை, மாடி வீட்டு மருக்கொழுந்து, Kopay to Dubai, பத்தாயிரம், மண்ணோடு விளையாடும் விண்ணுலகம், சத்தியமே ஜெயம், பண்டாரவன்னியன், புரோக்கர் பொன்னம்பலம், அரோகரா, உயிரோடு காடடர்ந்து போன்ற நாடகங்களை இவர் எழுதி, நடித்து நெறியாள்கை செய்தார்.

முகத்தார் யேசுரட்ணம் அசட்டு மாப்பிள்ளை, ஆசைமச்சான், கறுப்பும் சிவப்பும், பாசச் சுமை, நம்பிக்கை முதலான மேடை நாடகங்களிலும் நடித்தவர். எஸ். அகஸ்தியர் எழுதிய "அலைகளின் குமுறல்", "எரிமலை வெடித்த போது", கோபுரங்கள் சரிகின்றன ஆகிய நாடகங்களிலும், கே. எம். வாசகர் இயக்கத்தில் மனிதவலை , தணியாத தாகம் ஆகிய மேடை நாடகங்களிலும், சுமதி (தொலைக் காட்சி நாடகம்) ஆகியவற்றிலும் நடித்துள்ளார்.

1979இல் வெளியான "வாடைக் காற்று" திரைப்படத்தில் பொன்னுக்கிழவன் என்னும் பாத்திரத்தில் திறம்பட நடித்திருந்ததால் அன்றைய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களினால் இவருக்கு ஜனாதிபதி விருது கிடைத்திருந்தது.



ஈழத்துத் தமிழ்த் திரைப்படத் துறைக்கு முகத்தார் யேசுரட்ணத்தின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தயாரிக்கப்பட்ட வாடைக் காற்று, ஏமாளிகள் எனப்பல தமிழ்த் திரைப்படங்களில் இவர் நடித்துள்ளார். அத்துடன் "பொன்மணி" திரைப் படத்துக்குப் பின்னணிக் குரல் கொடுத்துள்ளார். பிரான்சிற்குப் புலம் பெயர்ந்த பின்பு சத்திய கீதை, முகத்தார் வீடு, இன்னுமொரு பெண், புயல், முகம், ராஜாவின் ராகங்கள், தாகம் போன்ற சின்னத் திரைப் படங்களில் நடித்துள்ளார்.

புலம் பெயர்ந்த பின்பு ஐரோப்பிய வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் இவரது கலைப் பணிகள் தொடர்ந்தன. தமிழ் றேடியோ தொலைக்காட்சி (TRT) நிறுவனத்திலும், ஏசியன் புறோட்காஸ்ட் கோப்பிரேசன் (ABC) நிறுவனத்திலும் வானொலி நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராகப் பணியாற்றியுள்ளார். பிரான்சில் யேசுரத்தினம் மேடையேற்றிய "முகத்தார் வீட்டில்" வானொலி நாடகப் பிரதிகள் ஐந்து, மேடை நாடகங்கள் மூன்று, வேறு வானொலி நாடகப் பிரதிகள் நான்கு என மொத்தம் 12நாடகங்களைமுகத்தார் வீட்டுப் பொங்கல் என்ற பெயரில் 1999ல் மணி மேகலைப் பிரசுரமாக வெளியிட்டிருந்தார்.

ஜனாதிபதி விருது (1979), கலைமுரசு விருது (1980), முகத்தார், கௌரவ விருது (1981), விவசாய மன்னன், கௌரவ விருது (1982), கலைப் பணிச் செல்வர், (திருச்சி, தமிழ்நாடு) (1983), கலைவேள் கௌரவ விருது (பிரான்ஸ் 1994) கலைப்பூபதி விருது (பாரிஸ் - பிரான்ஸ் - 1995) கலைமாமணி விருது (ஜேர்மனி) (1997) நகை ரசவாரி (ஜேர்மனி) (1998) முத்தமிழ்ச் செல்வர் (பிரான்ஸ்) (2005) கம்பன் பட்டயம் விருது (பிரான்ஸ்) (2005) ஈழத் தமிழ் விழி விருது (பிரான்ஸ்) (2007) எனப் பல கலை இலக்கிய விருதுகள் பெற்ற முகத்தார் யேசுரட்ணம் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து 2010 நவம்பர் 27 சனிக்கிழமை அன்று பிரான்சில் காலமானார். ஈழத்து வானொலி, கலைமரபு பற்றி பேசுமிட மெங்கும் முகத்தார் பற்றிய பேச்சுமிருக்கும்.



# இசை நாடகக் கலைஞர் T.N செல்வராஜா

**ஹேமலதா சாந்தகுமார்**
இளவாலை கன்னியர்மடம்,
மகாவித்தியாலயம்

மனிதனை மனித உரு மூலமே விளங்கிக் கொள்ளும் அரங்கக்கலை செயற் பாட்டில் இசைநாடகத்துறையில் ஈழத்தில் தடம் பதித்தவர்களில் முக்கியமான ஒருவராக சீரணி சண்டிலிப்பாயைச் சேர்ந்த T.N செல்வராஜா திகழ்ந்தார். இவர் சிறப்பான சாரீர வளத்தையும் நடிப்புத் திறனையும் கொண்ட வராவார்.

இவர் நல்லையா, அன்னம்மா என்பவர்களுக்கு இரண்டாவது மகனாக 1934 புரட்டாதி 29ம் திகதி ஏழாலையில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே இசையில் ஆர்வம் கொண்டவரான இவர் ஏழாலை சைவ வித்தி யாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார். பாடசாலையில் பண்ணிசை படித்த போது அவரது ஆற்றலைக் கண்ட முதன்மை ஆசிரியர் நாடகப் போட்டிகளில் பங்குபெற ஊக்கமளித்தார். இந்த அத்திவார மும் ஊக்கமும் இசைநாடகத் துறையில் அவரைப் புகழ் என்னும் உச்சிக்கு ஏற்றியது.

இவ்விடத்தில் நாடகத்தின் இலங் கைக்கான இசைநாடக வருகை பற்றிக் கூற வேண்டும். அக்காலத்தில் இந்தியாவில் பார்சியக்கம்பனிகளின் வருகை கூத்து ஆடலை மையப்படுத்திய அரங்கத்துறை இசையை முதன்மையாகக் கொண்ட நடிப்பு ஆற்றுகையாக மாற்றம் பெற்றதும் இலங் கைக்கான இந்தியக் கலைஞர்களின் வரவும் இலங்கையில் பல இசை நாடகக் கலைஞர் களைத் தோற்றுவித்தது. அவ்வரிசையில் T.N செல்வராஜா அவர்களும் அப்பொற்காலத்தில் தன்னை முத்திரை பதித்துக் கொண்டவர் ஆவார்.

இவர் தனது ஒன்பதாவது வயதில் தெல்லிப்பழை வீமன்காமம் எனுமிடத்தில் ஆசிரியர் இரத்தினசிங்கம் என்பவரின் நெறியாள்கையில் "சம்பூரண அரிச்சந்திரா" எனும் நாடகத்தில் லோகிதாசன் பாத்திர மேற்று நடித்துப் பெரும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றார்.

நாடகத்தின் களப்பிரசன்னத்தையும் பார்வையாளரின் ஆர்வமும் இவரைத் தொடர்ந்து இத்துறையில் ஊக்கமளிக்க வைத்தது 1947ம் ஆண்டு சண்டிலிப்பாயில்

குடும்பத்தினருடன் குடியேறி சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் தொடர்ந்து கல்வி கற்று எஸ்.எஸ்.சி தரத்தில் தேர்வு பெற்றார். இசையில் இவருக்கிருந்த வளமும், நடிப்புத்துறையில் ஏற்பட்ட ஆர்வமும் தொடர்ந்து இவரை இசை நாடகத்துறையில் ஈடுபட வைத்தது. அவ்வண்ணம் இவருடைய மைத்துனன் சி.ரி செல்வராசா என்பவருடன் இணைந்து பல இசை நாடகங்களை நடிக்கத் தொடங்கிய இவர் பின் பல்வேறு ஈழத்துக் கலைஞர்களான நெல்லியடி கிருஷ்ணாழ்வார், ஜே.எஸ். ஜெயராசா மல்லாகம் தேசிகர் போன்ற இசை நாடகக் கலைஞர்களுடன் இணைந்து நாடகங்களை நடித்துப் புகழும், சந் தோஷமும் அடைந்தார்.

எனினும் இத்துறையில் மேலும் தன்னை வளர்த்துக் கொள்வதற்காக 1987ம் ஆண்டு தென்னிந்தியாவிற்குச் சென்று திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள நாதஸ்வர வித்துவான் எஸ்.எஸ் ரங்கப்பாவிடம் சில காலம் இசையை முறையாகக் கற்றார். இங்கும் இவரது சாரீர வசீகரமும் இசை ஞானமும் பலரால் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

1959ம் ஆண்டு பிரபல பின்னணிப் பாடகரும் நடிகருமான திருச்சி எம்.எம். மாரியப்பா குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது அவர்களின் நாடகக் குழுவில் இணைந்து பல நாடகங்களில் "கிருஷ்ணன்" பாத்திரத்தை ஏற்று வடக்கு கிழக்கு மாகாண ரசிகர்களிடம் பெரும் பாராட்டைப் பெற்றார். அத்துடன் கீரிமலை ஸ்ரீ பார்வதி கானசபையின் நாடக மன்றத்தில் பிரபல்ய தென்னிந்திய நடிகைகளுடன் நடித்தார். அதனைத் தொடர்ந்து அரியாலையூர் வ.செல்வரத்தினம் பெண்பாத்திரம் ஏற்று நடிக்க அவருடன் இணைந்து பலநூறு நாடகங்களில் நடித்து மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றார். இக்காலகட்டத்தில் சண்டிலிப்பாயில் ஈஸ்வரி மன்றத்தை உருவாக்கி அதனூடாக பல நாடகங்களை மேடையேற்றினார்.

1961ம் ஆண்டு பரமேஸ்வரி என்பவரை மணமுடித்தார். மூன்று ஆண் பிள்ளைகளுக்கும் இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் தந்தையாகினார். இக்காலகட்டங்களிலும் இசை நாடகத்துறையையே தன்னுயிராகக் கொண்டார். இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டிய தேவையுள்ளது.

எஸ்.எஸ்.சி ஆங்கிலத்தில் படித்திருந்தும் உத்தியோகம் பார்க்கக் கூடிய தகைமையிருந்தும் வந்த உத்தியோகங்களைத் துறந்த இவருக்கு வாழ்வு சவாலாக இருந்தாலும் அவற்றை எதிர்கொண்டு வாழ்வில் வெற்றி பெற்றிருக்கிறார். இதற்கு நிச்சயமாக அவரது மனைவியின் ஒத்துழைப்பு அவருக்குத் துணையாகவும் ஊக்கமாகவும் இருந்திருக்கிறது.

1968ம் ஆண்டளவில் காங்கேசன்துறை வசந்தகான சபா ஸ்தாபகரும் பிரபல்ய இசை நாடகக் கலைஞருமான V.V வைரமுத்துவுடன் இணைந்து அதிகமான நாடகங்களில் நடித்தார். இதை விட இவருடைய நாடகங்கள் பல இலங்கை வானொலியில் மேடையேற்றப்பட்டதுடன் நாடகமும் நாடகப் பாடல்களும் இலங்கை வானொலியில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

மேலும் இவரது ஆற்றலுக்குப் பரிசாக இசை நடிகமணி என்ற பட்டம் நவீன நாடகத்தந்தை கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் பருத்தித்துறை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் பரிபாலன சபையினரால் நாடகக் "கலாஜோதி" எனும் பட்டமும், மானிப்பாய் கிழக்கு பாரதி சனசமூக நிலையத்தால் "இசைநாடக அரசு" என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

1975-80களில் இவருடைய "அசோக்குமார்" என்ற நாடகம் கொழும்பு விவேகானந்தா மண்டபத்தில் சட்டக்கல்லூரி மாணவர்களால் நடாத்தப்பட்ட விழாவில் மேடையேற்றப்பட்டது. இவரது "ஸ்ரீவள்ளி", "கோவலன் கண்ணகி" நாடகங்கள் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் மேடையேறின. 1990ம் ஆண்டுகளில் பல்கலைக்கழக சமூக கல்வித்துறை அரங்கினரால் வெகுவாகப் போற்றப்பட்டார் என்பதை இவரது பல மேடையேற்றங்கள் சான்று பகரும்.

1991ம் ஆண்டு பேராசிரியர் கா.சிவத்தம்பியினால் ஒழுங்கு செய்யப்பட்டு இவரது "ஸ்ரீ வள்ளி" நாடகம் மேடையேற்றப் பட்டது. உபவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை யின் தலைமையில் "சத்தியவான் சாவித்திரி" போன்றன கம்பன் கழகத்தால் மேடை யேற்றப்பட்டது. நல்லை ஆதீனத்தால் "சத்தியவான் சாவித்திரி" "பக்த நந்தனார்" ஆகியவை மேடையேற்றப் பட்டன. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி யின் தலைமையில் துர்க்கையம்மன் ஆலய அன்னபூரணி மண்டபத்தில் ஸ்ரீவள்ளி நாடகம் அரங்கேறியது.

இவர் நடித்த இசைநாடகங்களும் அவர் வகிபாகமேற்ற பாத்திரங்களும் பின்வருமாறு

| நாடகம் | பாத்திரம் |
|---|---|
| ஸ்ரீ வள்ளி | - வேலன், வேடன், விருத்தன் |
| சத்தியவான் சாவித்திரி | - சத்தியவான் |
| சம்பூரண அரிச்சந்திரா | - அரிச்சந்திரன் |
| பவளக்கொடி | - கிருஷ்ணன், அருச்சுனன் |
| அல்லி அர்ச்சுனா | - அர்ச்சுனன் |
| லலிதாங்கி | - அழகேசன் |
| பூதத்தம்பி | - பூதத்தம்பி |
| சாரங்கதரன் | - சாரங்கதரன் |
| கோவலன் கண்ணகி | - கோவலன் |
| கிருஷ்ணன் அர்ச்சுனா | - சித்திரசேனன் |
| ஞானசௌந்தரி | - மிலேந்திரன் |
| நல்லதங்காள் | - நல்லண்ணன் |
| தூக்குத்தூக்கி | - சுந்தராங்கதன் |
| மகாகாளிதாஸ் | - காளிதாஸ் |
| பக்தநந்தனார் | - நந்தனார் |
| பாமாவிஜயம் | - கிருஷ்ணன் |
| அசோக்குமார் | - குணாளன் |

இவ்வாறு இசையும், நாடகமும் என தனது வாழ்வை அர்ப்பணித்த "இசை நடிக மணி" 2004ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7ம் திகதி இயற்கை எய்தினார். இவரது கலைப்பயணம் இவர்களது பெண் பிள்ளை களால் இன்றும் தொடர்கிறது. அவர்கள் சிறந்த சங்கீத ஆசிரியர்களாக இருந்து இசைத் துறையை வளர்ப்பது இக்கலைஞருக்கு மறைவின் பின்னும் பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளது.

"தமிழ்ப் பண்டித மரபின் கடைசிக் கொழுந்து"

# பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை

**வே.சிவராசா**
சமூக சேவை உத்தியோகத்தர்



பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வித்துவான் ந. சுப்பயைாபிள்ளை, வித்துவான் வேந்தன் முதலான தமிழ் அறிஞர்களிடம் மரபுவழித் தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கற்றுத் தேர்ந்த, பன்முக ஆளுமை கொண்ட அறிஞர். இன்றும் எம் மத்தியில் சுதுமலைக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் புலமையாளர். தமிழ்ப் பண்டித மரபின் கடைசிக் கொழுந்து என வர்ணிக்கப் படுபவர் பண்டிதர் க.ஈஸ்வரநாதபிள்ளை அவர்கள்.

பண்டிதர் அவர்களின் மாமனாரான பல்துறையறிஞர் ஆ. சபாரத்தினம் அவர்களும் அவரது ஆளுமை வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பினைச் செய்துள்ளார்.

தமிழ் மொழியுடன் ஆங்கிலத்திலும் பண்டிதர் அவர்களுக்குச் சிறந்த புலமையுண்டு. தமிழ் மொழியுடன் ஆங்கிலத்தையும் பல ஆண்டுகளாக அவர் கற்பித்து வந்தார். பண்டிதர் அவர்களிடம் தமிழ் கற்ற மாணவர்கள் பலர். அவர்கள் இன்று விரிவுரையாளர்களாக, ஆசிரியர்களாக, பத்திரிகையாளர்களாக, கலைஞர்களாக இன்னும் சமூகத்தின் சிறந்த தொழில்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

இலக்கணங்களையும் இலக்கியங்களையும் வரன்முறையாகக் கற்பிக்கும் திறன் அவருக்கு உண்டு. அவரிடம் முறைப்படி இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத்தேறிய அவரது மகன் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.

பண்டிதர் அவர்கள் சிறந்த சொற்பொழிவாளர். யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பல தலங்களில் அவர் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்துள்ளார். புராணக் கதைகளை விரித்துரைத்தல், இலக்கிய நயம்பட கருத்துக்களை வெளிப்படுத்தல் என்பவற்றில் அவருக்கெனத் தனியானதொரு பாணியிருந்தது.

பட்டிமன்றங்கள், இலக்கிய வழக்காடு மன்றங்கள், சொற்போர், சொல்லாடுகளம் போன்றவற்றிலும் அவர் கலந்து கொண்டு கேட்டோரைப் பிணிக்கும் வகையில் கருத்துக் களை வெளிப்படுத்தி வந்துள்ளார். கம்பன் கழகத்தின் உறுப்பினராக இருந்ததுடன் அக்கழகம் நடாத்தி வந்த 'கம்பன் விழா' நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்று வந்தார். நூல் விமர்சனங்களையும் அவர் செய்ததுண்டு.

பண்டிதர் அவர்கள் இனிய கவிதைகள் புனைவதில் வல்லவர். பல தலங்களின் மீது ஊஞ்சல், பதிகம், அந்தாதி, திருப்பள்ளியெழுச்சி என்பன வற்றினைப் பாடியுள்ளார். அவை அவ்வத் தலங்கள் மலர்களில் வெளிவந்துள்ளன. அவர் பாடிய வாழ்த்துப்பாக்கள் பல. அவர் பாடிய கீர்த்தனைகள் சில தென்னிந்தியக் கலைஞர் களால் இசைக்கப்பட்டு ஆலய இறுவெட்டுக்களில் வெளிவந்துள்ளன. சுருக்கமாகக் குறிப்பிடின் பண்டிதர் நடுவூரில் நல்லமரம் பழுத்தாற் போன்று தமிழ் கல்விச் சமூகத்துக்குப் பயன்தரவல்லவராய் வாழ்நது வருகின்றார்.

வரை

## மாதமொரு மனிதர்

### பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை

வாசகர்களே! "மாதமொரு மனிதர்" என்ற இப்பகுதியில் எமது நாட்டில் இலைமறை காய்களாக இருக்கும் திறமையாளர்களை, தொழில் முயற்சியாளர்களை அல்லது நல்ல சமூக முன்மாதிரிகளை அறிமுகஞ்செய்கிறோம். நீங்களும் இத்தகையோரைப் பற்றிய தகவல்களை எமக்கு அனுப்பிவையுங்கள்.

-ஆசிரியர்



ஆரோக்கியமான சமூக இருத்தலுக்கான அடிநாதமாய் ஆசிரியப்பணி என்றுமே இருந்து வந்திருக்கிறது. தனி மனித உருவாக்கத்தில் பெற்றோர்களின் பங்கு எத்துணை முக்கியமானதோ அதேயளவு காத்திரமான முக்கியத்துவத்தினை ஆசிரியரின் பங்கும் பெற்றிருக்கின்றது. அப்படிப்பட்ட ஓர் சிறந்த பணிக்காய் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்துகொண்டிருப்பவர்தான் பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை.

அமைதியும் இயற்கை எழிலும் கைகோர்த்திருக்கும் சுதுமலை கிராமத்தில் அவரது ஆசிரியப்பணி இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. மரபுவழிக் கல்வி முறைக்கும் நவீன கல்வி முறைக்கும் தன்னை இசைவுபடுத்திக்கொண்டு தனது ஆளுமையின் திறத்தினால் மாணவர்களைப் புடமிடுகின்ற திறன்மிக்கவராய் பண்டிதர் அவர்கள் காணப்படுகின்றார். எந்த விதமான விளம்பரங்களுமின்றி அறிவை மட்டும் மூலதனமாகக் கொண்டு அறிவுப் பசியோடு வருகின்ற மாணவர்களுக்கு உதவும் நிழல் மரமாய் அவர் இருக்கின்றார்.

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையில் கந்தையா, தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் புதல்வராகப் பிறந்து தனது ஆரம்பக் கல்வியை நாரந்தனை கணேசா வித்தியாலயத்திலும் பின்னர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் பயின்றார். அவர் கற்கும் காலத்தில் நாடகம், சொற்பொழிவு, பட்டிமன்றம் போன்றவற்றில் பங்கு பற்றி தனது தனித்துவமான திறனை நிரூபித்திருந்தார்.

பண்டிதர் அவர்கள் அன்றைய காலத்தில் இலண்டன் ஏ.எல் (A/L) வரை கற்றிருந்த போதும் குடும்பத்தின் வறுமை நிலையினால் பட்டப்படிப்பைத் தொடரும் வாய்ப்பு அவருக்குக் கிட்டவில்லை. இருந்த போதும் தன்

40

வரை

அறிவுத் திறனுக்கு வேண்டிய விடயங்களை சுயமாகவும் கற்றோரின் துணையுடனும் தொடர்ந்தும் தேடிக்கொண்டேயிருந்தார். பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை அவர்களுடன் வாழக்கிடைத்த அனுபவத்தை கிடைத்தற்கரிய பேறெனப் பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார். பண்டிதமணியுடன் வாழ்ந்த காலப்பகுதியில் பத்திரிகைகள், வானொலி போன்ற ஊடகங்களுக்கு அவர் எழுதுகின்ற நற்சிந்தனைகளையும் கம்பராமாயணக் காட்சி போன்ற கட்டுரைகளையும் மீள எழுதிக்கொடுக்கும் வாய்ப்பு தனக்கு கிட்டியதையும் மகிழ்ச்சியுடன் நினைவுகூருகின்றார்.

வித்துவான் வேந்தனார் அவர்களிடம் இலக்கியத்தையும், வித்துவான் சுப்பையாப்பிள்ளை அவர்களிடம் இலக்கணத்தையும் கற்ற பண்டிதர் அவர்கள் 1959இல் பால பண்டிதர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

ஒரு நல்லாசிரியருக்கு இருக்கவேண்டிய அனைத்து தகைமைகளையும் வாய்க்கப் பெற்றிருப்பது பண்டிதர் அவர்களின் சிறப்பை மேலும் மெருகூட்டி நிற்கின்றது. அரச சேவையில் இணையாதிருந்த போதும் தனது ஆசிரியப் பணியினை கச்சிதமாக ஆற்றுகின்ற சூழலினை இவர் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார். காரைநகர் மறைஞான சம்பந்தர் வித்தியாசாலை, திருநாவுக்கரசு வித்தியாசாலை ஆகிய பாடசாலைகள் அவரது சேவையைப் பெறும் வாய்ப்பைப் பெற்றன. இன்றுவரை உயர் தர வகுப்பு மாணவர்களுக்கும் வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் தனது சேவையினை வழங்கி வருகிறார்.

இவரிடம் இருக்கும் கருணையே மாணவர்களுக்கு கண்டிப்பாய் அமைந்து ஒழுக்க சீலர்களாகவும் ஆற்றல் மிகுந்தவர்களாகவும் அவர்கள் திகழ வழிசமைக்கிறது.

ஆசிரியப் பணி வர்த்தக முனைப்புடைய தொன்றாக இருக்கக்கூடாது என்பதில் மிகுந்த கவனமுடையவராக பண்டிதர் அவர்கள் இருக்கிறார். மாணவர்கள் தேடல் உள்ளவர்களாகவும் ஆரோக்கியமான புதிய விடயங்களை தம் வசப்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது அவரின் பேரவா.

பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை அவர்கள் ஓர் சிறந்த ஆசிரிய மாதிரியின் (A Teacher Model) அடையாளமாக திகழ்ந்து கொண்டிருக்கிறார். ஊடகங்களின் வலைக்குள் அகப்பட்டுக்கொள்ளாத, அகப்பட்டுக்கொள்ள விரும்பாத அந்த உன்னத மனிதரை வரையின் வலைக்குள் அகப்படுத்தியதில் வரை மிகுந்த மகிழ்ச்சியடைகிறது.

[illegible]

41

தமிழறிஞர் என்றால் தரமான எழுத்தாளர், ஆக்க இலக்கியகாரர்.
இலக்கணப் பிழைகளை உரைக்கக்கூடியவர் ஆய இவர்களே தமிழறிஞர் எனலாம். தமிழின் பல் துறைகளிலும் வல்லவராய் இருப்பவரைத் தமிழறிஞர் என்று கூறும் அதே வேளை ஒரு துறையில் நுனிக்கொம்பர் வரையும் போனவர்களையும் கொள்ளலாம்.
இயற்றமிழில் மட்டுமல்ல இசை நாடக நுணுக்கமெல்லாம் உணர்ந்தவர்களும் தமிழறிஞர்களே.

-பண்டிதர் க. நாகலிங்கம்

# கலைவாணியின் கலைச்செயற்பாடுகள்-ஒரு பார்வை

யாழினி யோகேஸ்வரன்


யாழ் நகரின் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள வடலியடைப்பு கிராமத்தின் கலைவாணி வீதி வாழ் மக்களின் சமூகமட்ட அமைப்பான கலைவாணி சனசமூக நிலையமானது 1954ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னரான காலப்பகுதகளில் கிராம மக்களின் செயற்பாடு களை கட்டியெழுப்பவும் சுயாதீனமான சிந்தனைகளுக்கு இடமளிக்கும் வகையிலும் எழுந்த ஆக்கபூர்வமான சமுதாய அமைப்பாக உருப்பெற்றதே கலைவாணி நாடக மன்றம். .கலைவாணி நாடகமன்றமானது கலைவாணி சனசமூக நிலையத்தோடு இணைந்த ஒரு பகுதியாகவே தனது அரங்கச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளது கிராமத்தின் சிறுவர்கள்இ இளையோர் போன்ற பலரது முயற்சியின் விளைவாக உருப் பெற்றதே கலைவாணி நாடகமன்றம். பாடசாலை விடுமுறைக் காலங்களில் வெறுமையான வளவு ஒன்றில் கோயில்கட்டி அதற்கு 10 நாட்களும் திருவிழாவினை நடாத்தி 10ஆம் நாள் (இறுதி நாள்) அவ் இடத்திலேயே பெருமளவிலான ஊர்மக்களை ஒன்றுதிரட்டி நாடகங்களை நிகழ்த்தி வந்துள்ளனர். அதுமட்டுமன்றி கலைவாணி சனசமூக நிலையத்தில் ஆண்டு தோறும் நடைபெறுகின்ற பொங்கல் விழா, நவராத்திரி விழா, தீபாவளி போன்ற சமய விழாக்களிலும் நாவலர், பாரதியார் முதலான சான்றோர்களின் நினைவு விழாக்களிலும் பல நாடகங்களை மேடையேற்றி வந்துள்ளனர். குறிப்பாக வீரபாண்டியக் கட்டப் பொம்மன் என்னும் நாடகத்தினை அரங்கேற்றி ஊரிலுள்ள பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள் என பலதரப்பட்ட வயதினையுடைய கிராம மக்கள் அனைவரதும் பெரு வரவேற்பையும், பாராட்டையும் பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். இன்றும் இந்நாடகம் பற்றிய நினைவலைகளை மிக உணர்வோடு பெருமகிழ்வாக கூறக் கேட்டிருக்கிறோம். கலைவாணி நாடகமன்றம், சனசமுக நிலையத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சாம்ராட் அசோகா, சீரும், சிறப்பும் அடியோர் பரிசு போன்ற பல நாடகங்களை அரங்கேற்றி பல பிரதேசத்திற்கு மக்களிடம் நன் மதிப்பையும் பாராட்டையும் பெற்றிருந்தது. சாம்ராட் அசோகா என்கிற வரலாற்று நாடகத்தில் இளைஞர் களோடு இணைந்து யுவதிகளின் பங்குபற்றலும் காணப்பட்டது. ஆண், பெண் வேறுபாடின்றி நாடகத்தில் பங்கு கொண்டமையானது சமூக அக்கறையையும் பாலியல் சமத்துவத்தையும் முன்னிறுத்த அடித்தளமிட்டுள்ளது. மேலும் சீரும் சிறப்பும் என்கின்ற நகைச்சுவை நாடகம்

நூற்றிற்கும் மேற்பட்ட மேடைகள் ஏறி பெரும் வரவேற்பு பெற்றது. பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற கிறேஸ் கோமாளிகள் என்னும் நாடகத்தோடு இணைந்து சீரும் சிறப்பும் நாடகமும் அரங்கேற்றப்பட்டு அன்றைய எதிர்கட்சி தலைவர் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களால் நாடகக் கலைஞர்களுக்கு கௌரவிப்பும் பாராட்டும் வழங்கப்பட்டது. மேலும் இந் நாடகம் வவுனியா, மாங்குளம், செட்டிகுளம், கிளிநொச்சி, பண்ணாகம், தொல்புரம் போன்ற பலதரப்பட்ட இடங்களில் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந் நாடகமானது தொழில்முறை ரீதியாக அரங்கேற்றப்பட்டமையால் இதன் மூலம் கிடைக்கின்ற பணத்தினை நாடக மன்ற வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு அதனை உரிய முறையில் சேமித்து வைத்துள்ளனர். போர்ச் சூழல் அதன் பின்னரான இடப்பெயர்வுகள் காரணமாக நாடக இளைஞர்கள் அப்பணத் தினை வைப்பிலிருந்து மீள எடுத்து தமக்குள்ளே பங்கிட்டுக் கொண்டுள்ளனர். இதன் அடிப்படை யில் இவர்களுள் சிலர் வடலியடைப்பு காளிகாம் பாள் ஆலயத்தின் மடப்பள்ளிக் கட்டுமாணப் பணிகளுக்கான நிதி சேகரிப்பின் போது மேற்குறிப்பிடப்பட்ட நிதியிலிருந்தே அன்பளிப் பாக கொடுத்துதவினார். இவ்வாறான நாடகச் செயற்பாடுகளால் வடலியடைப்பு என்னும் கிராமத்தையும், கலைவாணி சனசமூக நிலையத்தையும், ஊர் கடந்து, மாவட்டம் கடந்து, நாடுகடந்து, புலம் பெயர் தேசங்கள் வரையான எம்மவர்களுக்கு அறியச் செய்கின்ற அறிந்து கொள்கின்ற மகிழ்ச்சியான செயல் இவர்கள் காலத்திலேயே இடம்பெற்றுள்ளதெனலாம். அதன் பெருமை கலைவாணி நாடக மன்றத் திற்கே சாரும். இவர்களுக்குப் பின்னரான இளைஞர் சந்ததியும் நாடக செயற்பாடுகளில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர். நிலையத்தின் பொன் விழா மற்றும் கலை விழாக்களில் ஆச்சிக்குச் சொல்லாதே, கற்கக்கசடற, தெய்வத்திருமகன், ஒய்யாரக் கொண்டை போன்ற நகைச்சுவை, சமூகஞ்சார் நாடகங்களை இளைஞர்கள், யுவதிகள். நடித்து வரவேற்பு பெற்றது மட்டுமல்லாமல் தொல்புரம், சுழிபுரம், காரைநகர் போன்ற பிரதேசங்களிலும் சென்று அரங்கேற்றி பலரது பாராட்டையும் பெற்றுள்ளனர். 2014ம் ஆண்டிற்கு பின்னரான காலப்பகுதியில் கலைவாணி கலை மன்றம் என்கின்ற மன்ற பெயரைக் கொண்டு வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட மன்றமாக கிராமத்திலுள்ள இளைஞர்கள், யுவதிகள், பாடசாலை மாணவர்கள் போன்ற பலரை கலந்துரையாடல் மூலம் கலைச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இதனடிப்படையில் ஆர்வமும், திறமையும் மிக்க கிராமத்துக் கலைஞர்களால் பயில்நிலைப் படுத்தப் பட்டு வருகின்ற ஆக்கபூர்வமான கலை ஆக்கச் செயற்பாடுகள் மென்மேலும் வளர்த் தெடுக்கப் பட்டு வலி. தென்மேற்கு பிரிவில் தமது பெயரைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து செல்லும் என்ப தனை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண் டியதாகும்.

குறிப்பு: மேற்குறிப்பிடப்பட்ட வரலாற்றுத் தகவல்கள் ஆண்டுவாரியாக பிரிக்கப்பட வில்லையென்பதையும், இத்தகவல்கள் அனைத்தும் ஆவணப் படுத்துகின்ற நோக்கில் கிராமத்தோடு நன்கு பண்பட்ட குறித்த சிலரது அனுபவப் பகிர்வுகளை வாய்மொழி மூலமான ஆதாரங்களாக மட்டுமே கொண்டு கட்டுரை வடிவில் ஆக்கப்பட்டுள்ளது என்பதனை இங்கு கவனத்தில் கொள்ளலாம்.

# "கலைத்தூது" மரியசேவியர் அடிகளார்

**கலாபூஷணம் செல்வத்தம்பி மாணிக்கவாசகர்**



தமிழ் இலக்கியத்தின் ஊடாக கிறிஸ்தவத்திற்கும், கிறிஸ்தவம் ஊடாக தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றியவர்கள் வரிசையில் இயேசு காவியம் எழுதிய கண்ணதாசன், தேம்பாவாணியின் படைப்பாளி வீரமாமுனிவர், இரட்சணிய யாத்திரிகம் எழுதிய கிருஸ்ணபிள்ளை ஆகியோர் தமிழிலக்கிய உலகில் இன்றும் பேசப்படுகின்றனர். இதே போன்று ஈழத்தில் ஞானப்பிரகாசர், தாவீது அடிகள், தமிழ் தூது தனிநாயகம் அடிகள் போன்ற கிறிஸ்தவ துறவிகளின் வரிசையில் கலைத் தூதராக பணிபுரிபவர் திருமதி கலாமன்ற இயக்குனர் அருட்தந்தை கலாநிதி. மரிய சேவியர் அடிகளார் ஆவார்.

இவர் 1939 ஆம் ஆண்டு டிசம்பர் 3ம் திகதி யாழ்ப்பாணத்தில் இளவாலையில் பிறந்தார். தமது ஆரம்பக் கல்வியை இளவாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், அதன் பின்னர் சென் ஹென்றிஸ் கல்லூரியிலும் கற்றார். அதைத் தொடர்ந்து 1952ஆம் ஆண்டு குருத்துவப் பணியில் தன் வாழ்வை அர்ப்பணிக்கும் பொருட்டு யாழ். மருதனார் குரு மடத்தில் சேர்ந்து, அதே ஆண்டில் சம்பத்திரிசியார் கல்லூரியின் தமது கல்வியைத் தொடர்ந்தார். குருமடத்தில் 1955 இல் பாடகர் குழாமின் தலைவராகவும், ஓகன் வாசிக்கும் பொறுப்புடையவராகவும் நியமிக்கப்பட்டார். இவர் 15 வயதில் இவர் எழுதிய "மலரும் தமிழகமே மறந்துவிடாதே" என்னும் கட்டுரை கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிப்பலாசாலை மலரில் வெளிவந்தது.

1956 ஆம் ஆண்டு எஸ். எஸ்.சி. பரீட்சையில் சித்தியடைந்து, பத்திரிசியார் கல்லூரியில் இறுதியாண்டு மாணவர்களுக் கான பேச்சுப்போட்டியில் தங்கப் பதக்கத்தை பெற்று குருத்துவ மேல் நிலைப்படிப்பைத் தொடரும் பொருட்டு கண்டி அம்பிட்டிய குருமடத்தில் சேர்தார். 1957 இல் இந்து சமயத்தில் இவருக்கு இருந்த ஈடுபாடு வெளியயானது. இந்து சமய பாடத்திற்கு அவர் எழுதிய விடைத்தாளுக்கு பேராசிரியர் யுவக்கீம் அடிகள் நூற்றுக்கு நூற்றி ஐம்பது புள்ளிகளைக் கொடுத்து வளர்ந்து வரும் இளைஞனின் பொதுநோக்கைப் பாராட்டி னார். அதே ஆண்டு 'தனி நாயகம் என்னும் நாடகத்தின் கதாநாயகர் பாத்திரத்தை ஏற்று நடித்து அந்நாடகத்தை இயக்கினார்.

1958ஆம் ஆண்டு இறயலில் உயர் பட்டம் பெறும் பொருட்டு ரோம் நகருக்கு சென்று தனது 21ஆவது வயதில் பட்டங் களைப் பெற்றார். 1960, 1961ஆம் ஆண்டு களில் உரோமை தமிழ்ச் சங்கத்துத் தலைவ ராகவும் , பணி புரிந்தார். பட்டப்படிப்பின் இறுதி ஆண்டு சர்வதேச மாணவர்களில் இவர் ஒருவர் தான் நேர்முகத் தொகுப்புத் தேர்வில் முழுப்புள்ளிகளையும் பெற்றுப் பாராட்டுப் பெற்றவர்.

1962ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆம் திகதி ரோம் நகரில் தனது 22ஆவது வயதில் திருச்சபைச் சட்டத்தின்படி வயதுக் குறைவால் பரிசுத்த தந்தை 23ஆம் அருளப் பரின் சிறப்பு அனுமதிபெற்று குருவாகத் திரு நிலைப்படுத்தப்பட்டார்.1963ம் ஆண்டு மன்னார் நகரின் உதவிப் பங்குத் தந்தை யாகப் பணிபுரிந்தார். அத்தருணத்தில் அம் மாவட்டத்தில் முதன் முதலாக மானுடர்கள் நடித்த "திருப்பாடுகளின் காட்சியை" 1964ம் ஆண்டு அரங்கேற்றினார். அக்காலகட்டத் திலிருந்தே பெயரிடப்படாத திருமறைக்கலா மன்றத்தை இயக்கி வந்தார்.

1966ம் ஆண்டு உரும்பிராயில் முதன் முதலாக "திருமறைக் கலாமன் றத்தை" உத்தியோகபூர்வமாக அங்குரார்ப் பணம் செய்து, பின்னர் யாழ். நகரிலும் அதை பதிவு செய்தார். இத்துடன் சிறிது காலம் "பாதுகாவலன்" பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் இலங்கை அரசின் கலாசாரக் குழுவின் ஆலோசகராகவும் கடமையாற்றி னார். இலங்கை வானொலிக் கத்தோலிக்கத் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களில் ஒருவரா கவும் கடமையாற்றனார். 1970ம் ஆண்டு பாப்பரசர் 6ம் சின்னப்பரின் வருகையின் பொழுது வானொலி அறிவிப்பாளராகத் தெரிந் தெடுக்கப்பட்டார்.

1972ம் ஆண்டு இந்தியா சென்று மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தமிழ் இலக்கண, இலக்கியங்களை கசடறக் கற்று வித்துவான் புலவர் பட்டத்தைப் பெற்றார்.1978இல் இருந்து 1988 வரையிலான பத்து வருடங் களையும் உடல் நலம் குன்றிய நிலையில் ஐரோப்பிய நாடுகள் பல வற்றிலும் மற்றும் வெளிநாடுகளிலும் செலவு செய்து பல்வேறு கலை, கலாசார அரங்கியல் நிகழ்வுகளைப் பார்த்தும், கேட்கும் பட்டறிவுத் தன்மையுடன் - தகைமையுடன் தாயகம் திரும்பினார்.

1990ம் ஆண்டு "கலைமுகம்" என்னும் காலாண்டுக் கலை இலக்கிய இதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக இன்று வரை அதனை வெளியிட்டு வருகிறார்.

1993ம் ஆண்டு யாழ். குடாநாட்டில் வாழும் 23 நாட்டுக் கூத்து அண்ணாவிமாருக்குப் பொன்னாடை போர்த்தித் தமிழ்விழா மேடையில் அவர்களைக் கௌரவித்தார். இத்துடன் 1995ம் ஆண்டு யாழ். நகரில் முதன் முதலாக ஒரு "நாடக அரங்கியல்" கண்காட்சியை நடாத்தினார்.மேலும் 1995ம் ஆண்டு இடம் பெயர்வின் போது இவர் கனடாவில் இருந்தும் கூட தனது கலைஞர்களை ஊக்கப்படுத்தி உதவி செய்து மிருசுவில் நகரில் "கல்வாரிச் சுவடுகள்" என்னும் தவக்கால நிகழ்ச்சியை அரங்கேற்றி வெற்றி கண்டார்.1997ம் ஆண்டு ஜேர்மனி கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் அருட்தந்தை ஜெயசேகரம் அடிகளார் இவருக்குப் பொன்னாடை அணிவித்து "கலைத்தூது" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

மேலும் இவரின் ஆர்வத்தை அர்ப்பணிப்பையும் பாராட்டி இவருக்கு ஆளுநர் விருதும் யாழ். பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதி பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இத்துடன் அருட்தந்தை பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார் உருவும், திருவும், அறிவும், ஆற்றலும், அன்பும், பண்பும் நிறைந்த ஒரு பெருமகன். இவர் சிறந்த கத்தோலிக்க மத குருவாக இருந்தும் ஏனைய சமயங்களையும், சமயத் தலைவர்களையும் மதிக்கும் பெருங்குணம் படைத்தவர்.

மேலும் பேசப்பழக இனியவர், இரக்கமும் உருவானவர், தன்னலம் விரும்பாத பொதுநலவாதியே நான்கண்ட பேராசிரியர் அருட்தந்தை மரிய சேவியர் அடிகளார் ஆவார். ஆகையினாலே குருத்துவப் பணியில் 50 ஆண்டுகளையும் நிறைவு செய்திட்ட இப்பெருமகனை நாம் மனதார வாழ்த்து கின்றோம்.

ஆசிரியர் பேசுகிறார்

## வணக்கம்

சொந்த இனத்தில், மொழியில், மதத்தில் கலாசாரத்தில் பற்று வைக்க வேண்டும்; அப்பற்று, வெறியாக மாறிவிடக்கூடாது. ஒவ்வொருவருடையதும், ஒவ்வொன்றினதும் தனித்துவம் போற்றப்பட வேண்டும். அத்தனித்துவம், பொதுநலனுடனும், பொது நோக்குடனும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது. எந்த ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளும் நில்லாது, தற்பண்பு, தற்சிறப்பு, தன்னிறைவு பேணிக்காத்து வாழ்வை நெறிப்படுத்துவதே உயர்மானிடம்.

இவ் ஆண்டு செப்டம்பர் திங்கள் திருமறைக் கலாமன்றம் தமிழ் விழா ஒன்றினைக் கொழும்பில் நடத்துகிறது. இவ் விழாவில் இடம் பெறும் மூன்று நாட் கருத்தரங்கு "தமிழ் இலக்கியத்தில் மானிட நோக்கு" என்ற தலைப்பைக் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. தமிழுக்கு விழா எடுப்பது நமது தலையாய கடன்!. "தமிழ்" என்ற சொல்லினுள் தமிழ் இனத்தின் வரலாறு, தமிழ்ப்பண்பாடு, தமிழர்களின் அடிப்படைக்கருத்து நிலைத் திரட்டு, சமய - வழிபாட்டு முறை, உலக நோக்கு முதலியன அடங்கும். அத்தகைய செறிவுள்ள "தமிழ்" தரும் தனித்துவம், மக்களைப் பிரிக்கும் ஒன்றல்ல, மாறாக இணைக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கிறது என்பதை இவ்விழா வலியுறுத்துகிறது.

நமது மண்ணிலிருந்து கடல்கடந்து சென்று, சென்ற இடம் எங்கும் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கும் "தமிழ்", இப் பண்பைக் கோடிட்டுக் காட்டத் துணை நிற்கும் என்பது உறுதி!

பேராசிரியர் நீ. மரிய சேவியர் அடிகள்

(நன்றி - கலைமுகம் - 1994 ஆடி - புரட்டாதி)

# மறக்க முடியா மகத்தான ஆளுமை: மாதகல் மயில்வாகனப் புலவர்

**நவரட்ணம் சத்தியவேந்தன்**
ஆசிரியர்

மாதகல் மயில்வாகனப் புலவர் கி.பி 18ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவர். பண்டத்தரிப்புக் கோயிற்பற்றைச் சேர்ந்த மாதகலில் பிறந்தவர் என்பதால் மாதகல் மயில்வாகனப் புலவர் என இலக்கிய வரலாற்றில் இவர் பெயர் இனங்காட்டப் பட்டுள்ளது.

மாதகல் மயில்வாகனப்புலவர், புலமைப்பாரம்பரியம் மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். கண்டியரசன் மீது 'கிள்ளை விடு தூது' பாடிய மாதகல் சிற்றம்பலப்புலவரின் சகோதரியின் மைந்தரே மயில்வாகனப் புலவராவார். இவருடைய தந்தையாரின் பெயர் சுப்பிரமணியம். தாயார் பெயர் சிதம்பரம். மாதகல் மயில்வாகனப் புலவர் பற்றிய தகவல்களையறிவதற்கு ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை எழுதிய 'பாவலர் சரித்திர தீபகம்' சுன்னாகம் குமாசுமிப்புலவர் எழுதிய 'தமிழ்ப்புலவர் சரித்திரம்' ஆ.வேலுப்பிள்ளை எழுதிய 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' வித்துவ சிரோமணி சி.கணேசையர் எழுதிய 'ஈழநாட்டுப் புலவர் சரித்திரம்' முதலான நூல்களும் துணை புரிகின்றன.

மயில்வாகனப்புலவரின் இளமைக் காலக் கல்விப் பெறுகை மிகவும் காத்திரமானது. தமது மாமனாரான சிற்றம்பலப் புலவரிடம் இளமைக்கல்வியையும், கூழங்கைத் தம்பிரானிடம் இலக்கண, இலக்கியங்களையும் கற்றுத் தம்மறிவை இவர் வளம் படுத்திக் கொண்டார்.

மாதகல் மயில்வாகனப் புலவர் இயற்றிய நூல்கள், அவரை இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றின் கணிப்பிற்குரிய இடத்தில் அவரை இலங்க வைக்கின்றன. யாழ்ப்பாண வைபவமாலை, புலியூர் அந்தாதி, ஞானாலங்கார ரூபன் நாடகம், காசியாத்திரை விளக்கம் என்பன மாதகல் மயில்வாகனப் புலவர் இயற்றிய நூல்களாகும்.

இவற்றைத் தவிர கி.பி 1814இல் மாதகல் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் உண்டான இன்னல்கள் குறித்தும் இழப்புக் கள் குறித்தும் அம்மானை ஒன்றையும் பாடியுள்ளார் எனவும் கூறப்படுகின்றது. மேலும் தம் காலத்துக்

கீர்த்திப் பிரபாவம் மிக்க புலவர்களாக விளங்கிய நல்லூர் சின்னத் தம்பிப் புலவர், சுன்னாகம், வரதபண்டிதர் போன்றோரின் நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளார் என்பதும் உறுதிப்படுகின்றது.

மாதகல் மயில்வாகனப்புலவரின் இலக்கியங்களை நோக்கும்போது அவரது பன்முகப் புலமையும் , பன்முக இலக்கியப் பணிகளும் பளிச்சிட்டுத் தெரிகின்றன. புலவர் இயற்றிய ' யாழ்ப்பாண வைபவ மாலை' இலங்கையில் தமிழில் எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் வரிசையில் தனிக் கவனத்திற்குரிய ஒன்றாக விளங்குகின்றது.




யாழ்ப்பாண அரசர்கள் குறித்துத் தாம் செவி வழியாகப் பெற்ற செய்திகளையும் தொகுத்து யாழ்ப்பாண வைபவமாலை எனும் பெயரில் வரலாற்று நூலாக யாத்துள்ளார். யாழ்ப்பாணத்தின் வரலாற்றை அறிய முற்படும் புலமை நிலைநிற்கும் ஆய்வாளர்களுக்கு யாழ்ப்பாண வைபவ மாலை தரும் செய்திகள் விபரக்கனதி உடையவை என்பதில் ஐயமில்லை. யாழ்ப்பாண வைபவ மாலையின் சிறப்பு யாதெனில் அது உரை நடையில் எழுதப்பட்டுள்ளமையாகும்.

யாழ்ப்பாண வைபவமாலையின் வரலாறு வரையான பகுதிகள் வையா பாடலைத் தழுவியும், கூழங்கைச் சக்கரவர்த்தியின் கீழ் யாழ்ப்பாணக் குடியேற்றம் வரையான பகுதிகள் கைலாய மாலையைத் தழுவியும் யாழ்ப்பாணத்தரசர்களின் ஆட்சி பீட வரிசை, பரராசசேகரன் வரலாறு முதலான பகுதிகள் இராசமுறையையும் , பரராசசேகரன் உலாவையும் தழுவி எழுதப் பட்டுள்ளன என அறிஞர் பெருமக்கள் குறிப்பிடுவர். அறிஞர் களின் இக்கருத்துக்கு 'உரராசர் தொழு கழல்..' எனத் தொடங்கும் யாழ்ப்பாண வைபவமாலையின் சிறப்புப் பாயிரச் செய்யுளும் ஓரளவுக்கு வலுச் சேர்க்கின்றது.

மயில்வாகனப் புலவரின் செய்யுளாற்றலைப் புலப்படுத்தும் இலக்கியமாக அவரியற்றிய புலியூரந்தாதி விளங்குகின்றது. தென்னிந்தியத் திருத்தலங்களுள் ஒன்றான சிதம்பரமே புலியூர் என்று அழைக்கப்படுகின்றது. புலியூர் மீது பாடப்பட்ட செய்யுளே புலியூரந்தாதி எனப்படுகின்றது. புலியூரந்தாதிக்கு மட்டுவில் ம.க வேற்பிள்ளையவர்கள் காத்திரமான உரை வகுத்துள்ளார். இந்நூலுக்கான சிறப்புப்பாயிரம் சுன்னாகம் வரத பண்டிதரால் ஆக்கப்பட்டது.

புலியூரந்தாதி கடவுள் வாழ்த்து நீங்கலாக நூறு கட்டளைக்கலித்துறைகளைக் கொண்டு நூற்றந்தாதியாகவும், யமக அந்தாதி யாகவும் விளங்குகின்றது. பெரும்பாலான செய்யுட்களுள் அகப்பொருள் மரபு சுவறியுள் ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இலகு வில் விளங்கக் கொள்ள முடியாத வகையி லான கடினமான சொற்சேர்க்கைகளைக் கொண்டுள்ள புலியூர் யமக அந்தாதி கி.பி 18ஆம் நூற்றாண்டளவில் இலங்கையில் நிலவிய தமிழ்ப்புலமைச் செல்நெறியின் அடையாளங்களுள் ஒன்று என்ற வகையில் மெச்சத்தக்கதாக விளங்குகின்றது.


திருச்சிற்றம்பலம்.
புலியூரந்தாதி.
மயில்வாகனப்புலவர்
இயற்றியது.
ஸ்ரீமத். வே. கார்த்திகேயோபாத்தியாயர்
ஸ்ரீலஸ்ரீ
ஆறுமுகநாவலரவர்களுடைய
மருகரும், மூதன் மாணாக்கரும்,
ஸ்ரீமத். ச. பொன்னம்பலபிள்ளையின்
முதன் மாணாக்கரும்,
க. வேலுப்பிள்ளை செய்த
புத்துரையுடன்
சைவப்பிரகாசயந்திரசாலையில்
1882.

மயில்வாகனப்புலவரின் மற்றுமொரு ஆக்கம் ' ஞானாலங்கார ரூபன் நாடகம் ' என்பதா கும். இது ஆன்ம தத்துவங்களை உருவக அலங்காரம் செய்து பாடிய நாடக நூலாகும்.

இவரியற்றிய மற்றுமொரு நூல் 'காசி யாத்திரை விளக்கம்' ஆகும். தம் நண்ப ரான வண்ணார்பண்ணை வைத்திலிங்கச் செட்டியாருடன் இந்தியாவிலுமைந்துள்ள காசிக்குச் சென்று மீண்ட பிரயாண அனுபவங்களைக் குறித்துப் புலவரியற்றிய நூலாக ' காசி யாத்திரை விளக்கம்' என்ற ஆக்கம் விளங்குகின்றது. தென்னிந்தி யாவுக்கும் இலங்கைக்குமான பண்பாட்டுத் தொடர்புகளை இனங்காட்டுகின்ற இந்நூலே இலங்கையில் தமிழில் எழுந்த முதல் பிரயாண வரலாற்று நூல் என்று துணிந்து கூறத்தக்கது.புலவரவர்கள் தம் சமகாலத்தவர் களான நல்லூர் சின்னத்தம்பிப் புலவரின் 'கல்வளையந்தாதி' என்ற இலக்கியத்துக்கும் சுன்னாகம் வரதபண்டிதரின் சிவராத்திரி புராணம் என்ற இலக்கியத்துக்கும் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது. மாதகல் மயில்வாகனப் புலவரின் புலமைத்துவ ஆகற்சிக்கும் சகபுலவர் பெருமக் களின் படைப்புக்கள் மீது அவர் செலுத்தும் மாசற்ற மதிப்புக்கும் அடையாளங்களாக இச்சிறப்புப் பாயிரங்கள் விளங்குகின் றன.

மாதகலில் பிறந்து இலங்கைத்தமிழ் வரலாற்றின் கணிசமான பக்கங்களில் தம் பெயரைப் பதிவு செய்துள்ள மாதகல் மயில்வாகனப்புலவரின் பன்முக ஆளுமை களைப் பற்றிய காத்திரமான ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டியது காலத்தின் தேவைகளுள் ஒன்றென்பதில் ஐயமில்லை.

# மருத்துவம்

# ஆயுள்வேதம் ஒரு நோக்கு

**Dr.த.திலீபன்,**
ஆயுள்வேத வைத்தியசாலை,
பண்டத்தரிப்பு.

ஆயுள்வேதம் -உயிர், வேதம் - அறிவு, உயிரைப் பேணிக் காப்பது பற்றிய அறிவு ஆயுள்வேதம் ஆகும். மேல்நாட்டு மருத்துவம் இங்கு வேரூன்றுவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே நமது நாட்டில் மருத்துவக்கலை மிகவும் பொலிவோடு விளங்கியது. ஆதியில் உலகத்தில் வாழும் ஜீவராசிகள் நல்வாழ்வு வாழ்வதன் பொருட்டு உலக வாழ்க்கையைத் துறந்த ரிஷிகள் ஞானிகளால் கடைப்பிடிக்கப்பட்ட வைத்திய மாகும்.

நமது நாட்டிலுள்ள பாரம்பரிய சுதேச மருத்துவமானது சிங்கள மக்களால் ஆயுள்வேதம் எனவும், தமிழ் மக்களால் சித்த மருத்துவம் எனவும், முஸ்லீம் மக்களால் யுனானி மருத்துவம் எனவும் அழைக்கப்பட்டு வந்தது. 1961 ஆம் ஆண்டு 31ம் இலக்கச் சட்டத்தின் படி இலங்கையிலுள்ள சுதேச மருத்துவம் எல்லாம் ஆயுள்வேதத்திற்குள் அடக்கப் பட்டது.

நோயணுகா வண்ணம் பேணும் முறைகள், ஆயுளை நீடிக்கச் செய்யும் முறைகள், நோய் தீர்க்கும் உபாயம் போன்றன ஆயுள் வேதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன. இது பெரும்பாலும் மூலிகை வைத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது.

ஆயுள் வேதச் சட்டத்திலுள்ள முக்கிய விடயங்களாவன,

- ஆயுள்வேதத் திணைக்களம் உருவாக்கப் படல்
- ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்படல்
- சுதேச உள்நாட்டு மருத்துவ நிறுவகம் பல்கலைக்கழக அந்தஸ்துக்குத் தரமுயர்த்தப் படல்
- ஆராய்ச்சி மையம் உருவாக்கப்படல்
- ஆயுள்வேத மருந்தகங்கள், வைத்திய சாலைகள் நாடெங்கும் விஸ்தரிக்கப்படல்
- சுதேச அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்
- சுதேச வைத்தியர்களைப் பதிவு செய்தல்
- மூலிகைத் தோட்டங்கள் அமைத்தல்

போன்றன இவையனைத்தும் நிறைவேற்றப் பட்டுள்ளன.

தமிழர் மருத்துவமாகிய சித்த மருத்துவமானது சிவனிடமிருந்து தோன்றியது. சிவன் - பராசக்தி- நந்திதேவர் -

பிரம்மன் - இந்திரன் - சூரியன் - அஸ்வினி குமாரர்கள் - மனிதர் இவ்வாறாக மனிதரை இம்மருத்துவம் வந்தடைந்தது.

இது உடல் ஆரோக்கியமாக இருப்ப தற்காக இயற்கை வளங்களான தாவர வர்க்கம் (மூலிகைகள்), விலங்கு வர்க்கம் , தாது வர்க்கம் என்பவற்றை மாத்திரமே பயன்படுத்திச் செய்யப்படும் மருத்துவமாகும்.

மனித இனம் முதலில் தோன்றிய லெமோரியாக் கண்டத்தில் முதலில் தோன்றி யவர்கள் தமிழர்கள் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. இதன் அடிப்படையில் தமிழ் மக்களுடன் தோன்றியதே சித்த மருத்துவ மாகும்.

சித்த மருத்துவக் கொள்கையானது பஞ்ச பூதத்தினாலானது. இப்பஞ்ச பூதங்களே உயிரினங்களின் உடலிலும், ஔடதங் களிலும் பிரதிபலிக்கின்றது. திரிதோஷமானது வாதம் (வாயு), பித்தம்(தேயு), கபம்(அப்பு) எனும் மூன்றையும் குறிக்கின்றது. இம் மூன்று தோஷங்களும் சமனிலையிலுள்ள போது உடல் ஆரோக்கியமாக இருக்கும் இவை அளவில் கூடிக் குறைந்து மாறுபடும் போது நோய் ஏற்படுகின்றது. இதனையே திருக்குறளில்

"**மிகினும் குறையினும் நோய் செய்யும்**
**நூலோர் வளி**
**முதலா எண்ணிய மூன்று**" எனக் கூறப்படு கின்றது.

நோய்களைக் குணப்படுத்தும் முறை களையும் நோய் அணுகாது உடல்நலம் பேணும் முறைகளையும் பற்றிக் கூறப் படுகின்றது. அவை பிரணாயாமம் (மூச்சுப் பயிற்சி), யோகாசனம், போன்றவையாகும்.

இம்மருத்துவத்தைப் பற்றிக் கூறும் நூல்களாவன: செகராசசேகரம், வைத்திய சிந்தாமணி, அமுதசாகரம், வைத்திய விளக்கம், பரராசசேகரம், சொக்கநாதர் தனவந்திரியம் , அங்காதி பாதம், ஈழத்து சித்தமருத்துவநூல் போன்றன.

சித்தர்களால் கூறப்பட்டுள்ள "உணவே மருந்து மருந்தே உணவு" என்ற கூற்றுக்கிணங்க மக்களின் தினசரி உணவு முறையில் மூலிகைகள் மருந்தாகின்றன. சித்த மருத்துவ முறைகளின்படி மருந்தென் பது தனியானதொன்றல்ல. அது நமது அன்றாட வாழ்வோடும், தினசரி ஒழுக்கத் தோடும், சமுதாயச் சடங்கோடும் நம் அன்றாட உணவோடும் கலந்துள்ளது.

இதனாலேயே நமது மருத்துவ முறைகள் பத்தியத்திற்கு அதிக முக்கியத்து வத்தைக் கொடுக்கின்றன. உதாரணமாக நாம் உணவில் சேர்க்கும் மிளகு உணவி லுள்ள நஞ்சை நீக்குகிறது. சீரகம் பித்தத் தினை நீக்கி ஜீரண சக்தியை அதிகரிக்கிறது. தினசரி உணவில் சேர்க்கும் உள்ளி வாய்வகற்றியாகச் செயற்படுவதுடன் உடலி லுள்ள கொலஸ்ரோலையும் குறைக்கின்றது. பருப்பு போன்ற வாயுவைப் பெருக்கும் உணவு கள் சமைக்கும் போது உள்ளி சேர்ப்பது, முட்டைக்கு மிளகு சேர்ப்பது, கருணைக் கிழங்கிற்குப் புளி போடுவது, நிலக் கடலை உண்டபின் சர்க்கரை உண்பது போன்ற பலவும் அறிவியல் அடிப்படையில் அமைந்த மருத்துவ முறையிலுள்ள உணவு முறை களே.

மூலிகை மருந்துகளே மனிதருக்குப் பக்க விளைவுகளை ஏற்படுத்தாதவை

ளாகும். நோய்களை முற்றிலும் குணமாக்கு பவையாகும். தற்போது மூலிகைகளி லிருந்து தயாரிக்கப்படுகின்ற மருந்துக ளையே உலக நாடுகளில் பெரும்பாலான மக்கள் பின்பற்றத் தொடங்கிவிட்டனர்.

நமது நாட்டில் தற்போது ஆயுள்வேத வைத்திய முறையானது ஓர் நிர்வாக ஒழுங்கமைப்பிற்குள் அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதற்கமைய மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை யாழ்ப்பாணத்திலும், கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலைகள் பண்டத்தரிப்பு, தம்பசிட்டி ஆகிய இடங் களிலும் மத்திய மருந்தகங்கள் ஊர்காவற் துறை, காரைநகர், அராலி, ஊரெழு, சாவகச்சேரி, சரசாலை, கரவெட்டி, பருத்தித் துறை, தெல்லிப்பழை போன்ற இடங்களிலும் இயங்கி வருகின்றன. இவற்றை விட ஒவ்வொரு பிரதேச சபைகளின் கீழும் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளும் அமைந்துள்ளன. இவ் வைத்தியசாலைகளுக் குத் தேவையான மருந்துப் பொருட்கள் வடமாகாண ஆயுள் வேத மருந்துற்பத்தி நிலையம் அச்சுவேலியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக உள்ளூர் மருந்தகங்களில் இருந்தும், கொழும்பு நாவின்ன மருந்துக் கூட்டுத் தாபனத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளப் படுகின்றன.

இவற்றை விட கைதடியில் சித்த போதனாவைத்தியசாலை இயங்கி வருகின் றது. அங்கு மருந்துகள் பல தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. வெளி நோயாளர் பிரிவு, விஷேட சிகிச்சைப் பிரிவுகள், உள்நோயாளர் பிரிவு என்பவற்றைக் கொண்டியங்கி வருகின்றது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்புக் கிராமமானது முன்னர் பல பாரம்பரிய வைத்தியர்களையும், வைத்திய முறைகளையும் கொண்ட பூமியாக இருந்துள்ளது. காலப்போக்கில் வைத்தியர் களின் மறைவு, இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து அவ் வைத்தியமுறைகளைப் பேணிக் காக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்நிலையிற் தான் மானிப்பாய்ப் பிரதேச சபையின் உப அலுவலகமாகப் பண்டத்தரிப்பில் இயங்கி வந்த அலுவலகத் தின் கீழ் இலவச சித்த ஆயுள்வேத வைத்திய சாலை ஆரம்பிக்கப்பட்டுச் சிறந்த முறையில் இயங்கி வந்தது. அதனைத் தொடர்ந்து மாகாணப் பணிப்பாளரின் கீழ் ஆயுள் வேத மத்திய மருந்தகம் (Central Ayumedic Dispensary) ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தது. தொடர்ந்து வடமாகாணப் பணிப்பாள ரின் கீழும் இயங்கி வந்தது. பின்னர் கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. (Ayurmedic Hospital) இக்கிராம மக்கள் ஆயுள் வேத வைத்தியத்தில் கொண்டிருந்த பற்றினாலும், இதன் பக்க விளைவுகளற்ற தன்மையினாலும் நாளுக்கு நாள் இவ் வைத்தியசாலையை நாடிவரும் மக்கள் தொகையும் அதிகரித்தது.

தற்பொழுது இவ்வைத்தியசாலை கீரிமலை வீதியிலுள்ள ஓர் தனியார் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின் றது. இங்கு ஆயுள்வேத மருத்துவர்களுடன்

நிரந்தரப் பணியாளர்களும், தற்காலிகப் பணி யாளர்களும் கடமையாற்றி வருகின்ற னர். இவ்வைத்தியாலை வெளி நோயாளர் பிரிவு, விஷேட சிகிச்சைப் பிரிவு, உள் நோயா ளர் பிரிவுகளைக் கொண்டது.

வெளிநோயாளர் பிரிவு, விஷேட சிகிச்சைப் பிரிவு என்பன திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.00 மணி முதல் மாலை 4.00 வரையும், சனிக்கிழமைகளில் காலை 8.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் நடைபெற்று வருகின்றது. இதில் வாத நோய்கள், தோல்நோய்கள், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சையளிக்கப் படுகின்றது.

விஷேட சிகிச்சைப்பிரிவில் வயோதி பர்களுக்கான விஷேடசிகிச்சை, குழந்தைகள், சிறுவர்களுக்கான விஷேட சிகிச்சை, நீரிழிவு சிகிச்சை, உயர் இரத்த அழுத்த நோய்க்கான சிகிச்சை போன்றன நடைபெற்று வருகின் றன.

வயோதிபர்களுக்கான விஷேட சிகிச்சை
Genatric Clinic - திங்கள்
குழந்தைகளுக்கான விஷேட சிகிச்சை
Paediatric Clinic - செவ்வாய்

நீரிழிவு விஷேட சிகிச்சை
Diabetic Clinic - புதன்

உயர் இரத்த அழுத்தத்திற்கான சிகிச்சை
Hypertensive Clinic - வியாழன்

குழந்தை, சிறுவர்களுக்கான சிகிச்சை
Paediatric Clinic - சனிக்கிழமை

உள்நோயாளர் பிரிவில் வாத நோய் கள், வீக்கத்துடனான நோவு, சளி இழுப்பு, தோல் நோய்கள் போன்றவற்றிற்கு விஷேட மாகச் சிகிச்சையளிக்கப்படுகின்றன. உள் நோய்களுக்கான உணவும் வழங்கப் படுகின் றது.

குழந்தைகளுக்கான சிகிச்சைப் பிரிவில் நோய் வருமுன் காக்கும் பொருட்டு யாழ்ப்பாணத்திற்குரிய பாரம்பரிய மருந்து களான கிரந்தியெண்ணெய், கோரோசனை மாத்திரை போன்றனவும் வழங்கப்பட்டு வருகின்றன.

நீரிழிவு நோயாளர்களுக்கான சிறு நீர், இரத்தப் பரிசோதனைகளும் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இரத்த அழுத்த நோய் உள்ள வர்களுக்கு அவர்களின் இரத்த அழுத்தம் (Blood Pressure) கிரமமாக பரிசோதிக்கப் பட்டு தேவைப்படுபவர்களுக்குச் சிகிச்சைய ளிக்கப்படுகின்றது.

நீரிழிவு, உயர்இரத்த அழுத்தம் மற்றும் ஏனைய நோய்களுக்கு மருந்துகள் வழங்கிச் சிகிச்சையளிப்பது மட்டுமன்றி உணவு, பழக்கவழக்கங்கள் என்பவற்றின் மூலம் அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருப் பதற்கும் அறிவுறுத்தப்படுகின்றனர். அத்து டன் நோயாளர்களுக்குத் தேவையான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது. எமது வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கு மேலதிக சிகிச்சை தேவைப் படின் கைதடி சித்த போதனா வைத்திய சாலை, யாழ்.போதனா வைத்தியசாலைக ளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

பண்டத்தரிப்பு வாழ்மக்களால் மருந்துற்பத்திக்குத் தேவையான சில மூலிகைகள் வைத்தியசாலைக்குத் தொடர்ச்சியாக அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றன. அவை அச்சுவேலியிலுள்ள மருந்துற்பத்தி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

பண்டத்தரிப்பு கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலைக்கான புதிய நிரந்தரக் கட்டடம் முல்லையடி வீதியிலுள்ள ஒரு காணியில் கட்டப்பட்டு நிறைவடைந்து வருகின்றது. இக் காணி பிரான்பற்று நலன்புரிச் சங்கத்தினால் வைத்தியசாலைக்கென அன்பளிப்புச் செய்யப் பட்டது. இவ்வருட இறுதிக்குள் கட்டட வேலை நிறைவுற்று வைத்தியசாலை புதிய கட்டடத்திற்கு இடமாற்றப்படவுள்ளது.

இவற்றை விட அராலி, திருநெல்வேலி, நவக்கிரி போன்ற இடங்களில் பெரியளவிலான மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப் பட்டு விஸ்தரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இங்கிருந்து பல மூலிகைகள் மருந்துற்பத்தி நிலையம் அச்சுவேலிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அத்துடன் பாடசாலை மாணவர்கள், மக்கள் அனைவருக்கும் மூலிகை இனங்காணலுக்கும் பெரியளவில் பயன்படுகின்றது.

எதிர்காலத்தில் ஆயுள்வேத வைத்திய முறைகளை விஸ்தரிக்கும் பொருட்டும் அதனைப் பற்றிய அறிவைப் பாடசாலை மாணவர்களூடாக சமுதாயத்திற்கு கொண்டு செல்லும் பொருட்டும், பக்க விளைவுகளற்ற இயற்கையான மருத்துவ மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துப் பொருட்களின் பாவனையையும், வீடுகளில் அன்றாட வாழ்க்கையில் உணவு முறையில் மூலிகைகளைப் பயன்படுத்துவதற்கு ஊக்கப்படுத்தும் பொருட்டும் ஆயுள்வேத பொது சுகாதார உத்தியோகத்தர்கள் செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒருவர் செயற்பட்டு வருகின்றனர்.

முன்னர் குறிப்பிட்ட அனைத்து வைத்தியசாலைகளிலும் சேவையாற்றும் மருத்துவர்கள் யாழ்.பல்கலைக்கழக, சித்த மருத்துவ அலகு கைதடியில் ஐந்து வருட கற்கைநெறியைப் பூர்த்தி செய்து அதன்பின் ஒருவருட கால உள்ளகப்பயிற்சி நெறியைக் கொழும்பு நாவின்ன, பொரளை ஆயுள்வேத வைத்தியசாலைகளிலும், யாழ்ப்பாணத்திலும் மேற்கொண்டவர்களாவார்.

பரம்பரை வழியாக ஆயுள் வேதத்தைக் கைக்கொண்டுவரும் வைத்தியர்களும் ஒவ்வொரு இடங்களிலும் இவ்வைத்தியத்தை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களில் விஷக்கடி, முறிவு வைத்தியம், பாலர் ரோகம் போன்ற பல்வேறு விஷேட வைத்திய முறைகளையும் செய்து வருகின்றனர்.

எனவே வேகமாக வளர்ந்து வரும் நவீன விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் பல புதிய நோய்களுக்கும் ஆட்பட்டு மருத்துவ விஞ்ஞான உலகிற்கு சவாலாக இருக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இத்தகைய வியாதிகள் நம்மை அணுகுவதற்கு முன்னர் உடலை நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்த ஆரோக்கியமான நிலையில் வைத்திருக்க வேண்டும். இந்த சக்தி மூலிகைகளுக்கும், மூலிகை மருத்துவத்திற்குமே உண்டு என்பதற்கு சித்தர்களின் பல ஆதா

ரங்கள் உண்டு. எனவே நாம் நமது அன்றாட வாழ்வில் கூடியளவில் இயற்கையுடன் இணைந்து உணவு, நடைமுறைகள், மருத்துவம் என்பவற்றைக் கைக்கொண்டு ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்.

**மாகாண சுதேச வைத்திய நிர்வாகக் கட்டமைப்பு**

முதலமைச்சர் (Chief Minister)

↓

பிரதம செயலாளர் (Chief Secretony)

↓

சுகாதார சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர்

↓

மாகாண சுதேச மருத்துவப்பணிப்பாளர்

↓

நிர்வாகப் பகிர்வு ⟶ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

- மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை
- கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை
- மத்திய மருந்தகம்
- பொது சுகாதார மருத்துவ சேவை

எப்படிப்பட்ட வரலாற்றுக்கு,
வளத்துக்குச் சொந்தக்காரர்கள் நாங்கள்
என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதாது.
அதை உலகம் ஒப்புக் கொள்ளும் வகையில் கொண்டு சேர்க்க வேண்டும்.

- ஜார்ஜ் ஹார்ட் (அமெரிக்கா)

# சண்டிலிப்பாய்ப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட மக்களிடையே மூலிகைப் பயன்பாடும் அவற்றின் மருத்துவ குணங்களும் ஓர் ஆய்வு

**மருத்துவ கலாநிதி (திருமதி) விவியன் சத்தியசீலன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



ஓர் இனத்தின் பண்பாடு, பாரம் பரியம், கலாசாரம் மற்றும் பழக்க வழக்கங்களில் காலத்தின் நிர்ப்பந்தத்தால் மாற்றங்கள் நிகழ்வது இயல்பு. அந்த வகையில் எமது இன்றைய இளம் சந்ததியினரின் வாழ்க்கை முறையும் உணவுப் பழக்க வழக்கங்களும் இயற்கை யிலிருந்து எம் பிரதேசத்துக்கும் எமது உடலுக்கும் ஒத்து வராததுமான உணவுப் பழக்கத்திற்கும் அடிமைப்பட்டு ஆரோக்கிய த்தை இழந்துள்ளனர். இயற்கையான உணவுப் பழக்கவழக்கங்கள் மறந்தும், மறைந்தும் வருவது மனவருத்தத்திற்குரிய விடயமாகும். எமது பண்டைய கால மக்களின் உணவுப்பழக்கவழக்கங்கள், இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தியும், சார்ந்தும் வாழ்ந்துள்ளனர் என்பது கண்கூடு. அவர்கள் தமது வீடுகளிலும், தோட்டங்களிலும் உள்ள இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தி தமது உணவிலும் மருத்துவ ரீதியிலும் பல்வேறு தேவைகளை நிறைவேற்றி ஆரோக்கியமான வாழ்க்கையினை நிலைநாட்டி வந்தனர். ஆனால் இன்று இயற்கையான மூலிகை வளங்களை விடுத்தும், தோட்டங்களில் நாட்டப்படும் இயற்கையான மரக்கறி, பழங்கள், தானியவகைகள் என்பன செயற்கையான கிருமிநாசினிகள் விசிறப் பட்டும். புகையூட்டப்படும் நச்சுத்தன்மை உள்ளனவாக மாறியுள்ளன. இத்தகைய உணவுப்பாவனையால் புற்றுநோய்கள் தோல் நோய்கள் போன்ற மனிதனின் உயிர் கொல்லும் பல நோய்கள் இன்றைய சமூகத் தில் புத்துயிர் பெற்றுள்ளன.

இயற்கை உணவுப்பாவனை பற்றிய ஆலோசனைகளைக் கீழைத்தேச

மருத்துவம் மட்டுமன்றி மேலைத்தேச வைத்தியத் துறையினரும் சுட்டிக்காட்டி நிற்பது குறிப்பிடத்தக்கது. மக்களுக்கு இயற்கையான உணவுகள் அதாவது தானியங்கள், பழவகை, கீரைகள் மற்றும் மரக்கறிகளை இயற்கையிலே பெற்றுக் கொள்ளும் முறை பற்றிய விழிப்புணர்வுகள், ஆலோசனைகள் என்பன ஒவ்வொரு பிரதேச மக்களுக்கும், விவசாயிகட்கும் அடிக்கடி வலியுறுத்தப்படுகின்றன. எப்படி இருந்த போதும் மருந்தடிக்கப்படாத இயற்கையான உணவுகளை இயற்கை முறைப்படி நஞ்சூட்டப்படாமலும் செயற்கை இரசாயனங் கள் கலப்புறாதவாறும் அவற்றில் போசனைப் பெறுமானங்களை நாம் தகுந்த வகையில் பெறுவதற்கேற்ப உணவுப் பழக்கவழக்கங் களைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசிய மாகும்.

இவ்வாறான இயற்கையான மூலிகை, தானியவகைகள் என்பன எமது பிரதேச செயலர் பிரிவில் பின்வரும் பிரதேசங்களில் பரம்பியுள்ளதை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| இல. | பிரதேசம் | இனங்காணப்பட்ட மூலிகைகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சண்டிலிப்பாய் | 189 |
| 2 | இளவாலை | 174 |
| 3 | மாதகல் | 182 |
| 4 | பண்டத்தரிப்பு | 168 |

இவ்வாறாகப் பரவியுள்ள மூலிகை களை நாம் உணவாகவும், மருந்தாகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும். அந்த வகையில் அவற்றினை நீரிழிவைப் போக்கும் மூலிகைகள், சுவாச ரோகத்தில் பயன்படும் மூலிகைகள், கீரைவகை, நார்ச் சத்துள்ள தானிய வகைகள், தோல் நோயில் பயன்படுத்தக் கூடிய மூலிகைகள் மற்றும் அழகு சாதன மாகப் பயன்படுத்தக் கூடிய மூலிகைகள் என்பவற்றை தனித்தனியே நோக்குவோம்.

முக அழகுக்காகப் பயன்படுத்தும் மூலிகைகள், உடலழகைப் பெறப் பயன் படுத்தும் மூலிகைகள் எனப் பல காணப் படுகின்றன.

**நீரிழிவு நோயில் பயன்படுத்தக்கூடிய மூலிகை இனங்கள்**

இன்று இளவயதிலேயே அனை வருக்கும் சவாலாக விளங்கும் ஒரு நோயாக நீரிழிவினைச் சொல்லலாம். இந்நீரிழிவு நோயினை நாம் கட்டுப்பாட்டுக்குள் வைத் திருக்கவும் முற்றாக நீக்கவும் மூலிகைகளைப் பயன்படுத்த வேண்டும்.

| | |
|---|---|
| சிறுகுறிஞ்சா | நிலப்பனங்கிழங்கு |
| நாவல் | கறிவேப்பிலை |
| ஆவரசு | தொட்டாற்சுருங்கி |
| கொவ்வை | பாகல் |
| சீந்தில் | மாங்குருத்து |

**1) சிறுகுறிஞ்சா**

சிறுகுறிஞ்சாவானது பல கிளைகளை யுடைய ஓர் கொடி தான். இதனை கார்த்திகை, மாசி போன்ற காலப்பகுதியில் இன விருத்தி செய்யமுடியும். இது சண்டிலிப்பாய், மானிப் பாய் போன்ற பகுதிகளில் அதிகமாகப் பரம்பியுள்ள தாவரமாகும்.

**மருத்துவப் பயன்கள்**

1) நீரிழிவினை இயற்கையாகக் கட்டுப்

படுத்தச் சிறுகுறிஞ்சா இலைகள் தனி மருந்தாகவும், கூட்டுமருந்தாகவும் பயன் படுத்தப்படுகின்றன.

2)இலைகளிலுள்ள சத்தான Gymnamic acid ஆனது இணையத்திலுள்ள கலங் களை புத்துயிர்க்கச் செய்து இன்சுலின் சுரப் பினை மேம்படுத்துகின்றது.(Reduces blood sugar actinging indietry through the stimulation of Insulin sentation by the pancrease) அத்துடன் நாக்கின் இனிப்புச்சுவை அரும்புகளைத் தற்காலிக மாக செயலிழக்கச் செய்து அதற்கான அதாவது இனிப்புச் சுவையுள்ள உணவு களை எடுப்பதற்கான ஆர்வத் தினைத் தடுக்கின்றது.

3)நீரிழிவு நோயாளர்களுக்கு அடிக்கடி சிறுநீர் கழிவதால் மலக்கட்டு ஏற்பட வாய்ப்புண்டு. இவ்விலையிலுள்ள Anthroaufnone எனும் பதார்த்தம் மலமிழக்கியாகவும் செயற்படும். மலக்கட்டினைத் தீர்க்கும் தன்மையும் இதற்கு உண்டு.

4)இவ்விலைகளைச் சேகரித்து நிழலில் உலர்த்திப் பொடி செய்து அரித்துக் குப்பியில் அடைத்து வைத்துத் தினமும் காலை - மாலை 1-2கி வெந்நீருடன் சாப்பிட்டுவர இரத்தத்தில் சீனியின் அளவைக்கட்டுப் படுத்தும். இதனால் இதற்கு "சர்க்கரை கொல்லி" என்ற பெயரும் உண்டு.

**2)நாவல்** B.N: Evgenia Jambolana

இது பெரும்பாலும் சாலை ஓரங்களில் வளரும் மரமாகும். வெப்பமண்டலப் பகுதியில் காணப்படும். சண்டிலிப்பாய், மானிப்பாய், பண்டத்தரிப்பு போன்ற பிரதேசங்களில் அதிகமாக உள்ளது. இதனது விதைகளைப் பொடி செய்து - 2கிராம் தினமும் காலை - மாலை அருந்தி வர நீரிழிவு குறையும். வீட்டில் தயாரிக்கும் கோப்பியுடன் இந்தப் பொடியைக் கலந்து தேநீர் தயாரித்துக் குடித்து வரச் சிறந்த பலனைத் தரும்.

**3)ஆவரசு** B.N: Cassia avriculata

இது பெருஞ்செடி வகையைச் சேர்ந்தது. இதன் பூக்கள் மஞ்சள் நிறமுடையவை. இது எமது பிரதேசத்தில் வேலியோரங் களில் நன்கு பரவியிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இதனது பூவினை எடுத்துப் பொடியாக்கி அதனைக் கோப்பி பொடியுடன் சேர்த்து தேநீர் தயாரித்து வர நீரிழிவு குறையும். 10கி பொடிக்கு 200 மிலீ வெந்நீர்

**4)நிலப்பனங்கிழங்கு** B.N: Curculigo Orchoides

இது ஒரு பருவலைச் செடியாகும். கனமான நார்த்தன்மையுடைய வேரையே கிழங்கு என்பார்கள். இக்கிழங்கினைச் சுத்தம் செய்து நன்றாகக் காயவைத்து இடித்துத் தூளாக்க வேண் டும். பின்னர் இதில் 8கி ஐ ஆடை நீக்கிய பாலில் கலந்து குடிக்கு நீரிழிவு தீரும். அத்துடன் பாதவிறைப்பு, மதமதப்புத் தணியும். நரம்புப் பலத்தைப் போக்கி உடல் பலம் பெறும்.

**5)சீந்தில்கொடி** B.N: linospora cordifolia

இது ஒரு பருத்த கொடியாகும். இது மானிப்பாய், சண்டிலிப்பாய், கட்டுடை முதலிய பிரதேசங்களில் அதிகம் காணப் படுகின்றது. முற்றிய சீந்தில்கொடியின்

தண்டிலிருந்து பெறப்படும் மா நீரிழிவினைப் போக்கும் தன்மை கொண்டது.

**சீந்தில் மா பெறும் முறை**

நன்குமுற்றிய சீந்தில் கொடியைச் சிறுதுண்டுகளாக நறுக்கி பொடித்துக் குளிர்நீர் விட்டு மறுநாள் கடைந்து திப்பியைக் கசக்கிப் பிழிந்து எடுத்து நீர் விட்டு வெயிலில் வைக்க நீர் தெளியும். பின்னர்நீரை நீக்கி வேறு நீர் விட்டுக் கலக்கி மேற்கண்டபடியே நீரை நீக்கிச் சட்டியிலிட்டு மறுபடியும் நீரை நீக்கி வறுத்து எடுத்தபின் அடியில் படிந்துள்ள மாவே சீந்தில் மா எனப்படும். இதனை நீரிழிவு நோயாளர்கள் உணவு தயாரிக்கப் பயன்படுத்தலாம்.

6) **கறிவேப்பிலை** B.N: Murraya koenlgi
இதனை அனைவரும் நன்கறிவார்கள். இது பாவனையற்ற காணிகள் வேலியோரங்களில் வளரும். இதனை நிழலில் உலர்த்தி பொடியாக்கித் தினமும் -2கி காலை-மாலை உண்ணலாம் அல்லது கறிசமைக்கும் போது சேர்த்து உண்ணலாம். இதனைச் சம்பல் செய்தும் சாப்பிடலாம். இதன் மூலம் நீரிழிவைக் குறைக்க முடியும்.

7) **தொட்டாற்சுருங்கி** B.N: Mimosa pudica
இது எல்லா இடங்களிலும் பரவி வளரும் ஒரு படரியாகும். இதனுடைய வேரையும், இலைகளையும் சம அளவாக எடுத்துக் குடிநீர் செய்து 30-60மிலீ காலை-மாலை எடுக்க நீரிழிவு கட்டுப்படும். வேரினைக் கழுவி உலர்த்திப் பொடியாக்கி 4-8கி காலை-மாலை உண்ண நீரிழிவு கட்டுப்பாட்டில் வரும்.

8) **பாகல்** B.N:Momordica charatia
இது யாவரும் அறிந்த ஒன்றாகும். பொதுவாக பயிரிடப்படும் ஒரு மூலிகை இனம். வெந்தயக் குடிநீருடன் பாகற்காய்ச் சாறைக் கலந்து காலை உணவுக்கு முன் குடித்துவர நீரிழிவுக்கு நல்ல பலனைத் தரும்.

9) **கொவ்வை** B.N: Coccinea grandis
இது சண்டிலிப்பாய், சில்லாலை, தொட்டிலடி, மானிப்பாய் முதலிய பிரதேசங்களில் வேலிகளில் படரும் ஒரு கொடியாகும். இதன் இலைகளைக் கழுவிப் பச்சையாகவோ அல்லது சம்பலாகவோ உண்டுவர நீரிழிவு நோய் குணமாகும். கொவ்வைக் கிழங்கின் சாற்றை 8-10 மி.லீ வீதம் 3 வேளை பருகிவர நீரிழிவு கட்டுப்படும்.

10) **பப்பாசி** B.N:Corica papaya
பப்பாசிப் பிஞ்சை தோலுடன் கழுவிய பின்பு சீவி அதிலிருந்து வரும் பாலையும், பப்பாசித் துண்டுகளையும் 3ஆம் பாலில் மிளகாய், வெங்காயம் இட்டுக் கறி சமைத்து உண்ணலாம்.

11) **கடல்ராஞ்சி** B.N:Salacia reliculata
கடல் ராஞ்சிப்பட்டையை நன்றாகச் சிதைத்து அதில் 40கி எடுத்து 4 பங்கு நீரில் ஊறவிட்டு 30-40 மிலீ வீதம் காலை-மாலை எடுக்கலாம்.

12) **நன்னாரி** B.N: Hemidesmus indicus
நன்னாரி வேரை நன்கு கழுவி வெந்நீரில் ஊறவிட்டு காலை-மாலை 30மி.லீ அருந்திவர நீரிழிவு கட்டுப்படும்.

13) **விளா** B.N: Feronia elephantum
விளாம்பிஞ்சினை நீரில் கரைத்து வடித்து காய்ச்சித் தூய்மைப்படுத்தி உலர்த்தி பொடித்து 2-4கி வெந்நீரில் அருந்த நீரிழிவு கட்டுப்படும்.

**14) ஆல்** B.N: Ficus benghalensis

ஆலம்பட்டையை நிழலில் உலர்த்தி பொடித்து குடிநீர் அல்லது பொடியான 30மி.லீ அல்லது 1கி அளவு உள்ளெடுக்க நீரிழிவு கட்டுப்படும்.

**15) நெல்லி** B.N: Phyllanthus emblica

நெல்லி வற்றலை (உலர்ந்த பெருநெல்லிக் கனி விதை நீங்கியது) இடித்து அரித்து 1-2கிராம் அளவு வெந்நீரில் அருந்தவும்.

**16) மா** B.N: Mangifera indica

மாந்துளிர்களைச் சேகரித்து நிழலில் உலர்த்தி இடித்து 1கி அளவு ஆடை நீக்கிய பாலுடன் அருந்த நீரிழிவு கட்டுப்படும்.

**சுவாச ரோகத்தில் பயன்படும் மூலிகைகள்**

சளித்தொல்லை, ஜலதோஷம், இருமல், ஆஸ்துமா போன்ற சுவாசாசயரோகங்க ளுக்குப் யன்படுத்தப்படும் மூலிகைகளில் தூதுவளை, கண்டங் கத்தரி, ஊமத்தை, முடி தும்பை, இஞ்சி, மொசுமொசுக்கை, கைகிரி, ஆடாதோடை போன்றவை முதலிடத்தைப் பெறுகின்றன.

**1) தூதுவளை** B.N: Solanum trilobortum


முட்களை உடைய ஓர் செடியாகும். இது வேலியோரங்களில் படர்ந்திருக்கும் இதனது இலைகளைச் சம்பல் செய்து உண்ணலாம்.இலைகளை நெய்யில் வதக்கி வெங்காயம் சேர்த்துத் தாழித்து உண்ண ஆஸ்மா குணமாகும்.இதன் இலைகளில் குடிநீர் அருந்த இருமல், தொண்டைகம்மல் போன்றவற்றைத் தணிக்கும். வெண்ணெய்யுள் தூதுவளை இலைக ளைப் போட்டுக் காய்ச்சும் போது நெய்யாகும். அதனை உண்டு வரக் காசநோய் குணமாகும். இதன் பழங்களை உலர்த்தித் தூள் செய்து அதனை நெருப்பில் இட்டு வரும் புகையை நுகரத் தலைப்பாரம் தணியும்.தூதுவளை, வெற்றிலை, பாக்கு, சேர்த்து மென்றுவர முத்தோஷமும் நீங்கும்.

**2) மொசுமொசுக்கை** B.N: Metothria maderaspatana

இதுவும் வேலிகளில் படரும் கொடி. இதனது இலைகளைச் சம்பல் செய்து தினமும் சாப்பிட்டு வர சளித் தொல்லை தீரும்.

**3) இஞ்சி** B.N: Zingiber officinale

இஞ்சிக் கிழங்கினை யாவரும் அறிந்ததே. இது ஓர் செடியாகும். கிழங்கினை எடுத்து நன்கு தோல் சீவி சாறு எடுத்து 10மி.லீற் றரும், வெங்காயச்சாறு 10மி.லீற்றரும் கலந்து தினமும் காலை வெறும் வயிற்றில் 10 நாட்கள் அருந்த ஆஸ்மா, இருமல் குணமாகும்.



**4) முடிதும்பை** B.N: Leucas zeylanica

இது ஓர் செடி வகையாகும். பாதையோரங் களில் வளரும் இதனை வேருடன் பிடுங்கி அரிந்து 40கி அளவு ஓர் மண்சட்டியில் போட்டு 160மிலீ நீர் விட்டு வற்றக் காய்ச்சி ஒரு வேளை உண்டு வர தலைவலி தீரும். பூக்களைக் கழுவி நிழலில் உலர்த்தி

நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சித் தைலம் தயாரித்து முழுகி வரத் தலைநோய், தலைவலி தீரும்.

**5) எலுமிச்சை** B.N: Citrus aurantipolia

இதுவும் யாவரும் அறிந்ததே. இதனது பழங்களை எடுத்துச் சாறு பிழிந்து அதனுடன் மஞ்சள் பொடியும் சேர்த்து குழைத்து தலையில் பற்றுப் போடத் தலை வலி, பீனிசம் தீரும்.

**6) கண்டங்கத்தரி** B.N: Solanum xanthocarpum

ஓராண்டு வளரக் கூடிய செடியாகும். இது எமது பிரதேசத்தில் நன்கு படர்ந்து வளரக் கூடியது. இதனது முழுச் செடியையும் நிழலில் உலர்த்தி இடித்து 1-2கி தேனுடன் காலை - மாலை 7 நாட்கள் உட்கொள்ள இருமல் கசம் தீரும். வேரை குடிநீரிட்டு 30-60மிலீ அருந்த நீர்க்கோவை, இருமல் தீரும்.

**7) ஊமத்தை** B.N: Datura stramonium

இது குறுஞ்செடியாகும். தெருவோரங்களில் காணப்படும். இதன் விதைகள் நச்சுத் தன்மையானவை. இதன், இலை, பூ 200கிராம் எடுத்து பாத்திரத்தில் 125மிலீ பால்விட்டு வாயை துணிகட்டி மேல் ஒரு சட்டியால் மூடி அடுப்பில் வேகவைத்து எடுக்க வேண்டும். பின்பு காய வைத்து ஆஸ்மா நோயாளிகள் உண்ணலாம். நிழலில் உலர்த்திய இலைகளை அகட்டி அதனுள் இப்பொடியை போட்டு சுருட்டுப் போல் புகையை இழுக்க மூச்சுக் கஷ்டம் நீங்கி ஆஸ்மா குணமாகும்.

**8) துளசி** B.N: Ocimum sanctum

இது ஒரு செடி வகையாகும். இதில் கருந்துளசியின் இலைகளை வேகவைத்து பெறும் சாற்றினை 2-5 வயதுவரை உள்ள குழந்தைகட்குக் கொடுக்க இருமல் குணமாகும்.

**அழகு சாதன மூலிகைகள்**

அழகு சாதனத் துறையில் பயன்படும் மூலிகை வகைகளான மருதாணி, திருநீற்றுப் பச்சை, வேப்பிலை,சரக்கொன்றை போன்ற தாவர மூலிகைகளும் இங்கு பரம்பி உள்ளது. அழகுக்கலை எல்லா நாடுகளிலும் புதுப்பொலி வுடன் வளர்ச்சி கண்டு வருகின்றது. அந்த வகையில் எமது பிரதேசத்தில் உள்ள மூலிகை வளங்களைப் பாவித்து இயற்கை யாக நாம் அழகினைப் பெற்றுக் கொள்வது சிறந்த பலனைத் தரும்.

1) பொடுகு நீங்கிட

பொடுகுதலை 100கி, வெந்தயம் 50கி, செவ்வரத்தம் பூ-100கி, சிகைக்காய் 100கி எடுத்து பொடித்துப் பயன்படுத்தலாம்.

2) பேன் ஒழிய

துளசி இலைகளையும், மருதாணிப் பூவையும் அடிக்கடி வைத்து முழுகிக் கொள்ளப் பேன் விலகும். அன்னமுன்னா விதைகளை உலர்த்திச் சிகைக்காய் கலந்து பொடித்து முழுகி வரப் பேன் ஒழியும்.

3) செம்படை மறைய

நிலவாரை இலையையும், மருதாணி இலையையும் கைபிடி எடுத்துப் பூசி 1மணித்தியாலத்தின் பின் முழுகச் செம் படை மறையும்.

4) இளநரை நீங்க

கரிசாலை 100கி, கொட்டைகரந்தை 100கி எடுத்து உலர்த்தி தூளாக்கி காலை-மாலை தேனில் குழைத்து 48 நாட்கள் உண்டு வர முடி கருமையாகும். பொன்னாங்காணிச் சாறு, மருதாணிச்சாறு சேர்த்துப் பூச நரை ஒழியும்.

5) முடி செழித்து வளர

வெந்தயம், கீழ்க்காய் நெல்லி, கரிசாலை சம பங்கு எடுத்து எண்ணெய் 6 பங்கு விட்டுஎண்ணெய் காய்ச்சி வைக்கலாம்.

6) முகப்பருக்கள் மறைய

திருநீற்றுப்பச்சை இலைகளை மை போலக் கரைத்து பருக்கள் மீது பற்றுப் போட வேண்டும். புதினா, செவ்வரத்தம் இலை, மல்லிகை இலை, தயிர் சேர்த்து முகப்பரு மீது பூசலாம்.

7) முகம் பளிச் என்று பளபளக்க

வெற்றிலை, புதினா சாறினைத் தயிருடன் கலந்து பூசலாம். பப்பாளிப்பழத்தை மசித்துப் பூசி பின்பு 1 நிமிடங்கள் கழித்து கழுவல். வேப்பிலை, கடலைமா, மஞ்சள் சேர்த்துப் பூசிக் குளிக்கலாம்.

8) மூலிகையிலிருந்து தயாரிக்கப்படும் கண் மை

இது குளிர்ந்தநிலையையும், அழகையும், பாதுகாப்பையும் தரும். அத்துடன் விற்றமின் A ஐயும் கொண்டுள்ளது.

செய்முறை

வெள்ளைக் கரிசாலைச் சாற்றில் மெல்லிய பருத்தியில் நெய்த வெள்ளைத் துணியை நனைத்து உலர்த்தித் திரியாக உருட்டி நல்லெண்ணெய் விளக்கில் எரிக்கக் கருகும். அதனைச் சேமித்துத் தூய விளக்கெண்ணெய் விட்டு மை போல் குழைத்து அரைத்து வைத்துக் கண் மை தீட்டலாம்.

**தோல் நோயில் பயன்படும் மூலிகைகள்**

தற்காலத்தில் மக்களிடையே பரவலாகக் காணப்படும் பல்வேறு வகையான தோல் நோய்களை நீக்கக்கூடியதுமான அரிய மூலிகை வகைகள் எமது பிரதேசத்தில் இருப்பது எமக்குச் சிறந்த பலனைத் தரும். தோல் நோய்கட்கு வண்டுகொல்லி, திரு நீற்றுப்பச்சை, குப்பிளாய், பூவரசு, மருதாணி போன்ற மூலிகைகள் பயன்படுகின்றன.

1) **வண்டுகொல்லி** B.N: Cassia alata

இது ஒரு செடி. இது வயல்களிலும், வெளிக் காணிகளிலும் மஞ்சள் நிறமாகப் பூத்துக் காட்சி தரும். இதன் இலைகளே தோல் நோயில் பயன்படுத்தப்படுகிறன. வட்டக் கடி, தேமல் போன்ற நிலைமைகளில் இதனது இலையை நன்கு பசைபோல் அரைத்துப் பற்று போடப் படும்.

**2) பூவரசு**

இது யாவரும் அறிந்ததே. இதன் பட்டையிலிருந்து பெறப்படும் கஷாயம் 1 குடிநீர் மூலம் புண்களைக் கழுவலாம். சொறி, சிரங்கு போன்றனவும் கழுவிச் சுத்தியாக்கப் படும். பூவரசுக் காயின் பாலைப் படர் தாமரைக்குப் பூசலாம். பழுத்த இலைகளைத் தலையில் போட்டுக் கருக்கித் தேங்காய் எண்ணெய் விட்டுக் களிம்பாக்கிச் சிரங்கிற்குப் பூசலாம்.

**3) மருதோன்றி**

இதன் இலைகளை நன்கரைத்து நகங்க ளில் ஏற்படும் கிருமித் தாக்கம், நிறமாற்றம் போன்ற தோல்நோய்கட்குப் பூசலாம். அரைக்கும் போது எலுமிச்சம்பழச் சாறு விடலாம்.

**4) பொன்னாங்கண்ணி**

பொன்னாங்கண்ணிக் கீரையை வாரத்தில் 3 நாட்கள் தொடர்ந்து 6 மாதம் சாப்பிட்டு வர தோல் நோய்கள் வராமல் தடுக்கும். பொன்னாங்கண்ணியில் உயிர்ச்சத்து A அதிகமாக உண்டு.

5) அத்திக்காயைத் துவரம்பருப்புடன் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டு வந்தால் உடல் அரிப்பு நீங்கும்.

6) ஆடுதீண்டாப்பாலைச் சாற்றுடன் அதேயளவு நல்லெண்ணெய் கூட்டி எரித்துப் பக்கவாதத்தில் எடுத்துக் கரும்படை, கரப்பானுக்குப் பூசலாம்.

7) மஞ்சள் சுட்ட சாம்பலைத் தேங்காய் எண்ணெயில் சிறிது நேரம் சூடாக்கிப் பூசி வந்தால் தோல் நோய் குணமாகும்.

8) அறுகம்புல் வேரைக் காய வைத்துப் பொடியாக்கி நல்லெண்ணெய் கலந்து சூடாக்கி உடலில் தேய்த்துக் குளிக்கத் தோல் நோய் குணமாகும்.

9) கருஞ்சீரகத்தைத் தயிர் சேர்த்து அரைத்து உடலில் அரிப்புள்ள இடங்களுக்குப் பூசிவந்தால் படை, சொறி, சிரங்கு மறையும்.

10) எலுமிச்சம்பழத் தோலின் உட்புறம் வெளியேவரும்படி செய்து முழங்கை, பின்கழுத்து போன்ற இடங்களில் நன்றாகத் தேய்த்து வந்தால் கறுப்பு நிறம் மறையும்.

11) **ஆரோக்கிய வாழ்வில் கீரையின் முக்கியத்துவம்**

பொன்னை எறிந்தாலும் பொடிகீரையை எறியாதே என்பது ஆன்றோர் வாக்கு. கீரைகள் வெப்ப காலத்திற்கு ஏற்றவாறு குளிர்மையை உடலிற்குத் தருவனவாகவும், சிறுநீரை நன்கு வெளியேற்றக் கூடியனவாகவும் உள்ளன. இதை உணவில் சேர்ப்ப தால் மலச்சிக்கலை நிவிர்த்தி செய்து ஆரோக்கியமான வாழ்வைப் பேண முடியும். மேலும் கீரைகளில் காணப் படும் உயிர்ச்சத்துக்கள், கனிப் பொருட்கள், தாதுப் பொருட்கள் உடல் வளர்ச்சிக்கும் உள்ளுறுப்புகளின் வளர்ச்சிக்கும் உதவுகின்றன. தற்போதைய ஆய்வுகளின் படி நார்ப் பொருட்களில் antnoxidant மிகவும் அதிகமாக உள்ளதால் இவை புற்றுநோய் மற்றும் ஏனைய நோய்கள் ஏற்படாது பாதுகாப்பு அளிக்கின்றன. இவ்வகையான நார்ப் பொருட்கள் நிறைந்த கீரையைத் தினமும் தவறாது உணவில் கட்டாயம் சேர்த்து கொள்வது நமது நல் ஆரோக்கியத்திற்கு அவசியமானதாகும்.

நமக்குத் தேவையான எல்லாக் கீரை வகைகளும் நமது பிரதேசத்திலேயே இயற்கையாகவே கிடைக்கின்றன. குப்பை கீரை, கறிவேப்பிலை, தவசி முருங்கை, வல்லாரை, நெய்சட்டிக் கீரை முதலானவை கீரை வகைகளுட் சிலவாகும்.

**1) குப்பைக் கீரை**

முளைக்கீரை ஆரைக்கீரையுடன் சேர்த்துக் கலப்பு கீரையாக சாப்பிட்டால் மலம் இளகி வெளியேறுவதுடன் சிறுநீரும் நன்கு வெளியேறும்.

**2) கறிவேப்பிலை**

நடுத்தரக் கொழுந்திலைகளைத் தேங்காய், தயிர், தக்காளி சேர்த்து சட்னி செய்து உண்ண அஜீரணம், மந்தரோகம், வாந்தி தீரும்.

**3) தவசி முருங்கை**

வாரத்திற்கு 2முறை சண்டி இலையுடன் சேர்த்து நெய்யில் வதக்கி எடுத்து உண்ணலாம்.

**4) மூக்கரட்டை**

பலகீரைகளுடன் சேர்த்து உண்ணலாம் அல்லது பருப்புடன் சேர்த்துக் கடைந்து உண்ணலாம். வாதநோய்களுக்குச் சிறந்த கீரையாகும். குடல் நோய்களுக்கும் சிறந்தது.

**5) பிரண்டை**

நாரில்லாத இளம் நுனிக்கொடியில் ஒரு சிறு துண்டை எடுத்துக் கொண்டு அதனுடன் வல்லாரை, கொத்தமல்லி, புதினா, கருவேப்பிலை சேர்த்துச் சட்னி செய்து உண்ணக் குடல் புண், மூலரோகம், பசியின்மை ஆகியன விலகிக் குடல் ஆரோக்கியமாகும்.

**6) புதினா**

இஞ்சியும் புதினாவும் சிறிது உப்புடன் அரைத்துத் தினசரி உணவுடன் சேர்த்து உண்டு வந்தால் வாய்நாற்றம், அஜீரணம், வயிற்றுப்புண் தீரும். சுடுசோற்றில் போட்டு நல்லெண்ணய் விட்டுச் சாப்பிட குடல்புண் தீரும் அத்துடன் பித்தம், அஸ்மா, ஈரல் ரோகம் தீரும்.

**7) கொத்தமல்லிக் கீரை**

Vitamin அதிகமுண்டு. கொத்தமல்லித் தழைகள், இஞ்சி இரண்டையும் சம அளவு அரைத்துக் கொண்டு அதில் தேவையான அளவு உப்பு எலுமிச்சம் பழச்சாறு சேர்த்துச் சோற்றோடு உண்ண வயிற்று உப்பிசம், அஜீரணம் தீரும்.

**8) வெந்தயக் கீரை**

நெய்யில் வதக்கி உண்டு வர வாய்ப்புண், தொண்டைப்புண் ஆறும். பருப்போடு வேகவைத்துத் தினசரி உண்டு வரக் கருப்பைக் கோளாறு, மாதவிடாய் தாமதம் தீரும். பச்சையாக மென்று உண்பதால் வயிற்று எரிச்சல், பொருமல் தீரும்.

**9) அகத்தி**

உடலில் உள்ள வெப்பத்தை அகற்றும். இதன் இலையில் மிகுந்த (கல்சியம், பொஸ்பரஸ்) Ca, P இருப்பதால் என்பு வளர்ச்சிக்கு நல்லது. இலைகளில் விற்றமின் A அதிகளவு உண்டு. மாலைக் கண் நோயைக் குணமாக்கும். அகத்திக் கீரைச்சாற்றுடன் ஒரு தேக்கரண்டி நல்லெண்ணெய் கலந்து வாய் கொப்பளித்தால் வாய்ப்புண் நீங்கும்.

**10) வல்லாரை**

வல்லமை மிக்க கீரையாகும். மூளை வளர்ச்சி ஞாபகசக்திக்குச் சிறந்த கீரையாகும். தூதுவளை, வல்லாரை உலர்த்திப் பொடித்து அரித்து வைத்துக் கொண்டு சோற்றில் கலந்து நெய்சேர்த்துப் பிசைந் துண்ண சளி நீங்கும்.

**11) நெய்சட்டிக் கீரை**

உடல் வெப்பத்தைத் தணித்துக் குளிர்ச்சியை உண்டாக்கும்.

**1) கற்றாளைப் பூக்கறி**

தேவையானவை
பிள்ளைக் கற்றாளை
வெந்தயம்
வெங்காயம்
உப்பு
கப்பித் தேங்காய்ப் பால்
மிளகாய் தூள்
நல்லெண்ணெய்

கற்றாளைப் பூவைச் சிறுசிறு துண்டாக நறுக்கி வெந்தயத்துடன் ஊற வைக்கவும். பின்னர் வாணலியை வைத்துச் சிறிதளவு நல்லெண்ணெய் விட்டு அதனுள் சிறிதாக நறுக்கப் பட்ட வெங்காயம், பிள்ளைக் கற்றாளைப் பூ போட்டு தாளித்து, உப்பு, மிளகாய்த் தூள் சேர்த்து தேங்காய்ப் பால் விட்டுக் கறியாக இறக்கப்படும்.

இதனால் குடல் சுத்தமாகும். இரத்தம் சுத்தியாகும். மலம் இளகி வெளியேறும். இளவாலை மக்கள் இதைப் பயன்படுத்து கின்றனர்.

**2) கற்றாளைக் கறி**

தேவையானவை

கற்றாளை

வெங்காயம்

உப்பு

தேங்காய்ப்பால்

மிளகாய்த்தூள்

கற்றாளை இலைகளை எடுத்துப் பக்க வாட்டில் முட்களை நீக்கித் தோல் சீவிச் சிறு துண்டாக வெட்டி வெங்காயம், உப்பு, மிளகாய்த்தூள் இட்டுக் கறியாக உண்ணப் படும். இதனால் இரத்தம் சுத்தியடையும். மலம் இளகி வெளியேறும். உடல் பளபளப்புப் பெறும். இளவாலை மக்கள் இதைப் பயன்படுத்துகின் றனர்.

**பதநீர்**

கோடைகாலத்திற்கு ஏற்றது. இக்காலங் களில் ஏற்படும் சின்னமுத்து, பொக்கு ளிப்பான் போன்ற நிலைகளில் வாயில் ஏற்படும் புண்களுக்கு அருமருந்தாக அமையும். இதில் உயிர்ச்சத்து B ,இரும்புச் சத்து அதிகமாக உண்டு.

**7) தூதுவளை சூப்**

தேவையானவை

| | |
|---|---|
| வெண்ணெய் | ஓமம் |
| தூதுவளை | துவரம்பருப்பு |
| வெங்காயம் | உள்ளி |
| தக்காளி | மல்லி |
| மிளகு | உப்பு |

மல்லியை அரைத்துத் தேங்காய்ப்பால், தூதுவளை என்பவற்றைச் சேர்த்து வேக விடவும். உப்பு, வெங்காயம், துவரம் பருப்பு என்பவற்றை சேர்த்து வெண்ணெயுடன் ஓமம், சீரகம் சேர்த்து உலர்த்திக் கிளறி மிளகு சேர்த்து உண்ணலாம்.

**8) மொசுமொசுக்கை அடை**

தேவையானவை

மொசுமொசுக்கை இலை

சிவத்தப் பச்சையரிசி

மிளகு

வெங்காயம்

உப்பு

சுடுநீர்

வெண்ணெய்

மொசுமொசுக்கை இலைகளைக் கழுவி சுத்தம் செய்து அரிசியுடன் சேர்த்து இடித்து பின்னர் அதனுள் சுடுநீர், மிளகு, சிறிதாக்கப் பட்ட வெங்காயம் என்பன போட்டுக் குழைத்து அடைகளாகக் கட்டி வெண்ணெயில் பொரித்து எடுக்கப்படும். இதனால் சளி பிரச்சினைகள் தீருவதுடன் நன்கு கனிய சக்தியும் கிடைக்கும். இப்பிரதேச மக்களின் பாவனையிலே இது உள்ளது.

**9) கருப்பணிக் கஞ்சி**

தேவையானவை

சிவப்புப் பச்சையரிசி 1கிலோ

பயறு 2கிலோ

கருப்பணி 3 போத்தல்

சிவப்புப் பச்சையரிசியை வேக வைத்து பயறு சேர்த்து வெந்து வரும் போது கருப்பணியையும் சேர்த்து வேக வைத்து எடுப்பதாகும். கஞ்சியைக் கலத்தில் விடும் போது தேங்காய்ப்பால் சீனி சேர்த்து வடிக்கவும்.

இது உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் எளிதில் அகத்துறிஞ்சப்படக் கூடியதுமான உணவு வகையாகும். இதை சண்டிலிப்பாய், சில்லாலை, பிரான்பற்று, மாதகல் பிரதேச மக்கள் அதிகம் பாவித்து வருகின்றனர்.

**10) காய்ப்பிட்டு**

தேவையானவை

சிவப்புப் பச்சையரிசி

வெங்காயம்

உப்பு

பச்சை மிளகாய்

பயற்றம் பிஞ்சு

கத்தரிப் பிஞ்சு

தேங்காய்ப்பூ

சிவப்புப் பச்சையரிசியை நனைத்துக் காய வைத்து இடித்து மரவள்ளிப் பிட்டுப் போல் குழைத்துத் தேவையானளவு உப்புச் சேர்த்து அவற்றிற்கு வெங்காயம், பச்சைமிளகாய், பயற்றங்காய், கத்தரிப்பிஞ்சு, தேங்காய்ப்பூ சேர்த்து அவிக்க வேண்டும். பின்னர் பிட்டி னைக் கொட்டிக் கிளறி உண்ணலாம். சிவப்புப் பச்சையரிசியில் போலிக் அமிலமும், விற்றமி B யும் நன்கு காணப்படுவதால் இது சமவிகித உணவாகக் காணப்படும். இப் பிரதேச மக்கள் இதனை இன்றும் பாவித்து வருகின்றனர்.

**11) இலுப்பைப் பூ வடகம்**

தேவையானவை

இலுப்பைப் பூ

பனை வெல்லம்

செத்தல் மிளகாய்

இலுப்பைப் பூக்களைச் சேகரித்து அல்லி தட்டி வறுத்து இடித்துப் பனை வெல்லம் அல்லது சர்க்கரை சேர்த்துத் துவைத்து உண்பது மக்களின் வழக்கமாகும். சிலர் இனிப்பைக் கட்டுப்படுத்திக் காரிப்பினைச் சேர்க்கச் செத்தல் மிளகாய் சேர்ப்பதுண்டு. இலுப்பைப் பூவில் அக்குரோசு, பொசுபரசு, கல்சியம், இரும்புச் சத்து என்பன உண்டு. இதனைச் சண்டிலிப்பாய், சில்லாலை, பிரான் பற்றுப் பிரதேச மக்கள் பாவித்துப் பயன் படுத்தி வருகின்றனர்.

**12) எள்ளுப்பாகு**

தேவையானவை

எள்ளு 1 கிலோ

உழுத்தம் மா 1 சுண்டு

சீனி 500கிராம்

மிளகு

நற்சீரகம்,

உழுந்து

இவற்றை ஒன்றாகச் சேர்த்து இடித்துச் சீனிப்பாணியைச் சேர்த்து எடுக்க வேண்டும். குழந்தைகளுக்குச் சிறந்தது. குறிப்பாகப் பெண்களுக்குச் சிறந்ததாகும். உழுந்தானது கர்ப்பாசய உறுப்புகளை, இடுப்பு என்புகளை உறுதியாக்கும். இதனைப் பிரதானமாக பிரான்பற்று, பண்டத்தரிப்புப் பிரதேச மக்கள் பாவித்து வருகிறார்கள்.

இயற்கையான முறையில் நாம் நல்ல ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான வழி முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனினும் தற்கால மக்களில் பெரும்பாலா னோர் அவ் வழிவகைகளையெல்லாம் மறந்து தவறான பாதையில் சென்று கொண் டிருக்கிறார்கள். எனவே நமது மக்கள் இயற்கை யாக மூலிகைகளின் பயன்பாடுகள் பற்றி நிச்சயமாக அறிந்து கொள்ள வேண்டும். எம் பிரதேசத்தில் அதிகளவான மூலிகைகள் காணப்படுகின்றன. இருந்தபோதிலும் அவற் றின் முறையான பயன்பாடு தெரியாமையி னால் அதிக மக்கள் இவ்வளங்களைப் பயன்படுத்துவதில்லை. ஆனால் நகரப் புறங் களை விட கிராமப்புற மக்கள் இம் மூலிகை வளங்களைப் பயன்படுத்திக் கணிப்பளவில் அதிக பலன்களைப் பெறுகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையே.

# ஆரோக்கிய வாழ்வும் சித்த மருத்துவமும்

**வைத்திய அதிகாரி**
ஆயுள்வேத வைத்திய அதிகாரி,
பண்டத்தரிப்பு.

இலங்கையின் பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஒன்றான சித்த மருத்துவம் தற்போது மறுமலர்ச்சி அடைய வேண்டிய நிலையில் உள்ளது. மனிதனின் தோற்றத் துடனே நோய்களும் தோன்றி விட்டன. இவ்வாறு தோன்றிய நோய்களை எதிர்த்துப் போரிடக் கூடிய தொழிற்பாட்டுப் பிரிவும் மனித உடலில் உள்ளடக்கப்பட்டுத் தொழிற்படுகின் றது. இத் தொழிற்பாட்டின் சக்தியை மீறியதாக வலிமையுடன் நோய்க் காரணிகள் தாக்குகை யில் மனிதன் நோய்வாய்ப்பட்டு அவதிப் படுகின்றான்.

மனிதனுக்கு ஒரு சிறு ஆரோக்கியக் குறைபாடுகள் ஏற்படும் போது அவன் வீட்டில் உள்ள சமையலறைப் பொருட்களை அவற்றின் மருத்துவக் குணத்திற்கேற்ப மூலப் பொருட்களாக்கி மருந்து கண்டு சுகம் பெற்றான். இவ்வாறு உருவாக்கப்பட்ட மருந்துகளில் அறிமுகமானவை மனிதனின் உடலில் அவனது நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதன் மூலம் நோயை தீர்க்கும் தொழிற்பாட்டைச் செய்கிறன. இதன் காரண மாகவே நோய்க்குப் பயன்படுத்தும் மருந்தே நோயைக் கொண்டு வரும் நிலை அல்லது நோயாளியைப் பலவீனப்படுத்தும் நிலை தடுக்கப்படுகிறது.

சித்தர்களினால் தரப்பட்ட மருத்து வமே சித்த மருத்துவமாகும். உடலின் சம நிலையானது உயிர்த்தாதுக்களாகிய வாத, பித்த, கபத்தினில் கட்டுப்படுத்தப் படுகின்றது. இவை தன்னிலையில் இருந்து விருத்திய டையும் போது தோஷங்கள் என அழைக்கப் படுகின்றன. இவை அதிகரிக்கும் போது அவற் றுக்கான குறிகுணங்களை உடலில் வெளிப் படுத்தி நோயாகப் பரிணமிக்கின்றன. உயிர்த் தோற்றத்தின் வாழ்க்கைக் காலங்களை உயிர்த்தாதுக்களின் அடிப்படையில் பிரிக்க முடியும். மனிதனின் ஆரம்பகாலப் பகுதி யானது கப காலமாகவும் இடைப்பகுதி யானது பித்த காலமாகவும் இறுதிப்பகுதி யானது வாத காலமாகவும் வகுக்கப்பட்டது. எனவே மனித ஆக்கிரமிப்புக்குரிய காலங் களில் அத் தோஷங்கள் பிரகோபம் அடைவ தால் ஏற்படும் நோய்நிலைகள் மாறுவது அரிது எனவும் சித்த மருத்துவம் கூறுகின்றது.

இதனை அனைவருக்கும் விளங்கும் படி கூறின், மனித வாழ்வின் ஆரம்ப காலத்தில் அதாவது பிறப்பில் இருந்து 33 வயது வரை கப தோஷம் அதிகரிப்பதினால் கபம் சம்பந்தமான சுவாசாசய ரோகங்கள் அதிகரித்துக் காணப்படும். முறையே 34 வயது முதல் 66 வயது வரை பித்த சம்பந்தமான ரோகங்களான குடற்புண்கள் (Pepticulcer), இரத்தக் கொதிப்பு (Hyper tension), நீரிழிவு (Dm), தோல் நோய்கள் போன்றன இக்கால கட்டத்தில் ஏற்படுகின்றன. இதனைத் தொடர்ந்து 67 வயதிற்கு மேற்பட்ட காலகட்டத்தில் வாத சம்பந்தமான ரோகங்கள் அதாவது மூட்டுவாதங்கள் ( Arthiritis), மூட்டுக்களின் நோ, கை கால்களின் விறைப்பு (Neuritis), தசைப் பிடிப்புக்கள் (Muscular cramb) போன்றன ஏற்படுகின்றன. எனவே இதனைக் கருத்திற் கொண்டு இவற்றை வெல்லும் வகையில் 3000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சித்தர்கள் எமது உணவுப் பழக்கங்கள், வாழ்க்கை முறைமை (Life Pattern), யோகா பயிற்சிகள், மற்றும் காயகல்ப மூலிகைகள் பற்றிக் கூறியிருக்கின்றார்கள். இவர்கள் அருளிய மருத்துவ முறையினை நாமும் தெரிந்து கொண்டு நலமுற வாழ்வதுடன் எமது சந்ததியினரையும் சரியான முறையில் வழிநடத்த முடியும்.

தற்காலச் சந்ததியினர் நோய் ஏற்பட்டவுடன் அதனைத் தீர்க்கும் வழியினைத் தேடிச் செல்கினறார்களே தவிர நோய்க்கான காரணத்தை அறியவோ அக்காரணத்தை நீக்கவோ யாரும் நினைப்பதுமில்லை முன்வருவதுமில்லை இதற்கான காரணம் இன்றைய ஓய்வில்லாத வாழ்க்கை முறை உதாரணமாக உடலில் காயமொன்று ஏற்படுகின்றபோது அக்காயத்தினுள் காணப்படும் அழுகல்களை (Cell debris) (necrotic debris) அகற்றிய பின்னரே மருந்து கட்டுதல் வேண்டும். இல்லையெனில் அது நீக்கப்படும் வரையும் எம் மருத்துவம் செய்தாலும் பலன் கிடைப்பதில்லை.

இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்ட சித்த மருத்துவமானது மருந்துக் கோட்பாட்டைப் பின்வருமாறு கூறுகின்றது. "வேர்பாரு தழைபாரு மிஞ்சின கால் பஸ்ப செந்தூரம் பாரு" எனக் குறிப்பிட்டுள்ளது. இவற்றுக்கு எல்லாம் மேலாகச் சித்த மருத்துவத்தின் பிரதான கொள்கை "உணவே மருந்து மருந்தே உணவு" என்பதாகும். இன்றை சமூகத்தினரும் இளம் சந்ததியினரும் மருத்துவர்களிடம் Vitamin A, Vitamin E, Iron ஆகிய மருந்துப் பொருட்களை கேட்டு வாங்கிப் பயன்படுத்த நினைக்கின்றார்களே தவிர அவை யாவும் இயற்கையாக கிடைக்கும் பழவகைகளையோ அல்லது மூலிகைகளையோ பயன்படுத்தலாம் என நினைப்பதில்லை.இயற்கையுடன் இணைந்த இயற்கையான உணவு முறைகளை மீறிச் செயற்கை உணவுகளையும் செயற்கை உற்பத்திகளையும் உட்கொண்டு தம் உடல் நலத்துக்குத் தாமே கெடுதியைத் தேடிக் கொள்கின்றார்கள். செயற்கையான இவ் உணவு உற்பத்திப் பொருட்களை உண்பதால் தீய தீராத நோய்கள் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. உதாரணமாக உடற்பருமன் அதிகரித்தால் ஏற்படும் நோய்கள் சிறுநீரக நோய், கொலஸ்ரோல் பிரச்சினைகள் மற்றும் புற்றுநோய் போன்றன ஏற்படலாம்.சரியான உணவுப் பழக்க வழக்கங்களினால் உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக


வைத்திருக்க முடியும். உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்கும் நிலை தான் முழுமையான ஆரோக்கியம் எனப்படும். ஆனால் தற்காலத்தில் இயற்கையான மூலிகைகள், தாவரங்கள் என்பவற்றின் உற்பத்திமுறைகள் மிகவும் கவலையானதாகக் காணப்படுகின்றன. காரணம் செயற்கை உரப்பாவனை, செயற்கை உரப் பாவனையால் விவசாயநிலங்கள் பாதிக்கப்பட்டு இயற்கை வளங்கள் யாவும் அழிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

செயற்கையான உற்பத்திப் பொருட்களைப் பாவித்து விவசாயம் செய்நிலங்கள் பல இன்று மீள் விவசாயம் செய்ய முடியாத நிலைக்கு அவற்றின் அமிலத் தன்மை (ph) மாறியுள்ளது. சாதாரணமான நிலத்திலேயே செயற்கைப் பொருட்கள் இவ்வளவு மாற்றத்தை ஏற்படுத்துமாயின் மனித உடலில் இச் செயற்கை உற்பத்திப் பொருட்கள் ஏற்படுத்தக் கூடிய மாறுதல்கள், பாதிப்புக்கள் மிகவும் பாதகமானவையே உணவு முறைகளைத் தாண்டிய மருத்துவ முறையே சித்த மருத்துவ மருத்துவங்களும் பஸ்ப செந்தூரங்களுமாகும். ஆரம்ப நிலையில் மூலிகைப் பொருட்களைக் கொண்டு மட்டுமே மருத்துவம் செய்யப்படும். இவற்றுக்குத் தீராத நோய் நிலைகள் பஸ்ப, செந்தூரங்களினால் தீர்க்கப்படும்.

பரராசசேகர மன்னர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த நூல்களும் அகத்தியர் 2000 வைத்தியம் என்ற நூலும் ஆரம்ப காலங்களில் சித்த மருத்துவத்தில் அறுவை வைத்தியம் இருந்ததைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

ஒரு நோய்நிலையின்போது வழங்கப் படுகின்ற மூலிகைகள் அந் நோய்க்கான காரணத்தை நீக்குபவையாகவும் நோயைக் குணப்படுத்துபவையாகவும் காணப்பட வேண்டும். இதையே சித்த மருத்துவ முறை "நிதான பரிவர்த்தனம், தோஷ பிரக்திய நீக்க சிகிச்சை, வியாதி பிரக்திய நீக்க சிகிச்சை" என வகுக்கப்பட்டுச் செய்யப் படுகின்றது. அதாவது பூர்வகர்மம், பிரதான கர்மம், பக்ஷாத் கர்மம்

சித்தர்களினால் குறிப்பிடப்பட்டுள்ள மூலிகைகளின் செயற்பாட்டு முறைமைகளும், அவற்றின் பகுதிப் பயன்பாடுகளும் சரியான முறையில் செயற்பட்டு வருகின்றன. ஆனால் தற்கால போட்டியான சூழ்நிலையில் இம் மூலிகைகளின் செயற்படும் விதம் அவற்றில் அடங்கியுள்ள இரசாயன பொருட்களின் பகுப்பாய்வு என்பன முக்கியமாகக் காணப்படுகின்றன. இவற்றை நடைமுறைப் படுத்தவும், உறுதிப்படுத்துவதற்குமான நடைமுறைகளும் மருத்துவ வளர்ச்சிக்கான நடைமுறைகளையும் அது தொடர்பான அமைப்புக்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அவற்றுடன் ஒவ்வொரு பிரதேச சபை ஊடாகவும் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு சபையின் நடவடிக்கைகளும் சுதேச மருத்துவ வளர்ச்சிக்கு மேலும் அதிக பங்குகளை வழங்க வேண்டும். தொன்மை மிக்க எம் மருத்துவம் அதன் உண்மை கெடாது புதிய உருவம் பெற்று செழிப்படைய முயற்சி செய்வோமாக.



# சுதுமலை வாழ் சுதேச வைத்தியர்கள்

**வைத்திய கலாநிதி.பசுபதிப்பிள்ளை உரோமகேஸ்வரன்**
சுதுமலை.

யாழ்பாணத்திலுள்ள கிராமங்களில் நற்புகழ்வாய்ந்ததும் தொன்மையானதுமான ஒன்று தான் எங்கள் கிராமம். அதன் பெயர் சுதுமலை என்று ஏன் வழங்கப்பட்டது என்பது இன்றைய தலைமுறையினருக்கு விளங்குவது கஷ்டமானதும் புதிருமாகத்தான் இருக்கும். ஒரு சாராரின் கூற்றுப்படி சூதம்+மலை = சுதுமலை என்று வழங்கப் பட்டது. அதாவது சூதம் என்பது மாமரத்தைக் குறிப்பதாகும். மாமரங்கள் நிறைந்து அடர்த்தி யாய் உயர வளர்ந்து மலை போன்ற காட்சியை நாலாபக்கத்திலும் இருந்து வருவோர்க்கு அள்ளித் தருவதனால் அப் பெயரைப் பெற்றிருக்கக் கூடும். அன்று பெரிய ஆராய்ச்சி, சின்ன ஆராய்ச்சி செம்பாட்டான், கிளிச் சொண்டு, கொட்டைக் காய்ச்சி, பச்சைத் தின்னி, நீலம், அம்பலவி, முதலி போன்ற பல்வேறு மாமர இனங்கள் செழித்து ஓங்கி வளர்ந்திருந்தன.

இவ்வூரின் மத்தியில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயங்களின் பரிவாரக்கூட்டம் அமைந்துள்ளது. எல்லைகளில் வைரவ ஆலயங்கள் காவல் தெய்வங்களாக அமைந்து இக்கிராமத்தைக் காவல் காக்கின் றன. இச்சீரும் சிறப்பும் உள்ள கிராமத்தில் கமத் தொழிலில் ஈடுபாடு உடையோரே அதிக மாகக் காணப்பட்டனர். ஆசிரியர்கள், ஆலயக் குருமார், தமிழ்ப்பண்டிதர்கள், ஞானிகள், சோதிடஅறிஞர்கள், மாந்திரீக சித்தி படைத் தோர், சுதேச வைத்தியப் பண்டிதர்கள், தத்துவ அறிஞர்கள், அரசாங்க அதிகாரிகள், விஷகடி வைத்தியர்கள், சுதேச மிருக வைத்தி யர்கள், கட்டு வைத்தியர்கள், மனநோய் (உன்மத்தம்) வைத்தியர்கள், நயனரோக வைத்தியர்கள் ஆகியோர் சுதுமலைக் கிராமத் தின் மைந்தர்களாக மக்களுக்குரிய சேவை களையாற்றிப் பேரும் புகழுடனும் வாழ்ந்து வந்துள்ளனர்.

அவர்களில் சிறப்பாகச் சுதேச வைத் தியத் துறையைச் சித்தியுடனும், தெய்வ அனுக்கிரகத்துடனும் செய்தவர்கள் தான் வைத்தியர் நாகப்பர், ஆறுமுகம் பிள்ளை, நாகலிங்கம் பிள்ளையும் அவரின் செல்லப் புத்திரர்களான வைத்தியப்பூபதி பூரண பசுபதிப்பிள்ளை, வைத்தியச்சித்தன், சிற்சபே சன்தாசன், வைத்திய சிரோன்மணி

ஆறுமுகதாசன் போன்றவர்கள். இவர்கள் பதார்த்த குணவிளக்கம், நோய்களின் நிவாரணம், மூலிகைகளின் மர்மங்கள், நாடிப் பரீட்சை என்பவற்றில் உன்னத நிலையடைந்து, நல்ல சிகிச்சைகளை முறை யாக மக்களுக்காற்றிய பெரியவர்களு மாவர். வைத்தியர் நாகலிங்கம்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரி சுந்தராம்பாள் ஜோதிடக் கலையின் விற்பன்னராகவிருந்து பேரும் புகழுடனும் சேவையாற்றியுள்ளார்.

வைத்தியர் நாகப்பர் ஆறுமுகம் பிள்ளையின் மகன் சோதிடரும், மாந்திரீகரும், வைத்தியருமான சாத்திரி சின்னையாப் பிள்ளையின் புகழ் இலங்கை பூராகவும் அன்று பரவியிருந்தது. அவரிடம் தென்னி லங்கையைச் சேர்ந்த மக்கள் அநேகர் சாத்திரம் பார்ப்பதற்கு அதிகளவில் இவ்வூ ருக்கு வந்துள்ளனர் என்பது வரலாற்று உண்மையாகும். சுதுமலையில் சிந்மய பாரதி வித்தியாசாலையின் ஸ்தாபகர் இவ்விடத்தைச் சேர்ந்த வைத்தியர் நாகப்பர் ஆறுமுகம் பிள்ளை, சுப்பையாப்பிள்ளை, நவாலியில் பிரபல்ய ஆயுள்வேத வைத்திய ராகத் திகழ்ந்தார். அவரின் மகன் வைத்தியர் சுப்பையாப்பிள்ளை சோமசுந்தரம் நாடி பார்ப் பதில் விற்பன்னராகத் தகப்பனாரின் பின் ஆயுள் வேத வைத்தியராகச் சேவையாற்றி யுள்ளார்.

மேலும் எங்கள் கிராமத்தில் வைத்தி யர் பொன்னர் அவர்களின் மக்களா கிய வைத்தியர் முத்துக்குமாருவும், வைத்தி யர் அம்பலவாணருமே உன்மத்தம் நோய்க் கும், வாதரோகத்திற்கும் சிறந்த வைத்தியத் தைச் செய்து சுதுமலையின் பெயரை வளர்த்துள்ள னர்.

வைத்தியர் நாகலிங்கம் அண்ணாமலையும், யாழ்ப்பாணம் சித்த ஆயுள்வேத கல்லூரியில் 1938ல் படித்துப் பட்டம் பெற்ற பின் 20 ஆண்டுகளாக வைத்திய சேவை யைச் சுதுமலையில் தர்ம சிந்தனையுடன் இலவசமாக மக்களுக்காற்றி நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பாராட்டையும் பெற்று 1958ம் ஆண்டளவில் 50 வயதிலேயே இறைபத மடைந்தார். அந்நாளில் சுதுமலை வைத்தி யர்களுக்காகவே தாவடி, சுதுமலை, மானிப் பாய் வீதிகளுக்கூடாகப் பஸ் சேவை ஆரம்பிக் கப்பட்டது. வைத்தியர்களின் சேவை முக்கியத் துவம் கருதி 771ம் இலக்கப் பேரூந்து சேவை யாழ். மத்திய பஸ் நிலையத்தினரால் அன்று ஆரம்பிக்கப்பட்டது. அன்று புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பிரதம குருவாகவும், தெய்வ சித்தி பெற்ற சுதேச வைத்தியராகவும் திகழ்ந்த சிவாச்சாரியாரர் பொன்னுச்சாமிக் குருக்கள் அவர்கள் தெய்வ அனுக்கிரகத்தால் மாறாத நோய்களுக்கும் சுதுமலை அம்பாள் கிருபையால் சுகம் கொடுத்து அவர்களின் உதவியுடன் தேவையான கல்லையும் மண்ணையும் பறிப்பித்து ஆலயத்தின் பிரமாண்டமான இன்றும் காட்சி கொடுக்கின்ற தூண்களையும், மண்டபத்தையும் நிறுவியமை உண்மை யில் ஊருக்குக் கிடைத்த அம்பாளின் கிருபைக் கடாட்சமாகும். அவரைத் தொடர்ந்து அவரின் மகன் சிவஸ்ரீ தியாகராஜ ஐயர் உபாத்தியாய ராகவும், வைத்தியத் தொண்டையும் சிறப்பு றச் செய்து வந்துள்ளார் தெல்லிப் பழையில் சுதேச வைத்தியத்தைத் திறமையாக ஆற்றி வந்த வைத்தியர் மாணிக்கம் நடராசா இடப் பெயர்ச்சி காரணமாகச் சுதுமலையில் வந்தி ருந்த போது சுதேச மருத்துவத்தைச் சிறப்புற நடாத்தினார்.

அன்று இக்கிராமத்தில் வாழ்ந்த சுதேச வைத்தியர் அனைவரும் நோய் முதல் நாடி தணிக்கும் வாய் நாடி வெற்றி கண்டவ ராவார். மாடு, ஆடுகளின் நோய்களைத் தீர்க்கக் கூடிய சுதேச வைத்தியராக இருந்த வர் வடக்கு சுதுமலையைச் சேர்ந்த சின்னத் தம்பி வைத்தியராவார். நான் சிறுவனாக இருந்த போது ஒரு நாள் நான் ஆசையுடனும் அன்புடனும் வளர்த்த ஆட்டுக்குட்டி குட்டித் தாய்ச்சியாக இருந்தபோது குட்டி போட முடியா மல் கடும் வேதனைப்பட்டது. அதனைக் கண்ட என் தகப்பனார் வைத்தியர் சின்னத் தம்பியை என் வீட்டிற்கு அழைத்து வந்தார். அவரும் எங்கள் வீட்டிற்கு வந்து அந்த ஆட்டின் வயிற்றில் இறந்து போன ஆட்டுக் குட்டியை மிகவும் சாதுரியமாக அந்த ஆட்டின் வயிற்றுக்குள் தன் கையைச் செலுத்தி இழுத்து வெளியில் விட்டார். ஆடும் உயிர் பிழைத்துக் கொண்டது.

எங்கள் ஊரில் பிறந்து வாழ்ந்தவரும் சிந்மய பாரதி வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றியவருமான திரு. வல்லிபுரம் இராசதுரை ஒரு சிறந்த விஷகடி வைத்திய ராவார். கருடனையே தன் மந்திர சக்தியால் அழைத்து விஷத்தைப் போக்கி உயிரைக் காப்பாற்றக் கூடிய ஆற்றலையும் பெற்றிருந் தார். அன்று அவர் அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றவராவார். அன்று அவர் புகழ் பூத்த விஷகடி வைத்தியராகத் திகழ்ந் தார். தோஷம், பிணி, மாந்தம், தொங்கல், சுரம் போன்றவற்றால் வேதனைப்படும் சிறுவர் களுக்கு வீபூதி மந்திரித்தலும், தண்ணீர் ஓதியும், நூல் மந்திரிச்சு முடிந்து கட்டியும் குண மாக்கக் கூடிய வல்ல வைத்தியரும் எங்க ளூரில் சாமி என்ற பெயரில் வாழ்ந்துள்ளார்.

"சோதிடம், பஞ்ச பட்சி துலங்கிய சரநூல்
மார்க்கம்
கோதறு அகராசிந்தை குறுமுனி ஓதுபாடல்
தீதில்லா கக்கிசங்கள் செப்பிய கன்ம காண்டம்
ஈதெல்லாம் கற்றுணர்ந்தோர் இவர்களே
வைத்தியவராவார்"

என்ற தேரையர் யமக வெண்பாவினால் வைத்தியர்கள் பல கலைகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பது தெளிவு.

எம்மூரில் வாழ்ந்து புகழ் பெற்ற கஸ்தூரி வேலுப்பிள்ளை வைத்தியர், சுந்தரப் பரிகாரியாரும் நாடி பிடித்து நோய் நிதானம் செய்வதில் மிகவும் சித்தி படைத்தவர் என்றும் அறிகின்றோம். இன்று பல்கலைப்படிப்பின் பட்டம் பெற்று வைத்தியராகப் பணிபுரியும் பலரும் இன்னும் குருசிஷ்ய முறையில் வைத்தியத் தேர்ச்சி பெற்று அனைவரும் தம்மையுணர்ந்து வைத்தியத் தொழிலைச் சிறப்புறத் தெய்வீகப் பணியாக ஆற்றி நம் முன்னோர் கண்ட வெற்றியையும், சிறப்பை யும், புகழையும் அடைய வேண்டும்.

இன்று சுதேச வைத்தியத்திற்கு அரச உதவிகள் நிறைய உண்டு. அதை நல்வழி யில் பயன் படுத்த எங்கள் இளைய தலை முறையினர் முன் வரவேண்டும். திரு வெண்ணை நல்லூர் மெய்கண்டதேவர் அருளிச் செய்த சிவஞான போதத்தின் அவை யடக்கம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமை யிகழார் - தம்மை
யுணராருருணராருடல் கியைந்து தம்மிற்
புணராமை கேளாண் புறன்"

# நல்லெண்ணெய் உற்பத்தியும், பயன்பாடும் மருத்துவ நோக்கில்

**மருத்துவ கலாநிதி (திருமதி) வியின் சத்தியசீலன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் உற்பத்தி மூலவளமாக நல்லெண்ணெய் காணப்படுகிறது. இந்த நல்லெண்ணெய் தயாரிப்பு பிரான்பற்று, நவாலி, ஆனைக் கோட்டை போன்ற இடங்களில் முதன்மை பெற்றுக் காணப்படுகிறது. எனினும் தற்காலங்களில் இவ்வுற்பத்தி அருகிவருவது கவலைக்கிடமான விடயமாகக் காணப்படுகின்றது. மேற் குறித்த பிரதேசங்களில் வாழும் மக்கள் தமது பரம்பரைத் தொழிலாக இதை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இன்றைய சூழ் நிலையில் இன்று வாழும் சந்ததியினருடன் இத்தொழில் அற்றுப் போகும் நிலை உருவாகி உள்ளது. இதற்குக் காரணம் நவீனமயமான செயற்கை ரீதியான தயாரிப்பு முறைகட்கு மக்கள் கவரப்பட்டமையே ஆகும்.

இவ்வாறான இந்தப் பாரம்பரியக் கைத் தொழிலானது அழிந்து போகவிடாமல் இன்றைய இளைஞர்கட்கும், சந்ததியினருக்கும் கைத்தொழில் பயிற்சிகளை வழங்குவதன் மூலமும் கைத்தொழிலுக்குரிய கடனுதவிகளை வழங்குவதன் மூலமாகவும் அவர்களது உற்பத்தியை மேம்படுத்துவதற்கான முயற்சிகளைப் பிரதேச செயலகங்கள் ஏற்று நடத்துவது வரவேற்கத் தக்க விடயமாக அமையும்.

நல்லெண்ணெய் உற்பத்தியினைச் செயற்கை முறையிலான உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் பாவித்து செய்வதால் இவ்வெண்ணெய்யின் தரம் குறைவதுடன் வேறுவித இரசாயன சேர்வைகள் எண்ணெயில் உருவாகுவதற்கும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இதனால் எண்ணையைப் பாவிக்கும் போது பக்கவிளைவுகள் கூட ஏற்படலாம். ஆனால் குறித்த இப்பிரதேசத்தில் நல்லெண்ணெய் தயாரிப்பிற்கென மரங்களிலாலான உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் நல்லெண்ணெய் இயற்கையானதாகவும், இரசாயன மாற்றங்களுக்கு உட்படாததாகவும், தூய்மையானதாகவும் சிறந்த மருத்துவப் பயன்களைக் கொண்டதாகவும் காணப்படும்.

இந்த நல்லெண்ணெய் உற்பத்தியில் பயன்படும் உரல் - புளியமரத்தினால்

செய்யப்பட்டதாகவும் ஒரே தடவையில் 19-32Kg எள்ளினைக் கொள்ளக் கூடியதாகவும் காணப்படும். இதிலிருந்து 10-12 போத்தல் எண்ணெய் பெறக்கூடியதாகக் காணப்படும். இதற்குப் பயன்படும் உலக்கை - முதிரை மரத்தினால் ஆக்கப்பட்டதாகவும் துலாவானது - இலுப்பை மரத்தினாலும் கதிர்க்கால் கொலுக்கி - பூவரசாலும் ஆனதாக அமையும். மாட்டினை எற்ற வைக்கும் போது சாதாரணமான வெப்பநிலை தக்கவைத்துக் கொள்ளப்படும். பின்னர் பெறப்பட்ட எண்ணெய் பிரித்தெடுக்கப்படும். இவ்வாறாகப் பெறப்படும் எண்ணெய் தூய்மையானதாகக் காணப்படும். எனவே இந்தக் கைத்தொழிலுக்குரிய மூலவளம், தொழில் நுட்ப அறிவு என்பவற்றை அருக விடாது இதனை ஊக்குவிக்க வேண்டியது இதற்குப் பொறுப்பானவர்களின் கடமையாகும்.

நல்லெண்ணெயானது உணவுக்காகப் பயன்படுத்துவது மட்டுமல்லாது இது மருந்தாகவும் பயன்படுகிறது. சித்தமருத்துவத்தின் அடிப்படையான "உணவே மருந்து மருந்தே உணவு" என்பதற்கிணங்க இந் நல்லெண்ணெய் சமீபகாலங்களில் அனைவரையும் பாதிக்கும் கொலஸ்ரோல், குருதியமுக்கம் போன்ற நோய்களுக்கு மருந்தாகவும் அமைகின்றது. அதே நேரம் கர்ப்பகாலங்களில் கருப்பையைப் பலப்படுத்துவதற்கும் உடலை வலிமை பெறச் செய்வதற்கும் நல்லெண்ணெய் உதவி புரியும் இதே போல குழந்தைகட்கும், பாலூட்டும் தாய்மாருக்கும், பூப்பெய்திய பெண்களுக்கும் இது உணவுடன் கட்டாயமாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இது என்புகளையும் மூட்டுக்களையும் பலப்படுத்துவதுடன் பற்களின் உறுதிக்கும் காரணமாக அமைகிறது. இவ்வாறான பல மருத்துவக் குணங்களைக் கொண்டதும் விற்றமின், கனியுப்புக்களை உள்ளடக்கியதுமான நல்லெண்ணெய் பொருளாதார ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகிறது. சித்தமருத்துவம் நோயில்லா அமைதி நிறைந்த சமுதாயத்திற்கான ஓர் வாழ்க்கை முறை. இதில் நல்லெண்ணெய்ப் பயன்பாடா னது அதிகளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது.

நல்லெண்ணெயில் முதுமையைத் தவிர்க்கும் உயிர்ச்சத்து A உம், B உம் கொலஸ்ரோலைக் குறைக்கும் - லெசித்தின் எனும் பொருளும் உள்ளதால் உடலில் இரத்தக் குழாய்களில் கொழுப்பு சேராது, தொப்பை விழாது, இளமைத்தோற்றத்துடன் ஆரோக்கி யமும் ஏற்படும். இது நோயை முறிக்கும் முறிவு மருந்தாகவும் பயன்படுகிறது.

செசாமின் எனும் பொருள் இருப்பதால் வாதம், இதயநோய் வராமல் தடுத்து உடல் உறுதியைப் பேணவும் நல்லெண்ணெய் உதவி புரியும். இதனைச் சூடாக்கிப் பயன்படுத்தினால் நோய் எதிர்ப்பு தன்மையைக் கூட்டும் வாழ்க்கையில் வெறுப்பு, கவலை, சோர்வு என்பவற்றைத் தடுக்கும் பைரோரொனொல் எனும் அமிலப் பொருளும் இதிலுள்ளது.

உடல் நலத்தையும், நோய் எதிர்ப்பு ஆற்றலையும் மேம்படுத்தும் குணம் இதில் காணப்படுகிறது. நல்லெண்ணெய்க் குளியலால் உடல் மிருதுவாகவும் மூலவியாதி, பெண்களின் மாதவிலக்குப் பிரச்சினை,

தோல் வியாதி உள்ளவர்கள் எள்ளுருண்டை சாப்பிடுவது சிறந்ததாகும். நல்லெண்ணெய் சேர்த்தால் குடலில் $Ca^{2}+$, $PO_4^{3-}$ செரிப்பது இலகுவாகும்.

ஒரு பெண் பருவமடைந்த காலத்தில் சிலர் நல்லெண்ணெயை 30-60ml பருகக் கொடுப்பார்கள். சிலர் கத்தரிப்பிஞ்சை நல்லெண்ணெயுடன் சேர்த்து வதக்கி உண்பார்கள். இதில் முக்கிய கொழுப்பமிலமான Linolecc acid உண்டு. இது கருப்பை முதலிய உறுப்புக்களின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாகும். இதன் பயன் அறிந்தமையினால் தான் எமது மக்கள் அன்றாட வாழ்வில் இதனைப் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஒரு பெண் பருவமடைந்தும் அவளை பார்க்கச் செல்லும் உறவினர்கள் உழுந்து, நல்லெண்ணெய் கொண்டு செல்வது வழக்கம். யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான மக்கள் நெய்க்குப் பதில் நல்லெண்ணெயினை அதிகளவில் பாவித்து வருகிறார்கள். Linolecc acid, essential double, மனித உடலில் தயாரிக்கப்படுவது இல்லை. அவற்றை உணவு மூலமாகத்தான் பெற வேண்டும். இந்த உணவுச் சத்துக்கள் உடலுக்குக் கிடைக்காவிடின் வளர்ச்சி குன்றும், மயிர்கள் உதிரும், கரப்பன், கண் பார்வைக் குறைவு போன்றன குழந்தைகளுக்கு ஏற்படும்.

குழந்தை கர்ப்பத்தில் உள்ளபோது தொடங்கி பிறந்த சில ஆண்டுகள் வரை மூளை வளர்ச்சி இடம்பெறும். இந்த வளர்ச்சியில் நல்லெண்ணெய் முக்கிய இடம் வகிக்கின்றது. கர்ப்பிணிப் பெண்களும் தினம் 1-2 தேக்கரண்டி நல்லெண்ணெய் குடிப்பது சிறந்தது. இதில் விற்றமின் A இருப்பதால் மாலைக்கண் நோய் ஏற்படாமல் பாதுகாத்து கொள்ளலாம்.

நல்லெண்ணெயானது......

இவ் வெண்ணெய் காந்தி பித்தமிறைப்பு
நேத்திரத்தின் ரோகம்
அல்லை சேர் சிர வலிப்பு கபாலமுட்டணஞ்
சிரரோக
மெல்லா மார் கிருமி போக்கு மெழிலும்
கண்ணொளியு முண்டாம்
செல்லாயாம் பெலனுமுண்டா மென்னலே
செப்பினாரே

எல்லா எண்ணெயிலும் விடச்சிறந்த எண்ணெய் இதுவாகும். சீக்கிரத்தில் கெட்டுப் போகாது. வலிமை தரும், கபாலச்சூடு, காது வலி, சொறி, சிரங்கு, புண் என்பவற்றை ஆற்றும் மேல்நாட்டவர்கள் இதனை Olive Oil ற்கு பதிலாகப் பாவிப்பார்கள்.

சித்த வைத்தியத்தின் பெரும்பாலான தைலத்தில் இது பயன்படும். ஆகவே இதைத் தேய்த்துத் தலை முழுகுவதாலும் உணவுகளில் சேர்ப்பதாலும் சிறந்த பலனைப் பெற்றுக் கொள்ளலாம். எள்ளிலிருந்து நல்லெண்ணெய் பிரித்தெடுக்கப்படுகிறது. இதற்கு பயன்படும் எள்ளுத்தாவரம் சிறுசெடி வகையைச் சேர்ந்தது.

இதனுடைய தாவரவியற் பெயர்:-
Botanical name:- Sesamum indicum
குடும்பப் பெயர்:-
Family name:- Pedaliaceae
ஆங்கிலப் பெயர்:-
English name:- Gingelly

சிங்களப் பெயர்:-

Sinhala name:- Thala

இந்த எள்ளில் அதிகளவில் இரும்புச் சத்து காணப்படுகிறது. இது புண்களை ஆற்று வதுடன் தோல் வியாதிகளையும் நீக்கும் திறன் கொண்டது. எள்ளிலிருந்து நல்லெண்ணெ யினைப் பிரித்தெடுக்கும் போது வரும் எள்ளும் எண்ணையும் சேர்ந்த கலவை யினைப் பனங்கட்டியுடன் சேர்த்துப் பயன் படுத்துவதால் விசேடமாக கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார் பயன்படுத்து வதால் குழந்தைக்கும், தனக்கும் தேவை யான இரும்புச்சத்தினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் பாலூட்டும் தாய் மாருக்குப் பாலுற்பத்தியை அதிகரிப்பதற்கு இது உதவிபுரியும் அத்துடன் பனங்கட்டி சேர்த்து இவ் உருண்டையைத் தயாரிப்பதால் பனங்கட்டி மலமிளக்கியாகச் செயற்படும் எனவே மலக்கட்டுள்ளவர்களும் இதனைப் பயன்படுத்தலாம்.

**எள்ளுப்பொடி**

| | |
|---|---|
| உமி நீக்கிய எள்ளு | - 02 சுண்டு |
| செத்தல் | - 10 |
| பெருங்காயம் | - சிறு துண்டு |
| உப்பு | - சிறிதளவு |

செய்முறை:- எள்ளைத் தாச்சியிலிட்டு நன்கு வறுத்து எடுக்கவும். தாச்சியில் நல்லெண் ணெய் சூடானதும் மிளகாயைப் போட்டு வறுத்து எடுக்கவும் பின் மிளகாயை உரலில் இட்டு இடித்துப் பெருங்காயத்தையும் சேர்த்து இடித்துக் கொள்ளவும். பின்னர் எள்ளினையும் சேர்த்து இடித்து உப்பினைத் தேவையான அளவு சேர்த்து இடித்துப் பத்திரப்படுத்தவும். இதனைத் தோசை , இட்லி, பிட்டு, சோறு என்பவற்றுடன் சேர்த்துச் சிறிது நல்லெண் ணெய் அல்லது நெய்யும் சேர்த்துச் சாப்பிட லாம். இது 2,3 மாதங்கள் கெடாமல் இருக்கும். எள்ளும், நல்லெண்ணெயும் சேர்வதால் உடல் ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும், என்றும் இளமையுடனும் இருக்கும்.

இத்தகைய மருத்துவ குணங்கள் செறிந்த நல்லெண்ணெயின் பயன்பாட்டினை உணர்ந்து நல்லெண்ணெய் உற்பத்தி யைத் தொழிலை மேம்படுத்துவதன் மூலம் ஆரோக் கியம் நிறைந்த சிறந்ததொரு எதிர்கால சமுதா யத்தை உருவாக்குவோமாக!

# கிராமங்கள்; வரலாறும் பழமையும்

# சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களின் வரலாற்றுத் தொன்மையும் இடப்பெயர் ஆய்வும்

**துஷ்யந்தினி கதிரேசு**
தொல்லியல் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

தென்னாசிய நாடுகளில் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்டதாக இலங்கை விளங்குகின்றது. இவ் இலங்கை யின் வடபாலுள்ள யாழ் குடா நாட்டின் மேற்குப் பகுதியில், வலிகாமம் எனும் பெருநிலப்பரப்பு அமைந்துள்ளது. இலங்கையில் குடித் தொகை அதிகமாக விளங்கும் பிரதேசங்களுள் ஒன்றாக, 111 சதுரமைல் பரப்பளவைக் கொண்ட செம்மண் பிரதேசமாக விளங்கும் வலிகாமமானது வடக்கிலும் மேற்கிலும் பாக்குத் தொடுகடலையும், தெற்கே யாழ்ப் பாணக் கடனீரேரியையும், கிழக்கே தொண்ட மானாறு கடனீரேரியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஆரம்பமாகும். யாழ். குடாநாட்டின் முக்கிய மான புராதனத் தொல்லியற் சான்று களான புராதன துறை முகங்கள் (உதாரணம்: காங்கேசன்துறை, ஜம்புகோளப் பட்டினம்) புராதன வர்த்தக மையங்கள், நகரமயமாக் கம், அரச உருவாக்கம் (உதாரணம்: கந்த ரோடை, ஆனைக்கோட்டை, நல்லூர்) போன்ற பல்வேறு அம்சங்கள் பெருமளவில் காணப்படும் இடமாகத் திகழும் வலிகாம மானது நிர்வாக அடிப்படையில் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு.

- ★ வலிகாமம் வடக்கு
- ★ வலிகாமம் கிழக்கு
- ★ வலிகாமம் தெற்கு
- ★ வலிகாமம் தென்மேற்கு
- ★ வலிகாமம் மேற்கு

யாழ். குடா நாட்டில் மாருதப்புரவீக வல்லி போன்ற ஐதீகங்களுடனும் சிங்களம் மற்றும் தென்னிந்தியச் செல்வாக்குகளுடன் ஒத்த கூறுகளையும் தன்னகத்தே கொண் டுள்ள இவ்வலிகாமம் பிரதேசத்தில் தென்மேற் குப் பகுதியில் அமைந்துள்ள பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இடப்பெயர்களை ஆராய்வ தாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வலி. தென் மேற்கு பிரதேச செயலகம் சண்டிலிப்பாயில் அமைந்துள்ள துடன் தற்போது 28 கிராம சேவகர் (யா/129- யா/156) பிரிவுகளைக் கொண்டதாக திகழ்கின்றது.

# கிராமங்களின் இடப்பெயர்கள்

## வலி. தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இடப்பெயர்கள்

| கிராமசேவகர் பிரிவு இல | கிராமசேவகர் பிரிவு | இல. | கிராமங்கள் |
|---|---|---|---|
| 01) யா/129 | சுதுமலை வடக்கு | 01 | சுதுமலை வடக்கு |
| 02) யா/130 | சுதுமலை தெற்கு | 01 | சுதுமலை தெற்கு |
| | | 02 | கலாவில் |
| | | 03 | பத்தியடி/பாத்தியடி |
| 03) யா/131 | சாவற்கட்டு | 01 | கூழாவடி, சாவற்கட்டு |
| 04) யா/132 | உயரப்புலம் | 01 | உயரப்புலம் (பகுதி) |
| | | 02 | கூழாவடி |
| 05) யா/133 | ஆனைக்கோட்டை | 01 | முள்ளி |
| | | 02 | காக்கைதீவு |
| | | 03 | கூழாவடி |
| | | 04 | சோமசுந்தரம் வீதி |
| 06) யா/133 | நவாலி வடக்கு | 01 | நவாலி வடக்கு |
| | | 02 | நவாலி |
| 07) யா/135 | நவாலி கிழக்கு | 01 | ஆனைக்கோட்டை |
| 08) யா/136 | நவாலி தெற்கு | 01 | நவாலி தெற்கு |
| 09) யா/137 | மானிப்பாய் வடக்கு | 01 | மானிப்பாய் வடக்கு |
| | | 02 | உச்சியோடை |
| | | 03 | செக்காலை |
| 10) யா/138 | மானிப்பாய் கிழக்கு | 01 | மானிப்பாய் கிழக்கு |
| | | 02 | நகரசபை ஒழுங்கை |
| 11) யா/139 | மானிப்பாய் தெற்கு | 01 | மானிப்பாய் தெற்கு |
| 12) யா/140 | மானிப்பாய் மேற்கு | 01 | கட்டுடை |
| | | 02 | தோறணாந்தோட்டம் |
| 13) யா/141 | சண்டிலிப்பாய் வடக்கு | 01 | சண்டிலிப்பாய் வடக்கு |
| 14) யா/142 | சண்டிலிப்பாய் மத்தி | 01 | தொட்டிலடி, கல்லாலை |
| | | 02 | கல்வளை/ கலாவளை |
| | | 03 | மடத்தடி |
| | | 04 | சண்டிலிப்பாய் மத்தி |
| 15) யா/143 | சண்டிலிப்பாய் | 01 | சீரணி |
| | | 02 | ஐயனார் கோயிலடி |
| | | 03 | தேனிப்புளியடி |
| | | 04 | ஏழாவது மைல்கல் |

| | | | |
|---|---|---|---|
| 16) யா/144 | மாகியப்பிட்டி | 01 | மாகியப்பிட்டி |
| | | 02 | யாவில் |
| | | 03 | மருமரச்சி |
| | | 04 | சூரியோதயா |
| 17) யா/145 | வடலியடைப்பு | 01 | வடலியடைப்பு |
| 18) யா/146 | பண்டத்தரிப்பு | 01 | பண்டத்தரிப்பு |
| | | 02 | பிரான்பற்று |
| 19) யா/148 | பிரான்பற்று | 01 | பிரான்பற்று |
| | | 02 | நிற்சாமம் |
| 20) யா/149 | சில்லாலை தெற்கு | 01 | சில்லாலை வடக்கு |
| | | 02 | சாந்தை |
| 21) யா/150 | மாதகல் கிழக்கு | 01 | சில்லாலை தெற்கு |
| | | 01 | மாதகல் கிழக்கு |
| | | 02 | காஞ்சிபுரம் |
| | | 03 | சகாயபுரம் |
| 22) யா/151 | மாதகல் தெற்கு | 01 | மாதகல் தெற்கு |
| 23) யா/152 | மாதகல் மேற்கு | 01 | மாதகல் மேற்கு |
| | | 02 | நுணசை/ நூணசை |
| 24) யா/153 | பெரியவிளான் | 01 | பெரியவிளான் |
| | | 02 | சிறுவிளான் |
| 25) யா/154 | மாரீசன்கூடல் | 01 | மாரீசன்கூடல் (பகுதி) |
| | | 02 | உயரப்புலம் |
| 26) யா/155 | இளவாலை | 01 | இளவாலை |
| | | 02 | சென்.யூட்ஸ்/ புனித யூதாததேயு |
| | | 03 | போயிட்டி |
| | | 04 | சித்திரமேழி |
| 25) யா/156 | முள்ளானை | 01 | முள்ளானை |
| | | 02 | சிறுவிளான் |
| | | 03 | சென்.ஜேம்ஸ் |

**(நன்றி - புள்ளி விபரக் கைந்நூல், பிரதேச செயலகம்- வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய்)**

## வலி. தென்மேற்குப் பிரதேச தற்கால இடப்பெயர்களில் வரும் பின்னொட்டுக்கள்

| இல | பின்னொட்டுக்கள் | உதாரணம் |
|---|---|---|
| 01 | மலை | சுதுமலை |
| 02 | வில் | கலாவில், யாவில் |
| 03 | அடி | பருத்தியடி, கூழாவடி, மருதடி |
| 04 | கட்டு | சாவற்கட்டு |
| 05 | புலம் | உயரப்புலம் |
| 06 | ஆலி | நவாலி |
| 07 | பாய் | மானிப்பாய் |
| 08 | ஓடை | உச்சியோடை, களவோடை |
| 09 | ஆலை | சில்லாலை, கல்லாலை |
| 10 | உடை | கட்டுடை |
| 11 | வளை | கல்வளை |
| 12 | பிட்டி | மாகியப்பிட்டி/மாசியப்பிட்டி |
| 13 | அடைப்பு | வடலியடைப்பு |
| 14 | தரிப்பு | பண்டத்தரிப்பு |
| 15 | பற்று | பிரான்பற்று |
| 16 | கல் | மாதகல் |
| 17 | தீவு | காக்கைதீவு |
| 18 | கோட்டை | ஆனைக்கோட்டை |
| 19 | புரம் | காஞ்சிபுரம், சகாயபுரம் |
| 20 | விளான் | சிறுவிளான், பெரியவிளான் |
| 21 | இட்டி | போயிட்டி |
| 22 | மேழி | சித்திரமேழி |
| 23 | ஆனை | முள்ளானை |
| 24 | அணி | சீரணி |
| 25 | இச்சி | மருமரச்சி |
| 26 | சாமம் | நிற்சாமம் |
| 27 | அசை | நுணசை |
| 28 | சாரந்தை | சாந்தை |
| 29 | முள்ளி | முள்ளி |
| 30 | உதயா | சூரியோதயா |

## வலி. தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குளப்பெயர்கள்

| இல | குளப்பெயர் | கிராமசேவகர் பிரிவு | கிராமசேவகர் பிரிவு இல |
|---|---|---|---|
| 01 | வேடுவன்கண்டி குளம் | நவாலி தெற்கு | யா/136 |
| 02 | வெட்டுக் குளம் | சண்டிலிப்பாய் மத்தி | யா/142 |
| 03 | யாவில் குளம் | உயரப்புலம் | யா/132 |
| 04 | நவாலிக் குளம் | நவாலி வடக்கு | யா/134 |
| 05 | கேளான் க(ா)மம் குளம் | மானிப்பாய் வடக்கு | யா/137 |
| 06 | கட்டுடைக் குளம் | ஆனைக்கோட்டை | யா/133 |
| 07 | சுதுமலைக் குளம் | சுதுமலை | யா/129 |
| 08 | மூத்தவிநாயகர் குளம் | ஆனைக்கோட்டை | யா/133 |
| 09 | தவிட்டபனைக் குளம் | பண்டத்தரிப்பு | யா/146 |
| 10 | சில்லாலை வட்டக் குளம் | சில்லாலை தெற்கு | யா/149 |
| 11 | பெரியதம்பிரான் குளம் | சண்டிலிப்பாய் மத்தி | யா/142 |
| 12 | கும்பா குளம் | சண்டிலிப்பாய் மத்தி | யா/142 |
| 13 | உலகி குளம் (பேச்சு வழக்கு- குளவி குளம் | நவாலி தெற்கு | யா/136 |
| 14 | மருதடிக் குளம் | மானிப்பாய் தெற்கு | யா/139 |
| 15 | அட்டகிரிக் குளம் | மானிப்பாய் தெற்கு | யா/139 |

### ★ நீர் நிலைசார்ந்த இடங்கள்

ஆரம்ப கால மக்களின் குடியிருப்புக் கள் பெரும்பாலும் நீர்நிலைகளை அண்டிய தாகவே அமைக்கப்பட்டன. தமிழ் இடப்பெயர் களில் அளை, ஆரை, ஆறு, ஓடை, கரை, களப்பு, குளம், கேணி, கொட்டு, துறை, வில் என்பன நீர் நிலைக்குரிய பெயர்களாக உள் ளன. சங்க இலக்கியத்தில் ஆறு, ஊற்று, காயம், கழி, கால், சிறை, துறை, படக்கை, பாழ் ஆகிய சொற்கள் நீர்நிலை சார்ந்த பெயர் களாக கருதப்படுகின்றது.

இவ்வாய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட நீர் நிலை சார்ந்த பெயர் களாகக் கரை, ஒடை, வில் என முடியும் குறிச்சிப் பெயர்களைக் குறிப்பிடலாம்.

**கரை:-**

கரை என்பது எல்லையென்றும், நீர் நிலைகளை அண்டிய நிலப்பிரதேசம் என் றும், கடற்கரையிலுள்ள ஊர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. பெரியவிளான் பகுதியைச் சார்ந்த ஒரு இடமாகத் திக்கரை (திக்கு+கரை) (யா/153) என்னும் இடம் விளங்குகிறது. கீழக்கரை, ஆற்றங்கரை, கோடிக்கரை போன்ற இடப்பெயர்கள் தமிழகத்தில் உள்ளதைக் காணலாம்.
(சேதுப்பிள்ளை ரா.பி: 1946;32)

**ஓடை:-**

ஓடை என்பதற்கு நீரோடை, குளம், அகழி, நெற்றிப்பட்டம், மலை, வழி ஒருவகை மரம் எனப்பொருள் கூறப்பட்டுள்ளது. வலி. தென்மேற்கில் குறிச்சிப் பெயராக ஓடை என்றும் சொல் வருகிறது. இதற்குச் சான்றாக உச்சியோடை ( மானிப்பாய் - யா/137), களவோடை (நவாலி) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**வில்:-**

வில் என்னும் சொல்லானது இலங்கை தமிழ் - சிங்கள இடப்பெயர்களில் காணப்படும் சொல்லாகும். வில் என்பது விளை நிலம், வயல் நிலம் என்ற பொருளின் குளத்தையும், அதனுடன் இணைந்துள்ள மேட்டுப்பாகம் மட்டும் செய்கைக்குரியதும், ஏனைய பாகங்கள் சதுப்பு நிலமாக உள்ள வயலைக் குறிக்கும் சொல்லாக இது பயன்படுத்தப் படுகிறது எனச் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார். (ஞானப்பிரகாசர் எஸ்:1928; 33) ஆரம்பகாலத்தில் இயற்கையாக உரு k VþB zá ° ï^ BV¡ D s _ (Bow) போன்ற வடிவின்தாக (அரைவட்ட வடிவம்) விளங்கிய மையே வில்/வில ஆகிய இடப்பெயர்கள் தமிழிலும், சிங்களத்திலும் இடம்பெறக் காரணமெனப் பொ. ரகுபதி அவர்கள் குறிப்பிட் டுள்ளார். (Ragupathy. P:1987;212) மேலும் வில் என்னும் சொல்லுக்குக் குகை என்றும் பொருள் கூறப்படுகின்றது. "வில்" என முடிவடையும் இடப்பெயரானது பெரிய விளானிலுள்ள (யா/153) ஓர் குறிச்சிக்கு இடப்பட்டுள்ளது. மக்குவில் எனப்படும் இப் பகுதியில் குளம் இல்லை. எனினும் கிராமத் தின் ஒரு மூலையில் (மூலை = வில்) இவ் விடம் அமைந்திருப்பதாலும், மக்கிக் கற்கள் நிறைந்துள்ள இடமாகவும் (மக்கி+வில்) விளங்கியதால் இப்பகுதி மக்குவில் என்றும் பெயரினால் அழைக்கப்படலாயிற்று.

**★ நிலவியல்பு சார் இடப்பெயர்கள்**

நிலத்தின் இயல்பு அல்லது நிலத்தின் தோற்ற அமைப்புக்களின் அடிப்படையில் தோற்றம் பெற்ற இடப்பெயர்களுள் யாழ். மாவட்டத்திலுள்ள இடப்பெயர்க் கூறுகளைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| கட்டு | கல் | கலட்டி | காடு |
| கரி | குடா | குண்டு | குழி |
| செம்பாடு | தரை | திடல் | தீவு |
| பள்ளம் | பிட்டி | மணல் | மலை |
| முனை | மூலை | வளை | |

இவற்றுள் இப்பிரதேசத்திற்குட்பட்ட கூறுகளாக மணல், கல், பிட்டி, கட்டு என்பன விளங்குகின்றன.

**மலை:-**

மலைகளற்ற யாழ்ப்பாணத்தில் "மலை" எனும் இடப்பெயர் விகுதிச் சொல்லானது மேட்டு நிலத்தைக் குறித்து நிற்ப தனை வலி. தென்மேற்குப் பிரதேசத்தைச் சார்ந்த சுதுமலை என்னும் கிராமப் பெயர் சுட்டி நிற்பதைக் காணலாம். அதாவது ஏனைய அயற்கிராமங்களை விட (நவாலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை, தாவடி) சற்று உயர்ந்து உள்ளதால் இப்பெயர் ஏற்பட்டிருக் கலாம். "மலை" எனும் விகுதியுடன் இடம் பெறும் இடப்பெயர்களை மணற் பூமியைக் குறிக்கும் "வல்ல" எனும் சிங்களச் சொல் லின் திரிபுகள் எனச் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார். (சுவாமி ஞானப்பிரகாசர்: 1928;14) இந்த வகையில் சுதுமலையை நோக்கும் போது அது மணற்பிரதேசமாக

அன்றிச் செம்மண் பிரதேசமாக விளங்குவதனைக் காணலாம். இங்கு "மலை" எனப்படும் விகுதிச் சொல்லானது உயர்வான பகுதியை அல்லது மேட்டு நிலத்தைக் குறித்து நிற்கின்றது என்றே கருத வேண்டும்.

**கல்:-**

கல் என்னும் திராவிடச் சொல்லுக்குப் பாறை, குகை, மலை, தூரம் எனப் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. ஆரம்பகாலக் குகை வாழ் மனிதனின் முக்கிய அம்சமாகத் திகழ்ந்த கல்லாயுதங்களின் பயன்பாட்டால் புராதன இடப்பெயர்களும் கல் என்ற பொது விகுதியைப் பெற்றிருக்கலாம். (Rama chadramurthy. S.S:1985)

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் மாதகல், கல்லாலை, (சண்டிலிப்பாய்ப் பிரிவு) வரும் இடப்பெயர்களில் கல் என்றும் சொல் உள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் நவாலியையும், அராலியையும் இணைக்கும் இடத்தில் கல்லுண்டாய் என்னும் இடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் மாதகல் என்னும் இடத்தின் தோற்றம் பற்றிய பல்வேறு ஐதீகங்கள் நிலவி வருவதைக் காணலாம். யாழ் குடாவின் வடமேல் முனையில் அமைந்த கடற்கரைக் கிராமமாக விளங்கும் இக்கிராமப் பெயரானது மது+ஏகல், மாது+கல், மாதாக்கள்+ (எல்லையற்றுப் போதல்) போன்ற பல்வேறு கருத்துகள் உள்ளன.

மாதகல் கிராமமானது பல்வேறு வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்டு விளங்குகின்றது. அதாவது தேவநம்பியதீசன் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பிக்குனியான சங்கமித்தை (மாது) வெள்ளரசு மரக்கிளையுடன் வந்திறங்கியதாகக் கூறப்படும் இன்றைய சம்பில் துறைக்கு (ஜம்புகோளம்) அண்மையில் மாதகல் துறை அமைந்திருப்பதனைக் கொண்டு இவ்விடம் மாது + ஏகல்= மாதகல் என அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மேலும் உமாதேவிக்கு (மாது) உருவச்சிலை (கல்) வைத்து வழிபட்டதால் மாது+கல்= மாதகல் என அழைக்கப்பட்டதாகவும் கூறுவாரும் உள்ளனர்.

மாதகல் என்னும் இடப்பெயரில் குளங்கள் இருந்ததாகவும் ஜம்புகோளத்திலிருந்து மாதகல் ஊடாகக் கந்தரோடை வரை செல்லும் இராசபாதை ஒன்று முன்பு இருந்ததாகவும் அதற்கான சான்றுகளாகப் பாதையோரங்களிற் காணப்படும் கேணிகளின் இடிபாடுகள் விளங்கியதெனச் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார். (ஞானப்பிரகாசர். எஸ்:1928;27) யாழ்ப்பாணத்தின் இறுதித் தமிழ் மன்னனின் (சங்கிலியன்) மகனான பரராசசிங்கனின் மகள் திருமணம் முடித்து மாதகலில் வாழ்ந்ததாக யாழ்ப்பாண வைபவ மாலையில் கூறப்பட்டுள்ளது. (யாழ்.வை. மா.80) இவ்வாறு வரலாற்று மர்மங்கள் கொண்ட மாதகல் பிரதேசமானது முறையாகத் தொல்லியலாய்வுகள் மேற்கொள்ள வேண்டிய வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட இடமாக மாதகல் விளங்குகின்றது.

## திட்டி (Ditti), பிட்டி (Pitti):-

திட்டி என்ற சொல்லோடு, பிட்டி/புட்டி ஆகிய இடப்பெயர்கள் தமிழுக்குரிய அதே பொருளில் பிரமிட் கல்வெட்டுக்கள் முதல் கொண்டு இன்றுவரை பயன்டுத்தப்பட்டு வருவதனைக் காணலாம். இலங்கைத் தமிழ்

இடப்பெயர்களில் திட்டி, புட்டி, பிட்டி என்பன ஒரே கருத்துடைய சொல்லாக மேட்டு நிலம், மலை, மலைமேடு என்பனவற்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சுவாமி ஞானப்பிரகாசர் திட்டி, பிட்டி, புட்டி ஆகிய சொற்கள் சிங்கள ஈறான "Hittiya / Saddai" என்பதிலிருந்து வந்தவையெனக் கூறுகிறார். வலி.தென்மேற்குப் பிரதேசத்திற்கு உட்பட்ட மாகியப்பிட்டி/மாசியப்பிட்டி எனும் ஊரும் யா/144 திட்டி (நவாலி) என்னும் குறிச்சிப்பெயரும் உள்ளதனைக் காணலாம்.

மக/மாசிமாதம் = மாகிய+பிட்டி / மாசிய+பிட்டி = மாசியப்பிட்டி / மாகியப்பிட்டி

மாசியப்பிட்டியில் முன்பு நிற்சிங்கராயன் வளவு என்ற தமிழ்த் தலைவனின் பெயரைக் குறிக்கும் குறிச்சிப் பெயர் இருந்ததாகக் கூறப்படுகிறது. இன்று யாவில், மருமரச்சி, சூரியோதயா ஆகிய குறிச்சிகள் அங்கு உள்ள தனைக் காணலாம். இங்குள்ள குறிச்சியான யாவில் என்னும் பெயரில் உயரப்புலத்தில் குளம் ஒன்று உள்ளமை (யா/132. யாவில் குளம்) குறிப்பிடத்தக்கதாகும்.

**கட்டு:-**

சாவற்கட்டு = சாவல் (சேவல்) + கட்டு இங்கு சேவல்களைக் கட்டிச் சண்டைக்கு விடப்படும் இடமாகக் கூறப்படுகிறது. கட்டு என்பது சிங்களப் பெயரென (கட்டு = முள்) குமாரசுவாமி குறிப்பிட்டுள்ளார். ஆயினும் இக்கருத்து ஏற்கத்தக்கது அல்ல.

**வளை /அளை:-**

வளை என்ற இடப்பெயரின் அடிச் சொல்லானது தென்னிந்தியாவிலுள்ள இடப் பெயர்களின் வழக்கில் இல்லாததும், ஈழத்துத் தமிழ் இடப்பெயர்களில் காணப்படும் சொல்லாகவும் விளங்குகின்றது. இலங்கை பெருங்கற் காலப் பண்பாட்டின் வழிவந்தவர் களே இன்றைய தமிழ் சிங்கள மொழிகளைப் பேசுகின்ற மக்களாவர். இதற்கமையத் தமிழர் களைத் தமிழகத்திலிருந்து வந்தவர்களாக நோக்கினும், இலங்கைத் தமிழ்மக்கள் சிங்களவர்களைப் போல் இலங்கைச் சுதேச மக்களான ஆதி ஒஸ்ரிக் மொழி பேசிய நுண் கற்கால மற்றும் பெருங்கற்கால வழிவந்தவர் களாவர். இதற்கு இலங்கையில் தமிழ் சிங்கள மொழிகளில் பயன்படுத்தப்படும் 200க்கு மேற்பட்ட தனித்துவமான ஆதி ஒஸ்ரிக் மொழிக்குரிய சொற்கள் இன்று பழக்கத்தி லுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் வளை என்பது நுண்கற்கால வழிவந்த திரா விட மொழிச் சொல்லாகும்.

வளை என்பது வளைவு என்பதன் திரிபு எனக் கருதப்படுகிறது. வளை, வளைவு, சுற்று எனத்தமிழ் இடப்பெயர்களில் வருவ தனைக் காணலாம். வளை என்பது இருப் பிடம் என்றும் அண்மை என்றும் பொருள் படும். (உதாரணம்: எலிவளை). இதற்கமைய வலி.தென் மேற்கிலுள்ள சண்டிலிப்பாய்ப் பிர தேசத்தில் கலாவளை/கல்வளை எனும் இடம் உள்ளதைக் காணலாம்.

வள் = வளம், வள்+ஐ = வளை- வளைந்த இடம் /வளம் நிறைந்த இடம்

கல்+வளை/ கலா+வளை/ கலா+அளை

Ö ] _ k ò D "வளை" எனும் பின் னொட்டுச் சொல்லை "அளை" என்றும் கொள்ளலாம். அளை என்பதற்குத் தமிழில் புற்று, குகை, வாய்க்கால் என்ற கருத்துக்கள் உள்ளன. மேலும் "வள்" என்பது வளம் என்ற கருத்தில் வளம் செறிந்த இடமாகவும் சில

சமயம் வளைந்த அல்லது ஆழமான இடம் என்றும் ஒரே தொழிலை மேற்கொண்டோர் குடியேறிய இடமென்ற பொருளிலும் வழங்கி வருவதனைக் காணலாம். இதற்குச் சண்டி லிப்பாய்க் கிராமத்தின் குறிச்சிப் பெயராக விளங்கும் கலாவளை/ கல்வளை எனும் இடப்பெயர் சான்றாக விளங்குகின்றது.

கல+வளை = கல்வளை = கல் வாய்க்கால் எனவும் கொள்ளலாம். காரணம் இவ் ஊரினூடாக இன்றும் வழுக்கையாறு ஓடிக் கொண்டிருப்பதே இதற்குச் சான்றாகும்.

**★ நிலப்பயன்பாடு சார் இடப்பெயர்கள்**

பண்டையகாலத்தில் நிலையாக வாழ முற்பட்ட மனிதன் தான் வாழும் நிலத் தைப் பல்வேறு தேவைகளுக்காகப் பயன் படுத்தத் தொடங்கினான். இதற்கமைய மனிதன் தான் வாழும் சூழலின் வளம் பெருக மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக புதிய தோட்டங்களும் வயல்நிலங்களும் உரு வாகியதுடன், அவை புதுப்புதுப் பெயர்களி னால் அழைக்கப்பட்டன. அவையா வன.

| | | |
|---|---|---|
| கொல்லை | வத்தை | வட்டை |
| தோப்பு | கமம் | வெளி |
| தோட்டம் | வயல் | வெட்டி |
| கண்டி | | |

என்பனவாகும். இவற்றுள் தோட்டம், வயல், கண்டி என்பன ஆய்விற்குரிய விடயாங் களாகும்.

**தோட்டம்:-**

தோட்டம் என்னும் சொல்லானது பயிர்ச்செய்கையுடன் தொடர்புபட்ட நிலத்தைக் குறித்து நிற்கின்றது. பெரும் பயிர்ச்செய்கை யுடைய நிலங்களும் மரக்கறி வகை பயிரிடப் படும் நிலங்களும் தோட்டம் என்னும் விகுதிப் பெயரினால் அழைக்கப்பட்டன. வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் தோட்டம் என முடியும் அடிச்சொல்லானது பெரும்பாலும் குறிச்சிப் பெயர்களிலேயே வருவதனைக் காணலாம். இதற்குச் சான்றாக அமைவது

நம்பிராயன் தோட்டம்,
மலையாளன் தோட்டம் - சுதுமலை

மரக்காயன் தோட்டம்
கரையான் தோட்டம் - நவாலி

தோறணாந் தோட்டம் - மானிப்பாய்

**வயல்:-**

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் வயல் என முடியும் இடப்பெயர்கள் ஒல்லாந் தத் தோம்புகளில் வந்துள்ளன. இதற்குச் சான்றாகச் சண்டிலிப்பாய்ப் பிரதேசத்திலிருந்த சீனன் வயல் எனும் குறிச்சிப் பெயரைக் குறிப் பிடலாம். இலங்கையில் "வய" என்பது இடப் பெயர் பொதுவிகுதியாக விளங்குகின்றது. இச் சொல் தமிழில் வயல் என்ற சொல்லின் அடிச் சொல்லாகப் பிறந்த திராவிடச் சொல்லாகும். வயல் எனும் இடப்பெயரானது நெல் வய லோடு, இடத்தையும் குறித்து நிற்கும் பதமாக ஈழத்தமிழரிடையே புராதன காலத்திலேயே பழக்கத்திலிருந்து வந்துள்ளதனைக் காண லாம். தமிழகத்தில் இச்சொல்லில் வரும் இடப் பெயர்களுக்குச் சான்றாகப் புதுவயல், நெடு வயல் போன்ற இடப்பெயர்களைக் குறிப்பிட லாம். (சேதுப்பிள்ளை ரா.பி: 1946;28)

**கண்டி:-**

வலி.தென்மேற்குப் பிரதேசத்தின் கண்டி எனும் இடப்பெயரானது நவாலியில்

புராதன குறிச்சிப் பெயராக விளங்கிய வேடுவன் கண்டி எனும் பெயருடன் வந்துள்ளதைப் புராதன தோம்புகளினூடாக நாம் அறியக் கூடியதாகவுள்ளது. வேடுவன்+கண்டி எனும் வேடுவன்+கண்ணி (தடம்) என்றும் இப் பெயர் அழைக்கப்படுகின்றது. கண்டி எனும் சொல்லானது வேலியின் இடைவெளி, மதில் வெடிப்பு, வயலில் நீர் வழிந்தோடத் திறக்கப் படும் வழி, மேட்டுநிலம், கணவாய, துண்டம், நிறை (500 றாத்தல்), 4 யார் நீளமுள்ள தடி, ஒருவகை மரம், கிழங்கு என்ற பொருளில் மலையாள மொழியிலும், தமிழில் எருமைக் கடா, மந்தை, அடைத்து மீன்பிடிக்கும் கருவி வகை, கழுத்தணிகலன், உருத்திராட்ச மாலை, முகத்தலானை (4 கலன்), நிலப்பரப்பு (70 ஏக்கர்), கீரை ஆகிய சொல்லர்த்தங் களிலும் இடம்பெற்று வருவதனைக் காணலாம்.

### ★ குடியிருப்பு நிலைசார் இடப்பெயர்கள்

நிலையான குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்த மக்கள் தாம் வாழ்ந்து வரும் இடத்தை/ குடியிருப்புக்களை/ நட மாடும் பகுதிகளைப் பல பெயர்கள் கொண்டு அழைத்தனர். இப்பெயர்கள் பண்டைய மனித நடவடிக்கைகளை, பண்பாட்டு, வரலாற்றுச் செய்திகளை சமயச் செய்திகளை எடுத்தியம்பும் கூறுகளாக விளங்குகின்றன. இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நிலவும் இடப் பெயர்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| அகம் | குடியிருப்பு | பண்ணை | புலம் |
| ஆலை | குறிச்சி | பள்ளி | பை |
| இட்டி | கடல் | பளை | மடம் |
| ஊர் | சேரி | பாய் | வாய் |

இந்த வகையில் வலி. தென்மேற்குப் பிரதேசத்தின் இடப்பெயர்களின் குடியிருப்பு நிலைசார் இடம்பெயர் விகுதிச் சொற்களாக இட்டி, ஆலை, பாய், புலம், உடல் ஆகியன விளங்குகின்றன.

### இட்டி:-

இட்டி என வரும் இடப்பெயர் விகுதிச் சொல்லானது "இரு = தங்குதல்" "இட்டி = தங்கி வாழும் இடம்" என்று அர்த்தம் கொள் கின்றது. வலி.தென்மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த இளவாலை கிராமசேவகர் பிரிவில் அடங்குகின்ற ஓரிடமாகப் போயிட்டி எனும் இடம் விளங்குகின்றது. இக்கிராமப் பகுதியின் பெயரானது போர்+ஈட்டி+போரீட்டி/ போயீட்டி என்ற பொருளில் அழைக்கப்படுகின்றது.

### ஆலை:-

ஆலை என்பது நீர் இறைக்கும் பொறி, நீர் வழிந்தோடும் சிறு வாய்க்கால், மழைநீர் வழிந்தோடும் பள்ளமான நிலம், ஆலயம் எனப் பொருள்படும். ஆலை என்று முடிவடையும் பெயரைத் தமிழ்ச் சொல் என ஜே. பி. லூயிஸ் என்பவர் உறுப்படுத்தியும் உள்ளார். இந்தவகையில் வலி. தென்மேற்கு பிரதேசத்தில் ஆலை என்னும் விகுதியில் முடிவடையும் இடப்பெயர்களாக இளவாலை, சில்லாலை ஆகிய கிராமங்கள் திகழ்வதனைக் குறிப்பிடலாம்.

வலி. தென்மேற்கில் அமைந்துள்ள ஆலை என முடியும் விகுதிச் சொல்லில் இடப் பெயர்களுக்கு உதாரணமாக இளவாலை, சில்லாலை, செக்காலை (மானிப்பாய்), கல்லாலை (சண்டிலிப்பாய்) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இளவாலை (யா/155) எனும் கிராமத்தின் பெயர்க்காரணியானது முற்றிலும் மாறுபட்டதாக அமைகின்றது. வாழைத்

தோட்டங்களைக் கொண்ட வளம்மிக்க பிரதேசமாக, அதிலும் குறிப்பாக "இலை வாழை" என்கின்ற வாழை இனம் நன்கு செழித்தோங்கிய பிரதேசமாக விளங்குவ தனால், அதன் பொருளாகு பெயராக ஏற்பட்ட இலை+வாழை = இலைவாழை என்னும் இடப்பெயர் பின் எகர, ழகர, லகர மாற்றங் களுக்கு உட்பட்டதால் இளவாலை எனத் திரி படைந்ததாகக் கூறப்படுகின்றது. இன்னொரு வகையில் இளம்+வாலை = பெண்கள் வாழ்ந்த இடம் இளவாலை என்னும் அர்த்தத் தில் அமைகின்றது.

இவ்வாறே சில்லாலை (யா/149) எனும் இடப்பெயர்க் காரணமும் சில்+ஆலை = சில்லாலை என அழைக்கப்பட்டு வந்துள்ள தனைக் காணலாம். சில் என்பது சிறு என்ற பொருளில் அரசபடைகளுக்கு வேண்டிய படைக்கலன்களைத் தயாரிக்கும் சிறுசிறு ஆலைகளைக் கொண்டிருந்த இடமாகக் கூறப்படுகிறது. (சிவப்பிரகாசம். மு.சு.: 1988; 143). இங்கு சாந்தை எனும் குறிச்சிப் பெயர் உள்ளதனை நாம் காணலாம். சில்லாலைப் பிரதேசமும் புராதன வர்த்தக இராசபாதை செல்கின்ற பிரதேசத்தைச் சார்ந்ததாக விளங்குவதைக் காணலாம்.

**பாய்:-**

பாய் என முடிவடையும் சொற்கள் இலங்கையின் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக் களிலும் காணப்படுகின்றன.

உதாரணம்: (I.C - 1970: No 455, 1199) பண்டைய காலத்தில் இடம் / இருக்கை என்றும் தற்காலத்தில் பாய்/இருக்கை எனவும் பொருள்படுகின்றது. கி.பி இரண்டில் நிலவிய பத்தினி/கண்ணகி வழிபாடு, நாகவழிபாடு, கண்ணகி கோயிலிருந்த இடங்கள் பாய் எனப்பட்டதாகவும் "பெ" என்பது கோயிலி ருந்த இடத்தைச் சுட்டி நிற்பதாகவும் கூறப் பட்டது. இந்தவகையில் வலி. தென் மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய இரு கிராமங்கள் உள்ளதைக் காணலாம்.

பாய் = இருப்பை

01) மானிப்பாய் = மானி+பாய்

மானி = சோலை/நீர்நிலை

மானிப்பாய் = சோலை/நீர் நிலைகளின் இருப்பிடம்.

மானிப்பாயில் சாதி சமூகப் பெயர் களும் மரம், இருப்பிடம் ஆகியவற்றை அடிப் படையாகக் கொண்டெழுந்த பெயர்களும் புழக்கத்திலிருந்ததை போர்த்துக்கேயர் தோம்புகளில் இருந்தும் தற்காலக் குறிச்சிப் பெயர்களில் இருந்தும் நாம் அறிகின்றோம். அதேபோல் வையாபாடலிலும் மானிப்பாய் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. மற்றும் இங் குள்ள மருதடி விநாயகர் ஆலயம், கிறிஸ்தவ தேவாலயங்கள் என்பன வரலாற்றுப் பழமைசார்ந்த அம்சங்களாகத் திகழ்கின்றன.

02) சண்டிலிப்பாய்/சண்டிருப்பாய் =

சாண்டார் + இருப்பை

சாண்டார் என்பது சாதிப் பெயர்

சண்டி+இலை (இலி என மருவியது)+பாய்

சண்டிஇலைப்பாய் = சண்டிலிப்பாய்

சண்டிலிப்பாய் என்று தற்போது வழங்கப்படும் கிராமமானது மானிப்பாயை அடுத்துள்ள கிராமம் ஆகும். இக்கிராமப் பெய ரானது சாண்டார் என்னும் சாதிப்பெயரை அடிப்படையாகக் கொண்டு சாண்டார்+ இருப்பை = சண்டிருப்பாய் எனக் கூறப்படு கிறது. இன்று சண்டிருப்பாய் என்பதை விட

சண்டிலிப்பாய் என்பதே வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. வலி. தென்மேற்குப் பிரதேச செயலகம் அமைந்துள்ள இடமும் இப் பிரதேசமே. சண்டிலிப்பாயிலுள்ள சீரணி அம்மன் ஆலய ஐதீகமாகப் பத்தினிக் கடவுள் ஐந்துதலை நாகவடிவெடுத்து, ஊர்ந்து சென்று சீரணியில் தரித்திருந்ததாகவும், அவ்விடத்தில் பின்னர் ஆலயம் எழுப்பப்பட்ட தாகவும் கூறப்படுகிறது. மேலும் உன் னான்சை எனும் பௌத்த சங்கத்தார் கூடிய இடமாகச் சங்கப்பாய் - சண்டிலிப்பாய் விளங் குவதாக ஞானப்பிரகாசர் கூறியுள்ளார். (ஞானப்பிரகாசர். எஸ்:1928;32)

**புலம்:-**

புலம் என்பதற்கு வயல், இடம், திக்கு, மேட்டு நிலம் என்பது பொருளாகும். அக நானூற்றில் புலம் என்பது நிலம் என்னும் பொருளில் 29 முறை இடம் பெற்றுள்ளது. வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் உயரமான இடம் என்ற வகையில் உயரப்புலம் எனும் இடப்பெயர்கள் இரு இடங்களில் இடப்பெயராக வந்துள்ளன.

உதாரணம்:- ஆனைக்கோட்டை (யா/132)
மாரீசன்கூடலைச்சார்ந்த குறிச்சி

**கூடல்:-**

வலி. தென்மேற்கில் இ வாலைக்கு அண்மையில் அமைந்துள்ள (யா/154) பிரதேசமாக மாரீசன் கூடல் எனும் இடம் உள்ளது. சீதையை ஏமாற்றும் முகமாக மாரீ சன் அழகிய மாயமான் உருவெடுத்த இடமாக, இராமாயணத்துடன் தொடர்புடைய இடமாக மாரீசன்+கூடல் = மாரீசன் கூடல் என்றவாறு பொருள் கூறப்பட்டுள்ளது. "மா" என்பதற்குக் காடு, காவல், தெய்வம், மழைத்தெய்வம் என்பது பொருள். இந்த வகையில் மாரீசன் கூடல் என்பது மாரியம்மன் கோயில் உள்ள இடம் என்ற பொருளிலும் அழைக்கப்பட்டு வரு வதனைக் காணலாம். ஆரம்பகால குடியேற்ற ங்கள் இங்குதான் முதன்முதலாக ஏற்பட்டன என்றும் பின்னர் தான் ஏனைய இடங்களுக்கு பரவியதாகவும் கூறப்படுகின்றது.

**★ ஊராட்சி நிலைசார் இடப்பெயர்கள்**

நாகரீகமடைந்த மக்கள் காலத்திற்கு ஏற்றாற்போல் தாம் வாழ்ந்த பிரதேசங்களின் பெயர்களைப் பல்வேறு சுட்டுப் பெயர்கள் கொண்டு அழைத்தனர். அவை வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| ஆராய்ச்சி | தரிப்பு | நாடு | வேலி |
| அடைப்பு | கடவை | திசை | பற்று |
| கோட்டை | நகரி | புரம் | |

இவற்றுள் வலி. தென்மேற்குப் பிர தேசத்தைச் சார்ந்த இடப்பெயர்க் கூறுகளாகக் கோட்டை, தரிப்பு, அடைப்பு, பற்று ஆகியன பிரதான இடங்களுக்குரிய கூறாகவும் நாடு, புரம், கடவை என்பன கிராமத்தின் உட்கூறாக வும் காணப்படுகிறது.

**கோட்டை:-**

கோட்டை என்பதற்கு அரசன் வாழும் இடம் ஆட்சி செய்யும் இடம் எனப்பொருள்படும். இந்தவகையில் ஆனைக்கோட்டையும் ஓர் குறுநில மன்னர் ஆளுகைக்கு உட்பட்ட பிராந்தியமாக ஆதிகாலத்தில் இருந்திருக்க வேண்டும். இதற்கு ஆனைக்கோட்டை அகழ் வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட முத்திரை யில் வரும் "கோவேத" எனும் வாசகம் சான்று பகர்வதைக் காணலாம். ஆனைக்கோட்டைப் பிரதேசமானது தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இப்பிரதேசத்தில் பெரும் கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக உரு

வான அரச தோற்றத்திற்கான சான்றுகளைத் தொல்லியல் சான்றுகளினூடாகக் காணமுடி கின்றது. கி.பி 2இல் நிலவிய வெடியரசனின் ஆட்சிக்காலத்தில் வீரநாராயணன் என்ற சிற்றரசனின் கீழ் காவல் முல்லை எனும் பிரிவுக்குள் இது அடங்கியிருந்தது. (சிவப்பிர காசம். மு.சு:1988; 139)

**தரிப்பு:-**

வலி. தென்மேற்குப் பிரதேசத்தி னுள்ள பண்டத்தரிப்பு (யா/146) எனும் இடத் தின் பெயரானது பண்டர் எனப்படும் பண்டாரி கள் குடியேறிய இடமாக

"பண்டர்+தரிப்பு = பண்டத்தரிப்பு"

"தரிப்பு = சென்று தங்கிய இடம்" என அழைக் கப்படுகிறது. பண்டம்+தரிப்பு = பண்டத்தரிப்பு என்றவாறாக ஆதிகாலம் தொட்டு மக்கள் தமது பொருட்களைப் பண்டமாற்றம் செய்த இடமாக இது விளங்குகிறது. (சிவப்பிரகாசம். மு.சு: 1988;143) மேலும் வரலாற்றுத் தொடக்க காலத்தில் வடஇலங்கையில், சர்வதேச வர்த் தகத் துறைமுகமாக விளங்கிய ஜம்புகோளப் பட்டினத்தில் இருந்து பொருட்கள்/ பயணிகள் தரித்துச் சென்ற இடமாகவும், கந்தரோடை வரை இணையும் புராதன இராசபாதையை முன்பு கொண்டிருந்த பிரதேசமாகவும் இது திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**அடைப்பு:-**

அடைப்பு என்ற விகுதிச் சொல்லில் அமைந்த இடப்பெயராக (யா/145) கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட வடலியடைப்பு எனும் கிராமம் அமைகின்றது. இவ்விடத்தில் பனை வடலிகள் அதிகமாக உள்ளதனால் வடலி+ அடைப்பு = வடலியடைப்பு எனக் கூறப்படுகின் றது. பண்டைக்காலத்தில் பண்ணாகத்தில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்த விஷ்ணுபுத்திர வம்சத்தவர்கள் சில சமூகப்பிரச்சினைகள் காரணமாகத் தமது நிலபுலன்களை விற்று. பனைவடலிகள் நிறைந்த இப்பிரதேசத்தில் குடியேறியதனால் இவ்விடம் வடலியடைப்பு எனப்பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. (சிவப் பிரகாசம். மு.கு: 1988;143)

**பற்று:-**

பற்று என்பதற்குப் பற்றுதல், பசை, உரிமையிடம், தங்குமிடம், நாட்டுப்பகுதி, தூண், பற்றுக்கோடு, சம்பந்தம், இல்வாழ்க் கை, கட்டு, அன்பு, செல்வம், நன்செய்நிலம் எனப்பல கருத்துக்கள் உண்டு. இந்தவகை யில் யா/147 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிரான்பற்று என்னும் கிராமம்

"பிரான்+பற்று = பிரான்பற்று"

"இறைவன்+ தங்குமிடம் = பிரான்பற்று" என்னும் அர்த்தத்தில் வருவதைக் காண லாம்.

**புரம்:-**

புரம் என்பதற்குத் தமிழில் ஊர், நகரம், இராசதானி, வீடு, மேல்மாடம் எனப்பல பொருள்கள் உண்டு. "புரம்" எனும் இடப் பெயர்களைத் தமிழில் தெய்வம், வரலாறு, தனிமனித செயல், நிகழ்வு சார்ந்ததாகக் குறிப் பிடப்படுகிறது. இன்று புதிய குடியேற்றங்களும் "புரம்" என அழைக்கப்படுவதனைக் காண லாம். இந்தவகையில் வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் மாதகல் (யா/150) பிரதேசத் தைச் சார்ந்த குறிச்சிகளாகக் காஞ்சிபுரம் (தெய்வம்), சகாயபுரம் (நிகழ்வு) போன்ற இடப்பெயர்கள் மக்கள் வாழ்வை வளப்படுத்த ஏற்படுத்தப்பட்ட மாதிரிக் கிராமங்களாக விளங்குவதனைக் காணலாம். தென்னிந்தி

யாவில் "புரம்" என வரும் இடப்பெயராகக் காஞ்சிபுரம் நிகழ்வதுவும் ஒரு சிறப்பம்ச மாகும்.

**★ தாவரப் பெயர் சுட்டும் இடப்பெயர்கள்**

பண்டைய இடப்பெயர்கள் பொதுக் கூறுகள், சிறப்புக் கூறுகள் என்பனவின்றிக் காலத்தால் முற்பட்ட நிலம், நீர், தாவரம் போன்ற இயற்கை நிலையங்களுக்குரிய பெயர்களாலும் அழைக்கப்படலாயின. இயற் கையோடு ஒட்டிய பெயரிலும் குறிப்பாக இயற்கையான மரங்கள், செடிகள், புல் என்ப வற்றுக்குரிய பெயரை இனங்கண்டு இடங் களுக்கு வழங்கப்பட்டு வந்தன.

இதற்கமைய வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள தாவர இடப்பெயர்களை நோக்குவோம்.

ஆல் - ஆலடி (மானிப்பாய்)
அரசு - அரசடி (நவாலி)
இத்தி - இத்தியடி (நவாலி)
மருதம்- மருதடி (மானிப்பாய்)
வேம்பு - சோதி வேம்படி (மானிப்பாய்)

பிப்பிலி- பிப்பிலிச்சுடலை (மானிப்பாய்)
புளி - தேனிப்புளியடி (சண்டிலிப்பாய்)
முள் - முள்ளி (ஆனைக்கோட்டை)
புளி - புளியடி (நவாலி)
முள் - முள்ளானை
சண்டி - சண்டிலிப்பாய்
ஈஞ்சு - ஈஞ்சடி (சுதுமலை)
விளா - சிறுவிளான், பெரியவிளான்

இவற்றுள் பெரும்பாலான இடப் பெயர்கள் அடி எனும் விகுதிச்சொல்லுடன் வருவதைக் காணலாம். எனினும் இங்குள்ள முள்ளி, முள்ளானை, விளான் போன்ற இடப் பெயர்கள் ஆராயப்பட வேண்டியதொன் றாகும்.

முள் : "முள்+இ = முள்ளி"

"முள்/முள்ளி+ஆனை = முள்ளானை

வலி. தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளானை (யா/156) என்னும் கிராமம் அமைந்துள்ளது. இக் கிராமத்தின் இடப்பெயரானது.

"முள்/முள்ளி+ஆனை = முள்ளானை"

"முள்/முளிதல் = உலர்தல், உலர்ந்த இடம்" என்ற அர்த்தத்தில் முட்களைக் காயவைத்து, எரித்து நிலத்தைப் பண்படுத்தி வளமாக்கி, குடி யிருப்பாக மாற்றிய இடமாகக் கூறப்படுகிறது.

**விளான்:-**

விளான் எனும் சொல்லானது விளர் (வெண்மை, இளமை, கொப்பு), விளர்தல் (வெளுத்தல்), விளவு (விளாமரம், நிலப் பிளப்பு) எனும் சொல் அர்த்தங்களில் தமிழ் அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் விளான் என்பது விளாமரமுள்ள இடத்தை இங்கு சுட்டி நிற்பதாகக் கருத வேண்டும்.

**★ சிறப்பு நிலைசார் இடப்பெயர்கள்**

இதுவரை ஆராய்ந்துள்ள இடப் பெயர்கள் யாவும் இயற்கை நிலை, செயற்கை நிலை ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்ட அடிச்சொல்லில் இருந்து உருவாகி யவையாகும். ஆனால் இவ்விரு வகைகளுக் குள் அடங்காத சில இடப்பெயர்கள் சிறப்பு நிலைசார் இடப்பெயர்கள் என வகைப்படுத்தப் படுகின்றன. சிறப்புநிலை இடப்பெயர்களாகச் சித்திரமேழி, நவாலி போன்றவற்றை குறிப் பிடலாம்.

**சித்திரமேழி:-**

இளவாலை (யா/155) கிராமசேவகர் பிரிவுக்குள் உள்ளடங்கும் இக்கிராமமானது மாதகல் துறைக்குத் தென்கிழக்காகவும் சேந்தான் குளத்திற்கு (வலி. வடக்கு) மேற்காக வும் அமைந்துள்ளது. வலிகாமம் மேற்கில் பால், தயிர், நெய் என்பவற்றுக்குப் பெயர் பெற்ற இடமாக இவ்வூர் திகழ்கின்றது. சித்திரமேழி என்னும் இடப்பெயரின் பொருளா னது சித்திரம்+மேழி (கலப்பை) = அழகிய வேலைப்பாடுகளைக் கொண்டுள்ள கலப்பை என்றும், "மக்கள் சமூகம்" என்றும் இருமடி யாகு பெயராக உள்ளதைக் காண லாம். விவ சாயக்குழு, வேளாளர்களின் விவசாயக் கூட்டு நிறுவனம், விவசாயக் குழுவின் சின்னம், விவசாய நில எல்லைகளுக்காக நாட்டப்படும் சின்னம் பொறிக்கப்பட்ட எல்லைக்கல் எனப் பல்வேறு பொருள் சித்திரமேழிக்கு வழங்கப் படுகின்றது.

**ஆலி:-**

**நவாலி**

வலி. தென்மேற்குப் பிரதேசத்தைச் சார்ந்த நவாலி என்னும் ஊரானது ஒன்பது ஆலயங்களைக் கொண்டுள்ளது என்ற கருத் திலும் நவ (ஒன்பது)+ஆலி (ஆலயங்கள்) - தம நவாலி - தமிழ்ப்பெயர்), மனைவியரை இழந்த ஒன்பது வன்னியர்கள் கண்ணீர் விட்டதே தலம்/ குடியேற்றம் என்றும் நீரோ டும் பாதை, நீர்விழும் இடம் என்னும் அர்த்தத் தில் வழுக்கையாற்றுப் பிராந்தியத்திற்கு அண் மையில் அமைந்துள்ள கிராமத்தின் பெயராக விளங்குகின்றது. ஆலி, ஆலு எனும் விகுதிச் சொல்லானது கன்டை, மலையாள மொழி களில் மழைத்துளி என்று பொருள்படும்.

ஆலி - ஆலித்தல் = ஒலித்தல்

காற்று+ஆலித்தல் = ஒலித்தல்

**அடி:-**

வலி. தென்மேற்கு பிரதேசத்திற்குட் பட்ட இடப்பெயர்களில் அடி என முடிவடையும் பின்னொட்டுச் சொல்லானது சிறப்பாக ஓர் இடத்தைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட் டுள்ளது. அடி என்பது வடமொழிச் சொல் என (கால்வாய்) விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (I.C:1970,No 1215) ஆனால் இது ஒரு தமிழ்ச் சொல் என்பதற்குத் தமிழ் அகராதியில் இருப்பிடம், இடம், குகை, பாதச்சுவடு, அடித் தளம் எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. சம காலத்தில் தமிழ் இடப்பெயர்களில் இன்று பொதுவிகுதியாக அடி என்னும் இடப்பெயர் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (புஸ்ப ரட்ணம். ப:2001,52) வலி. தென்மேற்குப் பிர தேசத்தில் அடி என முடியும் சில இடப்பெயர்கள் வருமாறு.

| | |
|---|---|
| ஆலடி (ஆல்) | அரசடி (அரசு) |
| இத்தியடி (இத்தி) | தொட்டிலடி (தொட்டில்) |

வரலாற்றுச் செயற்பாடுகள் என்பன வெறும் சம்பவங்களல்ல. அவற்றுக்கு ஓர் உட்புறம், அதாவது ஒரு சிந்தனைப்புறம் உள்ளது.

-வரலாற்றியலறிஞர் ஆர்.சி கொலிங்வூட்

# கிராமங்கள்; பதிவும் பார்வையும்

**பண்டத்தரிப்பு**

பண்டத்தரிப்பு நகரின் ஆரம்ப வரலாறு போர்த்துக்கேயர் காலத்திலிருந்து ஆரம்பமாகி 19ம் நூற்றாண்டில் அமெரிக்க மிஷனறிமார்களின் நடவடிக்கைகளுடன் நகரின் வளர்ச்சி வலுப்பெற்றது எனலாம். இந்தியாவுடனான தொடர்பில் சம்பில் துறைமுகம் மற்றும் வலிகாமத்தின் வட பகுதியில் அமைவு பெற்ற இந்நகரானது யாழ். மாவட்டத்திலிருக்கும் முக்கிய சந்தை நகர்களில் ஒன்றாகவும் விளங்கியது.

19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மிஷனரி சங்கத்தின் வருகையுடன் இந் நகரில் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டது. 1923ல் தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, உடுவில் ஆகிய 05 இடங்களில் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. அவ் வரிசையில் பண்டத்தரிப்புப் பாடசாலை பாலர் பாடசாலையாக அமைக்கப்பட்டு 1834 - 1843 வரையான காலத்தில் முதற்தர பாலர் பள்ளிக்கூடமாக இயங்கியது. பின் 1868 - 1880 வரை விடுதி வசதியுடன் கூடிய பெண்கள் பாடசாலையாகப் படிமலர்ச்சி பெற்று 1918ம் ஆண்டு காலத்தில் ஆங்கிலப் பாடசாலையாக மாற்றமுற்றது. (பண்மகள் சஞ்சிகை 2008)

விடுதிப் பாடசாலைகள் மிஷன் ஸ்தாபனங்களுடன் இணைந்ததாக விளங்கின. அதனை மேற் பார்வை செய்யும் மிஷனறியின் இடமும் அங்கு அமைக்கப்பட்டு கிறிஸ்தவ மதம் வளர்க்கப்பட்டது, நகரின் மத்தியில் பாடசாலை, தேவாலயம், மிஷனரி விடுதி, கிறிஸ்தவ சவக்காலை என்பனவற்றை ஒரே வளாகத்தில் கொண்டமைந்துள்ளது. இப்பிரதேசத்திலும் சில்லாலை, மாதகல், இளவாலை போன்ற இடங்களிலும் வாழ்வோர் பெரிதும் கிறிஸ்தவ மதத்தினராக உள்ளமைக்கு மிஷனறி சங்கத்தின் செல்வாக்கே காரணமாகியது. கல்வி, மதம் மட்டுமல்லாது 1820ல் டாக்டர் ஜோன்ஸ்கடர் பண்டத்தரிப்பிலுள்ள ஆலய வளவில் மருத்துவ மிஷனை ஸ்தாபித்து மக்களின் உடல், உளப் பிணிகளை நீக்கப் பெரிதும் உதவினார். (Bishop Dr. Jebanesan.S 2002)

இக் காலப்பகுதியில் பண்டத்தரிப்பு நகர்ப் பண்பைப் பெற்று வளர்ச்சியடைந்து வந்தமைக்கு Srilankan Tamil Naltionalism :- Tamil Society in the Early British Period (1833 -1850) என்ற நூலில் சான்றுகள் உள்ளன. அந்நூலின்படி 1814ல் பண்டத்தரிப்பின் மொத்த சனத்தொகை 2808 ஆகவும்,

வீடுகளின் எண்ணிக்கை 920 விளங்கிற்று. 1840களில் 5939 ஆக சனத்தொகை அதிக ரித்துள்ளது.

கூட்டுறவு செயற்பாடுகளின் ஆரம்பப் படிக்கல்லான ஐக்கிய நாணய சங்கம் 3.12.1927ம் ஆண்டு முதல் பண்டத்தரிப்பு ஐக்கிய நாணய சங்கமாகப் பதியப்பட்டு அங்கத்தவர்களது அங்கத்துவ கணக்கிலி ருந்து கடன் வழங்கும் நோக்குடன் ஆரம்ப மாகியது. (வெள்ளி விழா மலர் யா.மா. சி.க.வ. கூ.ச.சமாசம் 2007 டிசம்பர்) மக்களின் சேமிப்புப் பழக்கம் பணப்பரிமாற்றத்திற்கு வழிகோலியது.

பண்டத்தரிப்பு நகர எல்லைக்குள் வரும் சில்லாலைப் பகுதியில் 19ம் நூற்றா ண்டிலிருந்து இன்னாசித்தம்பி வழிவந்த அவர்களது இறுதித் தலைமுறையான டாக்டர். சுகந்தன் மற்றும் அவர்களது உறவினர்க ளான பாக்கியநாதன், அல்போன்ஸ் ஆகியோர் இந் நகரில் சித்த மருத்துவ சேவையை ஆற்றியமையால் யாழ். மாவட் டத்திலிருந்து மட்டுமல்லாது நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இங்கு மருத்துவ சேவையைப் பெற இந்நகரிற்கு வந்து செல்கி ன்றமையால் நகர் செழிப்புத் தன்மையைப் பெற்றிருந்தது.

இந்நகர் 01.01.1969ல் பண்டத்தரிப்பு கிராமசபைப் பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டு 07 வட்டாரங்கள் கொண்ட பட்டினசபையாக மாற்றப்பட்டது. (Prof.P.Balasundarampillai-1972) பட்டினசபைப் பிரதேசத்தில் அதாவது J/145 பிரான்பற்று, J/148 சில்லாலைவடக்கு, J/149 சில்லாலை தெற்கு ஆகிய 03 பிரிவுகளும் 07 வட்டாரங்களும் அடங்குகின்றன. (வலி. மேற்குப் பிரதேசசபை கைநூல் - 2006) 1988ம் ஆண்டு பிரதேசசபைச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின் பிரதேசசபை, உப காரியாலயமாக இயங்கி வருகிறது.

மக்கள் நலன் கருதி நகரின் வடக்கே கிராமிய வைத்தியசாலை அமைக்கப்பட்டமை நகரின் வளர்ச்சிக்கு வழிகோலியது. ஆண்க ளுக்கும், பெண்களுக்கும் எனத் தனித் தனியே 10படுக்கை வசதிகளுடன் வைத்திய சாலை அமைக்கப்பட்டு 1948ல் பண்டார நாயக்காவினால் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டது. (கிராமிய வைத்தியசாலை கல்வெட்டு). 1971ம் ஆண்டு பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிராமிய வங்கியையும் ஓர் அங்கமாகக் கொண்டு இங்கு ஸ்தாபிக்கப்பட்டது.

1976ம் ஆண்டு பதவிக்கு வந்த அரசின் பொருளாதாரக் கொள்கை யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வாய்ப்பாக இருந் தது. உற்பத்திப் பொருள்களுக்குக் கூடுதல் விலை கிடைத்தது. பண்டத்தரிப்புப் பரீஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சேவைகள் இதனை வாய்ப்பாக்கின. விவசாய உற்பத்திகளை - குறிப்பாக வெங்காயத்தைக் கொள்வனவு செய்து பிற மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்ததோடு சிறு கைத்தொழில் நிலையங்கள் மூலம் வேலை வாய்ப்பை வழங்கும் மையங்களாகவும் விளங்கின. குறிப்பாக கைத்தறி, மின்தறி நிலையங்கள் மூலம் பெண்களுக்கு அதிக வேலை வாய்ப்பை வழங்கினர். இதில் முன்னணி நிறுவனமாகப் பண்.பரிஷ். ப.நோ. கூ.சங்கம் விளங்கியது. பின் தேசிய

பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இதன் செயற்பாடுகள் வலுக்குறைந்தது. இன்று விவசாய உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பையும் வேலை வாய்ப்பையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கி வருகின்றது.

1980களில் நகரில் படுக்கை வசதிகளுடன் தனியார் வைத்தியசாலை அமைந்திருந்தமை, பாடசாலை வளாகத்துடன் கோட்டக்கல்வி அலுவலகம் அமைந்திருந்தமை, அது தெல்லிப்பழை தொடக்கம் அராலி காரைநகர் சார்ந்த பாடசாலைகளின் நிர்வாக மையமாக இருந்தமை போன்ற காரணங்களால் இந் நகரின் ஊடாக பிரதான நகரங்களுக்கான போக்குவரத்து வசதிகள் இடம் பெற்றன.

இவ்வாறான வரலாற்று பின்னணியுடன் கூடிய இந்நகர் 1992ல் நாட்டின் யுத்தத்தினால் ஒட்டுமொத்த இடப்பெயர்வைச் சந்தித்தது. இதன் காரணமாக உயர் வருமானம் படைத்தோர் பிற மாவட்டங்களிற்கும் வேறு நாடுகளிற்கும் இடம் பெயர்ந்தனர். இதனாலும் பின்னணி நிலங்களிலுள்ள உயர் பாதுகாப்புவலயம் காரணமாகவும் இந் நகர் சிறிது காலம் தன் கொள்வனவாற்றலையும், மனித வளத்தையும் இழந்தது.

பல தசாப்தங்களாக பண்டத்தரிப்பு முக்கிய விவசாய சந்தையாக இருந்தது . கடந்த 3தசாப்த கால யுத்தத்தால் தனது பழைய முக்கியத்துவத்தை இழந்த போதிலும் தற்போது இந் நகர் வணிகத்திலும்,தொழில் முயற்சிகளிலும் முன்னேற்றம் கண்டும் வருகிறது.

Action Farm நிறுவனத்தால் தவிட்டைகுளம் 2000ம் ஆண்டு புனருத்தாரணம் செய்யப் பட்டது. UNDP நிறுவனத்தாலும் நகரின் கிராமிய வைத்தியசாலை புனருத்தார ணம் செய்யப்பட்டு வெளிநோயாளர் பிரிவும் இயங்கி வருகின்றது. தற்போது இப் பிரதேச பாடசாலைகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியால் புதுப் பொலிவுடன் மிளிருகின்றன.

**சில்லாலை**

யாழ்ப்பாண நகரிலிருந்து மேற்கே ஏறத்தாழ (16)பதினாறு கிலோமீற்றர் தொலை வில் அமைந்துள்ள சில்லாலை எனும் சிற்றூர் ஒரு காலத்தில் பேரும் புகழும் மிக்கதொரு கிராமமாக விளங்கியதென்பதில் கருத்து வேறு பாடில்லை. இந்தக் கிராமத்துக்குச் சில்லாலை என்ற பெயர் வந்ததென்பதில் பலவித பாரம்பரியக் கதைகள் நம்மிடையே காணக் கிடக்கின்றன.

முன்னோர் காலத்தில் எமது கிரா மத்தில் அடர்த்தியாகச் சிறிய ஆலமரங்கள் படர்ந்து காணப்பட்டதால் சிறிய ஆலை மருவி "சில் - ஆலை" எனத் தோற்றம் பெற்றது எனவும், செழிப்பான இக்கிராமத்தில் அடிக்கடி மழை பொழிந்து வழிந்தோடிய நீர் "அல"(அளை) என்ற சிறிய நீரோடைகள் வழியாகப் பாய்ந்தோடிக் கடலில் சங்கம மானதால் "சிறிய அல" என்ற சொல் மருவி சில் அலை "சில்ஆலை" ஆகியது.

இன்னும் நெல்ஆலைகள் நிறைந்து காணப்பட்டதாலும் விளைச்சலுக்குப் பேர் போன தும்பளைப்பாய் வயற்பகுதி நெல் விளைச் சலை வாரித் தந்தமையால் நெல் ஆலை என அழைக்கப்பட்டது. இதனை எமது கிராமத்து அன்னை கதிரைத் தாயின் பாடற் புத்தகங் களின் பதிவேடுகளில்.....

"அணியணியாயிவை முற்றும் பெற்றவள்
அல்லா வத்தனையும்
அப்பிய நெல்லாலைப்பதி சில்லாலைப்
பதியில்........"

போந்ததைத் தொன்மைச் சான்றுகளின் வரலாற்று ஆராய்ச்சியாளர் அருட்திரு தாவீது அடிகளாரின் குறிப்பேடுகளில் காணலாம்.

எமது கிராமமானது முன்னொரு காலத்தில் உயரிய இராசதானியாக இருந்த தென்பதற்கு இதன் எல்லைப் புறமாக பண் டத்தரிப்பு இராசமுருக்கடி வரை நீண்டு நெடிதுயர்ந்து உயரிய கட்டிடங்களும், அரச அரண்மனைகளும் நிறையப் பெற்றிருந் ததை எடுத்துக் காட்டலாம். இக்காலத்திலும் சில எச்சங்கள் ஆங்காங்கே காணப்படுகின் றன.

இவற்றில் சில்லாலையிலுள்ள "நீரா வியடி" (அரச தடாகம்) நீராவிப்பிட்டி (இளைப்பாறுமிடம்) பூ மலர்ந்தான் (மலர்ப் பூங்கா, கேணி) போன்றவை ஆதாரத் துக்கு உரியவை மட்டுமல்ல ஆராய்ச்சிக்கும் உரியவை.

இந்தியாவின் தென்பகுதி அரசகுல வம்சத்தின் ( குறிப்பாக சோழர்களின்) படையெடுப்புக்களால் யாழ்ப்பாண இராச்சி யமும் தாக்கப்பட்டது. இத்தாக்குதலுக்குச் சில்லாலையின் மேற்குப் பகுதியின் கடற் பகுதியான சம்பிலித்துறை (சம்பில்) அவர்க ளின் இறங்கு துறையாக அமைந்தது. இது அவர்களுக்கு ஒரு காப்பரணாக மட்டுமல்ல அரண்மனையாகவும் அமைந்ததெனலாம். இதற்குச் சான்று பகர அயல் கிராமங்களான சோழர்புரம் சோழியபுரமாக மாறி இன்று சுழிபுரம் என்ற பெயரிலும், யாழ்ப்பாண அரசைக் கைப்பற்ற படையெடுத்துப் பாண்டி யர்களைத் தடுத்து நிறுத்தித் தரிக்கச் செய்த இடம் பாண்டியன் தரிப்பு என்று மருவி பண்டத்தரிப்பு ஆகியது என்பதும் ஆய்வாளர் களின் கண்ணோக்கு.

எமது சில்லாலை வாழ் கத்தோலிக்கர்களின் மதப்பற்றைக் கண்டுணர்ந்த மேலை நாட்டுக் குருக்கள், எமது கிராமத்தை "சின்ன உரோமை" என்று அழைத்துப் பாராட்டினார். காரணம் போத்துக்கேயர் காலத்துக்கு முன்னரேயே சில்லாலையில் இலைமறையாக கத்தோலிக்கம் இருந்ததென்பதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கப் பெறாத போதும், போத்துக்கேயர் வருகையின் போது யாழ், நல்லூர் பகுதியில் வைத்தியர்கள் பரம்பரையில் அவர்களால் கிறிஸ்தவம் பரப்பப்பட்டது. இவர்களைக் கொன்று ஒழிக்க யாழ் அரசன் சங்கிலியன் கிளர்ந்தெழுந்த போது இரவோடிரவாகத் தப்பியோடிச் சில்லாலையில் புகலிடம் தேடிவந்த இரண்டு கத்தோலிக்க வைத்தியக் குடும்பங்களே, சில்லாலைக் கத்தோலிக்க பாரம்பரியத்தின் அடிப்படைத் தூண்காயின. இவர்களால் கட்டியெழுப்பப்பட்டதே சில்லாலைத் திருச்சபை என்பது வரலாற்று ஆசிரியர்களின் கண்ணோக்கு.

இவர்களைக் கண்டுபிடித்த போத்துக்கேயர்கள் தாம் அங்கிருந்து கொண்டுவந்த அன்னை மரியாவின் திருவுருவைக் கையளித்து விடைபெற்றுச் சென்று விட்டனர். மரியாவின் திருவுருவம், கதிரையில் அமர்ந்து மடிமீது பாலகனைச் சுமந்து, நிலவினை மிதித்து, அனைவருக்கும் அருள்பாலிப்பவராக விளங்கியதால் அவரை "கதிரைத்தாய்" என்றழைத்தனர். பழமை மிக்கதும் பாரம்பரியங்கள் கொண்டதுமான எமது சில்லாலை இன்று தனித்துவம் மிக்கதும் தன்னிகரில்லாப் பெருமை கொண்டு விளங்குவதற்குக் காரணம். அங்கே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் "கதிரைத் தாய்" ஆலயமும், அண்மையில் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட "அருளாளர் யோசவ் வாஸ் அடிகளார் " தங்கி இறைபணி செய்த புனித இடமும் மட்டுமன்றி அங்கே தலை முறை தலைமுறையாக வாழ்ந்து வரும் கத்தோலிக்கக் குடும்பங்களுமேயாகும்.

கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டில் ஏற்பட்ட கொடிய போர் அனர்த்தங்களாலும், பல்வேறுபட்ட அரசியல் சித்து விளையாட்டுக்களாலும், கொடூர இடப்பெயர்வுகளாலும், பொருளாதார நெருக்கடிகளாலும் சில்லாலை மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளான போதிலும் தங்கள் மண் பற்றையும் மரியன்னை மட்டில் கொண்டுள்ள ஆழமான விசுவாசத்தையும் இன்றும் தங்கள் மனதிலிருத்தி தங்கள் கிராமத்தோடு ஐக்கியப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

எல்லோரும் கைவிட்டால் சில்லாலை வைத்தியம் என்று கூறுமளவிற்குப் சிறப்புப் பெயர்பெற்ற சிறந்த பரம்பரை வைத்தியர்களைக் கொண்டிருந்த கிராமம் தற்சமயம் சிறிய தலைவலிக்குக் கூட சில மைல்கள் கடந்து சென்று சிகிச்சைபெறும் நிலையிலுள்ளமை சிறிய மனவலிதான்.

**- எஸ்.அன்ரனி பங்கிதாஸ்**

**நவாலியூர்**

எனது பிறந்த ஊர் கலை வளமிக்க நவாலியூர் என்பதில் மிகவும் பெருமைப் படுகின்றேன். சண்டிலிப்பாய்ப் பிரதேச செய லகத்துக்குட்பட்ட கிராமமான நவாலியூர் பசும் வயல்கள், குளங்கள் சூழ்ந்த அழகிய கிராமமாகும். அதன் இயற்கை எழிலை விட கல்வி யியலாளர்களாலும், கலைஞர்களாலும் சமூக சேவையாளர்களாலும் மேலும் மெருகூட்டப்பட்ட வரலாற்றுச் சிறப்புப் பெற்ற கிராமம்தான் நவாலியூர். இதற்குச் சான்றாக முதலில் நவாலியூர் சோமசுந்தரப்புலவரை முன்வைக்க முடியும். "தங்கத்தாத்தா" என்ற சிறப்புப் பெயர் கொண்ட அவர் நீண்ட தாடி, கண்ணாடி சகிதம் சிறிய கொட்டில் ஒன்றில் இருந்தே சிறப்பு வாய்ந்த கவிதை களை எழுதி உலகளாவிய புகழைப் பெற்றவர். அவர் எழுதிய "ஆடு கதறியது", "ஆடிப்பிறப்பு" போன்ற கவிதைகள் சிறுவர்களை மட்டுமல்ல பெரியவர்களின் நெஞ்சையும் தொட்டவை. அடுத்துக் கலையரசு சொர்ணலிங்கம் அவர்க ளைப் பற்றிக் கூறுவதில் பெருமையடைகி றேன். "வேதாள உலகம்" "அரிச்சந்திர மயான காண்டம்" போன்றவை அவரைப் புகழின் உச்சிக்கே கொண்டு சென்றவை.

மேலும் நவாலியூர் நடேசன் நவாலி யூர் செல்லத்துரை போன்ற ஊடகவியலா ளர்களும் சிறப்புப் பெற்றவர் கள். சங்கீத நடன ஆசிரியர் திரு தொம்மைக்குட்டி அவர்கள் சென்னை அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டதாரியாவார். அவரது சிறந்த கலைத் தொண்டுக்காக அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக் கப்பட்டவர். கொழும்புத் தமிழ்ச் சங்கமும் விருது வழங்கிக் கௌரவித்தது. அவரது தங் கையாகிய எனக்கு அவர் தான் இசைத்துறை யில் குருவாக இருந்தவர். அடுத்து நவாலியூ ரைச் சேர்ந்த அமரர் ஐசக் இன்பராசா அவர்கள் பிரபல நகைச்சுவை நடிகராக ஜேர்மனியில் கொடிகட்டிப் பறந்தவர். "லூஸ் மாஸ்ரர்" "மாப்பிள்ளை தேவை" "லேடி ரைப்பிஸ்ற்" போன்ற நாடகங்கள் பிரபலமா னவை. மற்றும் "நிர்மலா" (இலங்கைப்படம்) பட இயக்குனரும் நடிகருமான அமரர் அருமைநாயகம் அவர்களும் நவாலியூரைச் சேர்ந்தவர். மற்றும் அவரோடு இணைந்து நடித்தவர்களான அமரர் ஞானசிகாமணி கமலநாதன் அமரர் ராம் ஆகியோர் சிறந்த நகைச்சுவை நடிகர்களாவார். அடுத்து நாட்டுக்கூத்துக் கலையிலும் நவாலியூர் புகழ் பெற்றது. "ஞான சௌந்தரி", "வரப் பிரசாதம்", "அன்னை வேளாங்கண்ணி", "வெடியரசன்" போன்ற நாட்டுக் கூத்துகள் போருக்கு முன் மேடையேற்றப்பட்டவை. தற்போது திரு.நாகலிங்கம், திரு.கமலநாதன் ஆகியோர் தொடர்ந்தும் கலையை வளர்க்க அரும்பாடு பட்டு வருகிறார்கள். ஊன்றுகோல் அறப் பணியகம், நவாலி Y.M.C.A , நவாலி முருகானந்தா இளைஞர் மன்றம் ஆகியன இன்றும் பல போட்டிகளை நடத்திக் கலையை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. அமரர் வீரசிங்கம் அவர்கள் கூட்டுறவுத்தந்தை எனப் பாராட்டப்பட்டவர். மற்றும் ஹேமலதா சிறுவர் ஞாபகாரத்த இயக்குனர் திரு.றமேஷ் அவரது சகோதரன் அமரர் சதீஷ் அவர்களது தந்தை யார் அமரர் செல்வராசா ஆகிய சிறந்த சமூக சேவையாளர்களைப் பெற்று எமது நவாலியூர் பெருமையில் தலைநிமிர்ந்து நிற்கிறது.

**- திருமதி ம.மரியதாஸ்**

## பிரான்பற்று

இந்து மகா சமுத்திரத்தில் இலங்கிடும் இலங்கை மாநாட்டில் வட பாகம் பரந்ததொரு நிலப்பரப்பை உள்ளடக்கியதும் தனித்துவ மான பண்புகளை சமய, கலை, கலாசார துறைகளடங்கியதாக வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் பிரான்பற்றூர் அமைந்துள்ளது.

இவ் ஊர் சுமார் நான்கு கிலோ மைல் சதுர நிலப்பரப்பு ஆகும். 1987ம் ஆண்டு கிராம அலுவலர் பிரிவுகள் மாற்றம் செய்யப்பட்டு நிர்வாக ஒருங்கமைப்புக்கள் விரிவுபடுத்தப் பட்ட போது பிராம்பத்தை என்ற பெயர் கொண்ட இடம் பிரான்பற்று ஆக மாற்றம் அடைந்தது. காலப்போக்கில் கிராமம் மாற்ற மடைந்து குடிசனங்கள் நெருங்கி வளர்ச்சி கொண்ட போது கிராம அலுவலர் பிரிவுகள் J/ 146, J/ 147 என்பன கூடின, எனச் சீரமைப்புப் பெற்ற பிரான்பற்று பெரியவளவு முருக மூர்த்தி வரலாறு கூறுகிறது.

"சீரமைப்புப்பெற்ற சித்தர்
நல்ல சிறுஞ்செடி பூங்கா நாறும்
நல்ல நால் வகை மரங்களுடே
தாரகை வேலன் தானே
தவழ்ந்தனர் பிரான்பற்றூரில்"

என்றவாறு இவ்வூர் மக்கள் எக்காலத்தில் தமது வாழ்க்கைத் தொழில்களை நெற்சாகு படியுடன், எள்ளுப்பயிரையும் உண்டு பண்ணி நல்லெண்ணெயையும் வடித்துத் தொன்று தொட்டே கைத்தொழில் விருத்தி யிலும் கமநல சேவையிலும் மேம்பாடு கொண்டவர்களாக விளங்கினார்கள்.

யாழ்ப்பாணத்தைச் சங்கிலி அரசன் ஆண்ட காலத்திலும் இவ்வூர் எல்லைப் புறத்தில் இராசமுருக்கடி என்ற இடம் அமைவுற்று இருக்கின்றது. அவ்விடம் அந்நியர் வருகையிலும் அழியாது இப்பொழு தும் குடிமக்கள் அவ்விடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூர் மக்கள் ஒன்றாகக் கூடி ஒற்றுமையாக இணைந்து தமது கைத் தொழிலையும், பாரம்பரிய நல்லெண்ணெய் உற்பத்தியையும் சிறப்பாகச் செய்து வருகின் றனர். இதன் விளைவாக உள்ளப் பூரிப்பும் உடல் அமைப்புக்களும் கொண்ட இவர்க ளைப் போல் பிற ஊர் மக்களும் தாமும் முன்னேற வேண்டுமென்று இவ் ஊர் மக்க ளுடன் இணைந்து நல்லெண்ணெய் உற்பத் தியைக் கைக்கொண்டு வாழ்ந்து வருகிறார் கள். இப்படி இருக்கும் காலத்தில் 1505ம் ஆண்டு அந்நியர்களாகிய போர்த்துக்கேய ரும், 1658ல் ஒல்லாந்தரும், 1796ல் ஆங்கி லேயரும் வந்து யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி தாம் நினைத்தபடி பல மாற்றங் களை செய்து மக்களைத் தமது சமயங்க ளிலும், கலாசாரத்துறையிலும், கல்வியைக் கொடுத்தும், சலுகைகளைக் கொடுத்தும் மதங்களுக்கு மாற்றம் செய்தார்கள். இப்படிச் செய்த போதும் கல்வி கலாசாரத்தில் மேம்பா டுற்று சலுகைகள் பெற்ற போதும் சமய மாற்றத்துக்கு ஒருவரேனும் உடன்பட வில்லை. ஏனென்றால் அந்நியர்கள் சிலுவை களைக் கொடுத்து வணங்குங்கள். உங்க ளுக்கு வேலை வாய்ப்பு , தொழில் வசதிகள் தருவார்கள் என்றார்களாம் அதிகாரத்துடன். அப்பொழுது எமது மக்கள் 'ஆம்' என்று கூறி அவர்களுடைய சலுகைகள், தொழில் வாய்ப் பைப் பெற்று சிலுவைகளையும் அதிகாரி களிடமிருந்து பெற்று அந்தச் சிலுவைகளைச் சிவபெருமானின் திரிசூலம் போல் இருபக்க மும் வளைத்து நிமிர்த்தி வைத்து வணங்

கினார்களாம். அப்போது அந்நிய அதிகாரிகள் வந்து பார்த்த போது இது என்ன சிலுவை மேலே மடித்து இருக்கின்றது என்று கேட்டார்களாம். அப்பொழுது அந்த கல்வி அறிவுடையோர் அது ஐயா ஆண்டவனை அழகுபடுத்தி வணங்குகிறோம் என்று வணங்கிச் சொன்னார்களாம் அப்போ ஆங்கிலேய அதிகார்கள் 'சரி, சரி நல்லது நல்லது', என்று சொல்லிப் பொன்னும், பொருளும் கொடுத்து விட்டு சென்றார்களாம். இப்படி வைரவர் சிலையை வைத்துக் கும்பிட்டு நல்ல சலுகைகள் பெற்ற செல்வாக்குடைய அறிவு முதிர்ந்த அமரர்களாகிய பெரியோர்கள் எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்படி எமது முன்னோர்களால் வணங்கப்பட்ட ஆலயங்கள் தற்பொழுது 15 க்கு குறைவிலாது வளர்ச்சியடைந்து இருக்கின்றன. இவைகளை விட ஈழத்தில் சிறப்புற்றுப் பாடல் பெற்ற ஆலயங்களான "பிரான் பற்று" பெரியவளவு முருக மூர்த்தி ஆலயம், பிரான்பற்று ஆலம்பதி முத்துமாரி, அம்மனும் சிறப்புடையதாகத் திகழ்கின்றமை போற்றற்குரிய செயலாகும். இத்துணைக் கோட்பாடுகளுக்கும் பல மாற்றங்களுக்கும் காரண கர்த்தாவாக உள்ளது, சமூக, பொருளாதார, கலை, கலாசார, கல்வியின் மேம்பாடேயென்று கூறின் மிகையாகாது.

இப்படிச் சகல கல்வித் துறைகளிலும் பெருமைப்படுவதற்கு எமது மூத்தோர்கள் தமது குடும்பநலப் பொறுப்புக்களைக்கண்டு தளர்ச்சியடையாது போக்குவரத்து வசதி குறைந்த காலத்தில் தமது பிள்ளைகளை வண்ணார் பண்ணை நாவலர் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குச் சுவாமி ஆறுமுகநாவலரிடம் அனுப்பி கல்வியை புகட்டியமையும், பின்பு திருவாளர் ஆறுமுகநாவலரிடம் படித்த மாணவர்களில் ஒருவராகிய திருவீரவாகு புலவர் சட்டம்பியார் தமது ஊரில் தாமும் திண்ணைப்பள்ளிக்கூடம் 1907ல் அமைப்பித்துச் சமய போதனைகள், புராண படலங்கள் போதித்துச் சிறப்படைய செய்தமையும் போற்றற்குரியனவாகும். இதன் விளக்கப் பாடல்கள் பிரான்பற்று பெரிய வளவு முருகனின் வரலாற்றுப் பதிகத்தில் காணக்கூடியதாக இருக்கிறது. அதாவது

"ஆதி சூழ் இலங்கை அதிருமொரு பதிச்சூழ்
தமிழ் மன்னன் சங்கிலியன்
தன் பணி பொன் வடபுரத் தேரி சூழ்
களனி வயல் பிரான் பற்றூர் மேவி நிற்கும்
கந்த கோட்டம்"

என்ற பாடல் இதனைச் சான்று படுத்துகிறது.

இதனைக் கண்ணுற்ற ஆங்கிலேயர் அமெரிக்க மிஷனரிமார் எமது ஊரில் 1919இல் அ.மி.த.க பள்ளிக் கூடத்தினை அமைப்பித்து மக்களின் கல்வியை விருத்தியடையச் செய்தார்கள். இதன் விளைவாக கல்வியில் முன்னேறியவர்கள் தமது பாரம்பரியத் தொழிலாகிய நல்லெண்ணெய் வடித்தலை சூத்திரத்தில் எருது பூட்டி வடித்தார்கள். தற்போது சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினர் சுயதொழில் கடன் வசதித் திட்டங்களூடாக விஞ்ஞான ரீதியில் இயந்திரம் இணைக்கப்பட்டு மக்களின் வாழ்வாதாரத்தில் பெரு முன்னேற்றம் கண்டுள்ளார்கள். இதனால் கமநல சேவையுடன், தோட்டப் பயிர்ச் செய்கை, வியாபாரத் தொடர்புகள் மிக சிறப்படைந்துள்ளன. முன்பு கிராமசபையாக இருந்த இந்த ஊர் தற்பொழுது 1962ல் பண்டத்

தரிப்புப் பட்டினசபையுடன் இணைக்கப்பட்டு வீதிகள் ஒழுங்கமைக்கப்பட்டு மின்சார வசதிகள் பெறப்பட்டுள்ளன. நெல் வயல் கமச் செய்கை, தோட்டப் பயிர்செய்கை, வெங்காயம், மிளகாய், கத்தரி போன்ற பயிர்களும், வீட்டுத் தோட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. நவீன முறையில் நல்லெண்ணெய் உற்பத்தி ஒழுங்காகச் செய்வதற்காகச் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஒழுங்கு படுத்திக் கொடுத்துள்ளமையும் போற்றற்குரியதாகும். அமெரிக்க மிஷன் த.க பாடசாலை 2003ல் தரமுயர்த்தப்பட்டுக் "கலைமகள் வித்தியாலயம்" என்ற பெயரில் பலதரப் பட்ட வகையில் மாணவ, மாணவிகள் 5ம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் இருந்து O/L வரையும் சிறப்புச் சித்திகள் பெற்று முன்னேற்றம் கண்டுள்ளனர்.

எனவே இக் கலைமகள் வித்தியாலயம் தரமுயர்த்தப்பட்டு 11 ஆண்டுகளுக்குள் 50 பட்டதாரிகள் பல்கலைக் கழகங்களில் இருந்து வெளியேறி பத்துக்கு மேற்பட்டோர்கள் அரசாங்கத்தில் பதவி வகிக்கின்றார்கள். இவைகள் யாவும் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் மாண்பேயாகும். அத்துடன் பிரான்பற்று எல்லை மருங்கில் தான் பண்டத்தரிப்பு பொதுச் சந்தையும் அமைந்துள்ளது. ஆதலால் வியாபாரத்திற்கும், கொள்வனவிற்கும், போக்குவரத்திற்கும் வசதியாகத் திகழ்கின்றது இப் பிரதேசம்.

இப்பிரான்பற்றுப் பிரதேசம் மக்களுக்குத் தேவையான சகல வசதிகளும் நிறையப் பெற்றுள்ளது. கல்விக்கேற்ப அரச முன்பள்ளி பாலர் பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம், சமுர்த்தி வங்கி, சுதேசிய ஆயுள் வேத வைத்தியசாலை, தடாகம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பிரதேச செயலக தொழில் நுட்பப் பயிற்சிப் பாடசாலைகள், பாடசாலை விளையாட்டரங்கு, நூலக சேவை, படிப்பகம், சைவசமய ஆலயங்கள் உள்ளடக்கப்பட்டதாக பிரான்பற்றூர் இருப்பதும் சிறப்பிற்குரியதாகும். இவையனைத்தும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் நிர்வாகத்திறன் என்று பொருத்தமுடையதாகும். பல அறிஞர்களையும், கல்விமான்களையும், கலைஞர்களையும், சமூக சேவையாளர்களையும் ஆக்கித் தந்த பிரான்பற்று பிரதேசத்தின் அபிவிருத்தி மேலும் சமூக, பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களை விரிவுபடுத்துவதுடன் உலகமயமாக்கல், நவீன தொழில்நுட்பம் போன்ற அனைத்துத் துறைகளிற்க்கும் ஈடு கொடுக்கத் தக்க வகையில் மேன்மைய டையச் செய்ய வேண்டும். இதுவே எங்கள் திட சங்கற்பமாக அமைய இறைவனை வேண்டி உறுதி கொள்வோமாக.

**- தெய்வேந்திரம்** (J.P.)

## சண்டிலிப்பாய்

சண்டிலிப்பாய் சரித்திரம் படைத்த ஒரு சிறந்த கிராமம். அளவெட்டி, மாசியப்பிட்டி, கந்தரோடை, சங்குவேலி, மானிப்பாய், அராலி, நவாலி, சங்கரத்தை, சங்கானை ஆகிய கிராமங்கள் சூழப் பெற்று மிளிர்கின்றது.

இக்கிராமத்திற்கு முன்னே வழங்கிய பெயர் சாண்டிருப்பாய் என்பதாகும். பழைய

உறுதிகளில் 'சா' என்ற நெட்டெழுத்திலுள்ள அரவுக்குறி அழிந்து சண்டிருப்பாய் என எழுதப்பட்டிருப்பதை நாம் இன்று காணலாம். காலகதியில் இதன் பெயர் மருவிச் சண்டிலிப்பாய் என்று வழங்கி வருகின்றது. இங்குள்ள பழங்குடிகள் செல்வம் படைத்த வீரபுருடர்களாகத் திகழ்ந்தார்கள். இக்கிராமத்தின் வளம் சொல்லும் தரத்தன்று. ஒருபுறம் வயலும் மறுபுறம் தோட்டமும் நிறைந்துள்ள இக் கிராமத்தில் வயல் விளைந்து பஞ்சமில் லாத சோறு வழங்கியது. தோட்டநிலம், மரக்கறி வகைகள், குரக்கன், சாமை, வரகு போன்ற வேறு பயன்களையும் தந்தது. எனவே பஞ்சமில்லாத கமக்காரர்களாக இக்கிராமத்தார் வாழ்ந்தார்கள். பழங்குடி மக்கள் வீரத் தெய்வமாகிய வீரபத்திரர் கோவிலை யமைத்து ஒழுங்காகப் பூசைகள் நடத்துவித்தார்கள். அக்கோவிலில் ஒரு விசேடம் ஒவ்வொரு வருடமும் கந்தபுராணப் படிப்பு நடைபெறுவது வழக்கம். 'புத்தர் பண்டாரம்' என்றழைக்கப் படும் ஒரு வயதான மனிதர் கந்தபுராணத்தில் கரைகண்டு திளைத்த மனிதர். படிப்புக்குப் பயன் சொல்லு வார். ஒருவர் பாட்டை வாசிக்க அவர் பயன் சொல்லுவர். சிலசமயங்களில் பாட்டும் பயனும் தானாகவே சொல்லி முடிப்பார். அந்தக்காலம் பலர் கூடியிருந்து படிப்பு கேட்பார் கள். அவர் மரணத்தின் பின் படிப்பும் மங்கிப்போனது.

சண்டிலிப்பாயின் மத்தி கல்வளை. அங்குள்ள வயலும் வயல் சார்ந்த நிலத்தின் கரையோரமாகப் பிள்ளையார் கோவில் ஒன்றுண்டு அதனைக் கல்வளைப் பிள்ளையார் கோவில் என்று அழைப்பார்கள். இது பண்டு சரித்திரச் சிறப்பு மிக்க கோவில். சின்னத் தம்பிப்புலவரால் அந்தாதி பாடப்பட்ட கோவில். இந் நூலின் பெயர் கல்வளை அந்தாதி. சிறு வயது தொட்டே கவிபாடும் திறமை பூண்ட சின்னத்தம்பியின் கல்வளை அந்தாதி பாராட்டிற்குரிய நூலாகும்.

வடக்குச் சண்டிலிப்பாய் இரட்டையர் புலம் வைரவர் ஆலயம் மிகச் சிறு கோவில் இரட்டையர் யார் என்று அறியமுடியாதுள்ளது. அவ் ஆலயத்திற்கண்மையில் இருந்த ஆல் இரட்டை ஆலாக நின்றதால் இவ்வாறு பெயர் பெற்றிருக்கலாம் போலத் தெரிகிறது. அந்தக் கோவிலில் பெரிய வேள்வியின் போது ஐநூறு, அறுநூறு ஆடுகள், கோழிகள் பலியிடுகின்ற கோவில். வேள்வியை ஆதரிப்பவர்களும் இருந்திருக்கிறார்கள். அதை வெறுப்பவரும் இருந்திருக்கிறார்கள். அதனுள் கொஞ்சம் முறுகல் நிலை. இதையறிந்த கதிரவேலுச் சிறாப்பர் ஒரு வேள்வித் தினத்தன்று இங்கு வந்து இவ்வேள்வியை நிறுத்தி வைத்தார். அங்குள்ள மக்கள் கல்வி கற்பதற்கு ஒரு பாடசாலை இல்லாத நிலையை உணர்ந்தார். அவர்களுக்கு அந்த இடத்தில் ஒரு பாடசாலை கட்டித்தருவதாக வாக்குறுதியளித்தார். கட்டிக் கொடுத்தார். இப்பாடசாலையை தாயார் சிதம்பரத்தின் ஞாபகார்த்தமாகக் கட்டினார். பாடசாலை வாயில் மதிலில் உள்ள கல்லில் இவ்வாறு பொறிக்கப்பட்டு ள்ளது.

இவ்வித்தியாசாலையும் தண்ணீர் தொட்டியும் சுப்பிரமணிய பாரதியார் சிதம்பரத்தின் உபயம் என்பது. மக்களை நல்வழிப் படுத்தக் கட்டிய பாடசாலை என்பதைப் புலப் படுத்துவதற்காக இதற்கு "சைவ சன்மார்க்க வித்தியாசாலை" என நாமம் சூட்டினார். கீரிமலையில் ஒரு மடத்தையும் கட்டினார். அங்குள்ள நகுலேஸ்வர தண்ணீர்ப்பந்தலும்

சைவ சன்மார்க்க வித்தியாசாலையும் மட தர்மம் என்று உறுதியில் எழுதப்பட்டுள்ளது. பாடசாலைக்கு நூற்றாண்டு விழா முடிவுற் றுள்ளது. அரசாங்கம் அமைத்த புதிய கட்டடத் தில் இப்போது வகுப்புக்கள் நடைபெறுகின் றன. மடம் யுத்த கால நிலையால் மிகவும் பழுதடைந்துள்ளது. கதிரவேலுச்சிறாப்பர் தண்ணீர்த் தொட்டி வந்ததும் அதன் முன்னர் உள்ள கேணியின் பாவிப்பு முடிவடைந் துள்ளது. இன்று தொட்டி யும் பாவனை அற்று உள்ளது.

சீரணி நாகம்மாள் ஆலயம் சண்டிலிப்பாயிலுள்ள ஆலயங்கள் எல்லா வற்றிலும் மிக உன்னதமாக உள்ளது. இவ் ஆலயத்துக்குப் பல இடங்களில் இருந்தும் நேர்த்திக்கடன் முடிப்பதற்கு மக்கள் கூட்டம் தினமும் வந்து கொண்டே இருக்கும். இக்கோவில் நிர்வாகம் மிகவும் திறமையாக செயற்பட்டுக் கோவிலை நல்ல நிலையில் வைத்துள்ளது.

ஆலயங்களால் சிறப்புற்ற சண்டிலிப் பாயில் கிராமத்தைச் சிறப்பிக்கும் பாடசாலை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாகும். பழைய இராசா பாடசாலையும் வாணி நிகேதன் வித்தியாசாலையும் சேர்ந்து தான் இன்றைய இந்துக் கல்லூரியாக உயர்ந்துள் ளது. இன்று கல்வியில் மாத்திரமல்ல சகல துறைகளிலும் முன்னிற்கிறது. எல்லாவற்றிற் கும் மேலாகச் சண்டிலிப்பாய் பிரதேச செயல கம் எமது கிராமத்துக்கு ஆற்றி வரும் தொண்டி னிலே இக்கிராமம் சிறப்புற்று விளங்குகிறது. மேலும் மேலும் சிறப்புற இறையருளை வேண்டி நிற்கின்றோம்.

**மாகியப்பிட்டி**

தென்னிந்தியாவில் மதுரை மா நிலப் பகுதியை ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர் பரம்பரையின் வழி வந்த மக்கள் அங்கு கண்ணகித் தெய்வத்தை வழிபட்டு வந்தனர். அவர்களின் வழித்தோன்றல்களின் ஒரு பகுதியினர் வாசனைத் திரவியம் தேடும் நோக்கமாக மதுரையிலிருந்து இலங்கா புரிக்குக் குதிரைகள் மூலம் பிரயாணம் செய்தனர். அக்காலத்தில் இந்தியா இராமேஸ வரம் தொடக்கம் இலங்காபுரியிலுள்ள யாழ். குடாநாடு வரை நீர்ப்பகுதி இல்லை. இரு நிலப் பரப்பாகவே இணைந்து இருந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. நீண்ட காலத்தின் பின் கடல் நீரால் பிரிக்கப்பட்டது. நிலப்பரப்பாக இருந்த காலத்தில் மதுரையிலிருந்து இராமேஸ்வரம் புறப்பட்டு யாழ்ப்பாணப் பகுதிக்குத் தரை மார்க்கமா கவே குதிரைகளில் பிரயாணம் செய்தனர். யாழ்.பகுதிக்கு முதலில் "மாதகல்" என்ற கிராமத்தை வந்த டைந்து அங்கு தங்கி இளைப்பாறிய பின் பிரயாணத்தைத் தொடங்கினர்.

தரை மார்க்கமாகக் குதிரைகளில் புறப்பட்டு மாகியப்பிட்டிக் கிராமத்தை வந்த டைந்தனர். கண்ணகி வழிபாட்டுடன் வந்த பிரயாணிகள் மாகியப்பிட்டிக் கிராமத்தில் கண்ணகி தெய்வத்தை அவ்விடத்தில் வைத்து வழிபட்டனர்.

கோவில் பகுதியிலுள்ள நிலப்பகுதி மேட்டுப்பிட்டியாகும். இப்பகுதி நிலப்பரப்பு வயல் நிலப்பரப்பாக இருந்தது. இது வெள்ளம் தங்கி நிற்காத பகுதியாகும். இதனைக் குதிரை கள் கட்டுவதற்குப் பொருத்தமான இடமாகத் தெரிந்து கொண்டார்கள். மேட்டுப்பிட்டியின்

அருகாமையில் இயற்கையான நீர் நிலையும் இருந்தது. குதிரைகள் நீர் குடிப்பதற்கு வாய்ப்பாக இருந்தது.

அக்குளம் கண்ணகை அம்மன் குளம் எனவும், தற்பொழுது வழுக்கை ஆறு எனவும் கூறப்படுகின்றது. கோவிலைச் சூழ உள்ள நிலப்பரப்பையும் தமதாக்கிக் கொண்டார்கள். குதிரைகளை மேட்டுப்பிட்டியில் கட்டியே பராமரித்தனர்.

"மா" என்றால் குதிரை மேட்டுப் பிட்டியில் குதிரைகளைக் கட்டிப் பராமரித்த படியால் மாகியப்பிட்டி என்ற பெயர் வந்தது, என வரலாறு கூறுகிறது. குதிரைகளைக் கட்டிய இடம் தான் மாகியப்பிட்டியாகும். இதுவே வரலாறும் ஆகும்.

**- ஐ.மார்க்கண்டன்** (J.P.)

**மானிப்பாய்**

மானிப்பாய் நகரின் வளர்ச்சி 17ம் நூற்றாண்டில் இருந்து பிரான்ஸிஸ்கன் பாதிரிகளின் நடவடிக்கைகளுடனும் 19ம் நூற்றாண்டில் அமெரிக்கன் மிஷனரிமார்களின் நட வடிக்கைகளுடனும் இணைந்து நிற்பதைக் காணலாம். நகரின் வளர்ச்சிக்கு மானிப்பாயில் அமைந்துள்ள கிறீன் ஞாபகார்த்த மருத்துவக் கல்லூரி மற்றும் கல்விச் சேவை வளர்ச்சிகளும் உதவியாக இருந்தன. இப்பிரதேசத்தின் கல்வி சுகாதார நிறுவனங்களின் வளர்ச்சியால் இப் பிரதேசத்தின் மக்கள் கல்வியில் மற்றைய பகுதி மக்களிலும் பார்க்க முன்னணியில் நிற்க முடிந்தது. பிற பகுதியிலிருந்து மக்கள் சுகாதார சேவையைப் பெறுவதற்கு மானிப்பாயை நாடினர். (பொ. பாலசுந்தரம் பிள்ளை. 2008)

இந் நகரப்பகுதி மக்கள் 19ம் நூற்றாண்டிலிருந்து கொழும்பு நகரப்பகுதியில் அரச வணிக சேவைகளில் முக்கிய இடத்தைப் பெறத் தொடங்கினர். பலர் கொழும்பில் பிரபலமான தரகர்களாகவும் வர்த்தகர்களாகவும் இருந்துள்ளனர். சேர். பொன்னம்பலம் இராமநாதன் குடும்பத்தவர்கள் அவரது உறவினர்கள் மற்றும் இலங்கையில் 19ம், 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசியல் , சமூக பொருளாதார நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் முன்னணி வகித்த பலரும் மானிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்தோராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (பொ. பாலசுந்தரம்பிள்ளை. 2008). இத்தகைய சமூக, பொருளாதார பின்னணியில் இந்நகர் கொழும்புத் தொடர்பைக் கூடுதலாக பெற்றிருந்ததால் இந்நகர் கல்வி, செல்வம், நாகரிகத்தில் யாழ்ப்பாணத்தின் கறுவாக்காடு என அழைக்கப் பட்டது.

இந்நகர் 1950ம் ஆண்டு மானிப்பாய், கிராமசபை பகுதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு 07 வட்டாரங்கள் கொண்ட பட்டின சபையாக மாற்றப்பட்டது. ஏழு வட்டாரங்களும் கட் டுடை இராஜகாரிய வீதி, வைத்தியசாலை, நாகர் கோவில், கல்லூரி, வேலக்கை பிள்ளையார் கோவில், சந்தை என்பன மானிப்பாய் பட்டினசபைப் பிரதேச எல்லைகளாகும். அதாவது J/137, மானிப்பாய் வடக்கு, J/138 மானிப்பாய் கிழக்கு, J/139 மானிப்பாய் தெற்கு, J/140 மானிப்பாய் மேற்கு என்பன இதிலடங்கும்.

மானிப்பாய்க் கிராமசபைப் பகுதி மானிப்பாய் நகரசபைப் பகுதி நீங்கலாக சண்டி லிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது.(பொ. பாலசுந்தரம்பிள்ளை. 2008). இந் நகர மானது 4.67 சதுரக்கிலோ மீற்றர் பரப்பை கொண்டதாகவும் இதனது வடமேற்கு வடகிழக்கு பகுதிகள் ஓரளவு தாழ் நிலப் பகுதி களாகவும் நெற்செய்கைப் பகுதியாகவும் உள்ளன. இந்நகரில் வடமேற்கு திசையில் சற்று தொலைவில் வழுக்கையாறு கட்டுடை ஊடாக நவாலி வழி சென்று அராலிப் பகுதியில் யாழ் கடனீரேரியுடன் கலக்கின்றது.

இந் நகர் அமைந்துள்ள இடம் விவ சாயத்திற்குப் பொருத்தமற்றது. நகரின் வடக்குக் கிழக்குத் தெற்குப் பகுதிகளின் தரை உயரமானதாக இருப்பது இதற்குக் காரண மாகும். இதனால் இது நகர குடியிருப்பாக வளர காரணமாகியது.ஆரம்பத்தில் இந்நகர் சேவை மையமாக வளர்ந்து வந்த போதும் தற் காலத்தில் வர்த்தக சேவைமையமாக தொழிற்பட்டு வளர்ச்சியடைந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.2002ம் ஆண்டு களின் பின் வணிகக் கட்டடங்கள் அடுக்கு மாடிகளாக வளர்ச்சியை எய்திவருகின்றன. வலிகாமம் மேற்கு நிலத்திணிவில் பாரிய வர்த்தக மையமாக வளர்ந்து வரும் இந் நகரினது வளர்ச்சிக்குப் பல தனியார் வங்கி களின் சேவைகள் உறுதுணையாக நிற்கின் றன. இதனைவிட கல்வித்துறையில் யாழ். மாவட்டத்தில் அமைவு பெற்றுள்ள ஒரே ஒரு சர்வதேச பாடசாலையும் இங்கு அமைவு பெற்றுள்ளமை நகரின் வளர்ச்சிக்கு மேலும் வலுச்சேர்கின்றது.

**- திருமதி ரவிச்சந்திரன் பிலோமினா**

**சுதுமலை**

"சுதுமலை" என்னும் கிராமம் வலி காமம் தென்மேற்கில் எல்லோராலும் அறிந்த புகழ் பெற்ற பெரிய கிராமம் ஆகும். இக்கிரா மம், மானிப்பாய், உடுவில், இணுவில், தாவடி, ஆனைக்கோட்டை ஆகிய கிராமங் களின் மத்தியில் ஓர் உயரிய கிராமமாக விளங்குகின்றது. இது ஒன்றரை மைல் விஸ்தீரணமும், கிட்டத்தட்ட நான்காயிரம் மக்களை உள்ளடக்கிய கிராமமுமாகும். இக் கிராமத்தில் எச்சாட்டி, குரங்கிலிப்பான், சாவற்கட்டு, விளாப் பிடை, கெல்லாவில், மாவத்தை, பந்தியடி, குண்டடி, புளிசிட்டி, தாத்தாவத்தை, வெள்ளுவடி என்பதாகப் பல குறிச்சிகள் இருந்தன. தற்சமயம் மாவட்ட நிர்வாகத் தேவைகளுக்காக "சுதுமலை தெற்கு - யா130", "சுதுமலை வடக்கு - யா/ 129" என இரு கிராமசேவை உத்தியோகத் தர்களின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளது. இக் கிராமத் திற்குத் "சுதுவையம்பதி", "சுதுவைநகர்", "சுதுகிரி" எனப் பல பெயர்கள் உண்டு. ஆனால் "சுதுமலை" என்னும் பெயரே வழக்கிலுள்ளது. சுத்த நீரோடைகளும், மா, பலா, தென்னை, வாழை, கமுகு, பனை முதலிய தாவரங்களும், சிறப்புற்றோங்கும் கண்கவர் வனப்புக்கள் மிகுந்த கிராமமாக இக்கிராமம் விளங்குகிறது.

யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து காங்கேசன்துறை வீதியால் மூன்று மைல் தூரம் வந்து மானிப்பாய் தாவடிச் சந்தியால் திரும்பி 3/4 மைல் தூரம் வரை வந்தால் இக் கிரா மத்தை வந்தடையலாம். அல்லது யாழ்ப் பாண பட்டினத்திலிருந்து மானிப்பாய் வீதி யால் சென்று மானிப்பாய் கிறிஸ்தவ கோயில்

அருகாமையிலுள்ள சந்தியால் திரும்பி இக் கிராமத்தை அடையலாம்.

இக் கிராமம் ஒரு தெய்வீகமான பூசிக் கத்தக்க கிராமமாகும். அதாவது "சுதுமலை" என்னும் உட்பொருளை நோக்கும் பொழுது, "சுதுமலை" என்பதை "சுது+மலை" எனப் பிரிக்கப்பட்டு, சுது என்பதன் பொருள் "புனித மான", "பூசிக்கத்தக்க", "தெய்வீகமான", என் பதாகவும், மலை என்பதன் பொருள் "சங்கு கள் மலைக்குகை போன்றன நிறைந்த இடம்" அல்லது "சங்குப்புற்றுக்கள்;" மலைக்குகை போன்றன நிறைந்த இடம் என்பதாகவும் தொனித்து நிற்கின்றது. இக் கிராமத்தில் சங்கு கள் புற்றுக்களாக, குவியல் குவியல்களாக, வரிசை வரிசையாக நிறைந்திருந்தன. இப்படியாக இருந்த இடம் "சங்களை" என் பதாக அழைக்கப்படுகின்றது. அஃதாவது, "சங்கு+அளை" எனப் பிரித்தால், "அளை" என்பது "மலைக்குகை" அல்லது "புற்று" என்பதாகும். இவ்விடம் "கண்ணகி" களை தீர்த்த இடமாகக் கருத்திற் கொண்டு, இவ்வூர் மக்களால் தங்கு சங்களை என்பதாக அழைக்கப்பெற்று வணங்கப்பட்டு வருகின் றது. சங்குகள் நிறைந்து காணப் பட்டமைக்குக் கீழே தரப்ப டும் பாடல் சான்றாகும்.

"தொடர்சங்கு சூழ் சங்களை,
தருவளர் தண்டலை சூழ் சங்களை,
போதிலகும் பொழில்துறை சங்களை,
வம்புமலர் வளஞ்செறி சங்களை,
மாமலிகூர் வளஞ்செறி சூழ் சங்களை,
தருவளர் சோலைகள் சூழ் சங்களை,
குறையாத வளஞ்செறி சங்களை
புலவரியல் பாடிய சங்களை,
களமர்களே ருழவுறு சங்களை,
பச்சைமரம் பொழிலுறு சங்களை,"

"சுது கங்கை" என்பதன் பொருளைச் சற்று நோக்குவோமானால், "தீர்த்தம்" என்பதன் பொருள் "புண்ணிய நீர்த்துறை" அல்லது "பரிசுத்த நீர்" என்பதாகும். கங்கைக்கு மேற் பட்ட நதியில்லை. கங்கையுடன் "சுது" சேர்க்கப்பட்டு "சுதுகங்கை" என்பதாகக் கூறும் பொழுது "புனிதமான நீர்த்துறை", "பூசிக்கத்தக்க நீர்த்துறை" அல்லது "புண்ணிய நீர்த்துறை" அல்லது "பரிசுத்த நீர்த்துறை" என்னும் கருத்துக்கள் புலப் படுகின்றன. இதே போன்று, சங்கின் பெருமையைச் சைவ மக்கள் நன்குணர்வர். சங்கின் நிறம் வெள்ளை. சங்கு ஆலயங்களில் ஓர் புனிதமான சின்னமாகக் கருதப் பட்டுச் சைவ மக்களால் வணங்கப்பெற்று வரு கின்றது. சங்கின் பெருமையை உணர்ந்து திருக்குற்றாலத்து யோகபீடநாயகி திருக் கோயில் சங்கு வடிவில் மலையடிவாரப் பகுதி யில் அமைந்து பெருங்கோயிலாக விளங்கு கின்றது.

சங்கின் பெருமையைக் கூறுவதா கில் கூறிக்கொண்டே போகலாம். எனவே "சுதுமலை" என்பதன் பொருளும் "சுது+மலை" எனப் பிரிக்கப்பட்டு, "புனித மான"/ "பூசிக்கத்தக்க"/ "தெய்வீகமான" "சங்குகள் மலைக்குகை போல்" போன்று நிறைந்த இடம் அல்லது "சங்குப் புற்றுக்கள் மலைக்குகைபோல் நிறைந்த இடம்" என்னும் உள் விளக்கத்துடன் தொனிக்கின்றது.

இந்தத் தெய்வீக பூமியில், ஆதி தொடக்கம் வாழ்ந்த, வாழுகின்ற மக்கள் தொடர்பாகக் கூறுவதாகில், இக்கிராமத்தில் சிவபூசை துரந்தரர்கள், சைவசாரம் குன்றாத வர்கள், கல்வி ஒழுக்கங்களிலே சிறந்த

வர்கள், வைத்திய சாஸ்திரத்திலும் மாந்திரீக வித்தையிலும் வல்லமை உடையவர்கள், பலராலும் மதிக்கப்பட்ட பிரபுக்கள் வாழ்ந்திருக் கின்றார்கள், வாழ்கின்றார்கள்.

சுதுமலை வாழ் மக்கள் அன்று தொடக்கம் சைவத்தையும் தமிழையும் தம் உயிரெனப் பேணிக் காத்து வந்தார்கள் என்பதற்குச் சான்றாக, சுதுமலை வாசியான வித்துவான் வைரவநாதபிள்ளை விஸ்வநாத பிள்ளையவர்கள், தான் கிறீஸ்தவ சமயத் தைத் தழுவிய வேளை, தெரியாத்தனமாகச் சைவசமய கண்டனம் செய்த நாவிற்குப் பிரா யச்சித்த தண்டனையாகச் சிதம்பரக் கோயி லிலே, நடராசப் பெருமான் சந்நிதியில் பொன் னூசி காய்ச்சி தமது நாவினைச் சுட்டுச் சைவ சமயத்தைத் தழுவிக் கொண்டார். இவரே சென்னைப் பல்கலைக்கழக முதற்பட்டதாரி களுள் ஒருவர். மற்றையவர் தாமோதரம் பிள்ளையவர்கள் ஆவார். விஸ்வநாத பிள்ளை அவர்கள், ஆங்கில தமிழ் அகராதி, வீசகணிதம், தமிழ்ப் பஞ்சாங்கம், சுப்பிரதீபம், கால தீபிகை (அச்சேறவில்லை) போன்ற நூல் களை எழுதியுள்ளார்.

மேலும், இக்கிராமத்தில் விநாயகர் புலவர், திரு. வ. இராமலிங்கப்பிள்ளை, ஸ்ரீமான் க. முத்துக்குமார், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை ஸ்தாபகராகிய உயர் திரு. ஸ்ரீமான் ஆறுமுகம்பிள்ளை சிந்மய பிள்ளை போன்றோர் சமகாலத்தில், வாழ்ந்து சைவமும், தமிழும் ஓங்கிச் செழித்து வளர அரும் பாடுபட்டவராவார்கள். வைத்தியர் ஸ்ரீமான் கதிரவேற்பிள்ளை, ஸ்ரீ முத்துக் குமாரு முதலியார், குழந்தைச் சட்டம்பியார், குலநாயகப்பாண முதலியார், குமாரவேல் உடையார் போன்றோரும் வாழ்ந்திருக் கின்றார்கள். மேலும் வைத்தியர் நா. அண்ணாமலை, வைத்தியர் பொ.தியாகராஜ ஐயர், வைத்தியர்.பொ.அம்பலவாணர், வைத் தியர் நா.பூரணபசுபதாபிள்ளை, வைத்தியர் நா.சிற்சபேசன், போன்ற பலர் வாழ்ந்து பல வழிகளிலும் சுதுமலையென் னும் எங்கள் கிராமம் சிறந்து ஓங்கி வளர அரும் பாடுபட்ட வர்களாவர். தற்சமயம் நா.பூரண பசுபதா பிள்ளை வைத்தியரின் மகன் உரோ மேஸ்வரன் அவர்கள் தனது தந்தையின் தொழிலையே தொடர்ந்து செய்ய வேண்டு மென்னும் நன்நோக்குடன் அரசாங்க உத்தி யோகங்கள் பல கிடைத்தும் அவற்றை உதா சீனம் செய்து வைத்தியத் தொழில் புரிந்து புகழ்பெற்று விளங்குகின்றார். இவர் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகப் பேரவையிலும் மூன்று வருடங்கள் அங்கத்தவராகச் சேவை யாற்றியுள்ளார்.

இக் கிராமத்தில் யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், யா/சுதுமலை வடக்கு தமிழ் கலவன் வித்தியாலயம், யா/சுதுமலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, ஆகிய கல்விக் கூடங்கள் சுதுமலை வாழ் மக்கள் ஒழுக்க சீலர்களாகவும், கல்வியிற் சிறந்தவர் களாகவும் வாழ வழிகாட்டி நிற்கின்றன. இவற் றுள் யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியா சாலை சிரேஷ்ட பாடசாலைப் பத்திர நிலைப் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் ஓர் சிறந்த பாடசாலையாகத் திகழ்கின்றது. இவை மட்டுமல்லாமல், விளையாட்டுத்துறை, இசை, நடனம் நாடகத் துறையிலும் சிறப்புற்று ஓங்கி வளர்ந்து யாழ்ப்பாணத்தில் தனது புகழ், மற்றைய பாடசாலைகளுக்குக் குறைந் ததல்ல என நிரூபித்து நிற்கின்றது.

மேலும் நாவலர் பாலர் பாடசாலை என்னும் முன்பள்ளி, நாவலர் சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் பொறுப்பேற்று மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றமை இங்கு நோக்கற்பாலது. நாவலர் சனசமூக நிலையத்தில் ஒவ்வொரு வருடமும் மூன்று முதியோரைக் கௌரவித்து வருகின்றனர். சுதுமலைக் கிராமத்திலுள்ள சுதுமலை வாசிகசாலையும் சனசமூகநிலையமும், நாவலர் சனசமூக நிலையம், ஜனசக்தி சனசமூக நிலையம், நாமகள் சனசமூக நிலையம் ஆகிய சனசமூக நிலையங்கள் சுதுமலைக் கிராமங்களின் முன்னேற்றத்திற் காக அரும்பாடுபட்டு வருகின்றன. இக் கிராமத் தில் சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், விஷாலாட்சி சமேத விஸ்வநாதர் தேவாலயம், சுதுமலை முருக மூர்த்தி ஆலயம், புட்டியல் வைரவர் ஆலயம், சுதுமலை தெற்கு எச்சாட்டி வைரவர் ஆலயம், சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவர் ஆலயம் போன்ற திருக் கோயில்கள் தெய்வீகமணம் வீசி நிற்கின்றன.

இக் கிராமத்தில் வாழும் மக்கள் கல்வியிற் சிறந்தவர்களாகவும், ஒழுக்க சீலர்க ளாகவும், சமய உணர்வு மிகுந்தவர்களா கவும் காணப்படுகின்றனர். கல்விப் பணிப் பாளராகக் கடமையாற்றி இளைப்பாறியுள்ள செல்வி பத்மாசினி ஆறுமுகம், ஜனாதிபதி ஆலோசர்களாக உயர்ந்து விளங்கிய இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் களாகிய திருவாளர்கள் எஸ். சிவதாசன், எஸ். சிவலோகேஸ்வரன் ஆகியோர் சுதுமலைக் குப் பெருமை தேடித்தந்தவராவார்கள். சுதுமலைக் கிராமம் அதிபர்கள், ஆசிரியர்கள், நிறைந்த இடமாகும். ஆகையினாலேயே, சுதுமலை வாழ் சிறார்கள் கல்வியில் சிறந்து முன்னிலையில் நின்று தங்கள் கிராமத்திற் குப் பெயரும் புகழும் பெற்றுத் தந்த வண்ண மிருக்கின்றனர்.

மேலும், சுதுமலை வடக்கைச் சேர்ந்த கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன், ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் அவர்கள், ஹைதராபாத் பல்கலைக்கழகத்தால் சமீபத்தில் ஆங்கிலத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். இவர் பல ஆங்கில, தமிழ்ப் புத்தகங்கள் எழுதி யுள்ளார். திரு. ஐயாத்துரை சாந்தன் பல புனை கதைகளையெழுதி, விருதுகளும் பெற்றுள் ளார். சமீபத்தில் இந்தியாவில் நடை பெற்ற செம்மொழி மகாநாட்டில் திரு. ஈஸ்வரநாத பிள்ளை குமரன், தமிழ் சிரேஷ்ட விரிவுரை யாளர் அவர்கள் பங்குபற்றி ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்துள்ளார். இதே போன்று இன்று சுதுமலையில் வாழும் பல இளைஞர்கள், தாங்கள் முன்னவர்களுக்குச் சளைத்தவரல் லர் எனக் கல்வியில் சிறந்து ஓங்கி விளங்கு கின்றார்கள் என்பது பெருமைக்குரிய விடய மாகும். மேலும் முன்னாள் யாழ்ப்பாண அரச அதிபராகவிருந்த திருமதி இமெல்டா சுகுமார் அவர்களும் சுதுமலையில் பிறந்து வளர்ந்தவராவர்.

மேலும், சுதுமலையில் புராண படனத்தை நடத்தி வழி வழியாக இளைஞர் கள் தலைமுறைக்கு வழிகாட்டி மறைந்தவர் கள் வரிசையில் சிவசிறி த. பொன்னுச்சாமிக் குருக்கள், பண்டிதர் சி. துரை, பெரியார் சின்னப்பு, பெரியதம்பி உபாத்தியாயர், திரு. கந்தையா கணபதிப்பிள்ளை, திரு.க. கண பதிப்பிள்ளை, திரு.க.பேரம்பலம் உபாத்தி யாயர், திரு. க. நடேசர், புராணபடன வித்தகர்

செல்லையா கந்தையா, சேதுகாவலர் பொன்னம்பலம் உபாத்தியாயர் ஆகியோராவர். இவர்கள் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் சைவ உணர்ச்சியுடன் புராண படலத்தை நடத்திப் புகழ் பெற்றவர்களாவார்கள்.

சுதுமலை வாழ் இளைஞர்கள் தாங்கள் சகல வழிகளிலும் முன்னேற வேண்டும் என்ற மனப்பான்மையுடன் பல விளையாட்டுக் கழகங்கள் அமைத்து விளையாட்டிலும் முன்னேறி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக, "சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகம்", சுதுமலை வாழ் சிறார்களுக்கு மட்டுமல்லாது அயற் கிராமங்களிலுள்ள சிறார்களுக்கும், சமயப் பரீட்சை வருடா வருடம் நடாத்திப் பரீட்சையில் விசேட சித்தி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கி, சமயத்தையும் விளையாட்டுடன் சேர்த்து வளர்த்து வருகின்றமை பெருமைக்குரியதாகும். ஜனசக்தி சனசமூக நிலையமும் வருடா வருடம்விளையாட்டுப் போட்டி நடாத்தி மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி வருகின்றன. சுதுமலை சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் வருடாவருடம் தாச்சிப் போட்டி நடாத்திப்பெயர் பெற்று வருகின்றது.

இப்படியாக, எங்கள் சுதுமலைக் கிராமம் சகல வழிகளிலும் முன்னேறி வருகின்றமை போற்றத் தக்கதாகும். மேலும், இக் கிராமம் சகல வழிகளிலும் மேலும், மேலும் ஓங்கி வளர்ந்து சிறப்புற்று விளங்க எல்லாம் வல்ல அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அருட்கடாட்சத்தை வேண்டி நிற்கின்றோம்.

**- த. காசிநாதன், M.A**

**சம்பில் துறை**

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமேற்கில் அமைந்துள்ள கிராமம் மாதகல். இக்கிராமத்தின் தென்மேற்கில் சம்பில் துறைமுகம் அமைந்துள்ளது. இத் துறைமுகப் பகுதி முருகைக் கற்பாறைகளைக் கொண்ட பிரதேசமாகும். இங்கு அமைந்துள்ள துறைமுகம் பாக்குநீரிணைப் பகுதியில் அமைந்துள்ளது. இந்தியாவின் வேதாரிணிய துறைக்கும் சம்பில் துறைக்கும் இடையில் பிரயாணம் செய்வதற்கு 4 மணித்தியாலங்கள் போதும் என்பர். இந்தியாவில் இராமநாதபுரம் மாவட்டம் அக்காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அண்மையில் இருந்ததால் பல்வேறுபட்ட கலாசார, அரசியல், குடியேற்ற தாக்கங்கள் ஏற்பட்டன.

சுமார் கி.மு 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் ஈழத்தில் நாகவம்சத்தவர்கள் வாழ்ந்ததாகவும் இவர்களில் வெடியரசன் நாகதீபத்தை தலைநகராகக் கொண்டு வட இலங்கையில் ஆட்சி செய்தான் என்றும் அவனது தம்பிமார் 4பேரும் வலிகாமப்பகுதியில் குறுநில மன்னர்களாக விளங்கினர் எனவும் இலக்கியங்களில் காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். பொன்னாலை சுழிபுரத்தின் வடபால் கீரிமலை மயிலிட்டி என்பன அவன் தம்பிமார் ஆண்ட பிரதேசங்கள் என்று கூறப்படுகின்றது. சுழிபுரத்தின் வடபகுதியென்பது சம்பில்துறை, மாதகல் என்பவற்றைக் குறிக்கும் எனவே வெடியரசனின் தம்பி விளங்கு தேவன் ஆட்சி சம்பில் துறைப் பட்டணத்தை உள்ளடக்கிய மாதகல் பகுதி எனச் சுட்டி நிற்கிறது.

கி.மு 3ம் நூற்றாண்டளவில் இந்தியாவில் மௌரிய பேரரசன் அசோகன் கலிங்க தேசப் படையெடுப்பில் வெற்றி கண்டான். பின்னர் மனம்மாறி அகிம்சையைப் போதித்த போதிமாதவனின் பௌத்த சமயத்திற்கு மாறினான். அவன் பௌத்தத்தைப் பரப்ப சமயத்தூதுவர்களைப் பல நாடுகளுக்கும் அனுப்பினான் கி.பி 247ம் ஆண்டளவில் அனுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு தேவநம்பியதீசன் ஆட்சி நடைபெற்றது. அவன் ஆட்சிக்காலத்தில் அசோகச் சக்கரவர்த்தியின்மகன் மகிந்ததேரர் பௌத்த சமயத்தைப் பரப்ப இலங்கைக்கு அனுப்பப்பட்டார். மகிந்ததேரர் உபதேசத்தை ஏற்றுத் தேவநம்பியதீசன் இந்துசமயத்திலிருந்து பௌத்தசமயத்திற்கு மாறினான். அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி செல்வர் என்பதற்கு அமைய மக்களும் சமயம் மாறினர். மன்னன் தேவநம்பியதீசன் கேட்டுக் கொண்டதற்கிணங்க போதிமாதவன் ஞானம் பெற்ற அரசமரக்கிளையொன்றை இலங்கைக்கு எடுத்து வந்தனர். அவ்வரச மரக்கிளையை அசோகச்சக்கரவர்த்தியின் மகள் பிக்குனி சங்கமித்தை இலங்கைக்குக் கொண்டு வந்தார். இந்தியாவின் தென்திசையிலிருந்து சம்பில் துறைமுகத்தில் அரச மரக்கிளையுடன் வந்தி றங்கியதாக பௌத்த வரலாற்றைக் கூறும் மகாவம்சம் எடுத்து கூறுகிறது. சங்கமித்தை சம்பில் துறையில் வந்திறங்கியதால் சம்பில் துறைமுகப் பட்டணத்தில் ஜம்புகோள விகாரையும் ஸமுந்தி பர்ண ஸாலாவும் தேவநம்பியதீசன் காலத்தில் கி.மு 3ம் நூற்றாண்டு கட்டப்பட்டதாக மகாவம்சத்தில் காணமுடிகின்றது.

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட காலத் திலும் சம்பில்துறைப்பட்டணம் சமயத்துடன் தொடர்பு பட்டிருப்பதைக் காணலாம். இலங்கையை கி.பி 113-135 ஆண்டு காலப் பகுதியில் கஜபாகு மன்னன் ஆட்சி செய்தான். அவனது காலத்தில் தென்னிந்தியாவில் சேரன் செங்குட்டுவன் ஆட்சி நிலவியது சேரன் செங்குட்டுவன் பத்தினிப் பெண் கண்ணகிக்கு விழா எடுத்த போது ஈழத்து கஜபாகுவும் அழைக்கப்பட்டு கலந்து கொண்டான். கஜபாகு மன்னன் அவ்விழாவில் கலந்து கொண்டு இலங்கைக்குத் திரும்பிய போது கண்ணகி சிலையை எடுத்து வந்தான். அவ்வாறு கஜபாகு மன்னன் சேர நாட்டிலிருந்து திரும்பி வந்தபோது சோழநாட்டில் இருந்து 12000 தமிழர்களை அழைத்து வந்தான் என்று சிங்கள நூலான பூஜாவலிய குறிப்பிடுகிறது. அவ்வாறு சிலையை எடுத்து வந்தபோது தென்னிந்திய கரையிலிருந்து சம்பில் துறை முகத்தில் வந்திறங்கியதாக வரலாறு தெரிவிக்கின்றது அவ்வாறு கொண்டு வரப்பட்ட கண்ணகி சிலை மாதகல் பாணாவெட்டி பகுதியில் இறக்கி வைக்கப்பட்டதால் அங்கு கண்ணகிக்கு கோயில் எழுப்பப்பட்டது இதனை வற்றாப்பளை கண்ணகியம்மன் வரலாறும் தெரிவிக்கின்றது. எனவே கண்ணகி வழிபாட்டுடனும் சம்பில் துறை தொடர்பு பட்டிருப்பதைக் காணலாம்.

வரலாற்றுக் காலம் தொடக்கம் சம்பில்துறை வர்த்தக மையமாக இருந்திருக்க வேண்டும். சிறந்த துறைமுகமாக இருந்தமையால் தான் சங்கமித்தா, கஜபாகு மன்னன் ஆகியோர் இத்துறைமுகத்தை பயன்படுத்திக் கொண்டனர். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் வர்த்தக தொடர்பு காரணமாக

இலங்கை இந்தியப் பொருட்கள் சுங்கத் தீர்வையில்லாமல் ஏற்றியிறக்கப்பட்டன. செட்டிமார் வம்சங்கள் வர்த்தகத்தில் ஈடுபாடு காட்டியதை எல்லோரும் அறிவர் இந்தியாவில் இருந்து இலங்கையில் குடியேறிய செட்டி வம் சத்தவர்களான செல்வநாயகம் செட்டி, இந்தியாவிலிருந்து மாடுகளை சம்பில் துறைமுகம் ஊடாக இறக்குமதி செய்து மாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டார். இவர் காலத்தில் சம்புநாதர் கோயில் கவனிப்பாரற்று இருந்த மையால் செட்டி செல்வநாயகம் அதனைப் புனரமைத்து பேணினார் எனப் பரம்பரைக் கதை ஒன்று மக்களால் தெரிவிக்கப் படுகின்றது. 1820ம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியின் போது சம்புநாதர் கோயிலும் திருமஞ்ஞானக் கிணறும் சிதைவடைந்தது. பின்னர் அதனைச் சதாசிவம் செட்டியார் சுழிபுரம் சாத்தாவோலையில் கோயிலை எழுப்ப தனது சொந்த காணி ஏழு பரப்பு வழங்கினார். அங்கு எழுப்பப்பட்ட சிவன் கோயிலில் சம்பில்துறை சம்பு லிங்கேஸ்வ ரத்தில் மூல மூர்த்தியாக விளங்கிய லிங்கமும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு லிங்க மும் பிரதிட்டை செய்யப்பட்டது. என சாத்தா வேலை சிவன் கோயில் வரலாறு எடுத்துரைக் கிறது. அதே வேளை சம்பில்துறை சிவன் கோயிலில் இருந்த உமாதேவியாரின் சிலை மாதகல் பாணாவெட்டி அம்மன் கோயிலில் வைக்கப்பட்டது என்ற கதையும் மக்களால் வழிவழியாகப் பேசப்பட்டு வருகின்றது. நுணசை முருகன் வரலாறு கூறிய வித்து வான் பொன். கந்தசாமி அவர்கள் சம்பில் துறையில் இருந்த இடிபாடுடைய கட்டிட கற்கள் நுணசை முருகன் ஆலய கட்டிட வேலை நடைபெற்ற போது பயன்படுத்தப்பட்டன என்பர். ஆகவே முருகன் ஆலயம் சம்பில் துறைக் கற்களைக் கொண்டு எழுதப்பட்டது எனலாம்.

இது ஈழவிடுதலைப் போராட்டம் வலுப் பெற்றதும் தடைப்பட்டது. இலங்கைப் பெருந்தோட்டங்களுக்கு இந்தியக் கூலியாட் கள் இந்திய தமிழத் தரகர் மூலம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். கள்ளத் தோணிகளின் வருகையைக் கட்டுப் படுத்த மாதகல் போதியில் காவல் நிலையம் அமைக்கப்பட்டதால் கள்ளக்கடத் தல் தடைப்பட்டது.

சம்பில் துறைமுகப் பகுதி கடற் தொழி லுக்குப் பெயர் பெற்ற இடமாகும். இங்கு பல மீனவர்கள் தமது வள்ளங்களை நிறுத்தித் தொழில் செய்தனர். தமிழர் விடுதலை போராட்டம் காரணமாக உயர் பாதுகாப்பு வல யம் அமைக்கப்பட்டுக் கடற்பிரதேசம் தடுக்கப் பட்டுப் பின்னர் சில காலங்களில் மீனவர்கள் சம்பில் துறைமுகப் பகுதியூடாகக் கடற் தொழிலுக்கு அனுமதிக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

மாதகல் சம்பில் துறைமுகம் கற்கள் நிரம்பிய இடம் ஆதலால் மாதகல் வாழ் மக்கள் முருகைக் கற்களைத் தோண்டி விற்பனை செய்தனர் என அறியமுடிகிறது. இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன் யாழ்ப் பாணக் கோட்டைகள், வீடுகள் முருகைக் கற்கள் கொண்டு கட்டப்பட்டன.

சம்பில்துறையை அண்டிய பகுதி மாதகல் மேற்கு எனப்படும். இப்பகுதி பழைய குடியிருப்புக்கள் கொண்ட பகுதியாகும். மணற் திடலான இப்பகுதி வீடுகள் நிறைந்து காணப் பட்டது. தென்னந் தோட்டங்களும் நிறைந்து

காணப்பட்டு மக்களுக்கு வருமானம் கிடைத்தது. சிலர் தென்னந் தோட்டம் அமைத்துத் தமது வருமானத்தைப் பெருக்கினர். கடல்நீர் உட்புகுந்து சுவராக மாறியுள்ள தரவை நெற்காணிகள் முன்னர் நெல் விளைச்சலுக்குப் பெயர் போனவை. மாதகல் மேற்குப் பகுதி 1992 இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப் பட்டதால் அப் பகுதியில் சகல குடிமக்களும் இடம் பெயர்ந்து சென்றனர். அது இன்று வரை உயர் பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்டு மக்கள் குடியேற அனுமதிக்கப்படவில்லை.

சம்பில் துறை தென்னிலங்கையில் பெயர் பெற்ற இடமாக விளங்குகிறது. 1992ன் பின் சம்பில் பௌத்த விகாரை, பொதுமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. 2009 தமிழர் போராட்டம் முடிவுக்கு வந்ததும் சிங்கள யாத்திரிகர் நாளாந்தம் தரிசித்துச் செல்லும் இடமாக விளங்குகிறது. நாளாந்தம் 1000ற்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் ஜம்பு கோள விகாரையைத் தரிசிக்க வருகின்றனர். இதனால் சம்பில் வரலாற்றுப் பட்டணமாக மிளிர்கிறது. சுற்றுலாவுக்கு வரும் யாத்திரிகர் நன்மை கருதிச் சுற்றுலா விடுதி கட்டுவது கட்டாய தேவையாகவுள்ளது.

### ஆனைக்கோட்டையும் அதையண்டிய பிரதேசங்களும்

பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் இரட்டைச் சகோதரர்கள் யாழ்ப்பாணத்தில் சுமார் 1300 வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் மன்னராக ஆட்சி செய்தனர் எனக் கூறப்படுகின்றது. அவ் வேளையில் இவர்களின் சேனை மிகப்பெரியயதாக இருந்தது. இவர்களின் யானைப்படை மிகப்பெரிய அளவில் உள்ளதெனக் கூறப் படுகிறது. இந்த யானைப் படைக்குரிய பந்தியை உணவு வகைகள் உள்ள இடமாகவும் மற்றும் யானைக்கு உகந்த மணற்பகுதி நிரம்பிய இடமாகவும் உள்ள ஒரே இடத்தில் அமைக்கவிரும்பினர். இவர்கள் ஆனைக் கோட்டை எனப் பெயர் சூட்டப்பட்ட இவ்விடத்தில் மணற்கும்பி நிறைந்திருப்பதையும் குடிமனை குறைந்திருப்பதையும் அறிந்தனர். அத்தோடு அருகில் உள்ள நவாலி எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கும் கிராமத்தில் நவாலிப்புல் இருப்பதையும் அறிந்தனர். அப்போது யானைகளை கட்டவும் அதற்கு உணவான நவாலிப்புல் வெட்டிப் போடுவதற்கும் வசதி எனக் கண்டார்கள். இவர்கள் ஆனைக் கோட்டையில் யானைப் படையைக் கட்டிய தால் ஆனைக்கோட்டை என்ற பெயர் வரப் பெற்றது. நவாலிப் புல் யானைக்கு உணவுக்கு எடுத்ததனால் நவாலி என்று பெயர் வந்தது. இவ்விரு மன்னர்களும் கல்லுண்டாய் வைரவர் ஆலயத்தின் வட கிழக்குப் புறமாக உள்ள காட்டில் தூக்கு மரக் கட்டடம் அமைத்தார்கள். அவ்விடத்தில் இப்போது கிறிஸ்தவர்கள் பிரேத அடக்கம் செய்கின்றார்கள். இவ்விடத்திற்கு இடுகாடு எனப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆனைக் கோட்டை தென்கிழக்கு மூலையில் இரட்டைப் பனை என்னும் இடத்தில் இவர்கள் பூந் தோட்டம் அமைந்திருந்ததாகவும் கூறப் படுகிறது.

சோமசுந்தரம் வீதியெனப் பெயர் வந்ததன் காரணம் சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் கடற்கரைப் பகுதியில் புல் அதிகமாக இருந்ததால் அயல் கிராமத்தை அண்டியவர்களும், இக் கிராமத்தில் உள்ளவர்

களும் நிறைய மாடுகள் வளர்த்ததாகக் கூறப் படுகின்றது. இந்த மாடுகளைச் சோமசுந்தரம் வீதியெனக் கூறப்படும் ஒழுங்கை ஊடாகக் கடற்கரைக்கு மேய்க்கக் கொண்டு செல்வது இயல்பு. அப்போது இந்த ஒழுங்கையின் பெயர் மாட்டொழுங்கை என அழைக்கப் பட்டது. இப்போதும் 'எட்டிய' கிராமத்தில் உள்ள வர்கள் மாட்டொழுங்கை என்றே கூறுகின்றார் கள். பின்பு சுமார் 100 வருடங்களுக்கு முன்பு கிராமக்கோடு அரசால் உருவாக்கப்பட்ட போது மானிப்பாயைச் சேர்ந்த சோமசுந்தரம் எனப் படும் நீதவான் நியமிக்க பட்டிருந்தார். அவரி டம் இக்கிராம மக்கள் எங்கள் ஒழுங்கை சிறிய தாக இருப்பதால் போக்குவரத்துக்குப் பிரச்சினையாக இருக்கிறது என இவரிடம் முறைப்பாடு செய்தனர். அப்போது சோமசுந்தரம் நீதிபதி ஒழுங்கையைப் பெரிய வீதியாக அமைத்தார். அதன் காரணத்தினால் சோமசுந்தரம் வீதியென கிராம மக்களின் விருப்பத்திற்கு இணங்கப் பெயர் சூட்டப் பட்டது. மாடு தண்ணீர் குடிக்கும் பழமை வாய்ந்த இரண்டு கேணிகளும் அங்கு உண்டு. இவைகள் முன்புள்ள ஆதாரம்.

அடுத்து மூத்தநயினார் ஆலயம் எப்படி அமைந்தது என்பது பற்றிய விளக்கம் ஆனைக்கோட்டையை சேர்ந்த அண்ணன், தங்கை இருவர் நல்லெண்ணெய் வியாபாரம் செய்தவர்கள். இவர்கள் சுமார் 200 வருடங் களுக்கு முன்பு கால்நடையாகத் தலைச் சுமையில் கடகத்துக்குள் எண்ணெய்த் தகரம் வைத்து கொழும்புத்துறை, பாசையூர் இவ்வி டங்களுக்கு வியாபார த்திற்கு கல்வியங்காடு ஊடாகச் செல்வது வழமை. அந்தக் கால கட்டங்களில் பெரிதும் குடிமனைகள்குறைவு. அடர்ந்த பற்றைச் செடிகளே இருந்தன. அப்படிப்பட்ட காலத்தில் இவர்கள் அதிகாலை 05.00 மணியளவில் வியாபாரத்திற்குக் கல்வியங்காடு ஊடாகச் செல்லும் போது "என்னையும் அழைத்துப் போ" என அசரீரி குரல் கேட்ட வண்ணம் இருந்தது. ஒரு நாள் வரும் போது இக்குரல் கேட்ட ஓசையை நோக்கி இருவரும் சென்றனர். அங்கு சென்ற போது ஒரு சிறிய மருத மரத்தின் கீழ் கருங் கல்லினால் செதுக்கப்பட்ட பிள்ளையார் சிலை ஒன்று இருப்பதைக் கண்டார்கள். "இந்தப் பிள்ளையார் தான் அழைத்துப் போகச் சொல்லி குரல் கொடுத்தவர்" என்று அண்ண னிடம் தங்கை கூறினார். அப்போது அண்ணன் இதனை எடுத்துச் செல்வோம் என்று கூற தங்கையும். "சரி இதனை எண்ணெய்க் கடகத்துக்குள் தூக்கிவை அண்ணா "என்றார். அப்போது இவர் "பிள்ளை யார்" என்று கூறிவிட்டுப் பிள்ளை யார் சிலையை தூக்கினார். ஆனால் அது தூக்குப் படவில்லை அப்போது தங்கை நான் தூக்குகிறேன் என்று தூக்கிய போது சுல பமாகத் தூக்குப்பட்டது. அதனை அண்ண னின் கடகத்திற்குள் வைத்து அண்ணன் தலையில் வைத்து விட்டார். சிறிது தூரம் சென்றதும் கூறினார் "இது பெரும் பாரமாக இருக்கிறது என்னால் கொண்டு செல்ல முடியாது" என்று கூற தங்கை தனது தலையில் கடகத்தை வாங்கி வைத்தார். அது மிகச் சுலபமாகப் பாரமின்றி இருந்தது. அதைக் கொண்டு ஆனைக் கோட்டை வந்தடைந்தனர். அப்போது மூத்த நயினார் உள்ள குளத்தின் கிழக்கு மூலையில் உள்ள மருதமரத்தடிக்கு வரும் போது "என்னை இதில் இறக்கி வையுங்கோ" என்று குரல் கேட்டது. உடனே இவர்கள் அந்த மருதமரத் தடியிலே இறக்கி வைத்தனர். பின்பு

ஒவ்வொரு நாளும் வியாபாரத்திற்குச் செல்லும் போது நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வந்ததாக கூறப்படுகிறது. இவர்கள் பின்பு பெரும் செல்வந்தராக வந்ததாகத் அறியப்படு கிறது. இதன் பின் மானிப்பாயைச் சேர்ந்த நமசிவாய முதலியார் என்பவர் தமது பட்டப் படிப்புக்குச் செல்லும் வேளையில் இந்தப் பிள்ளையாரை வணங்கிச் செல்வது வழமை. அப்படி அவர் வணங்கி சென்றதால் அவரு டைய பட்டப் படிப்பில் சித்தியடைந்தார். அதன் பின்பு நீதிமன்ற கோட்ஸ் முதலியார் வேலை க்கு தொழிற்பயிற்சிக்கு சென்றார். அவர் செல்லும் போதும் இந்தப் பிள்ளையாரை வணங்கி எமக்கு இந்த வேலை கிடைத்தால் எமது சம்பளத்தில் உமக்கு ஓர் ஆலயம் அமைப்பேன் என்று கூறிச் சென்றார். அதே போல் அவருக்கு வேலை கிடைத்தது. அவ ரும் சொன்ன வாக்கைக் காப்பாற்றிப் பிள்ளை யாருக்கு ஆலயம் அமைத்தார். இவர் அமைத்த ஆலயத்தில் அதே பிள்ளையாரை வைத்துச் சர்வாதாரி வருடம் ஆவணி மாதம் 29ம் நாள் 12ம் திகதி புரட்டாதி மாதம் 1888ம் ஆண்டு கும்பாபிசேகம் செய்தார். பின்பு இவர் சந்ததியினர் வீதிக்கரையோரமாய் இவர் கட்டிய ஆலயம் அமைந்ததால் இவ்வால யத்தை அரக்க முடியாமல் அருகில் முருகன் ஆலயம் பெரிதாக அமைத்தார்கள். இவர்கள் அமைத்த ஆலயம் 23.08.1954 இல் கும்பாபி சேகம் செய்யப்பட்டது. முன்பு உள்ள பெயரே வழக்கத்தில் வந்தது. மூத்தநாயனார் என்றே இன்றும் அழைக்கப்படுகிறது.

**- கனகசபை இராசேந்திரம்**

### மற்றொரு நோக்கில் மானிப்பாய்

மார்கழிக் குளிருடன் புலர்ந்த அந்த இளங்காலைப் பொழுதினிலே சகாக்களுடன் கிராமத்து மண்வாசனையை நுகர்ந்த வண் ணமாக மானிப்பாயினூடான துவிச்சக்கர வண்டிப் பயணம் செய்த ரம்மியமான இனிய நினைவுகளை மீண்டுமோர் முறை மீட்டிப் பார்க்கத் தோன்றுகின்றது. மானிப்பாய் எனும் சொல்லைக் கேட்கும் போதே எல்லோர் மனதி லும் முதலில் நினைவில் எழுவது கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் பச்சைப்பசேலென பரந்து விரிந்த நெல் வயல்களாகும். இயற்கை அழகுடன் கூடிய எளிய அமைதியான சூழ் நிலை மானிப்பாயை ஒரு சொர்க்க புரியாக மாற்றிக் கொண்டிருக்கிறது என்பதில் ஐயமே துமில்லை.

புராதன காலத்தில் பெரிய புலமென வர்ணிக்கப்பட்ட மானிப்பாய், யாழ். பிரதான நகரத்தில் இருந்து 12 கிலோ மீற்றர் தொலை வில் வலிகாமம் வடக்கு, தெற்கு, மேற்கு நல்லூர் ஆகிய பிரிவுகளைத் தனது எல்லை களாகக் கொண்டு அமைந்துள்ளது. இயற்கை அன்னையின் பல்வேறு கொடைகளையும் தன்னகத்தே வைத்துள்ள இப் பிரதேசமானது கண்ணுக்கினிய அழகிய பல இடங்களை கொண்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் வலிகாமம் தெற்குப் பிரிவில் அமைந்துள்ள சண்டிலிப் பாய்ப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மானிப்பாய் மிகுந்த சுறுசுறுப்பான நகரங் களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் சனத்தொகை ரீதியாக நான்கா வது இடத்தைப் பிடிக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் சனத்தொகை, 56

ஆயிரத்து 510ஐ எட்டி நிற்கின்றது. தமக்கே உரித்தான இனிய சுபாவத்தையும் இளகிய மனத்தையும் கொண்ட மானிப்பாய் வாழ் மக்கள் பலமான குடும்பப் பிணைப்புக்களி னால் கட்டுப்பட்ட பாரம்பரியக் கலாசாரங் களை பெரிதும் மதிப்பவர்களாக விளங்குகின் றனர். இம் மக்கள் பாரம்பரியக் கலை, கலாசா ரத் துறைகளில் வல்லுநர்களாக விளங் குவதுடன் அதை வளர்ப்பதில் அரும்பாடுபடுப வர்களாகவும் உள்ளனர்.

சேர். பொன்னம்பலம் இராமநாத னின் மாமனார், முதலியார் நமச்சிவாயம், பொன்னம்பலம் அருணாசலத்தின் மாமனார் சேர்.அருணாசலம் மகாதேவன், நீதிபதி சிவா செல்லையா, ஏ.மாணிக்கவாசகர் ஆகியோர் இம்மண்ணில் விளைந்த முத்துக்களாவர்.

சிறந்த கல்விமான்களைப் பிரசவித்த மானிப்பாய் மண், கல்வித் துறையில் குறிப் பிடத்தக்க பின்னணியைக் கொண்டுள்ளது. 89 சதவீதமான மக்கள் எழுத்தறிவு கொண்ட வர்களாகக் காணப்படுகின்றனர். மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலியன பிரசித்தி பெற்ற கல்லூரிகளாகக் கல்வித் துறைக்குச் சேவையாற்றிக் கொண்டி ருக்கின்றன. இவை மட்டுமல்லாது மானிப் பாய் நூலகமும் கல்வித்துறைக்குப் போது மான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின் றது.

பல்வேறு திட்டப் பணிகளை மேற் கொண்டு வரும் பிரதேச சபை மானிப்பாய் வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த் துவதற்கு அரும்பாடுபடுகின்றது. மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானமானது இளைஞர்கள் மட்டுமல்ல முதியோர் மத்தியி லும் மிகவும் பிரபல்யம் மிக்கதாக விளங்கு கின்றது. கதிரவன் தொடுவானத்தைத் தழு வும் அந்தி வேளைகளில் இம் மைதானம் களை கட்டுகின்றது. ஓடி விளையாடும் பள்ளி செல்லும் பாலகர் ஒரு பக்கமும் தமக்கே உரித் தான இளமைத் துடிப்புடன் கிரிக்கெட்டில் ஈடு படும் இளைஞர் மறுபக்கமும் இவர்களை இர சித்த வண்ணம் தமது பழைய கால நினைவு களை அசைபோடும் மானிப்பாய் மண்ணின் முதிய தலைமுறையினரையும் காணலாம்.

பிரித்தானிய ஆட்சிக் காலம் தொடக் கம் மானிப்பாய்ப் பிரதேசத்தின் மைல் கல்லாக விளங்கும் முக்கிய இடங்களாக 1864ம் ஆண்டு கலாநிதி சாமுவேல் மிஸ்க் கிறின் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலை, புனித பேதுரு பவுல் ஆலயம், அங்கிலிக்கன் திருச் சபை தேவாலயம் ஆகியன காணப்படுகின் றன.

மானிப்பாயும் அதைச் சூழவுள்ள சிறிய கிராமங்களும் சிறியதும் பெரியதுமான புராதன சிற்பங்களைக் கொண்ட இந்துக் கோவில்களையும் வானத்தைத் தொடும் கோபுரங்களையும் பரந்து விரிந்த மண்ட பங்களையும் எண்ணிலடங்கா அளவில் கொண்டுள்ளது. இந்துக் கலாசாரத்தைப் பிரதி பலிக்கும் வகையில் தென்னிந்தியக் கட்டடக் கலை சிற்ப வடிவமைப்பைக் கொண்டு அமைக்கப்பட்ட மானிப்பாய் மருதடி பிள்ளை யார் கோவிலானது மிகவும் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களில் ஒன்றாகக் காணப் படுகின்றது. இது மட்டுமல்லாது மானிப்பாயில் இருந்து வடக்கே அமைந்துள்ள சுதுமலை

அம்மன் கோவிலானது பழைமை வாய்ந்த வரலாற்று ரீதியில் பிரசித்தி பெற்ற அம்மன் கோவிலாக விளங்குகின்றது.

நவாலிக் கிராமத்தின் ஊடான எமது துவிச்சக்கர வண்டிப் பயணத்தின் ரம்மிய மான நினைவுகளை வார்த்தைகளால் வர் ணிக்க இயலாது. கடலெனப் பரந்து காய்த்துக் குலுங்கும் நெற் பயிர்களையும் மெல்லிய இளந்தென்றல் அவை அசைந்தாடும் அழகையும் அவை எழுப்பும் சங்கீத ஒலியை யும் யாராலும் எளிதில் மறந்துவிட முடியாது. இவ்வயல் வெளிகளின் நடுவே இடிகுண்டென அழைக்கப்படும் பெரியதொரு குழி காணப் படுகின்றது. இதைப் பற்றி எழுந்த எமது ஆர் வத்தைத் தணிக்கும் வகையில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயி ஒரு வரை வினவிய போது அவர் அதற்குப் பதில் அளித்தார். அவ்விவசாயியின் விளக்கத்தின் படி முன்னொரு காலத்தில் இடி விழுந்ததன் காரணமாகவே ஆழம் காணமுடியாத இக்குழி ஏற்பட்டதாகவும் இக்குழிக்கும் கீரிமலைக் கடலிற்கும் இடையே நிலத்திற்கடியிலான தொடர்பு இருப்பதாக நம்பப்படுவதாக தெரிவித்தார்.

மானிப்பாயிலிருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள வழுக்கை யாறு எனப் பிரசித்தி பெற்ற பருவ மழைக் காலங்களில் பொங்கி வழிந்தோடும் சிறிய ஆறு அப்பிரதேச வயல்களுக்கு நீரை வழங் கிக் கொண்டிருக்கின்றது. நாட்டுப்புற அழகை இரசிக்க விரும்பும் எவரும் இங்கு சென்றால் அதை ஆசை தீர அனுபவிக்கலாம். அது மட்டு மல்லாது பல்வேறு உள்நாட்டுப் பறவை களையும் நாடு விட்டு நாடு பெயரும் பறவை களையும் இங்கு கண்டு ரசிக்கக் கூடியதாக உள்ளது.

விவசாயத்தைப் பிரதான வாழ்வா தாரமாகக் கொண்டுள்ள மானிப்பாய்ப் பிரதேசத்தை யாழ்ப்பாணத்தின் நெற் களஞ்சியம் என விபரிப்பதில் தப்பேது மில்லை. திரும்பும் திசையெங்குமுள்ள நெல் வயல்களும் சிறிய பல குளங்களும் இப்பிரதேசத்தின் விவசாய முக்கியத்துவத் தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. பெருமள விலான நெற்செய்கையும் அதை விட தெங்கு, வெங்காயம், மிளகாய் ஆகியனவும் சிறியள விலும் பயிரிடப்படுகின்றன.

வானுயர வளர்ந்து நிற்கும் பனை மரங்களில் கள் எடுக்கும் காட்சியானது வெளியிலிருந்து நோக்குபவர்களுக்குப் பிரமிப்பூட்டுவதாக இருக்கின்றது. காலையும் மாலையும் பனம் பூவானது நேர்த்தியான முறையில் சீவப்பட்டு அதிலிருந்து கள் சிறிய முட்டிகளில் சேகரிக்கப்படுகின்றது. வர்த்தகத் தைப் பொறுத்த மட்டில் சாதகமான சூழலை வழங்கும் மானிப்பாயில் வங்கிகளையும் பிரதான சந்தைத் தொகுதி ஒன்றையும் சிறியதும் பெரியதுமான வியாபார நிலையங் களையும் வீதியின் இரு மருங்கிலும் காணலாம்.

என்றும் குறையாத முகமலர்ந்த புன்னகையுடன் விருந்தாளிகளை மட்டுமல் லாது வருந்தி வந்தோரையும் வரவேற்று விருந்தோம்பும் மானிப்பாய் மக்களும் சிறந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட மானிப்பாய் நகரமும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து பயணிப்பவர்களுக்குச் சிறந்ததொரு சுற்றுலாப் பிரதேசமாக விளங்குகிறது என்பதிலும் யாழ்ப்பாணத்தின் சொர்க்கபுரி மானிப்பாய் தான் என்பதில் வியப்பேதுமில்லை.

**- சிறிமால் பெர்னாண்டோ**

# கல்விப்

# பாரம்பரியம்

# ஈழத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியம்; மரபும் நவீனமும்

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

ஈழத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் நீண்ட வரலாற்றைக் கொண்டது எனினும், ஈழத்தமிழர் வரலாற்றையும், தமிழ் இலக்கிய வரலாற்றையும் தொடர்ச்சியாக அறிவதில் ஏற்பட்டுள்ள தடைகள் கி.பி 14 ஆம் நூற்றாண்டு வரையில் ஈழத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியினை அறிந்து கொள்வதில் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளன. மேற்குறித்த கால எல்லையில் வாழ்ந்த புலமையாளர்கள் பற்றியோ, அவர்களின் பங்களிப்புக்கள் குறித்தோ அறிதற்குரிய உறுதியான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்க வில்லை. தமிழ்ப் புலமையாளர் களுக்கும் அவர்களது படைப்புக்களுக்கும் போதிய நிறுவனரீதியான பாதுகாப்பு இல்லாமையா லும், நாட்டில் அவ்வப்போது நிகழ்ந்துவந்த படையெடுப்புக்களாலும், கையளிப்புப் பாரம்பரியத்தில் காணப்பட்ட குறைபாடு களாலும் ஆரம்பகாலங்களில் தோன்றிய இலக்கியங்கள் அழிந்திருக்க வேண்டும். ஈழத்து இலக்கிய வரலாற்றாசிரியர்கள் ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவருடன் இக்கல்விப் பாரம்பரியத்தினைத் தொடங்குவது வழமையெனினும் அப்பெயரு டன் இணைந்து வந்துள்ள 'ஈழம்' என்னும் அடையைத் தவிர பூதந்தேவனாரை ஈழத்தவராகக் காட்டக் கூடிய பிற ஆதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை. எனினும் ஈழத்தில் பரவலாகக் கிடைக்கப் பெற்றுவரும் சமகாலத்துக்குரிய கல்வெட்டுக்கள் வாயிலாகத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் தொடர்ச்சி யினை ஓரளவுக்குத்தானும் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

கி.பி 14 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 17 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நிலவிய யாழ்ப்பாண மன்னர்கள், தமிழ் வன்னியர்கள் ஆட்சி ஈழத்தில் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் செழிப்படைய வழி கோலியது. தமிழ் மன்னர்களால் தமிழ் பிரதேசங்கள் ஆளப்பட்ட இச் சூழலில் தமிழ்க் கல்விப்பாரம்பரியம் தனது ஆளுமையைப் பலகோணங்களிலும் வளர்த்துக் கொண்ட தைக் காணலாம். தமிழ் மன்னர்களின் ஆதரவும், சமகாலத்தில் தமிழகத்துக்கும் ஈழத்துக்குமிடையே காணப்பட்ட பண்பாட்டு

உறவுகளும், சைவ சமயம் பெற்றிருந்த முதன்மையும், தமிழகத்தி லிருந்து நிகழ்ந்த பல குடியேற்றங்களும் ஈழத்தின் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்துக்குப் புது ஊட்டத்தினை நல்கின. தலபுராணங்கள், காவியங்கள், சிற்றிலக்கியங்கள் என ஆக்க இலக்கியத் துறை சார்ந்தும், வைத்தியம், சோதிடம் முதலான அறிவியல் துறை சார்ந்தும், வரலாற்றுணர்வுடனும் இலங்கியங்களைப் படைக்கக் கூடிய ஆற்றல் மிகுந்த புலவர்கள் பலர் இக்காலத்தில் வாழ்ந்ததை நோக்கு கின்றபோது ஈழத்துச் சைவத் தமிழ்க் கல்விப்பாரம்பரியத்தின் வீச்சினைப் புரிந்து கொள்ள முடியும்.

ஈழத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்துக்குத் தமிழ் மன்னர்கள் மற்றும் வன்னியர்கள் காலத்தைத் தொடர்ந்து வந்த போர்த்துக்கேயர் காலப்பகுதி சோதனை மிகுந்த காலமாகவே இருந்தது. ஈழத்தைக் கைப்பற்றி ஆண்ட அந்நியர்களான போர்த்துக்கேயர்கள் இலாபமீட்டுதலையும், கத்தோலிக்க மதம் பரப்புதலையும் தமது பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட்டனர். தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டுச் சுதேசமதங்களை அவர்கள் தடைசெய்தனர். இச் சூழலில் சைவமும் சைவத் தமிழ்ப் பண்பாடும் பின்னடைவைச் சந்திக்க, அதன் பின்னணியில் தமிழ்க் கல்விப் பாரம்பரியமும் தனது செல்வாக்கையிழந்தது. எனினும் போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஈழத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்திய ஒல்லாந்தர் காலப்பகுதியில் ஈழத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் மீண்டும் தன் ஆளுமையை வெளிக்காட்டச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒல்லாந்தர்கள் சுதேசமதங்களின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்காமையும், அவர்கள் காலத்தில் நிகழ்ந்த பொருளாதார ரீதியான முன்னேற்றங்களும், பாடசாலைகளின் உருவாக்கமும் இதற்குக் காரணங்கள் எனலாம். போர்த்துக்கேயர் காலப்பகுதியில் ஏற்பட்ட கோவில்களின் அழிவு, மத நம்பிக்கை இழப்பு, சமய சடங்காசாரங்கள் பற்றிய தெளிவின்மை என்பவற்றை நீக்கும் முகமாகப் பல படைப்புக்களை இக்காலப் புலவர்கள் இயற்றினர்.

ஒல்லாந்தரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஆங்கிலேயர்கள் காலப்பகுதியில் தமிழ்க் கல்விப்பாரம்பரியம் பாரிய மாற்றம் ஒன்றினை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆங்கிலேயர் காலத்தில் மதம் பரப்பும் நோக்குடன் வந்த மிஷன்களும் அவற்றின் மதப்பிரச்சார முயற்சியின் ஓரம்சமாக உருவாக்கப்பட்ட பாடசாலைகளுமே இம்மாற்றத்திற்கான காரணங்களாகும். இதுவரை காலமும் இருந்து வந்த மரபு ரீதியான கல்விப் பாரம்பரியத்துடன் புதிதாக பாடசாலைகளினூடாக அறிமுகமான கல்வி மரபு தமிழ் மாணவர்கள் மத்தியில் கணிசமான பாதிப்பினை ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஈழத்தில் மூன்று வகையான கல்விமரபுகள் காணப்பட்டதாக ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

- பாரம்பரியமாக நிலவிவந்த மரபு வழிக் கல்வி மரபு
- புதிதாக அறிமுகமான நிறுவன ரீதியான பாடசாலைக் கல்வி மரபு
- மரபும் நிறுவனமும் இணைந்த தமிழ்க் கல்வி மரபு என்பனவே அவையாகும்.

## மரபுவழிக் கல்விமரபு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்க் கல்வி நவீனத்துவத்தை உள் வாங்கு வதற்கு முன்னதாக அக்கல்வியானது முற்றி லும் மரபு வழியிலேயே வழங்கப்பட்டு வந்த தைக் காணலாம். மரபுவழிக்கல்வி குருவுக்கு முதன்மை தந்தது. மாணவனின் கற்றல் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் தீர்மானிக்கின்றவராகக் குரு காணப்பட்டார். மாணவன் குருவை நாடிச் சென்று அவருட னுறைந்து கல்வியைப் பெறுவது இக்கல்வி முறையின் பொதுவான மரபாகும். பெரும் பாலும் குரு நெருங்கிய உறவினரின் பிள்ளைகள், நண்பர்களின் பிள்ளைகள், பழைய மாணாக்கரின் பிள்ளைகள் எனத் தனக்கு நன்றாகத் தெரிந்தோரின் பிள்ளை களையே மாணாக்கர்களாகச் சேர்த்துக் கொள்வதுண்டு. மரபுவழிக் கல்வியில் பாடத்திட்டத்தைத் தீர்மானிப்பவரும் குருவே. தான் கற்றவற்றைக் கொண்டும், தனக்குக் கற்பிக்கப்பட்ட முறையியலை மாதிரியாகக் கொண்டும் குரு பாடத்திட்டத்தை உருவாக்கு வார். பெரும் பாலும் அரிச்சுவடி, நீதிநூல்கள், நிகண்டுகள் என்பனவற்றை ஒழுங்குமுறை யாகக் கற்பித்த பின்னர் இலக்கியங்களையும் இலக்கணாங்க ளையும் கற்பிப்பது பொதுவான வழக்காறாக இருந்தது. பல நூல்களை மேலெழுந்த வாரியாகக் கற்காமல் குறிப்பிட்ட ஒரு சில நூல்களை மட்டும் ஆழமாகக் கற்கும் முறை மரபுவழிக்கல்வியின் முக்கியமான தோர் அம்சமாகும். மரபுவழியாசிரியர் கற்பிக்கத் தெரிவு செய்யும் நூல்களில் அவருக்கு ஆழமான புலமையும் விருப்பும் காணப்படும்.

இக்கல்வி முறையில் நேரசூசி என்று எதுவும் இருந்ததில்லை. குரு தனக்கு ஓய்வான நேரங்களில் அல்லது தனக்கு கற்பிப்பதற்கு உசிதமானது எனக் கருதுகின்ற நேரங்களில் கற்பிப்பார். கற்பித்தல் இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் எனத் தொடர்வது முண்டு. மரபுவழிக்கல்வியில் பரீட்சித்தல் என்பது மனனம் செய்து ஒப்புவித்தலையே குறிக்கும். மனனம் செய்து ஒப்புவிக்கும் திறனே மாணவரின் திறமைக்கு அடையாள மாகச் சுட்டப்பட்டது. மரபு வழியறிஞர்களின் மனனத்திறனையும் ஞாபகத்திறனையும் புடம் போட்ட ஓர் அம்சம் இவ்வாறான மனனப் பயிற்சியே. இக்கல்வி முறையில் குருவுக்கு வேதனம் என எதுவும் வழங்கப்படுவ தில்லை. மாணவர்களோ அல்லது அவர் களது பெற்றோர்களோ குறிப்பிட்ட ஒரு தொகை யைப் பணமாகவோ பொருளாகவோ, தட்ச ணையாகக் கொடுப்பதுண்டு. இலக்கியங்கள் இலக்கணங்கள் தத்துவம், சமயம், சோதிடம், வடமொழி என சைவத் தமிழ்க் கல்வி முறை மைக்கு ஏற்ற அறிவையும் பயிற்சியையும் குரு மாணவர்களுக்கு வழங்குவார்.

இவையே மரபுவழிக் கல்வியின் முக்கியமான பண்புகளாகக் காணப்பட்டன. இப்பண்புகளில் நின்றும் முற்றிலும் வேறுபட்ட நிறுவன அடிப்படையிலான கல்வி முறையை மிஷனரிமார்கள் பத்தொன்பதாம் நூற்றாண் டில் ஈழத்தில் பரவலாக அறிமுகம் செய்தனர்.

## நிறுவன ரீதியான கல்வி

நிறுவன ரீதியான கல்வி முறை ஈழத்தில், மிஷனரிமார்களின் வருகை யுடனேயே பரவலடையத் தொடங்கியது. எனினும் அக்கல்விமுறைமையின் சுவடு களை போர்த்துக்கேயர் காலத்திலேயே அவதானிக்க முடிகின்றது. நிறுவனரீதியான

கல்வியின் முக்கிய அலகாக அமையும் பாடசாலைகளைப் போர்த்துக்கேயர்கள் தாங்கள் அமைத்த கத்தோலிக்க தேவாலயங்களை அண்டி அமைத்தனர். இப்பாடசாலைகள். கோவிற் பற்றுப் பாடசாலைகள் என வழங்கப்பட்டன. பிரதானமாகக் கத்தோலிக்கக் குருமாருக்கு வேண்டிய அடிப்படை மொழியறிவு, சமயம் சார்ந்த அறிவு என்பனவே இப்பாடசாலைகளூடாக வழங்கப்பட்டன. கல்வி மக்களை நோக்கி இக்காலப் பகுதியில் பரவலடையவில்லை.

போர்த்துக்கேயருக்குப்பின் ஈழத்தில் அதிகாரம் செலுத்திய ஒல்லாந்தர்கள் பாடசாலைகளை அமைத்திருந்தமை பற்றி அவர்களின் தோம்புகளினுடாக அறிய முடிகின்றது. இப்பாடசாலைகளில் போர்த்துக் கேயர் காலப் பாடசாலைகளில் வழங்கப்பட்டது போன்றே அடிப்படை மொழியறிவு, சமய அறிவு என்பனவும் விசேடமாக உள்ளூர் நிர்வாகத்தினைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான அறிவும் வழங்கப்பட்டன. கம்பனி ரீதியாகத் தொழிற்பட்ட ஒல்லாந்தர்கள் இலாபமீட்டுதலைத் தமது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தனர். வெளியூரிலி ருந்து அல்லது தமது நாட்டிலிருந்து அதிகாரிகளைக் கொணர்ந்து உள்ளூர் நிர்வாகத்தை நடாத்துவது பெரும் பொருட் செலவுக்குக் காரணமாகும் எனக் கருதிய அவர்கள் மக்களுக்கு கல்வியறிவைத் தருவதனூடாக அவர்களைக் குறைந்தது குறிப்பிட்ட சில உத்தியோகங்களுக்குத் தானும் நியமிக்கலாம் என எண்ணினர். இதன் பின்னணியிலேயே உள்ளூர் மக்களுக்குக் கல்வியறிவினைத் தர விழைந்தனர். இதனால் ஈழத்தில் வாழ்ந்த குறிப்பிட்ட ஒரு சதவீத்தினர் நிறுவன ரீதியான கல்வியறிவைப் பெறக் கூடியதாக இருந்தது. ஒல்லாந்தர் கால இலக்கிய ஆக்க முயற்சிகளிலும், இலக்கியங்களை ஆக்குவிக்கும் செயற்பாட்டிலும் அதிக அக்கறை காட்டி வந்தவர்கள் இங்ஙனம் ஒல்லாந்தர் பாடசாலைகளுக்கூடாகப் பயிற்சி பெற்று வந்தோரே. இங்ஙனம் நிறுவனரீதியான கல்வி முறைமை அந்நியராட்சிக் காலம் முதற் கொண்டே ஈழத்தில் காலூன்றத் தொடங்கினாலும் அதற்கு உறுதியான வடிவத்தினைத் தந்தவர்கள் மிஷனரிமார்களே.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சிச் சூழலில் மிஷனரிமார்கள் பலர் ஈழத்துக்கு வருகை தந்து மதம் பரப்பும் முயற்சிகளில் ஈடுபட்டமை யாவரும் அறிந்த தொன்றே. தமது மதம் பரப்பும் முயற்சிகளின் ஓரம்சமாக அவர்கள் பாடசாலைகளைக் கட்டியெழுப்பினர். குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் அவர்களால் பாடசாலைகள் பல உருவாக்கப்பட்டன. மிஷனரிமார்கள் பாடசாலைகளை அமைத்து கல்வியை வழங்க முன்வந்தமைக்கு இரண்டு காரணங்கள் அடிப்படையாக அமைந்தன.

- ஈழத்தவருக்கு வரன்முறையான கல்வியை வழங்குவதனூடாக அவர்களைச் சுதேச மத மூடநம்பிக்கைகளில் இருந்தும் விடுவிக்க முடியும் என நம்பிய மிஷனரிமார்கள் இங்ஙனம் இந்து சமய மூடநம்பிக்கையில் நின்றும் அவர்களை விடுவிப்பதனூடாக இலகுவாகக் கிறிஸ்தவத்தை அவர்கள் மத்தியில் பரப்ப முடியும் எனக் கருதினர்.

- அதே போல தமது பாடசாலைகளை நோக்கிக் கல்விகற்கும் நோக்குடன்

வருகின்ற ஏராளமான இந்து மாண வர்களை கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றிக் கொள்ளலாம் எனவும் அவர்கள் நம்பினர்.

அதேநேரத்தில் ஆங்கிலேயரும் தமது நிர்வாக அலுவல்கள் விரிவாக்கப்பட்டதால் தேவையான நிர்வாகிகளைச் சுதேசிகள் மத்தயிலேயே உருவாக்கிக் கொள்வதற்காகக் கல்வி அறிவைச் சுதேசிகளுக்கு வழங்க வேண்டும் என விரும்பினர். இதன் பின்னணியில் மிஷனரிமார்களின் பாடசாலைகளை அமைத்தல், கல்விப் போதனைகளை வழங்குதல் போன்ற முயற்சிகளுக்கு அவர்களும் தமது அங்கீகாரத்தைத் தந்தனர். அமெரிக்க மிஷன், சேச் மிஷன், மெதடிஸ் மிஷன், உவெஸ்லியன் மிஷன் என்பன யாழ்ப்பாணத்தில் பலபாகங்களிலும் பாடசாலைகளைக் கட்டியெழுப்பியதாக அறியமுடிகின்றது. சமூகத்தின் சகல மட்டங்களிலும் வாழ்ந்தவர்களும் பெண்களும் கல்வியறிவினைப் பெறக் கூடிய வாய்ப்பு மிஷனரிமார்களின் முயற்சியினாலேயே உருவாகியது என்பதை மறுப்பதற்கில்லை. வட்டுக்கோட்டையில் அமெரிக்க மிஷனால் உருவாக்கப்பட்ட, வட்டுக்கோட்டை செமினரியும், உடுவிலில் அமைக்கப்பட்ட மிஷன் பெண்கள் பாடசாலையும் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கன.

## மரபும் நிறுவனமும் இணைந்த தமிழ்க் கல்விப் பாரம்பரியம்

மிஷனரிமார்கள் எதிர்பார்த்தது போலவே ஈழத்தவருள் குறிப்பிட்ட சதவீத்தினர் கல்வியறிவைப் பெற்றுக் கொள்ளும் முகமாக மிஷனரிமாரின் பாடசாலைகளுக்குச் செல்வதில் ஆர்வங் காட்டினர். சமூகத்தில் நல்ல வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு நிறுவனரீதியான கல்வியறிவு சுதேசிகளுக்குத் தேவையானதாக இருந்தது. அன்றியும் சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்கு நிறுவனரீதியான கல்வியறிவைப்பெற வேண்டிய நிர்ப்பந்தமும் காணப்பட்டது. அக்காலத்தில் நிறுவன ரீதியான கல்வியை வழங்கும் ஒரே அலகாக மிஷனரிமார்களின் பாடசாலை களே விளங்கின. மரபுரீதியான தமிழ்க் கல்வியைப் பெற்றோரும் மேலே குறிப்பிட்ட நோக்கங் களுக்காகப் பாடசாலைகளை அணுகினர். அவர்கள் வரிசையில் ஆறுமுகநாவலரும் ஒருவர். நாவலர் சைவத்தமிக் கல்விப் பரம்பரியத்தினை நவீனமயப்படுத்துவதில் ஆர்வத்துடன் உழைத்தார். அவரது உழைப்பின் பெறுபேறாக உதித்ததே வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை யாகும்.

நாவலரின் முன்மாதிரியை அடியொற்றி யாழ்ப்பாணத்தின் பல பாகங் களிலும் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் கட்டியெழுப்பப்பட்டன.

- இதுவரைகாலமும் திண்ணைப் பாடசாலைகளாக மரபுவழிப் புலமையாளர்களால் நடாத்தப்பட்டு வந்த பாடசாலைகள் பல நிறுவனரீதியான பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டன.
- சைவ மத உணர்வும், பொதுநல மனப்பாங்கும் கொண்ட செல்வந்தர்கள் தத்தம் ஊர்களிலே பாடசாலைகளைக் கட்டினர்.
- ஆங்கிலேய அரசாங்க காலத்தில் உயர் பதவிகளைப் பெற்றிருந்த மதப் பற்றும் தாய்மொழிப் பற்றும் கொண்ட பெரியோர்கள் சிறிய அளவிலே ஊர்கள் தோறும் பாடசாலைகளை அமைத்து வந்தனர்.

- ஒல்லாந்தர் காலத்தில் வளர்ச்சி கண்ட உள்ளூர்ப் பிரபுத்துவமும் சைவத்தமிழ்ப் பாடசாலைகளின் உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்தது.
- சைவசமயப் பற்றுணர்வு கொண்டோரால் ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்ட இந்துசபை பல பாடசாலைகளை மிக விரைவாகக் குடாநாட்டின் பல பாகங்களிலும் அமைக்கலாயிற்று.

யாழ்ப்பாணத்தில் இங்ஙனம் சமயப் பிரிவினருக்கிடையே பாடசாலைகளை அமைப்பதில் காணப்பட்ட போட்டிநிலை ஏராளமான பாடசாலைகள் அங்கு உருவாகக் காரணமாயின. ஊருக்கு ஒன்று அல்லது இரண்டு எனப் பாடசாலைகள் உருவாகும் வாய்ப்புக் கிட்டியது. இங்ஙனம் பாடசாலைகளைப் போட்டியாக ஆரம்பித்து நடாத்தும் போக்கு இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலும் தொடர்ந்ததைக் காணலாம். பாடசாலைகளை உருவாக்குவதோடு மட்டும் நின்று விடாது பாடவிதானங்களை உருவாக்குதல், பாடநூல்களை எழுதுதல், பரீட்சைகளை நடாத்துதல் என்பவற்றிலும் ஆர்வங் காட்டப்பட்டு வந்ததை அவதானிக்க முடியும். இதனால் யாழ்ப்பாணம் கல்வியறிவினால் சிறப்படைய வாய்ப்பு உருவாகியது. இலங்கையின் வேறு பிரதேசங்களுக்குக் கிடைக்காத அரியவாய்பு யாழ்ப்பாணத்துக்குக் கிட்டியிருந்தது.

# பாடசாலைகள்; வரலாறும் சாதனையும்

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

1910ஆம் ஆண்டு ஆண் பிள்ளை கட்கு என மானிப்பாய் இந்துக்கல்லூரி நிறுவப் பட்டது. பெண்பிள்ளைகள் தமது கல்வியை மேற்கொள்ள தகுதியான சைவப் பாடசாலை எதுவும் இல்லாத சந்தர்ப்பத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் திரு.வீ.வீரசிங்கம் அவர்கள் 1944ஆம் ஆண்டு கல்லூரி முகாமையாளரின் அனுசரணையுடன் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பெண் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு என ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். பெண் பிள்ளைகளின் தொகை படிப்படியாக அதிகரித் ததனால் பெண்களுக்கு என தனியான ஒரு பிரிவு தொடங்க வேண்டும் என்ற அபிப் பிராயம் முனைப்புப் பெற்றது. 1954ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொருளுதவி கொண்டு மானிப்பாய் இந்துக்கல்லூரியின் கிழக்கு எல்லையில் 13அரைப் பரப்புக் காணி வாங்கிச் சேர்க்கப்பட்டது. 1952இல் பட்டம்மா ளின் இசைக்கச்சேரி மூலமும், தொடர்ந்து 1955, 1960களில் காணிவேல் களியாட்ட விழாக்கள் மூலமும் பணம் திரட்டப்பட்டது.

1955ஆம் ஆண்டு அதிபர் மு. முத்துவேற்பிள்ளை பெண்பிள்ளைகளுக்கு என ஒரு பிரிவை ஆரம்பித்து வைத்தார். மாணவிகளுக்குத் தனியான வகுப்பறைகள் வேண்டும் என்ற காரணத்தால் இப்போதுள்ள மேல்மாடிக் கட்டடம் கட்டப்பட்டது. அதிபர் M.முத்துவேற்பிள்ளையின் முயற்சியால் மகளிர் கல்லூரி உருவாகுவதற்கு வேண்டிய ஆக்க வேலைகள் நடைபெற்றன. கிழக்கு எல்லையில் மேலும் அரை ஏக்கர்க்காணி வாங்கிச் சேர்க்கப்பட்டது. இக்காலகட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி முகாமையாளர், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், அதிபர்கள் மேற் கொண்ட அயராத முயற்சி தான் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் தோற் றத்திற்கு வழிவகுத்தன.

மாணவிகளின் பகுதியைத் தனிப் பாடசாலையாக்க எண்ணிய அதிபர் திரு.மு. முத்துவேற்பிள்ளை கல்வித் திணைக் களத்திற்கு விண்ணப்பித்து 01.02.1963இல் மானிப்பாய் மகளிர் கல்லூரி அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டு தனித்து இயங்கும் கல்லூரியாக அனுமதி பெற்றது.

ஆரம்பத்தில் இக்கல்லூரி திருமதி ம.பரமசாமி தலைமையில் அவரை சிரேஷ்ட உதவியாளராகக் கொண்டு 30.06.1963 வரை செயற்பட்டது. தரம் 1இல் இருந்து G.C.E.O/L வரை வகுப்புக்கள் நடாத்தப் பட்டன.

பண்டிதர் எஸ். இளமுருகன் அவர் கள் கல்லூரியின் கீதத்தை இயற்றியதுடன் மகுடவாசகத்தையும் உருவாக்க உதவினார்.

28.10.1963இல் செல்வி பத்மாசனி ஆறுமுகம் அதிபரானார். இவர் கல்லூரியின் முதலாவது அதிபராவார். எடுத்த பொறுப்பைப் பக்குவமாகக் கையாண்டு 1964-1970 வரையுள்ள காலப்பகுதிக்குள் கல்லூரியைத் தலை நிமிர்ந்து நிற்க வைத்த பெருமை அறிவுசால் அதிபர் செல்வி P.ஆறுமுகத் தையே சாரும். A/L வகுப்புக்கள், கலை, விஞ்ஞானப்பிரிவுகள், ஆய்வுகூட வசதிகள் எனப் பலகோணத்தில் கல்லூரி உயர்ந்தது. மாணவிகளின் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார்.

இவரைத் தொடர்ந்து திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம், திருமதி அரியமலர் இராஜரத்தினம், திருமதி பரமேஸ்வரி இராஜநாயகம், திருமதி வை.தியாகராஜா, திருமதி பசுபதிப்பிள்ளை, திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் என்போர் அதிபராகக் கடமையாற்றினார். திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் காலத்தில் கல்லூரி கல்வி, விளையாட்டு மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் பெற்ற சாதனைகள் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கனவாகும்.

தற்போது நர்மதா பரமேஸ்வரன் அதிபராக உள்ளார். அவரின் நிர்வாகத்தின் கீழ் பாடசாலை மேலும் பல வளர்ச்சிகளைக் கண்டு வருகிறது.

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

19ம் நூற்றாண்டின் முற்காலப் பகுதியில் மேலைத்தேய ஆதிக்கம் காரணமாக ஆங்கிலக்கல்வி மோகம் அசுர வேகத்தில் பரவியது. அதனால் சைவசமயப் பண்பாடும், ஆசாரங்களும் ஆட்டங்காண ஆரம்பித்தன. இந்நிலைமை மேலும் வலுவடைந்து சைவ சமயப் பண்புகள் பேரழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் சிறந்த கல்விமானும், ஆன்மீகவாதியும், சமூக சீர்திருத்தவாதியுமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் கிறிஸ்தவ மதப் பரப்புரைக்கெதிராகச் சைவத்தைப் பரப்புரை செய்தார். இத்தகைய இந்து சமயச் சூழலில், மானிப்பாயில் ஆங்கிலம் மூலம் கல்வி கற்க ஏற்ற பாடசாலை இல்லாக் குறையினை மானிப்பாய் வாசிகள் உணர்ந்தார்கள். இவ்வுணர்வு 1910ம் ஆண்டு மானிப்பாய் விவேகானந்தா மண்டபத்தில் திரு.மைறோன், பெல்ப்ஸ் என்பவரால் ஆற்றப்பட்ட உரையினால் ஊக்குவிக்கப்பட்டது. இவரது உரையால் உந்தப்பட்ட மானிப்பாய் மக்கள் பொதுக் கூட்டத்தைக் கூட்டி ஆராய்ந்து கல்லூரி அமைப்பதற்காக திரு.S.K.லோட்டன் அவர்களைத் தலைவராகக் கொண்ட செயற்குழு ஒன்றினை அமைத்தனர். அக் குழுவினர் துரிதகதியில் தமது செயற்பாடுகளை ஆரம்பித்து அதன் முதற் கட்டமாக நிதியுதவிக்கான கோரிக்கையை மக்கள் முன் வைத்தனர். அவ் வேளையில், மானிப்பாயின் முன்னாள் பிரஜையாகத் திகழ்ந்த திரு. W. சங்கரப்பிள்ளை அவர்கள் கட்டிடங்களுக்குத் தேவையான காணியையும், பெருந்தொகைப் பணத்தையும் அளித்து இம் முயற்சிக்குப் பெரும் ஊக்கமளித்தார். இந்நிலையில் 1910ம் ஆண்டு ஆடி மாதம் 4ம் திகதி பிரதம நீதியரசர் Sri Joseph Hutchinson அவர்களால் இக் கல்லூரியின் அத்திவாரக் கல் நாட்டப்பட்டது. கட்டிடம் பூர்த்தியானதும் அவ்வளவு காலமும் மானிப்பாய் விவேகானந்தா மண்டபத்தில் இயங்கிய இப்

பாடசாலை புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. அன்று தொட்டு ஆடி மாதம் 4ம் திகதியிலேயே கல்லூரி விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகிறது.

ஆரம்பத்தில் ஹட்சின்சன் மண்டபமும் அதனுடன் இருந்த வகுப்புக்களுமே காணப்பட்டன. மேல் மாடியாகக் கட்டத் தொடங்கிய இம் மண்டபம் திரு. W. சங்கரப்பிள்ளை அவர்களின் மறைவினால் தனிக் கட்டிடமாகவே அமைந்து விட்டது. அன்று அவர் விதைத்த விதைதான் இன்று முளைத்துப் பெரு விருட்சமாகி பூத்துக் காய்த்து கனிகளைத் தந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு எழுச்சி பெற்ற எமது கல்லூரியின் முதல் அதிபராக 1910ல் திரு.S. வீரசுவாமிப்பிள்ளை (BA) அவர்கள் தடம் பதித்தார். இவரினைத் தொடர்ந்து திரு.P. சபாபதிப்பிள்ளை, திரு. G. சிவராவ், திரு. M. சபாரட்ணசிங்கி, திரு.J.H.Croset, திரு. M. சிவபாதசுந்தரம், சுவாமி விபுலானந்தர், திரு. V. வீரசிங்கம், திரு. K. முத்துவேற்பிள்ளை, திரு.பேராயிரவர், திரு.V.சுந்தரலிங்கம், திரு. S.V. மகேசவேலு, திரு.C. கேசவராஜன், திரு.கு. சண்முகநாதன், திரு. க.ஜெகநாதன், என்போர் அதிபர்களாகப் பணியாற்றினர். தற்போது திரு. ச. சிவனேஸ்வரன் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.

இன்று மானி அன்னையானவள் கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, பசுமைச் சுற்றுச்சூழல் எனப் பல அணிகலன்களைத் தாங்கியதொரு தேசிய பாடசாலையாகப் பரிணமித்து நிற்கின்றாள். எமது கல்லூரி 11.10.2010 முதல் தேசிய பாடசாலையாக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில் தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டமை பெரும் மகிழ்வுக்குரியதொன்றாகும். வலிகாமக் கல்வி வலயத்திலே முதலாவது தேசிய பாடசாலை என்ற பெருமையும் இக் கல்லூரிக்குரியதே.

**யா/இளவாலை றோ.க.த.ஆ. பாடசாலை**

கத்தோலிக்கத் திருச்சபையினர் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் பாடசாலைகளைத் ஸ்தாபித்துக் கல்வியை வளர்த்து வந்தனர். அவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளில் இளவாலை றோ.க.த. ஆ பாடசாலையும் ஒன்று.

இது கலட்டி என்று அழைக்கப்படும் பகுதியில் பங்குப் பணிக்கென வருகை தந்த பங்குத் தந்தையர்களால் இப் பகுதி மக்களின் கல்வி நலனைக் கருதி 1873ல் சிறிய பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டதுடன் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகவும் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இங்கு 1904முதல் ஆங்கில மொழியும் ஒரு பாடமாகப் புகட்டப் பட்டமையை அறிய முடிகின்றது.

1907ல் புனித ஹென்றியரசர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 1910ல் இப் பாடசாலையை புனித ஹென்றியரசர் கல்லூரியுடன் இணைத்து நடாத்தினர். அதாவது புனித சூசையப்பர் சபைப் பராமரிப்பில் புனித ஹென்றியரசர் கல்லூரியுடன் ஓர் பாகமாக இயங்கி வந்தது.

1915ல் கல்வியமைச்சின் அதிகாரம் பெற்ற ஆங்கிலப் பாடசாலையாகப் புனித ஹென்றியரசர் கல்லூரி உருவாகிய போது 1917ல் இப் பாடசாலை வேறு கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுத் தனித்து இயங்கியது. அதனை ஆங்கிலப் பாடசாலையாகவும் இதனைத் தமிழ் மொழி பாடசாலையாகவும் நடாத்தி வந்தனர். அச் சமயம் இங்கு சிரேஷ்ட வகுப்பாகிய "பிறிலிம்" வகுப்புக்கள் வரை நடைபெற்றன.

திருச்சபையில் ஏற்பட்ட நிர்வாக மாற்றங்கள் காரணமாக 1934ம் ஆண்டள வில் யாழ் கத்தோலிக்க மேற்றிராசனம் இப் பாடசாலைகளின் பொறுப்பாளிகள் ஆகினர். முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாறுதலின் பின் இப் பாடசாலையின் இடமும் மாற்றம் பெற்றது. "தென்னாங்கொல்லை" அல்லது "சொக்கட்டி யான் காடு" என்றழைக்கப்பட்ட இப் பகுதியில் 1938ல் புதிய கட்டிடம் அமைக்கப் பெற்று பாடசாலை இயங்கத் தொடங்கியது.

இப் பாடசாலை 1947முதல் 1960 வரையான காலப் பகுதிகளில் இளவாலை புனித ஹென்றியரசர் தமிழ் பாடசாலை என வழங்கப்பெற்றது. 1961ல் அரசு பொறுப்பேற் றுக் கொண்டதன் பின்னரே யா/இளவாலை றோ.க.த.ஆ பாடசாலை என்ற பெயரைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. 31.01.1961ல் இப் பாடசாலையை அரசு பொறுப்பேற்கும்வரை உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக இருந்ததோடு திருச்சபையின் முகாமைத்துவத்தின் கீழ் சிரேஷ்ட பாடசாலைத் தர பத்திர வகுப்பு வரை நடாத்தப் பெற்று வந்தமையும் குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

இருப்பினும் அயலில் ஆண்களுக் கென ஹென்றியரசர் கல்லூரியும், பெண்க ளுக்கெனத் திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலையும் பெரிய பாடசாலைகளாக இருந்த காரணத்தினால் போலும் அரசின் முகாமைக்குள்ளான பின் இப் பாடசாலை 5ம் வகுப்பு வரையான வகுப்புக்களையே பெற வேண்டிய நிலையைப் பெற்றது. அன்று முதல் இன்று வரை தரம் 05 வரையான வகுப்புக்களையே கொண்டியங்கி வருகிறது.

காலப்போக்கில் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் காரணமாக இப் பாடசாலைகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாயின. அவ் வகையில் இப் பாடசாலையும் 20.08.1992 முதல் இடம் பெயர்ந்து யா/ நவாலி விவேகானந்தா வித்தியாலயத்திலும் 04.05.1994 தொடக்கம் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வளவில் இயங்கிய யா/ மாதகல் புனித தோமையார் வித்தியால யத்தின் கட்டடத்தில் மாலை நேரப் பாடசாலை யாகவும் 01.02.1992 முதல் தென்மராட்சி யிலுள்ள யா/ கோகிலாக் கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்திலும் இயங்கிய பின் 19.06.1996 முதல் மீண்டும் தனது சொந்த இடமான இளவாலையில் இயங்கத் தொடங்கியது.

இக் காலங்களில் இராணுவ நடவடிக் கைகளினால் பாடசாலையில் பேணப்பட்டு வந்த ஆவணங்கள், பொருட்கள் எரிக்கப் பட்டதுடன் பல இன்னல்களையும் இழப்புக்க ளையும் பாடசாலை சந்தித்தது. இங்கு பணியாற்றிய அதிபர்களினதும், ஆசிரியர் களினதும் முயற்சியினால் புத்துணர்ச்சி யுடனும் புது மெருகுடனும் எவ்வகையிலும்

சளைக்காதவாறு தனது பணியினை ஆற்றி வருகின்றமை கண்கூடு.

கல்விப் பணியில் சிறப்பாகச் சேவையாற்றி வருவதுடன் இணைப் பாட விதான செயற்பாடுகளான தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டி, திருக்குறள் மனனப் போட்டி, சித்திரப் போட்டி, மெய்வல்லுனர் போட்டிகளிலும் மாணவர்கள் தொடர்ந்து பங்குபற்றிக் குடும்ப, கோட்ட, வலய மட்டப் போட்டிகளிலும் பரிசுகளைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

**பெரியவிளான் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை**

யா/ பெரிய விளான் றோ.க.த.க பாடசாலையானது யாழ் ஆயர் அதி வந்தனத்திற்குரிய ஜே.ஏ. கியோமர் ஆண்டகை அவர்கள் றோமன் கத்தோலிக்கப் பாடசாலைகளின் முகாமையாளராக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்டது. 1928ஆம் ஆண்டு பெரியவிளான் கிராமத்தில் திரு. ஆ.ஜோன்பிள்ளை திரு.ச. சவரிமுத்து ஆகிய பெரியோர்களின் ஊக்கத்தால் கத்தோலிக்க குருவானவர் பூலான் அடிகளார் அவர்கள் இப் பாடசாலையை புனித யுவானி யார் ஆலய வளவில் ஆரம்பித்தார்.

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சாமிநாதர் அவர்கள் (01.02.1928 - 07.05.1934) இப் பாடசாலையின் முதலாவது தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றுத் திறம்பட நடாத்தினார்.

ஆரம்பப் பாடசாலையாக இயங்கி வந்த இப் பாடசாலை 1953ஆம் ஆண்டு முதல் கனிஷ்ட பாடசாலையாக மாற்றப் பட்டது. 01.12.1962ல் இப் பாடசாலையானது அரச பாடசாலையாகச் சுவீகரிக்கப்பட்டது. அரச பாடசாலையாகிய பின் திரு. நீ. சுவாமிநாதர் அவர்கள் 01.02.1963 முதல் 31.01.1970ஆம் ஆண்டுவரை தலைமை ஆசிரியராகத் தொண்டாற்றினார். இவரின் பின் திரு.எஸ். அருள்பிரகாசம் அவர்கள் 01.09.1970 முதல் 30.04.1972 வரையும் திரு. க. அருளானந்தம் அவர்கள் 01.01.1973 தொடக்கம் 30.08.1984 வரையும் திரு. பி.ஆர். நீக்கிலஸ் அவர்கள் 04.09.1984 தொடக்கம் 21.06. 1989 வரையும் திருமதி எம். எச். பிரான்சிஸ் அவர்கள் 22.06.1989 முதல் 13.06.1993 வரையும் திரு. பொ. நாகரட்ணம் அவர்கள் 14.06.1993 தொடக்கம் 20.01. 1994 வரையும் திரு. கிளைவ் அரியரட்ணம் அவர்கள் 21.01.1994 தொடக்கம் 30.10.1995 வரையும் பாடசாலையை நடாத்தினார்கள்.

20.08.1992இல் ஏற்பட்ட இடப் பெயர்வு காரணமாக இப் பாடசாலை இடம் பெயர்ந்து மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வளாகத்திலும் அதன் பின் யா/ மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையிலும் மாலை நேரப் பாடசாலையாக 30.10. 1995 வரையும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. 30.10.1995 இல் ஏற்பட்ட இடப் பெயர்வு காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டது.

1999ஆம் ஆண்டு காலப் பகுதியில் இப் பகுதியைச் சேர்ந்த மக்கள் படிப்படியாக மீள் குடியமரத் தொடங்கினர். இதனால் இப் பகுதியில் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க

வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதை அன்றைய இளவாலை மறைக் கோட்ட முதல் வரும் யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி யின் அதிபருமாக இருந்த அருட்கலாநிதி ஜஸ்ரின் பேணார்ட் ஞானப்பிரகாச அடிகளார் உணர்ந்து கொண்டார்.

அவரது கோரிக்கைக்கு அமைய வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.வீ. இராசையா அவர்களின் பணிப்பின் பெயரில் திருமதி யூ.ம.கொ.பீ. பியன்வெனு அவர்கள் 26.07.1999ல் அதிபராகி இப் பாடசாலையை பொறுப்பேற்றுக் கொண்டார். அன்றிலிருந்து பாடசாலையை மீள ஆரம்பிப் பதற்கான முன்னாயத்த வேலைகளை மேற் கொண்டார்.

அன்றிலிருந்து இன்று வரை இப் பாடசாலை படிப்படியான வளர்ச்சியினைக் கண்டு வருகிறது. கல்வி, விளையாட்டு மற்றும் இணைப் பாட விதானச் செயற்பாடு களில் பாடசாலையின் பங்களிப்பு கணிச மானதாகும். பாடசாலையின் வளர்ச்சிக்கும் பங்களித்துவரும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரின் சேவை நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியதே

## யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

யாழ்ப்பாணத்தில் கல்விச் செயற் பாடுகள் சிறப்புற அமைய அடித்தளமிட்டதில் மிஷனரிகளின் பங்கு முக்கியமானது.

அமெரிக்க மிஷனரிகளின் கல்விப் பங்களிப்பானது மக்களின் சமூக, சமய கல்விப் பாரம்பரியங்களை மாற்றிய மைத்தது. இந்த வகையில் அவர்களால் விதைக்கப்பட்ட விதைகளில் ஒன்றுதான் இப் பாடசாலை.

1823ல் அமெரிக்க மிஷனரிமாரின் ஆதரவில் பாலர் பள்ளியாகத் தோற்றம் பெற்றது. இப் பள்ளியானது 1843 வரை முதற் தரமான (திரு.R.J. எக்காட் காலத்தில்) பாலர் பள்ளியாக விளங்கியது. திரு.கே.பிஜோன், திரு.எல்.வி.சின்னத்தம்பி ஆகியோர் தலைமை ஆசிரியர்களாக விளங்கிச் சேவை யாற்றி வந்தனர். 1868இன் பின்னர் இப் பாடசாலையானது விடுதியுடன் கூடிய பாடசாலையாக மாற்றமடைந்தது. 1868 தொடக்கம் 1880 வரை கில்லிஸ் அம்மை யாரின் சேவையினால் சிறந்த விடுதிப் பாடசாலையாக மிளிர்ந்து காணப்பட்டது.

1918இன் பின்னர் திரு. அல்பிரட் கந்தையா எனும் போதகர் காலத்தில் ஆங்கிலப் பாடசாலையாக மாற்றம் பெற்றது. 1936இல் சுயபாஷா விடுதிப் பாடசாலையாகப் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை (Pandateruppu Girl's High School) என்னும் பெயருடன் இயங்கத் தொடங்கியது. இக் கால கட்டத்தில் 1939இல் திருமதி புளோறா கனகதுங்கம் என்பவர் அதிபராக நியமிக்கப் பட்டார். இக் கால கட்டத்தில் இருந்து பாடசாலை மேலும் வளர்ச்சி காணத் தொடங்கியது. பாடசாலையில் ஒரு மறுமலர்ச்சியினை ஏற்படுத்திய முதலாவது தமிழ்ப் பெண் அதிபர் இவரே.

செல்வி மதியாபரணம் காலத்தில் மாணவர் பலர் விடுதியில் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினர். மாணவர்கள் மட்டுமல் லாது ஆசிரியர்கள் பலரும் விடுதியில் தங்கியிருந்து தமது கற்பித்தல் பணியினைச் செவ்வனே செய்து வந்தனர். அதிபரின் ஆளுமை, ஆற்றல் என்பன காரணமாகப் பாடசாலை புதிய தோற்றத்தையும் அந்தஸ் தையும் பெற்றது. புதிய கட்டிடங்கள் பல தோற்றம் பெற்றன. விஞ்ஞானக் கல்விக்கு விஞ்ஞான ஆய்வு கூடமும் சமய கலாசார நிகழ்வுகளுக்காக புதிய மண்டபமும் கட்டப் பட்டன. மாணவர் விடுதிக்காக புதிய இல்லங் கள் கட்டப்பட்டன.

1966இல் இப் பாடசாலை அரசின ரால் சுவீகரிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் முதன்மை மிக்க தனித்துவம் கொண்ட பாடசாலையாக மிளிர்ந்து வந்தது. தொலை தூரங்களிலிருந்து மாணவிகள் பலர் இப் பாடசாலை விடுதியில் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினார்கள். 1800க்கும் மேற்பட்ட மாணவர்களும் 80 மேற்பட்ட ஆசிரியர் களும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டதாக அறிகி றோம். 1970இல் செல்வி மதியாபரணம் அவர்கள் ஓய்வு பெற அவரைத் தொடர்ந்து செல்வி சரவணமுத்து, திருமதி காயத்திரி கணேசன் ஆகியோர் அதிபர் நியமனம் பெற்றுச் சிறந்த சேவையாற்றி வந்துள்ளனர்.

1972இன் பின்னர் திருமதி கலா வள்ளி ஆறுமுகதாசன் அவர்கள் அதிபராகப் பணியேற்று 1986வரை சேவையாற்றினார். இவருடைய அளப்பரிய பணிகள் மூலம் பாடசாலை உன்னத வளர்ச்சி பெற்றதென லாம். பல சிறப்பான அதிபர்களின் தலைமைத் துவத்தின் கீழ் இப் பாடசாலை தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது. கல்வி, விளையாட்டு, கலை முயற்சிகள், சமூக அக்கறை ஆகிய செயற்பாடுகளில் அதிபர்களும், ஆசிரியர் களும், பழைய மாணவர்களும், பெற்றோரும் பல ஆண்டுகளாகப் பங்களித்து வந்துள்ளனர். பல சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டி யாழ்ப்பாணத்திலுள்ள முதற்தரப் பெண்கள் பாடசாலையாக இப் பாடசாலை இன்று முகிழ்ந்துள்ளது.

## இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி (1907-2007)

வடமாகாணத்தின் தலைப் பட்டண மாகிய யாழ்ப்பாணத்திலிருந்து 19கி.மீ தூரத்திலும் காங்கேசன்துறையிலிருந்து 8.கி.மீ தூரத்திலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குள் காணப்படும் அமைதியுள்ள சிறந்த கிராமமே இளவாலை யாகும். இங்கு வாழ்வோர் கமத் தொழி லையே ஜீவாதாரமாகக் கொண்டிருந்தாலும், செம்மண் செறிவான வளம் நிரம்பிய மண் ணில் வெற்றிலைக் கொடிச் செய்கையும், பச்சை, ஊதா நிறமான முந்திரிகைச் செய்கை யும் பாரம்பரியமாக நடைபெறுவதைக் காணலாம். மேலும் பல வேறுபாடான வாழைகளும், காய்கறி வகைகளும் அங்கே பயிரிடப்படுகின்றன. இவ்வாறான கிராமப் பொருளாதாரத்தில் அவர்கள் நிலைகுலையா மல் வசதியாக வாழ்கின்றனர்.

கிராமத்தில் பெருந் தொகையானவர் கள் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்களாக

இருந்தாலும் குறிப்பிடத்தக்க அளவுடைய இந்துக்களும் அங்கே காலாகாலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். கல்லூரிச் சுற்றாடலில் இருந்து கடற்கரைக்குப் போகும் அரைவாசிப் பகுதிக்கும் பசுமை நிறைந்த வயல்கள் நிரம்பி உள்ளன. கடற்கரையோர மாகச் சேந்தான்களம், வலித் தூண்டல் என்றும் மறுபுறமாக மாரீசன்கூடல், மாதகல் என்றும் மீன்பிடித்தொழில் நடைபெறும் கிராமங்கள் உண்டு. பண்டத்தரிப்புப் பட்டின மும், சில்லாலை, பெரியவிளான், அளவெட்டி என்னும் கிராமங்களும் கல்லூரியிலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் சுற்றெல்லைக்குள் அடங்குகின்றன. இந்த இடங்களிலிருந்து மாணவர்கள் நாளாந்தம் துவிச்சக்கர வண்டி களிலும், பேரூந்துகளிலும் பிரயாணம் செய்து கல்லூரிக்கு வந்து சேருகின்றனர்.

இவ்வாறான சிறப்புக்கள் அமைந்த கிராமத்தில் வானளாவிய பனைகளையும், தென்னைகளையும் பின்புலத்திரைகளாயுடைய புனித அன்னம்மாள் பேராலயம் என்னும் மாண்பு மிகு கோயிலையும், பாரிய நிலப்பரப்பில் கட்டிடங்கள் பல கொண்ட திருக்குடும்பக் கன்னியர் மடத்தையும் தழுவியவாறே பிரம்மாண்டமான கல்விக் கோபுரமாக ஹென்றியரசர் கல்லூரி நிமிர்ந்து நிற்கின்றது. இளவாலையில் சந்தேகத்திற்கிடமில்லாமல் மரபு வழி வந்த முதற்தரமான கல்விக்கூடமாக இது விளங்குகின்றது. நூற்றாண்டுக்கு முன்பு இளவாலையிலும், அயலிலும் உள்ள ஆண்பிள்ளைகளுக்கு ஆங்கிலப் பாடசாலை ஒன்று அவசியம் என்ற பெரும் உள ஆவலை அக்காலத்தில் அங்கு வந்த குருமார் காதால் கேட்டனர். இதனால் ஹென்றியரசர் கல்லூரி 1907ம் ஆண்டு அடியிடப்பட்டது. இக்காலத்தில் ஜேர்மனி நாட்டு அரசராயிருந்த 2ம் ஹென்றி என்பவர் (937-1024) புனிதராயினர். அவருடைய திருப் பெயரையே யாழ்ப்பாண ஆயராயிருந்த என்றி யூலன் என்பவர் கொண்டிருந்தார். அப்பெயரே கல்லூரிக்குரிய பெயராகச் சூடப்பட்டது. (1852-1919) ஹென்றியரசர் பாடசாலையை ஆரம்பித்தவர் வண.லிகோரி றொட்றிக்கோ அடிகளார். இவர் குருநாகலைச் சேர்ந்தவராயினும் யாழ்ப்பாணத்திலே வசித்து யாழ்.புனிதமாட்டீன் குருமடத்தில் பயின்று, உயர்படிப்பு முடித்து குருவாகினார் சம்பத்திரிசியார் கல்லூரியிலே தான் அவர் நீண்டகாலம் கற்றிருக்கின்றார். இளவாலை ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தபோது அவருக்கு உதவியாக ஆசிரியர்கள் இருவர் மாத்திரமே இருந்தனர். மூன்று வருடம் இவ்வாறு பாடசாலை நடைபெற்றது.

1910ம் ஆண்டில் இப்பாடசாலையை நடத்தும் பொறுப்பை புனித சூசையப்பர் சந்நியாச சபைத்துறவிகளிடம் யாழ்ப்பாண ஆயர் ஒப்படைத்தார். பாடசாலைக்கட்டிடம் அமைத்தல், பாடசாலை அபிவிருத்தி, நிர்வாகம் எல்லாம் அவர்களே பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. வண.சகோதரர் பீலிக்ஸ் அவர்கள் முதலாவது அதிபராகப் பொறுப்பேற்றார். (1910-1921) இப்பாடசாலை 1917ம் ஆண்டு கல்விப் பணியகத்தினால் ஆங்கிலப் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. இக்காலப்பகுதியில் வண.சகோ. பிலிப்ஸ் அவர்கள் அதிபராகி (1921-1928) விஞ்ஞான கூட வசதிகளைச் செய்து வைத்தமையால் மாணவர்கள் விஞ் ஞானமும், விவசாயமும் E.S.L.C பரீட்சைக்கு எடுப்பதற்கு வாய்ப்பா

யிற்று. துறவிகளான எம்.தேவசகாயம்(1928-1932 ரூ 1935-1938 ) ஈ.ஐ. கிறிடோஸ் தொம் (1933-1935) என்பார் அதிபர்களாயிருந்து சீனியர் கேம்பிறிச், லண்டன் மெற்றிக் குலேசன் பரீட்சைக்காக சிறப்பாக உழைத் தனர். இச்சமயத்தில் கல்லூரி விளையாட்டுத் துறையில் முக்கியமாய் கிரிக்கற் பந்தாட் டத்திலும், உதைபந்தாட் டத்திலும் திறமை பெற்று தாங்கள் எந்தக் கல்லூரியுடனும் ஒப்பீட்டளவில் இரண்டாவது இடத்தில் இல்லை என்பதற்குச் சான்றாதாரம் ஆக்கி னார்கள்.

1926ம் ஆண்டில் இப்பாடசாலை கல்லூரி நிலைக்கு உயர்த்தப்படலாயிற்று. 1939ம் ஆண்டில் குறிப்பிடத்தக்க விடயமாகக் கல்லூரியின் நிர்வாகம் துறவிகளிடமிருந்து கைமாறி யாழ்.மறைமாவட்ட குருமார் வசம் ஒப்படைக்கப்பட்டது. சூசையப்பர் சபைத் துறவிகளின் நிர்வாகக் காலம் முடிவு பெற்றது. எல்லோராலும் அறியப் பெற்ற முதிர்ச்சியுற்ற மகா.வண.சாள்ஸ், எஸ். மத்தியூஸ் அடிகளார் 91939-1943) அதிபராகிப் பாடசாலையைக் கையேற்றார். இவர் ஒரு ஆங்கில பிரான்சி யக் குடும்பத்தைச் சேர்ந்தவர். மாணவரில் எல்லையற்ற அன்பும் இரக்கமும் உடையவர். ஆசிரியர்களுடன் சேர்ந்து கல்லூரி ஒழுக்கத் திலும், பண்பிலும், படிப்பிலும் சிறக்கச் செய்தார். கடின உழைப்பு "எதனையும் வெல்லும்" என்ற விருது வாக்கியத்தை கல்லூரியின் மகுட வாக்கியமாக்கினார். அது இன்று வரை மாணவர்களுக்கு உற்சாகமளிக் கிறது.

இவருடைய அடிச்சுவடுகளில் வண. பி.ஜே.ஜீவரட்ணம் அடிகளார் (1943-1953 அதிபராகினார். இவர் லண்டனில் படித்த பட்டதாரி. பத்தாண்டுகளாக முன்னிருந்த உயர்வான படிகளிலேயே கல்லூரியை வழிநடத்தி வந்தார். அதனால் 1951ம் ஆண்டு பங்குனி மாதம் இக்கல்லூரி "A" தராதரத் திற்கு உயர்த்தப் படலாயிற்று. 1945ம் ஆண்டு அரசாங்கம் இலவசக்கல்வியை அறிமுகப் படுத்திய வேளையில் இலங்கையிலிருந்த பெரும்பாலான கல்விக்கூடங்களைப் போல என்றியரசர் கல்லூரியும் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகவே கணிக்கப்பட்டது. ஆனால் இவ்வேளை இது தனித்துவமாக யாழ். ஆயரின் கீழே இயங்கப் போவதாகத் தீர்மானித்தது. மேதகு கலாநிதி ஜே.எமிலி யானுஸ்பிள்ளை, கலாநிதி வ.தியோகுப் பிள்ளை ஆகிய இரு ஆயர்கள் இக்கல்லூரி யின் அதிபர்களாகப் பணியாற்றியிருந்தனர்.

சிறப்பு வாய்ந்த இந்த இரு அதிபர்க ளின் பின்னர் என்றியரசர் கல்லூரியானது மகிழ்ச்சியும் உயர்ச்சியும் நிரம்பிய பல கல்விமான்களைத் தொடர்ச்சியாக அதிபர்களா கப் பெற்றது. அருட்திரு.எல்.ஏ.சிங்கராயர் (1956-1963), அருட்திரு.ஜே.எவ். ஸ்ரனிஸ் லாஸ் (1963-1968), அருட்திரு பெஞ்சமின் அல்பிரட் (1967-1970) , அருட்திரு எச்.ஜே. மரியாம்பிள்ளை (1970-1973), அருட்திரு. ஜே.ஏ.பிரான்சிஸ் (1973-1976), அருட்திரு. அன்ரன் ரீ. இராசநாயகம் (1976-1989), அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் (1989-2002), அருட்திரு.ஜேம்ஸ் சிங்கராயர் (2002-2009)

**வண.பிதா J.A யேசுதாஸ்**

அதிபர்.

**யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

நமது பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் மகுடமாக விளங்குவது சண்டிலிப் பாய் இந்துக் கல்லூரி. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி கிராமத்தின் மத்தியில் J/142 கிராம அலுவலர் பகுதியில் அமைந்துள்ளது.

இடைத்தர வர்க்கத்து மக்களுக்கு கல்வி என்பது எட்டாக்கனியாகவே பல வேளைகளில் இருந்து வருகின்றது. இக் கல்லூரியின் அமைவு, இடைத்தர மக்களை அரவணைத்து அறிவு கொடுக்கும் இடமாக அமைந்துள்ளது. மக்களின் பொருளாதார நிலைகளுக்கும் பண்பாட்டுக் கோலங்கள் அல்லது சமூக அடைவுகளுக்கும் ஏற்ப வர்க்க நிலை வேறுபாட்டை உடைத்து இக்கல்லூரி இவ்விடத்தில் உதயமானது.

பல நூறு பழங்களும், பயன்களும் என்ற திட்டத்தை துவக்கிய செகராஜசிங்கம் என்ற புனிதர் 1929 இல் தனது சொந்தக் காணியில் பொதுநலத்தோடு சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப் பாடசாலையை (SANDILIPAY HINDU ENGLISH SCHOOL) அமைத்து தொடக்கி வைத்தார். அக்காலத்தில் சண்டிலிப்பாயில் ஆங்கில nkho pg;ghlrhi y (English Medium School) ஒன்றில்லை என்பதற்காகவும் இக்கிராமத்து மக்கள் ஆங்கிலக் கல்விக்காக அயற் கிராமங்களுக்கு நடந்து செல்வதை கண்டும் இரக்கமுற்ற இவ்வள்ளல் இவரது சொந்தக்காணியில் பாடசாலையை நிறுவி னார். தூர நோக்கும் துணிந்த போக்கும் கொண்ட செகராஜசிங்கம் இதேவேளை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் தனது பெயரில் ஓர் அன்னதான மடத்தையும் அமைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் மக்களின் வயிற்றுப் பசிக்கும் கல்விப் பசிக்கும் சேவை செய்த செம்மல்.

இவர் ஆசிரியர்களுக்கு தனது சொந்தப் பணத்திலேயே சம்பளமும் கொடுத்தார். சில காலங்களின் பின்னர் பாடசாலையில் பெரிய மண்டபம் ஒன்றை அமைத்தார். அதை ஓலை கொண்டு வேய்ந்தார். இன்னும் சில ஆண்டுகளின் பின்னர் நிரந்தரக் கட்டிடம் அமைத்தார். ஓய்வூதியம் பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு பாடசாலை ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பிக் கொண்டார். செகராஜசிங்கம் அவர்களுக்கு இரு பிள்ளைகள். மகள் பரமேஸ்வரி. மகன் பரராஜசேகரம். மகன் இப்பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றியிருக்கிறார். பொருளாதாரப் பற்களில் அரைபடும் நிலை யில் இருந்த பாடசாலையை மகனின் திருமணவழி உறவுக்காரார் ஒருவரே ஈட்டிலிருந்து மீட்டார். இருந்தும் செகராஜ சிங்கத்தின் கனவு நீண்டது. அவர் பொதுநல மாக சிந்தித்த செயற்றிட்டங்கள் முழுவதும் நிறைவேறவில்லை. எனினும் அவர் உருவாக்கிய சூரியனின் சுடர் அணைந்து போகவில்லை. இப்பாடசாலையின் முதலாவது அதிபர் செகராஜசிங்கம் அவர்களே. 1929 முதல் 1940 வரையும், ஒரு தசாப்த காலமாக நிறுவுநர் ஒருவர் அதிபராக ஆட்சி செய்து வந்துள்ளார் என்று அறியப்படுகிறது. இன்றும் பலர் 'ராஜா ஸ்கூல்" என்றே கூறுகின்றனர். மரணத்தின் பின்னரும் ஒரு சமுதாயத்தை தன்னால் முடிந்தவரை சுமந்து கொண்டே இருக்கின்றார் செகராஜசிங்கம்.

இப்பாடசாலை, 70பதுகளில் கல்வி அமைச்சர் பதுதீன் மொகமட் அவர்களது அனுசரனையுடன் 'சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்' எனப் பெயர் பெற்றது. இக்காலத்தில் அருகில் இருந்த வாணி நிகேதன வித்தியாசாலையையும் இப் பாடசாலையுடன் அரசு இணைத்துக் கொண்டது என்று அறியப்படுகிறது. இன்று அது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆரம்ப பிரிவாக இயங்குகிறது. ஆற்றல் மிக்க பல அதிபர்களின் தலைமையில் இப்பாடசாலை பல வளர்ச்சிகளைக் கண்டு வந்துள்ளது. அவற்றை விபரிக்கில் பெருகும்.

திரு.சோ.சோமசேகரம்அதிபராக இருந்த காலத்தில் பாடசாலைக் கீதம் ஒன்றும் இயற்றப்பட்டது. "வந்தனை செய்வோம் எங்கள் கல்லூரித் தாயை சிந்தையுடன் மாணவர் கூடி." என்ற பாடசாலைக்கீதத்தை சைவப்புலவர் நா.கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதினார். திரு.சோ.சோமசேகரம் அவர்களின் பௌதிக வளம் தொடர்பான சில நல்ல துவக்கங்கள் பிள்ளையார் சுழியாகியது.

1993 ஆம் ஆண்டு இணுவிலைச் சேர்ந்த திரு.ச.சிவநேஸ்வரன் அவர்களின் வருகை பல்துறைமாற்றங்களை ஏற்படுத்தியது. 23.03.1999.ல் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாகப் பெயர் பெற்றுத் தரமுயர்த்தப்பட்டது. பாடசாலையின் வரலாறு என்ற பகுதிக்குள் அடிக்கோடிட்டுச் சொல்லக்கூடிய புரட்சியென்பது அதிபர் சிவநேஸ்வரன் அவர்களது பதவிக் காலத்திற்குரியதே.

இன்று கு.விமலன் அவர்கள் கல்லூரியின் அதிபராக இருக்கின்றார். செய்கையே சிறந்த கல்வி என்ற மகுட வாசகத்துடன் இக்கல்லூரி கல்வியிலும், இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் வளர்ச்சி பெற்று வருகின்றது.

**- ந.தனுசுஜன்**

**யா/நவாலி மகா வித்தியாலயம்**

இயற்கையெழில் நிறைந்த இனிய தொரு கிராமம் நவாலி என்னும் நற்பதி. ஆதியிலிருந்தே அறிவிலும் கலையிலும் சிறப்புற்று விளங்கிய இக்கிராமத்தில் 1910ஆம் ஆண்டு உயர்திரு.பண்டிதர் தம்பையா அவர்களால் சைவப்பாடசாலையாகப்"பார்வதி வித்தி யாலயம்" என்ற பெயருடன் இப் பாடசாலையானது ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து திரு.இராமலிங்க உபாத்தியாயர், திரு.க.சோமசுந்தரப்புலவர், பாடசாலை ஆசிரியராகவிருந்த திரு.சி. சுப்பையா ஆகியோர் மேற்கொண்ட அயராத முயற்சியால் இப்பாடசாலையானது 1919ஆம் ஆண்டு உடுவில் வட்டார வித்தியாதரிசி திரு.க.தில்லைநாயகம் அவர்களின் உதவியுடன் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இப்பாடசாலையானது வளர்ச்சி பெற்று 1951இல் கனிஷ்ட வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. பின் 1961இல் மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டு நவாலி மகா வித்தியாலயம் என்று பெயர் பெற்றது. பின் உயர்தர வகுப்பும் நடாத்தப் பட்டு பாடசாலையானது முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருந்தது.

திரு.க.நவரட்ணராஜா அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய போது பாடசாலை யானது உன்னத வளர்ச்சி பெற்று பல்கலைக் கழகத்திற்கும் மாணவர்கள் தெரிவு செய்யப் பட்டார்கள். இங்கு 21ற்கு மேற்பட்ட அதிபர்கள் கடமையாற்றி உள்ளனர். 1921ஆம் ஆண்டிற்கு முன்னர் கடமையாற்றிய அதிபர் பற்றிய தகவல் கிடைக்காத போதும் 1921ல் அதிபர் திரு.ஆறுமுகம் அவர்களும், அவரைத் தொடர்ந்து 1931ல் திரு.எஸ்.ஏ செல்லையா, திரு.வி.சின்னையா, திரு.பி.ஈ.டி. ஐயாத் துரை, திரு.எஸ்.சிவகுருநாதன், திரு.கே. நாராயணபிள்ளை அவர்களும், அவரைத் தொடர்ந்து திரு.கே.நவரட்ணராஜா 1961ல் கடமையேற்று நடாத்திய காலப்பகுதியி லேயே நவாலி மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. இதனைத் தொடரந்து திருமதி ஏ.டபிள்யூ.தங்கராஜா, திருமதி எஸ் ஆறுமுகராஜா, திரு.பி.சிவசுப்பிரமணியம், திரு.பொ.தி.சம்பந்தப்பிள்ளை, திரு.த. மார்க்கண்டு, திரு.தி.சம்பந்தபிள்ளை அவர்க ளும் அதிபராகக் கடமையாற்றினர். அதனைத் தொடர்ந்து 1984ல் திரு.செ. கதிர்காமத்தம்பி அவர்கள் கடமையேற்று பணி செய்த காலப்பகுதியில் கல்விச் செயற்பாடுகளிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் நவாலி மகாவித்தியாலயம் சிறந்து விளங்கி யமை குறிப்பிடத் தக்கது. இவரைத் தொடர்ந்து கதிரு.கே.எம். மாணிக்கம் அவர்களும், இவரைத் தொடர்ந்து 1989ல் திரு ஐ.மனோ கரன் அவர்கள் கடமையைப் பொறுப்பேற்று நடாத்திய காலத்திலும், கல்வி நடவடிக்கைகள் சிறப்புடன் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து 1993ல் திருமதி வி.விஸ்வலிங்கம் அவர்கள் கடமையைப் பொறுப்பேற்று இவ்வித்தியாலயத்தை முன்னேற்றுவதற் காக ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களுடன் சேர்ந்து பல கட்டங்களாக வகுத்துச் செயற்பட்டு வித்தியாலயத்தை உயர்வடையச் செய்தார். இவ் அதிபரைத் தொடர்ந்து அலெக்ஸாண்டர் அதிபர் 05.03. 1999 அன்று பொறுப்பேற்று முன்னைய அதிபர் விட்டுச் சென்ற பணிகளை நிறைவு செய்ததுடன் வித்தியாலய பௌதீக வள அபிவிருத்தியில் பெரும்பங்காற்றி முக்கிய இடத்தை வகித்தார் திரு.பு.ஸ்ரீ விக்னேஸ் வரன் அதிபர் அவர்கள் முன்னைய அதிப ரைத் தொடர்ந்து பாடசாலையின் அபிவிருத் தியில் அக்கறை செலுத்தி பல பெரியார்களின் உதவியுடன் வித்தியாலயத்தை அழகுற வளர்ச்சி பெறச் செய்தார்.

இவ் அதிபரைத் தொடர்ந்து இன்று இரா. வசந்தகுமார் அவர்கள் 30.04.2007 அன்று இவ்வித்தியாலயத்தைப் பொறுப் பேற்று பல பெரியார்களின் துணையுடன், பல்வேறு செயற்பாடுகளின் ஊடாக வித்தியா லயத்தை உயர்வு பெறச் செய்து வருகின்றார்.

**யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்**

19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்திலே ஆங்கிலமொழியையும், கிறீஸ்தவ சமயத்தையும் பரப்புவதற்காக ஆங்கிலேயர் பல கல்வி நிறுவனங்களை ஆரம்பித்தார்கள். இந்த நிலையிலே சைவசமயத்தையும், தமிழ் மொழியையும் வளர்ப்பதற்காக கல்விமான்களும் தலைவர்களும் தனிப்பட்ட முறையில் பாட சாலைகளை ஆரம்பித்தார்கள். இந்த வரிசையிலே அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து தனது கிராம மக்களை மீட்பதற்காக சுதுமலையில் புகழ்பெற்று விளங்கியவரும், சிறந்த கல்விமானாகவும், சோதிடராகவும், வைத்தியராகவும் விளங்கியவராகிய திரு.நா.ஆ சிந்நயபிள்ளை அவர்கள் 1885ஆம் ஆண்டு யூன் மாதம் சுதுமலை சிந்மய வித்தியாசாலையை ஆரம்பித்தார். தானே அப்பாடசாலையின் முதல்வராக இருந்து அதன் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றினார். அவரின் மனைவியாரும் அப் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கினார்.

திரு.சிந்நயபிள்ளை அவர்கள் தம் 16ஆவது வயதில் இவ்வித்தியாசாலையை ஸ்தாபித்தார் என்பது பெரும் சாதனையாக அமைகின்றது. சொந்தக்காணியில் ஆரம்பத்தில் கிடுகுக் கொட்டிலாக இருந்த இப்பாடசாலையை திரு.சிந்நயபிள்ளை அவர்கள் தனது முயற்சியால் கல்லால் அமைத்ததாகக் கூறப்படுகின்றது. ஆரம்பத்தில் சிறுதொகையினரான ஆசிரியர்களையும், மாணவர்களையும் கொண்டு விளங்கிய இப்பாடசாலை அவரின் பின் வந்தோர் ஆற்றிய அரும் பணியினால் வளர்ச்சியடையத் தொடங்கியது. அதனால் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் தொகை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது.

திரு.சிந்நயபிள்ளை அவர்கள் பாடசாலையின் முதல்வராக 40 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்துள்ளார். அக்காலத்தில் பாலர் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை வகுப்புக்கள் நடத்தப்பட்டன. 1905இல் நன்கொடைபெறும் பாடசாலையாக இருந்தது. இப்பாடசாலையின் நிறுவுனர் திரு. சிந்நய பிள்ளை அவர்கள் 1942ஆம் ஆண்டு அவரது 73ஆவது வயதில் காலமானார். தமது 16ஆவது வயதில் பாடசாலையை நிறுவினார் என்பதைப் பார்க்கும் போது மொத்தம் 57 ஆண்டுகள் அதாவது இப்பாடசாலையின் தற்போதைய ஆயுளின் அரைநூற்றாண்டுக்கு மேற்பட்ட காலம் அன்னாரின் கண்காணிப்பின் கீழ் பாடசாலையிலிருந்து வந்துள்ளது என்பது புலனாகும்.

திரு.சிந்நயபிள்ளை அவர்களைத் தொடர்ந்து புங்குடுதீவைச் சேர்ந்த திரு.சின்னத்துரை என்பவரும் பின்பு ஏழாலையைச் சேர்ந்த திரு.சிவபாக்கிய நாதன் என்பவரும் முதல்வராகப் பணியாற்றினார். அதன் பின் உடுப்பிட்டியைச் சேரந்த முருகேசு என்பவர் முதல்வராகப் பணியாற்றிய காலத்தில் இப்பாடசாலை சிறப்பான நிலையை அடைந்தது என அறியமுடிகின்றது. இவரின் காலத்தில் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திர வகுப்புக்களும் (S.S.C) பாலபண்டித வகுப்புக்களும் இங்கு நடாத்தப் பட்டன. மேலும் வடமாகாண ஆசிரியர் கழகம் (N.P.T.A) நடாத்திய பரீட்சைகளிலும் மாணவர்கள் தோற்றினர்.

திரு.முருகேசு அவர்களின் காலத்தில் இலவச உணவுத்திட்டம், இரவுப் பாடசாலை முறை என்பன அமைந்திருந்தன என்பது வியப்பையும் மகிழ்வையும் தருவதாய் உள்ளது. திரு.முருகேசு அவர்களின் கீழ் திருவாளர்கள் கார்த்திகேசு, தியாகராஜஐயர், இராமலிங்கம்,விஜயரத்தினம், சுப்பிரமணியம் என்போர் உதவி ஆசிரியர்களாகப் பணியாற்றினர்.

அடுத்து நுணாவிலைச் சேர்ந்த திரு.தம்பாப்பிள்ளை, திரு. இராசதுரை, திரு. செல்லத்துரை, திருமதி பராசக்தி சுப்பிரமணியம் என்போர் அதிபர்களாகக் கடமையாற்றினர். திருமதி ஜெ.கிருஷ்ணசாமி அவர்கள் இப்பாடசாலையின் அதிபராக 1981ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் கல்வி, விளையாட்டு, கலை, சமயம் போன்ற துறைகளில் வியக்கத் தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டு வந்தன. இவர் 1993வரையும் இப்பாடசாலையில் அதிபராகப் பணியாற்றினார். அவரது நிர்வாகத்தின் கீழ் இப் பாடசாலை இருந்தகாலம் இப்பாடசாலையின் 'பொற்காலம்' என வர்ணிக்கத்தக்க அளவு சிறப்புடையதாக இருந்தது.

திருமதி கிருஷ்ணசாமியைத் தொடர்ந்து திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம், திரு.செ.குபேரநாதன், திரு.த.தர்மசோதி, திரு.சண்முகசுந்தரமூர்த்தி என்போர் அதிபர்களாக இருந்தனர். தற்போது ஆ. பேரின்பநாயகம் இப்பாடசாலையின் அதிபராக இருக்கின்றார்.

# பொதுவான

# கட்டுரைகள்

# யாழ்ப்பாணத்துத் தேசவழமையும் சமூக வழமையும்

**கார்த்திகா குணரட்ணம்,**
சட்டத்தரணி.

இலங்கையில் வாழும் மக்கள் பல்வகைப்பட்ட சட்டங்களினாலே ஆளப்பட்டு வருகின்றனர். எமது நாட்டின் கலாசார விழுமியங்கள் கோட்பாடுகளை மையமாக வைத்துத் தோற்றம் பெற்ற சுதேசிய சட்டங்களான முஸ்லீம் சட்டம், கண்டியர் சட்டம், தேசவழமை என்பவற்றுடன் ஒல்லாந் தரினால் அறிமுகம் செய்யப்பட்ட றோமன் டச்சுச் சட்டம் மற்றும் ஆங்கிலேயர் வருகை யுடன் கலப்புற்ற ஆங்கில சட்டக் கோட்பாடு களை உள்ளடக்கியதாகப் பல் வகைச் சட்ட மரபுகளினால் பிணைக்கப்பட்டுள் ளோம். எமது நாட்டின் பொதுச்சட்டமாக றோமன் டச்சுச் சட்டம் காணப்பட்டாலும் ஆங்கிலச் சட்டம் மற்றும் சுதேசிய சட்டங்களின் ஆதிக்கத்தினை யும் மறுப்பதற் கில்லை.

## தேசவழமை

தேசவழமையானது திராவிட வழக் காறுகள் மற்றும் மலபார் மக்களின் வழமை களையும் ஒன்றிணைத்து வழக்கில் இருந்த வற்றை சேர். கிளார்க் ஐசாக் அவர்கள் தொகுத் துச் சட்டமாக்கினாலும் எமது பாரம்பரிய சில வழக்காறுகள் இணைக்கப் படவில்லை என்பதும் றோமன் டச்சுச் சட்ட மற்றும் மேலைத்தேய சட்டக் கலப்பு இடம் பெற்றுள் ளது என்ற கூற்றும் மறுப்பதற்கன்று.

தேசவழமை என்பது ("Customs prevailing in the country"- Dr.H.W.Thambiah) அதாவது தேசம்+வழமை என யாழ் மாகா ணத்திற்குட்பட்ட வழக்காறுகளை ஒன்றி ணைத்தது எனப் பொருள்படுவதோடு 'Malabar inhabitants of the province of Jaffna' என யாழ்ப்பாண மாகாணத்தில் வசிக்கின்ற மலபார் வாசிகளிற்கு உரித்துடையது என விளக்கப்படினும் பண்டைய காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து ஆளப்பட்டமையும் நோக்கற்குரியதே.

எமது பாரம்பரிய விழுமியங்களில் இணைந்து காணப்பட்ட அடிமை முறைமை மற்றும் சாதி முறைமை என்பவை தேச வழமை சட்டப்பரப்பில் இடம் பெறவில்லை என்பது தற்கால நவீன கண்ணோட்டத்தில் சமத்துவமான உரிமையைப் பிரதிபலிப்பதாக காணப்பட்டாலும் எமது வழக்காறுகள் முழுமையாகத் தேசவழமைத் தொகுப்பில்

உள்வாங்கப்படவில்லை என்பதற்குச் சான்றாகவே கொள்ள வேண்டும். மேலும் மேலைத்தேயச் சட்ட கோட்பாடுகள், இந்து சட்டம், முகமதியன் சட்டம், டச்சுச் சட்டம் மற்றும் ஆங்கிலச் சட்டங்களின் கோட்பாடுகள் அதில் இழையோடி நிற்பதனையும் காணலாம்.

### தேசவழமைச் சட்டத்தின் ஏற்புடைமை

தேசவழமைச் சட்டமானது பொதுவாக யாழ்ப்பாண மாகாணத்திற்கு உட்பட்ட மலபார் பிரதேச வாசிகளிற்கு ஏற்புடையது என்றும் வடமாகாணத்திற்கு உட்பட்ட நிலப் பகுதியானது யாழ்ப்பாண மாகாணத்திற்கு உட்பட்ட மலபார் பிரதேச வாசிகள், சிங்களவர், ஆங்கிலேயர் அல்லது யாராக இருந்தாலும் தேசவழமையால் ஆளப்படுவர் என்றும் கூறப்படுகின்றது. அவ்வகையில் நிலம் தொடர்பான முன்வாங்கு உரிமை (Pre-emption), ஒற்றியீடு (Otti mortgage), சேவகம் (Servitudes) என்பவை எல்லாக் காணி உரித்தாளர் களிற்கும் ஏற்புடையன.

தேசவழமைக்கு உட்பட்ட பெண் ஒருவர் தேச வழமைக்கு உட்படாத ஆண் ஒருவரைத் திருமணம் செய்யும் போது தேச வழமையால் ஆளப்பட மாட்டார் எனவும் தேச வழமைக்கு உட்பட்ட ஆண் ஒருவர் தேசவழமைக்கு உட்படாத பெண் ஒருவரைத் திருமணம் செய்யும் போது தேசவழமையால் ஆளப்படுவார் எனவும் 1911ம் ஆண்டு திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 3இன் படி கூறப்படுகின்றது. மேலும் தேசவழமையின் ஏற்புடைமையை நடைமுறை உதாரணங் களுடன் நோக்குகையில்,

Velupillai vs Sivagamipillai (1910, 13NLR.74) என்ற வழக்கிலே யாழ்ப்பாண தமிழ்வாசி ஒருவர் 35 வருடங்களிற்கு மேலாக மட்டக்களப்பில் வசித்து இறந்தார். மட்டக்களப்பிலே சொத்துக்களைக் கொள்வனவு செய்த பின்பு 1891 இல் யாழ்ப்பாணத்தில் திருமணம் புரிந்து குடும்பத்தினரை யாழ்ப்பாணத்தில் விட்டு விட்டு இடையிடையே வந்து சென்றார். 1910 இல் இருந்து மட்டக்களப்பிற்குத் தனது குடும்பத்தை அழைத்து சென்று இறக்கும் வரை அங்கு வாழ்ந்து வந்தார். இவருடைய திருமண உரிமைகள் தேச வழமையினாலா அல்லது றோமன் டச்சுச் சட்டத்தினாலா ஆளப் படவேண்டியது என்ற வினாவிற்கு இவர் யாழ் மாகாணத்திற்குட்பட்ட மலபார்வாசி என்றதனால் தேசவழமைச் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் என்ற அடிப்படையில் ஆராயப்பட்டது. அதேவேளை King vs Perumal (1911 14NLR.496) என்ற வழக்கிலே இந்து தமிழ் ஒருவர் இந்தியாவில் பிறந்து இலங்கை மத்திய மாகாணப் பகுதியில் குடியேறினார். இவருக்கு தேசவழமை ஏற்புடையதாகாது என தீர்ப்பளிக்கப்பட்டமை நோக்கற்குரியது.

### தேசவழமையில் பெண்கள்

ஆதனக் கைமாற்றம் தொடர்பிலும், சிவில் வழக்கினைத் தாக்கல் செய்வதிலும், எதிர் வாதிடுவதில் கணவரின் பெயரை இணைத்துக் காட்டவேண்டும் என்பது தொடர்பிலும் தேசவழமைக்குட்பட்ட பெண்க ளிற்கு உள்ள உரிமைகளை நோக்குகையில் சமத்துவமான உரிமை என அரசியலமைப் பில் வரையறுக் கப்பட்டவை மற்றும் CEDAW போன்ற சர்வ தேசப் பெண்கள் உரிமைகள் சமவாயக் கோட்

பாடு களை எந்தளவிற்கு நாம் மதிக்கின்றோம் என்பதும் ஆய்வுக்குட்பட் டதே.

பொதுவாகத் தேசவழமைக்கு உட்பட்ட பெண் திருமணத்திற்கு முன்னராக ஆதனக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் போது அல்லது இறுதி விருப்பாவணம் எழுதும் போது கணவனின் சம்மதம் பெறுதல் அவசிய மில்லை எனினும் திருமணமான பின்பு, திருமணம் நிலைத்திருக்கும் காலம் வரை கணவரின் சம்மதத்துடனயே ஆதனக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியு மென 1911ம் ஆண்டு திருமண உரிமை களும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத் தின் பிரிவு (6) இன் ஊடாக அறிய முடியும்.

இருப்பினும் 1911ம் ஆண்டு திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் பிரிவு (8) இன் படியாக மாவட்ட நீதிமன்றின் அனுமதியுடன் பின்வரும் சந்தர்ப் பங்களில் கணவரின் சம்மதம் இன்றிச் சொத்தினைக் கைமாற்ற முடியும்.

01. அவள் கணவனால் கைவிடப்படும் போது,
02. பரஸ்பர இணக்கத்தின் பேரில் அவள் தனது கணவனை விட்டுப் பிரிந்து வாழ்ந்துவரின்,
03. நீதிமன்றத்தின் ஏதாவதொரு கட்டளையால் இரண்டு வருடங்க ளிற்கு மேற்பட்டகாலத்திற்கு அவளது கணவன் சிறையில் இருப்பின்,
04. அவளது கணவன் ஒரு பைத்தியக்காரனாக அல்லது முட்டாளாக அல்லது அவன் எங்கு வாழ்ந்து வருகிறான் என்பது தெரியாதவிடத்து,
05. அவளது கணவன் நியாயமற்ற முறையில் சம்மதம் தர மறுத்திருப்பின்,
06. மனைவியினதும், பிள்ளையினதும் நலனுக்காகக் கணவனின் சம்மதம் தேவையில்லை என்று தெரியுமிடத்து,

## ஆதன வகைப்பாடு

தேசவழமைக்கு உட்பட்ட ஆதனமானது முதுசொம், சீதனம், தேடிய தேட்டம், உரிமை என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## முதுசொம்


முதுசொம் என்பது பொதுவாக மூதாதையர் வழி ஆதனமாக ஆரம்பகாலத்தில் ஆண்வழி வந்தடைவதாகக் கொள்ளப்பட்டாலும் 1911ம் ஆண்டு திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தில் 1947ம் ஆண்டு திருத்தச்சட்டத்தின் பிரிவு 15 இன் படியாக "Mudusam is defined as patrimonial inheritance, being property devolving on a person by descent at the death of his or her parent or any other ancestor in the ascending line" என்பவற்றுக்கமைய ஒருவன் அல்லது ஒருத்தியின் பெற்றோர் இறப்பதினால் அல்லது பெற்றோர் வழி மூதாதையர் இறப்பதனால் வழிவழியாக ஒருவரை வந்தடையும் ஆதனம் முதுசொம் எனப்படும். முதுசமாக வந்தடைந்த ஆதனத்தினை ஒருவர் விற்றுப் பணமாக்கும் போது அல்லது வேறு வழியில் சொத்தின் வடிவத்தினை மாற்றும் போது அது தேடிய தேட்டமாகக் கொள்ளப்படமாட்டாது என Jevaratnam vs Murukesu (INLR 251, 1895) என்ற வழக்கிலே "Under the law of Thesawalamai, money inherited by a husband and converted into lands does not form part of thediatettam. Such land should be treated as his separate property provided that the money can

be earmarked." என கூறப்பட்டதனூடாக அறியலாம்.

ஏதேனும் ஒரு வாழ்க்கைத்துணையானது முதுச ஆதனத்தினைப் பாராதீனப் படுத்தாது இறப்பின் அது பிள்ளைகளிற்குச் சமபங்காகச் சென்றடையும். பிள்ளைகள் இல்லை எனின் தாய் வழி வந்தடைந்த ஆதனமா அல்லது தந்தை வழி வந்தடைந்த ஆதனமா என நோக்கப்பட்டு சொத்து பெறப்பட்ட இடத்தினை மீண்டடைந்து விடும். தாய் தந்தை அல்லது மூதாதையர் இல்லாவிடின் சகோதரங்களிற்குச் சென்றடையும் (பார்க்க: பின்னிணைப்பு - I)

**சீதனம்**

சீதனம் என்பது பொதுவாகத் திருமணத்தின் போது அல்லது திருமணத்தின் முன் அல்லது பின்னராக மனைவியால் கொண்டுவரப்படும் சொத்தாகக் காணப் பட்டாலும் ஆரம்ப காலத்தில் திருமணத்தின் போது ஆண்வழியாக வரும் சொத்து முதுசொம் எனவும் பெண்வழியாக வரும் சொத்து சீதனம் எனவும் பொருள் கொள்ளப்பட்டது.



பழைய தேசவழமையின் கீழாகப் பெண்ணிற்கு வாரிசுரிமையாக வரும் சொத்து சீதனம் உட்பட தாய்வழி வந்ததாகவும், ஆண்களிற்கு வாரிசுரிமையாக வரும் சொத்து தகப்பன் வழி வந்ததாகவும் கொள்ளப்பட்டது. ஆயினும் பிற்காலத்தில் இவ்வேறுபாடு நீக்கப்பட்டுச் சீதன ஆதனமானது தந்தையின் தனிப்பட்ட சொத்து அல்லது தாயின் தனிப்பட்ட சொத்து அல்லது தேறிய தேட்டத்தில் இருந்து கொள்ளப்படலாம் எனக் கூறப்படுகிறது.

தற்காலச் சட்டப்பரப்பில் சீதன ஆதனம் பற்றி நோக்குகையில் சீதன ஆதனமானது மனைவியின் தனிப்பட்ட சொத்தாகவே கருதப்படுகின்றது. சீதன உறுதியில் கணவரின் பெயரைச் சேர்த்து எழுதப்படுவது வழக்கமாகக் காணப்பட்டா லும்,

உதாரணமாக, "...... இதன் பின்னால் காணும் ஆதன இடாப்பில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தையும் அதற்குச் சேர்ந்தவைகளையும் இங்கு சொல்லப்பட்ட வைத்தியசிங்கம் கமலநாதனுக்கும் எனது மகள் துரைசிங்கம் நிர்மலாவிற்கும் நடந்தேறிய விவாகம் காரணமாகவும், எங்களிற்கு இயல்பாக உள்ள அன்பு நேசம் காரணமாகவும், ......."

இவ்வாறு குறிப்பிடப்படுவதால் சீதன ஆதனத்தில் கணவருக்கும் பங்கு உண்டு எனக் கூறமுடியாது. ஆயினும் 1911ம் ஆண்டு 1ம் இலக்க திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச்சட்டத்தின் சட்டப்பிரிவு (6) இன் படியாகத் தேசவழமைக்கு உட்பட்ட பெண்ணின் ஆதன பரிமாற்றங்களிற்குக் கணவரின் சம்மதம் அவசியம் எனக் கூறப்பட்டுள்ளதால் சீதன ஆதனம் மனைவியின் தனிப்பட்ட சொத்தாக இருந்தாலும் அதனை விற்பதற்கோ அல்லது கைமாற்றம் செய்வ

தற்கோ அல்லது வேறு ஏதேனும் கொடுக்கல் வாங்கலிற்கோ கணவரின் சம்மதத்தை எதிர் நோக்கி இருக்க வேண்டிய தேவை ஏற்படு கின்றது. இருப்பினும் பிரிவு (8) இன் படியாக மாவட்ட நீதிமன்றின் சம்மதத்துடன் சொத்துக் கைமாற்றம் இடம்பெறலாம் எனக் கூறப்பட்டா லும் நடைமுறையில் எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியே.

சீதன ஆதனத்தை மனைவி கை மாற்றாது இறப்பாளாயின் அச்சீதன ஆதனத் தில் கணவருக்கோ அல்லது கணவரது உறவி னர்களிற்கோ உரிமை இல்லை. மனைவி யின் வாரிசுகளிற்கே அவ்வாதனம் சென்றடை யும். வாரிசு இல்லாவிடின் மீண்டும் அவ்வா தனம் தாய் வழியிலா அல்லது தந்தை வழி யிலா வந்தடைந்தது என நோக்கப்பட்டு அவர் களிற்கே மீள சென்றடைந்து விடும். இருப்பி னும் சீதன ஆதனத்தில் மேற்கொள்ளப் பட்ட திருத்தங்களுக்குரிய பணத்தினைக் கண வன் மீளப் பெறவும் தேசவழமை இடமளிக் கின்றது.

மேலும் பழைய தேசவழமையின் படியாக இறந்து போன வாழ்க்கைத் துணை யின் ஆதனத்தில் இருந்து தப்பியிருக்கும் வாழ்க்கைத்துணை மகளிற்குச் சீதனம் வழங்க முடிந்தது. ஆனால் 1911ம் ஆண்டு திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் படியாக இவ்வுரிமை நீக்கப்பட்டு குறிப்பிட்ட விகிதாசாரப்படியாகப் பிள்ளைகளிற்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

## தேடிய தேட்டம்

தேடிய தேட்டம் என்பது பொதுவாகத் திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கணவனாலும் மனைவியாலும் பிரதிபலன் கொடுத்துக் கொள்வனவு செய்யப்பட்ட ஆதன மாகக் கருதப்படும். இது வாழ்க்கைத் துணை யால் தனிப்பட்ட ஆதனமாகக் கொள்ளப்பட மாட்டாது. ஆயினும் இரு வாழ்க்கைத் துணைகளினதும் சொத்திலிருந்து பெறப்பட்ட இலாபங்கள் தேடிய தேட்டமாகவே கொள்ளப் படும். ஆயினும் சீதனம் மற்றும் முதுச ஆதனத்தினை விற்றுப் பெறப்படும் பணம் தேடிய தேட்டமாகக் கொள்ளப்பட மாட்டாது.


பொதுவாகத் தேடிய தேட்ட ஆதன மானது கணவருக்கும் மனைவிக்கும் உரிய சமபங்கான சொத்தாகக் கொள் ளப்படும். கணவன் அல்லது மனைவி தமது தனிப்பட்ட ஆதனமாகத் தமது பெயரில் கொள்வனவு செய்தாலும் திரு மணம் நிலைத்திருக்கும் காலத் தில் கொள்வனவு செய்யப் படின் மற்றைய திறத்திற்கு அரைப் பங்கு சென்ற டைந்து விடும். உதாரணமாக மனைவி தனது பெயரில் ஒரு வீட்டைக் கொள்வனவு செய்திருந்தாலும் கூட அதில் அரைப்பங்கிற்குக் கணவன் உரித்துடையவன் ஆகின்றான். அத்துடன் கணவருக்குரிய தேடிய தேட்டப் பங்கினை மனைவியின் சம்மதமின்றிப் பரிமாற்றம் செய்யவும் முடியும்.

ஆரம்பகாலத்தில் தேடிய தேட்ட பங்கினை பராதீனப்படுத்தாது இறப்பின் தப்பி இருக்கும் வாழ்க்கைத் துணைக்கு மொத்த தேறிய தேட்டத்தில் அரை பங்கும் ஏனைய அரைப்பங்கு பிள்ளைகளிற்கும் பகிரப்பட்டது. ஆனால் Manikkavasagar vs Kandasamy (1986) 2SLR என்ற வழக்கின் பிற்பாடு தப்பியிருக்கும் வாழ்க்கைத் துணைக்குத் தனக்குரிய 1/2 பங்கு உட்பட இறந்த

வாழ்க்கை துணையின் 1/2 பங்கில் அரைவாசியாகவும் 1/4 பகுதியையும் இணைந்து தேடிய தேட்டம் உரித்துடைய தாகிறது. பிள்ளைகளிற்கு 1/4 வாசி பங்கு சென்றடைகிறது.


(பார்க்க: பின்னிணைப்பு - 2)

தேச வழமைக்கு உட்பட்ட பிள்ளை களிற்கிடையில் சொத்து பகிரப்படும் போது ஏலவே சீதனமாக அல்லது நன்கொடையாக ஆதனம் வழங்கப்பட்டிருப்பின் மிகுதியாக உள்ள ஆதனம் ஏனைய பிள்ளைகளிற்குப் பகிரப்படும் என்பது பொதுவான விதியெ னினும் 1911ம் ஆண்டு திருமண உரிமை களும்,வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத் தின் பிரிவு 33 இன் படியாக (Collation of property by children or grant children) என்பதனூடாக நீதிமன்றத்தின் மூலம் முழு ஆதன பெறுமதியும் ஒன்றாக்கப் பட்டுப் பிள்ளைகளுக்கிடையில் சமமாகப் பகிரப்படும்.




(பின்னிணைப்பு - 1)

## பாராதீனப்படுத்தாது இறப்பின் முதுசொம் பகிரப்படும் முறை



(பின்னிணைப்பு -2)


## பாராதீனப்படுத்தாது இறப்பின் தேடிய தேட்டம் சென்றடையும் முறை



# ஆனைக்கோட்டை முத்திரை ஒரு தொல்லியல் ஆதாரம்

**வேலாயுதம் சிவராஜா**
சமூக சேவைகள் உத்தியோகத்தர்,
சண்டிலிப்பாய்.

யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது குடியிருப்பு ஆனைக்கோட்டை எனச் சில வரலாற்றியலாளர்களால் கூறப்படுகிறது. இதற்கு ஆதாரமாக அங்கு கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை, உரோம மட்கலன்கள், லட்சுமி நாணயம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றனர். இவை 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகக் கருதப்படுகின்றன. இவற்றில் ஆனைக் கோட்டை முத்திரை ஆய்வாளர்களின் அதிக கவனத்தைப் பெற்றதொன்று.



ஆனைக்கோட்டை முத்திரை

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த ஒரு அடக்கக் குழி ஒன்றினுள் கண்டு பிடிக்கப்பட்ட ஆனைக்கோட்டை முத் திரை (Anaicoddai Seal) 1980 ஆம் ஆம் டிசம்பர் மாதத்தில் இடம் பெற்ற அகழ்வாய்வு ஒன்றின் போது கண்டுபிடிக்கப்பட்டது. இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஆனைக் கோட்டை என்னும் இடத்தில் கண்டுபிடிக் கப்பட்ட இம் முத்திரை ஒரு மோதிரத்தின் முன் பகுதியாக இருக்கலாம் எனக் கருதப்படு கின்றது.

இது எதனால் செய்யப்பட்டது என்பது தொடர்பாக ஆய்வாளர்கள் மத்தியில் முரண் பட்ட கருத்துக்களே இருந்து வருகின்றன. பேராசிரியர் இந்திரபாலா இந்த முத்திரை யானது உலோக முத்திரை எனத் தமிழக இந்து பத்திரிகையில் 1981 இல் எழுதிய கட்டு ரையில் கூறியிருந்தார். ஆனால், அவர் எந்த உலோகத்தால் செய்யப்பட்டது என்பதைக் குறிப்பாகக் குறிப்பிடவில்லை. பொ. இரகுபதி (1987) இந்த முத்திரையானது வெண்கலத் தினால் (Bronze) செய்யப்பட்டது என் கின்றார். ஐராவதம் மகாதேவனும் (2003), பேராசிரியர் சி. பத்மநாதனும் (2006), அது உலோகத்தால் ஆனது என்றுள்ளபோதும்,

அது எந்த உலோகத்தினால், அல்லது உலோகக் கலவையால் ஆனது என்பதைக் குறிப்பாகக் கூறவில்லை. எதுவிதத்திலும் க. இந்திரபாலா 2006ம் ஆண்டில் எழுதியிருந்த நூலில், அது Steatite (Soapstone) ஆல் ஆனது என்றுள்ளார்.

முத்திரையின் கீழ் வரிசையில் மூன்று பிராமி எழுத்துக்களும், மேல் வரிசையில் மூன்று அடையாளங்களும் காணப்படுகின்றன. மேல் வரிசையிலுள்ள மூன்று அடையாளங்களுள் ஒன்று ரோம எழுத்தான 'C' போன்ற அடையாளத்தின் வளைவு உச்சிப் புள்ளியில் ஒரு குற்றும் காணப் படுகிறது. மற்றைய இரண்டு அடையாளங் களும், ஒரேமாதிரியாகத் தோற்றமளிக் கின்றன.

## கண்டுபிடிப்பின் பின்னணி


பொ. இரகுபதியின் முனைவர் பட்ட ஆய்வுக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் 1980 களின் தொடக்க ஆண்டுகளில் நடத்தப்பட்ட மேற்பரப்பு ஆய்வுகளின் போது கண்டுபிடிக்கப் பட்ட தொல்லியல் களங்களில் ஆனைக் கோட்டைத் தொல்லியல் களமும் ஒன்று. இங்கே காணப்பட்ட பெருங்கற்காலத் திட்டுக் கள் பல அயலில் உள்ள தாழ்வான பகுதிகளை நிரப்பி வீடமைக்கும் திட்டத்துக்காக மண் அகழப்பட்டதனால் குழப்பப்பட்டு இருந்தது.

பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்ட ஆய்வுக்கொடை மூலம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறையினர் ஆனைக்கோட்டை யில் அகழ்வாய்வுகளை மேற்கொண்டனர். பேராசிரியர் கா.இநதிரபாலா, பேராசிரியர் எஸ்.கே.சிற்றம்பலம், முனைவர் பொ. இரகுபதி ஆகியோர் பல்கலைக்கழக மாண வர்களின் உதவியுடன் இந்த ஆய்வுகளை நடத்தினர். இங்கே ஒரு அடக்கக் குழியும் பல தொல் பொருட்களும் கண்டு பிடிக்கப்பட்டன. அடக்கக் குழிக்குள் காணப் பட்ட எலும்புக் கூட்டின் மண்டை யோட்டுக்கு அருகில் காணப்பட்ட மட்பாண்டம் ஒன்றில் காணப்பட்ட பொருட்களுள் "ஆனைக் கோட்டை முத்தி ரையும்" ஒன்று. இந்த அகழ்வாய்வின் போது கிடைத்த பொருட்க ளுள் ஆர்வத்தை மிகவும் தூண்டிய பொருளும் இதுவே.

## முத்திரையின் வாசிப்புக்கள்

### 01. இந்திரபாலாவின் வாசிப்பு

இதனை வாசித்த பேராசிரியர் கா. இந்திரபாலா இம் முத்திரையில் கீழ் வரியில் அடக்கியுள்ள மூன்று எழுத்துக்களையும் இடப்பக்கத்தில் காணப்படும் எழுத்துக்கு மேலுள்ள புள்ளியையும் பிராமிப் பகுதியாகக் கொண்டுள்ளார். இதில் இடப்பக்கமிருந்து பார்க்கும் போது முதலாவது எழுத்து "கோ", இரண்டாவது "வே", மூன்றாவது "த", இது



ஆனைக்கோட்டையின் முத்திரையின் மாதிரி வரைவு

முத்திரையிடப் பயன்படுத்தும் அச்சு ஆதலால் இடப்படும் முத்திரையில் இடம் வலமாக மாறி

விடும் ஆதலால் எழுத்து வரிசை "கோ" "வே" "த" என்று அமையும். "த" வின் மேலுள்ள புள்ளியை அனுஸ்வரமாகக் கொண்டால் இச் சொல்லைக் கோவேந்த அல்லது "கோவே தன்" என இருவிதமாக வாசிக்க முடியும் என இந்திரபாலா கூறுகிறார்.

இரண்டுமே திராவிடப் பெயராகவும், ஒரே பொருள் தருவனவாகவும் உள்ளன. "கோவேந்த" என்பதை "கோ" + "வேந்த" என இரண்டாகப் பிரிக்கலாம். இரண்டு பகுதிகளுமே தமிழிலும் வேறு சில திராவிட மொழிகளிலும் மன்னன், அரசன் என்னும் பொருள்படுவனவே. சொல்லைக் கோவேதன் என்று எடுத்துக் கொண்டாலும் கூட இது போலவே அமையும். மேல் வரிசையில் சூல வடிவக் குறியீடு அடுத்தடுத்து இருமுறை இடம் பெற்றுள்ளது.

இக் குறியீடுகள் ஒலிப்பையன்றிப் பொருளையே சுட்டுவனவாதலால் "கோ" என்பதைக் குறித்த சூல வடிவமே, அதே பொருள் கொண்ட "வேந்த" அல்லது "வேதன்"" என்னும் சொல்லையும் குறித்தது.

### 02. இரகுபதியின் வாசிப்பு

பொ. இரகுபதி இதனைச் சற்று வேறு விதமாக வாசித்துள்ளார். இவர், இந்திரபாலா வால் அனுஸ்வரமாகக் கொள்ளப்பட்டுப் பிராமி யுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட புள்ளியை முதல் வரியின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளார். இவர், வரி "கோ", "வே", "த" என்பது "கோ" +"வேத்"+"அ" எனப் பிரிந்து "கோவேதனு டைய" என்னும் பொருள் கொடுக்கும் என்றும் இதற்கு இணையாக இரண்டு சூலக் குறியீடு கள் "கோ" "வேத்" என்பவற்றைக் குறிக்க, புள்ளி "உடைய" என்னும் பொருள் கொண்ட "அ" என்னும் உருபைக் குறித்தது என்கிறார்.

### 03. மதிவாணனின் வாசிப்பு

முனைவர் ஆர். மதிவாணன் பிராமிப் பகுதியை அந்த முத்திரையில் காணப்பட்ட வாறே இடமிருந்து வலமாக "தி", "வு", "கோ" என வாசித்து, அது தீவின் அரசன் என்னும் பொருள் தரும் என்கிறார்.

### தொகுப்பில் உதவியவை


01. பொன்னம்பலம், இரகுபதி யாழ்ப்பாணத் தின் முற்காலக் குடியேற்றங்கள் - ஒரு தொல்லி யல் ஆய்வு. - 1987. பக் 66 பக் 177 பக் 200-203
02. காசிராஜன், வெங்கடேஸ்வரன், தமிழ் பிராமி எழுத்துக்கள் பற்றி - பகுதி 1 எழுத்தின் வரலாறு (On Tamill Brahmi Script Part - 1 History of Writing), - 2008
03. கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியா மற்றும் இணையத்தேடல்கள்

# பிரதேச கூட்டுறவு அமைப்புக்களின் வளர்ச்சி

**க.நா.சபாரத்தினம்,**
ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பணியாளர்.

இலங்கைக் கூட்டுறவு இயக்கம் ஆரம்பித்து 92வது சர்வதேச ஆண்டைக் கொண்டாடுகின்றது. எமது சண்டிலிப்பாய்ப் பிரதேசம் இரு பெரிய ப.நோ.கூ.சங்க எல்லைப்பரப்பை உள்ளடக்கியதும் இரண்டு பட்டினசபைகள் 2 கிராமசபைகள் என்பவற்றைக் கொண்ட வலி, தென்மேற்குப் பிரதேச சபை அமைப்புக்குள் எல்லைப்பரப்பு அடங்கியுள்ளது. இவ் எல்லைப்பரப்பில் ப.நோ.கூ. சங்கம், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், ஐக்கிய நாணய சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தி விளைபொருள் கூட்டுறவுச் சங்கங்கள், சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், வெங்காய உற்பத்தியாளர் சங்கங்கள் என்பன உருவாகி 50 ஆண்டுகளுக்கு மேலாகியும் சில தொழிற்பாடுகளில் அரச கொள்கை மாற்றம் காரணமாக இல்லா தொழிந்தனவும் புதிதாக ஆரம்பிக்கப் பட்டனவும் இவற்றில் அடங்கும்.

ஆரம்பத்தில் நாம் அறிந்த வரையில் இவ் எல்லைப்பரப்பில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தினைத் தென்னிலங்கையிலுள்ள ச.தொ.ச (C.W.E) நிறுவனத் திற்கு விற்பனை செய்வதற்கு வெங்காயச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு உற்பத்தியாளரிடமிருந்து வெங்காயத்தினைக் கொள்வனவு செய்து ச.தொ.ச நிறுவனத்திற்குப் புகையிரதம் மூலம் அனுப்பிப் பணத்தினைப் பெற்று அங்கத்தவர்களின் பொருளாதார வளர்ச்சிக்காகப் பங்களிப்புச் செய்தனர். இதன் மூலம் கூட்டுறவுத்துறைச் செயற்பாடு இவ்வெல்லைப் பரப்பில் ஆரம்பமானதெனக் கூறலாம்.

இவ் விடயத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் அரசின் உணவுப் பங்கீட்டு முகவர்களாகச் செயற்பட வேண்டிய நிலையில் ப.நோ.கூ.சங்க அமைப்பாகப் பெயர் மாற்றம் செய்து இயங்கியதாக அறியக் கூடியதாக இருக்கின்றது. ஆரம்பகாலங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் அங்கத்தவர் தொகைக்கேற்ப தனித்தனியே ப.நோ.கூ. சங்க அமைப்பு தனித் தனிக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுச் செயற்பட்டு வந்தது. இவை 1971ம் ஆண்டு மறுசீரமைப்பு செய்யப்பட்டதற்கமையப் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய் ப.நோ. கூ.சங்கம் என இரு பெரிய அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன.

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கத்தில் மாதகல் மத்திய ப.நோ.கூ.சங்கம் என இயங்கிய அமைப்பு மறுசீரமைப்பு செய்யப்பட முன்னரே வட பிராந்தியத்தில்

கிராமிய வங்கி என்ற அமைப்பை உரு வாக்கிச் செயற்பட்டு வந்தது. மறுசீர மைக்கப் பட்ட பின் பண்டத் தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம் 3 கிராமிய வங்கிக் கிளைக ளையும் மானிப்பாய் ப.நோ. கூ.சங்கம் / கிராமிய வங்கியையும் செயற்படுத்தி வந்துள்ளது. கிராமிய வங்கிச் செயற்பாடுகள் மூலம் அங்கத்தவர்கள் சேமம், கடன் வழங்கல் போன்ற தொழிற்பாடுகள் மக்களுக்குப் பயனளிக்கக் கூடியவகையில் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ப.நோ.கூ. சங்கங்கள் ஆரம்ப காலத்தில் அரசின் இலவச உணவு விநியோகத்துடன் குறிப்பிட்ட சில பொருட்களைப் பங்கீட்டு அடிப்படையில் விற்பனை செய்கின்ற நடைமுறையும் இருந்து வந்தது.

ப.நோ.கூ.சங்க கிளைகளில் புனர மைப்புக்கு முன்னரே சில கிளை நிலையங் கள் தங்களுக்கெனத் தனித்தனிக் கட்டட வசதி களை ஏற்படுத்தி இருந்தன. இவை தனியே அரசாங்க முகவராகச் செயற்பட்டதால் மாத்திரம் அல்லாது வியாபார நடவடிக்கை களின் வளர்ச்சி காரணமாகக் கட்டடங்களை அமைத்துக் கொள்ளக்கூடிய பொருளாதார வலுவைக் கொண்டிருந்தன. ஆரம்ப காலத்தி லிருந்தே நியாய விலைகளில் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியு மென்றும் தங்களால் உருவாக்கப்பட்ட அமைப்பை வலுப்படுத்தித் தம்முடைய பொருளாதார வளர்ச்சியைப் பேணிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை யைப் பிரதிபலிப்பதாக அவை அமைந்திருந் தன.

காலமாற்றத்தின் போது பங்கீட்டுப் பொருள் படிப்படியாக சகல இடங்களிலும் பெற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாகி இருந்தாலும் மக்களுடைய நம்பிக்கையும் பணியாளரின் விசுவாசமான செயற்பாட்டின் மூலமும் வியாபார நிலையைத் தக்க வைத்துத் தொடர்ந்தும் இவ் அமைப்புக்கள் வலுவாக இயங்கி வருகின்றன.

உள்ளூர் உற்பத்திகளுக்கு உரிய இடம் அளிக்க வேண்டுமென்ற கொள்கை களுக்கமையப் பாரிய தொழிற்பாடுகளான மின்தறி ஆலை, பாண்சாலை, அரிசி ஆலை, நல்லெண்ணெய் உற்பத்தி, அச்சகம், தையல் நிலையம் போன்ற செயற்பாடுகளையும் ப.நோ.கூ.சங்க அமைப்புச் செயற்படுத்தி வந்தது. இதில் அரசியல் மாற்றம் ஏற்பட்ட போது வெளியிலிருந்து தடை விதிக்கப்பட்ட ஆடை இறக்குமதி மீண்டும் நடைமுறைக்கு வந்ததால் மின்தறி ஆலைகள் வளர்ச்சி கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன் அவற் றினை மூடவேண்டிய நிலைமையும் திடீரென வேலைவாய்ப்பை இழந்த பணியா ளர்களுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டதால் ப.நோ.கூ.சங்கங் களுக்குக் கடுமையான பொருளாதார பின்னடைவு ஏற்பட்டது.

ஆடைத் தொழில் இறக்குமதியால் ஆடை உற்பத்தி நிலையங்கள் மூடப் பட்டாலும் பங்கீட்டு நடைமுறைகள் இல்லாது இருந்தாலும் தாராளமாக வெளியிடங்களிலும் பொருட்கள் கொள்வனவு செய்யக்கூடிய நிலைமை வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட போதும் அவர்களுக்கு கூட்டுறவுத்துறையில் நியாயமான விலையில் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து ப.நோ.கூ.சங்கத்தில் தொடர்பு

களைப் பேணி வருகின்றனர். இதற்குச் சான்றாகக் கடந்த இரு ஆண்டுகள் எமது பிரதேசத்திலுள்ள ப.நோ.கூ. சங்கங்களுள் ஒன்று யாழ் மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் வடமாகாணத்தில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது. இது எமது பிரதேச கூட்டுறவு வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

காலத்துக்குக் காலம் சில தொழிற்பாடு கள் செய்வதில் தடைகள் ஏற்பட்ட போதும் மாற்றீடாக அரிசி ஆலை, கோப் சிற்றி விற்பனை, சிறியளவிலான நல்லெண்ணெய் உற்பத்தி போன்ற தொழிற்பாடுகளும் தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகவர் களாகவும் செயற்பட்டுச் சிறந்த சேவையாற்றி வருகின்றன. இத்துடன் வெங்காயக் களஞ்சியங்களை முன்பிருந்த நிலையிலி ருந்து U.N.D.P நிறுவனத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்து மறு சீரமைப்புக்குப் பின்னரும் வெங்காயம்,நெல் என்பவற்றைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்தி உற் பத்தியாளர்களின் பொருளாதார வளர்ச்சி யில் பங்கு கொண்டு செயற்பட்டு வருகின்றது.

ப.நோ.கூ.சங்கங்களின் இணைந்த செயற்பாட்டில் ஒன்றாகக் கிராமிய வங்கிச் செயற்பாட்டின் ஊடாக அங்கத்தவர்களிடம் சேமிப்புப் பழக்கங்களை ஊக்குவிப்பதுடன் அவர்களுக்குத் தேவையான காலங்களில் விவசாய உற்பத்திக் கடன், சுயமுயற்சிக்கடன் என்பவற்றை இலகு முறையில் பெறக்கூடிய வழிவகைகளை ஏற்படுத்தி இருப்பதால் பயனாளிகள் சிறந்த பயன்பாட்டைப் பெற்றுக் கொள்கின்றனர். ஏனைய அமைப்புக்களை விட ப.நோ.கூ.சங்க அமைப்பானது ஒரு நிர்வாகத்தின் கீழ் பல தொழிற்பாடுகளைச் செய்ய நடைமுறையில் இடமிருப்பதால் விவசாயிகளுக்கு உற்பத்திப் பொருட் கொள் வனவு, கடன்வழங்கல், உழவு இயந்திர சேவை போன்ற சேவைகளை வழங்குவதன் மூலம் அங்கத்தவர் களும் இதில் இணைந்து கூட்டுறவு வளர்ச்சிக்குக் காரணகர்த்தாவாக உள்ளனர்.

ப.நோ.கூ.சங்க அமைப்பைப் போலவே இவ் எல்லைப்பரப்பில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் இரண்டு இயங்கி வருகின்றன. மரவரி முறையிலிருந்து தவறணை முறைக் குக் கலாநிதி N.M பெரேராவின் முயற்சியில் மாற்றம் செய்யப்பட்ட பின் உருவாக்கப்பட்ட நடைமுறைகள் இவ் எல்லைப்பரப்பிலும் செயற்படுத்தப்படுகின் றன. இதன்மூலம் உற்பத்தியாளர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதுடன் காப்புறுதி, ஆபத்துக்காலக் கொடுப்பனவு, ஓய்வூதியம் போன்ற உற்பத்தி யாளர் நலன் சார்ந்த விடயங்களும் இவ் அமைப்பில் பேணப்பட்டு வருகின்றன. பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் இரண்டும் தவிர்ந்த கொத்தணி அமைப்பும் இவ் எல்லைப்பரப்பான மானிப் பாயில் இயங்கி வருகின்றது. இவ் அமைப் புக்கள் மூலம் நாளாந்தம் விற்பனைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படும் பதனீர் போத்தல்களில் அடைக்கப்பட்டுப் பேணப்படு வதுடன் உற்பத்தி குறைவான காலங்களில் விநியோகம் செய்வதன் மூலம் உற்பத்தி யாளருக்குப் பயன் ஏற்பட வழிவகை செய்யப் பட்டுள்ளது. இவ் அமைப்பிலும் கிராமிய வங்கித் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் கடன் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதில் பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் பனங்கட்டி உற்பத்தியை மேற்கொண்டு வந்ததுடன் 2 ஆண்டுகளுக்கு முன் U.N.D.P நிறுவனத்தின் உதவியுடன் பல மில்லியன் ரூபா செலவில் பனங்கட்டி உற்பத்திச்சாலை ஒன்றை நிறுவி உற்பத்தித் தொழிற்பாட்டை விரிவுபடுத்தியுள்ளது. இது மேலும் வளர்ச்சி யடைந்து உற்பத்தியாளருக்குச் சிறந்த பயன் பாட்டை வழங்குமென நம்பப் படுகின்றது.

ஐக்கிய நாணய சங்க அமைப்புக்கள் இவ் எல்லைப் பரப்பில் 30ற்கு மேற்பட்டன உள்ளன. இவற்றில் ஆரம்பகாலங்களில் (40 வருடத்திற்கு முன்) இருந்த சில செயற்பாடுகள் இன்றி மூடப்பட்டும் புதியன உருவாக்கப் பட்டும் தற்போதைய தொகை உள்ளதுடன் இவ் அமைப்புக்கள் யாவும் இதற்கென இயங்கும் சமாசத்தில் அங்கத்தவர்களாக உள்ளன. கூட்டுறவுப் பணியாளர் யாவரும் தங்கள் தங்கள் சங்க அமைப்புக்களில் ஐக்கிய நாணய சங்க நடைமுறைக்கமைவாகச் சிக்கன கடனுதவிக் கூட்டுறவு சங்கம் என்ற பெயரில் இயங்கி பணியாளருக்குச் சேமிப்பு வசதிகள், கடன் வழங்கும் வசதிகளைச் செய்து வருகின்றனர். கிராமிய மட்டத்தில் இயங்கும் சில சங்கங்கள் கூடிய அங்கத்தவர்களைக் கொண்டு, பாரிய கடன் வழங்கு சேவை களையும் செய்து வருகின்றன. இவற்றில் நவாலி முருகானந்தா மகளிர் ஐக்கிய நாணய சங்கம், பண்டத்தரிப்பு மகளிர் ஐக்கிய நாணய சங்கம் என்பன முன்னுதாரணமாகச் செயற் பட்டு வருகின்றன.

சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் சங்கங்கள் ஏறத்தாழ 50 வருடங்களுக்கு முன் மாதகல், முள்ளானை (இளவாலை) வடலியடைப்பு, சில்லாலை ஆகிய பகுதிகளில் இயங்கி வந்தன. இவற்றில் மாதகல் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் சங்கம், மாதகல் மாரீசன்கூடல் கிராம அங்கத்தவர்களை இணைத்து இவற்றுள் பெரிய சங்கமாக இயங் கின. இச் சங்கங்கள் தங்கள் அங்கத்தவர்கள் மூலம் ஒருவர் 1000 கன்றுகளை உற்பத்தி செய்ய ஒழுங்குகள் செய்து அவ் உற்பத்திக ளைப் போறணையில் பதனிட்டுத் தென்னி லங்கையில் உள்ள சிகரெட் புகையிலைக் கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை செய்து வந்தன.

1980-85ற்கு இடைப்பட்ட காலத்தில் இவ் உற்பத்திகள் தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டதால் வடபகுதிக்கான கொள்வனவை சிகரெட் புகையிலை கூட்டுத் தாபனம் மட்டுப்படுத்தியது. இதன்போது 100% உற்பத்தியை 20% மாக குறைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதன்போது ஏற்படும் பதனிடுதல், உற்பத்திச் செலவுகள் அங்கத் தவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் அமையவில்லை. இதனால் இவை தொடர் ந்து இயங்க முடியாத நிலையில் மூட வேண் டிய நிலை ஏற்பட்டது.

பால் உற்பத்தியாளர்கள் இப்பிரதேசத் தில் தனியாகச் சங்க அமைப்பு முறையைக் கொண்டிருக்காதுவிடினும் யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க (யாழ்கோ) கிளைகள் மானிப்பாய், பண்டத்தரிப்பு பகுதி களில் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வ னவு செய்து விற்பனை விநியோகத்தை தாய்ச்சங்க அனுசரணையுடன் மேற் கொண்டு வருகின்றன.

மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் கடற்தொழில் செயற்பாடுகள் நடைபெறும் பகுதிகளில் மாதகல், இளவாலை, ஆனைக் கோட்டை ஆகிய பகுதிகளில் ஒரு துறைமுகத் தில் ஒன்றும், ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங் களும் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் அங்கத்தவர்கள் தொழிலுக்குரிய தள பாடங்கள், வலைகள் என்பவற்றை நியாய மான விலையில் பெற்றுக் கொடுக்க ஒழுங்கு கள் மேற்கொள்ளப் படுவதுடன் அங்கத்தவர் களுக்கான பொருளாதார வளர்ச்சி கருதிய திட்டங்களையும் இதன்போது கிடைக்கப் பெறும் உணவுப் பொருட்களைச் (கடலுணவு) சந்தைப்படுத்த வேண்டிய வசதிகளையும் செய்து கொடுப்பதில் முன்னின்று உழைக்கின் றன.

கால்நடை வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் ஒன்று சண்டிலிப்பாய்ப் பிரதேசத் துக்கென தனியாக இயங்கிவந்தது. தற்போது மானிப்பாய், பண்டத்தரிப்பு என இரு பிரிவுகளாக இயங்கி வருவது அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவை கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக் குத்தீர்வு காணும் வகையில் செயற்பட்டு வருவது அறியக்கூடியதாக உள்ளது.

கூட்டுறவு அமைப்பை வழிநடத்த வேண்டிய ஆலோசனைகளை வழங்கிய வரும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவ ருமான பெரியார் விஸ்வலிங்கம் வீரசிங்கம் அவர்கள் இப் பிரதேசத்தில் பிறந்தமை சிறப்பு அம்சமாகும்.

இவ் எல்லைப்பரப்பில் பல கூட்டு றவுப் பெரியார்கள் தங்கள் கிராமங்களில் கூட்டுறவை வளர்க்கப் பங்காற்றியுள்ளார்கள். அவர்களுடைய முயற்சிகள் அந்தந்தக் கிராமங்களில் அவ்வமைப்புக்களின் வளர்ச் சியைப் பிரதிபலிக்கக் கூடியதாக உள்ளன.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் களில் ப.நோ.கூ.சங்க அமைப்புக்கள் தங்களாலான முழு சக்தியையும் பயன்படுத்தி மக்களுக்குத் திருப்தியான சேவை வழங்கி யமை எவராலும் மறுக்க முடியாத ஒன்றாகும்.

தனி ஒருவராகச் செயற்படுத்த முடியாத விடயங்களைப் பலர் இணைந்து (கொள்கை அடிப்படையில்) செயற்படுவதன் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் இணைந்து செயற்பட்டவர்கள் எதிர்பார்த்த பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் என்பவற்றைப் பெற்றுக் கொண்டதால் தொடர்ந்தும் இவ்வமைப்புகளின் வளர்ச்சிக் காகக் கூடி உழைக்கின்றனர்.

**"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை**
**கூட்டுறவே நாட்டுயர்வு"**

என்ற கூட்டுறவுத் தத்துவங்களுக்கமைவாகக் கூட்டுறவுத்துறை எமது பிரதேசத்தில் வளர்ந் துள்ளது என்பது பெறுபேறுகளின் மூலம் உணரப்படுகின்றது.

**"வாழ்க கூட்டுறவு வளர்க நம் பிரதேசம்"**

# வலி. தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் கைத்தொழில் செயற்பாடும், தொழிற் பயிற்சியும்

**நிரஜா சரவணபவசர்மா**
**பாமா சிவசங்கர்**
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள்

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் பாரியளவில் கைத்தொழிலை மேற் கொள்ளக் கூடிய வளங்கள் காணப்படாத போதும் சிறியளவிலான, நடுத்தர, குடிசைக் கைத் தொழிலை மேற்கொள்ளக் கூடிய கனிய வளங்கள் சிறியளவில் காணப்படுகின்றன.

இப்பிரதேச மக்களின் தொழில் முயற்சிகளை நோக்கும் போது மீன்பிடி, விவசாயம், நல்லெண்ணெய் உற்பத்தி, பன்ன வேலை, தச்சு வேலை, வெற்றிலை, முந்திரிச் செய்கை என்பன மேற்கொள்ளப் படுகின்றன. அவ்வகையில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் ஆனைக் கோட்டை பிரான்பற்று, பண்டத்தரிப்பு பகுதிகளில் அதிகளவில் நல்லெண்ணெய் உற்பத்தி மேற் கொள்ளப்படுவதுடன் மாதகல், காக்கைதீவு, சாவற்கட்டு பகுதிகளில் வாழ் கின்ற மக்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்பவர்களா கவும், இளவாலை, பெரிய விளான் பகுதிகளில் அதிகளவு முந்திரிகைகள், வெற்றிலை பயிர்ச் செய்கைகள் மேற் கொள்ளப்படுவதனையும் சில்லாலை பண்டத் தரிப்பு பகுதிகளில் தச்சுத் தொழில் மேற்கொள்ப வர்கள் அதிகளவிலும் மாகியம்பதி, பண்டத் தரிப்பு, உயரப்புலம் சாந் தைப் பகுதிகளில் பன்னவேலைத் தொழிலை மேற்கொள்பவர் களும் காணப் படுகின்றனர்.

சில கைத்தொழில் விருத்திக்கு தொழிற்துறைத் திணைக்கள கைத்தொழில் துறையும் தனது பங்களிப்பினை வழங்கியுள் ளது. அங்ஙனம் சுயதொழிலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட மட்ட, மாகா ண மட்ட, தேசிய மட்ட கண்காட்சிகளை நடாத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு களையும் வழங்கியுள்ளது. இவ்வாறான போட்டியொன்றில் வெற்றி பெற்றவர்களின் விபரம் இக்கட்டுரையின் நிறைவில் காட்டப்பட் டுள்ளது காட்டப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் 1ம், 2ம் இடத் தைப் பெற்றவர்களின் உற்பத்திப் பொருட்கள் தேசிய மட்டப் போட்டிக்கு அனுப்பப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும். அவ்வகையில் எமது பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த உசாந்தினி தேசிய மட்டத்தில் 2ம் இடத்தையும் - வெள்ளிப்

பதக்கத்தினையும் பெற்று இந்தியாவிற்கு இலவச சுற்றுலாவினையும் மேற்கொண் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாகாணமட்ட பரிசு பெற்றவர்களுக்கு 1ம் இடம் 2500/=, 2ம் இடம் 1500=, 3ம் இடம் 1000/= வும், சான்றிதழும் வழங்கப்பட்டு சுய தொழிலாளரின் ஆக்கத்திற்குத் தொழிற் திணைக்களமும் தனது பங்கை வழங்கி யுள்ளது. இவை மட்டுமல்லாது தொழில் திணைக்களமும் தன் செயற்பாடாக வருடம் தோறும் தனது மானிப்பாய் மர வேலைப் பயிற்சி நிலையத்தின் மூலம் மரவேலைப் பயிற்சி வழங்கி வருகிறது. அத்துடன் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியி னால் படகு வெளியிணைப்பு இயந்திரந் திருத்தல் பயிற்சி, விவசாய உப கரணம் திருத்துதல் பயிற்சி, ஆண்களுக்கான ஆடை தயாரித்தல் பயிற்சி என்பனவும் வழங்கப் பட்டதுடன் அவர்களின் தொழில் உருவாக்கத் திற்கென உபகரணங்களும் பயிற்சி முடிவில் பயனாளிகளுக்கு வழங்கப் பட்டமை குறிப் பிடத்தக்கது.

எனினும் இப்பிரதேசத்தின் கைத் தொழில் அபிவிருத்திக்கான சாத்தியமாக நாம் சிலவற்றைக் கருத்தில் கொள்ளலாம்.

01) இப்பிரதேசத்தின் முக்கிய தொழில்களில் விவசாயமும் ஒன்றாக இருப்பதனால் நெற் செய்கை பரவலாக மேற்கொள் ளப்படுமிடத்து அரிசி ஆலைகளை உரு வாக்கலாம். வைக்கோல் பெருமளவு கிடைக்குமிடத்துக் காகித உற்பத்திச் சாலை அமைக்கலாம் அல்லது காகித உற்பத்திக்காக வைக்கோலை அனுப்பி வைக்கலாம்.

02) மீன் பதனிடுவதற்கான பனிக்கட்டி தொழிற்சாலையினை மாதகல், காக்கை தீவு. சாவற்கட்டுப் பகுதிகளில் ஆரம்பிக்க லாம்.

03) கழிவு மீன், கருவாடு, தவிடு போன்ற வற்றை பயன்படுத்தி கோழித்தீன் உற்பத்தியினை ஆரம்பிக்கலாம்.

04) படகு வெளியிணைப்பு இயந்திரம் திருத் தும் நிறுவனம் ஒன்றை உருவாக் கலாம். இதற்கென இப்பிரதேசத்தில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களும் அதிகளவில் காணப் படுகின்றனர்.

05) அதிகளவில் முந்திரிச் செய்கை மேற் கொள்ளப்படுவதினால் வைன் உற்பத்தி யினை ஆரம்பிக்கலாம்.

மேற்கூறப்பட்ட காரணங்களைக் கருத்தில் எடுத்து பிரதேச அபிவிருத்தியினை மேம் படுத்தலாம்.

வலி தென்மேற்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட வியாபார தொழில் நிறுவ னங்களின் விபரம் கீழே குறிப்பிடப் பட்டுள் ளது.

01) சிகை அலங்கரிப்பு நிலையம்:- 16
02) சலவையகம்:- 15
03) நகைத் தொழிலகம்:- 16
04) மரவேலை:- 16
05) வெதுப்பகம்:- 08
06) வெல்டிங்:- 17
07) அரைக்கும் ஆலை:- 36
08) ஐஸ்கிறீம் கடை:- 05
09) உணவகம்:- 80
10) ஏனைய கடைகள்:- 195

மேலும் இப்பிரதேசத்தில் மாகியப் பிட்டி கிராமம் பனை மரங்கள் நிறைந்துள்ள தால் அங்கு பனையோலை, ஈர்க்கு போன்ற வற்றைப் பயன்படுத்தி சுளகு, பாய், வட்டத் தட்டு, பூக்கூடை போன்ற கைத்தொழில்கள் சுயவருமானம் ஈட்டும் வகையில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இங்குள்ள மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்குத் தங்களால் சுயமாக உருவாக்கப்பட்ட மேற்கூறப்பட்ட பொருட்க ளைத் தாமே விற்பனை செய்து வருமானத் தைப் பெறுகின்றனர்.

தென்னிலங்கையில் இருந்து வரும் சுற்றுலாப் பிரயாணிகளும் இவர்களிடம் இருந்து பொருட்களைக் கொள்வனவு செய்து செல்வதைக் கண்ணூடாகக் காணலாம். மேலும் தொழிற்துறைத்திணைக்களத்தினால் (வடமாகாணம்) வருடந் தோறும் நடாத்தப் படும் மாகாணமட்டக் கண்காட்சியில் 2009ம் ஆண்டு நடாத்தப்பட்ட கண்காட்சியால் இக் கிராமசேவகர் பிரிவில் வசிக்கும் மகாலிங்கன் உசாநந்தினி என்பவரால் இழைக்கப்பட்ட சுளகு மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், தேசிய ரீதியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றுக் கொண்டது. அது இப் பிரதேச செயலகப்பிரி விற்கு கிடைத்த மிகப்பெரிய அதிஷ்டம் அதே போல் இப்பிரிவில் வசிக்கும் ரீட்டா பெனடிற் என்பவரது உற்பத்திக்கும் ஆறுதல் பரிசு கிடைத்துள்ளது. அத்தோடு கூடிய அளவு மக்கள் இக்கிராம சேவகர் பிரிவு மக்களின் உற்பத்திப்பொருட்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

மேலும் எமது பிரதேச செயலக பிரி வில் கைத்தொழிலாளர்களை ஒன்றிணைத்து "தொழில் முயற்சியாளர் கூட்டுறவு அபிவிரு த்திச் சங்கம்" ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச் சங்கத்தினூடாகக் கைத்தொழிலாளர்கள் தம் தொழிலை வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகள், மூலதனம், உபவளங்கள் போன் றவற்றைப் பெற்றுக் கொள்ள வழிசமைக்கப் பட்டுள்ளது.

ஆகவே எல்லாவற்றையும் தொகுத்து நோக்கும் போது எமது பிரதேச செயலகப் பிரி வில் தொழிற்துறைத் திணைக்களமானது பல் வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுத்து கைத்தொழிலாளர்களை ஊக்குவித்துப் பல முயற்சிகளைச் செய்து வெற்றியீட்டியுள்ளது என்றே கூறவேண்டும்.

**மாகாணமட்டக் கண்காட்சியில் பரிசு பெற்றவர்கள் (அட்டவணை)**

| இல | பெயர் | உற்பத்தி விபரம் | நிலை | இடம் |
|---|---|---|---|---|
| 01 | ம.உசாந்தினி | சுளகு உற்பத்தி | 1ம் இடம் | மாசியம்பதி |
| 02 | த.ரீட்டா பெனடிற் | பனை நார் உற். | ஆறுதல் பரிசு | மாசியம்பதி |
| 03 | ந.சிவபாலன் | தச்சு வேலை | 1ம்.2ம்,3ம்இடம் | நவாலி |
| 04 | யோகராசா | தச்சு வேலை | 2ம் இடம் | மாசியம்பதி |
| 05 | கனகரட்ணம் | தச்சு வேலை | 2ம் இடம் | சுதுமலை தெற்கு |
| 06 | சி.நாகேஸ்வரி | மேசை விரிப்பு | 1ம்,2ம் இடம் | நவாலி |
| 07 | நி.சாந்தகுமாரி | பொம்மை உற். | 1ம்.2ம் இடம் | மானிப்பாய் |
| 08 | க.இராசேந்திரம் | சிலை | 1ம்,2ம்.4ம் இடம் | ஆனைக்கோட்டை |

# பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ சங்கம் (வ.து)

இலங்கையில் வடமாகாணத்தில் வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பெருமை யோடு முன்னிலையில் நிற்கும் சங்கமாகப் பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விளங்குகின்றது. ஆரம்பத்தில் தனித்தனி நுகர்வோர் சங்கமாக ஒவ்வொரு கிராமத்திலும் 1952ல் அரும்பிப் பண்டக சாலைச் சங்கமாக உருவாகி விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களைப் பெற்றுப் பண்ட மாற்று முறையில் அவர்களுக்குத் தேவை யான நாளாந்த உணவுக்கான பொருட்கள் வழங்கும் சங்கமாக இருந்தது. இவ்வாறான அமைப்புக்களுக்கோர் தலைமைச் சமாச மாகப் பண்டத்தரிப்பில் 1958ல் கூட்டுறவாளர் களால் ஆரம்பிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பு சமாசம் நுகர்ச்சி பொருள் விற்பனையுடன் ஒரு வெதுப்பகத்தை உருவாக்கி பால், பணிஸ், பிஸ்கட், கேக் வகைகளை உற்பத்தி செய்தது மட்டுமன்றிப் பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக் கான பணிஸ்வகைகளை விநியோகித்து மாவட்டத்தில் சிறந்த பாண் விநியோகஸ்தர் என்ற பெயரைப் பெற்றது. மேலும் 16 லூம்கள் கொண்ட கைத்தறி நெசவாலையும் ஆரம்பிக் கப்பட்டு புடவை விற்பனை நிலைய மொன் றும் நுகர்ச்சிப் பொருள் விற்பனை நிலைய மொன்றும் பண்டத்தரிப்பில் ஸ்தாபிக்கப் பட்டன. பாண் விநியோகத்திற்காக ஒரு வானும் நுகர்ச்சிப் பொருள் விநியோகத் திற்காக ஒரு லொறியும் கொள்வனவு செய்யப் பட்டன.

13 கிளை நிலையங்களுடனும் 04 களஞ்சியங்களுடனும் உணவுப்பொருள் விநியோகிக்கும் உயரிய பணியை மாத்திரம் புரிந்து வந்த சங்கம் வளர்ச்சிப்படிகளில் ஏறி வந்திருப்பதை வரலாறு உணர்த்துகின்றது. கைத்தறி புடவை, வெதுப்பகம் என்பவற்றின் உற்பத்தியில் புதிய உருவாக்கங்கள் ஆரம் பிக்கப் பட்டன. மாதகல் மத்தியில் 12 லூம்கள் கொண்ட கைத்தறி நெசவாலையும் , ஒரு கிராமிய வங்கியும் சில்லாலையில் சிகரெட் புகையிலைச் சங்கமொன்றும் ஆரம்பிக்கப் பட்டன. தொடர்ந்து பல லட்சங்கள் செலவில் பண்டத்தரிப்பு மின்தறி ஆலையொன்று ஆரம்பிக்கப்பட்டு எமது பிரதேசத்திற்குட்பட்ட அயல் கிராமங்களிலுள்ளவர்களுக்குக் கூட தொழில் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

1971இல் புனரமைப்பின் பின் 06.03.1971 வட்டுக்கோட்டைத் தொகுதியி லொரு பகுதியையும், காங்கேசன்துறைத் தொகுதியிலொரு பகுதியையும் கொண்ட பண்டத்தரிப்புப் பட்டினசபை, கிராமசபை என்பவற்றிற்குள்ளடங்கியதாகப் பண்டத்

தரிப்பு, மாதகல், மாரீசன்கூடல், சித்திரமேழி, இளவாலை, பெரியவிளான், பிரான்பற்று, வடலியடைப்பு, சில்லாலை என்னும் கிராமங்களைத் தனது பிரதேச எல்லைக்குட் பட்டதாக அமைத்த ஜே/150 என்னும் பதிவிலக்கத்தில் பாரிய பல நோக்குக் கூட்டு றவுச் சங்கமாக உருவாக்கப்பட்டது. புனர மைப்பின் பின்னரான ஐந்தாண்டுகளில் சங்கம் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைந்து குறுகிய காலத்தில் பல பரிசுக ளையும் வெற்றி விருதுகளையும் பாராட்டுக் களையும் பெற்றுள்ளது. சங்க நடவடிக்கைகள் யாவற்றிலும் அங்கத்தவர்களைப் பங்கு கொள்ளச் செய்து அவர்களின் மேம்பாட்டு நோக்கங்களைப் பூர்த்தி செய்வதை இலக்கா கக் கொண்டு அவர்களிடையே விழிப்பு ணர்ச்சியையும் ஈடுபாட்டையும் அதிகரிக்க 1976ம் ஆண்டில் பொருட்காட்சிகள், கலை நிகழ்சிகள் ஏற்பாடு செய்து வெற்றி விழாக் கொண்டாடியது.

தனது தொழிற்பாடுகளைப் பல துறைகளில் பன்முகப்படுத்தித் தையல் நிலையம், பிறின்டிங், டையிங் பிரிவுகளும், பீடி, சோப் தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப் பட்டு வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. பண்டத்தரிப் பில் ஒரு கிராமிய வங்கி ஆரம்பிக்கப்பட்டு விவசாயிகளுக்குக் கிராமிய வங்கி மூலம் கடன் வசதிகளையும், நீர் இறைக்கும் இயந்திரம், விதை தானியம் என்பவற்றை வழங்கி விவசாயத் துறையினருக்கு ஆக்க மும், ஊக்கமும் அளித்தது.

பாவனையாளருக்கு உணவுப் பொருட்கள், உடைகள், தட்டுப்பாடான பொருட்கள் விநியோகித்தலுடன் சொந்த இலாபத்தை மனதில் கொள்ளாது பன்முகப் படுத்தப்பட்ட உற்பத்தித் தளங்கள் அமைத்துப் புடைவை உற்பத்தி, சாறி அச்சிடல், சேலை சாயமிடல் என்பவற்றில் புதிய வெற்றியை ஈட்டியது. பிறநாட்டுப் புடவை இறக்குமதியை நிறுத்திய வேளையில் தரத்திலே குறையாத ஆடை அணிகள் தயார் செய்து ஈழம் பூராகவும் அளித்து பெயரும் புகழும் பெற்றது.

பல லட்சங்கள் செலவில் நிர்மாணி க்கப்பட்டிருக்கின்ற சங்கக் கட்டிடங்கள், தொழிற்சாலைகள், உரமான உழைக்கும் கரங்கள் சங்க வளர்ச்சிக்கு சான்று பயக்கின் றன. சங்கம் அக்காலத்தில் ஈட்டிய இலாபத் தைப் புதிய முயற்சிகள் அபிவிருத்தித் திட்டங் கள், அங்கத்தவருக்கான இலாபப் பங்கீடு, நுகர்ச்சியாளருக்கான கொள்வன விற்கேற்ற தள்ளுபடி போன்ற திட்டங்களில் செலவிட்டது. 13 திட்டங்களுடன் மேலதிகமாக 5 துணை கிளைகளும் ஆரம்பிக்கப்பட்டன. சங்க எல்லைப்பரப்பில் உள்ள கல்வி நிலையங்க ளில் கல்வி மேம்பாட்டுக்கு உதவி செய்த தோடு புலமைப்பரிசில் பெற்ற அங்கத்தவர்க ளின் பிள்ளைகளுக்கும், பல்கலைக் கழகத்திற் குத் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் பணத்தொகை வழங்கி ஊக்குவித்துள்ளது.

அச்சுவேலித் தொழிற்பேட்டையில் தீப்பெட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு 03 வருடங்கள் இயங்கி பாதுகாப்பு ஏற்பாடு காரணமாக மூடப்பட்டது. ஆயினும் அக் காலத்தில் உள்நாட்டில் மாத்திரமன்றி வெளி நாட்டிலும் சங்கம் தனது புகழை நிலை நாட்டியது. ஐரோப்பிய பொருளாதார சமூகம்

வழங்கிய உதவியால் ஜேர்மனியால் நடந்த உலகப் பொருட்காட்சியில் சங்கம் தன் உற்பத்திப் பொருட்களான சேட், நல்லெண் ணெய் வகைகளைக் காட்சிக்கு வைக்கும் அரிய வாய்ப்பையும் இப்பொருட்களை வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பினையும் பெற்றது. 1974 காலப்பகுதி தொடக்கம் இன்று வரை சங்கம் தரமான நல்லெண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

13 கிளை நிலையங்களும் 65 துணைக் கிளை நிலையங்களும் புடைவை, இரும்பு நிலையங்களும் இயங்கி வந்தன. குடாநாட்டில் ஏற்பட்ட போர் நிலையாலும், மின் தடை காரணமாகவும் மின்தறி நிலையம் செயற்பட முடியாத நிலையும், தையல் நிலையம் செயற்படாத நிலையும் ஏற்பட்டது. தொடர்ந்து 1992 ல் ஏற்பட்ட இடப்பெயர்வால் சங்கம் சங்கானைக்குச் சென்று தொழில் வளங்கள் இழந்தாலும் எமது பகுதி மக்களுக்கு சேவையாற்றியது. 1995ல் மீண்டும் ஏற்பட்ட இடப்பெயர்வால் மீசாலைப் பகுதியில் சங்கத்தை அமைத்து 1997ல் மீண்டும் பண்டத்தரிப்பில் பல சிரமங்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது.

மேன்மை தங்கிய ஜனாதிபதியின் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியுதவியுடன் வலி.தென்மேற்கு சண்டிலிப் பாய் பிரதேச செயலாளராக அக்காலத்தில் கடமையாற்றிய திருமதி ரூபினி வரதலிங்கம் அவர்களின் அனுசரணையுடன் 2008ம் ஆண்டில் கிராமிய வங்கி, புடைவை நிலையம், கூட்டுறவு நகர் கீழ்த்தொகுதி யாக வும் தலைமை அலுவலகம் மேல் தொகுதியா கவும் அமைந்த புதிய கட்டடம் புதுமையுடன் காட்சியளிக்கின்றது. புதிய முயற்சிகளாகப் பொதி செய்யும் பகுதியும் அரிசியாலையும் பண்டத்தரிப்பில் நிர்மாணிக்கப்பட்டதோடு இளவாலையில் கிராமிய வங்கியும், மாதக லில் அரைக்கும் ஆலை ஒன்றும் நிறுவப்பட் டன.

2006இல் ஏ9 பாதை மூடப்பட்ட போது வெதுப்பக உற்பத்திப் பொருட்களும் அரிசி ஆலை உற்பத்திகளும் போதியளவில் மக்களின் தேவைகளை நிறைவேற்ற உதவியன. பொதுமக்கள் இடப்பெயர்வின் போது மக்கள் எல்லோருக்கும் சிறந்த முறையில் நிவாரணம் வழங்கி உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தது.

சிறந்த கூட்டுறவாளர் திரு.ச. செல்வரத்தினம் அவர்கள் தலைமையிலும், சிறந்த நிர்வாகத் திறன் கொண்ட பொது முகாமையாளர் திரு.ஆ. நாகராசா அவர்களது முகாமைத்துவத்திலும் எல்லோரது நன்மதிப் பையும் பெற்று இன்று சிறந்து விளங்குகின் றது.

**கூட்டுறவு நாட்டுயர்வு**

# மகாவம்சமும் மறைக்கப்படும் தமிழரின் தொன்மையும்

**ஆ.த.குணத்திலகம்**

ஓய்வுபெற்ற ஆசிரியர், சில்லாலை.

இது வலி.தென்மேற்குப் பகுதியில் இடம்பெற்ற ஒரு மாபெரும் வரலாற்று மறைப்பு பற்றிய ஆதங்கக் கட்டுரையாகும். இப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்தவன் ஆகையால் இது பற்றி விளக்கவேண்டியது எனது கடமையாகும்.

இலங்கையின் வடபகுதியில் வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு பெரிய நிலப்பரப்பு மாதகல் கிராமமாகும். இம் மாதகல் கிராமத்தில் மேற்குப் பகுதியில் அமைந்த கடற்கரைப் பிரதேசம் பண்டைய பிரசித்தி வாய்ந்த துறைமுகம் எனக் கூறப்படுகிறது. இது பற்றிய உண்மையை அறிய தமிழில் எதுவித வரலாற்று நூலும் இல்லாதது தமிழருக்கு ஏற்பட்ட ஒரு சாபக்கேடாகும். ஆனால் இத் துறை பற்றி மகாவம்சம் குறிப்பிடுவதிலிருந்தும் எமது கர்ண பரம்பரை கதைகள் கூறுவதிலிருந்தும் சிலவற்றை ஏற்க வேண்டியுள்ளது. தமிழர் வரலாற்றைக் கூறும் பண்டைய நூல்கள் எவையும் இல்லாத போதும் முழுக்க முழுக்கச் சிங்கள பௌத்தத்தை முன்னிலைப் படுத்தி எழுதப்பட்ட மகாவம்சத்தில் ஆங்காங்கே தமிழரை வெற்றி கண்ட தம் வலிமையைக் காட்டுவதற்காகத் தமிழர் வரலாறும் கூறப்பட்டுள்ளது.

மகாவம்சம் கூறும் எல்லாக் கதைகளையும் நாம் நம்பாத போதும் அங்கு காணப்படும் சில பகுதிகளை நம்பியே ஆகவேண்டும். அங்கேதான் நம் பண்டைய கால வரலாறுகள் மறைந்துள்ளன. இன்று சிலர் இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடென வாதிடும் போது மகாவம்சத்திலுள்ள கருத்துக்களை நாம் தர்க்க ரீதியில் பார்ப்போமேயானால் அவர்கள் கருத்தை மகாவம்சம் பொய்யாக்கும் சந்தர்ப்பங்களும் காணப் படுகின்றன. இலங்கைத் தமிழர் வரலாற்றைக் கூறவந்த வரலாற்று ஆசிரியர்கள் கூட 13ம் நூற்றாண்டின் பின்னரே தமிழர் வரலாற்றை உறுதியாகக் கூற முனைகின்றனர்.

### யாழ்ப்பாண வைபவ மாலை

மாதகல் மயில்வாகனப் புலவரால் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலை எனும் வசன நடை நூல் தமிழர் சரித்திரத்தை

(யாழ்ப்பாண தமிழர்) அறிய ஓரளவுக்கு உதவியதாயினும் அதுவும் ஓர் குறிப்பிட்ட காலத்தில் அதாவது 18ம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே ஆக்கப்பட்டதாகக் கலாநிதி க.குணராசா அவர்களின் "யாழ்ப்பாண வைபவ மாலை ஓர் மீள் வாசிப்பு" கூறுகிறது. இவர் 1380 - 1414 காலப் பகுதியில் யாழ்ப்பாண மன்னனாகவிருந்த ஜெயவீர சிங்கை ஆரியனின் அரச அவைக் கவிஞராக இருந்த வையா என்னும் புலவரின் வழி வந்தவராவார்.

யாழ்ப்பாண வைபவ மாலையை எழுதுவதற்கு மயில்வாகனப் புலவருக்குக் கைலாயமாலை, வையாபாடல், பரராச சேகரன் உலா, இராசமுறை ஆகிய நூல்களே மூலநூல்களாக இருந்தன. இவை கூட யாழ்ப்பாண மன்னன் காலத்தில் எழுந் தவையே. பிற்கால வரலாற்று ஆசிரியர் களுக்கு இவற்றில் வையாபாடலும் கைலாய மாலையுமே கிடைக்கப் பெற்றன. ஏனைய இரு நூல்களும் கிடைக்காமல் மறைந்து போய்விட்டன. எனவே இப்போ துள்ள தமிழர் வரலாற்றைக் கூறும் தமிழ் நூல்கள் யாழ்ப்பாண வைபவ மாலையையும், தொல் பொருள் அகழ்வுகள் மூலம் கிடைத்த தகவல் களையும் கொண்டே நிறுவியுள்ளன. இதை விட மகாவம்சம் கூறும் சில பகுதிகளை வைத்து அக்காலத் தமிழர் பற்றி ஊகமாகவும் எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

**சம்பில்துறை**

சம்பில் துறையின் இன்றைய சிறப்பு சங்கமித்தை வெள்ளரசுக் கிளையுடன் வந்திறங்கி பௌத்த மதத்தை ஸ்தாபித்த இடம் என்பதாகும். இதனால் இந்த இடத்திலுள்ள பல தனியார் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு பாரிய விகாரையும் மண்டபங்களும் அமைக்கப்பட்டு ஒரு பௌத்த பிரதேசமாகக் காண படுகின்றது. சம்பில்துறை பண்டைய காலத்தில் ஒரு பெரிய துறைமுகமாக இருந்து பின்னர் கடல் கோளால் அழிக்கப்பட்டு படகுகள், கட்டு மரங்கள் மூலம் வர்த்தகம் செய்த ஒரு துறையாக இருக்கலாம் என A.S. உதயகுமார் தமது "யாழ்ப்பாண ராச்சியம்" என்ற நூலில் கூறியுள்ளார். மொறாக்கோ தேசத்தைச் சேர்ந்த இபன்பதூத்தா என்பவரால் கி.பி. 1414ல் இலங்கை வந்த போது எழுதிய பயணக்குறிப்பை ஆதாரமாக வைத்து அவர் இதை நிறுவியுள்ளார். சம்பில் துறை என்பதன் பண்டைய பெயர் ஜம்புகோளத் துறை என்பதாகும். இது மகாவம்சத்திலும் ஜம்புகோள எனக் கூறப்படுவதைக் காண லாம்.

இத்துறையின் பெயர் பற்றி அவ் ஆராய்வுகள் பல கருத்துக்களைக் கூறுகின் றன. பண்டைக் காலத்தில் இத்துறையூடாகக் கிழக்காசிய வர்த்தகர்கள் வியாபாரம் செய்தபடியால் இப்பெயர் அந்த நாடுகளுடன் சம்பந்தப்பட்டதாகவே காணப்படுகிறது.

ஜம்புகோளத்துறை என்பது பல மொழிச் சொற்கள் சேர்ந்த ஒரு துறையாகும். "சம்புக்" என்பது பாரசீக மொழியில் சிறிய படகு என்பதைக்குறிக்கின்றது. "கோள" என்ற சமஸ்கிருதச் சொல் கட்டுமரம் என்பதைக் குறிக்கின்றது. இதனுடன் "துறை" என்ற தமிழ் சொல்லும் சேர்ந்து மும்மொழியிலான ஒரு பெயரே (ஜ) சம்புக் கோளத்துறை என்ப தாகும். இதன் சரியான தமிழ் வடிவம் "சிறிய படகுகள் மரக்கலங்கள் துறை" என்பதாகும்.

அடுத்து "சம்பைக் கோளத்துறை" என்பது மருவி சம்பை" என்ற துறையாகி இன்று சம்பில் துறையானது எனக் கொள்ளவும் இடமுண்டு. ஏனெனில் "சம்பை" என்ற சொல்லுக்கு மலே, சுமாத்திரா மொழி களில் வந்தடைதல் எனப் பொருளுண்டு. "கோள" என்பது சமஸ்கிரு தத்தில் கட்டுமரம் எனப் பொருள்படும். துறை என்ற தமிழ்ச் சொல்லும் சேர்ந்து கட்டுமரம் வந்தடையும் துறை என்ற பொருளில் "சம்பைக் கோளத் துறை" என இருந்திருக்கலாம் என இபன் பதுதாவின் பயணக் குறிப்புக் கூறுவதாக A.S. உதயகுமாரின் யாழ்ப்பாண இராச்சியம் கூறுகிறது.

"சம்பு நாத" என்பது நேபாளத் திலுள்ள ஒரு சிவன் கோயிலைக் குறிக்கிறது. சம்பில்துறையிலும் பண்டைக்காலத்தில் சம்பு நாதேஸ்வரர் ஆலயம் இருந்தமை நேபாள நாட்டவரின் செல்வாக்கு இப்பகுதியில் இருந்த தென்பதையே காட்டுவதாகும். சம்பு நாதரா லயம் இருந்ததாலும் இந்த இடம் "சம்புத் துறை"எனப் பெயர் பெற்று, பின் மருவிச் "சம்புல் துறை"எனப்பட்டிருக்கலாம் எனவும் ஊகிக்க இடமுண்டு. சம்பில் துறையில் "சம்பு நாதேஸ்வரம்" இருந்தமை "தட்சண கைலாயபுராணத்தில்" பதினெட்டாவது படல மான "சுயம்புநாத படலத்தில்" கூறப்படுகிறது.

அத்துடன் இதன் சிறப்பு அகத்திய முனிவர் இமயமலையரசன் மகளான பார்வதிதேவி திருக்கல்யாணத்தின் போது பரமசிவனது அனுமதிப்படி பொதிய மலைக்கு போகும் போது திருகோணமலை என்னும் தட்சண கைலாயத்தை அடைந்து மகாவலி கங்கையில் நீராடித் திருக்கைலாச பதியை வணங்கித் துதித்து விடை பெற்றுக் கொண்டு அவ்விடத்திலிருந்து புறப்பட்டு வடக்கிலுள்ள இந்தச் சுயம்பு நாத தரிசனம் செய்து திருக்கேதீஸ்வரத்தை அடைந்து கேதீஸ்வர நாதரை வணங்கிப் பொதிகை மீண்டார் எனச் சுயம்பு நாதப்படலம் கூறுகிறது. இவை வர லாற்றுக்கு முற்பட்ட காலங்களாகும். எனவே இவ்விடங்கள் அக் காலத்தில் இந்து சமயத்த வர்கள் வாழ்ந்த இடங்கள் என அறுதியிட்டுக் கூற முடிகிறது.

### மகாவம்சம்

மகாவம்சம் ஒரு சிங்கள பௌத்த நூலாகும். இது ஓர் இலக்கிய நூலாகவும் காணப்படுகிறது. மகாவம்சம் எழுந்த காலமும் கி.பி 4ம் நூற்றாண்டென அறிய முடிகிறது. ஆனால் அது எழுதப்படும் போது அதற்கு முந்திய பத்தாண்டு காலத்து வரலாறும் எழுதப்பட்டுள்ளதால் அதன் உண்மைத் தன்மையும் கேள்விக் குறியே. மகாவம் சத்தை நாம் ஆதாரமாகக் கொள்வோமாயின் அது கி.மு 5ம் நூற்றாண்டு காலம் முதலான வரலாற் றைக் குறிக்கிறது.

எனவே விஜயன் வந்திறங்கிய கி.மு 483ம் ஆண்டு காலப்பகுதியுடன் மகாவம்சம் எழுத ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

### இந்து மதம்

விஜயன் வரும் போது இங்கு வாழ்ந்த இயக்கர், நாகர் என்போர் இந்து மதத்தை சேர்ந்தவர்களாகவே காணப் பட்டனர். விஜயனும் அவனது கூட்டாளி களும் இந்து மதத்தவர்களே. இதனாலன்றோ விஜயன் இலங்கையில் பல இந்து ஆலயங் களைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. கீரிமலை

யில் விஜயனால் கட்டப்பட்ட திருத்தம்ப லேஸ்வரர் ஆலயம் பிற்காலத்தில் நகுலேஸ் வரர் ஆலயம் என அழைக்கப் பட்டதெனவும் திருக்கேதீஸ்வரத்தையும் சிலாபம் முன் னேஸ்வரத்தையும் விஜயன் புதுப்பித்தான் எனவும் வரலாற்றாசிரியர் முதலியார் செ.இராசநாயகம் அவர்கள் தமது "யாழ்ப் பாணசரித்திரம்" என்னும் நூலில் கூறியுள் ளார். இதன் பிரகாரம் விஜயன் வரும் போது இங்கு சைவ சமயம் மேலோங்கி இருந்ததை அறிய முடிகிறது . அத்துடன் வேறு சமயம் இங்கு இல்லாததும் உறுதியாகின்றது.

### நாகர் , இயக்கர்

இவர்களை இங்கு வாழ்ந்த ஆதிக் குடிகளான ஒரு நாகரீகம் உடைய இனங்க ளாகக்கொள்ளமுடிகிறது. இவர்களுடன் பல வெளிநாட்டு வர்த்தகர்கள் கடல்வழியில் ஜம்புகோளத்துறையில் வர்த்தகம் செய்துள் ளனர். இக்காலத்திலே தான் ஜம்பு கோளவில் சம்புநாதர் ஆலயம் இருந்ததாவும் கூறப் படுகிறது. கி.பி 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த "பாகியன் " என்ற நாடு சுற்றும் பயணி இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றித் தமது நூலில் தெளிவாக எழுதியுள்ளார். அவர் கருத்துப்படி இந்தத் தீவில் ஆதியில் தேவதை களும் நாகர்களும் இருந்தார்கள் எனவும் அவர்கள் பல்வேறு நாட்டினருடன் வர்த்தகத் தொடர்புகள் வைத்திருக்கும் அளவுக்கு நாகரீகமுடையவர்கள் எனவும் குறிப்பிட்டுள் ளனர் எனக் கலாநிதி . க.குணராசா அவர்கள் தமது "ஈழத்தவர் வரலாறு" என்னும் நூலில் கூறியுள்ளார்.

### இயக்கர், நாகர் - மகாவம்சக் கூற்று

மகாவம்ச ஆசிரியர்கள் இயக்கர், நாகர்களை மனித வர்க்கம் இல்லை எனவும் அவர்கள் அமானுஷ்யர்கள் எனவும் கூறுகின் றனர். மெண்டிஸ் என் னும் வரலாற்றாசிரியர் தமது "**இலங்கையின் ஆரம்ப வரலாறு** " என்னும் ஆங்கில நூலில் மகாவம்சம் இவர்களை மனித வர்க்கமெனக் குறிக்க வில்லை எனவும் பரணவிதான என்ற வரலாற்றாசிரியர் தமது "**வட இலங்கையில் ஆரியர் ஆட்சி**"என்னும் ஆங்கில நூலில் மகாவம்சமோ, மணிமேகலையோ எவ்வி டத்திலும் இயக்கர், நாகர்களை மனிதர்களாகக் குறிக்கவில்லை எனவும் கூறியுள்ளனர். இது நகைப்புக்குரிய அவதானிப்புக்கள் எனக் கலாநிதி க.குணராசா அவர்கள் தமது "ஈழத்தவர் வரலாறு" என்னும் நூலில் எழுதி யுள்ளார். இது விஜயனுடன் வந்தவர்களே இலங்கையின் ஆதிக் குடிகள் எனவும் அதற்கு முன் இங்கு மனிதர்கள் இல்லையெனவும் வலியுறுத்துவதற்காக மகாவம்ச ஆசிரியர் களால் திட்டமிட்டு எழுதப்பட்டதாகும்.

### மகாவம்சத்தில் முரண்பட்ட கருத்து

இலங்கையின் ஆதி மனிதர்களே இல்லையெனக் கூறும் மகாவம்சம் ஆதி மனிதர்கள் வர்த்தகம் செய்த துறையான "ஜம்புகோள" என்ற பெயரை மகாவம்சத்தில் குறித்துள்ளதைக் காண முடிகிறது. அத்துடன் சங்கமித்தை வெள்ளரசைக் கொண்டு வந்த போது கடலில் அதனைக் கைப்பற்ற நாகர்கள் கப்பலைச்சுற்றி வளைத்ததாகவும் சங்க மித்தை தெய்வசக்தியால் கருடனாகி அந்த நாகர்களை எரித்து வெற்றி கண்டதாகவும் ஒரு கட்டுக்கதை கூறுகின்றது. இது நாகர்களை மனிதர்கள் இல்லையெனவும் அவை பாம்பினம் எனவும் வலியுறுத்தப் புனையப் பட்ட கதையாகும். அதே வேளை தோல்வி அடைந்த நாகர் தலைவன் சங்கமித்தை

யிடம் மன்னிப்புக் கோரி ஒத்துழைப்பதாகக் கூறியிருப்பது நாகர் தலைவன் மனித வர்க்கம் என்பதைப் புலப்படுத்துகிறது. இதே மகாவம்சம் புத்தர் இரண்டாவது தடவை இலங்கைக்கு விஜயம் செய்த போது இங்கி ருந்த நாக மன்னர்களான மகோதரன், குலோதரன் எனப்படும் இரு மன்னர்கள் ஒரு இரத்தின சிம்மாசனத்திற்காகப் படை திரட்டிப் பெரும் போர் செய்த போது அவர்களுக்கு அறிவுரை கூறி அவர்களைச் சமாதானப் படுத்தியதாகவும் கூறுகிறது என கலாநிதி குணராசா அவர்களின் ஈழத்தவர் வரலாறு கூறுகிறது. இதே சர்ச்சை மணிமேகலைக் கதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்து விஜயன் முதலில் திரும ணம் செய்தது இயக்கர் பெண்ணான குவேனி என்றும் பின் அவளைப் பிரிந்து வடபகுதியி லுள்ள கதிரமலை (கந்தரோடை) யிலிருந்து அரசாண்ட நாகர்குல அரசனின் மகளை மணம் செய்தான் எனவும் முதலியார் இராச நாயகம் அவர்கள் கூறுகின்றார். அத்து டன் இலங்கையின் புகழ்பூத்த மன்னன் எனப்படும் தேவநம்பியதீசனின் அன்னை யான மூத்தசிவனின் மனைவியும் கதிர மலையரசின் நாகர் குலப்பெண்ணேயா வாள். விஜயன் கூட்டத்தினர் பேசிய கலிங்க மொழியும் நாகர்கள் இயக்கத்தில் பேசிய "ஈழு" எனப்படும் மொழியும் அக்காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து வந்து குடியயேறியவர் கள் பேசிய தமிழ் மொழியும் சேர்ந்தே சிங்களம் உருவானதெனவும் இந்தப் பாஷை யைப் பேசியவர்களே சிங்களவர்கள் எனவும் அழைக்கப்பட்டனர் என முதலியார் இராச நாயகம் அவர்கள் குறிப்பிடுகின்றார். இவ்வா தாரங்களைப் பார்க்கையில் பண்டைய இலங் கையில் வாழ்ந்தவர்களை அமானுஷ்யர்கள் என மகாவம்சம் கூறுவதில் உண்மை யில்லை எனத் தெரிகிறது.

## ஜம்புகோள விகாரையும் வெள்ளரசு மரமும்

கி.மு 3ம் நூற்றாண்டில் இலங் கையைத் தேவநம்பியதீசன் என்னும் இந்து மன்னன் ஆட்சி செய்தான். இவனின் கீழ் பல சிற்றரசுகள் திறை செலுத்தி ஆங்காங்கே ஆட்சி செலுத்தி வந்தனர். அவற்றுள் வடக்கே கதிரமலை அரசும் இருந்தது. குறுநில மன்னனான திஸ்ஸ மழுவனும் வடக்கே ஆட்சி செய்ததாகக் கூறப்படுகின்றது. இதன் காரணமாகவே வலி.தென்மேற்குப் பிரதேசத் தின் மாதகல் பிரதேசத்தில் போதி மழுவை என்னும் இடமும், வலி.மேற்குப் பகுதி யில் உள்ள சுழிபுரம் பகுதியில் திஸ்ஸ மழுவை என்னும் இடமும் அதே பெயர்க ளால் இன்றும் அழைக்கப்படுகின்றன. இக்குறுநில மன்னர் கள் தேவநம்பிய தீசன் இந்துவாக இருக்கும் போது அவனுக்குக் கட்டுப்பட்டு ஒழுகினார்கள்.

போதிமழுவை என இன்று கூறப் படும் இடம் முன்னர் மழுவை என அழைக்கப் பட்டது. இது திஸ்ஸ மழுவன் ஆட்சியில் உண்டான பெயராகும். போதிமரக்கிளையு டன் சங்கமித்தை இறங்கிய இடமாதலின் இது போதி மழுவை எனக்கூறப்பட்டது. தேவ நம்பிய தீசன் காலத்தில் கி.மு 3ம் நூற்றாண் டில் இந்தியாவின் மாமன்னன் அசோகச் சக்கரவர்த்தி புத்தசமயத்தைப் பரப்பும் தீவிர செயற்பாட்டில் இருந்தபோது தீசனின் நட்புடன் இங்கு புத்த சமயம் பரப்பும் நோக்கில்மகனான மகிந்த தேரரும், மகளான

சங்கமித்தை தேரினியும் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். தேவநம்பியதீசனின் வேண்டுதலின் பேரில் புத்தர் ஞானமடைந்த புனித அரசமரக் கிளையை சங்கமித்தை கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறது. இம்மரக் கிளையுடன் வந்திறங்கிய இடமே "ஐம்பு கோள" எனப் படுகிறது.

இன்று புத்த விகாரையும் ஏனைய கட்டடங்களும் அமைக்கப்பட்டிருக்கும் காணி தனியாருக்குச் சொந்தமானதாகும். மாதக லிள்ள போதி என்ற இடமே சங்கமித்தை வந்திறங்கிய இடம் என கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. ஆனால் போதியிலி ருந்து தெற்கே சுமார் 2கிலோ மீட்டர் தூரத்தி லுள்ள திருவடி நிலைக்கு அருகிலுள்ள இடத்தி லேயே இன்று விகாரை அமைந்துள்ளது குறிப்பிடக் கூடியது. இந்த விகாரை அமைக்கப் பட்டுள்ள இடமே முன்பு சம்பு நாதஸ்வர ஆல யம் இருந்த இடமென இந்துக்கள் கூறுகின்ற னர். போதியில் இறங்கிய சங்கமித்தையை தேவநம்பியதீசன் சம்பில்துறையில் தங்கி யிருந்து வரவேற்று விழாவெடுத்து அனுராத புரம் மீண்டு, மகாமேக வனம் என்ற இடத்தில் அதை நாட்டியதாக மகாவம்சம் கூறுகிறது.

**மாதகல்**

மாதகல் என்பது சங்கமித்திரை இறங்கி அங்கிருந்து அனுராதபுரம் சென்ற மையால் ஏற்பட்ட பெயராகும். மாது+அகல்= மாதகல். சங்கமித்திரை என்ற மாது அகன்ற இடமே மாதகல் எனப்பட்டதாகக் கூறப்படுகின் றது. தேவநம்பியதீசன் இந்துவாக இருக்கும் போது அவனது ஆணைக்குக் கட்டுப்பட்ட குறுநில மன்னர்கள் அவன் பௌத்தத்தைத் தழுவியபோது அவனது ஆணையை ஏற்க விரும்பினாரல்லர். இதனால் இப்பிரதேசம் அனைத்தும் இந்து சமயிகளாகவே இருந்துள் ளனர். அந்நியர் இங்கு வரும்வரை இப் பிரதேசம் தீவிர இந்துப் பிரதேசமாகவே இருந்துள்ளது.

**பூநகரி**

வெள்ளரச மரம் போதியிலிருந்து மாதகல் ஊடாகச் சில்லாலை, பண்டத் தரிப்பு, மாகியப்பிட்டி, கந்தரோடை, சுன்னாகம், புத்தூர் வழியாகப் பூநக ரியை அடைந்ததாக இராசநாயக முதலியார் கூறுகின்றார். மகாவம்சம் பூநகரியைப் "பிரமந்தக்க" எனக் குறிப்பிடுகின்றது. அதாவது மகாவம்சம் குறிப்பிடும் பிரமந்தக்கவே பூத்தாக்கி எனப் பட்டு பூநகர் என மருவிப் பின் பூநகரி எனப் பட்டதாகும். இது மகாவம்சத்தில் பிரமந்தக்க எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று இப்பிரதேசத்தில் இந்து தமிழ ரின் சுவடுகளை அழித்துப் பௌத்த சின்னங் களை நிறுவி இது ஒரு பௌத்த சிங்கள நாடாக்க முயற்சிப்பதைக் காணலாம். இருந் தும் வரலாறு கூறும் இந்துத் தமிழரின் பழமையை விட்டுக் கொடுக்காது எம்மக்கள் எம் உரிமைக்காகப் போராடுவது நியாயமே. உண்மை ஒரு போதும் அழிவதில்லை. நியா யம் ஒரு போதும் தோற்பதில்லை என்பதற் கிணங்க எமது பழமையையும் பெருமையை யும் பாதுகாப்பது நம் ஒவ்வொரு வருடைய கடமையாகும்.

பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் அடையாளத்தினை, தனித்துவத்தினை,

இருப்பினை நிலைநாட்டுவதாகும்.

அது எமது பரம்பரையலகுகளுக்கூடாகக் கடத்தப்பட்டு வருவதல்ல;

முறையாகக் கற்றும் கையளிக்கப்பட்டும் வரவேண்டியது

எமது முன்னோரிடமிருந்து பண்பாட்டம்சங்களை

உள்வாங்கி, வளர்த்தெடுத்து

அவற்றினை எதிர்காலச் சந்ததிக்கு


உரிய வகையில் கையளிக்க வேண்டியது அவசியமானதாகும்.

அதன் மூலமாகவே பண்பாட்டினைக் கட்டிக்காக்கும்

பாரிய பணியினைப், பொறுப்பினைச் செய்து முடிக்கக் கூடியதாக அமையும்.

இப்பெருங் கைங்கரியத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில்

இம்மலர் எமது பிரதேச செயலகத்தினூடாக வெளிக் கொணரப்படுகிறது.



முத்து பிறிண்டேர்ஸ், சுன்னாகம். 077 8038629